# ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதம்

*ஆசிரியர்*

**டாக்டர்.பெரு. ஹரிகேசவ ராமாநுஜதாசர்**

*வெளியீடு*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**திருப்பதி**

**2018**

# SRIMATH RAAMAAYANA SAARAAMRUTHAM

**by**
**Dr.Peru. Harikesava Raamaanuja Daasar**

T.T.D. Religious Publications Series No. 1312
© All Rights Reserved

*First Edition :* 2018

*Copies :* 500

*Published by*
**SRI ANIL KUMAR SINGHAL,** I.A.S.,
Executive Officer,
Tirumala Tirupati Devasthanams,
Tirupati - 517 507

***D.T.P:***
Publications Division,
T.T.D, Tirupati.

*Printed at :*
Tirumala Tirupati Devasthanams Press,
Tirupati - 517 507

# FOREWORD

The greatness of Hindu religion, which is followed and practised as a way of life by the people of India, is derived not only from its ancient character but also from the fact that it is home to innumerable cultural components and the best divine philosophy. This Hindu religion is based on the concept of `Sanatana Dharma' (a code of ethics which has no beginning or end).

Since Sanatana Dharma has transcended all Yugas, and is appropriate to the people who lived in the various Yugas, it remains unchanged till date.

Vedas are the `Vruksham' (tree), the Epics and Upanishads are it's branches. They become easy to comprehend when told in simple language through various characters and stories woven round them.

Srimad Ramayanam, the first epic is based on the life of Sri Dasaratha Rama, the embodiment of Dharma, who lived in Thretha Yuga, the second of four Yugas.

Sri Maha Vishnu is also known as Sriman Narayanan, Sriyahpathi, Thirumal and Perumal. Through Srimath Bhagavath Gita, Sri Maha Vishnu Himself preaches the devotees the ways namely `karma', (duty), `gnana' (wisdom) and `bhakthi' (devotion). they should follow to reach Him, The Lord explains that in the case of those who could not follow the above paths, they could attain salvation by surrendering to him.

Similarly in Srimath Ramayanam, Sriman Narayanan takes the `avatara' of Rama, a human, born to King Dasaratha.

In this `avatara', He desired and lived by example to show to the people the righteous way of life. The life of Lord Rama is described in the epic, Srimath Ramayanam

written originally by Saint Valmiki in Sanskrit, and later by Kambar (Kamba Ramayanam) in Tamil.

Both Valmiki Ramayana and Kamba Ramayanam describe the philosophy of life of Lord Rama, and through it, the code of ethics to be followed by human beings. He lived as a good son to His father, a good husband to His wife Sita, a good brother to His brothers, a good disciple to His Guru and a good king to the people. In addition, Kamba Ramayanam depicts the exalted Tamil culture in various stages of Lord Rama's life.

This book also mentions the present location of the historic places where Ramayana's incidents occured in India. On the whole, this book tries to give the quintessence of both Valmiki Ramayana and Kamba Ramayanam, similar to the `amrutham' (nectar) obtained by `Asuras' and `Devas' by churning `Tirupparkadal' (the divine ocean of milk).

I appreciate the painstaking efforts taken by Dr. P. Harikesavan in gathering a wealth of information and authoring this book which will be of great use to the followers of Hindu dharma in particular and to the people in general in leading a dharmic way of life.

May Lord Venkateswara shower His benign blessings on the writer and readers of **'Srimath Ramayana Saramrutham'.**

In the Service of the Lord Venkateswara

Executive Officer
Tirumala Tirupati Devasthanams
Tirupati.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் எண் |
|---|---|---|
| I. | முகவுரை | vi |
| II. | அவதாரிகை | xiii |

**ஸ்ரீமத்ராமாயணம் கதைப்போக்கும், கருத்துரைகளும், விளக்கங்களும்.**

| | | |
|---|---|---|
| *1.* | பாலகாண்டம் | *1* |
| *2.* | அயோத்தியாகாண்டம் | *60* |
| *3.* | ஆரண்ய காண்டம் | *113* |
| *4.* | கிஷ்கிந்தா காண்டம் | *158* |
| *5.* | சுந்தர காண்டம் | *203* |
| *6.* | யுத்த காண்டம் | *238* |
| 7. | BIBLIOGRAPHY. (REFERENCE BOOKS) | 336 |

# முகவுரை

நமது பாரதத்திருநாட்டின் மக்கள் பின்பற்றி வாழ்ந்து வரும் சமயமான இந்துமதம் மிகப்பெரும் தொன்மைச் சிறப்பையும், (பழமையையும்,) பண்பாட்டுக் கூறுகளையும், மிகச்சிறந்த கடவுள் கொள்கையையும் உடையது ஆகும். இந்துமதம், அல்லது இந்துசமயம் என்று அழைக்கப்படும் இது சநாதன தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. இத்தகையதான நமது பாரதத்திருநாட்டின் தொன்மையையும், பண்பாட்டினையும், கடவுள் கொள்கைகளையும் அறிந்துகொள்ளுவதற்கு நமக்குப்பெருந்துணையாய் அமைந்துள்ளவை நமது இதிகாசங்கள், புராணங்கள், உபநிஷத்துகள், மற்றும் வேதங்கள் ஆகிய புனிதப் படைப்புகளாகும். இவை நமக்குக்கிடைத்துள்ள மகிப்பெரிய கருவூலங்களாகக் கருதத்தக்கவை. இவற்றைப்போன்ற ஆன்மீகச் சிந்தனைகளும், கடவுட் கொள்கையும் வேறு எந்த நாட்டினர்க்கும் இல்லை என்பது நமக்குரிய பெருமிதமும் தனித்தன்மையுமாகும்.!

சநாதன தர்மம் என்று அழைக்கப்படும் நமது இந்துமதம், யுகங்களைக் கடந்தாலும் அந்தந்த யுகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்புடையதாய் அமைவதால், அத்தர்மங்கள் மாறாதனவாக உள்ளது நமது இந்து சமயத்தில் மட்டும்தான். நமது வேதங்களிலும் புராண இதிகாசங்களிலும் உபநிஷத்துகளிலும், வேதங்களிலும் இந்து தர்மத்தினுடைய அடிப்படைத் தத்துவங்களும் அவை உணர்த்தும் பரப்பிரம்ஹம் என்றழைக்கப்படும் அனைத்திற்கும் மேலான ஒரு பரம்பொருளைப் பற்றியதுமான தத்துவார்த்தங்கள் நான்மறைகள் எனப்படும் வேதங்களில் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. வேதங்களின் தத்துவங்களையும், அவை உணர்த்தும் பரப்பிரம்மம் ஆகிய கடவுளைப்பற்றியதுமான கருத்துகள் மறைமுகமாகவே அமைந்துள்ளன. ஆகையால்தான் அவற்றை நான்மறைகள் அதாவது மறைபொருளாய் அமைந்திருப்பவை (நான்குவேதங்கள்.) என்றே அழைத்துவருகின்றோம்.



“இதிஹாச புராண உபநிஷத்தைக் கற்காமல் வேதம் விரித்துரைக்கும் பரப்பிரம்மத் தன்மைகளை பேதங்கள் இன்றி புரிந்துணர்தல் அரிதாகும் ஆகையால் பக்தர்களே அவற்றினைக் கற்பீரே” என்பது ஒரு வேண்டுகோளாகவும் ஏற்கத்தக்கது ஆகும்.

அதாவது வேதம் ஒரு விருட்சம்(மரம்) என்றால், புராண இதிகாச உபநிஷத்துகள் அவற்றினுடைய பல்வேறு கிளைகளாகும். இக்கிளைகளில் கிடைக்கும் காய்,கனி போன்றவற்றைச் சுவைத்தால்தான் அம்மரத்தின் இயல்பையும், அதன் தன்மையையும் அறியமுடியும். எனவே இதிகாசத்தை அறிந்துணர வேண்டியதின் கட்டாயம் இங்கே வலியுறுத்தப்படுகின்றது. இத்தகைய சிறப்பினை உடைய நமது இந்து தர்மக் கருத்துகளையும் தத்துவக்கோட்பாடுகள் ஆகிய உண்மைகளையும் பட்டியலிட்டும் வரையறுத்தும் கூறினால் அவை படிப்பவர்களாலும் கேட்பவர்களாலும் அவ்வளவு எளிதாக புரிந்துகொள்ள முடியாது. எனவே அவை ஏற்றுக்கொள்ளப்படவும் பின்பற்ற முடியாதவையாகவும் அமைந்துவிடுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும். ஆனால் இத்தர்மங்களைக் கதைகள் மூலமாகவும் அதில் வரும் கதாபாத்திரங்களின் மூலமாகவும் எடுத்துரைக்கும்போது அவை மனித சமுதாயத்தை எளிதில் சென்றடையும். எனவேதான் இராமாயணம், மகாபாரதம் போன்றவைகள் எடுத்துரைக்கப் பட்ட பொழுது அதில் வரும் கதாபாத்திரங்கள் மூலமாக இத்தர்மங்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. எடுத்துரைக்கப் பட்டுள்ளன. எனவே அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பின்பற்றப்படுகின்றன. எனவே இதிகாசங்கள் ஆகிய இவ்விரண்டையும், பாரததேசத்தவரின் பண்பாட்டினை எடுத்துரைக்கும் பண்பாட்டுக் காவியங்களாகவும், கருவூலங்களாகவும் கருதுகின்றோம்.

ஸ்ரீமத்ராமாயணம் மற்றும் ஸ்ரீமத்மகாபாரதம் என்ற இரண்டும் நமக்குக் கிடைத்துள்ள இதிகாசங்கள் ஆகும். இவற்றுள் முதலாவதான ஸ்ரீராமாயணம் நால்வகை யுகங்களில் இரண்டாவதான திரேதாயுகத்திலே வாழ்ந்திருந்த தர்மத்தின் திருவுருவமான தசரதராமனின் சரிதத்தைக்கூறுவது ஆகும்.

**ஸ்ரீராமாவதாரமும், ஸ்ரீகிருஷ்ணாவதாரமும்...**

ஸ்ரீமந் நாராயணன் என்றும், ஸ்ரீயப்பதி என்றும், திருமால் என்றும், பெருமான் என்றும் போற்றப்படுபவர் ஸ்ரீமகாவிஷ்ணு பெருமான் ஆவார். பூலோகம் எனப்படும் இந்த லீலாவிபூதியில் வாழ்கின்ற மக்களிடையே தன்னுடைய தத்துவங்களைப் பரப்பி, அவர்கள் தன்னைவந்து அடைதல்வேண்டும் என்பதற்காகவும், தன்மீது பக்திபூண்டொழுகி, அவர்களுக்குரிய கர்ம, ஞான, பக்தி மார்க்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து, தன்னைவந்தடைவதற்கான எளிமையான பலமார்க்கங்களைப் பெருமானே ஸ்ரீமத்பகவத்கீதையிலும் கூறுகின்றார். அந்த மூவகைநெறிகளைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள், இறுதியாக தன்னைச் சரணம் அடைந்து விட்டாலே போதுமானது, என்றும் கூறி, தன்னை அடையநினைக்கும் ஒருவன் எத்தகைய பாவங்களைச்செய்தவனாக இருந்தாலும் தன்னைச் சரணடைந்துவிட்டால், தான் அவனுடைய பாபங்களைப்போக்கி விடுவதாகவும், அதனால் அவனுக்குப் பரமபதம் அடைதலாகிய பெரும்பேற்றைத்தருவதாகுவும், எடுத்துரைத்துள்ளார். எனவே சரணாகதி என்ற அடைக்கலமே தன்னை வந்தடைவதற்கான வழிமுறை என்றும் கூறி, வைணவத்தின் உயிர் தத்துவத்தை ஸ்ரீமத்பகவத்கீதையில் எடுத்துரைத்துள்ளார்.

அவ்வாறு கூறியும் பூலோக மக்களிடமிருந்து எதிர்பார்த்த பக்திநிலை ஏற்படாமல் போகவே ஸ்ரீமந்நாராயணனாகிய அப்பெருமான் தானும் மனிதர்களைப் போலவே இப்பூமண்டலத்தில் பிறந்து மனிதனாக அவதாரம் செய்து வாழ்ந்து காட்ட விருப்பம் கொண்டார். எனவே திரேதாயுகத்தில் தசரத மன்னனின் மகனாக ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்துவந்து, பதினோராயிரம் ஆண்டுகள் இவ்வுலகத்தில் வாழ்ந்து தன் அவதாரநோக்கமாகிய அசுரவதங்களை நிகழ்த்தியும், முடித்தும் காட்டிவிட்டு மீண்டும் தன் இருப்பிடமான வைகுந்த வளநகருக்குச் சென்றார். மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழிமுறையை அதில் எடுத்துரைக்கப்பட்டிருந்தாலும், பெருமானின் பரத்துவநிலை (கடவுளின் திருவிளையாடல்கள்)அதில் எடுத்துரைக்கப்படாமல் போனதால், அக்கடவுளைப் பற்றிய போதிய விழிப்புணர்வும், பக்திநிலையும் அப்போதும் ஏற்படாமலும், வளராததையும் கண்ட பெருமான் அடுத்த யுகமான துவாபரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் மேற்கொண்டார். அவ்வாறு வாழ்ந்தபோது தன்னுடைய ஒவ்வொரு நிகழ்விலும் தன்னுடைய பரத்துவத்தை, மாயாலீலைகளைக் காட்டி, வெளிப்படுத்தி தானே உலகின் முதல்வன் என்று, தன்னால் படைக்கப்பட்ட ஒவ்வொரு ஜீவாத்மாவும் தன்னை வந்து அடைதலே ஒரு ஆத்மனுடைய (மனிதனுடைய)மேலான குறிக்கோள் என்றும் அறிவுறுத்தினார்.



**இராமாயணமும், மகாபாரதமும் :**

இந்த இதிகாசங்கள் இரண்டிலிலும், ஸ்ரீராமனின் சரிதத்தைக் கூறுவது ஸ்ரீராமாயணம் என்றும், கிருஷ்ணரின் வாழ்க்கைத்தத்துவத்தை விளக்குவது ஸ்ரீமஹாபாரதம் (மகாபாரதம்) என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றுள் வடமொழியில் வால்மீகி முனிவரால் எழுதப்பட்டுள்ளதான ஸ்ரீமத்ராமாயணத்தின் காவியத்தலைவன் ஸ்ரீராமர் ஆவார். இவரை இறையின் அதாவது கடவுளின் அவதாரமாகவே படம்பிடித்துக்காட்டுகின்றார் இதன் ஆசிரியர் வால்மீகி முனிவர். ஆதிகாவியமான இதைத் தமிழில் எழுதியவர் கம்பநாட்டாழ்வார். இதிலும் ஸ்ரீராமரை சாட்சாத் திருமாலின் திரு அவதாரமாகவே எடுத்துரைத்து அக்கடவுள் வழி நடப்பதும் அவர்சென்ற பாதையில் நாமும் செல்வதுமே நாம் உய்வுபெறுவதற்கான ஒரே வழி என்கின்றார் கம்பர்.

**ஸ்ரீமத் ராமாயணம் உணர்த்தும் தத்துவங்கள் :**

ஸ்ரீமத்ராமாயணத்தில் காப்பியச் சுவைகளைவிட வாழ்க்கைத்தத்துவமே பெரிதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் முனிவர்களும் யோகிகளும் மிகுதியாக பங்கேற்கின்றனர். ஆதிகாலத்தில் ஆரண்யங்களில் கூட்டம் கூட்டமாக ஆசிரமங்களில் இவர்கள் தங்கியிருந்து தமது இஷ்ட தெய்வங்களை வணங்கியும் வேண்டியபொழுது தவம் மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் செய்த

தவத்தின் முடிவில் உலக நலனிற்காகவும் தர்மவான்களைக் காக்கவும் தர்மத்தைக்காத்துக்கொள்ளவும் வரங்கள் பெற்றுள்ளனர். ஒருசிலர் மட்டும் தாங்கள் செய்த தவப்பயனின் காரணமாக பலவரங்களைப் பெற்றுக்கொண்டு அதன்பலனாக மற்றவர்களுக்கும் மானிட வர்க்கத்தினர்க்கும் தேவர்களுக்கும் தீங்குகள் இழைத்துள்ளனர். அதனால் தற்காலிக இன்பமும் பெற்று வாழ்ந்துள்ளனர். அவர்களே அசுரர்கள் அல்லது அரக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

**ஸ்ரீராமன் காட்டும் வாழ்க்கைப் பாதை :**

இந்த அரக்கர்களின் அட்டூழியங்களும் அராஜகமும் தலைவிரித்தாடி சாதுக்களாகிய நல்லவர்களின் வாழ்க்கைக்கு இவர்கள் இன்னல் இழைத்து இன்பம் அடைந்திருந்த காலத்தில் அதைப்போக்குவதற்காகவே ஸ்ரீமந்நாராயணன் பற்பல அவதாரங்கள் எடுத்து வந்து தர்மத்தையும் தர்மிகளையும் காத்து அருள்புரிந்தார். அவ்வாறு பெருமான் எடுத்த அவதாரங்களுள் மிகச்சிறந்த அவதாரங்கள் ஸ்ரீராமாவதாரமும், ஸ்ரீகிருஷ்ணாவதாரமும் ஆகும். இவை முறையே பகவான் எடுத்த பூரணஅவதாரம் என்றும், பரிபூரணஅவதாரம் என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றுள்ளும், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை, இந்து தர்மத்தின் ஈடுஇணையற்ற கோட்பாட்டினை எடுத்துரைத்து, விளக்கம்கூறி வெற்றிப்பாதைக்கு அழைத்துச்செல்லும் உயர்ந்த காவியமாக விளங்குவது இராமாயணக்காப்பியம். ஸ்ரீராமரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்நடத்திய வாழ்க்கைத் தத்துவங்களையும் வாழ்ந்து காட்டிய முறையையும் நோக்குகின்றபோது நமக்குப்பெரும் ஆச்சரியமாகவும் அமைகின்றது.

அவ்வகையில் இந்த இராமனின் சரித்திரத்தை நன்கு ஆராயவும் பொதிந்து கிடக்கும் தத்துவார்த்தங்களை வெளிக்கொண்டு வந்து கருத்துப்பரிமாற்றங்கள் செய்து கொள்ளவும் மனித இனம் அறிந்து பயன் பெறவும் உதவுகின்ற காவியம் ஸ்ரீராமாயணம் ஆகும். இத்துணைச்சிறப்புடைய இதனை முழுமையாகக் கற்கமுடியாமல் இந்திரமயமான தமது



வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் பெரும்பாலான பாரதத்திருநாட்டினர்க்கு, ஸ்ரீராம பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பதற்காகப் படைக்கப்பட்டதே "ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதம்" என்னும் இந்நூலாகும். ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதம் என்னும் இந்த நூலில் வால்மீகி முனிவர் அருளிச்செய்துள்ள வடமொழிநூலிலும், கம்பநாட்டாழ்வார் தமிழில் அருளிச்செய்துள்ள கம்பராமாயணத்தில் கூறப் பட்டுள்ள ஸ்ரீராமரின் அவதாரச்சிறப்புகள், ஸ்ரீராமனுடைய வாழ்க்கைத்தத்துவமும், அதனால் மனித இனத்திற்குத் தேவையான தர்மமாகிய நெறிமுறைகளும் முழுமையாகக் கூறப்பட்டுள்ளன. கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரின் கவிதைகளும், காப்பியப்போக்கும், கவிதைநயங்களும், சிறிதும் மாறுபடாமல் சுருக்கமான முறையில் அனைவரும் படித்து மகிழத்தக்க இனிமையான தமிழில் எடுத்துரைக்கப்படுள்ளன. காவியப்போக்கின் கருத்து வழியிலும், பாத்திரங்களின் கூற்றுகளையும் எடுத்துரைக்கும்போது, அதனால் வெளிப்படுகின்ற கடவுள்கொள்கை, காவியமரபு, பாரதநாட்டின் நாகரீகப் பண்பாட்டுக்கூறுகள், அவற்றை நாம் மதித்தும், பின்பற்றியும் நடந்துகொள்ள வேண்டியதின் இன்றியமையாமை, ஆகியவை இந்நூலில் பெரிதும் விளக்கப்பட்டுள்ளதால் உண்மையில் இது ஓர் அரிய படைப்பு என்பதை அனைவரும் உணரமுடியும்! இதில் அணுவளவும் பொய்யுரை இல்லை என்பது படிப்போர்க்கு நன்கு விளங்கும்.

முன்னொரு காலத்தில் (கிருதயுகத்தில்) ஸ்ரீமந்நாராயணன் ஆகிய பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்து, தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்து, அவர்களைக்காத்து அருள்செய்தார் என்பதை நாம் அறிவோம். அவ்வகையில் அடியேன், கம்பராமாயணம் என்னும் கடலைக்கடைந்து மனிதர்களாகிய ஜீவாத்மாக்கள் ஸ்ரீராமசரிதத்தில் தேவைப்படும் அமிர்தத்தைப்பருகி பயனடையும் வகையில் இந்த நூல் எழுதியுள்ளேன். ஸ்ரீமத்ராமாயணத்தின் சாரமாகிய அமிழ்தத்தைப் (அமிர்தத்தை)

சுவைத்துமகிழ்ந்திடவும், ஸ்ரீராமாயணத்தில் பொதிந்துள்ள நமது இந்து சமயத்தின் உன்னதமான தர்மங்கள் போன்றவைகளும் ஆங்காங்கே எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

எனவே இந்நூலானது அனைத்து தரப்பினர்க்கும் பயன்படக்கூடிய ஓர் அமிர்த சாகரத்தைக் கடைந்தெடுத்த சாராமிர்தமாய், தித்திக்கும் தேனாய், தேனினும் இனிய திகட்டாத தெள்ளமுதாய் பயன்படும். ஆகையால் அனைவரும் இந்நூலை வாங்கிப் பயன்படுத்துமாறும் கனிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

என்றென்றும் ஆன்மீகத்திருப்பணியில்

அன்பன்

முனைவர். பெரு. ஹரிகேசவ ராமாநுஜதாசர். வேலூர்.

# ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதம் அவதாரிகை

**வால்மீகி சரிதம் :**

ஆதிகாவியம் என்றழைக்கப்படும் ஸ்ரீமத்ராமாயணத்தை முதன்முதலில் வடமொழி எனப்படும் சமஸ்கிருதத்தில் எழுதியவர் வால்மீகி முனிவர் என்பவராவார். இவருடைய இயற்பெயர் ரத்னாகர் என்றும் இவர் ஒரு மகரிஷியின் குமாரர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் இளமையில் காணாமல் போய்விடவே வேடுவர்களின் தலைவன் ஒருவன் இந்த ரத்னாகரை வளர்த்து வரவே இவரும் வேடுவராகவே வாழ்ந்தார். வேடுவர்களின் பராமரிப்பில் வாழ்ந்து வந்த ரத்னாகர் மாமிச உணவை உண்டும் விலங்குகளைக் கொன்று தின்றும் வாழ்க்கை நடத்தி வந்தான்.

திருமணவயது நிரம்பியவுடன் வேடர்குலப்பெண் ஒருத்தியை மணம் செய்து கொண்டு வாழ்க்கையை நடத்தினான். பலகுழந்தைகள் பிறந்தனர். அதனால் தனது குடும்பத்தைக் காப்பாற்ற திருட்டுத்தொழிலையும், வழிப்பறியும் செய்து வாழ்க்கை நடத்தினான்.

ஒருமுறை அக்காட்டுப்பகுதிக்கு சப்த ரிஷிகள் வந்தனர். அவர்களைக் கொள்ளையடிக்க ரிட்சன் என்ற ரத்னாகர் முற்பட்ட பொழுது அவர்கள் சிறிதும் அஞ்சாமல் நீ ஏன் இப்படிப்பட்ட பாவச்செயலைச் செய்கின்றாய் என்று கேட்டனர். அதற்கு அவன் தான் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். தான் கொள்ளையடிக்கும் பொருளை அவர்களுக்கே செலவிடுகின்றேன் என்று கூறினான். உடனே சப்த ரிஷிகள் சரி நீ கொண்டு செல்லும் பொருளைப்பங்குபோட்டு உண்ணும் அவர்கள் நீ செய்யும் கொலையும் கொள்ளையுமாகிய பாவத்தைப் பங்குபோட்டு எடுத்துக்கொள்வார்களா? என்றுகேட்டனர். அதற்கு விடைகூறமுடியாமல் தவித்த அவனைப்பார்த்து “நீ இதற்கு விடை தெரிந்து கொண்டு வா! அதுவரையில் நாங்கள் இங்கேயே இருக்கின்றோம் என்றனர்” அதற்கு இசைந்த அவனும் தன் வீட்டாரிடம் சென்று தான் செய்யும் பாப காரியங்களில் பங்கேற்றுக் கொள்வீர்களா என்று கேட்க அவர்கள் கைகொட்டிச் சிரித்து, அது முடியாது என்றும்

பொருள் மட்டுமே அனுபவிப்போம் என்றும் கூறினர். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது அவனுடைய கடமை என்றும் கூறினர். அதனால் அவன் மனக்கண் திறந்து கொண்டது. தான் செய்து வந்தது அதர்ம காரியமென்று உணரத் தொடங்கினான். ஞானம் வரப்பெற அவன் முனிவர்களிடம் சென்று தான் பந்தபாசம் என்பதில் இருந்து விடுபட்டதாகவும் இத்தனை நாட்கள் பெரும் பாவகாரியங்கள் செய்து விட்டதாகவும் அதைப்போக்க வழிகாட்டுமாறும் சப்த ரிஷிகளிடம் வேண்டினான் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் ரத்னாகரனாக வாழ்ந்துவந்த அந்தக் கொள்ளையனைத் திருத்தி நல்வழிப்படுத்த வந்தவர் நாரதமாமுனிவரே என்றும், அவன் இருந்த காட்டுப்பகுதிக்குள் சென்ற நாரத முனிவரைக் கொள்ளையடிக்க நினைத்தான் ரத்னாகரன் என்றும் அவனிடம், மேற்கண்ட கேள்வியினை நாரதர் கேட்க அவனும் விடைகண்டு வருவதாகவும் அதுவரையில் நாரதரை ஓணான் கொடியில் மரத்தில் கட்டிவைத்துச் சென்றான் எனவும் வால்மீகியின் சரித்திரத்தைச் சிலர் கூறுகின்றனர். எனினும் நாரதமுனிவரே ரத்நாகரனைத் திருத்த வந்தவர் என்பதே பெரிதும் வழக்கத்தில் உள்ளது.

மனம்திருந்திய மைந்தனாகிய ரத்னாகரனை உயர்ந்த நிலைக்கு அழைத்துச்சென்று அவன்மூலம் ஸ்ரீமத்ராமாயணம் பாடப்படவேண்டியது அவனுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்ததாலும், நாரதமாமுனிவரே அவனுக்கு தினந்தோறும் மரா மரா என்ற மந்திரத்தைத் தியானம் செய்யுமாறு கூறிச் சென்றார். அவனும் அவ்வாறே செய்ய அவன் அமர்ந்து தியானம் செய்த இடத்தில் புற்று எழும்பியது. மரம் செடி கொடிகளும் முளைத்து விட்டன. அவற்றை அறியாமல் அவன் மரா மரா மரா மரா என்று தியானம் செய்து வந்தான். இப்படியாக பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தோடிப்போன நிலையில், ஒருநாள் நாரத முனிவர் மீண்டும் அப்பகுதிக்கு வந்தார். ரத்னாகரனுடைய தவத்தை முடிவிற்குக்கொண்டுவர நினைத்த நாரதமாமுனி "ரத்னாகரா வெளியே வா" வெளியில் வா! என்று அழைக்க ரத்னாகரனும் வெளியில் வந்தான்.



அப்போது புற்றிலிருந்து வெளிப்பட்ட அவனுடைய தோற்றம் முழுவதும் மாறிப்போய் இருந்தது. அவனுடைய தேகமும் முகமும் நல்லதேஜஸைப் பெற்றிருந்தன. மிகப்பெரும் தாடியும் நீண்ட தலைமுடியையும் உடைய ஒரு முனிவனைப்போலவே அவன் காணப்பட்டான். அப்போது நாரதர் கூறிச்சென்ற மரா மரா என்று அவன் ஜபித்தது ராம ராம என்று மாறியுள்ளதை உணர்ந்தான். "நீ இத்தனை நாட்களாக ஸ்ரீராமநாமத்தை ஜபித்தாய் எனவே உன் பாவங்கள் எல்லாம் தீர்ந்து போயின. நீ புனிதன் ஆனாய். நீ உண்மையில் உயர்குலத்தில் தோன்றி இருந்தவன். சூழ்நிலையால் இவ்வாறு மாறி வளர்ந்தாய். நீ புற்றில் இருந்து வெளிப்பட்ட இந்த தினம் உனக்கு மறுபிறவி போன்றதாகும். எனவே இன்றுமுதல் நீ எங்களைப்போல மிகப்பெரும் மகரிஷியாகிவிட்டாய். சிறந்த ஞானம் பெற்ற உன்னால் இந்த உலகத்திற்கே மிகப்பெரும் நன்மை உண்டாகும்" என்று கூறி ஆசீர்வதித்துச் சென்றார் நாரதமாமுனிவர்.

அன்றுமுதல் வால்மீகி மகரிஷி என்று அழைக்கப்பட்ட அவருக்குச்சீடர்கள் பலர் கிடைத்தனர். அவர்களுள் ஒருவர்தான் பரத்வாஜர். வால்மீகி தன்சீடர்களுக்கு ஸத் விஷயங்களைப் போதித்துக் கொண்டு இருந்தபோது தான், நாரத முனிவரும் அதையடுத்து பிரம்மதேவனும் வால்மீகியின் ஆசிரமத்திற்கே வந்து இராமன் கதையைக் கூற, அவர் அதை ஸ்ரீமத்ராமாயணமாகச் செய்தார் என்று அறியப்படுகின்றது.

**ஸ்ரீராம காதையாகியகாவியம் பிறந்தகதை :.**
**நாரத முனிவரிடம் வால்மீகி கேட்டவினா !**

ஒருநாள் நாரதமுனிவராகிய பிரம்மாவின் புத்திரர் வால்மீகியின் ஆசிரமத்திற்கு வந்தார். அவரை நன்கு உபசரித்த வால்மீகி அவரிடம் ஒருகேள்வியைக்கேட்டார். தர்ம சிந்தனைகள் உடையவராகவும் ஆற்றல், பொறுமை, கோபம் அற்ற தன்மை, இன்சொல் பேசுதல், புலனடக்கம் பெற்றிருத்தல் ஆகிய அனைத்து நற்பண்புகளும் ஒருங்கே வாய்க்கப்பெற்றுள்ள மனிதன் இவ்வுலகத்தில் இருக்கின்றானா?

அவ்வாறு இருப்பது சாத்தியமா? யாராவது இருந்தால் உங்கள் அனுபவத்திலோ ஞான திருஷ்டியாலோ கண்டறிந்து சொல்லுங்கள் என்று கேட்டார்.

**நாரத முனிவர் கூறிய இராமனின் பண்புகள் :**

பூலோகம் வானுலகம் நரகர் உலகம் என்னும் மூன்று உலகங்களிலும் உலாவித்திரிந்து வந்து, திரிலோக சஞ்சாரி என்றழைக்கப்படுபவருமான ஸ்ரீநாரதமாமுனியிடம் இக்கேள்வியைக் கேட்டார் வால்மீகி! ஞானமும் அனுட்டானமும் ஒருங்கே கொண்டவர் நாரதமகரிஷி என்பதனால் வால்மீகி அவரிடம் இதைக்கேட்டார். அதற்குச் சற்றும் தயங்காமல் "இட்சுவாகு குலத்தில் தோன்றியவரான ஸ்ரீராமர் என்பவர் அத்தகைய குணநலன்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவர்" என்று கூறி, அவருடைய முழு வரலாற்றையும் விரிவாக எடுத்துரைத்தார் நாரதர். அதன்பிறகு ஆகாயமார்க்கமாய்த் தேவலோகம் சென்றார்.

**வால்மீகி கண்ட நிகழ்வும் அனுபவமும் :**

நாரத முனிவர் கூறிச்சென்ற ஸ்ரீராமனின் குணங்களும் தர்மாத்மாவாக அவன் அயோத்தியை ஆளும் தன்மையையும் அறிந்த வால்மீகி, அன்று காலை விடிந்தது முதல் அந்த நினைப்பிலேயே இருந்தார். ஸ்ரீராமனாகிய ஒரு புனிதமான அந்த அரசனைப்பற்றிய எண்ணத்திலேயே அவருடைய சிந்தனை மூழ்கியிருந்தது. அப்போது வால்மீகி முனிவர் தன் சீடரான பரத்வாஜரை அழைத்து, தான் நீராட விரும்புவதாகவும் அதனால் வேண்டியனவற்றை எடுத்துக்கொண்டு தன்னுடன் வருமாறும் கூறினார். குருவிற்குப் பணிவிடை செய்தலையே தன் கடமையாகக் கொண்டிருந்த பரத்வாஜர் மரவுரி போன்றனவற்றை எடுத்துக்கொண்டார். இருவரும் தமசி என்ற ஆற்றின் படித்துறைக்குச் சென்றனர். கங்கை நதி பக்கத்தில் இருந்தாலும் இந்த தமசி நதியிலேயே இன்றைக்கு நீராடுகின்றேன் என்று கூறிவிட்டு தன் மனத்தை ஒருநிலைப்படுத்த அங்கிருந்த அடர்க்காட்டில் கொஞ்சநேரம் திரிந்தார். அப்போது அந்தக்காட்டின் ஒருமரத்தில் ஆணும்



பெட்டையுமான இரண்டு அன்றில் பறவைகள் ஆனந்தமாய் இருந்தன. கூடிக்குலவியும், கொஞ்சுமொழிபேசிக்கொண்டும் இன்புற்றிருந்தன அப்பறவைகள்.! அப்போது அந்த வழியாக வந்த வேடன் ஒருவன் ஆண் அன்றில் பறவையைத் தன் அம்பால் கொன்று விட பெண் அன்றில் துடியாய்த்துடித்துப்புலம்பியது.

**வால்மீகி, வேடனுக்குக் கொடுத்த சாபமொழி:**

அதைக்கண்ட வால்மீகி முனிவருக்கு வேடன்மேல் அளவற்ற கோபம் உண்டானது. அவர் "அடே வேடா ஆனந்தமாய் கூடிக்கொண்டிருந்த பறவைகளில் ஆண்பறவையைக் கொன்ற பாவியே நீசெய்தது மிகப்பெரிய அநியாயச்செயல். பாவகரமானது. அதனால் நீ உண்ண உணவும், உடுக்க உடையும் கூடக் கிடைக்காமல், மன நிம்மதியின்றி நீ ஓரிடத்தில் நில்லாமல் அலைந்து திரியக்கடவாய்" என்று ஒரு சாபத்தைக்கொடுத்தார். அந்தச் சாபமாவது.

**"மாநிஷாத பிரதிஷ்டாம் த்வம் அகமஹ: சாஸ்வதீ: ஸமா:**
**யத் கிரௌஞ்ச மிதுனாத் ஏகம் அவதீ: காம மோஹிதம்"**

வால்மீகியின் சாபம் பலிக்கத்தொடங்கியது. அந்த வேடனும் அதனால் துயருற்று அங்கிருந்து அகன்றான். அலைந்து திரியத்தொடங்கினான். அதன் பின்னர் தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, அங்கிருந்து திரும்பிய வால்மீகிக்கு அவர் வேடனைச் சபித்த சாபமொழிகள் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்தன. அதை மேலும் ஆராய்ந்து பார்த்தபோது அது பாடலைப்போன்று ஒத்த சீர்களையும் எழுத்துக்களையும் உடையதாகத் தெரியவந்தது. இசையோடும் பாடக்கூடியதாய் இருந்தது. "அனுஷ்டுப்" என்னும் ஈரடிகளால் ஆன பாடல்வகையாக (ஈரடிச்சுலோகமாக) அது இருந்தது.

எனவே அதைத் தன்வாயால் உரக்கப் பாடிப்பார்த்தார். நயம் மிக்கச்செய்யுளாய் (ஸ்லோகமாய்) அது இருந்தது. அதைக்கேட்ட பரத்வாஜரும் அப்படியே பாடினார். வால்மீகி மனம் மகிழ்ந்தார். நீராடிவிட்டு ஆசிரமத்திற்குச் சென்றார். தன் மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போதும்

அப்பாடல்வரிகள் நினைவிற்கு வந்தன. அதன் தாக்கத்துடன் வால்மீகி காணப்பட்டார். தனது சிஷ்யர்களுக்கும் அதைப்பாடிக் காண்பிக்க, பரத்வாஜர் தலைமையில் எல்லோருமே அதைப் பாடினர்.

**சாபத்தின் மறைபொருள் :**

வால்மீகி முனிவரால் வேடனுக்குக் கொடுக்கப்பட்ட சாபமொழியில், வேடன் காமத்தில் ஈடுபட்டிருந்த பறவைகளைக்கொன்றதால் அவன் மனதிற்கு நிம்மதி இல்லாமல் ஓரிடத்திலும் தங்காமல் எங்கெங்கும் அலைந்து திரிய வேண்டும் என்பது மேலோட்டமான பொருளாகக் காணப்பட்டாலும், திருமகளைத் தன்மார்பில் பெற்றுள்ளவனான திருமால், அடங்காத காமவலையில் சிக்கி, பலபெண்களைத் தன்காமத் தீயால் அழித்துவந்தவனான இராவணனைத் தன்னுடைய இராமாவதாரத்தின்போது அழித்ததால், அவருடைய புகழானது எல்லா இடங்களிலும் பரவியது., ஓரிடத்திலும் ஓர் உலகத்திலும் அடைபட்டுவிடாமல் மூவுலக மக்களிடமும் அது பரவி அவருக்குப் புகழைத்தந்தது என்ற உட்பொருளையும் கொண்டுள்ளதை அறியலாம். இங்கு “மாநிஷாத” என்பது வேடனைக்குறிக்கும் ஒரு சொல்லாகவும், “மா.. நிஷாத” என்று பிரித்துப் பார்க்கும்போது, அன்னையாகிய மகாலட்சுமியைத் தன் மார்பிலே ஏற்றவரான திருமாலைக் குறிப்பதாகவும் இருபொருள்பெற்றிருப்பதை அறியலாம். காம மோஹிதம் என்பதால், இராவணன் தனக்கு மண்டோதரி, தான்ய மாலா என்ற இரண்டு மனைவியரும், பலபுத்திரர்களும் பிறந்து இருந்தாலும், காமவேட்கையில் அதிக நாட்டம் கொண்டவனாக, வேதவதி, புஞ்சிகஸ்தலா, ரம்பா (நலகுபேரனின் மனைவி) போன்ற எண்ணற்ற பெண்களைக் காமமோகத்தால் சீர்குலைத்து, அதர்மச்செயல்கள் புரிந்ததால் அவனைப் பெருமான் ஸ்ரீராமாவதாரம் கொண்டு வந்து, இராவணனன் முதலியோர்களை அழித்து, தர்மத்தை நிலைநாட்டியதால் அவருடைய பெருமையானது எல்லாத்திக்குகளிலும் உள்ள உலகங்களில் பரவியது என்பது பொருளாகும்.



**வால்மீகியும் பிரம்மதேவனும் :**

இவ்வாறு வால்மீகி தன்சீடர்களோடு இருந்தபோது, படைக்கும் கடவுளான பிரம்மதேவர் வால்மீகியின் ஆசிரமத்திற்கு வந்தார். அவரை வரவேற்று உபசரித்தார் முனிவர். பிறகு முனிவரைத் தன்பக்கம் வந்து அமர்ந்து கொள்ளுமாறு பிரம்மன் கூறினார். முனிவரும் அமர்ந்து கொண்டார் எனினும் அவர் மனம் வேடனுக்குத்தான் கொடுத்த சாபத்தின் வரிகளிலேயே நிலைத்து நின்றன. மன ஒருமைப்பாடு இல்லாமல் அவர் காணப்பட்டார். அதன் காரணத்தை நன்கு அறிந்தவரான பிரம்மா அன்று அந்தக்காட்டில் நடந்த சம்பவமும், அதன் காரணமாய் முனிவர் வேடனுக்குக் கொடுத்த சாபமொழியும் தன் விருப்பத்தாலேயே நிகழ்ந்தவை என்பதை எடுத்துரைத்தார். அந்த வால்மீகியின் வாயிலிருந்தும் வெளிப்பட்டவை தன் துணைவியான சரஸ்வதி தேவியின் அருளால் உண்டானது என்றும் கூறினார். புன்முறுவலோடு தானே அந்தப்பாடல் அவர்வாயிலிருந்து தோன்றுவதற்காக சரஸ்வதி மூலம் ஏற்பாடு செய்ததாகவும் கூறிய பிரம்மதேவன் இப்படிப்பட்ட அனுஷ்டுப் என்ற இரண்டு வரிகளால் ஆனபாடல்களாக (ஸ்லோகங்களாக) ஸ்ரீமத் ராமாயணத்தைப் பாடுமாறும் அருள்செய்தார். தன் மகனான நாரத முனி கூறிச் சென்ற இராமனின் காதையைப் பாடுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இராமரின் வாழ்க்கை வரலாற்றில் நாரதர் கூறமறந்தனவும் இராமரோடும், காவியத்தோடும் தொடர்புடைய நாடு நகரங்கள் ஆறுகள் நதிகள் கதாபாத்திரங்கள் போன்றவற்றின் சிறப்பும் செய்திகளும் வால்மீகிக்குத் தனது ஞானதிருஷ்டியால் கிடைக்கும் என்றும் அத்தகைய ஆற்றலை தான் வால்மீகிக்கு அளிப்பதாகவும் கூறி விட்டு மறைந்தார். சத்தியலோகத்திற்குத் திரும்பிவிட்டார்.

அதன் விளைவாக வால்மீகி முனிவருக்கு கோசலநாடு, கங்கைநதி, அதன் உபநதியான சரயு, அச்சரயு நதிக்கரையில் அமைந்திருந்த அயோத்தி மாநகர், மகாவிஷ்ணுவால்

எப்போதும் காக்கப்படும் அதன் பவித்திரமான தன்மை, அந்நகரமக்களின் பண்பாடு மற்றும் கலாசாரங்கள் ஆகியவற்றைத் தன் ஞானதிருஷ்டியினால் அறிந்துகொண்டார். அப்போது "மாநிஷாத" என்னும் அப்பாடலை பரத்துவாஜர் பாட மற்றைய சிஷ்யர்களும் சேர்ந்து பாடினர். அதைக்கண்டு மனம் மகிழ்ந்த வால்மீகி இராமகாதையை இப்படிப்பட்ட இசைச் சுலோகங்களால் பாடவேண்டும் என்று முடிவெடுத்தார். அதன்படியே ஸ்ரீராமாயணத்தைப் பாடினார் என்பதும் வரலாறு ஆகும். இதற்கு வால்மீகி இராவணன் வதம் என்றும் சீதையின் பெருங்கதை என்றும் வேறு பெயர்களையும் கொடுத்துள்ளார். பிற்காலத்தில் இது ஸ்ரீமத்ராமாயணம் என்று அழைக்கப்பட்டு பக்தியாளர் படித்து இன்புறும் காவியமாகவும், ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரும் விருந்து படைத்த இதிகாசமாகவும் கருதப்பட்டது.

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் அமைப்புமுறை :**

வால்மீகி முனிவர் அருளிச்செய்துள்ள இராமாயணம் "வால்மீகி ராமாயணம்" என்றே அழைக்கப்படுகின்றது. இது ஏழு காண்டங்களை உடையது. பாலகாண்டம் அயோத்தியா காண்டம் ஆரணிய காண்டம் கிஷ்கிந்தா காண்டம் சுந்தர காண்டம் யுத்தகாண்டம் உத்தரகாண்டம் என்பன அக்காண்டங்களின் பெயர்முறைகளாகும். வால்மீகி ராமாயணத்தில் ஐந்நூறு(500) சருக்கங்களும் 24 ஆயிரம் சுலோகங்களும் உள்ளன என்று வால்மீகி முனிவரே கூறியுள்ளார். ஆனால் இப்போது பார்த்தால் இதில் 647 (அறுநூற்று நாற்பத்தேழு) சருக்கங்கள் உள்ளன.!

இருபத்து நான்காயிரத்து 250 சுலோகங்களும் உள்ளன. அதாவது ஒருநூற்று நாற்பத்தேழு சருக்கங்களும், 250 சுலோகங்களும் இடைச்செருகல்களாய் புகுந்துவிட்டுள்ளன. எனவே அதிகமாய்ப் பெருகிவிட்டன என்கிறார்கள். இந்த இடைச்செருகல்கள் ஆரண்ய காண்டத்திலும் உத்தர காண்டத்திலும் மிகுதியாக உள்ளன.



**கம்பராமாயணத்தின் அமைப்பு :**

வால்மீகி முனிவர் வடமொழியில் பாடிய இந்த இதிகாசத்தை முதல் நூலாகக்கொண்டு தமிழில் இந்த இதிகாசத்தை அருளிச்செய்தவர் கம்பநாட்டாழ்வார் ஆவார். இவர் எழுதிய கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்களே உள்ளன. இராமன் முடிசூட்டிக்கொள்வதோடு, தனக்குப் போரில் உதவிய வீடணன், சுக்கிரீவன், கங்கைக்கரைவேடுவன்குகன் ஆகியவர்களுக்குப் பரிசுப்பொருள்கள் கொடுத்தும், அனுமனை மட்டும் தன்னோடு இருத்திக்கொண்ட கதைப்பகுதியோடும் கம்பராமாயணம் முற்றுப் பெறுகின்றது. இதனோடு தொடர்புடைய உத்தரகாண்டத்தை ஒட்டக்கூத்தர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சோழவளநாட்டில் இருந்த திருவழுந்தூரில் வாழந்துவந்தவரான சடையப்பவள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பட்டவர் கம்பர் என்பார்கள். இவரால் எழுதப்பட்டது இராமகாதை எனப்படும் இராமாயணம். ஆகையால் இவருடைய படைப்பைக் கம்பராமாயணம் என்றே அழைக்கின்றோம். பகவானின் அவதாரச்சிறப்பை எடுத்துரைப்பதால் ஸ்ரீமத்ராமாயணம் என்று அழைக்கப்படும் தகுதியையும் பெறுகின்றது. இந்த நூலில் கம்பராமாயணத்தின் கதைப்போக்கு மட்டுமின்றி, வால்மீகி இராமாயணத்தின் கதைப்போக்கும் கூறப்பட்டு, ஆங்காங்கே இரண்டிற்கும் உரிய சில வேறுபாடுகளும் எடுத்துரைக்கப் படுவதால் இவற்றின் சாராமிர்தமும் இவை இரண்டையும் தவிர்த்த துளசிதாசர் ராமாயணம் போன்றவற்றிலும் கூறப்பட்டுள்ள சாராமிர்தச் சுவையும் கலந்து படைக்கப்பட்டுள்ளதால், இந்நூலிற்கு "ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதம்" என்ற பெயர்சூட்டப்பட்டுள்ளது.

கம்பராமாயணத்தின் பாலகாண்டத்தில் 1258. பாடல்களும் அயோத்திய காண்டத்தில் 1197 பாடல்களும் ஆரணிய காண்டத்தில் 1191 பாடல்களும் கிஷ்கிந்தா காண்டத்தில் 1130 பாடல்களும் சுந்தரகாண்டத்தில் 1298 பாடல்களும் யுத்தகாண்டத்தில் 4309 பாடல்களும் உள்ளன.

ஆக, கம்பராமாயணம் 10383 பாடல்களை உடையதொரு பெருங்காவியமாக அமைந்துள்ளது. ஆனால் கம்பராமாயணத்தின் பாயிரவியலில் கூறப்பட்டுள்ள பலபாடல்களும், கடவுள்வாழ்த்துப்பாடல்களும் இத்தொகையில் அடங்கப்பெறவில்லை என்பதனையும் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

மேலும் இதில் உள்ள காண்டங்கள் (நூலின் பெரும்பிரிவு) ஆறு ஆகும், படலங்கள் (அதாவது ஒரு நூலின் சிறுபிரிவு) மொத்தம் 118 ஆகும். பாலகாண்டத்தில் 23 அயோத்தியா காண்டத்தில் 13 ஆரணிய காண்டத்தில் 12 கிஷ்கிந்தா காண்டத்தில் 16 சுந்தர காண்டத்தில் 15 யுத்த காண்டத்தில் 39 என்று மொத்தத்தில் 118 படலங்களை உடையதொரு பெரும் நூலாக இக்கம்பராமாயணம் விளங்குகின்றது.

இப்பாடல்கள் பெரும்பாலும் விருத்தப்பாடல்களால் மிகுதியான சந்த நயங்களை உடையதாய் அமந்துள்ளன. எனவேதான் விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன் என்று சான்றோர் அழைத்து மகிழ்கின்றனர். கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்ற பழமொழியானது, கம்பரின் கவிதைச் சிறப்பைக் கூறுவதாகும்.

வால்மீகி இராமாயணத்தில் அமைந்துள்ள உத்தரகாண்டம் மற்ற காண்டங்களிலே கூறப்பட்டுள்ள கதாபாத்திரங்கள் அவர்களுடைய குணநலன்கள் ஆகியனவற்றைப் பற்றி எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. அதனால் அதைப்படித்தால் இராமாயணம் கற்ற ஒரு முழுமையை அடைய முடிகின்றது. இதில் கூறப்பட்டுள்ள, நூலுடன் தொடர்புடைய முக்கியப்பகுதிகளும் கூட இதில் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக வாலி சுக்கிரீவன் இவர்களின் பிறப்பைப் பற்றியும் அனுமனுடைய பிறப்பைப்பற்றியும் உத்தரகாண்டத்தைக் கொண்டே அறிந்து கொள்ள முடிகின்றது. அதனால் அவர்கள் அண்ணன் தம்பிகளாக இருந்தும் ஒருவன்



இந்திரன்மகன் (வாலி) என்பதும், மற்றொருவன் சூரியன் மகன் என்பதும் (சுக்கிரீவன்) எவ்வாறு பொருந்தும் என்பதை அறிந்து கொள்ள உத்தர காண்டமே உதவுகின்றது. மேலும் ஸ்ரீசீதா ராமனின் வாரிசுகளாகத்தோன்றிய குசன் மற்றும் லவன் ஆகியோருடைய சரிதமும் உத்தர காண்டத்திலேதான் கூறப்பட்டுள்ளது!

தமிழில் இவற்றைக்கூறும் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டதான உத்தர காண்டம் பெரும்பாலும் வழக்கத்தில் இல்லை. எனவே அதைப்படிக்காமல் போவதால் இராமாயணத்தைக் கற்றோம் என்ற திருப்தி மனப்பான்மை இதனால் ஏற்படுவது இல்லை.

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மற்றும் கம்பராமாயணத்தின் காலம்.**

**ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தின் காலம் :**

வடமொழி எனப்படும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட காவியம் ஸ்ரீமத்ராமாயணம். முதன்முதலில் இதை அவ்வடமொழியில் எழுதியவர் வால்மீகி என்னும் முனிவர் ஆவார். இவர் சுவேத வராக கல்பத்தில் வைவஸ்வத மன்வந்தரத்தில் 28 வது சதுர்யுகத்தில் திரோதாயுகத்தின் முடிவில் வாழந்தவர் என்று கூறப்படுவதால் அவரால் பாடப்பட்டதான இந்தக் காவியமும் அவர் வாழந்த காலப்பகுதியான பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்கின்றனர் அறிஞர்கள்.

மேலும் இது வியாசர் அருளிச்செய்துள்ள ஸ்ரீமத் மகாபாரதத்திற்கு முன்பாகவே எழுதப்பட்டது என்பதும் ஆராய்ச்சி முடிவாகும். ஐந்தாம் வேதம் என்றழைக்கப்படும் இம்மகாபாரதமானது சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இதிகாசம் ஆகையாலும் இம்மகாபாரதத்தில் இராமாயணத்தைப்பற்றிய குறிப்புகள் காணப்படுவதாலும் இது அதற்குமுன் எழுந்த காப்பியமே என்பதும் ஆய்வு முடிவாகும்.

எவ்வகையில் பார்த்தாலும் இது சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்பாக வால்மீகி முனிவரால் பாடப்பட்டது என்று கொள்ளலாம். எனவே தற்போது நமது நாட்டில் தங்கள் கடவுளே முதலில் தோன்றியவர் என்றும், அவரே பரமபதம் தருபவர் என்றும் கூறிக்கொண்டு மதமாற்றம் செய்து வரும் சிலமதவாதிகளை வாதத்தால் வென்று நமது மதத்தைக் காத்துக்கொள்ள, இந்துமதத்தின் பெருமையையும் தொன்மையையும் அறிந்துகொள்ளவேண்டியது ஒவ்வொரு பாரததேசத்தவனுடைய கடமையுமாகும். எனவேதான் இளைய தலைமுறையினர் நமது இதிகாசங்கள், புராணங்கள், இவற்றிலே ஈடுபாடு கொண்டு, அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியதும், கற்றுத்தேரவேண்டியதும் காலத்தின் கட்டாயமாவதை அறிந்து நடத்தலே நமது பாரதத் திருநாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன் படுவதாக அமைந்துள்ள அதன்பழமையை, அதாவது தொன்மையை அறிந்துகொள்ள நமக்கு உறுதுணைபுரிபவையாகும். எனவேதான் மகாகவி பாரதியாரும் “பாருக்குள்ளே நல்லநாடு. எங்கள் பாரதமணித்திருநாடு” என்றும் பாடிமகிழ்கின்றார்.

**கம்பராமாயணத்தின் காலம் :**

கம்பராமாயணம் அருளிச்செய்த கம்பரை கம்பநாட்டாழ்வார் என்றே வைணவர்கள் குறிப்பிடுவார்கள். காரணம் ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் போலவே கம்பநாடரும் தனது காவியத்தலைவனாக ஸ்ரீமந் நாராயணனையும், அவருடைய அவதாரங்களுள் ஒன்றான ஸ்ரீராமரையும் பாடுகின்றார்.

ஆழ்வார்ப்பாசுரங்களில் பலவற்றைத் தம் பாசுரங்களுள் பயன்படுத்திப்பாடுகின்றார் கம்பர். அதேபோல் ஆழ்வார்கள் அனைவரும் தம்பாசுரங்களில் ஸ்ரீராமசரிதத்தைப் பாடியுள்ளனர். ஆழ்வார்கள் வாழ்ந்து தமது அருளிச்செயல்களான நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தை ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர்பாடி மறைந்தனர். எனவே கம்பருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருக்கவேண்டும்.



ஆனால் சிலர் கம்பரின் காலத்தை கி.பி.12 ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர். எப்படியாக இருந்தாலும் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டதே கம்பராமாயணம் எனலாம்.

**நூற்பயன் :**

எந்த ஒரு நூலாக அல்லது காவியமாக இருந்தாலும், அது அறம், பொருள், இன்பம், வீடுபேறு (முக்தி அல்லது மோட்சம்) என்ற நான்கையும் எடுத்துரைக்கவேண்டும். நமது இதிகாசங்களில் ஒன்றாகத்திகழும் ஸ்ரீமத்ராமாயணம் இந்த நான்கையும் அளிக்கவல்லதாகும்.

ஒரு மனிதன் அல்லது ஆத்மன், தான் வாழும் இப்பூலோக வாழ்க்கையில் அறம் எனப்படும் தர்மத்தைப்பின்பற்றி வாழவேண்டும் என்பதை ஸ்ரீராமன் தன்னுடைய வாழ்க்கைப்பாதையில் கடைப்பிடித்துக் காட்டுகின்றார். இராமனைப்பற்றிய தனது கருத்தாக வசிஷ்ட முனிவர் தசரதனிடம் கூறியபோது.

“மண்ணிடை யாரே இராகவன் அன்றி மாதவம் அறத்தோடும் வளர்த்தார்” என்று கூறுவதால் தர்மத்தைக் கடைப்பிடித்தவன் ஸ்ரீராமன் என்பதை உறுதிசெய்கின்றார்.

மேலும் “ராமோ விக்ரஹவாந் தர்ம:” என்னும் வாக்கியம் அறத்தின் (தர்மத்தின்) திருவுருவம் எதுவென்றால் அது ஸ்ரீராமன் உருவமே என்று கூறுவதாலும், அத்தகைய இராமனைப்போல அனைவரும் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாக வாழவேண்டும் என்பதையும் ஸ்ரீமத் ராமாயணம் உணர்த்துகின்றது.

**பொருட்பேற்றைக் கொடுக்கும் பொக்கிஷம் ஸ்ரீராமாயணம் !**

**“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே இராம என்று இரண்டெழுத்தினால்.”**

என்ற இப்பாடலும்,

**"நாடிய பொருள் கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்**
**வீடு இயல் வழியது ஆக்கும் வேரியல் கமலை நோக்கும்**
**நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை**
**சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவார்க்கே"**

என்ற இப்பாடலும் கம்பராமாயணத்தின் பாயிரத்தில் பாடப்பட்டுள்ள பாடல்களாகும்.

ஒருவனுக்கு இம்மையாகிய இப்பிறவிக்குத் தேவைப்படும் பொருட்செல்வத்தை "ராம" என்ற இரண்டெழுத்து மந்திரத்தை ஒருவன் போற்றித்தொழுது வருவானேயானால், அது அவனுக்குத் தேவையான அனைத்துநன்மைகளையும், மிகுதியான செல்வத்தையும் தரும் என்றும், ஒருவன் செய்த தீமைகளும் பாவச்செயல்களும் அழிந்துபோகும் என்றும், ஒருவன் தன்வாழ்க்கையில் எவ்வெவற்றைப் பெறவேண்டும் என்று நினைக்கின்றானோ, அவற்றையெல்லாம் இந்த ஸ்ரீராம மந்திரம் நிறைவேற்றிக் கொடுக்கும் என்பதையும் எடுத்துரைப்பதைக்காணலாம்.

இன்பத்தின் உறைவிடமாய் இலங்கும் இல்லறத்தைக் கொடுக்கும் ஸ்ரீராமாயணம்.

**ஸ்ரீராமநாம மகிமை :**

1. ஓம் நமோ நாராயணாய, நமசிவாய.. என்பனவற்றின் இரண்டாம் எழுத்துகளின் சேர்க்கையான "ராம" என்பது ஓர் ஈரெழுத்துச்சொல் மந்திரமாகும்.

2. அதே போல் நரகம் செல்லாமல் இருப்பதற்கான வழி என்னவென்றால்

**வென்றிசேர் இலங்கையானை வென்றமால் வீரம்ஓத**
**நின்ற ராமாயணத்தில் நிகழ்ந்திடு கதைகள்தம்மில்**
**ஒன்றினைப் படித்தோர் தாமும உரைத்திடக் கேட்டோர்தாமும்**
**நன்றுஇது என்றோர் தாமும் நரகமது எய்திடாரே..**

என்பது கம்பரின் கூற்று. ஆகையால் இராமாயணக் கதையைப் படித்தோர்க்கும், கேட்டோர்க்கும் ஆஹா இது



எவ்வளவு அற்புதமானது என்று ஆச்சரியத்து நின்று புகழ்ந்தவர்களுக்கும் நரகம் கிடைக்காது, சொர்க்கத்திற்கே செல்வார்கள் என்பது கருத்தாகும்.

3. ஸ்ரீமந் நாராயணனின் 1000 பெயர்களைக்கொண்ட ஸஹஸ்ரநாமத்தைச் சேவிக்கவேண்டும் என்று விரும்பிய பார்வதி தேவிக்கு ராம என்னும் பெயரைச்சேவித்தால் போதும் என்றும் அதுவே அப்பெருமானின் பெயர்கள் அனைத்தையும் சேவித்த பலனைத்தந்துவிடும் என்று சிவபெருமான் கூறி, ராம ராம என்ற ஜபத்தை உச்சரிக்கச்சொன்னார்.

ஏனென்றால் ஸ்ரீராமா என்ற அந்த இரண்டெழுத்து மந்திரத்தைச் சொன்னால், அது பெருமானின் ஆயிரம் பெயர்களையும் நாமசங்கீர்த்தனம் செய்ததற்கு ஒப்பானதாகும்.

**விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில்**

**ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே**
**ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராமநாம வராநனே!**

என்று கூறப்பட்டுள்ளதால் இதன் உண்மை

4. கங்கைக்கு வந்து அங்கு உயிர் துறக்கும் நிலையில் இருக்கும் ஆத்மாக்களின் காதுகளில் சிவபெருமான் ராம ராம என்ற மந்திரத்தையே ஓதுவாராம். அப்படி அந்த மந்திரத்தைக் கேட்ட ஆன்மாக்கள் குறைந்தபட்சம் சொர்க்கத்திற்குச் செல்லும் என்பது ஓர் ஐதிகம் ஆகும்.

5. தர்மம் என்ற சொல்லிற்கு திருவுருவம் அதாவது வடிவம் கொடுத்தால் அது ஸ்ரீராமனின் திருவுருவம் ஆகும் என்பதை,. ராமோ விக்ரஹவாந் தர்ம: என்பதால் அறியமுடிகின்றது.

6. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் குலதெய்வம் ஸ்ரீராமனே.. எனவேதான் தன் சீடனான விவேகானந்தருக்கு ஸ்ரீராமமந்திரத்தை மூலமந்திரமாக உபதேசித்தார். ராமலாலாவாக, அதாவது இராமனைக்குழந்தையாக உபாசித்தனர்.

7. உலகமக்கள் அனைவரின் உருவத்திலும் ஸ்ரீராமனைக்கண்டவர் சமர்த்த ராமதாஸ். எனவே அவர் மற்றவர்களுக்கு வணக்கம் சொல்லும் போது ராம்ராம் என்றே வணக்கம் தெரிவிப்பாராம்.

8. இராமன் என்னும் சொல்லிற்கு ஆனந்தம் கொடுப்பவன் என்று பொருளாகும். அதற்கேற்ப தசரதன், தேவிமார்கள், குருக்கள், அனுமன், குகன், சுக்ரீவன், விபீஷணன், சீதா, பரதன், நாட்டுமக்கள், ஆகிய அனைவர்க்கும் ஆனந்தம் அளித்தவன், இன்பம் கொடுத்தவன்.

9. இராமன் வீரம்நிறைந்த கதாநாயகனாக காலம் கடந்து இன்றைக்கும் மக்களின் மனத்தில் நிலைத்து நிற்பவன்.

10. பாரத நாட்டின் பரமபுருஷனாக, அதாவது இலக்கணமாக கருதப்படுபவன் ஸ்ரீராமனே!

11. இராமன் நல்லொழுக்கத்தின் திருவுருவம். இலட்சிய மனிதன். இலட்சிய மகன், இலட்சிய கணவன், இலட்சிய சகோதரன்., இலட்சியமன்னன்.. என்று அனைத்துப்பரிமாணங்களிலும் இலட்சியத்தின் சின்னமாக வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவன். பக்தர்களின் மனத்திலும், பாரதத் திருநாட்டினர் உள்ளத்திலும் உயர்ந்து நிற்பவன். வானுயர வளர்ந்து நிற்பவன்.

12. அறத்தைக் காத்தவன். மாதவம் செய்தவன்.

மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மாதவம் அறத்தொடு வளர்த்தார்?.. என்னும் வசிஷ்டரின் வாய்மொழி ஸ்ரீராமன் அறமாகிய தர்மத்தை நிலைநாட்டினவன் என்பதையும், மாபெரும் தவசியாக விளங்கியவன் என்பதையும் உணர்த்துகின்றது.

13. **யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத!**
**அப்யுத்தானாம் அதர்மஸ்ய ததாத்மானாம் ஸ்ருஜாம்யஹம்.**



என்ற பகவத் கீதை (அத். 4–7) சுலோகத்தில் எம்பெருமான் ஸ்ரீ கிருஷ்ணன் தான் எல்லாயுகங்களிலும், தர்மத்திற்குத் தலைக்குனிவும், (நலிதல்.. நலிவடையச்செய்தல்), அதர்மவான்களுக்குப் பெருமையும் உயர்வும் ஏற்படும்போது, அதைப்போக்க தன் இச்சையினால் அவதாரம் எடுப்பேன் என்று கூறியதையுள்ளதால், பெருமான் எடுத்த ஸ்ரீராமாவதார, கிருஷ்ணாவதார நோக்கங்களும், அதை அவர்நிறைவேற்றி முடித்தார் என்பதையும் அறியமுடிகின்றது.

14. மேலும், எல்லாக் காலங்களிலும் (யுகாதி யுகங்களில்) அவதாரம் எடுப்பேன் என்றார் ஸ்ரீகிருஷ்ணர்.

**பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச துஷ்கிருதாம்**
**தர்ம ஸம்ஸ்தாபணார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே**

என்பதால் இந்த அவதாரநோக்கமானது, பகவானால் ஒவ்வொரு யுகந்தோறும், பற்பல சமயந்தோறும் நடக்கும் என்பதை அவரே அர்ச்சுனனுக்கு எடுத்துரைப்பதையும் காணலாம்.! (..பகவத் கீதை 4 இல் 8 ஆம் சுலோகம் விளக்கம்.)

15. இப்பாரத தேசம் பெருமை பெற்றதற்கான காரணம்.. இராமாயண உபந்யாசங்கள் மற்றும் மகாபாரதக்கதைகள் போன்றவை நடத்தப்படுவதாலும் ஸ்ரீராம கிருஷ்ணர்களின் புகழ்பாடுவதாலுமே புண்ணியம் பெற்ற நாடாய் விளங்குகின்றது.

16. வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் வால்மீகி, வசிஷ்டர், போதாயனர் என்னும் மூவர் பாடியுள்ளனர். 20 மொழிகளில் 60 க்கும் மேற்பட்ட நூல்கள். உள்ளன.

17. இந்து சமயத்தின் ஆறுவகைப்பட்ட பிரிவினரும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம் என்னும் முப்பிரிவினரும் ஏற்று, போற்றிவணங்கும் கடவுளர்கள் ஸ்ரீராமனும், ஸ்ரீகிருஷ்ணரும் ஆவார்கள்.

18. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆசாரியப் பெருமக்களில் ஒருவரான ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீராமச்சந்திரன் ஆகிய இராமாயணக்காவியத்தலைவன் மீதும், இராமாயணத்தின் மீதும் பெரும்பற்றுக்கொண்டார். ஸ்ரீராமாநுஜரைப்பற்றி அவருடைய சீடரான திருவரங்கத்து அமுதனார் பாடியுள்ள ஸ்ரீராமாநுஜ நூற்றந்தாதியில் “படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோயில் இராமாநுஜன் குணம் (மனம்) “என்னும் தொடரால் அவருடைய இராமாயணக் காவியத்தின் ஈடுபாட்டினைத்தெரிவிக்கின்றார்.

19. ஸ்ரீராம மந்திரத்தை ஜபிப்பதும், அவர் வாழ்ந்துகாட்டிய வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்தலுமே தற்காலத்திற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளாகும்.

20. நமது பழம்பெரும்சமயமான இந்துமதத்தின் மீதும், அதனுடைய உயர்ந்த தத்துவமான சநாதனதர்மத்தின் மீதும் நமது மக்களுக்கு நம்பிக்கையும் நமது தர்மமே வாழும் நெறிமுறை என்பதையும் வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

21. தன்னுடைய உண்மையான ஆற்றலை அறிந்து கொள்ளாத ஹனுமனைப்போல நமது பாரதத்தின் பெருமைகளை அறியாதவர்களாக நாம் உள்ளோம். ஆனால் அன்றைக்குச் சாம்பவான் அனுமனைத் தட்டி எழுப்பியதைப்போல நம்முடைய சிறப்புகளை அறிந்து செயல்படவேண்டும் என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். இதை ஆராய்ந்து அறிந்த பல ஆன்றோர்கள் இதிலிருந்து தாம் அறிந்த பாதைகளை நமக்குக் காட்டியுள்ளனர்.

22. எனவே இராமன் செல்லும் பாதையில் நாமும் சென்று வளமான பாரதமாக நமது நாட்டை வளர்த்திட விழைவோமாக! அதற்கு ஓரளவு அடியேனுடைய இந்த ஸ்ரீராமாயண சாராம்ருதமும் நிச்சயமாகப் பயன்படும் என்று உளமாற நம்புகின்றேன்.



ஸ்ரீமத்ராமாயணத்தைப்பற்றிய பெருமைகளை எடுத்துரைக்கும் கம்பராமாயணத்தின் பாயிரவியல் பாடல்களையும் அறிவோமாக!

1. எந்த ஒரு மொழியிலும் இராமாயணம் படிப்போரும் கேட்போரும் தேவர்கள் ஆவார்கள் என்பதை அடுத்துவரும் பாடலால் அறியமுடிகின்றது.

**வடகலை தென்கலை வடுகு கன்னடம்**
**இடம் உள் (பாடை) பாஷை யாது ஒன்றின் ஆயினும்**
**திடம் உள் ரகு குலத்து இராமன் தன்கதை**
**அடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே.!**

**2. நூல்வழி கூறுதல் :**
**தேவபாஷையின் இக்கதை செய்தவர்**
**மூவர் (வால்மீகி, வசிஷ்டர், போதாயணர்) ஆனவர்**
**தம்முளும் முந்திய**
**நாவினான் உரையின்படி (வால்மீகி) நான் தமிழ்ப்**
**பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ!**

என்னும் பாயிரப்பாடலால் இராமாயணத்தின் மூலநூல் வால்மீகி ராமாயணம் என்பதும், இந்த இராமாயணத்தை வசிஷ்டர், போதாயனர் போன்றோர் பாடியிருந்தாலும், கம்பராகிய நான் வால்மீகியின் இராமாயணத்தைப் பின்பற்றியே எனது இராமகாதையை யாத்துள்ளேன் என்று கூறுவதை அறியலாம்.!

3. மேலும், ராமா என்னும் நாமசங்கீர்த்தனம் செய்பவர்கள் தேவர்கள் ஆவர். இராமாயணம் கேட்போர் வைகுந்தப்பதவி பெறுவது நிச்சயம்.

**இறு வரம்பில் (இறக்கும் காலத்தில்) இராம என்றோர் உம்பர்**
**நிறுவர் என்பது நிச்சயம் ஆதலால்**
**மறு இல் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்**
**பெறுவர் என்பது பேசவும் வேண்டுமோ ?**

**4. நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன்கூற**
**ஆரணக்கவிதை செய்தான் அறிந்த வான்மிகி என்பான்**

**சீர்அணி சோழநாட்டுத் திருவழுந்தூரில் வாழ்வோன்**
**கார்அணிக் கொடையன் கம்பன் தமிழினால் கவிதை**
**செய்தான்.**

என்று பாடலானது ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமந்நாராயணனுடைய இராமாவதாரத் திருவிளையாட்டை எடுத்துரைப்பது என்பதையும், நாரதமுனிவன் இக்கதையை எடுத்துரைக்க, அதை வால்மீகி பாட, அதை முதல் நூலாகக்கொண்டு கம்பரும் பாடினார் என்னும் கருத்தை எடுத்துரைக்கின்றது.

**5. ஆதி அந்தம் ஹரிஎன யாவையும்,**
**ஓதினார் அலகு உள்ளன இல்லன**
**வேதம் என்பன மெய்ந்நெறி நோன்மையான்**
**பாதம் அல்லது பற்றிலர் பற்றிலார்..**

என்னும் பாடலால் இராமாயணத்தைப் படிப்போரும், மற்றோர்க்கு எடுத்துரைப்போரும், தொடக்கத்திலும், முடிவிலும் ஹரிஓம், ஹரிஓம் என்று கூறல்வேண்டும் என்னும் மரபு எடுத்துரைக்கப்படுகின்றது.

# 1. பாலகாண்டம். கதைப்போக்கும் கருத்துரைகளும்

**கடவுள் வாழ்த்து**

பாலகாண்டத்தின் முதற்பாடலாக மட்டுமன்றி நூலின் தொடக்கப்பாடலாகவும் அமைத்துக்கொள்ள வேண்டிய பின்வரும் முதற்பாடலில்

“அனைத்து உலகங்களையும் படைத்து, அதில் உயிர்வாழினங்களை உருவாக்கி, அவற்றைத்தனது காத்தல் தொழிலால் அன்புடன் பராமரித்து, அதன் பின்னர் இயற்கை நியதிகளுக்கு ஏற்றவாறு அவற்றின் ஆத்மாக்களாகிய உயிரினை, அவை கொண்டிருந்த பூத உடல்களிலிருந்து நீக்கி, அவற்றின் கர்ம வினைகளுக்கு ஏற்றவாறு அடுத்த பிறவியைக்கொடுத்து, அதனால் ஆக்கல், காத்தல், நீக்குதல் ஆகிய முத்தொழில்களையும் முறைமையால் செய்தல் ஆகிய இடைவிடாத விளையாட்டினைச் செய்து வருபவர் எவரோ, அவரே எம் தலைவராவார். அத்தகைய பெருமானாகிய ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணனுக்கு அடியேன் என் சரணாகதியை அர்ப்பணிக்கின்றேன்.” என்று பகவானைப்போற்றி வணங்கி, சரணாகதி செய்கின்றார் கம்பர்.

**அப்பாடல் வருமாறு :**

**1. உலகம் யாவையும் தாமுளவாக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட் டுடையாரவர் தலைவர்**
**அன்னவர்க்கே சரண் நாங்களே !**

**பாலகாண்டம் பெயர்க்காரணம் :**

கங்கைநதியின் உபநதியான சரயு நதி பாய்ந்து வளம்கொழிக்கும் நாடு கோசலநாடு. அக்கோசலத்தில் இருந்த அயோத்திநகரத்தைத் தலைநகராகக் கொண்டு தசரதன் என்ற அரசன் ஆண்டுவந்தான். புத்திரப் பேறுகள் இல்லாமல் வருந்திவந்த அவன் செய்த யாகத்தின் பயனாக நான்கு புதல்வர்கள் பிறந்தார்கள். அப்புதல்வர்களின் பிறப்பு, வளர்ப்பு,

குருகுலக்கல்வி, போன்றவற்றோடு அவர்களின் இளமைப்பருவத்து நிகழ்ச்சிகளைக் கூறுகின்ற பெரிய கதைப்பகுதி (காண்டம்) ஆகையால் இது பாலகாண்டம் என்று அழைக்கப்படுகின்றது.

**இக்காண்டத்தில் விளக்கப்பட்டுள்ள தலைப்புகள் :**

கோசலநாடு, அயோத்தியாநகரச் சிறப்புகள் மற்றும் இயற்கை, நாடு நகர வர்ணனைகள்.

சரயு நதியின் நீர்ப்பெருக்கம், அதனால் ஏற்பட்டுள்ள இயற்கை வளங்கள். மாந்தர் இயல்புகள், அரசனாகிய தசரதன் இயல்புகளும், அறிமுகமும். சிறப்பும், குறைபாடும்., குமாரர்கள் பிறக்க தசரதன்மேற்கொண்ட யாகங்கள், ஸ்ரீமந்நாராயணன் ஒப்புதலும், நான்முகப்பிரம்மன் மற்றும் தேவர்கள் செய்துகொண்ட ஏற்பாடுகளும், கலைக்கோட்டு முனிவர் சிறப்பு, யாகம்செய்ததும்., ஸ்ரீராமர் திருஅவதாரம்:. மற்றும் மூவர் பிறப்பும், அரசகுமாரர்களின் குருகுலக்கல்வியும்.

விசுவாமித்திரரோடு அவருடைய யாகம் காக்கச்சென்ற இராமஇலக்குணர்கள், தாடகை வதம், வேள்விகாத்திட்டவீரம், அகல்யாவின் சாபவிமோசனம், இராமலக்குமணர்களின் மிதிலாபயணம், மேலேகண்டவாறு அமைந்துள்ள தலைப்புகளின் விளக்கங்கள் கூறல்.

**திரு அவதாரப்படலம். பெயர்க்காரணம் :**

ஸ்ரீமந் நாராயணன் ஆகிய பெருமான் இலங்கையின் அசுர அரக்க அரசனாகிய இராவணனையும் அவனைச்சார்ந்த அவனோடு அதர்மத்திற்குத்துணைபோன மற்ற அசுரர்களையும் வதைப்பதற்காக, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியாய் நமது புண்ணியபூமியான பாரதத்தில் அவதாரம் செய்ததைப்பற்றியும் அதன் விரிவான விளக்கங்களைப்பற்றியும் கூறப்படுவதால் இது திரு அவதாரப்படம் என்று அழைக்கப்படுகின்றது. அதாவது திரேதாயுகத்தில் ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணனே இராமனாக அவதாரம் எடுத்த நிகழ்ச்சியைப்பற்றிக் கூறுவது ஆகும்.



**கங்கைநதியின் சிறப்பு :**

பாரதநாட்டின் புண்ணியநதிகள் ஏழு ஆகும். இவற்றுள் முதன்மையானது கங்காநதி.

**கங்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி**
**நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதிம் குரு.**

என்னும் சுலோகம் மேலே கூறப்பட்ட ஏழுநதிகள் புண்ணியநதிகள் என்பதைக்குறிப்பிட்டு, பகவானை ஆராதிக்கும் போது, திருமஞ்சனம் செய்யும் முன்பு இச்சுலோகத்தைக்கூறி, நீராட்டும் பாத்திரத்தில் நீரை நிரப்பி, அவற்றை கலசத்தில் ஆவாஹனம் செய்து, நீராட்டுவித்தல் என்பது சம்பிரதாயமாக உள்ளதையும் கூறலாம்.

**சரயுநதியின் நீர்ப்பெருக்கும், வர்ணனையும் :**

அத்தகைய புனித கங்கை நதியின் கிளைநதியாக விளங்குவது சரயு என்னும் நதியாகும். மிகுகியான மழை பெய்தலால் அந்தச்சரயு நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்குவகையான நிலங்களின் இயல்பும் இயற்கையும் மாறிப்போகுமளவிற்குப் பெருமழை பெய்தது என்று வர்ணிக்கின்றார் கம்பர்.

ஆற்றுப்படலம் 29 ஆம் பாடலாக அமைந்துள்ள இப்பாடலில் மனிதனின் இறப்பு, பிறப்பு ஆகிய செய்திகளும், ஒரு பிறவியின் முடிவில் ஒருவனுடைய உடலாகிய ஸ்தூலசரீரம் மட்டுமே அழியக்கூடியது என்பதையும், சூட்ச்சும சரீரம் ஆகிய ஆன்மா அழியாதது. முன்பிறவியில் தான் செய்த பாவம் புண்ணியத்திற்கு ஏற்ப உயிர்கள் பிறக்கும் என்ற உடல் உயிர் தத்துவத்தையும், (சரீர, சரீரி தத்துவம்) இப்பாடலில் விளக்கியுள்ளதை அறியலாம்.

**“முல்லையைக் குறிஞ்சி ஆக்கி மருதத்தை முல்லை ஆக்கி**
**புல்லிய நெய்தல் தன்னைப் பொரு அரு மருதம் ஆக்கி**
**எல்லையில் பொருள்கள் எல்லாம் இடை தடுமாறும் நீரால்**
**செல்லுறுகதியில் செல்லும் வினை எனச்சென்றது அன்றே.”**

எனும் இப்பாடலை மேலும் ஆய்ந்துகொள்ளலாம்.

மேலும், சரயு நதியின் வெள்ளப்பெருக்கினை எடுத்துரைக்கும் இப்படலத்தின் 31 ஆம்பாடலில், இறைவனின் இயல்பு எத்தகையது என்று எடுத்துரைத்துள்ளதால் கம்பரின் கடவுள் கொள்கை நன்கு வெளிப்படுவதையும் அறியலாம்.

**கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்தநீத்தம்**
**எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத்**
**தொல்லையில் ஒன்றேயாகி துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்**
**பல்பொருள் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்ததன்றே [31]**

அதாவது, முதலில் ஒன்றாகப்பரவி வந்த அந்த ஆற்றின் வெள்ளமானது, ஏரி, குளம், தடாகம் போன்றவற்றில் நிரம்பி பலவேறு பெயர்களைப்பெற்றதைப்போல, உலகத்தின் முதல்வனாகிய பெருமானை, பலபேர் பலமாதிரியாகப்போற்றி வணங்கியதால் ஏற்பட்ட பல சமயப்பிரிவுகளைப்போல இருந்தது என்கிறார்.

இத்தகைய பெருவளத்தையுடையதாக கோசலநாடு இருந்தது. எங்கெங்கும் வயலும் வயலைச்சார்ந்த இடங்களுமாகவே இது இருந்தது என்று எடுத்துரைத்து, மருதநிலத்தை ஓர் அரசியாக உருவகித்துக்கொண்டு, அவள் எவ்வாறு அழகுடன் கொலுவீற்றிருக்கின்றாள் என்பதைப் பின்வரும் பாடலில் (ஆற்றுப்படலம். 36) எடுத்துரைக்கின்றார்.

**தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம்தாங்க**
**கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்க**
**தெண்திரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்**
**வண்டுகள் இனிது பாட மருதம்வீற்றிருக்கும்மாதோ !**

என்ற இப்பாடலில் சோலை என்னும் அழகிய அரங்கில், மயில்களாகிய ஆடல் அழகிகள் நாட்டியமாடுவதற்காக, தாமரைக்கொடிகளாகிய பணிப்பெண்கள் தாமரைமலர்களை விளக்குகளாகப் பிடித்துக்கொண்டிருக்க, மேகங்கள் மத்தளம் போல ஒலிக்க, வண்டுகள் எழுப்பிய ரீங்காரஓசையானது மகரயாழின் இன்னிசையைப்போல எங்கும்பரவ, கருங்குவளை மலர்களாகிய பார்வையாளர்கள் தம்கண்களால் வியப்புறநோக்க, மருதம் என்ற மாதரசி சிறப்புடன் கொலுவீற்றிருந்தாள் என்னும் வர்ணனைப்பாடல் கம்பரின் கவிநயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.



**அயோத்திமாநகரத்தின் சிறப்பு :**

இத்தகைய வளமை மிக்க கோசலநாட்டின் தலைநகரமாக விளங்கியது அயோத்திமாநகரம் ஆகும்.

இயற்கை வளத்துடன் செயற்கை வளங்களையும் அந்நாடு பெற்றுத்திகழ்ந்ததால், மாடமாளிகைகளும், காண்போரை மனம் களிக்கச்செய்யும் கூடங்களும், கோபுரங்களும் மிகுதியாகத் திகழ்ந்தனவாம் அந்நாட்டில்.

**பெண்களின் சிறப்பும் கடமையுணர்வும் :**

பிறைச்சந்திரனைப்போன்ற அழகிய நெற்றியை உடையவர்களான அந்நாட்டுப் பெண்கள் அனைவரும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக விளங்கினார்கள். ஆனால் அதனால் எத்தகைய கர்வமும் அற்றவர்களாகவும், விருந்தோம்புதலாகிய பேர் அறத்தை (அதிதி தேவோ பவ) மிகவும் சிறப்புறச்செய்து வந்தார்கள். (விருந்தினர்கள் என்றால், உறவினர்கள் என்று பொருள் இல்லை. முன்பின் தெரியாதவர்கள், அதிதிகள் என்றே அர்த்தமாகும்). இக்கருத்தை கம்பநாட்டாழ்வாரின் நாட்டுப்படலம். பாடல் 68 இல் காணலாம்.

**பெண்டிர் கடமை (ஈகையும் விருந்தும்)**
**பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கு எலாம்**
**பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்**
**விருந்தும் அன்றி விளைவன யாவையே. [நாட்டுப்படலம் 68]**

குடிமக்களின் தன்மை. இல்லாமை என்ற சொல்லை இல்லாமையாக்கிக் கொண்டு அந்நாட்டுமக்கள் வாழ்ந்தார்களாம். அந்நாட்டில் வறுமை என்பதே இல்லை. ஆகையால் கொடைக்குணம் என்பதும் இல்லை. பகைவர்களே

இல்லையாகையால் எவருடைய வீரமும் வெளிப்பட்டுத் தெரியவில்லை. பொய்மை பேசுபவர்கள் இல்லையாகையால் உண்மை வேறுபட்டுத்தோன்றவில்லை. அங்கு ஏட்டுக்கல்வி ஏற்றம் பெற்று இருக்கவில்லை. ஏனெனில் அனைவருமே கேள்விச்செல்வத்தில் சிறந்தவர்களாக இருந்தனர். என்று நாட்டுமக்களின் நல்லொழுக்க நெறியைக் காட்டியுள்ளார் கவியரசர் கம்பர். அதைப்பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய்உரை இலாமையால்**
**ஒண்மைஇல்லைபல்கேள்வி ஓங்கலால். (நாட்டுப்படலம்.85)**

இத்தனைப்பெருமைகளையும் பெற்றதான அந்த நாட்டின் தலைநகரமான அயோத்தியின் மீது, அனுதினமும் சூரியனும் சந்திரனும் விண்ணில் வலம்வரக்காரணமாக ஒரு புதுமைச்செய்தியைக் கம்பர் பின்வரும் பாடலில் கூறியுள்ளார். முப்பெருங்கடவுளர்களான சிவபெருமான், திருமாலாகிய பெருமான், பிரம்மதேவன் ஆகியோரும், சூரியசந்திரர்களும் அயோத்திக்குச் சமமான வேறு ஒரு நகரம் இந்த நிலவுலகத்தில் உண்டா என்பதைக் கண்டறியவே அவர்கள் வலம்வருகின்றனர் என்று, சூரிய சந்திரன் இவர்களின் இயற்கை நிகழ்வுகளுக்குத் தன்குறிப்பை ஏற்று அணிநயத்துடன் கூறியுள்ளார் கம்பர்.

**உமைக்கு ஒருபாகத்து ஒருவனும் இருவர்க்கு**
**ஒருதனிக் கொழுநனும் மலர்மேல்**
**கமைப்பெருஞ் செல்வக் கடவுளும் உவமை**
**கண்டிலர் அங்கு அது காண்பான்**
**அமைப்பு அருங்காதல் அதுபிடித்து உந்த**
**அந்தரம் சந்திரா தித்தர்**
**இமைப்பு இலர் திரிவர் அதுஅலால் இதனுக்கு**
**இயம்பல் ஆம் ஏதுமற்று யாதோ!**
**(பாடல் 96)**



மேலும் இந்த அயோத்திமாநகரம் எல்லாப் போகங்களுக்கும் இருப்பிடமாக விளங்குகின்றது. காரணம் தருமத்துடன் சிறந்த தவத்தையும் உடையவரான ஸ்ரீராமனால் ஆளப்படும் இது துறக்கமாகிய சொர்க்க லோகத்தினும் சிறந்தது. புண்ணியம் செய்தவர்கள் மட்டுமே சொர்க்கம்புகுவார்கள் ஆகையினால் இந்த நகரத்தில் வாழுகின்ற அனைவரும் புண்ணியம் செய்தவர்கள்தான்! என்று அயோத்திமாநகரச் சிறப்பையும், அதைச்சிறப்புடன் பின்னர் அரசாட்சி செய்யப்போகும் ஸ்ரீராமனின் உயர்ந்த குணங்களையும் கீழ்வரும்பாடலால் உணர்த்துகின்றார் கம்பர்.

**“புண்ணியம் செய்தோர் புகுவது துறக்கம் என்னும் ஈது அருமறைப் பொருளே**
**மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மாதவம் அறத்தொடும் வளர்த்தார்**
**எண்ணருங் குணத்தின் அவன் இனிதிருந்து இவ் ஏழ்வுலகு ஆள் இடம் என்றால்**
**ஒண்ணுமோ இதனின் வேறு ஒருபாகம் உறைவு இடம் உண்டென உரைத்தல்”**
**(பாடல். 98)**

**தசரதன் (தயரதன்) சிறப்பும், அரசாட்சிமுறையும் :**

இத்தகுபெருமைகளையுடைய கோசலநாட்டினை, அயோத்தி என்னும் நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு பன்னெடுங்காலம் அரசாட்சி செய்தவன் தசரதன் என்னும் மன்னன் ஆவான். கோசலை, சுமித்திரை, கைகேயி, என்னும் மூன்று பட்டத்து ராணியர்களைப்பெற்றிருந்தான். மிகப்பெரும் சிறப்பினை உடையதான இட்சுவாகு என்னும் மன்னனுடைய குலம் ரகுகுலம் என்றும், ரவிகுலம் என்றும் அழைக்கப்பட்டது. அக்குலத்தில் அயன் என்ற சிறப்புடைய மன்னனின் மகனாக தசரதன் விளங்கி அரசாட்சி புரிந்துவந்தான்.

“தருகை நீண்ட தசரதன்” என்னும் தொடரானது அவனுடைய கொடைத்தன்மையை எடுத்துரைக்கின்றது. அதேசமயம் போராற்றலில் வல்லவன் ஆகையாலும், பத்து

ரதங்களை ஒரே நேரத்தில் செலுத்துகின்ற தன்மை பெற்றவனுமாக இருந்ததால் அவனுக்கு தசரதன் என்னும் பெயரே நிலைத்துவிட்டது. இவன் ஒரு தாயைப்போல விளங்கி, தன்நாட்டுமக்களைக் காத்துவந்தான். இவனுடைய இச்சிறப்பையும் கருணைக் குணத்தையும், கம்பர்

**தாய் ஒக்கும் அன்பின் தவம் ஒக்கும் நலம்பயப்பின்**
**சேய்ஒக்கும் முன்நின்று ஒருசெல்கதி உய்க்கும் நீரால்**
**நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நுணங்குகேள்வி**
**ஆயப்புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்.**
**[அரசி 172]**

என்ற பாடலில் விளக்கமுறச் செய்துள்ளார். மொத்தத்தில் இந்த நிலவுலகம் முழுவதையும் வறியவன் ஒருவன் பாதுகாத்துவரும் ஒரு சிறு வயலைப்போல கண்ணும் கருத்துமாக அரசாட்சிசெய்து வந்தான் தசரதன்.

**தசரதன் தனது மனக்கருத்தையும், தன்குறைபாட்டினையும் வசிஷ்டருக்கும், மற்றையோர்க்கும் எடுத்துரைத்தல் :**

அத்தசரதன் ஒருநாள் தனது குலகுருவான வசிஷ்டமுனிவரை வணங்கி, "அறுபதினாயிரம் ஆண்டுகளாக அடியேன் இவ்வுலகத்தை நன்முறையில் அரசாட்சி செய்து முடித்துவிட்டேன். என் ஆட்சிக்காலத்தில் எவ்விதக்குறையும் யாருக்கும் ஏற்படாதவண்ணம் அரசாட்சி செய்துவிட்டேன். எனினும் எனக்கொரு மனக்குறை உண்டு. இல்லறத்தார்க்கு மட்டுமன்றி காட்டில்தவமியற்றி வாழும் முனிபுங்கவர்களையும் பாதுகாத்துவந்தேன். முதுமையை அடைந்து விட்டேன். என்காலத்திற்குப்பிறகு இந்த நாட்டை அரசாள ஒரு மகன் இல்லையே என்பது எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கின்றது. எனவே இதைப்போக்க ஒரு வழிமுறையைத் தாங்கள்தான் கூறியருள வேண்டும்" என்று வேண்டிநின்றார்.

**வசிஷ்டர் தன் ஞானத்தால் உணர்ந்தவை :**

இந்த நிலையில் தேவர்கள் ஒன்று சேர்ந்து இராவணனின் கொடுமைகளால் அனைத்து தேவகணங்களும் துயரப்படுவதை



எடுத்துரைத்து தங்களைக் காக்க வேண்டும் என்று வேண்டினர். முதலில் பிரம்மாவும் பிறகு சிவபெருமானும் தாங்களே அந்த இராவணாதியர்களுக்குப் பலவரங்கள் கொடுத்துவிட்டதாகவும், அதனால் அவர்களை அழிக்க முடியாது என்றும் கூறி மறுத்துவிட்டனர். அதன்பிறகு இவ்விருவரின் யோசனைப்படி, அவர்களோடு ஸ்ரீமகாவிஷ்ணுப் பெருமானை வேண்டிக் கொள்ளலாம் என்றும் கூறி அவரிடம் சென்று வேண்டினர். ஸ்ரீமந்நாராயணன் ஆகிய திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமானுக்கும், பூவுலகில் இலங்கையின் அரக்க அரசனாகிய இராவணனும், அவன்மகன் இந்திரஜித் என்பவனாலும், மற்றுமுள்ள அவனது அரக்கர்களும் கொடுத்துவந்த தொல்லைகளைப் பெருமான் அறிந்திருந்தார்.

**ஸ்ரீராமனாக அவதாரம் செய்ய ஸ்ரீமந்நாராயணனின் ஒப்புதல் :**

எனவே திருமாலாக பெயர்கொண்ட அப்பெருமான் திரேதாயுகமான அந்தயுகத்தில் நல்லவர்களுக்கும், முனிவர்களுக்கும், அவர்கள் கொடுந்துன்பங்கள் இழைத்து துன்புறுத்திவந்ததைத் தடுத்திடவும், திருவுள்ளம் கொண்டார். அவர்களின் கொடுமைகள் தேவகணங்களையும் விட்டுவைக்கவில்லை. எனவே அவர்களின் அத்துன்பத்தைப் போக்குவது தன் கடமை என்று உணர்ந்த பெருமானாகிய ஸ்ரீமந்நாராயணன், தனது கருடவாகனத்தின் மீது ஏறிவந்து அவர்களுக்கு அபயம்கொடுத்தார். அமரர்களின் சரணாகதியை ஏற்றார். அதனால் தான்நிலவுலகில் தசரதனுக்குப் புத்திரனாய், இராமன் என்னும் திருப்பெயருடன் அவதாரம் எடுத்து அரக்கர்களை அழிப்பதாகவும், சாதுக்களாகிய நல்லவர்களைக் காப்பதாகவும் உறுதியளித்தார். ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்து இராவணவதம் செய்ய ஒப்புக் கொண்டார். தன்னுடைய சங்கு சக்கரங்கள் முறையே பரத சத்ருக்கனர்களாகவும் பாம்பு படுக்கையான ஆதிசேஷன் இலக்குவனாகவும் பிறப்பார்கள் என்று கூறி கருடன்மீது ஏறிச் சென்று விட்டார் மகாவிஷ்ணு.

தனது வாகனமான கருடன் மேல் திருமால் வந்ததைப்பற்றிக் கூறும்போது, கார்மேகம்போன்ற திருமேனியில், தாமரைக்காடு பூத்ததைப்போன்ற அழகுடைய தோற்றத்தை உடையபெருமான் தன் ஸ்ரீதேவி பிராட்டியுடனும் வந்து காட்சியளித்து, அபயம் கொடுத்துச் சென்றார் என்னும் காட்சியைக் கம்பர் கூறுவது.

**"கருமுகில் தாமரைக் காடுபூத்து நீடு**
**இருசுடர் இருபுறத்து ஏந்தி ஏந்து அலர்த்**
**திருவொடும் பொலிய ஓர் செம்பொன் குன்றின்மேல்**
**வருவன்போல்கலுழன் மேல்வந்து தோன்றினான்."**

**(திரு.அவ.190).**

தேவர்களின் குறைகளைப்போக்க பெருமான் எடுத்த இந்த முடிவானது, அவருடைய சரணாகதித்தத்துவத்தை விளக்குவதை அறியலாம். பல சரணாகதிகள் ஆகிய பிரபத்தி மார்க்கம் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. இது பெருமான் ஏற்ற முதல் சரணாகதி ஆகும்!

**இராமாவதாரமும், அவதாரநோக்கமும் நிறைவேற பிரம்மாவின் ஆலோசனை :**

அதன்பிறகு பெருமான் எடுக்கப்போகும் ஸ்ரீராமாவதாரத்தின் ஸ்ரீராம ராவணயுத்தத்தின்போது பெருமானுக்கு உறுதுணைபுரியவேண்டியது அனைவரின் கடமையாகவும் உள்ளது என்று கூறிய பிரம்மதேவர், யார்யார் என்னென்னவாக அந்தயுத்தத்திற்கு உதவப்போகின்றீர்கள் என்று கேட்டார். பிரம்மாவின் ஆலோசனைப்படி தேவர்கள் வானரங்களாக பூலோகம் சென்று, தேவமாதர்கள் யக்ட்சர் குலப்பெண்களுடன் கூடி பலகுழந்தைளைப் பெற்றெடுக்குமாறும் கூறினார். அதனால் வானரவீரர்களின் தொகை பெருக வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அவர்கள் வேண்டும் போது உருமாறும் சக்தியும் வான் வழிப்பறக்கும் சக்தியும் உடையவர்களாக இருப்பர் என்றும் கூறினார். தேவர்களும் இசைந்தனர்.



மேலும் பிரம்மதேவன் தன் கொட்டாவியிலிருந்து (வியர்வையிலிருந்து) (ஜாம்பவானை) சாம்பவானை உருவாக்கி ஏற்கனவே அனுப்பிவிட்டதாகக் கூறினார்...)

ஸ்ரீமகாவிஷ்ணு மாபலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் யாசகம்பெறச்சென்று, அந்த அரக்க அரசனை அழித்து, உலகத்தை மீண்டும் தனதாக்கி, இந்திரனிடம் கொடுத்த அந்த திரிவிக்கிரம அவதாரத்தால் ஈர்க்கப்பட்டவர் பிரம்மாவின் மகனான ஜாம்பவான். அதனால் அப்பெருமானுடைய பெருமையை பெரும்பறைகொண்டு பாடிப்புகழந்து மூன்று லோகத்திலும் சஞ்சரித்து வந்தவர். அவர்மூலம்தான் இராம இராவணயுத்தத்திற்கு உதவப்போவதாகவும் உறுதியளித்தார்.

சிவபெருமான் திரேதாயுகத்தில் பெருமான் ஸ்ரீராமாவதாரம் எடுக்கப்போவதை அறிந்தவர். அஞ்சனா பிரதேசத்தில் சிவபெருமானுடைய பதினொன்றாவது ருத்திர அம்சமாகவும், வாயுவின் மகனாகவும் மாருதி அவதரித்தார். அனுமன் ஆகிய ஆஞ்சநேயரும் பிற்காலத்தில் இராவணனுடைய வதைக்குரிய ஏற்பாடுகளை இளம் வயதிலிருந்தே இராமனின் திருவுள்ளக்குறிப்புகளைத் தனது ஞான திருஷ்டியால் அறிந்து அவற்றையெல்லாம் ஸ்ரீராமனின் வழிகாட்டுதல் மூலம் முடித்துவந்தார். இவற்றை அனுமன் செய்தபோதெல்லாம் அவருக்கு ஜாம்பவானும் உறுதுணையாக இருந்தார்.

பிறகு ஸ்ரீமந்நாராயணருடைய அடுத்த அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலும் இவர் வாழ்ந்திருந்தார். ஜாம்பவதி என்னும் பெண்ணின் தந்தையாக இருந்து, சியமந்தக மணியினைத் தேடிக்கொண்டு கண்ணன் கானகத்திற்கு வந்தபோது, நாள்தோறும் 8 தோலா பொன்னைச் சுரந்து தரக்கூடிய அந்தமணியினைத் தன்மகளான ஜாம்பவதியின் தொட்டிலில் கட்டித் தொங்கவிட்டிருந்தார். அதை கண்ணபெருமான் அடைய நினைத்தபோது, பெருமானை அடையாளம் தெரிந்து கொள்ளாத ஜாம்பவான் ஸ்ரீகிருஷ்ணரோடே பெரும் யுத்தம் புரிந்து, இறுதியில்

பெருமானை உணர்ந்து, தன்மகளான ஜாம்பவதியை திருமணமும் செய்து கொடுத்தார் ! இந்தக்கலியுகத்திலும் வாழ்கின்றார் என்று குறிப்பிடப்படுவதால், ஜாம்பவான் சிரஞ்சீவிகளுள் ஒருவராகின்றார்.

மேலும், இந்திரன் தன் அம்சமாக வாலியையும், அங்கதனையும் படைக்க ஒப்புதல் அளித்தார்.

சூரியன் தன் மகனாக சுக்ரீவனைப் படைத்தார்.

ஸ்ரீதேவி தான் சீதாவாக அவதாரம் செய்ய இசைவு தெரிவித்தார்.

மேலும், அக்னிபகவான் நீலன் என்ற வானரவீரனைத் தன் அம்சமாகப் படைப்பதாகக்கூறினார்.

விஸ்வகர்மாவின் மகனாக நலன்(சேதுபந்தனம் கட்டியவன்) அவதரிப்பான் என்று கூறினார்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் வானுலகமாகிய தேவலோகத்தில் நடந்ததைத்தன் ஞான அனுஷ்டானத்தின் மூலம் உணர்ந்த குலகுருவசிஷ்டர் தனது அரசனாகிய தசரதனுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார். அவருடைய மனக்குறை நீங்கி சத்புத்திரர்கள் உண்டாவார்கள் என்றும் அருளாசி வழங்கினார்.

தசரத மாமன்னனுக்கு சுமந்திரன் என்ற மதிநுட்பம் உடையவர், தலைமை அமைச்சராகவும், பிரம்மதேவனுடைய மகன் என்று கருதப்படும் வசிஷ்டர் என்னும் தவசீலரைத் தன்னுடைய குலகுருவாகவும் கொண்டவர் இந்த அரசனாகிய தசரதர். ஆகையால் அப்போது அமைச்சர்கள் அசுவமேத யாகம் நடத்தலாம் என்றும் முடிவில்புத்திர காமேஷ்டியாகம் நடத்தினால் குறை நீங்கும் என்றும் கூறினர். சுமந்திரன் அரசரைச்சந்தித்து ருஷ்ய சிருங்கர் முனிவரைக்கொண்டு அசுவமேதயாகமும் அதன் இறுதியில் புத்திர காமேஷ்டியாகமும் செய்ய ஆலோசனைக்கூறினார்.



**ரிஷ்ய சிருங்கர் வரலாறு : (கலைக்கோட்டு முனிவர்)**

காசியபர் மகன் விபாண்டகர்... அவருடையமகன் ருஷ்யசிருங்கர்... மானின் கொம்பினைத் தன் தலையில் பெற்றவர்.. கலைக்கோட்டு முனிவர் என்று அழைக்கப்பட்டவர். இவரைக்கொண்டு புத்திரகாமேஷ்டியாகம் செய்தால் நல்லது என்று சனத்குமாரர் என்ற முனிவர் தன்னிடம் கூறியதாக சுமந்திரன் தசரதனுக்கு எடுத்துக் கூறினார்.

**ரிஷ்யசிருங்கர் என்னும் கலைக்கோட்டு முனிவரின் வரலாற்றுச் சுருக்கம் :**

அங்க நாட்டின் மன்னன் உரோமபாதன். நல்லவன். அறநெறி தவறாமல் ஆட்சிபுரிந்தான். எனினும் நாட்டில் மழையின்றி வறுமை வதைத்தது. தன்நாடானது, மழைவளமும் மற்றவளங்களையும் பெறவேண்டுமானால், ரிஷ்யசிருங்கர் தன்நாட்டிற்கு வருதல்வேண்டும் என்று அங்கநாட்டு அமைச்சர்கள் அவனுக்கு அறிவுரை கூறினர். காட்டில் வாழ்ந்து வந்த அவர் நாட்டு எல்லையை மிதித்தாலே மழைவரும் என்றும் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தினர். விபாண்டகரின் மகனாகிய அவரை அழைத்துவர அரசன் மந்திராலோசனை செய்தபோது, அந்தணர்கள் தங்களால் இயலாது என்று மறுப்பு தெரிவித்தனர். கவலைகொண்ட மன்னனுக்குக் கணிகையர்கள் உதவமுன்வந்தனர். அரசனின் சம்மதத்துடன் வனம் சென்று, தவக்கோலம் பூண்டு ஆசிரமம் அமைத்து தங்கியிருந்தனர். தன்னுடைய மகனான கலைக்கோட்டு முனிவருடன் தனி ஆசிரமத்தில் தங்கியிருந்தார் விபாண்டகர். விபாண்டகருக்கு உறுதுணை புரிந்து வந்தவர் கலைக்கோட்டு முனிவர். வெளி உலகம் பற்றி ஒன்றும் தெரியாதவர்.

இந்தச் சூழ்நிலையில் ஒருநாள் விபாண்டகர் ஆசிரமத்தில் இல்லாத நேரத்தில் அப்பெண்கள் ரிஷ்யசிருங்கரைச் சந்தித்தனர். காய் கனி கொடுத்து தமது ஆசிரமத்திற்கு வருமாறு அழைத்தனர். அவர்களும் பூண்டிருந்த தவக்கோலத்தை அறிந்த கலைக்கோட்டுமுனிவர் அதற்கு உடன்பட்டார். தங்களது ஆசிரமம் இதோ அதோ என்று

போக்குக்காட்டி அழைத்துவந்தனர். முனிவரும் அவர்களைப்பின்தொடர,. அங்கநாட்டின் எல்லையை மிதித்தார் அம்முனிவர். அந்தநேரத்தில் வானம் இருண்டு, பெருமழை பெய்தது. அரசன் நடந்ததை அறிந்து மகிழ்ந்தான். முனிவரை எதிர் கொண்டழைத்து, அவர் தங்கள் மீது கோபம் கொள்ளாமல் தடுக்க தன்மகள் சாந்தை என்பவளை அவருக்குத் திருமணம் செய்துவைத்தார். ரிஷ்யசிங்கர் மகிழ்ச்சியுடன் அங்கநாட்டில் வாழ்ந்து வருவதைப் பிறகு தெரிந்துகொண்ட விபாண்டக முனிவரும் அவரைத்தடுக்கவில்லை. அத்தகைய தூய்மையை உடையவரான ரிஷ்யசிருங்கரை அழைத்துவந்து யாகம் செய்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார் சுமந்திரன்.

சுமந்திரன் கூறியதை ஏற்றுக்கொண்ட அரசன் முழுப்பொறுப்புகளையும் வசிஷ்டரிடம் ஒப்படைத்து யாகத்திற்கு வேண்டியதைச் செய்யுமாறு வேண்டினார். பின்னர் ரிஷ்யசிருங்கரை அழைத்துவர தானே அங்கநாடு சென்றார் தசரதர். உரோமபாதன் வரவேற்று... ரிஷ்யசிருங்கரிடம் தசரதன் பெருமைகளையும் மகன் இல்லாக்குறையையும் எடுத்துரைத்து புத்திரகாமேஷ்டியாகம் செய்ய அழைக்க வந்துள்ளதையும் தனது மருமகனாகிப்போன ரிஷ்யசிருங்கரிடம் எடுத்துரைத்தார். ரிஷ்யசிங்கரின் இசைவைத் தெரிந்துகொண்டவுடன் ஒருநாள் அவரை அயோத்திக்கு அனுப்பிவைத்தார். பின்னர் கலைக்கோட்டு முனிவர்பயணத்தை அறிந்து தசரதன் எதிர்கொண்டழைத்தார். முனிவர் தசரதனுடன் சென்று தசரதன் அரண்மனையில் பலவகைச்சிறப்புகளோடு ரிஷ்யசிருங்கர் தங்கியிருந்தார்.

**வசிஷ்டரின் தலைமையில் யாகத்திற்குரிய ஏற்பாடுகளைச் சுமந்திரன் செய்தல் :**

யாகத்திற்குப் பலநாட்டு அரசர்களும் அழைக்கப்பட்டனர். யுதாஜித் (கைகேயியின் சகோதரன்) சனகர் போன்ற அரசர்கள் பங்கேற்க வந்திருந்தனர். சரயு நதியின் வடகரையில் யாக சாலை உண்டாக்கப்பட்டது. வேள்விக்கு



வேண்டிய புனித நீர் புஷ்பங்கல் சமித்துகள் ஆகியவை பெருமளவில் சேமிக்கப்பட்டன. முதலில் அசுவமேத யாகம் தொடங்கப்பட்டதால், யாகக்குதிரையை அலங்காரங்களுடன் சுமந்திரன் அனுப்பிவைத்தல்.. குதிரையும் குதிரையோடு வீரர்களும் சென்றனர். 12 மாதங்கள் கழித்து குதிரை வெற்றியுடன் திரும்பி வந்தது.

எனவே அடுத்து புத்திரகாமேஷ்டியாகம் செய்யப்பட்டது. தசரதன் ஒப்புதலோடு ஆகவனீயம் காகருபத்யம் தட்சிணாக்னியம் என்னும் மூவகைத்தீவளர்த்து யாகம் ஆரம்பமானது தசரதன் புனலாடி. தூய்மையோடு அமர்ந்திருக்க அசுவமேத யாகம் முதலில் நடந்தது. பன்னிரண்டு. மாதங்களுக்குப்பிறகு புத்திர காமேஷ்டியாகம் என்னும் புத்திரர்களைத் தோற்றுவிக்கும் யாகம் (வேள்வி) நடந்தது. வேள்வியின்முடிவில் சிவந்த தலைமுடியை உடைய தீக்கண்களை உடைய ஒரு பூதம் வேள்வித் தீயில் இருந்து தோன்றி பொன்தட்டில் அமுதம் போன்ற பிண்டம் (பாயசம்) வைத்துவிட்டு மீண்டும் மறைந்தது.

வேள்வியில் இருந்து வெண்ணிறத்துடன் தேவதை தோன்றி கலசத்தில் பாயசம் (அமுதம்) கொண்டு வைத்துவிட்டு மறைந்ததாக வால்மீகி பாடுகின்றார். இவ்வாறு கிடைத்த அமிழ்தத்தைத் தேவியர் மூவருக்கும் பிரித்துக் கொடுக்கும் படி கலைக்கோட்டு முனிவன் கூற தசரதனும் பிரித்துக் கொடுத்தார்.

முதலில் கோசலைக்கு ஒருபாதி. பிறகு அதில் ஒரு பாதி சுமித்திரைக்கு. அடுத்து மீதம் இருந்ததில் பாதி கைகேயிக்குக் கொடுத்தான். மீண்டும் இதில் மீதமானவற்றைச் சேகரித்து மீண்டும் சுமத்திரைக்கே கொடுத்தான். மொத்தத்தில் பாயசத்தின் பாதிப்பகுதி கோசலைக்குக் கிடைத்ததால் மகாவிஷ்ணுவின் பாதி அவதாரச்சிறப்பு இராமனுக்கு வந்தது. இலக்குவன் கால் பகுதி, பரதனும் சத்துருக்கணனும் தலா அரைக்கால் பகுதி. ஆக நான்கு புதல்வர்களும் சேர்ந்து திருமாலின் திருஅவதாரத்தின் மொத்த உருவினராய் அவதாரம் எடுத்துவர ஏற்பாடு ஆயிற்று.

பாயசம் பருகிய மூன்று தேவியர்களும் கருவுற்றனர். 12 மாதங்களுக்குப் பிறகு பாயசம் அருந்திய அந்தந்த நேரங்களுக்கு ஏற்பவே குமாரர்களைப் பெற்றெடுத்தனர்.

**இராமன் திரு அவதாரம் :**

சித்திரைமாதம் நவமி திதி அதிதியைத் தேவதையாக உடைய புனர்பூச நட்சத்திரம் கூடிய சுபதினம் தேவர்கள் புகழும் கடகலக்கினமும் மகிழ்ச்சியடைய சிறந்த தருமம் தடுமாற்றம் நீங்கி ஓங்குவதற்காக இராமன் திருஅவதாரம் செய்தார்.

**சித்தரும் இயக்கரும் தெரிவை மார்களும்**
**வித்தக முனிவரும் விண்ணுளோர்களும்**
**நித்தரும் முறைமுறை நெருங்கி ஆர்ப்புற**
**தத்துறல் ஒழிந்து நீள்தருமம் ஓங்கவே. (282).**

**ஒருபகல் உலகம் எல்லாம் உதரத்துள் பொதிந்து**
**அருமறைக்கு உணர்வு அரும் அவனைக்**
**கருமுகிற்கொழுந்து எழிற்காட்டும் சோதியைத்**
**திறம்உறப் பயந்தனள் திறன்கொள் கோசலை. (283)**

என்று ஸ்ரீராமரின் திரு அவதாரத்தை அழகுற எடுத்துரைக்கின்றார் கம்பர். ஊழிக்காலமுடிவில் அனைத்து லோகங்களையும் தன்னுடைய வயிற்றில் அடக்கி, உற்பத்திக்காலத்தில் மீண்டும் வெளியிட்டு சிருஷ்டியைச் செய்தவரான திருமால், கோசலையின் வயிற்றில் கருக்கொண்டிருந்து, பன்னிரண்டு மாதங்கள் கழித்து திருஅவதாரம் எடுத்தார். அத்தகைய கோசலையின் சிறப்பை எவ்வாறு எடுத்துரைப்பது?

மேலும் தெய்வீக இராமன் பிறந்த அந்த நேரத்தில் சூரியன் மேஷராசியில் இருந்தான். அங்காரகன் அதாவது செவ்வாய் மகர ராசியிலும் குருபகவான் கடகராசியிலும் இருந்தார்கள். குருவும் சந்திரனும் கூடிப்ப்பிரகாசித்தார்கள். அதை அடுத்து கைகேயி (புஷ்ய நட்சத்திரத்தில்) அதாவது பூசநட்சத்திரத்திரம் மீனலக்கினத்தில் ஒரு குழந்தையைப்



பெற்றாள். அக்குழந்தை மகாவிஷ்ணுவின் அரைக்கால் அம்சமான பரதன் ஆவான்.

அதன்பிறகு சுமத்திரை இரண்டு ஆண்குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அதில் மூத்தவன் (இலட்சுமணன்) மகாவிஷ்ணுவின் கால் அம்சம். பாம்பின் வடிவமான இலக்குவணன் ஆயில்ய நட்சத்திரம். கடக லக்னத்தில் பிறந்தான். அடுத்தவன் சத்ருக்கனன் பெருமாளின் அரைக்கால் அம்சனாகத் தோன்றியவன். மக நட்சத்திரம், சிங்கராசியில் அவதரித்தான்.

**உத்தானம் செய்தலும், பெயர்சூட்டலும் :**

குழந்தைகள் பிறந்த 13 வது நாள் உத்தானம் செய்தார்கள்., வசிட்டன் குழந்தைகளுக்கு முறையே இராமன் பரதன் இலக்குவன் சத்ருக்கன் என்று பெயர் வைத்தார். மிகவும் மகிழ்ச்சியடைந்த தசரதன் பொன்னும் பொருளும் எல்லோருக்கும் தானமாக வழங்கினான். அந்தணர்களுக்குப் பசுக்கூட்டங்களைக்கொடுத்து அகம் மகிழ்ந்தான்.

**தேவர்கள் மலர்மாரி பொழிந்து மகிழ்ச்சி அடைந்தனர் :**

பின்னர் ரிஷியசிருங்கர் விடைபெற்றார்.. தசரதன் முனிவர்க்கும் மற்றைய அந்தணர்களுக்கும் பலவகைச் சிறப்புகளைச் செய்து அனுப்பி வைத்தான். அனைவரும் மகிழ்வுடன் சென்றனர்.

**பெயர்சூட்டலும், வித்தைப் பயிற்றலும் :**

தசரதன் குமாரர்களுக்குத் தசரதனின் குலகுருவான வசிஷ்ட முனிவர்தான் நாமகரணம் செய்தார். அவர்கள் வளர்ந்தனர். கல்வி கற்கும் பருவம் (ஐந்தாண்டுகள் நிறைவு) வந்தது. எனவே தசரதன் தன்குலகுருவான வசிஷ்டரின் குருகுலத்திற்கு அனுப்பிவைத்தார்.

**தசரதபுத்திரர்களின் குருக்களும், குருகுலவாழ்க்கையும் :**

அக்காலத்தில் ஐந்து வயது நிரம்பியவர்களைக் குருகுலத்தில் சேர்ப்பார்கள். குருவின் இருப்பிடத்திலேயே

(ஆசிரமம்) மாணவர்கள் (சிஷ்யர்கள்) தங்கவைக்கப்படுவார்கள். குருகுலக் கல்வியின் ஆரம்பத்தில், மாணவர்களுக்கு யக்ஞோபவீதம் அணிவித்தல் என்னும் பூணூல் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

இதை உபநயனம் என்று அழைப்பர்கள். அதாவது மாணவனின் அறிவுக்கண் திறக்கப்படுதல் என்றுபொருள். அன்றுமுதல் பெரும்பாலும் சிஷ்யர்கள் குருவின் இல்லத்திலேயே உண்டு உறங்கி, கல்விஞானம் பெறுவர்.

தசரதனுடைய புதல்வர்கள் மட்டும் குறிப்பிட்ட சிலகாலங்களில் அரண்மணைக்குச்சென்ரு வந்தனர் என்றும், தொடர்ந்து கல்விபெற்றனர் என்றும் தெரியவருகின்றது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கல்வி கற்றனர்... போன்றவற்றை விளக்கியுரைத்தல். குருக்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டார்கள். தெய்வங்களே முதல் குருக்களாகவும் இருந்து ஞானோபதேசம் செய்துள்ளனர். அதன்பிறகு குருபரம்பரை என்பது தொடர்ந்து வந்துள்ளது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முறையில் அனைத்து மாணவர்களும் நடந்து இந்து தர்மத்தைக் கடைப்பிடித்தனர். இது அவர்களுக்கு உரிய ஒழுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

மேலும், மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோபவ, ஆச்சார்ய தேவோ பவ என்னும் நான்கு இந்து தர்மத்தால், பெற்றோர், மூதாதையர்கள், ஆசாரியர், அதிதிக்கள், (விருந்தினர்) ஆகியவர்கள் தெய்வங்களாக வணங்கப்பட்ட சிறந்த தர்மம் இந்து தர்மம்.

இத்தகைய குருபரம்பரா வைபவம் வைணவத்தில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பெருமானே நரனாகவும் நாராயணனாகவும் தோன்றி அஷ்டாச்சர மந்திரத்தை உபதேசித்தார்.

**லட்சுமி நாத சமாரம்பாம் நாதமுனயே மத்யமாம்**
**அஸ்மதாச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்..**



என்பது வைணவ குருபரம்பரைச் சுலோகம்.

எனவே குருக்கள் தெய்வங்களாகவும் தெய்வங்கள் குருக்களாகவும் இருந்து ஞானோபதேசம் செய்துள்ளனர்.

குருர் பிரம்மா குருர் விஷ்ணு குருர்தேவோ மஹேஸ்வரஹ குருசாட்சாத் பரம்பிரம்ம! தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ என்பது குருவணக்க ஸ்லோகம் ஆகும்.

அவ்வகையில் சிறப்புற்றவரான வசிஷ்டர் தசரதன் புத்திரர்களுக்கு ஞானக்கண் திறத்தலாகிய உபநயனம் செய்து வைத்தார். அரசகுமாரர்களுக்கு வேண்டிய அனைத்து வித்தைகளையும் கற்பித்தார். நால்வரும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றனர்.

அஸ்திர சஸ்திர வித்தைகளைக்கற்றார்கள். அஸ்திரம் என்பது போர்க்களத்தில் மந்திரப் பிரயோகம் செய்து ஏவும் ஆயுதங்கள். சஸ்திரம் என்பது சாதாரண ஆயுதப்பயிற்சி. இவை மட்டுமன்றி தெய்வீகப்படைக்கலன்களும் உள்ளன. பிரம்மாஸ்திரம் நாகாஸ்திரம் ஐந்தாஸ்திரம் மானவாஸ்திரம், அக்னி அஸ்திரம், போன்றவைகள் அவற்றில் அடங்கும்.

**புதல்வர்கள் வளர்ந்த முறை :**

தசரதன் குமாரர்கள் நால்வரும் எப்போதும் இணைபிரியாது வாழ்ந்தனர். வசிஷ்டர் மட்டுமன்றி எல்லா முனிவர்களும் அவர்களை விரும்பினர். முனிவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று, கல்வி பயின்று, மாலையில் வீடு திரும்பினர். அப்போது அவர்களைக் கண்ட நகரமாந்தர் இக்குமாரர்களால் நமது அனைத்து துன்பங்களும் நீங்கும். மறுமையிலும் நற்பேறு கிடைக்கும் என்று உறுதியுடன் இருந்தனர்.

**இராமனும் இலட்சுமணனும் :**

இந்த நால்வர்களில் ஸ்ரீராமனும் இலட்சுமனனும் இணைந்துவரும் காட்சியைக் கம்பர் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

**கடல் தரு முகில் ஒளிர்கமலம் அது அலரா**
**வட வரையுடன் வருசெயல் என மறையும் (வேதம்)**
**தடவுதல் அறிவு அறி தன்முதல்வனும்**
**புடைவரும் இளவலும் எனநிகர் புகல்வார். (திரு. அவ. 311)**

அதாவது வேதங்களாலும் அறியமுடியாத ஒப்பற்ற தலைவனான இராமனும், அவனது பக்கத்தில் தப்பாது வரும் இலக்குவனும் இணைந்து வரும் காட்சியானது, கடலின் நீரை உண்ட கருமேகம், பொன்மயமான மேருமலையுடன் சேர்ந்து வருவதைப்போல இருந்தது என்கிறார். இப்பாடலில் ஸ்ரீராமனுடைய நிறமானது கடல்நிறமான கருமையும் நீலமும் சேர்ந்ததைப் போன்றது என்றும், இலக்குவன் பொன்மயமான செந்நிறத்தை உடையவன் என்பதும் பெறப்படுகின்றது. எனவேதான் ஸ்ரீராமனுடைய அழகை எல்லா இடங்களிலும் கருமைவண்ணமாகவே வர்ணிக்கின்றார் கம்பர்.

ஆனால், ஸ்ரீராமனையும் நல்ல அழகிய செந்நிறத்தை உடையவனாகவே வால்மீகி கூறியுள்ளார். வட இந்தியாவின் பல பகுதிகளில் இரண்டு நிறங்களையும் உடையவராக, காலேராம் (கருப்பு ராமர்), கோலேராம் (சிவப்புராமர்) மக்கள் வடிவமைத்து வணங்கிவருகின்றனர்.

பரதனும், சத்துருக்கனனும் இணைந்து செல்வதும் வழக்கமாக இருந்துவந்தது.

குருகுலக்கல்வி முறை முடிந்ததும் அரசகுமாரர்கள் அரண்மனையில் தங்கியிருந்தனர். மூத்த குமாரரான இராமன் பொது ஜனங்களிடமும் அந்நியோன்னியமாகப் பழகி அவர்களிடத்தில் அன்பும் ஆதரவும் காட்டி அவர்களின் அன்பிற்குரிய அரச குமாரனாக வளர்ந்து வந்தான். தசரதன் குமாரர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் வயது நிரம்பியிருந்தது. மகிழ்ச்சியில் மிதந்தது அயோத்தியின் அரண்மனை!



**விசுவாமித்திரர் வருகை :**

ஸ்ரீராமன் கைவண்ணம் கால்வண்ணமும், தோள்வண்ண தாள்வண்ணச் சிறப்புகள் இனிமேல் அறியத்தக்க சிறப்புடைச் செயல்களாகவும், செய்திகளாகவும் இடம்பெறுகின்றன.

தசரதபுத்திரர்களின் குருகுலக்கல்வி முடிவடைந்து, அனைவரும் இன்பத்தில் மூழ்கியிருந்த அந்தக் காலகட்டத்தில் ஒருநாள் விசுவாமித்திரர் என்ற ராஜரிஷி தசரதனின் அரசவைக்கு வந்தார். உலக நன்மைக்காக தான் செய்து வந்த யாகம் (வேள்வி) பூசைமுறைகள் ஆகியனவற்றை நிறைவேற்ற முடியாதபடி தாடகை என்ற பெண் அரக்கியும் அவளுடைய குமாரர்களான சுபாகு, மாரீசன் ஆகியோரும் அழித்து வந்தனர். எனவே அதைத் தடுக்கும் பொருட்டும், தனது வேள்வியைக் காக்கும் பொருட்டுமாக தசரதன் மகனாகிய இராமனை அழைத்துப்போக எண்ணம்கொண்டார் விசுவாமித்திரர். எனவேதான் ஒருநாள் அவர் தசரதனது அரண்மனைக்கு வந்தார். அவரை வரவேற்று மன்னன் ஆசனமிட்டு அமரவைத்து மரியாதை செய்தார்.

**"கந்தமலரில் கடவுள் தன்வரவு காணும்**
**இந்திரன் எனக்கடிது எழுந்து அடிபணிந்தான்"**

என்ற கம்பரின் வரிகள், பிரம்மதேவனின் வருகையைக்கண்ட இந்திரன்போன்று, விசுவாமித்திரரைத் தசரதன் வரவேற்றான் என்பதை உணர்த்துகின்றன.

மேலும், அதை ஏற்றுக்கொண்ட விசுவாமித்திரர் மகிழ்ச்சி அடைய முனிவர் வந்ததற்கான காரணத்தை அரசன்கேட்க அதற்கு விசுவாமித்திரர் அளித்த பதிலுரையைக்காண்போம்.

**"மடங்கல் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்**
**அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரொடு**
**இடம் கொள் நான்முகனையும் படைப்பென்ஈண்டு எனாத்**
**தொடங்கியதுனிஉறுமுனிவன்தோன்றினான்"**
**(கையடைப்படலம் 318.)**

என்றவாறு ஆற்றலும், அறிவும் மிக்கவரான விசுவாமித்திர முனிவரிடம் அரசன்கேட்ட வினாவிற்கு,

இந்த நிலவுலகம் முழுவதையும் அழித்து, வேறு உலகங்களையும், வேறு பிரமமனையும் கூடப் படைப்பேன் என்னும் மனஉறுதியுடையவனாகிய அந்த விசுவாமித்திரன், சிங்கம்போன்ற வலிமையுடையவனான தசரதனிடம் பின்வருமாறு கூறினார்.

**“தருவனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு**
**இடையூறாய்த் தவம்செய்வோர்கள்**
**வெருவரச் சென்றடைகாம வெகுளி எனும்**
**நிருதர் இடை விலக்காவண்ணம்**
**செரு முகத்துக்காத்தி நின் சிறுவர்**
**நால்வரினும் கரிய செம்மல்**
**ஒருவனைத் தந்திடுதி என உயிர் இரக்கும்**
**கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்.”**
**(325).**

என்று வரும் இந்தநயமிக்கப் பாடலானது, தான் செய்யும் வேள்வியைக் காக்க தசரதன் புத்திரர்களுள் கரியசெம்மலான இராமனைத் தன்னோடு வனத்திற்கு அனுப்புமாறு விசுவாமித்திரன் கேட்டார் என்று கூறுகின்றது.

அதைக்கேட்ட தசரதன் நிலையாகப் பின்வரும் அற்புதமான பாடலைப் படைத்துள்ளார் கம்பநாட்டாழ்வார்.

**தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறுந்தாரான்**
**ஒருவண்ணம் துயரம் நீங்கி**
**படையூற்றம் இலன் சிறியன் இவன் பெரியோய்**
**பணி இதுவேல் பனிநீர்க் கங்கை**
**புடை ஊற்றும் சடையானும்**
**புரந்திரனும் புகுந்து செய்யும்**
**இடையூறுக்கு இடையூறாய் யான் காப்பன்**
**பெருவேள்விக்கு எழுக என்றான் (327).**



அதாவது, கண்ணொளி (பார்வை) இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த ஒரு குருடனுக்குப்பார்வை உண்டாகி, உலகநிகழ்வுகளைக்கண்டு இன்புற்றிருக்கும் சுபவேளையில், விதிவசத்தால் மீண்டும் அதை இழந்து போகும் போது அவன் எவ்வளவு துன்பம் அடைவானோ அவ்வளவு துன்பத்தை அடைந்தானாம் தசரதமாமன்னன்!

எனவே, விசுவாமித்திரனின் வேண்டுகோளை மறுத்து, என்மகனான இராமன் இளையவன், போர் அனுபவம் இல்லாதவன், என்று எடுத்துரைத்து, அம்முனிவன் செய்யும் யாகத்தைக்காக்க, தானே வருவேன் என்று கூறியவுடன் மிகுந்த பெருங்கோபம்கொண்டு நகைக்க, எட்டுத்திக்குகளும் அதிர்ந்தனவாம் ! இனி என்ன இடையூறு தோன்றுமோ என்று தேவர்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கினர்.

அப்போது கோபங்கொண்டு விசுவாமித்திரருக்கும் தசரதனுக்கும் வசிஷ்ட முனிவர் கூறுதல்.

**பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்**
**மொய்கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்**
**ஐய நின் மகற்கு அளவு இல் விஞ்சை வந்து**
**எய்து காலம் இன்று எதிர்ந்தது என்னவே. (330).**

மேலே கூறப்பட்ட காரணத்திற்காக உன்சிறுவர் நால்வரினும் கரியசெம்மல் இராமனைத் தன்னுடைய வேள்வியைக் காக்கும் பொருட்டுத் தன்னோடு அனுப்பிவைக்குமாறும் கேட்டார். (இங்கே இராமனைச் சிறுவன் என்றே குறிப்பிட்டுள்ளார் விசுவாமித்திரர்).

அதைக்கேட்டு அதிர்ந்துபோன அரசன் தானே வந்து வேள்வியைக் காப்பதாகவும் இராமன் சிறியவன் படையூற்றம் இல்லாதவன், பதினாறு வயது கூட நிரம்பாதவன் என்றும் கூறினான். எனவே பதினாறு வயது என்பது அக்காலத்திலேயே தகுதி உண்டாக்கும் வயதாக கணிக்கப்பட்டிருந்தது என்பது விளங்குகின்றது.

மேலும் விசுவாமித்திரர் கூறியபாடலில் தருவனத்துள் யான் இயற்றும் தவவேள்வி என்பதால். வனமாகிய காடு பலவளத்தையும் தரத்தக்கது. எனவேதான் தருவனம் என்றழைக்கப்படுகின்றது. தரு என்பதற்கு மரம் என்று பொருள் உண்டு. எனவே மரங்கள் அடர்ந்திருந்த காடு என்ற ஒருபொருள் உண்டு. எனினும் இக்காடானது பலவளத்தைத் தருவதோடு, மழையையும் தருவதாலும், அம்மழையே உலகத்தின் அனைத்து வளங்களுக்கும் அடிப்படைக்காரணம் ஆகையாலும் தருவனம் என்று கூறப்பட்டுள்ள நயத்தை அறிந்து இன்புறலாம். மரங்கள் வளர்க்கப்படவேண்டும். அதுவே மழைக்கு ஆதாரம் என்றும் கூறிக்கொண்டு மரம் நடுவிழா என்றும், வனமகோத்சவம் என்று பெயரிட்டு நாம் இன்றைக்கு எடுக்கும் எல்லாவிழாக்களுக்கும் வனமே காரணம் என்பதை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்தவரான கவிச்சக்கரவர்த்தி தனது பாடலில் இந்த அறிவியல்கருத்தை அற்புதமாகப் பயன்படுத்தி இருப்பதை அறியலாம். தற்போது வனமகோத்சவம் என்னும் செயலுக்கு அக்காலத்திலேயே முதன்மையிடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் ஆய்ந்தறியலாம். இப்படியாக பல ஆழந்த பொருள்களைத்தரத்தக்க இப்பாடல்களின் சுவையை மேலும் அறியவேண்டும்.

**குறிப்பு :**

*16 ஆண்டுகள் வயது நிரம்பாதவனைச் சிறுவன் என்று தசரதன் குறிப்பிட்டுள்ளார் இதன். காரணம் பாசமா ? அல்லது அக்கால சமுதாய நிலையா ? தற்காலத்திலும் பதினெட்டுவயது நிரம்பாதவனுக்கு வாக்குரிமை இல்லை என்பதும், அவ்வயது அடைந்தவர்களுக்கு அனைத்துவித உரிமைகளும் வழங்கப்படுகின்ற நமது அரசியல் சாசனத்திற்கும் இவை அடிப்படை ஆதாரங்களாக அமைந்திருப்பதையும் காணலாம்.*

இதனைக்கேட்ட விசுவாமித்திரர் பெருங்கோபம் கொண்டார். ஆனால் அவருடைய பெருங்கோபத்தை அடக்கும்பொருட்டு வசிஷ்டர் இராமனை விசுவாமித்திரரோடு அனுப்புமாறு அறிவுறுத்தினார். மேலும் விசுவாமித்திரரால்



இராமனுக்குப்பலவித நன்மைகள் வந்து சேருவதற்கான நல்லநேரமும் வாய்ப்பும் உருவாகியுள்ளது என்றும் அதற்குத்தடையாக நிற்கவேண்டாம் என்றும் தசரதனுக்கு அறிவுரை கூறினார். வசிஷ்டரும் விசுவாமித்திரரும் ஏற்கனவே பகைமையில் இருந்தவர்கள். ஆனாலும் போர்ப்பயிற்சியானது வசிஷ்டரால் சிறப்பாகக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் என்று விசுவாமித்தரர் நினைத்திருப்பார். ஆகையால் தன் சீடன் மூலம் தனது திறமையும் ஒழுக்கமும் உலகத்தினர்க்கு வெளிப்படும் என்றும் வசிஷ்டர் நினைத்தார். தன் சீடனாகிய ஸ்ரீராமனுக்கு நன்மைகள் ஏற்படுவதை அறிந்து அவர்மேலும் புகழ்பெற வேண்டும் என்ற சிறந்த ஆசானுக்குரிய இலக்கணம் இதனால் தெரிகின்றது.

அதுமட்டுமன்றி தான் (வசிஷ்டர்) வித்தைகளைப் பயிற்றுவித்ததால் அது சிறப்பாகக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் என்று விசுவாமித்தரர் நினைத்திருப்பார். எனவே ஸ்ரீராமனை அவரோடு அனுப்பிவைத்தல் நலம் என்று அறிவுறித்தினார்.

வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொண்ட தசரதன் இராமனை மட்டும் தனியே அனுப்ப மனமின்றி இராமனோடு இலட்சுமணனையும் அனுப்பி இவ்விருவருக்கும் இனிமேல் விசுவாமித்திரரே தாயும் தந்தையுமாய்க் காத்துக் கொள்ள வேண்டும். என்றும் கண்ணீர் மல்க ஒப்படைத்தார். முனிவன் முன்னே செல்ல பாலகர்கள் பின்தொடர்ந்தனர். இது கையடைப்படலம் என்னும் படலத்தின் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது.

**தாயும் தந்தையும் நீயே என்று கையடைப்படுத்தல் :**

**வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்**
**முந்தை நான்மறை முனிவர்க்குக் காட்டி நல்**
**தந்தை நீ தனித்தாயும் நீ இவர்க்கு**
**எந்தை தந்தனென் இயைந்த செய்க என்றான. (332).**

என்று இராமனோடு இலக்குவனையும் சேர்த்து விசுவாமித்திரரிடம் அடைக்கலப்படுத்தினான்.! என்ற கம்பரின்

பாடல்வரிகள் தசரதனின் துயரநிலையையும், இராமனைப் பிரிந்தால், தானும் உயிரிழக்க நேரிடுமோ என்றபயமும் இப்போதே பற்றிக்கொண்டது என்பதை அறியவைக்கின்றது.

இராம லட்சுமணர்களை அனுப்பி தந்தையும் தாயும் நீரே என்று கையடைப்படுத்தினான் தசரதன். இராம லட்சுமணர்களோடு சென்ற விசுவாமித்திரர் முதல்நாள் இரவை சரயு நதிக்கரையில் கழித்தனர். அரச குமாரர்கள் களைப்படைந்திருந்தனர்.

எனவே மேலும் வழிநடந்ததால் களைப்பும் சோர்வும் தூக்கமும் இல்லாமல் தவித்தனர். இதைத் தடுக்கக்கூடிய பலம், அதிபலம், என்ற இரண்டுமந்திரங்களை இருவருக்கும் உபதேசித்தார் விசுவாமித்திரர்.

வழிநடந்து இரண்டாம்நாள் காமாசிரமத்தை அடைந்து அங்கே தங்கினர். சிவபெருமான் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த இடம் இந்தக் காமாசிரமம். அப்போது அங்க நாட்டின் ஒருபகுதியாக இருந்தது. தற்போது பீகார் மாநிலத்தில் உள்ளது. கங்கையும் சரயுநதியும் சங்கமிக்கும் இடம். இரண்டு நதிகளும் இணையுங்கால் ஏற்படும் சலசலப்பும், கலகலக்கும் ஓசையும் மிகுதியாகக் கேட்கும்.

காமத்தைக் கொடுக்கும் காமன் அனைவருக்கும் பொது. எனவே அவன் காமன் ஆகிப்போனான்.! அனங்கன் என்பதும் இவனின் வேறுபெயர். அங்கம் இல்லாதவன். உருவம் அற்றவன் என்பது இதற்குரிய பொருள் ! இவன் ரதியின் கணவன். சிவனின் மருமகன்.

காமக்கடவுளுக்கு உருவம் இல்லை. கண்ணிற்குத் தெரியமாட்டான் என்று அறிந்த நமது புராணங்களில் இருந்து அறிந்துகொண்ட ஷேக்ஸ்பியர் தானும் காமத்திற்கு ஒரு கடவுளைப் படைக்கவேண்டும் என்று நினைத்தார். க்யூபிட் என்ற கண்ணில்லாத பையனாக உருவகம் செய்து கொண்டு தன் நாடகங்களில் அந்தப்பாத்திரத்தைப் அவர் பயன்படுத்துவதை அறியலாம்.



**காமாசிரமம் :**

காலை நேரத்தில் ஆற்றைக் கடந்து சென்ற அம்மூவரும், மாலை நேரத்தில் ஒருசோலையை அடைந்தனர். அந்தச்சோலையைப்பார்த்து இராமன் கேட்டபோது அது காமன் ஆசிரமம் என்றும் அங்குதான் (அந்தச்சோலைப்பகுதியில்) முன்பு சிவபெருமான் தவம் செய்த இடம் உள்ளது என்றும் எடுத்துரைத்தார் விசுவாமித்திரர். சிவபெருமானுடைய தவத்தைக்கலைக்க இந்திராதி தேவர்கள் வேண்டியதால் மன்மதன் மலரம்பு கொண்டு சிவபெருமான் மேல் தொடுத்ததையும் அதனால் கோபம் கொண்ட பெருமான் தன்னுடைய நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை எரித்துவிட்டதனையும் ஆகிய புராணவரலாற்றை விசுவாமித்திரர் இராமனுக்குக் கூறிச்சென்றார்.

**தாடகாவனம் ஸ்ரீராமனின் கைவண்ணச்சிறப்பு :**

காமாசிரமத்தைக் கடந்து சென்றபோது மிகப்பெரும் பாலைநிலம் குறுக்கிட்டது. மிகக்கொடுமையான வெம்மை. இதைத்தாங்கிக் கொள்வதற்கான் இரண்டு மந்திரங்களை விசுவாமித்திரர் இருவருக்கும் உபதேசித்தார். (பலம், மகாபலம் என்பன) அதன்பயனால் துன்பமின்றி பயணித்தனர். இராமன் இந்தப்பகுதி இவ்வாறு மாறக்காரணம் யாது என வினவ விசுவாமித்திரர் கூறிய தாடகையின் வரலாற்றைக் கேட்டனர்.

**தாடகையின் பிறப்புச் சுருக்கம் :**

சுகேது என்ற யக்சனுக்கு மகளாகத்தோன்றியவள் தாடகை. தனக்குப் புத்திரபாக்யம் இல்லை என்பதை அகத்தியமுனிவர் மூலமாகத்தெரிந்து கொண்ட சுகேது, அவருடைய ஆலோசனைக்கு ஏற்ப, சிவபெருமானை நோக்கித்தவமிருந்தும், யக்ச்ட்சகானத்தைப்பாடியும் அவரை மகிழ்வித்ததால், பிள்ளைப்பேறு இல்லை என்றாலும், மிகவும் வலிமை வாய்ந்த பெண்குழந்தை பிறக்க அவனுக்கு அருள்செய்தார் சிவபெருமான்.! அவளே தாடகை. தாடகையை அரக்கர்களின் வாசனையும் தொடர்பும் இல்லாமல்

வளர்த்தபோதும், அவள் உள்ளுணவிற்கு ஏற்ப, அவள் நடன நாட்டியத்தையும், பக்திமார்க்கத்தையும் வெறுத்து, அரக்கர்களிடம் நெருங்கிப்பழகி, ஒருநாள் சுந்தன் என்ற அரக்கனை மணந்துகொண்டாள்.! அதனால் சுபாகு, மாரீசன் என்ற இரு புதல்வர்களையும் பெற்றெடுத்தாள். அவர்களின் உதவியோடு அரக்கசுபாவத்தினால், வழிபோக்கர்களை மறித்து, தாக்கி, கொடியபாலை நிலமாக அதை மாற்றிவிட்டாள்.

அந்தப்பகுதிக்கு தாடகாவனம் என்றே பெயர் ஏற்பட்டது... இந்தப்பகுதியில் முன்பு தேவர்களால் படைக்கப்பட்ட மலதம் கரூஷம் என்ற அழகிய இரண்டு நாடுகள் இருந்தன. செல்வச்செழிப்புடையது. இதில் தாடகை என்ற அந்த இயக்க குலப்பெண் பிறந்தாள். (யக்ட்சர்குலம்)

தாடகை 1000 யானைகளின் பலம் பெற்றவள். நினைத்த உருவம் எடுக்கும் மந்திரம் கற்றவள். எனவே மாரீசன், சுபாகு என்ற மகன்கள் தாயைப்போலவும் இந்திரன்போலவும் பலம் கொண்டவர்களாக வளர்ந்தார்கள்.! இருவரும் தம் மாயா சக்தியால் அங்கிருந்த முனிவர்களையும், தவசியர்களையும், பயமுறுத்தி வெளியேற்றி விட்டனர். பலரையும் தின்று விட்டனர். எனவே இவர்களின் கொடுமைக்குப் பயந்து அனைவரும் வெளியேறிவிட ஆளரவம் இல்லாப் பகுதியாக அது மாறிப்போனது. கொடுமையான பாலையாய் உருமாறிப்போனது. கண்டோரைக் கலங்கவைக்கும் தன்மையுடன் விளங்குகின்றது என்றார்.

ஒருமுறை அகத்திய முனிவரின் ஆசிரமத்திற்குக்சென்று அகத்தியரை விழுங்கிவிடுவதாக தாடகையும், குமாரர்களும் மிரட்டினர். ஆனால் தன்னுடைய தவபலத்தாலும், தன்னிடமிருந்த தெய்வீகப்படைக்கலன்களின் துணையோடும் அவர்களைத்தோற்கடித்து விரட்டிய அகத்தியர், அவர்களின் தோற்றமும் மாறிப்போகவும் அரக்கவடிவம் கொண்டு திரியுமாறும் சபித்துவிட்டார். எனவே அவர்களால் அகத்தியரை ஒன்றும் செய்யமுடியவில்லை எனினும் மற்றையோர்க்குத் துன்பம் கொடுத்தும் உணவாக விழுங்கியும் வருகின்றனர்.



எனவும், எனவே அவர்கள் எப்போதும் நம்மைத் தாக்கவரலாம் என்றும் எச்சரித்தார் விசுவாமித்திரர்.

**தோன்றினாள் தாடகை : வதைத்தான் ஸ்ரீராமன். (கைவண்ணம்)**

அவர் எச்சரித்து முடிக்கும் முன்னே கருப்பு மலையைப்போல கோரப்பற்கள் நிறைந்த வாயைப் பெற்றிருந்தவளான தாடகை தோன்றினாள். அவளுடைய வாயானது ஒருபெரும் மலைக்குகையைப்போன்று இருந்தது. கண்களில் தீப்பொறிபறந்தது. ஆயிரக்கணக்கான இறந்துபோன யானைகளைக்கோத்து தொங்கவிட்ட மாலையை மார்பில் அணிந்தவளாக இருந்தாள். பிணவாடையும், நிணநாற்றமும் குப்பெனப்பரவியது. ஏழுலகும் நடுங்கும்படியாக இடியோசையை எழுப்பிக் கொண்டு மூவரையும் விழுங்குகிறேன் என்று கூறிக்கொண்டு அவர்களை நோக்கி ஓடிவந்தாள் தாடகை. இராமலட்சுமணர் பயமின்றி எதிர்த்தனர். ஹீம் காரம் செய்து இருவரையும் முனிவர் ஆசிர்வதித்தார். அஞ்சாமல் போர்புரிந்து அழித்துவிடுமாறும் கூறினார்.

இதைக்கேட்ட தாடகை மிகுந்த கோபம்கொண்டு, அவர்களைத்தாக்கத் தொடங்கினாள். அப்போது மரங்களைப்பிடுங்கி எறிந்து மலைகளை வீசித்தாக்கினாள் தாடகை.. அப்போது முனிவர் இராமனிடம் “இவளை உடனே அழித்து விடு. இரவு வரப்போகின்றது இரவு நேரங்களில் அசுரர் பலம் அதிகரிக்கும்” என்றார். அது அவள் காதிலும் விழுந்தது. எனவே கடினமாகத் தாக்கத்தொடங்கினாள். அப்பொழுதும் அவள் பெண் என்பதால் அழிக்கவேண்டாம் என்று கருணகாட்டி நின்றார் ஸ்ரீராமர்.

அதற்கு விசுவாமித்திரர் பெண்களாக இருந்தாலும் கொடிய அரக்கியர்களை அழிப்பது பாவச்செயல் அன்று என்றும் அரசதர்மம் என்றும் எடுத்துரைத்தார். முன்பு ஒருமுறை கியாதி என்ற பெண்ஒருத்தி முனிபத்தினியாக இருந்தும் அரக்கர்களிடம் கள்ளக்காதல் கொண்டு உறவு கொண்டதால்

அவளைத் திருமால் அழித்தார். அதேபோன்று குமதி என்ற பெண் விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தும் தனக்கு உணவாகத் தக்கவை என்று அனைவரையும் இம்சித்து வந்தாள். இந்திரன் தன் வச்சிராயுதத்தால் அவளை அழித்தான். எனவே நீயும் இவளை பெண் என்று பாராமல் கொல்ல வேண்டும் என்று விசுவாமித்திரர் கூறினார்.

**தீது என்றுள்ளவை யாவையும் செய்து எமைக்**
**கோது என்று உண்டிலள் இத்தனையே குறை**
**யாது என்று எண்ணுவது இக் கொடியாளையும்**
**மாது என எண்ணுவதோ மணிப்பூணினாய்.**
**(தாடகை வதைப்படலம். 377).**

அதற்கு இராமனும் உடன்பட்டு அவளுடைய மார்பகம் இரண்டாகப் பிளந்து வெளியேறுமாறு தன் அம்பால் தொளைத்து அழித்தார். தாடகை அழிந்ததைப் பின்வரும் பாடலில் அற்புதமானதொரு உவமையின் மூலம் எடுத்துரைக்கின்றார் கம்பர்.

**“சொல் ஒக்கும் கடிய வேகச்சுடுசரம் கரிய செம்மல்**
**அல்ஒக்கும்நிறத்தினாள் மேல்விடுத்தலும் வயிரக்குன்றக்**
**கல்ஒக்கும்நெஞ்சில் தங்காது அப்புறம்கழன்று கல்லாப்**
**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்எனப் போயிற்றுஅன்றே”**

அதாவது, கல்விகற்காத இழிந்தவர்களுக்கு, கற்று உணர்ந்த நல்லவர்கள் கூறிய அறிவுரைகள் அவர்களின் மனத்தில் நில்லாமல் ஒருகாதில்வாங்கிய அறிவானது மறு காதின் வழியாக வெளியேறி, உடனுக்குடனே நீங்கிவிடுவதைப்போல, இராமனுடைய அம்பானது, அவள் மார்பில் தங்காமல், அவள்மார்பைப்பிளந்து கொண்டு வெளியேறியதாம்.! அவள் உயிர் துறந்தாள்!

பெண்ணாகிய தாடகையை வதைத்தது க்ஷத்திரிய (அரச) தர்மமாகும். எனவே இதனால் ஸ்ரீராமனுக்கு எந்தவித தோஷமும் தட்டவில்லை. ஏனென்றாள் இராமன் ஹேயப்ப்ரத்ய நீகத்வம் என்ற தன்மை கொண்டவர் என்பார்கள். அதாவது எவ்விதமான தோஷமும் (தீட்டு) தட்டாதவர். அதுமட்டுமன்றி கல்யாணகுணாகரத்வம் என்னும் பண்புடையவர். அதாவது கல்யாண குணங்களின் பிறப்பிடமும் ஊற்றுக் கண்ணாகவும் விளங்குபவர்.



தோஷம் தட்டாதவர் ஆகையால்தான் அடுத்ததாக அகல்யாவிற்கு மீண்டும் புனர்வாழ்வு கொடுத்தார். தனது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்த சீதாதேவியை மணம்முடித்தார். (தோஷம் பிடித்தால் நன்மைகள் நிகழாது.)

மேலும் தாடகை வதத்தால் மகிழ்ச்சி அடைந்ததேவர்கள், இராம இலட்சுமணர்களுக்கு சிறந்த அஸ்திரங்களை (தெய்வீகப்படைக்கலன்களை) அளிக்குமாறும் விசுவாமித்திரரிடம் வேண்ட அவரும் அவ்விருவருக்கும் பல படைக்கலன்களை அளித்தார்.

**விசுவாமித்திரர் இராமனுக்குப் படைக்கலம் அளித்தல் :**

**ஆறிய அறிவன் கூறி அளித்தலும் அண்ணல் தன்பால்**
**ஊறிய உவகையோடும் உம்பர்தம்படைகள்எல்லாம்**
**தேறியமனத்தான் செய்த நல்வினைப் பயன்கள் எல்லாம்**
**மாறியபிறப்பில் தேடிவருவது போலவந்த அன்றே!**
**(வேள்விப்படலம். 400)**

தாடகைவதைக்குப்பிறகு அவர்கள் அடுத்ததாக சித்தாஸ்ரமம் சென்றார்கள். இது கங்கையும் சரயுவும் கலக்கும் இடத்திற்குக் கிழக்கே அமைந்துள்ளது. மகாவிஷ்ணு பெருமான் வாமன அவதாரம் எடுத்து மகாபலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண்பெற்ற வேள்விச்சாலை இங்குதான் அமைந்திருந்தது. பின்னர் தான் பெற்ற உலகை இந்திரனுக்கு அளித்து மாவலியின் யாகத்தை முடித்த இடம் சித்தாஸ்ரமம்.

தற்போது பீகார் மாவட்டத்தில் கங்கைக்கரையில் உள்ள பர்க்சர் என்ற இடமே சித்தாஸ்ரமம் என்று பலரும் கூறுகின்றனர்.

இந்த இடத்தில்தான் விசுவாமித்திரர் ஆசிரமமும் உள்ளது. இங்குதான் பெருமான் வாமன மூர்த்தியாய் அவதாரம்கொண்டு வந்தார்.

**காலம் நுனித்து உணர் காசிபன் என்னும்**
**வால் அறிவற்கு அதிதிக்கு ஓர் மகவு ஆய்**
**நீல நிறத்து நெடுந்தகை வந்து ஓர்**
**ஆல் அமர்வித்தின் அருங்குறள் ஆனான். (419)**

என்பது கம்பரின் கவிக்கூற்று ஆகும்.

மேலும் மகாபலி சக்கரவர்த்தி தானம் கொடுத்தபோது, அதைத்தடுக்கநினைத்தார் சுக்கிராச்சாரியார் என்ற அரக்கரின் குரு! அவ்வாறு தடுப்பது தர்மம் ஆகாது என்று மகாபலி சுக்கிராச்சாரியாரிடம் கூறியதாக அமைந்த கம்பரின் கூற்று.

**எடுத்து ஒருவர்க்கு ஈதலின் முன்னம்**
**தடுப்பது நினக்கு அழகிதோ தகவில் வெள்ளி**
**கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்**
**உடுப்பதும் உண்பதும் இன்றி விடுகின்றாய். (பாடல் 431)**

ஆக ஒருவன்கொடுக்கும் தானத்தை மற்றொருவன் தடுக்கக்கூடாது. அவ்வாறு தடுத்தால், அவனது உறவினர்களேவிரைவில் அழிந்து போவார்கள் ஆகையால், அவர்களின் அழிவும் அதற்கு முன்பே நிகழ்ந்துவிடும் என்பதை அறிய வைக்கின்றார் கம்பரும் !

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உண்பதூஉம்
உடுப்பதும் இன்றிக் கெடும்..

என்னும் உலகப்பொதுமறையாம் திருக்குறளின் கருத்து இங்கு தீபச்சுடராய் ஒளிவிடுவதையும் காணலாம்.

ஆக, சித்தாசிரமம் என்ற இந்த இடத்தில்தான் மகாபலி சக்ரவர்த்தி யாகம் செய்துதானம் தருவதை அறிந்த மகாவிஷ்ணு தேவர்களுக்காக வாமன அவதாரம் கொண்டு மாவலியிடமிருந்து கவர்ந்தனவற்றை மீண்டும் தேவேந்திரனுக்குக் கொடுத்தபின்னர் தன்னுடைய (வாமனருடைய) சித்திகள் அனைத்தும் முழுமையடைய அங்கு தவம் செய்தார். சித்தியையும் அடைந்தார். எனவேதான் அப்பகுதி சித்தாசிரமம் என்று அழைக்கப்பட்டதற்கான காரணம் ஆகும்.



**வேள்வியை அழிக்கவந்த வீணர்கள் :**

விசுவாமித்திரர் அங்கு அமைந்திருந்த தன்னுடைய ஆசிரமம் ஆன சித்தாசிரமத்திற்கு இருவரையும் அழைத்துச்சென்றார் விசுவாமித்திரர். அங்குதான் அவர்மிகப்பெரும் யாகம் ஒன்றைச்செய்ய எண்ணினார். சித்தாசிரமம் முன்பு மகாபலி சக்ரவர்த்தி யாகம் செய்த இடம். பெருமான் வாமனனாகச் சென்று மூன்றடி மண்கேட்டு அளந்து பெற்று இந்திரனுக்குக் கொடுத்த இடம். பிறகு மகாபலியை அழித்த இடம். இந்தத்தானத்தை அளித்ததன் மூலம், அடுத்த கல்பத்தில் இந்திரனாக ஆகும் சிறப்பையும் பெற்றான் மகாபலி. வாமனன் தங்கியிருந்து மேலும் பல தவங்களைச்செய்து தன்னுடைய சித்தங்களை நிறைவேற்றிய அவ்விடத்தில், பலமுனிவர்களை அழைத்து அதன்தலைவராக விசுவாமித்திரர் ஒரு மிகப்பெரும் யாகத்தைச் செய்ய முற்பட்டார். அப்போது அதை தாடகையின் புதல்வர்களான சுபாகுவும் மாரீசனும் ஆயிரக்கணக்கான ராட்சதர்களை அழைத்து வந்து அழிக்க முற்பட்டனர். மாமிசப்பிண்டங்களை ஹோம குண்டத்தில் எறிவதும் இரத்தம் கொட்டி ஹோமாக்கினியை அனைக்கவும் நினைத்தனர். இப்படியாக பலமுறை அனுபவப்பட்டதால் தன்னுடைய அந்த தவவேள்வியை நிறைவேற்றிக்கொள்ளவே இராமனை அழைத்துச்சென்றார் விசுவாமித்திரர்.

தான்செய்யப் புகுந்த யாகத்தைக் காக்கவேண்டியது இராம இலக்குவனர்களின் கடமை என்பதைச் சுட்டிக்காட்டியபின் மற்றவர்களோடு சேர்ந்து அந்தயக்ஞமாகிய வேள்வியைப் பலவித சமித்துக்களையும், ஆகுதிகளையும் இட்டு முறைபடச்செய்தார் விசுவாமித்திரர். தாடகையின் புதல்வர்களான சுபாகுவும், மாரீசனும் முன்புபோலவே பல அட்டூழியங்களைச் செய்து அதை நிறைவேறவிடாமல் தடுக்கமுயன்றனர். ஆனால் இராமலட்சுமணர்கள் யாக சாலையைச் சுற்றி ஆகாயத்தில் கூடுபோல் அஸ்த்திரங்களால் அமைத்துத் தீங்கு ஏற்படா வண்ணம் காத்தனர். ஆறுநாட்கள் இந்த யாகம் நடைபெற்றது. ஸ்ரீராம லட்சுமணர்கள் ஆயிரக்கணக்கான அசுரர்களையும், அரக்கர்களையும்

அழித்தனர். இறுதியில் சுபாகு கொல்லப்பட்டான். ஸ்ரீ ராமரின் அம்பினால் தாக்கப்பட்ட தாடகையின் மகன் மாரீசன் கடலிடைச்சென்று விழுந்து பிழைத்தால் போதும் என்று ஓடிப்போனான். அதன் பிறகு அவன் துறவியாகவே மாறிப்போனான் என்றும், வனத்திலே ஓர் குடில் அமைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தான் என்றும் பின்னர் அறிகின்றோம்.!

**மகிழ்ந்தனர் வானவர் ! பொழிந்தனர் மலர்மாரி !**

எனவே வேள்வியானது சிறப்புற முடிவுற்றதால், விசுவாமித்திர முனிவரைப்போன்றே வானவர்களும் மகிழ்ந்தார்கள். மலர்மாரி தூவி வாழ்த்தி மகிழ்ந்தனர். தான் செய்த யாகத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்த அரசகுமாரர்களை ஆசீர்வதித்து மகிழ்ந்தார் விசுவாமித்திரர். அவர்களுக்குப் பல அஸ்திர சஸ்திரங்களைக் கொடுத்து, ஏற்பதற்குரிய மந்திரங்களையும், பயன்படுமாற்றையும் எடுத்துரைத்தார்.

**அகலிகைப்படலம்... (அகல்யைப்படலம்)**

கௌதம முனிவரின் மனைவி அகலிகை ஆவாள். இவள் பஞ்ச பத்தினிகள் (பத்தினிகள் ஐவரில்) ஒருத்தி. அகலிகை என்றும், அகல்யை என்றும், அகல்யா என்றும் பலவிதமாக அழைக்கப்பட்ட இவளுக்கும் கௌதமருக்கும் திருமணம் நடந்து, சதானந்தர் என்ற மகனும் இருந்தார். தவிர்க்கமுடியாத சூழ்நிலையின் காரணமாக தன் கற்பு நெறியிலே இருந்து தவறிப்போன இந்த அகலிகையின் சாபத்தையும் சாபவிமோசனத்தையும் கூறுவது ஆகையால் இப்பகுதி அகலிகைப் படலம் என்று அழைக்கப்படுகின்றது.

வேள்வியைக்காத்த பின்னர், அவர்களுக்குக் குறிப்பாக இராமனுக்கு ஏதேனும் ஒன்றைத் தான் மிகப்பெரிதாய்ச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்மனத்தில் உதித்தது. எனவே அவர்களை அயோத்திக்குத் திருப்பி அனுப்பிவிடாமல் வடதிசைக்கண் அவர்களை அழைத்துச்சென்றார். அவர்கள்



சென்ற அப்பாதையில் பலபுண்ணிய நதிகளின் பலசங்கமங்கள் வருகின்றன. கங்கையும் சரயுநதியும் கலக்கும் இடம் சாப்ரா என்று அழைக்கப்படுகின்றது.

அதைக்கடந்து கங்கையும் கண்டகி நதியும் கலக்கும் சங்கமம். இவற்றைக் கடந்து செல்கின்றபோது ஹாசிபூர் என்ற இடம் தற்போது உள்ளது. இது விசாலாநகர். என்று தற்போது அழைக்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் நடந்து கடந்தனர் தசரதகுமாரர்கள்!

அதன் அறிகுறியாக தற்போதும் ஹாசிபூரை அடுத்துள்ள ஓர் அழகிய சிறு குன்றின்மேல் அன்றைக்கு இராமன் நடந்து சென்ற பாதையை நினைவு படுத்தும் விதமாக ஸ்ரீராமன் திருவடி சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாம் பீகார் மாநிலத்தின் பாட்னா நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகும். மீண்டும் கங்கையும் சரயுவும் கலக்கும் ஓர் இடம் கடந்து சென்றனர். அது தற்போது ரேவால்கஞ்ச் என்னும் இடமாக உள்ளது என்கின்றனர்.

மீண்டும் கங்கையும் கண்டகியும் சங்கமிக்கும் ஓர் இடம் சாப்ராவிற்கு அருகில் உள்ளது. பீகார் மாநிலத்தில் உள்ள சாப்ரா என்னும் அப்பகுதிக்கு அருகில்தான் கௌதம முனிவரின் ஆசிரமம் உள்ளது. இங்குதான் அகல்யை சாபமும் சாபவிமோசனம் அடைந்தாள்.

**அகலிகை சாபம்பெற்ற சுருக்கம். ஸ்ரீராமன் கால்வண்ணச் சிறப்பு :**

இளம்வயதில் மிகுந்த அழகியாக விளங்கியவளான அகலிகையைத் தான் திருமணம் புரிந்துகொள்ளவும் திட்டமிட்டான் தேவேந்திரன். ஆனால் அவன் எண்ணம் ஈடேறாமல் போனது. அகலிகைக்கும் கௌதமமுனிவருக்கும் திருமணம் நடந்தேறியது. ஆனால் அகலிகையைப்பற்றிய நினைவு சிலநேரங்களில் தலைதூக்க, அவளை எப்படியாவது அடைதல்வேண்டும் என்ற எண்ணத்திலேயே அந்தக் காமுகன் இந்திரனும் இருந்தான்.

ஒருநாள் விடியற்காலை நேரத்தில் அகலிகையின் நினைவு அவன் இதயத்தில் புகுந்து வாட்டியதால், அவளை அடைய சமயம் வாய்க்குமோ என்ற எண்ணத்தில், கௌதமரின் ஆசிரமத்திற்கு வந்தான் இந்திரன். உடனே காலைப்பொழுது கடுகிவந்து விட்டது என்பதை அறிவிக்கும் ஒருகாக்கையாக அவன் தன்னை மாற்றிக்கொண்டு, கரையத்தொடங்க, அதை உண்மை என்று நம்பிய முனிவர் காலைக்கடன்களை முடிக்கவும், தீர்த்தம் ஆடிவரவும் நதியை நோக்கிப்புறப்பட்டார். இதைக்கண்ட இக்காமுகக்காக்கை வடிவினன் பர்ணசாலைக்குள் புகுந்து, தன்னை முனிவராக மாற்றிக்கொண்டு, அகலிகையைக் கூடிக் குலவினான். கலவி மகிழ்ந்திட்டான். சற்று தூரம் சென்ற முனிவர்பொழுது விடியாமையை உணர்ந்து மீண்டும் தன் குடிலுக்குவர, நடந்ததை அறிந்தார் கௌதமர். கோபம் கொண்டார். பயந்துபோன இந்திரன்வெளியேற, அவனுக்கு அங்கமெல்லாம் கண்ணாகக் கடவது என்று சபித்தார்.

தன்னைக் கூடுவது தன்கணவன் இல்லை என்பதை அறியாமலும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த உண்மை புரிந்தும், மறுப்புச் சொல்லாமல், கல்போன்று மரத்துப்போன நிலையிலேயிருந்த தன் மனைவியையும் கல்லாகக் கடவது என்று முனிவர் சபித்தார்.

தன் தவற்றை உணர்ந்த அகலிகை, அறியாமையினால் ஏற்பட்ட பிழை என்றும், தனக்குச் சாபவிமோசனம் தரவேண்டும் என்றும் மன்றாடியதைக் கம்பர் கவியில் காண்போம்.

கௌதம முனியிடம் சாபவிமோசனம் வேண்டி நின்ற அகலிகை சிறியவர் செய்த பிழையைப் பெரியவர் பொறுத்தல் கடன் அல்லவோ என்று கூறி பிழைபொறுக்கவேண்டினாள்.

**"பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே அன்பால்**
**அழல்தரும் கடவுள் அன்னாய் முடிவு இதற்கு அருளுக என்ன**
**தழைத்து வண்டு இமிரும் தண்தார் தசரதராமன் என்பான்**
**கழல் துகள் கதுவ இந்தக் கல்உருத் தவிர்தி என்றான் (480)"**



அதைக்கேட்ட முனிவரும் கோபம் அடங்கி, அவள் தன்னிடம் பதிவிரதா தன்மை வழுவாமல் இருந்ததை நினைவு கூர்ந்து கருணைமீதூர,

"இராமன் என்ற இட்சுவாகு குலத்துப்பண்பாளனின் பாததூளி பட்டவுடன் அகலிகையே நீ பெண்ணாக மாறுதல் அடைவாய்" என்று கௌதமர் அகல்யைக்குச்சாப விமோசனம் தந்தார். அதைப்பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

**"கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல்துகள் கதுவ**
**உண்ட பேதைமை மயக்கு அற வேறுபட்டு உருவம்**
**கொண்டுமெய்உணர்வினன்கழல்கூடியதுஒப்ப**
**பண்டைவண்ணமாய்நின்றனள்மாமுனிபணிப்பான்.**

**(அகலிகைப். 471)**

ஸ்ரீராமனுடைய பாததூளி உன்மேல் படும்போது நீ மீண்டும் உன் பழைய வடிவத்தைப்பெறுவாய். நானும் இமயமலைநோக்கித் தவம் செய்யப்போகின்றேன் என்று கூறி புறப்பட்டுப்போய்விட, மங்களகரமாக விளங்கிய கௌதமர் குடில், மாசுபடிந்த, குடிலாக மாறிக்காட்சி அளித்துக்கொண்டிருந்தது. இந்த வரலாற்றை இராமனுக்கு விசுவாமித்திரர் கூறிவர, அக்குடிலையும் மூவரும் அடைந்தனர்.

**இராமன் கைவண்ணமும் கால்வண்ணமும் :**

காமுகன் இந்திரனால், கற்பிழந்த நிலையில் இருந்த அகல்யா, தன்னோடு உடலுறவு கொள்வது தன்கணவராகிய கௌதமர் இல்லை என்று தெரிந்து கொண்டபோதும், காமஇச்சையில் மூழ்கி, தன்னுடலையும், உள்ளத்தையும் கல்லாக்கிக்கொண்டு கூடியதால், கல்லாகிப்போகுமாறு சபித்தார் கௌதம ரிஷி.

கௌதமரின் குடிலுக்கு வெளியே அகலிகை ஒரு கல்லாகிப்போனால், அப்பகுதி ஒரு மேட்டுத்திடலாகவே காணப்பட்டது. விசுவாமித்திரர் கூறியனவற்றைக்கேட்ட ஸ்ரீராமன், அக்கல்லை மிதித்தபோது அது அகல்யாவாக மாறியது என்பர். பெரும்பாலும் இவ்விளக்கமே ஏற்புடையது

என்றாலும், பஞ்சப்பதிவிரதைகளில் ஒருத்தியான இவள் இவ்வாறு கிடந்தாள் என்பது பொருத்தமில்லை. அகல்யை அருவமாய் யார் கண்ணிற்கும் தெரியாமல் அக்குடிசைக் குள்ளேயே இருந்தாள். அகல்யையின் துன்பத்தை அறிந்த ஸ்ரீராமர் அவளுக்கு ஏற்பட்ட நிலைய நினைத்து ஏக்கப் பெருமூச்சுவிட்டார்!. பஞ்சபூதங்களில் ஒன்றான வாயுவிற்கு கால் என்று மற்றொரு பெயரும் உண்டல்லவா? எனவே, ஸ்ரீராமரின் கால், அதாவது மூச்சுக்காற்ரு அவள்மேல் பட்டதால் மீண்டும் தன்உருவத்தை அடைந்தாள் என்றும் விளக்கங்கள் தரலாம். இதுவும் பொருத்தமானது. அகல்யையின் பதிவிரதா தன்மையும் இதனால் பங்கப்படாது.

ஸ்ரீராமனின் திருப்பாதம் பட்டவுடன் மீண்டும் பெண்ணுருவாய், அழகியதோற்றத்துடன் நின்றாள் அகல்யை. அவளை அவ்வாறு மாற்றிய இராமனின் திருவடிப்பெருமையை நினைத்து மகிழ்ந்தார். அதே நேரத்தில் தாடகை வதையின்போது அத்தாடகையையும், பின்னர் பல்லாயிரக்கணக்கான அரக்கர்களையும், சுபாகுவையும் அழித்த இந்த இராமனுடைய கைவண்ணம் அதாவது தோள்ஆற்றல் இவை இரண்டாலும் ஈர்க்கப்பட்டவரான மகரிஷி விசுவாமித்திரர் வியப்படைந்து கூறுவதாய் அமைந்த கம்பரின் கவிநயத்தை உணர்த்தும்பாடல் இதோ!

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகுக்கு எல்லாம்**
**உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர்வண்ணம் உறுவ துண்டோ?**
**மைவண்ணத்து அரக்கி போரில்மழைவண்ணத்து அண்ணலே உன்**
**கைவண்ணம் அங்குகண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன். (481)**

என்பதாகும்.

கணவரின் சாபத்தால் எவர்கண்ணிற்கும் தெரியாமல் அருவநிலையில் கல்போன்ற இதயத்தோடு கிட்டத்தட்டச் சமாதி நிலையிலே இருந்தவளான அந்த அகலிகையின் மீது இராமர் இரக்கத்தின் பொருட்டு விட்ட ஏக்கப்பெருமூச்சு பட்டது. அதாவது இராமரின் கால் (மூச்சுக்காற்று) பட்டது. அதுபட்டவுடன் கௌதமர் கூறியிருந்த சாப விமோசனத்திற்கு



ஏற்றவாறு அவள் பாவங்கள் நீக்கப்பட்டதால் மீண்டும் தன் பழைய உருவைப்பெற்றாள் அகலிகை. உடனே தான்கூறியதிற்கு ஏற்ப கௌதமரும் அங்கே அப்போதே தோன்றினார். விசுவாமித்திரரின் வேண்டுகோளை ஏற்று இருவரும் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். பிரிந்திருந்த தவசியரின் வாழ்வில் மீண்டும் புத்துயிர் அளித்த வள்ளலான ஸ்ரீராமரைப்பார்த்து விசுவாமித்திரர் நின் கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன் என்று புகழந்தார்.

அதாவது தாடகை வதையின்போது ஸ்ரீராமரின் கைகள் செய்த அதிசயிக்கத்தக்க அஸ்திரப்பிரயோகத்தால் கூட்டம் கூட்டமாக அரக்கர் அழிந்தனர். அது இராமனின் கைவண்ணம். கையின் அற்புதச்செயல்பாடு. இங்கு அகலிகையின் துயர சரிதத்தைக்கேட்ட இராமன் பெருமூச்சு எறிந்தார். கால் என்றால் காற்று என்று பொருள். காலன் என்பவன் நம் உடலில் உள்ள அந்தக் காலை அதாவது உயிர்மூச்சினை உடலினின்றும் பிரிப்பவன் எனும் பொருளில் வழங்கி வருவதை அறிகின்றோம். எனவே கால் என்பதற்கு நம்முடைய அடிப்பகுதி உறுப்பான கால்கள் என்ற பொருளும் உண்டு. மூச்சுக்காற்று என்ற பொருளும் உண்டு. ஸ்ரீராமராகிய பெருமான் அகலிகையின் சோகமுடிவிற்கு இரங்கி பெருமூச்சு விட்டுக்கொண்டு அந்த ஆசிரமத்தின் உள்ளே நுழைந்தபோது அப்புனிதக்காற்றின் ஸ்பரிசம் தன்மேல் பட்டதால் கல்போன்று உணர்ச்சியற்ற நிலையிலே எவர் கண்ணிற்கும் தெரியாமல் ஏகாந்த நிலையிலே அருவமாய் இருந்தவளான அகலிகையின் சாபம் நீங்கியது. அவள்மீண்டும் பெண்ணானாள். என்பதே இக் கவிதை வரியின் பொருள் என்பதை இங்கு யான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஆக அகலிகைக்குப் புனர்ஜென்மம் கொடுத்த பெருங்கடவுள் ஸ்ரீராமர் என்பதை இங்கேயே பதிவு செய்துள்ளனர் வால்மீகியும் கம்பரும்.! அகலிகையின் வரலாற்றை மட்டுமல்லாமல் வேறு பல அரசர்களின் சிறப்புகளையும் வரலாற்றையும் இருவருக்கும் கூறிக்கொண்டே விதேக நாட்டின் எல்லையை அடைந்தனர். விசுவாமித்திரர்

கூறிச்சென்ற கதைகளுள் அவரைப்பற்றிய கதையும் இடம்பெற்றிருந்தது என்பதும் அறியத் தக்கது.

**மிதிலைப் படலம் அல்லது சீதாராமர் கல்யாணப்படலம் : ஸ்ரீராமனின் தோள்வண்ணச் சிறப்பு :**

விதேகநாட்டின் (வைதேகம்) தலைநகராக விளங்கிய மிதிலையில் நடைபெற்ற நிகழ்வுகளைக்கூறுவது ஆகையால் மிதிலைப்படலம் என்றும் இங்கு மிகமுக்கிய நிகழ்வான சீதாராமரின் திருமணம் நடைபெறுவதையும் கூறுவது ஆகும்.

மிதிலையை நோக்கிச்சென்ற ஸ்ரீராமமரை "உன்தேவியான மஹாலட்சுமி இங்கேதான் இருக்கின்றாள். உன்னைப்பிரிந்த அவள், உன்நினைவால் ஏங்கித்தவித்துக்கொண்டு, உன்னை மீண்டும் அடைவதற்கான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாள். எனவே நீ விரைந்து வருக, வந்து வில்லை ஒடித்து உன் தேவியை மீண்டும் அடைவாய் வருக வருக!!" என்று மிதிலா நகரத்து கோட்டை வாயிற் கொடிகள் வரவேற்றனவாம்.

இராமலக்குவனர்கள் மிதிலை நகரத்திற்குள்ளே நுழைந்து அவற்றின் வீதிகள் வழியாக விசுவாமித்திரரோடும் நடந்து சென்றனர். இராம லட்சுமணர்கள் மிதிலையின் நகரத்தே சென்றபோது கன்னிமாடத்திலே தோழியர்கள் புடைசூழ நின்ற சீதாதேவி ஸ்ரீராமனைக்கண்டாள். ஸ்ரீராமனும் சீதையைக் காண,, இருவர்கண்களும் சந்தித்தன. பல கதைகளைப் பேசிக்கொண்டனவாம் அக்கண்கள். இக்காட்சியைக் கம்பன் கவிநயத்தில் காண்போம்.. இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் காணுதல்.

**"எண்ண அரு நலத்தினாள் இணையள் நின்றுழி**
**கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"**

**[மிதிலை காட்சிப்படலம்]. 519**



**"கண்ணொடு கண்ணினை நோக்கோக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனு மில "**

என்னும் திருக்குறளின் நயமும் இங்கு அறிந்து இன்புறத்தக்கது.

அதாவது, அகலிகையின் சாப விமோசனத்திற்குப் பிறகு விசுவாமித்திரர் இருவரையும் மிதிலா நகருக்கு அழைத்துப்போனார். அந்த மிதிலா நகரமானது தற்போது நேபாளத்தில் உள்ளது.

விதேகநாட்டின் தலைநகரமான மிதிலா ஜனகனால் ஆளப்பட்டுவந்ததால் ஜனகபுரி என்றும் அழைக்கப்பட்டது. அந்த ஜனகபுரி தற்போது பீகார் மாநிலத்தின் எல்லையில் உள்ளது. சீதாமரி என்றபெயரோடு தர்பங்கா மாகாணமாக உள்ளது...

தற்போது இங்கு அழகிய குளம் ஒன்று உள்ளது. அங்கிருந்து 48.கி.மீ. தொலைவில் ஜனகனின் யக்ஞபூமி இருக்கின்றது. தற்போது திரிகூடம் என்று அழைக்கப்படும் இடம் இது. சீதை கிடைத்த இடம். பிட்டூர் என்னும் இடத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு சானகிமந்திர் என்ற அழகிய பெரிய கோயில் உள்ளது. இங்கு, ஸ்ரீராமர், சீதை திருவுருவச்சிலைகள் இன்றும் கண்ணைக்கவரும் வண்ணச்சிற்பங்களாக உள்ளன. புனிதப்பயணம் மேற்கொண்டு செல்லும் யாத்ரிகர்கள் தரிசனம் செய்து கொள்ளலாம்.

மேலும், இங்குள்ள ச்சீஸ் மகால் என்ற கண்ணாடி மாளிகையில் தசரதன், தனது புதல்வர்களோடும் தமது மனைவியரோடும் அமர்ந்திருக்கும் உருவங்கள் அழகுடன் காணப்படுகின்றன.

ஸ்ரீராமர் வில்லை (சிவதனுசை) உடைத்தபோது அத்தனுசு முறிந்து விழுந்ததாகவும் கூறப்படுகின்றது. இச்சுயம்வரப் பகுதி தற்போது தனுசா என்றே அழைக்கப்படுகின்றது. (தனுசு முறிந்து விழுந்த இடம்). இது ஜானகி மந்திர இடத்திலிருந்து 20.கி.மீ. தொலைவில் உள்ளது.

ஜனகன் யாகம் செய்ய பூமியை உழுதபோது கிடைத்தவள் ஆகையால் சீதா என்றழைக்கப்பட்டு, செல்வச்செழிப்புடன் வளர்க்கப்பட்டாள்! இதற்கு முன்பிறவியில் ஒரு ரிஷிமுனியின் மகளாக வளர்ந்திருந்த வேதவதியை இராவணன் சீரழிக்க நினைத்தபோது, தீயில் பாய்ந்து தன் உயிரைப்போக்கிக் கொண்டாள் வேதவதி. அப்போது அவள், “இரத்த சம்பந்தம் இல்லாமல் தோன்றி உன் அரக்க குலத்தை அழிக்க மூலகாரணம் ஆவேன்.” என்ற சாபம் கொடுத்தாள்.

மகாலட்சுமியின் அம்சமாக இருந்த அவளே தற்போது சீதாவாக வளர்ந்து வருகிறாள். இப்போது மிதிலா நகரத்தில் ஜனகனுக்கும் சுணைனாவிற்கும் மகளாக வளர்ந்து வந்தாள்.

யாக பூமியின் உழுபடைசாலில் இருந்து சீதை கிடைத்த பிறகு, ஜனகருக்கும் சுணைனாவிற்கும் மகளாகப்பிறந்தவள் ஊர்மிளை. இலக்குவன்மனைவி. எனவே இராமன் மிதிலைக்குள் விசுவாமித்திரரோடு சென்றபோது தன் மனைவியான மகாலட்சுமியின் அம்சமாகத்தோன்றிய சீதாவையே கன்னிமாடத்தில் கண்டார். மேலும், சீதைக்கு ஆறு வயதும், ஸ்ரீராமனுக்குப் பன்னிரண்டு வயதும் நிரம்பி இருந்தபோதே இந்த நிகழ்ச்சிகளும், அதைத்தொடர்ந்து ஸ்ரீசீதாராம கல்யாணமும் நடந்தது என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். எனவே காதல் எண்ணம் தோன்றாத பருவம் அவர்களின் அந்த வயது. எனவே இராமன் சீதாவைப்பார்த்ததும், சீதா இராமனைப்பார்த்து அன்புற்றதுமாகிய இந்த நிகழ்வு, தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் தலைவன், தலைவி பாவத்தில் ஏற்பட்டது அன்று. தன் துணைவியான மகாலட்சுமியைப் பன்னெடுங்காலம் பிரிந்திருந்து இப்போது பார்த்ததால் இத்தகைய நிலை ஏற்பட்டது. எனவே இது தமிழ் அகத்துறை காதல்நிலை அன்று.

இவ்வாறாக, அந்த மாலைக்காலத்தே மிதிலையின் அற்புதத் தோற்றத்தைக் கண்டவாறே ஸ்ரீராமர் சென்றார். மூவரும் சனகரைக் கண்டனர். தன்வளர்ப்பு மகளான சீதையின் சுயம்வரம் குறித்து ஓலை அனுப்பி இருந்த அந்நாட்டு அரசன் சனகன் (ஜனகன்) விசுவாமித்திரரைப்பார்த்துப் பெரிதும் மகிழ்ந்தார்.



விசுவாமித்திரரோடு இருந்த அரசகுமாரர்களைப் பார்த்த சனகனுக்கு அவர்கள் யார் என்பது தெரியாததால் அவர்களைக்குறித்து அறிந்துகொள்ள விரும்பினார். அதற்கு முனிவர் இவர்கள் இருவரும் பேரரசனாகிய தசரதனின் புதல்வர்கள் என்று சொல்லி அவர்கள் தன்னோடு தாடகா வனம் வந்ததையும் யாகத்தைக்காத்ததையும் குறிப்பாக ஸ்ரீராமனின் அஸ்த்திர சஸ்த்திர போர்முறையையும் எடுத்துரைத்தார். அதுமட்டுமன்றி அகலிகையின் சாபவிமோசனத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

இருவரையும் அதிலேயும் ஸ்ரீராமனைக் கண்ணாரக் கண்டு அவனுடைய அழகையும், தெய்வீக அம்சமான அவனது திருவுருவத்தையும் கண்டு பெரிதும் ஆனந்தம் கொண்டார் ஜனகமன்னர். இத்தகையவன் சுயம்வரத்தில் பங்கேற்று, சிவ தனுசை நாணேற்றி தனக்கு மருமகனாக வருவானா ? வந்தால் நலம் பலவும் ஏற்படுமே என்று நினைத்தான் ஜனகன். அவனுடைய எண்ணத்தைக் குறிப்பால் அறிந்த விசுவாமித்திரர் இந்த இராமனுடைய குலம் வைவஸ்வத மனுவை முதல்வனாகக்கொண்ட சூரிய குலத்தில் தோன்றிய இட்சுவாகு குலமாகும் என்று கூறி அந்த இராமனுடைய குலமுறையைக்குறிப்பிட்டுக்கொண்டு வந்து, இவர்கள் தற்போது அயோத்தியின் அரசனான தசரதனின் புதல்வர்கள் என்று கூறிமுடித்தார்.

மேலும், “இவ்வீரர் வேள்வி காணிய வந்தார். உன் வில்லும் காண்பார்” என்றும் தன் உள்ளக்கருத்தையும் வெளிப்படுத்தினார் விசுவாமித்திரர்.

**ஜனகரின் எண்ணமும் தவிப்பும் :**

அப்போது இத்தகைய வீரனும் அழகனும் திவ்வியபுருஷனுமான இராமன் சீதைக்கு மணமகனாக வந்தால் நன்றாய் இருக்குமே என்று எண்ணினான் சனகன். அதற்காக சிவதனுசை நாணேற்றும் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றால் நன்றாக அமையுமே என்றும் நினைத்தாராம்.

அதைக்குறிப்பால் உணர்ந்து வீரர்கள் என் வேள்வி காத்திட வந்தார். நின் வில்லும் காண்பர் என்றார் விசுவாமித்திரர்.

இராம இலக்குவனரை இன்னார் என்று சனகனுக்கு விசுவாமித்திரர் அறிமுகம் செய்யும் இப்பாடற்கருத்தையும்.

**இருந்த குலக்குமரர்தமை இருகண்ணும்**
**முகந்து அழகு பருக நோக்கி**
**அருந்தவனை அடி வணங்கி யார் இவர்கள்**
**உரைத்திடுமின் அடிகள் என்ன**
**விருந்தினர்கள் நின்னுடைய வேள்வி**
**காணிய வந்தார் வில்லும் காண்பார்**
**பெருந் தகமைத் தயரதன் தன் புதல்வர் என**
**அவர் தகமை பேசலுற்றான். (585).**

ஸ்ரீராமன் குலப்பெருமையை சனகனுக்கு விசுவாமித்திரர் கூறிய பின்வரும்பாடற் கருத்தையும் மேலும் விளக்கமாய்க் கொள்ளவேண்டும்.!

**"தூநின்ற சுடர் வேலாய் அனந்தனுக்கும் சொலற்கு அரிதேல**
**யான்இன்று புகழ்ந்து உரைத்தற்கு எளிதோ ஏடு அவிழ் கொன்றைப்**
**பூநின்ற மௌலியையும் புக்கு அளந்த புனற்கங்கை**
**வான் நின்று கொணர்ந்தானும் இவர்குலத்து ஓர் மன்னவன் காண்."**
**(குலமுறை கிளத்து படலம். 594)**

என்னும் பாடலால் ஆகாசகங்கையாய் இருந்த புனித கங்கையை பூலோகத்திற்கும், பாதாள லோகத்திற்கும் கொண்டு வந்து இக்கங்கைக்கு முறையே பூலோக கங்கை, பாதாள கங்கை என்ற பெயர்களும் ஏற்படக்காரணமாய் இருந்து, தன்னுடைய முன்னோர்களுக்கு சொர்க்கப்பதவியைக் கொடுத்தவன் இவர்களின் குலத்து முன்னோன் என்று குறிப்பிட்டு, பகீரதன் பற்றியும், அவன் முயற்சியையும், வெற்றியையும் இதில் விசுவாமித்திரர் எடுத்துரைக்கின்றார்.

ஆனால் சிறந்த பாரம்பரியத்தை உடையவன் என்றாலும், பலதார மணமுடையவன் தசரதன் ஆகையால், அத்தகைய ஒருவனின் புத்திரனும் பலதாரமணத்தில் விருப்பம்கொண்டிருந்தால் தன்மகளின் நிலை சிறப்புற அமையாது என்பதால் வெறுப்புடன் முகம்சுளித்தானாம் அரசன். அப்போது இவனைக் குருகுலத்தில் வளர்த்து ஆலாக்கியவர் வசிஷ்டர் ஆகையால் குருவைப்போல ஏக தார விரதன்! அதாவது ஒரேயொரு மனைவியோடு வாழ விரும்பும் அருங்குணத்தையும் ஒழுக்கத்தையும் உடையவன் இராமன் என்பதையும் உய்த்துணரவைத்தார். அதனால் ஜனகமகாராஜனின் ஐயத்தையும் போக்கினார் விசுவாமித்தரர்.



**ஆசாரியன் வளர்ப்புத் தந்தை எனல் :**

**திறையோடும் அரசிறைஞ்சும் செறிகழற்கால் தசரதன் ஆம்**
**பொறையோடும் தொடர்மனத்தான் புதல்வர் எனும் பெயரே காண்**
**உறையோடும் நெடுவேலாய் உபநயன விதி முடித்து**
**மறை ஓதுவித்து இவரை வளர்த்தானும் வசிட்டன் காண்.**
**பாடல் (609).**

என்று விசுவாமித்திரர் கூறியதைக் கேள்வியுற்ற பிறகு ஜனகனின் முகம் மலர்ச்சி அடைய இத்தகைய மாவீரனே தனக்கு மருமகனாக வருதல்வேண்டும் என்று இறைஞ்சினான் அரசன். இந்தச் சனகனால், சுயம்வரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டதான இந்த தனுசு, விஸ்வகர்மாவால் உண்டாக்கப்பட்டது. விஸ்வகர்மா ஒருமுறை சிவதனுசு விஷ்ணுதனுசு என்ற இரண்டை உண்டாக்கினார்.

இவற்றைச் சிவனும் விஷ்ணுவும் பயன்படுத்தி வந்ததால் முறையே அவ்வப்பெயர்களால் அழைக்கப்பட்டன. இந்த இரண்டில் எது சிறந்தது? என்று தேவர்கள் பிரம்மாவிடம் வினவினார்கள். அதற்கு பிரம்மதேவன், சிவன் விஷ்ணு ஆகிய இருவரும் போரிட வேண்டும். வெற்றி பெறுபவரின் வில்லே உயர்ந்தது. என்று கூறியதால் இருமூர்த்திகளுக்கும் போர் நடைபெற்றது. போரில் சிவதனுசு வின்னம் ஏற்பட, மீண்டும் தயார்செய்துபோரிட சிவன் விரும்பினார். ஆனால் மேலும் போரிட நினைக்க வேண்டாம் என்று அனைவரும் வேண்டிக்கொண்டதால் போர் நிறுத்தப்பட்டது. அப்போது சிவபெருமான் தன்னுடைய தனுசை இந்திரனிடம் ஒப்படைத்தார்.

விஷ்ணு தன்னுடைய தனுசை (வில்லை) இரிசிகன் என்ற மாமுனியிடம் ஒப்படைத்தார். அதன் பிறகு அந்தத் தனுசு அவர்மகனான ஜமதக்கினி முனிவரிடமிருந்து, தற்போது அவருடைய மகனாகிய பரசுராமரிடம் இருந்தது. இந்திரனிடம் ஒப்படைக்கப்பட்ட வில்லே, தற்போது சிவதனுசு என்னும் பெயரோடு ஜனகரிடம் இருந்தது.

கௌதம முனிவரின் மகனான சதானந்தர் என்னும் முனிவர் ஜனகமன்னனின் குலகுருவாக இருந்தார். அவர் முன்னிலையிலும், மற்ற அனைத்து நாட்டு அரசர்கள் ஆகியோர் முன்னிலையில் இந்த வில்விழா நடைபெற்றது. அடுத்தநாள் காலையில் சீதாவின் சுயம்வரத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிகச்சிறப்பாகச் செய்யப்பட்டன. பல ஆயிரம்பேர் சேர்ந்து தூக்கி வந்து மண்டபத்தில் வைத்த அத்தனுசை தூக்கி எடுத்து நாண் ஏற்றிட சுயம்வரத்திற்கு வந்த பல நாட்டு அரசர்களும், அரச குமாரர்களும் முயற்சிசெய்தனர். பலபேரால் அதை அசைக்கவும் முடியவில்லை. தோற்றுப்போன பலரும் அகமும் முகமும் சோர்ந்து போக அசைவற்று உட்கார்ந்திருந்தனர். ஆனால் ஸ்ரீமந்நாராயணனின் அம்சமாக ஸ்ரீராமன் என்னும் தசரதபுத்திரனாய், ஸ்ரீராமனாய் திரு அவதாரம் செய்தவர் பெருமான். ஆகையால் தன் அவதார நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டும், முன்பிறவியில் சீதை இராவணனுக்குக் கொடுத்த சாபம் நிறைவேறும் பொருட்டுமாக தனுசு மண்டபத்திற்குச் சென்றார். பல்லாயிரக்கணக்காண மல்லர்கள் தூக்கிவந்து வைத்ததான அந்த வில்லை மிகவும் அநாயாசமாக எடுத்து நாண் ஏற்றிட்டான் இராமன். ஆயின் அதன் தாக்கத்தைத் தாங்கமுடியாமல் அத்தனுசானது படீர் என்று உடைந்து, பேரொலி எழுப்பி எண்டிசையும் அதிர வைத்தது.

**"தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்**
**மடுத்ததும் நாண் நுதி வைத்ததும் நோக்கார்**
**கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்**
**எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்."** **(கார்முகப்படலம். 648)**



ஸ்ரீராமன் அந்த வில்லைக் கையில் எடுத்ததைத்தான் சுற்றி இருந்தவர்கள் கண்டார்கள். அதை இராமன் எடுத்தது எப்போது, அதை நாணேற்றியது எத்தருணத்தில், நடந்தது என்னவென்று யாரும் அறியாத முன்னரே அவ்வில்லானது பெருத்த ஓசையுடன் முறிந்து விழுந்தது என்ற கவிநயம் கம்பனுக்கே உரியது அன்றோ?

மேலும் இந்த வில் முறிந்து விழுந்தபேரொலியானது அயோத்திவரையில் கேட்டதாக தசரதமன்னன் கூறியதாகவும் அறிகிறோம். மகேந்திர மலையில் இருந்த பரசுராமருக்கும் இப்பேரோசை கேட்டதனாலேதான், பரசுராமரும் இராமனைக் காணவந்தார் என்பதையும் பின்னர் அறிகிறோம்.

**வெற்றிவேல் மன்னவன் தக்கன் வேள்வியில்**
**கற்றை வார்சடை முடிக் கணிச்சி வானவன்**
**முற்ற ஏழ் உலகையும் வென்ற மூரி வில்**
**இற்றபேர் ஒலிகொலாம் இடித்தது ஈங்கு என்றான்.**

**(எழுச்சிப்படலம். 685)**

ஆக சீதாவின் சுயம்வரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போட்டியில் ஸ்ரீராமர் வெற்றிபெற்றதால் முறைப்படி தன் மகளை இராமனுக்குத் திருமணம் செய்விக்க நினைத்த ஜனகன் தனது எண்ணத்தையும், அதைநிறைவேற்ற தசரதன் வருகையும் தேவை என்பதறிந்து, தனது நாட்டிற்கு வருமாறு முறைப்படி ஓலை அனுப்பினான் ஜனகன். தசரதனின் புதல்வர்களும், முனிவரும் பிரத்யேகமான முறையில் கவனித்துக் கொள்ளப்பட்டனர்.

**தசரதன் மிதிலா பயணம் :**

தனது நாட்டிற்கு வந்த மிதிலை நாட்டின் தூதுவர்கள் கொண்டு வந்த ஓலைச்செய்தியின் வாசகத்தை உணர்ந்த தசரதன் தன் நால்வகைப்படைகளோடும் மூன்று மனைவியரோடும் வசிஷ்டரின் தலைமையிலான பல அந்தணர்களோடும் பொதுமக்கள் வெள்ளத்தோடும் மிதிலையை நோக்கிப்பயணமானார். அப்படைகள் மிதிலையை

அடைவதற்குள் செய்த பல்வேறு வர்ணனைகள் காவியப்போக்கில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மிதிலைக்குச் சென்ற தசரதன் படைப்பெருக்கம் பற்றியும், அப்படையினரோடு அருந்ததியின் கணவனான வசிஷ்டன் முத்துப்பல்லக்கில் சென்றான் என்றும், வழியில் இருந்த சந்திர சயிலம் பற்றிய சந்திர சயிலப்படலம் மற்றும் வரைக்காட்சிப்படலம் ஆகியன முழுக்க முழுக்க இயற்கை செயற்கை வளத்தை உடையனவாக இருந்ததை வர்ணனைகள் மூலம் விளக்குகின்றார் கம்பர். மேலும் மானுட மடங்கல் என்னத்தோன்றினான் வெய்யோன் என்று சூரியோதயத்தையும், பின்னர் இரவுப்போதில் வீசிய நிலவொளியையும் அழகுபடக் கூறியுள்ளார்.

தனது நாட்டை நோக்கிவரும். தசரதனை எதிர்கொண்ட சனகன் சேனை எங்கும் புழுதிப்படலம் தோன்றுமாறு சென்றதாம்.

**சூழுமா கடல்களும் திடர்பட துகள் தவழ்ந்து**
**ஏழு பாரகமும் உற்றுளது எனற்கு எளிது ஆரோ**
**ஆழியான் உலகு அளந்த அன்று தாள் சென்ற அப்**
**பூழைஊடேபொடித்து அப்புறம்போயதே.**
**(எத்ரிகொள்படலம். 987)**

தன் தந்தையான தசரதன் மிதிலைக்குள் பிரவேசிப்பதை உணர்ந்த ஸ்ரீராமர் தன்னைச்சிறப்பாக அலங்காரம் செய்து கொண்டு இலக்குவனோடு தந்தையை எதிர் கொண்டழைக்கச் சென்றார். பரத சத்துருக்கனரையும் தாய்மார்களையும் கண்டு ஆசிபெற்று அவர்களோடு வந்த ஸ்ரீராமனின் அழகை மிதிலையின் மக்கள் கண்டு ரசித்தனர். தங்கள் இளவரசிக்குக் கிடைத்த அந்தப் பேரழகனின் அழகைக்கண்டு வியந்தனர்.

தன் தந்தையோடும், சேனைகளோடும் வந்தவனான பரதன். தன்னைப் பணிந்தபோது பரதனை இராமன் தழுவிக்கொண்டான். எங்கும் பேரானந்தம் எதிரொலித்தது.



**உன்னுபேர் அன்பு மிக்கு ஒழுகி ஒத்து ஒண் கண் நீர்**
**பன்னு தாமரைகள் தர தொழுது எழும் பரதனை**
**பொன்னின் மார்பு உற அணைத்து உயிர் உறப் புல்லினான்**
**தன்னை அத்தாதை முன் தழுவினான் என்னவே. (1001).**

தங்கள் இளவரசியின் மணாளன் ஆகப்போகும் ஸ்ரீராமனை அனைவரும் வைத்தகண் வாங்காமல் நோக்கி அவனது அழகைக்கண்டு ரசித்தார்களாம்.

கூட்டத்தில் இருந்தவர்களின் நிலையாகக் கம்பர் கூறும் கவிநயப்பாடல்

**“தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன**
**தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைக் கண்டாரும் அஃதே**
**வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்**
**ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவுகண்டாரை ஒத்தார்.”**
**(பாடல். 1028)**

தசரத சக்கரவர்த்தி சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டார். அனைவரும் பெருமகிழ்வோடு அரண்மனை அடைந்தனர். அனைவரும் ஓய்வெடுத்தபின்னர், தசரத மன்னன் அக்காலத்திலிருந்த குலமுறை வழக்கப்படி தனது குலத்தின் பெருமையை வசிஷ்டர் மூலம் எடுத்துரைத்தார்.

**பாரம்பரியம் எடுத்துரைத்தல் :**

இப்பரம்பரையில் வந்த இட்சுவாகு பிரம்ம லோகம் வரை சென்று ஸ்ரீரங்கநாதரின் விக்கிரகத்தை வாங்கி வந்து அயோத்தியில் பிரதிஷ்டை செய்த பெருமைக்கு உரியவராய் இருந்ததால் இட்சுவாகு குலம் என்னும் பெருமையையும் பெற்றது என்று கூறிவந்தார். இடையில் மாந்தாதா புகழ். கடைசியில் அயன் என்ற அரசன் அயோத்தியை ஆள அவருடைய புதல்வராக தசரதரும் அவரின் புதல்வராக ஸ்ரீராமரும் மற்ற மூன்று குமாரர்களும் அவதரித்துள்ளனர் என்று குலமுறையை எடுத்துரைத்தார் வசிஷ்டர். ஜனகரும் சபையோருக்குத் தன்னுடைய நிமி குலத்தைப்பற்றி

எடுத்துரைத்தார். சபையோர்கள் மகிழ திருமணம் உறுதி செய்யப்பட்டது.

அப்போது சீதையைக் கண்ட வசிஷ்டர், தாமரைமலரில் குடியிருப்பவளான ஸ்ரீமகாலட்சுமியே சீதாவாக வந்துள்ளாள் என்று உறுதிசெய்து மகிழ்ந்தார்.

**"எங்கள் செய் தவத்தினில் இராமன் எனவந்தோன்**
**சங்கினொடு சக்கரமுடைத் தனி முதற் பேர்**
**அம் கண் அரசு ஆதலின் அவ் அல்லிமலர் புல்லும்**
**மங்கை இவள் ஆம் என வசிட்டன் மகிழ்வுற்றான்." (1095).**

சீதையின் பேரழகைக்கண்ட விசுவாமித்திர முனிவர் பின்வருமாறு வியப்புடன் கூறினார். சிலைபோலும் அழகிய இந்தச் சீதையை அடைவதற்காக, சிவதனுசு என்ற ஒருசிலை (தனுசு,வில்) என்ன? ஸ்ரீராமன் ஏழுமலைகளையும் பொடிப்பொடி ஆக்குவானே! என்றார்.

**"அச்சு என நினைத்த முதல் அந்தணன் நினைத்தான்**
**பச்சை மலை ஒத்த படிவத்து அடல் இராமன்**
**நச்சுடை வடிக்க கண்மலர் நங்கை இவள் என்றால்**
**இச்சிலைகிடைக்க மலைஏழையும் இறானோ ?" (1099)**

எனவே மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமருக்கும் மகாலட்சுமியின் அவதாரமான ஸ்ரீ சீதாதேவிக்கும் பங்குனிமாத உத்திரம் நட்சத்திரத்தில் திருமணச் சடங்குகள் நடைபெற்றது. சீதாவை இராமனுக்குத்தாரை வார்த்துத் தந்தான் ஜனகன். சுற்றி நின்ற அனைவரும் லாழ்த்தொலி கூறினர். இராமன் சீதையின் கையைப்பற்றி தீ வலம் வந்தான். சீதை அம்மி மிதித்து அருந்ததி கண்டாள்! வேதம் வல்ல அந்தணர்கள் முறைப்படி செய்த அந்தத் திருமணநிகழ்வானது இனிதே நிறைவுற்றது. இருவரும் பெரியோர்களையும், முனிவர்களையும், சீதை தனது மூன்று மாமியார்களையும் அடிபணிந்து வணங்கினாள்! பின்னர் இருவரும் பள்ளி சேர்ந்தனர்.

திருமணத்தின்போது சீதாதேவியின் கரம் பற்றிய இராமன் சீதையிடம் தந்த உறுதிமொழியைக் கடைசிவரையில்



காப்பாற்றினான் என்பது போற்றுதலுக்கு உரியது. அதாவது அந்தப்பிறவியில் சீதாதேவியைத்தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனத்தாலும் கூட நினைத்துப்பார்க்கமாட்டேன் என்று கொடுத்த வாக்கினைக் கடைப்பிடித்த தர்மசீலன் இராமன் என்பதையும், ஏகபத்தினிவிரதன் என்பதையும் அறிந்து மகிழ்கின்றோம். அதைப் பாரதநாட்டு ஆடவர் அனைவரும் கடைப்பிடித்தால் நம் நாட்டினுடைய பாதி இன்னல்கள் அகன்றுபோகும்.

**இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் :**

என்ற செவ்வரத்தை ஸ்ரீராமன் சீதைக்குக் கொடுத்தான் என்பதை சுந்தர காண்டத்தில் சீதாதேவி நினைந்து கூறும் உள்ளத்தை உருக்கும் செய்தியாக அமைந்துள்ள பாடலில் இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

ஸ்ரீசீதா ராமன் இவர்களின் திருமணத்தோடு, சீதாவின் தங்கையான ஊர்மிளைக்கும் இலட்சுமணனுக்கும் திருமணம் நடைபெற்றது. அதாவது சீதாவை உழுபடைசாலில் கண்டெடுத்து சனகன் வள்ர்த்துவரும்போது, சனகருக்கும் சுணைனா என்ற அவர்மனைவிக்கும் மகளாகத்தோன்றியவள் இந்த ஊர்மிளை.! சனகரின் தம்பியான குசத்துவனின் மகளான மாண்டவிக்கும் பரதனுக்கும் மாண்டவியின் தங்கையான சுருதகீர்த்திக்கும் சத்ருக்கனனுக்கும் இனிதே திருமணம் முடிவுற்றது.

இத்திருமணத்தின்போது இராமன் சீதயாகிய ஜானகியின் கையைப்பற்றித் தீவலம்வந்து திருமணம் செய்துகொண்டதையும், அம்மி மிதித்து அருந்ததியைக்கண்டு, மணம் புரிந்துகொண்டதுமான அக்காலத்திய வழக்கம் கூறப்பட்டுள்ளது. ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றான தீயை வலம் வந்து, கூடியிருந்த சான்றோர்களையும், அக்னி பகவானையும் சாட்சியாக்கி முறைப்படி இவர்களின் திருமணம் நடைபெற்றதைப் பின்வரும் பாடல்களால் அறியலாம்!

இராமன் தனது தடக்கையால், சீதையின் மலர்போன்ற மென்மையான கையைப்பற்றினான் என்பதைப் பின்வரும் பாடலாலும்,

**வெய்ய கனல் தலை வீரனும் அந்நாள்**
**மை அறு மந்திரம் மும்மை வழங்கா**
**நெய் அமை ஆவுதி யாவையும் நேர்ந்தே**
**தையல் தளிர்க் கை தடக்கை பிடித்தான். (1195).**

**வலம் கொடு தீயை வணங்கினர் வந்து**
**பொலம் பொரி செய்வன செய்பொருள் முற்றி**
**இலங்கு ஒளி அம்மி மிதித்து எதிர்நின்ற**
**கலங்கல் இல் கற்பின் அருந்ததி கண்டாள். (1197).**

என்ற மேற்கண்ட பாடலால் சீதா, இராமன் ஆகியோரின் திருமண நிகழ்வாகிய மணவினையின்போது புனிதத்தீயை வலம்வந்து, சீதா அம்மி மிதித்து, அருந்ததி கண்டாள் என்பதும் கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த மணவினை நடைபெற்றநாள் பங்குனிமாதத்தின் உத்தரநட்சத்திரம் கூடிய சுபயோக சுபநாள் என்பதைப் பின்வரும் பாடலால் உணர்த்தியுள்ளார் கம்பர்.

**பங்குனி உத்தரம் ஆன பகற்போது**
**அங்க இருக்கினில் ஆயிர நாமச்**
**சிங்கம் மணத்தொழில் செய்த திறத்தால்**
**மங்கல அங்கி வசிட்டன் வகுத்தான்**

இவற்றால் பண்டைக்காலத்தில் நமது பாரத தேசத்தினரின் பண்பாட்டுக் கலாச்சார சிறப்புகளையும், திருமணவிழாவின்போது கடைப்பிடிக்கப்பட்ட சாஸ்திர சம்பரதாயங்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலும், ஸ்ரீஇராமனுக்கும், சீதாவிற்கும் திருமணம் நடந்தபோது இராமனுக்குப் பன்னிரண்டு வயதும், சீதாவிற்கு ஆறு வயதும் நிரம்பியிருந்தது.! திருமணம் இந்தவயதிலா என்ற சந்தேகம் தோன்றலாம்.? ஆம் அவ்வயதில்தான் அக்காலத்தில் அனைவருக்கும் உரிய திருமணவயதாக நிச்சயிக்கப்பட்டு



திருமணங்கள் நடைபெற்றன என்பதை அறிகிறோம். ஆம் பாலவிவாகம் அல்லது பால்யவிவாகம். என்ற இளம் வயதுத் திருமணமே அக்காலத்தில் வழக்கத்தில் இருந்ததற்கு இது உதாரணம் ஆகும்.

எனினும் திருமணமாகி பல ஆண்டுகளுக்குப் பிறகே, அதாவது திருமணம் செய்துகொண்டவர்கள், இல்லறவாழ்க்கையின் சுகத்தை அனுபவிக்கத்தக்க வயதும் அனுபவமும் பெற்ற பிறகே அவர்கள் முறையே இருபத்து நான்கு வயதினையும், பதினெட்டு வயதினையும் அடைந்த பிறகே இல்லற சுகத்தை ஏற்று நடத்தும் கிருகஸ்தர்களாக ஆக்கப்படுவர். இடைப்பட்ட இக்காலப்பகுதிகள் தம்பதியர்கள் ஒருவரை மற்றொருவர் நன்றாகப்புரிந்து கொள்வதற்குக் கொடுக்கப்பட்ட கால அவகாசம் ஆகும்.

பண்டைப் பாரதத்தின் கலாச்சாரம் இதனால் அறியப்படுகின்றது. திருமணத்தின்போது கன்னிகாதானம் தரும் மணமகளின் பெற்றோர் பெண்ணும் ஆணும் தகுந்த வயதை அடைகின்றபோதே இல்லறவாழ்க்கையில் ஈடுபடுத்தப்படுவர். நல்ல நாளில் பெற்றோர் தன் மகளின் கற்பை மணமகனுக்கு தானம் செய்வர். இதுவே கற்பு தானம் செய்தல் என்னும் புனித நிகழ்வாக அக்காலத்தில் செய்யப்பட்டது. கற்புடைப்பெண்ணின் கருப்பையில் ஆண்மகனது கருவானது சேர்க்கப்படுவதற்கான ஒரு புனிதச் சடங்கு ஆதலால் இது கர்பதானம் என்றும் அழைக்கப்பட்டது.

**பரசுராமர் படலம். (தாள்வண்ணம் சிறப்பு)**

ஸ்ரீமந் நாராயணன் எடுத்த பத்து அவதாரங்களுள் இரண்டு அவதாரங்கள் இரட்டை அவதாரங்கள் என்று அழைக்கப்படும். அவை ஸ்ரீராமர், பரசுராமர்; ஸ்ரீபலராம, கிருஷ்ணர் அவதாரம் ஆகும். இந்த இரண்டும் ஒரே காலக்கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றோடு ஒன்று தொடர்புடைய, சந்தித்துக்கொண்ட அவதாரங்கள் ஆகையால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. பரசுராம ஸ்ரீராம அவதாரத்தில் ஸ்ரீராமனை எதிர்த்து வாக்குவாதம் செய்து இவருடைய

வீரத்தைப்பரிசோதித்த பரசுராமர் ஸ்ரீராமரின் உண்மைத்தன்மையை அதாவது அவரே ஸ்ரீமகாவிஷ்ணுவாகிய பரம்பொருள் என்பதை அறிந்து தான் சேர்த்து வைத்திருந்த தவத்தின் பயனை எல்லாம் ஸ்ரீராமருக்கு அர்ப்பணம் செய்த கதைப்பகுதியைக் கூறுவது ஆகையால் இது பரசுராமர் படலம் என்று அழைக்கப்படுகின்றது.

பரசு (பரஸ்) என்ற சொல்லிற்கு கோடரி என்று பொருளாகும். எப்போதும்கோடரியும் கையுமாகத்திரிந்து, எதிரிகளை அழித்ததால் பரசுராமர் என்று அழைக்கப்பட்டார். இவர் ஜமதக்கினி என்ற முனிவருக்கும் ரேணுகாம்பாள் என்ற அவருடைய மனைவிக்கும் மகனாக அவதரித்தவர். தன்னுடைய தந்தையைக் கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசன் குமாரர்கள் கொன்றுவிட்டார்கள். அதைக்கண்டு ரேணுகாம்பாள் புலம்பித் துடித்து தன்னுடைய வயிற்றில் 21 முறை அறைந்துகொண்டு துன்பம் அடைந்தாள். எனவே அரசகுலத்தைச்சேர்ந்தவர்களை 21 தலைமுறை கொன்று பழிதீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கொள்கையை உடையவராய் அவ்வாறே செய்து வந்தார். பரசு என்னும் கோடரியைத் தன்னுடைய ஆயுதமாக வைத்துக்கொண்டு தன் சபதத்தை நிறைவேற்றி வந்தார்.

**வழியில் வந்த ஆபத்தும் நிமித்தகன் கூறியதும் :**

தான் எடுத்த யாகம் செய்தல் என்னும் குறிக்கோளை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டதால் விசுவாமித்திரர் மேலும் தவம் புரிவதற்காக இமயமலைக்குச் சென்றுவிட்டார். மாப்பிள்ளை வீட்டார்களான தசரதன் குடும்பத்தினர் மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்ப எண்ணம் கொண்டு அயோத்திக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தனர். சற்று தூரம் வந்தவுடன் ஒருபெருங்காற்று வீசுவது போல் அனைவரும் உணர்ந்தனர். புழுதிப்படலம் கிளம்பியது. காக்கை போன்ற பறவைகள் கத்தின. மிருகங்கள் வலம் வந்தன. அதைப்பார்த்த தசரதர் மிகவும் பயந்து போனார். இது தீய சகுனம். ஏதோ ஆபத்து வருவதை உணர்த்துவது என்ற அறிந்து கொண்டார். எனவே தன்னுடன் வந்த நிமித்திகரைப் பார்த்து சகுனத்தின் பலன் கூறுமாறு கேட்க அவரும் ஆபத்து வரும் என்றும் ஆனால் உடனே நீங்கிப்போகும் என்றும் கூறினார்.



அவர் கூறிமுடிக்கும் முன்னே கையில் கோடரியுடனும் இடது கையில் விஷ்ணு தனுசுவுடனும் கண்களில் தீப்பொறி பறக்க பரசுராமர் அவர்கள் முன்தோன்றினார்.

மகேந்திரமலையில் யோக நிலையில் இருந்த பரசுராமருக்கு மிதிலையிலே ஸ்ரீராமன் சிவதனுசை நாணேற்றி உடைத்தபோர்து ஏற்பட்ட அதன் பேரோசை கேட்டது.

எனவே அத்தகைய வீரனைக்காணல்வேண்டும், அவர்செய்தது பெரிய சாகசச்செயல் அன்று என்றும், ஏனென்றால் அது ஏற்கனவே உடைபட்டுப்போயிருந்த வில் என்பதையும் உணர்த்துவதற்காக வந்தார் பரசுராமர். அக்காலத்திய மகேந்திர மலைதான் தற்போது உள்ள திருக்குறுங்குடி என்னும் திவ்விய தேசம் என்பது பலரது ஆய்வு முடிவு ஆகும். மேலும் திருக்குறுங்குடி நம்பிதான் பிற்காலத்தில் திருக்குருகூர் நம்பியான நம்மாழ்வாராகவும் தோன்றினார் என்பரார்கள். அவ்வாறு அங்கு தோன்றிய பரசுராமரின் வருகையைக் கம்பர்.

**"நிருபர்க்கு ஒரு பழி பற்றிட நில மன்னவர் குலமும்**
**கரு அற்றிட மழுவாள் கொடு களை கட்டு உயிர் கவரா**
**இருபத்தொரு படிகால் இமிழ்கடல் ஒத்து அலை எறியும்**
**குருதிப்புனல் அதனில் புக முழுகித் தனி குடைவான்."**
**(1221).**

என்னும் பாடலில் பாடுவதால், பரசுராமர் இருபத்தொரு தலைமுறைகள் அரசகுலத்தினரை தன் பரசு ஆகிய கோடரியால் அழித்துக்கொன்றவர் என்பது தெரியவருகின்றது.

அத்தகைய பரசுராமரைக்கண்ட தசரதர் புத்திர பாசத்தால் இராமனுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணி மயங்கி விழுந்து விட்டார். ஆனால் ஸ்ரீராமர் பரசுராமனை தைரியமாக எதிர் கொண்டார். ஸ்ரீராமரைக்கண்ட பரசுராமர் ஸ்ரீராமன் செய்த அற்புதச் செயல்களான தாடகை வதம் சுபாகு

வதம் அகலிகை சாபவிமோசனம் ஆகியனவற்றைப் பழித்துரைத்ததோடு சீதையை மணக்கும் பொருட்டு ஸ்ரீராமர் வளைத்து உடைத்த சிவதனுசானது (வில்லானது) ஏற்கனவே பழுது பட்டவில் என்றும் அதனால்தான் இராமன் அதை மிகவும் எளிதாக உடைத்தான் என்றும் ஏளனம் செய்தார். தன் கையில் இருந்த விஷ்ணுதனுசைக் காண்பித்து முடிந்தால் அதை வளைத்து காட்டுமாறு சவால் விடுத்தார் தன் கையில் இருந்த வில்லைச் சுட்டிக்காட்டி,. இந்த விஷ்ணு தனுசானது (ஸ்ரீமகாவிஷ்ணுவின் வில்) முன்னொரு காலத்தில் மகாவிஷ்ணுவால் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும் தனது தந்தையாகிய ஜமதக்கினி முனிவரால் அது தனக்கு கிடைத்தது என்றும் கூறி அறைகூவல் விட்டார்.

**தன்னைப்பற்றி தசரத ராமனிடம் பரசுராமன் கூறுதல் :**

**“மூ எழு முறைமை பாரின் முடியுடை வேந்தை எல்லாம்**
**வேவு எழு மழுவின் வாயால் வேர் அறக்களை கட்டுஅன்னார்**
**தூ எழு குருதி வெள்ளத் துறையிடை முறையின் எந்தைக்கு**
**ஆவன கடன்கள் நேர்ந்தேன் அருஞ்சினம் அடக்கி நின்றேன்.”**
**(1241).**

என்னும் பாடலால் உணர்த்துகின்றார் கம்பர்.

**தவப்பயனே இலக்கு :**

பரசுராமரின் அறைகூவலை ஸ்ரீராமர் ஏற்றுக்கொண்டார். வில்லை வாங்கி அதைப்பயன்படுத்திட அம்பினையும் தொடுத்துவிட்டார். அப்போது தன் எதிரே நின்ற பரசுராமரைப்பார்த்து இராமபாணம் தப்பாது. அது வில்லில் வைத்து பூட்டப்பட்டுவிட்டது. ஆனால் அது சென்று தாக்கக்கூடிய இலக்கு வேண்டும் ஆகையால் இதற்கு இலக்கு யாது என்று கேட்டார். மேலும் பூட்டப்பட்ட இந்த வில்லைக்கொண்டே உன்னைநான் அழிக்கமுடியும்! ஆனால் நீயோ அந்தணர் குலத்தைச் சேர்ந்தவன். ஜமதக்கினி என்ற ரிஷியின் குமாரன். எனவே உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை. எனினும் இந்த ராமபாணத்திற்கு இலக்கு என்ன என்று மீண்டும் கேட்டார்.



நீ முனிவர் குமாரன் ஆகையாலும், மேலும் பலவிரதங்களைப் பூண்டவன் ஆகையாலும் உன்னை அழிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. ஆயினும் நான் என்கோதண்டத்தில் நாண் ஏற்றிவிட்டதால், அது பொய்த்தல் கூடாது. அது செலுத்தப்படுவதற்குரியதோர் இலக்கை நீயே கூறுதல் வேண்டும் என்று ஸ்ரீராமர் பரசுராமனிடம் வினவினார். எனவே இதைச்செலுத்துவதற்குரியதோர் இலக்கு யாது என்று இராமன் கேட்டு பரசுராமன் கூறிய இலக்கின் வழிசெலுத்தி, தன்னுடைய அவதார ரகசியத்தை (தாள்வண்ணம்) பரசுராமருக்குப் புலப்படுத்தினார்.

**“பூதலத்து அரசை எல்லாம் பொன்று வித்தனை என்றாலும்**
**வேதவித்து ஆய மேலோன் மைந்தன் நீவிரதம்பூண்டாய்**
**ஆதலின் கொல்லல் ஆகாது அம்பு இது பிழைப்பது அன்றால்**
**யாதுஇதற்கு இலக்கம் ஆவது இயம்புதி விரைவின் என்றான்.”**
**(1244)**

**ஸ்ரீராமனின் தெய்வீகத்தன்மையைப் பரசுராமர் தெரிந்துகொண்டார் :**

ஸ்ரீராமாவதாரம் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமே என்று அறிந்துகொண்டார். இத்தனை நாட்களாகத் தான்செய்து வந்த அரசபரம்பரையினரின் வதைகள் அனைத்தும் வீணானவை என்பதை உணர்ந்தார். தந்தையின் துன்பத்தைப்போக்கவும் அவர் தன் தந்தைக்குக் கொடுத்த வாக்கினையும் காப்பாற்றிக்கொள்ள, அரச குடும்பத்தினரைக் கருவறுத்தார் என்றாலும், பரசுராமர் செய்து வந்த அந்த அடாத செயலால், அவருடைய பித்ருக்கள் யாரும், பித்ரு லோகத்திற்கும், சொர்க்கம் கூடச் செல்லாமல் தவித்து வந்ததையும் உணர்ந்தார். தான்செய்த அத்தீவினையைப் போக்க கங்கையில் நீராடிய பின் மகேந்திரமலையில் யோகநிலையில் இருந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. அங்கிருந்த போதுதான் அயோத்தியில் சிவதனுசை நாணேற்றி இராமன்

சீதாவைத்திருமணம் புரிந்துகொண்டதை அறிந்தார். ஏற்கனவே சிதைந்த நிலையிலே இருந்த அச்சிவதனுசை நாணேற்றிவிட்டு, சீதையை மணந்த இராமனால் தான் வைத்திருக்கும் வலிமைவாய்ந்த விஷ்ணுவில்லைத் தூக்கவும், இயக்கமும் முடியுமா? என்னும் சோதனையைச் செய்து இராமனின் உண்மையான வீரத்தை அறிந்துகொள்ளவே பரசுராமர் அங்கு வந்தார்.

வந்தவர் இராமனின் வில்லாற்றலையும், வீரத்தையும், பண்பினையும் அறிந்ததால், தன் கர்வமும் ஆணவமும் அடங்கப்பெற்றான். ஸ்ரீராமனின் பரத்துவ தன்மையை அறிந்துகொண்டார் பரசுராமர். எனவே ஸ்ரீராமனின் அறிவுறுத்தலை ஏற்று, அதற்கு பரசுராமர் இதுவரையில் யாக யக்ஞங்களின் மூலமாகவும், உபாசனைகள் மூலமாகவும் தான் செய்து சேர்த்து வைத்துள்ள புண்ணியங்களின் பயன்தான் இலக்கு என்று பதில் கூறினார். உடனே ஸ்ரீராமர் எய்த அம்பானது பரசுராமரை மூன்றுமுறைச் சுற்றி வந்து அவர் செய்து வைத்திருந்த புண்ணியத்தை எல்லாம் திரட்டி எடுத்துக்கொண்டு மீண்டும் இராமனிடத்திற்கே வந்து சேர்ந்தது.

இதைக்கண்ட பரசுராமர் இராமனின் திறமைகளை வியந்து தன் ஆணவம் அழியப்பெற்றார். தான் கொண்டு வந்த விஷ்ணுதனுசையும் இராமனுக்கே கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு இமாலயம் போய்விட்டார் பரசுராமர்.

**“நீதியாய் முனிந்திடல் நீ இங்கு யாவர்க்கும்**
**ஆதியான அறிந்தனென் அலங்கல் நேமியாய்**
**வேதியா இறுவதே அன்றி வெண்மதிப்**
**பாதியான் பிடித்த வில் பற்றப்போதுமோ? (1245).**

என்னும் இந்தப் பாடலால், ஸ்ரீராமன் சக்கராயுதத்தைத் தன் வலத்திருக்கையில் ஏந்திய திருமாலின் திருஅவதாரமே என்பதை உணர்ந்தறிந்து, அவருடைய தாள்போற்றி நின்றார் பரசுராமர்..



இவையெல்லாம் நடந்து முடிந்தபின்னர், தசரதன் மூர்ச்சை தெளிந்து எழுந்து நடந்ததைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். நிமித்தகன் கூறியதைப் போல் விரைவாக வந்த ஆபத்தும் விரைவாக விலகிப்போனது. எல்லோரும் மனநிறைவோடு அயோத்திக்குள் நுழைந்தனர். அரண்மனையில் இருந்தனர். அப்போது பரதனையும் சத்ருக்கனனையும் அவர்களின் பாட்டனார் வீட்டிற்குச் சென்றுவருமாறு அனுப்பி வைத்தார் தசரதன். அவர்களோடு பரதனின் தாய்மாமனான உதயசித்து என்ற யுதாஜித்தும் பயணமானான்.

அவர்கள் அயோத்தியிலிருந்து பயணமாகி, ஏழுநாட்கள் பயணத்திற்குப்பிறகு தமது தாய்வழிப் பாட்டனாருடைய கேகயத்திற்குச் சென்றனர் என்பதை பாலகாண்டத்தின் இறுதிப்பாடலாக பின்வரும் பாடலை அமைத்துப் பாடியிருக்கின்றார் கம்பர்.

**உளைவிரி புரிவித் தேர் உதயசித்து எனும்**
**வளைமுரல் தானையான் மருங்கு போதப்போய்**
**இளையவன் தன்னொடும் ஏழுநாளிடை**
**நளிர்புனல் கேகய நாடு நண்ணினான்**

என்ற இப்பாடலால் அவர்கள் தேரில் பயணம் செய்து ஏழுநாட்களுக்குப்பின் சேர்ந்தனர் என்று கூறி, அவர்கள் சேர்ந்தபின் தசரதன் தனது நாட்டைச்சிறப்பாக ஆட்சிசெய்துவர, தேவர்கள் முன்னரே வகுத்துத்தந்த ஒரு தவத்தின் காரணமான நிகழ்வுகள் அந்த அயோத்தியில் நடைபெறப்போவதை அடுத்து காண்போம் என்ற முடிவுரையோடு இக்காண்டத்தின் செய்திகளையும் கூறி முடிக்கின்றார் கம்பநாட்டாழ்வார்.

## 2. அயோத்தியா காண்டம்... கருத்துரைகள் தொகுப்பு

### அயோத்தி நகரம்.. பெயர்க்காரணம்.

கோசல நாட்டின் தலைநகரமாக விளங்கியது அயோத்தி என்னும் சிறப்பான நகரம். இது கங்கையாற்றின் உபநதியான சரயு நதிக்கரையில் அமைந்திருந்தது. ஆண்டாண்டு காலமாய் ஸ்ரீமகாவிஷ்ணுப்பெருமானால் காக்கப்பட்டு வந்த நகரம் இது. "அ யுத்தம் அதி" என்பது "அயோத்தி" என்று பொருள்படும். அதாவது யுத்தமே என்றும் நடைபெறாத புனிதபூமியாகையால் இது அயோத்தி என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவார்கள். இதன் அரசனாகிய தசரதன் பத்து இரதங்களைப் போர்க்களத்தில் ஒரேநேரத்தில் செலுத்தி போரிடக்கூடிய திறமைபடைத்தவன் ஆகையால் அவன் தசரதன் என்று அழைக்கப்பட்டான்.

**அயோத்தியா காண்டம் : பெயர்க்காரணம் :**

புத்திரப்பேறு இல்லாமல் தவித்துவந்த தசரதனுக்கும், அவன் துணைவியர்களுக்கும் ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சத்தைக்கொண்ட இராமன், பரதன், இலட்சுமணன், சத்ருக்கணன் ஆகிய நான்கு புத்திரர்கள் தோன்றி மகிழ்வித்தனர்.

அயோத்தி நகரம் பரமபதம் என்று வைத்துக்கொண்டால் அதை ஆட்சிசெய்த தசரதன் பரப்பிரம்மம் எனலாம். அவருடைய மூன்று மனைவிகளும் ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி. இதிலே ஞானசக்தியாகிய கோசலைக்குத் தோன்றியவர் ஆத்மராமர் என்று உருவகம் செய்யலாம் என்று தத்துவ இராமாயணம் கூறுகின்றது. அவ்வாறு தோன்ற தசரதபுத்திரர்களுக்குச் செய்யப்பட வேண்டிய பெயர்சூட்டல், குருகுலவாழ்க்கைக்கல்வி, ஆகியனவற்றைச் செம்மையாகச் செய்து முடித்திருந்த வேளையில் விசுவாமித்திரர் வேண்டுகோளுக்கிணங்க, இராமலட்சுமணர்கள் அவருடன் சென்று யாகத்தை முடித்துக்கொடுக்க, அவர்கள் மிதிலா நகர்சென்றனர். அவர்களுள் மூத்தவனான இராமன் அங்கே ஜனகன்மகளான ஜானகி என்னும் சீதாதேவியை சிவதனுசை நாணேற்றி மணம் முடித்தான். அதே நன்னாளில் மற்ற



மூவருக்கும் திருமணம் நடந்தேற, மீண்டும் அயோத்திமாநகர் வந்தடைந்தனர் அனைவரும்.

அப்போது தன்னுடைய அரச சபையைக்கூட்டிய தசரதன், தான் அரச பாரத்திலிருந்து ஓய்வுபெற நினைத்ததால், தன் சூரியகுலமரபிற்கு ஏற்றவாறு தன்னுடைய மூத்தமகனான இராமனுக்குப்பட்டாபிஷேகம் செய்வித்து, தான் வானப்பிரஸ்த தர்மத்தைக் கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்தான். அமைச்சர்களும், மற்றைய அரசர்களும் மகிழ்ச்சி அடைய, ஸ்ரீராமனுக்கு முடிபுனைதலாகிய விழாவினைத்தடுத்து நிறுத்திட எண்ணம் கொண்டாள் மந்தரை ஆகிய கூனி! அதைத்தன்தலைவியான கைகேயியின் மூலமாகத் தடுத்திட்டாள்!

தசரதன் தனக்குக் கொடுப்பதாகக் கூறியிருந்த இரண்டு வரங்களில் ஒரு வரத்தால் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவும், தன்மகனான பரதனே நாட்டின் அரசனாக முடிசூட்டிக்கொள்ள வேண்டும் என்ற வரங்களைப் பெற்றுக்கொண்டாள் கைகேயி! எனவே இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் அயோத்தியை விட்டு வனவாசம் சென்றதையும், அயோத்தி மக்கள் அடைந்த துன்பத்தையும், அரசனாக விளங்கிய தசரதன் தன் உயிர் நீத்ததையும், அயோத்திக்கு வந்து உண்மையை அறிந்த பரதன் தன் தாயின் கொடுஞ்செயலைக்கண்டு வருந்தி வருத்தம் அடைந்ததையும், அயோத்திக்கு முறைப்படி இராமனே அரசனாகவேண்டும் என்று எண்ணி இராமனை அழைத்துவர கானகம் சென்றதையும், இராமன் மறுத்து கூறியதையும், வேறு வழியின்றி, இராமனின் பாதுகைகளைப்பெற்றுவந்த பரதன் அதையே அரியணையில் அமர்த்தி அரசாட்சி செய்ததுவுமாகிய அயோத்தியில் நடந்த அடுத்தடுத்த நிகழ்வுகளைக் கூறுவதால், இப்பகுதி அயோத்தியா காண்டம் என்று அழைக்கப்படுகின்றது.

முடிதுறந்த வள்ளல் ஆகிய ஸ்ரீராமனின் மாண்பும், கைகேயி புதல்வன் ஆகிய பரதனின் பண்பும் இக்காண்டத்தில் பெரிதும் விளக்கம்பெறுவதைக்காணலாம்.

**கடவுள் வாழ்த்து :**

**வான் நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன்என்ப**
**கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக் கோல்துறந்து**
**கானும் கடலும்கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த**
**கழல்வேந்தன்.**

இதில் ஸ்ரீராமாவதாரம் மேற்கொண்டு இப்புவிக்கு வந்தவராகிய திருமால், இவ்வுலகிலுள்ள எல்லாவுயிர்களின் உடலாகவும், அவ்வுடல்களின் உயிராகவும், அவ்வுயிர்களைத் தனது வடிவமாகக்கொண்ட பெருமான் அந்த ஆத்மாக்களின் அந்தராத்மாவாக விளங்குகின்றான் என்றும், அப்பெருமானாகிய இராமன் கூனியாகிய மந்தரையும், தனது சிறிய தாயாராகிய கைகேயியும் பெற்ற வரத்தைப்பூர்த்தி செய்ய வனவாசம் மேற்கொண்டார் என்றும், அவ்வனவாசம் சென்றதன் மூலம் அரக்கர்களை அழித்தலாகிய தனது அவதார நோக்கத்தைப்பூர்த்தி செய்தும், தர்மிகளையும், முனிவர்களையும், தேவர்களையும் காத்தருளினார் என்னும் கடவுளாம் திருமாலின் தன்மையானது அழகுற எடுத்துரைக்கப்படுகின்றது.

ஸ்ரீமத் ராமாயணத்தின் இரண்டாம் காண்டமாய் அமைந்துள்ள இக்காண்டத்தின் முதல்படலமாக இடம்பெற்றுள்ள மந்திர ஆலோசனைப்படலத்தில் கூறப்பட்டுள்ள முதற்பாடலை முதலில் பார்ப்போம்!

**“மண்ணுறு முரசினம் மழையின் ஆர்ப்புற**
**பண்ணுறு பாடர்சினப் பரும யானையான்**
**கண்ணுறு கவரியின் கற்றை கற்றுற**
**எண்ணுறு சூழ்ச்சியின் இருக்கை எய்தினான்”**

என்ற முதற்பாடலில், “கடுங்கோபம் கொண்டதும், தனக்கு வெற்றியைத்தருவதுமான சத்ருஞ்ஜெயன் என்ற தனது பட்டத்து யானையை உடையவனான தசரதமாமன்னன், அதன்மீது அமர்ந்துவர, தனது நாட்டின் முரசுகள் எல்லாம் மேகங்களைப்போல முழங்கிட, கவரிமானின் மயிரினால் செய்யப்பட்டதான அழகிய கவரிகள் (சாமரங்கள்) வீசப்பட, ஆராய்ச்சிக்கு உரியதான தனது மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான்”. என்று கூறப்பட்டுள்ளது.



அவ்வாறு கூட்டப்பட்டதான அந்த ஆராய்ச்சி மண்டபத்தில் நடந்ததான செய்திகளின் சுருக்கம் வருமாறு :

அத்தயரத மன்னனின் மந்திராலோசனை மண்டபத்தில், குலகுருவான வசிட்டர் முப்பெருங்கடவுளர்களை அடுத்த நான்காவது கடவுள் என்று போற்றத்தக்கப் பெருமையுடையவர் ஆவார் என்பதைக் கூறி, அவர் அந்தமண்டபத்தில் இருந்தார் என்பதைக் கம்பர்

**“பூ வரு பொலன்கழல் பொரு இல் மன்னவன்**
**காவலின் ஆணைசெய்கடவுளாம்என**
**தேவரும் முனிவரும் உணரும் தேவர்கள்**
**மூவரின் நால்வர்ஆம் முனிவந்து எய்தினான்.” [மந்திரப்படலம்.4].**

என்னும் பாடலால் புலப்படுத்தியுள்ளார்.

அத்தகைய சிறப்பினைப்பெற்றிருந்த வசிஷ்ட முனிவரைத்தனது குலகுருவாகப் பெற்றிருந்தான் தசரதன். அம்முனிவனும் அந்த அரண்மனையில் இருந்தபோது அமைச்சர்பெருமக்களும் அங்கே திரண்டிருந்தனர். அந்த அமைச்சர்களை மந்திரக்கிழவர்கள் என்ற சொல்லால் குறிப்பிடுவதிலிருந்து அவர்களின் உயர்ந்த பண்புகளும், அரசனுக்கு நல்லனவற்றையே நாடிச்சொல்பவர்கள் அவர்கள் என்பதையும் உய்த்துணர வைக்கின்றார். அந்த அமைச்சர்களின் குணங்களைச் சற்றே விரிவாகவே எடுத்துரைக்கின்றார் கம்பர்.

**அமைச்சர்களின் பண்பு நலன்கள் :**

**குலம்முதல் தொன்மையும் கலையின் குப்பையும்**
**பலமுதல்கேள்வியும் பயனும் எய்தினார்**
**நலம்முதல் நலியினும் நடுவு நோக்குவார்**
**சலம்முதல் அறுத்து அருந் தருமம் தாங்கினார். [பாடல்.5].**

**உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்**
**மற்றது வினையின் வந்தது ஆயினும் மாற்றல் ஆற்றும்**
**பெற்றியர் பிறப்பின் மேன்மைப்பெரியவர் அரியநூலும்**
**கற்றவர் மானம் நோக்கின் கவரிமான் அனைய நீரார். (பாடல். 6).**

**காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற**
**நூல்உறநோக்கி தெய்வம் நுனித்து அறம் குணித்த மேலோர்**
**சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்துகொண்டு**
**பால்வரும் உறுதியாவும் தலைவற்குப் பயக்கும் நீரார் (பாடல்.7)**

என்னும் பாடல்களால் தசரத மன்னனின் அமைச்சர்களின்பண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுமந்திரன் என்ற சிறப்புடைய அமைச்சனை முதல் அமைச்சராகக் கொண்ட அந்த அமைச்சர்கள் குழாத்தின் பெருமை இங்கு கூறப்பட்டுள்ளது. இவர்கள் அரசனுக்கு ஏற்படும் நன்மை தீமை ஆகியனவற்றை ஆராய்ந்து நன்மையையே செய்யும் மருந்தாக விளங்கக்கூடியவர்கள். ஊழ்வினைப்பயனால் தமது அரசனுக்கும், நாட்டிற்கும் ஏதேனும் தீங்கு நேர இருந்தாலும், அவற்றைத்தடுத்து நிறுத்துவதற்கான வழிமுறைகளை நன்கு அறிந்தவர்கள். ஒருசெயலை இனிதே செய்து முடிப்பதற்கு ஏற்ற நேரம், இடம், சூழ்நிலை ஆகியனவற்றை நன்கு அறிந்து, அதைச்செய்து முடிக்கக்கூடிய திறமை படைத்தவர்கள். அத்தகைய நற்பண்புகள் நிறைந்த அச்சபையில் தசரதன் தன்னுடைய மனக்கருத்தை வெளியிட்டார்.

**அமைச்சர்களிடம் தன் மனக்கருத்தைத் தசரதன் வெலியிடல் :**

**விரும்பிய மூப்பு எனும் வீடு கண்டயான்**
**இரும்பியல் அனந்தனும் இசைந்த யானையும்**
**பெரும் பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய**
**அரும்பொறை இனிச்சிறிது ஆற்ற ஆற்றலேன். (பாடல்.15).**

"சுமார் அறுபதினாயிரம் ஆண்டுகளாக இந்த அரசாட்சி என்னும் பாரத்தைத்தாங்கிய நான், இனிமேல் இதிலிருந்து விடுபடலாம் என்று எண்ணுகின்றேன். இவ்வரசபாரத்தைத் துறந்து, துறவு என்னும் தெப்பத்தை ஏறினால்தான், இறப்பு என்ற மெய்ம்மையில் இருந்து எந்த ஒரு மனிதனும் விடுபடமுடியும்! எனவே யான் வானப்பிரஸ்தம் என்னும் நிலைக்கு என்னைத்தயார்படுத்திக்கொள்ளப் போகின்றேன். அத்துறவு நிலையே பிறப்பு என்னும் பெருங்கடலைக்கடப்பதற்குரிய ஒரு தெப்பம் (படகு அல்லது கப்பல்) என்பதையும் யான் உணர்ந்துள்ளேன்" என்று தன்கருத்தை அமைச்சர்களிடம் கூறினான் அரசன் தசரதன். அரசனின் அந்த எண்ணம் பின்வரும்பாடலால் அறியப்படுகின்றது.



**இறப்பு எனும் மெய்மையும் துறவு என்னும் தெப்பமும் :**

**இறப்பு எனும் மெய்மையை இம்மை யாவர்க்கும்**
**மறப்பு எனும் அதனின் மேல் கேடு மற்று உண்டோ**
**துறப்பு எனும் தெப்பமே துணை செய்யாவிடின்**
**பிறப்பு எனும் பெருங்கடல் பிழைக்கல் ஆகுமோ?**
**(பாடல் 20)**

எனவே "எனது மூத்த மைந்தனாகிய இராமனுக்கு, நமது மரபின்படி, அவனே மூத்த மகன் ஆதலால், அரசை நல்கி இந்நாட்டின் அரசனாக முடிபுனையச்செய்து ஓய்வு பெறப்போகின்றேன். வானப்பிரஸ்த தர்மத்தைக்கடைப்பிடித்து வாழ, வனத்திற்குச் செல்வதாகவும் எண்ணியுள்ளேன். உங்கள் கருத்தினைக் கூறுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் "என்றான் தசரதன்.

**பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறு**
**மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்**
**யாது நும் கருத்தென இனைய கூறினான். (பாடல்.30)**

**தசரதன் சொல் கேட்ட அமைச்சர்களின் நிலை :**

**திரண்ட தோளினன் இப்படிச்செப்பலும் சிந்தை**
**புரண்டு மீதிடப் பொங்கிடும் உவகையர் ஆங்கே**
**வெருண்டு மன்னவன் பிரிவு எனும் விம்முறு நிலையால்**
**இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென இருந்தார்.**
**(பாடல்.31)**

ஆம்! அமைச்சர்கள் ஒருபக்கம் தசரதன் ஓய்வு எடுக்கின்றார். இனி அவர் நமக்கு அரசரில்லை என்று நினைக்கின்றபோது வருத்தப்படுகின்றனர். ஆனால் அதேநேரத்தில் ஸ்ரீராமன் தங்களின் அரசனாகப்போகின்றார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றார்களாம். ஆக ஒருபக்கம் துன்பமும், மறுபக்கம் இன்பமும் அடைகின்ற அவர்களின் நிலைமையானது, புதிதாகக் கன்றை ஈன்ற ஒரு பசு தனக்கு இளங்கன்று பிறந்ததற்காகவும், அதற்குத்தான் பாலூட்டி வளர்ப்பதற்காகவும் மகிழ்வுறுகின்றது. ஆனால் அதே நேரத்தில் தனது மூத்த கன்றை பராமரித்துப் பால்கொடுக்கும் நிலையை இழந்து விட்டோமே என்று கவலை அடையுமே அதைப்போன்றதோர் பசுவின் நிலையிலே எல்லோரும் இருந்தார்கள் என்று அந்த நல்லமைச்சர்களின் நிலையை அழகுறப் படம் பிடித்துக்காட்டுகின்றார் கம்பநாட்டாழ்வார்! அத்தகைய நற்பண்புகள் மிக்கவர்களிடம், தான் அரசபாரத்தில் இருந்து விடுபட விரும்புவதாகவும் அதனால் இராமனுக்கு அரசனாக முடிசூட்ட விரும்புவதாகவும் தசரதன் தெரிவித்தபோது பெரிதும் எல்லோரும் மகிழ்ச்சியே அடைந்ததால் இதுநாள்வரையில் தான் அரசாட்சி செய்த முறையில் ஏதேனும் குறைபாடு இருந்ததோ என்ற சந்தேகம் அரசனுக்கு எழுந்தது.

**வசிஷ்டர் கருத்து :**

இதற்கு அரச குருவான வசிட்டரும் மறுப்புரைக்கவில்லை. தசரதனுடைய கருத்தை ஆதரித்து, மன்னன் இனி வானப்பிரஸ்த தர்மத்தை ஏற்பதே சிறந்தது என்னும் கூறிய அவர், தருமமூர்த்தியாகிய திருமாலே இராமனாக அவதாரம் செய்து இருப்பதாலும், மும்மூர்த்திகளின் செயலும் இராமனின் செயல்களில் வெளிப்படுவதாலும், அவன் தம்மைச் சிறப்புறக்காப்பாற்றுவான் என்று அயோத்திமக்கள் அனைவரும் நினைப்பதாலும்,

அந்த ஸ்ரீராமனின் மனைவியாக வாய்த்துள்ள சீதையும் திருமகளின் திருவுருவே என்றும், அவள் பொறுமையில் பூதேவியாகவும், அழகிலும் செல்வத்திலும் ஸ்ரீதேவியாகவும், வீரத்தில் மலைமகளாகிய பார்வதியைப்போன்றவள், அவர்களினும் நல்லாள் ஆகையினாலும், ஸ்ரீராமனோ என்றால், கற்றார் கல்லார் என்ற இருவகைப்பட்டவர்க்கும், பருகும் நீரைக்காட்டிலும், பாதுகாக்கும் உயிரைக்காட்டிலும் சிறந்தவனாக இருக்கின்றான். எனவே அத்தகையவனால் உனக்கு உலகிற்கும் நன்மையே உண்டாகும் என்று கூறிய வசிஷ்டரின் வாக்குமூலங்களாக வருகின்ற பின்வரும் பாடல்கள் இரண்டும் அனுபவிக்கத்தக்கனவாகும்.



**இராமாவதாரம் பற்றிய வசிட்டன் கருத்து :**

**புறத்து நாம் ஒருபொருள் இனிப்புகல்கின்றது எவனோ**
**அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பது அல்லால்**
**பிறத்து யாவையும் காத்து அவை பின் உறத் துடைக்கும்**
**திறத்து மூவரும் திருந்திடத் திருத்தும் அத் திறலோன். (36).**

**சீதை இராமன் இவர்களின் சிறப்பைக் கூறுதல் :**

**மண்ணினும் நல்லள் மலர்மகள் கலைமகள்கலை ஊர்**
**பெண்ணினும் நல்லள் பெரும்பெயர்ச் சனகியோ நல்லள்**
**கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலாதவரும்**
**உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பர். (பாடல்.39).**

தசரதனின் மனக்கருத்திற்கு அவையில் இருந்த மற்ற அரசர்களும் மறுப்புரைக்கவில்லை எனவே இராமனை அழைத்து, அவனின் இசைவையும் கேட்க நினைத்த தசரதன் சுமந்திரனை அனுப்பி இராமனை அழைத்துவரப் பணித்தார்.

**மந்திராலோசனை மண்டபத்தை இராமன் அடைதல் :**

இராமனது மாளிகையை அடைந்த சுமந்திரன் தசரதன் அழைத்துவரச்சொன்னதைச் சீதாதேவியோடு இருந்த ஸ்ரீராமனுக்கு எடுத்துக் கூற, இராமனும் தேரில் ஏறிப்புறப்பட்டான். அவ்வாறு சென்றபோது அயோத்திமாநகரத்தின் வீதிகளில் திரண்டிருந்த எல்லோரும் இராமனை வாழத்தினர். பெண்கள் ராமனின் வைலட்சண்யத்தை (பேரழகை) அருந்தி மகிழ்ந்தனர்.

இராமனோடு, இலக்குவனும் சென்று, தசரதன் அவையை அடைந்தனர். தன் திருவடிகளில் விழுந்த இராமனைத் தசரதன் மார்போடு அணைத்து, ஆசிகூறி மகிழ்ந்தான். பிறகு இராமனுக்கு முடிசூட்ட எண்ணியுள்ள தன்கருத்தை எடுத்துரைத்தது இதை மறுக்கக் கூடாது என்றும் தனக்குச்செய்யும் உதவியாக நினைத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறிநின்றான் தசரதன். இராமன் தந்தைசொல்லிற்குக் கட்டுப்பட்டு இசைந்தான். அரசனாக முடிசூட்டிக்கொள்ளவேண்டும் என்று தசரதன் கேட்டுக்கொண்டபோது இராமன் மகிழ்ச்சி அடையவும் இல்லை. வெறுக்கவும் இல்லை. ஆனால் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட வேண்டும். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று அடிபணிந்து நின்றான். அக்கருத்தை எடுத்துரைக்கும் பாடல் இதோ.

**"தாதை அப்பரிசு உரை செய தாமரைக்கண்ணன்**
**காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இது என்று உணர்ந்தும்**
**யாது கொற்றவன் ஏவியது அதுசெயல் அன்றோ**
**நீதி எற்கு என நினைந்தும் அப்பணி தலை நின்றான்." (பாடல்.69).**

**அவையில் இருந்த அரசர்களிடம் தசரதன் கூறுதல் :**

**செம்மையின் தருமத்தின் செயலின் தீங்கின்பால்**
**வெம்மையின் ஒழுக்கத்தின் மெய்மை மேவினீர்**
**என்மகன் என்பது என் நெறியின் ஈங்கு இவன்**
**நும் மகன் கையடை நோக்கும் ஈங்கு என்றான். (பாடல்.86)**

மேலும் "அத்தசரதன் அங்கிருந்த மற்ற அரசர்களையும் பார்த்து சிறந்த ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும், அறநெறி தவறாமலும் வாழ்கின்றவனாகிய என் மகன் இராமனை, நீங்கள் உங்களது மகன்போல ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஆதரிக்கவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டான்.

அரசர்களும் அதை ஏற்றுக்கொண்டனர். இராமன் முடிசூட்டலை அறிந்த கோசலை திருமால் எழுந்தருளியுள்ள கோயிலுக்குச் சென்று, அப்பெருமானை வணங்கினாள். பிறகு அங்கிருந்தோர்க்கெல்லாம் தானமும் தர்மமும் செய்து மகிழ்ந்தாள். இந்த நிலையில் ஸ்ரீராமனின் பட்டாபிஷேகச் செய்தியை வள்ளுவன் முரசறைந்து நகரமாந்தர்க்கும் தெரிவித்தான். எனவே இராமனின் முடிசூட்டு விழாவினை அடுத்தநாளே செய்வது என தீர்மானித்து வள்ளுவன் மூலம் முரசறைந்து நகரத்தினர்க்கு அறிவிக்கப்பட்டது.



**மந்தரையின் ஆற்றாமையும், அடங்காத கோபமும் :**

இராமரின் பட்டாபிஷேக செய்தியறிந்த மக்கள் மகிழ்ச்சியோடு நகரத்தை அலங்காரம் செய்தனர். மகிழ்ச்சிக்கடலில் மிதந்தனர். ஆனால் அதையறிந்த மந்தரை என்ற கூனி மட்டும் கோபம் கொண்டாள். இராமன் அயோத்தியின் அரசனாக முடிசூட்டிக்கொள்ளப்போவதை எவ்வாறேனும் தடுத்து நிறுத்திட வேண்டும் என்று முடிவு செய்தாள். அதனால் தன் தலைவியும் தசரதனின் இளைய மனைவியுமான கைகேயியின் அந்தப்புரம் சென்று உறங்கிக் கொண்டிருந்த கைகேயியைத் தட்டியும், அதட்டியும் எழுப்பினாள்.

மேலும் அயோத்தி மாநகரம். அழகுசெய்யப்படுவதை அறிந்தும் பெருத்த கோபம்கொண்டு கொடுமையான மனத்தை உடையவளான அக்கூனி என்ற மந்தரை பெருத்த குரல் எழுப்பி, கைகேயி ! எழுந்திரு ! கைகேயி எழுந்திரு ! என்றும், உன்னை நோக்கி மிகப்பெரும் ஆபத்து வருகின்றது. அதை உணராமல் நீ உறங்கிக்கொண்டிருக்கின்றாயே ! பேதாய் எழுந்திரு என்று தட்டி எழுப்பினாள் ! திடுக்கிட்டு எழுந்த கைகேயி.

**என்புதல்வனாக இராமன் இருக்க என்ன ஆபத்து வருமடி பேதாய் !**

**"பராவ அரும் புதல்வரைப் பயக்க யாவரும்**
**உராவ அருந்துயரை விட்டு உறுதிகாண்பரால்**
**விராவ அரும்புவிக்கு எலாம் வேதமே அன்ன**
**இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ என்றாள்."**
**(பாடல்.140).**

ஆபத்து என்னை நோக்கிவருமென்ற பேதையான மந்தரையே எனது திருக்குமாரனாக இராமன் இருக்கும் இந்த நிலையில் ஆபத்தும் என்னை அண்டுமோடி என்று கூறிய மேற்கண்ட கைகேயியின் கூற்றாக அமைந்துள்ள பாடலால் கைகேயியின் நல்லமனநிலை, அதாவது ஸ்ரீராமனைத் தன் புதல்வன் என்று கூறுகின்ற ஒரு தூய்மையான தாயின் நிலையை எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. அப்படிப்பட்ட இராமனை மகனாகப்பெற்றுள்ள எனக்கு தீமை என்பதும் வருமோ ? நிச்சயம் வராது என்று உறுதியுடன் கூறினாள் கைகேயி !

**செய்தி சொன்னாள் மந்தரை, பரிசளித்தாள் பாசத்தாய் !**

அத்தகைய மனநிலை கொண்டவளான அவளிடம் மன்னன் தசரதன் நாளைமுத்ல அரசன் இல்லை. இராமனே இந்நாட்டுமன்னன் ஆக முடிசூட்டிக்கொள்ளப்போகின்றான் என்ற செய்தியை அருவருப்பாகவும், அசூயையுடனும் எடுத்துரைத்தாள் அந்த மந்தரை.

இச்செய்தியைக் கேட்ட கைகேயி தனக்கு இனியதோர் செய்தியை எடுத்துரைத்தவளான அந்தக் கூனிக்கு, தன் கழுத்தில் அணிந்துகொண்டிருந்த மிகவும் விலை உயர்ந்த மாணிக்கமாலை ஒன்றைப் பரிசாக அளித்தாள்!

அம்முத்து மாலையை வாங்கிய அந்த மந்தரை என்ற கூனி, கோபம் கொண்டு அதைத்தரையில் வீசி எறிந்தாள் ! அப்பாவித்தனமாக நீ பேசுகின்றாய் ! இராமன் முடிசூட்டிக்கொள்வதால், இராமனுக்கும், கோசலைக்கும், சீதைக்குமே வாழ்வு சிறப்பு அடையுமே ஒழிய, உன் உண்மை மகனான பரதனுக்கும், உனக்கும், உன்தாய் வீட்டார்களுக்கும் எந்தவித நன்மையும் ஏற்படாது. மேலும் நீங்கள் அனைவருமே சிறப்பற்றவர்களாக, உண்டிக்கும் உறையுளுக்கும், உடைக்கும் மட்டுமே அவர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இழிநிலையைப்பெறுவீர்கள். இது உறுதி. நான் சொல்வதை எல்லாம் சற்று யோசித்துப்பார் என்று தன் துர்ப்போதனையைத் தொடர்ந்தாள் மந்தரை.



**விதியின் விளையாட்டு மதியை வென்றதோ ?**

எனவே இராமனுக்குப் பதிலாக பரதன் இந்த நாட்டை ஆள வழிவகை செய்யப்பட வேண்டும் என்றாள். ஆனால் மூத்தமகன் முடிசூட்டிக்கொள்வதே குலதர்மம் என்றும், அம்மரபே பின்பற்றப்படுவதில் எந்தச்சூழ்ச்சியும் இல்லை என்றும் மந்தரைக்கு அறிவுறுத்தினாள் நன்மனம் கொண்ட கைகேயி ! ஆனால் இராமன் முடிசூட்டிக் கொண்டால் கோசலைப் பெரும் வாழ்வு பெறுவாள் என்றும், அவளே ராஜமாதா என்று அழைக்கப்படுவாள் என்றும் கூறியதோடு, ஜனகனின் கை மேலோங்கும் என்றும் கேகயர்கள் ஆகிய கைகேயியின் பெற்றோர்களும் அவர்களுடைய நாடும் புறக்கணிக்கப்படுவார்கள் என்றும் தாய்வீட்டுப்பாசத்தைத்தட்டி எழுப்பினாள். மேலும் நீயும் கோசலை தரும் வாழ்வை வாழ்ந்து கொண்டு காலம் கடத்த வேண்டும் என்றும் எவ்விதச் சிறப்பும் அற்ற பட்டமற்ற ஓர் சாதாரணப் பெண்ணாகத்தான் வாழவேண்டும். கோசலையே ராஜமாதாவாக விளங்குவாள். சீதாதேவியே ராஜ மகரிஷியாக (பட்டத்துராணியாக) வலம்வருவாள். உன் மருமகள்களின் பிற்காலநிலையையும் உன்னுடைய நிலையையும் எண்ணிப்பார் என்றும் பற்பல துர்ப் போதனைகள் செய்தாள். மேலும் பரதன் நாட்டில் இல்லாத நேரம் பார்த்து பட்டாபிஷேகத்தை நடத்துவதில் சூழ்ச்சி நிறைந்துள்ளது என்றும் தூபம்போட்டுப் பேசினாள். மேலும் தான் கூறுவன எல்லாம் பரதனுக்கும், உனக்கும் நன்மைதரத்தக்கனவே என்று கூற.

**அதற்குக் கைகேயி :**

**“எனக்கு நல்லையும் அல்லை நீ என்மகன் பரதன்**
**தனக்கு நல்லையும் அல்லை அத்தருமமே நோக்கின்**
**உனக்கு நல்லையும் அல்லை வந்து ஊழ்வினை தூண்ட**
**மனக்கு நல்லனசொல்லினை மதிஇலாமனத்தோய்” [பாடல்.158].**

என்று அக் கூனியின் துர்ப்போதனைக்கு இடம்கொடாமல் முதலில் மறுத்தாள். மந்தரை கூறுவது தருமம் ஆகாது என்றும், பரதனுக்கோ, தனக்கோ நன்மையைத்

தரத்தக்கது அல்லவென்றும் கூறினாள். இதைக்கேட்டு சற்றும் மனந்தளராத கூனி, அதோடு நில்லாமல், உன்மகன் பரதன் முடிசூட்டிக்கொள்ளாமல் வாழ்வதை விட அவன் இறந்துபோவதே உன்னதமானது என்றும் கொடிய நஞ்சாகிய வாக்கையும் உதித்தாள் அந்த மந்தரை. எனவே கைகேயியினுடைய தூய சிந்தை திரிந்தது. அவள் தன்மகனான பரதன் நாட்டை ஆளவும் இராமனின் முடிசூட்டலைத் தடுப்பதற்கான வழிமுறையைக் கூறுமாறும் அந்த மந்தரையினிடத்தில் அறிவுரையும் ஆலோசனையும் கேட்கத்தொடங்கினாள்!

**மகிழ்ந்திட்ட கூனி தெரிவித்தாள் யோசனை !**

தன்னுடைய எண்ணம் நிறைவேறி சூழ்ச்சிப் பலிக்கத்தொடங்கியதை அறிந்த அக்கூனி, அவள் மனம் மகிழும் வகையில் பின்வரும்செய்திகளை எடுத்துரைத்தாள்!

**இரண்டு வரங்கள் :**

தேவர்களுக்காக இந்திரனின் வேண்டுதலுக்காக சம்பரன் என்னும் அசுரனுடன் போர்புரிந்தான் தசரதன். அப்போது தசரதனை இரண்டு முறை அந்த அசுரனிடமிருந்து காப்பாற்றினாள் கைகேயி. மனம் மகிழ்ந்த அரசன் இரண்டு வரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினான். ஆனால் அவற்றை அப்போதைக்குப் பெற்றுக்கொள்ள வில்லை கைகேயி. அதை இப்போது பயன்படுத்தி இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு பரதனை அரசனாக முடிசூட்ட அரசனை வற்புறுத்தி இரண்டு வரம் பெற்று சாதித்துக் கொள்ளுமாறு கூறி விட்டுச்சென்றாள் மந்தரை. அவள் கூறியதாக வரும் கம்பரின் கவிநயம்.

**இருவரத்தினில் ஒன்றினால் அரசுகொண்டு இராமன்**
**பெருவனத்திடை ஏழ்இரு பருவங்கள் பெயர்ந்து**
**திரிதரச்செய்தி ஒன்றினால் செழுநிலம் எல்லாம்**
**ஒருவழிப்படும் உன்மகற்கு உபாயம் ஈது என்றாள். (175)**

என்பது கம்பரின் வாக்கு !



**மீண்டும் அழைத்து அறிவுரை கூறினான் அரசன் :**

இதற்கிடையில் மீண்டும் ஒருமுறை இராமனைத்தான் காணவேண்டும் என்று நினைத்து சுமந்திரனை அனுப்பி அழைத்துவரச்செய்த தசரதமன்னன், இராமனிடத்தில் தனக்கு சில நாட்களாக ஏற்பட்டுள்ள மனக்கலக்கத்தை எடுத்துரைத்து ஏதோ சில துர் நிகழ்வுகள் நடக்குமோ என்று தான் ஐயம் கொள்வதாகக் கூறினான். மேலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் ரவிகுலப்பெருமைக்குக் களங்கம் ஏற்படாமலும் நடந்து கொள்ளுமாறு இராமனுக்கு அறிவுரையும் கூறி அனுப்பி வைத்தான் மன்னன். விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் நின்ற இராமன் தந்தை சொல்லிற்கு ஏற்ப தன் கடமையைச்செய்தல் வேண்டும் என்ற உறுதியுடன் புறப்பட்டுச் சென்றான்.

**கைகேயி சூழ்வினைப்படலம் :**

இராமன் அயோத்தியின் அரசனாக முடிபுணைந்து கொள்ளும் ஆனந்தச் செய்தியைத் தன் இளைய மனைவியான கைகேயியிடம் கூற அவளுடைய அந்தப்புரத்திற்குச் சென்ற தசரதனுக்குப் பேரிடி காத்திருந்தது. சாதாரணப் பணிப்பெண்ணான மந்தரையின் ஆலோசனைப்படி கைகேயி இரண்டு வரங்கள் பெற்று ஒன்றினால் இராமனைப் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுப்பவும் மற்றொன்றினால் பரதனுக்கு முடிசூட்டிமகிழவும் திட்டம் தீட்டப்பட்டது. அதைச் செயல் படுத்த துன்ப அறைக்குச் சென்று தலைவிரிகோலமாக தசரதன் வருகைக்காக காத்திருந்தாள் கைகேயி.

அந்தப்புரத்தின் பள்ளியறையில் கைகேயியைக் காணாமல் அவள் துன்ப அறையில் இருந்ததையும் அவளின் அலங்கோலத்தையும் கண்டு மிகவும் அதிர்ந்துபோன தசரதன் காரணம் கேட்டான். அப்போது கைகேயி கேட்ட வரங்களைச் செவிமடுத்த தசரதன் அடியற்ற மரம்போல மண்ணில் சாய்ந்தான்.

**அவள் கேட்டவரங்கள் :**

**ஏயவரங்கள் இரண்டின் ஒன்றினால் என்**
**சேய் அரசாள்வது சீதை கேள்வன்ஒன்றால்**

**போய்வனம் ஆள்வது எனப்புகன்று நின்றாள்**
**தீயவை யாவையினும் சிறந்த தீயாள். (கை.சூழ்வினைப்படலம் (191).**

என்ற பாடலில் அவள்கேட்ட வரங்கள் இரண்டும் கூறப்பட்டுள்ளன.! அவ்வரங்கள் இரண்டில் ஒன்றினால், அவளது மகனான பரதன்தான் அயோத்தியின் அரசனாகவேண்டுமாம். மற்றொரு வரத்தினாள் சீதையின் கணவன் பதினான்கு ஆண்டுகள் அந்த நாட்டிலேயே வாழ்தல் கூடாது. அவன்பதினான்கு ஆண்டுகள் வனவாசம் போக வேண்டும் என்பவைதான் அவ்வரங்கள்!

சற்றும் எதிர்பாராத சூழலில் அவள் கேட்ட வரத்தால் எவ்வாறு மன்னன் இதயத்துடிப்பு இருந்திருக்கும் ! அடியற்ற மரம்போலவும், இடியோசை கேட்ட நாகம் போலவும் துடித்தான். புலம்பித்தவித்தான். சற்று மனநிலை தேறிய தசரதன், கைகேயியிடம், கைகேயி கேட்பது தர்மத்திற்குப் புறம்பானது என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தாள் கைகேயி. ஆனால் தசரதன் கூறுவது தர்மம் அற்ற வார்த்தை என்றும் முதலில் கேட்பதைக் கொடுக்கின்றேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு அதைத்தராமல் மீறுவது மட்டும் தர்மம் ஆகுமா என்று கேட்டு தசரதன்கொடுத்த வரத்தின்படி, இசைவு தராது போனால் தான் இறந்துபடப்போவதாகவும், தன் இறப்பிற்குக் காரணமாகப்போகும் தசரதனைப்பெரும் பாவம் பற்றிக் கொள்ளும் என்றும் பயமுறுத்தவும் செய்தாள் கைகேயியாகிய அந்தப் பதிவிரதா!

**காலில் விழுந்தும் கதறினான் தசரதன் :**

அப்போது வேண்டுமானால் பரதனுக்காக இந்த நாட்டைப் பெற்றுக்கொள்.! முடிசூட்டிக்கொள்ளச்செய். ஆனால் இராமனை வனம் அனுப்பவேண்டாம் என்று தசரதன் கைகேயியினுடைய காலில் விழுந்தும் கேட்டுக்கொண்டான். மேலும் நீ இவ்வாறு அநீதியாகப்பெறுகின்ற அரசை உனது



மகனான பரதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான் என்றும் மன்றாடினான். அவனுடைய துன்பநிலைகண்ட தேவர்களும் சொல்லொணா துன்பம் அடைந்தனர். தசரதன் எவ்வாறு மன்றாடியும் கைகேயி அவன்மீது இரக்கம் கொள்ளவில்லை! அவளது இரும்பு மனதானது தான் நினைத்ததை அடைய வேண்டும் என்ற எண்ணத்திலேயே நிலைத்து நின்றது. சற்றும் சளைக்காத கைகேயி, தான் கேட்டனவற்றைத் தரவில்லை என்றால் குலப்பெருமையைப் பாராட்டிக்கொள்வதால் என்னபயன்? என்று ஏளனமுடன் கேட்டாள். அவளுடைய விடாப்பிடியான வேண்டுகோளை ஏற்கவும் முடியாமல், தரவும் முடியாமல் தவித்தநிலையில் தரையில்சாய்ந்தான் மன்னன். அன்றைய இரவுப்பொழுது அமங்கலமாக முடிவுற்றது.

அயோத்தி மக்கள் அனைவரிடத்திலும் அன்புடைய இராமன் மந்தரையிடத்தில் மட்டும் விளையாட்டுக்குறும்பு செய்தான் என்பார்கள். ஆறாம் வயது முதல் குருகுலக் கல்வி முடித்திருந்த பன்னிரண்டாம் வயது வரை இடைப்பட்டிருந்த ஏழு ஆண்டுகள் மந்தரையின் மீது மண்ணுண்டைகளை எய்தும், கூன் விழுந்த பிறகும் ஒட்டியிருந்த வயிற்றுப் பகுதிக்குள் களிமண் உருண்டை சரியாகச் சென்று தாக்கி பொத்தியதா என்றும் (பொருந்தியதா) பார்த்து மனம் மகிழ்ந்தான் இராமன்.

இவ்வாறாக, இராமனால் ஏழாண்டுகள் தான் அனுபவித்த கொடுமைக்குப் பழி தீர்க்க நினைத்த மந்தரையாகிய கூனி இரண்டு மடங்காக இராமனுக்குத் துன்பம் ஏற்படுத்தினாள். எனவேதான் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல ஏற்பாடு செய்தாள். பதினான்கு ஆண்டுகள் வனவாசம் என்பது நாடுகடத்தப்படும் பெரும் குற்றவாளிக்குக் கொடுக்கப்படும் தண்டனையாக அக்காலத்தில் இருந்தது. சிறியவள், சிற்றன்னையின் வேலைக்காரி என்பதால் அவளை மட்டும் ஏனோ (விதியின் விளையாட்டன்றி வேறில்லை) இத்தீராத வினையாட்டால் வருத்தி மனம் களித்தார் இராமர்!

யாராக இருந்தாலும் நல்வினையும் தீவினையும் பாவமும் புண்ணியமும் தன் விளைவைத் தந்துவிடும். அதை

அனுபவித்தே தீரவேண்டும் என்பது விதி. இதில் யாருக்கும் விதிவிலக்கு இல்லை என்பதை இராமனைக்கொண்டே அறியலாம்!

அரசனுக்கு எதிராகச் செயல்பட்டவர்களுக்குத் தான் அதாவது ராஜதுரோகம் இழைத்தவர்களுக்குத்தான் 14 ஆண்டுகள் வனவாசம்கொடுத்து நாட்டை விட்டுத் துரத்துவார்கள். இதைப் பரதன் வாயிலாக அதாவது இராமனைப் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுப்பிவைத்தேன் என்று ஆனந்தம்கொண்டிருந்த கைகேயியைப் பரதன் தூற்றியபோது நாடுகடத்தும் அளவிற்கு இராமன் என்ன குற்றம் செய்தார் என்று கேட்டதால் அறிய முடிகின்றது.

எனவே கூனியின் வலையில் விழுந்தாள் கைகேயி. உபாயம் கேட்டாள். மந்தரையும் பதில் கூறி, தூபம் போட்டு மறைந்தாள்! மகிழ்ச்சிக்கடலில் திளைத்து வந்த அயோத்தி அரண்மனை துயரத்தின் சாகரமாய் மாறித் தத்தளித்தது!

**இராமனை அழைத்துவா !**

அதிகாலை நேரம் வந்தது. அரசன் கைகேயியின் அந்தப்புரத்தில் இருப்பதை அறிந்த மங்கலம்பாடும் குழுவினர் அரசனைத் துயிலெழுப்ப அங்கு வந்தனர். அது சம்பிரதாயம். இறைவனுக்குப் பல்லாண்டு பாடி துயில் எழுப்புவதைப்போல, அக்காலத்தில் அரசனின் அந்தப்புரம் சென்று அரசனைக்காலையில் துயில் எழுப்புவதும் ஒரு சடங்காக இருந்துள்ளதை இதனால் அறியலாம்.! அம்மரபிற்கேற்ப, இசையோடு துயில் எழுப்ப வந்தவர்களைத் தடுத்தாள் கைகேயி.. சுமந்திரனை அழைத்தாள். இராமனைக் கூட்டிவருமாறு ஆணையிட்டாள்.

நிகழ்வதைப்புரிந்துகொள்ள முடியாத அமைச்சர் சுமந்திரன் இராமன் திருமாளிகை அடைந்து கைகேயியின் ஆணையை இராமனிடம் கூற இராமனும் அவள் மாளிகை அடைந்தான். தாயினும்மேலாகத்தான் கருதிவந்த கைகேயியின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். அந்தநேரத்தில் தன் தந்தையான தசரதன் தரை மீது அலங்கோலமாகவும், அரைகுறை நினைவுடனும் இருப்பதைக்கண்டு பெரும் தீங்கொன்று நாட்டில் நடைபெறப்போவதை யூகித்தான். இரண்டாவது முறையாக தசரதன் தன்னை அழைத்து அறிவுரை கூறியபோது, எந்த நிலையிலும் இராமன் தனது உண்மை நிலையிலிருந்து மாறக்கூடாது என்ற அறிவுரை அவன்மனத்தில் நிழலாடியது.



தன் திருவடியை வணங்கி, எழுந்துநின்ற இராமனிடம், கைகேயி அரசன் கட்டளை ஒன்று உள்ளது என்று கூறி, இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டும் என்பதும், தன்மகன் பரதன் நாட்டை ஆள மகுடம் புனைந்துகொள்ள வேண்டும் என்பதும் அரசகட்டளை என்றாள்.!

தசரத மன்னனின் கட்டளை என்று கைகேயி இராமனிடம் உரைத்த கொடிய எண்ணம் நிறைந்த பாடல் இதுதான் !

**“ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்**
**தாழிருஞ் சடைகள் தாங்கி தாங்க அரும் தவம் மேற்கொண்டு**
**பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணிய புனல்களாடி**
**ஏழிரண்டாண்டில வாவென்று இயம்பினன் அரசன் என்றாள்”**

என்பதே அரச கட்டளை. அதை நீ ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்றும் மறைமுகமாக வலியுறுத்தினாள் கைகேயி!

அப்போது அங்கு இருந்த சுமந்திரனும் இதை அறிந்துகொள்ளவேண்டும் என்பது அவள் எண்ணமாகும். ஏனென்றால் கைகேயியின் ஆணைகளை நிறைவேற்றித் தீரவேண்டிய அமைச்சர் அவர்தானே!

**நயம் காணல் :**

ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள நீபோய் தாழிருஞ்சடைகள் தாங்கி தாங்கரும் தவமேற்கொண்டு என்கிறாள். தவமே அரிதானது. தாங்கரும் தவம் என்றது என்னவென்றால் திருமணம் ஆகியும் கிருகஸ்த வாழ்க்கையை

இத்தனை ஆண்டுகளாக மேற்கொள்ளாமல் பிரம்மச்சரிய வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர் இராமனும் சீதையும். அந்த பிரம்மச்சரிய ஒழுக்கத்தையே வனவாசத்தின்போதும் மேற்கொண்டும் கடைப்பிடிக்கவேண்டும். கானகம் தனிமையானது என்றும், இல்லறத்தை மேற்கொள்ளும் வயதும் பக்குவமும் பெற்றுவிட்டதால் அவர்கள் இருவரும் கூடிவிடக்கூடாது என்றும், அதன் விளைவாக அவர்களுக்குப் புத்திரப்பேறு உண்டாகிவிடக்கூடாது என்பதும் கைகேயியின் ஆசையாக இருந்தது. ஒருவேளை அவ்வாறு நடந்துவிட்டால், அது தன் மகனாகிய பரதன் தொடர்ந்து அயோத்தியின் அரசனாக இருக்கமுடியாது! பட்டத்திற்குப் போட்டி வந்துவிடும் என்பது அவளுடைய கவலையாகும். எனவேதான் இக்கொடுமையைத் தரும் "தாங்கரும் தவமாகிய கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சரியாக வாழவேண்டும்'' என்பதை வலியுறுத்துகின்றாள்!

எனவே இராமனும் சீதையும் இத்தனை நாட்களாக மேற்கொண்டிருந்த நிலையைப் பின்பற்ற வேண்டும் என்கிறாள். வாரிசுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகச்செயல்பட்டாள் கைகேயி என்பது நயவுரை. மேலும் பரதன் அயோத்தியை ஆளவேண்டும் என்பதும் அரச கட்டளை என்றாள். அதைக்கேட்டு அதிர்ச்சி அடையாத ஸ்ரீராமன் தந்தையின் கட்டளை அதுவானால் அதைத் தாயாராகிய தாங்களே எனக்கு எடுத்துரைப்பதை விட சிறந்தபேறு வேறு எதுவும் இல்லை. எனவே உங்கள் ஆணையின்படி கேட்டு நடக்கும் பெரும்பேறு வேறு யாருக்கும் கிடைக்காத ஒன்று. எனவே இன்றைக்கே காட்டிற்குப்போகின்றேன் என்று சொல்லிவிட்டு நின்றான் ஸ்ரீராமன்.

தனக்கு அரசபதவி இல்லை என்பதையும், தன் தம்பியான பரதனே முடிசூட்டிக்கொள்வான் என்பதையும் அரச கட்டளையாக கைகேயியின் வாயின் மூலம் கேட்டறிந்த இராமனின் திருமுகத்தின் தன்மையைக் கம்பர் கூறும்பொழுது.



**"இப்பொழுது எம்மனோரால் இயம்புதல் எளிதே யார்க்கும்**
**செப்பருங்குணத்து இராமன் திருமுகச்செவ்வி நோக்கில்**
**ஒப்பதே முன்பு பின்பு இவ்வாசகம் உரைப்பக்கேட்ட**
**அப்பொழுது அலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா"**

என்று கூறி, இன்ப நிகழ்வுகளையும், துன்பத்தின் தாக்கத்தையும் ஒரேமாதிரியாகப் பாவித்து நடக்கும் இராமனின் சிறப்புமிகு நிலையை எடுத்துரைக்கின்றார். அதாவது எப்போது நோக்கினும் மலர்ந்த செந்தாமரையின் முகத்தைப்போல காட்சியளிக்கும் இராமனின் திருமுகம், கைகேயி கூறிய வார்த்தைகளைக் கேட்டபோது அப்பொழுதுதான் மலர்ந்த செந்தாமரையின் மலர்ச்சியை வெல்லும் தன்மையதாக இருந்தது என்னும் கம்பரின் கூற்று, அவருடைய கவிச்சிறப்பிற்கு ஓர் இமாலய உதாரணமாகும்.!

அதுமட்டுமன்றி, தான் தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து கானகம் செல்ல விரும்பியதாக ஸ்ரீராமன் உரைத்த மறுமொழியையும் சற்று நோக்கவேண்டும்.

**"மன்னவன் பணியன்றாகில் உன்பணி மறுப்பனோ யான்**
**என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?**
**என்னிதின் இறுதி அப்பாற் இப்பணி தலைமேற் கொண்டேன்**
**பொன்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்"**

என்று பதிலிறுத்தானாம் இராமன்.

இதைக்கேட்ட ஸ்ரீராமன் தனது தந்தையாகிய தசரதனால் இப்படிப்பட்ட வரத்திற்கு அனுமதி கிடைத்திருக்காது! அது மன்னவன் கட்டளையாக இருக்கவும் முடியாது என்று நம்பிய இராமனின் திடசித்தம் இதில் வெளிப்படுகின்றது. எனவே அதற்கு இராமன் கூறிய மறுமொழியில் "மன்னவன் பணி அன்று. ஆகில உம்பணி மறுப்பனோ யான்" என்று கூறியதாகவும் நயம் காணலாம்.

இராமனின் பதிலைக்கேட்ட கைகேயி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். வனவாசம் செல்வதற்குரிய மான்தோலையும், மரவுரியையும் தயார்படுத்தி வைத்தாள். இதற்கிடையில் தான் அரசனாக ஏற்பட்ட தடையையும், பதினான்காண்டுகள் ஆரண்ய வாழ்க்கையை வாழவேண்டும் என்றும் தனக்கு ஏற்பட்ட புதுச்சூழலைத் தன் தாயாகிய கோசலைக்கு எடுத்துரைக்க கோசலையின் இருப்பிடம் சென்றான் இராமன்.! தான் அரசமுடி புனைவதற்கு ஏற்பட்ட தடங்கலை இராமன் எடுத்துரைத்தான். அதைக்கேட்டு முடிசூடல் தடைப்பட்டதை அறிந்த கோசலை மிகுந்த துன்பம் அடைந்தாள். உன்னை முடிசூட்டிக்கொள்ளவேண்டும் என்று அரசன் கூறியது வஞ்சகமானசெயலா என்று புலம்பினாள். உன்னைப்பிரிந்து நான் எவ்வாறு உயிர்வாழ்வேன் என்று ஏங்கித்தவித்தாள்!

எனவே வனவாசத்திற்குத் தானும் உடன்வருவதாகக் கூறினாள். ஆனால் அதற்கு இராமன் கூறிய மறுமொழியானது அவனுடைய செம்மைப்பண்பை விளக்குவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லையென்று தாயிடம் கூறிய இராமன், பரசுராமன் தந்தைசொல்கேட்டு அரசபரம்பரையினரை கொன்றான் என்பதும் நாம் அறிந்துள்ளோம் அல்லவா? தந்தை கூறியதை ஏற்றுநடத்தல் தனயனின் கடமை அன்றோ ? மேலும் நான் வனம் சென்றுவிட்டால், யாரும் தசரதனுக்குத் துணையாக இருக்கமாட்டார்கள். அந்த அரசனுக்குத்தாரமான தாங்கள் தானே அவரைக்கடைசி காலத்தில் காப்பாற்றவேண்டும். பணிவிடைகளைச் செய்தல் வேண்டும். அது தமது கடமையல்லவா என்பதையெல்லாம் எடுத்துரைத்து, சமாதானம் செய்தான்.

தன்மகனின் கடமை உணர்வைக் கோசலைப் புகழ்ந்தாள். குலகுருவாகிய வசிஷ்டர் வேண்டியும் தனது



குறிக்கோளிலே சிறிதும் மாறாதவளாக இருந்த கைகேயியை முனிவரும் வெறுத்தார். அதைப்பற்றியெல்லாம் கிஞ்சித்தும் கவலை அடையாதவளாகவே கைகேயி இருந்தாள்.

தங்களின் அரசனாக பதவியேற்க இருந்த இராமன், அதைத்துறந்து வனவாசம் செல்லவேண்டி ஏற்பட்டதற்காக அயோத்தி மாநகரத்து மனித இனம் மட்டுமன்றி அசித்துக்களாகிய அஃறிணைப்பொருள்களும் அழுதனவாம்.

**நகர் நீங்கு படலக் கதைச் சுருக்கம் :**

இதனிடையில் தசரதனையும் கைகேயியையும் தூற்றின. இளவலாகிய இலக்குவன் பெருங்கோபம் கொண்டு தசரதனே கூறியிருந்தாலும் இந்த நிலவுலகம் முழுவதையும் உனக்கு நான் சொந்தம் ஆக்குவேன். அத்தகு ஆற்றல் என் வில்லிற்கு உண்டு என்று கூறி வெகுண்டு எழுந்தான். எதிர்த்துப் போரிடப்போவதாகவும் கூறினான்.

**சிங்கக்குருளைக்கு இடு தீஞ்சுவை ஊணை நாயின்**
**வெங்கண் சிறுகுட்டிக்கு ஊட்ட நினைத்தாள்**

இக்கைகேயி என்று மனம்கொதித்து, இராமனை நோக்கி, நீதான் இந்த நாட்டின் அரசன்! அதை மும்மூர்த்திகளும் வந்து தடுத்தாலும் அவர்களை எதிர்த்துப்போரிட்டு வென்று உனக்கு நான் முடிசூட்டுவேன் என்று சூளுரை செய்தான் இலக்குவன்.

ஆனால் ஸ்ரீராமனோ, தன்தம்பியின் கோபத்தை அடக்கி தற்போது நடந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் யாரும் காரணம் இல்லை. யாரையும் நாம் குற்றம் சுமத்தமுடியாது. இது விதியின் விளையாட்டாகும் ! அவ்விதியை எதிர்த்து நிற்கக் கூடியவர்கள் யாருமே இல்லை என்று இராமன் கூறியதால், ஸ்ரீராமாவதாரம் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமே என்றாலும், இராமன் விதியின் விளையாட்டை நம்புகின்ற ஒரு சாதாரண மனிதனாக நடந்துகொள்வதையும், முடிசூட்டிக்கொள்ளவேண்டும் என்ற ஆசையற்ற ஒரு அற்புத மானிடனாகவும் கம்பரால் படைக்கப்பட்டுள்ளதை அறியலாம்!

**“நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே**
**பதியின் பிழையன்று பயந்து நமைப்புரந்தாள்**
**மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த**
**விதியின்பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது” (421)**

(என்றான் இராமன்.) எனும் பாடல் நினைந்து நினைந்து இன்புறத்தக்க நயமுடையது அன்றோ?

இளையவன் இலக்குவனைச்சமாதானம் செய்தார் ஸ்ரீராமர். இவ்வாறு நடப்பதில் யாருடைய தவறும் இல்லை. இது விதியின் பிழை. ஆகையால் வெகுளாதே ! என்று கூறித் தேற்றினார்.

தான்வனவாசம் செல்லவேண்டியதைத் சீதைக்குச் சொல்லிவிட்டுப் புறப்படலாம் என்பதற்காகத் தன்மனைவியை அடைந்தான் இராமன். சீதையிடம் “முடிசூட்டிக்கொள்வதில் ஒரு சிறு திருத்தம் ஏற்பட்டுள்ளது. எனக்குப் பதில் என்தம்பி பரதன் அரசனாக முடிசூட்டிக்கொள்வான். அடியேனாகிய யான் பதினான்காண்டுகள் காட்டை ஆண்டு விட்டு வருகின்றேன்! நீ கலங்காமல் இரு” என்று கூறினான்.

**“பொரு இல் எம்பி புவி புரப்பான் புகழ்**
**இருவர் ஆணையும் ஏந்தினென் இன்றுபோய்**
**கருவி மாமழைக் கல் கடம் கண்டு நான்**
**வருவென் ஈண்டு நீ வருந்தலை என்றான் (507).**

அதைக்கேட்ட சீதை வருந்தினாள்! எதற்காக என்றால், இராமன் அரசனாகவில்லையே, தான்பட்டத்து மகிஷியாக பதவியேற்க முடியாமற்போனதே என்பதற்காக இல்லை. ஆனால் நான் வனவாசம் போய்வருகின்றேன் நீ கவலைப்படாமல் இரு என்று இராமன் கூறினானே அதற்குத்தான் வருத்தப்பட்டாள் என்று கம்பர் கூறுகின்றபோது, சீதா பொன் பொருள் மீது பற்றற்ற நிலை இருந்ததையும் அறிவதோடு, தன்பதியின் (கணவனின்) துன்பத்தில் தான் பங்கேற்கவேண்டிய தனது கடமையை இராமன் மறுக்கின்றாரே என்பதற்காகவும் வருந்தினாளாம். மேலும் வனவாசம் என்பது



மிகுந்த துன்பம் தருவது. காடு சுடும் என்று தன் கூற்றிற்கு விளக்கம் கூறிய இராமனிடம் “நின்பிரிவனும் சுடுமோ காடு” என்று கேள்வி எழுப்பி, தான் எந்த நிலையிலும் இராமனை விட்டுப்பிரியமாட்டேன் என்று கூறுவதாலும், அது அந்த மகாலட்சுமித்தாயார் அகலகில்லேன் இறையும் என்றும் அலர்மேல் மங்கை மணாளனிடம் கூறியுள்ள கூற்றினை மெய்ப்பிப்பதாகும் அன்றோ? இவற்றைக் கம்பன் கவியிலேயே நோக்குவோம்.

**“நாயகன் வனம் நண்ணல் உற்றான் என்றும்**
**மேயமண் இழந்தான் என்றும் விம்மலள்**
**நீ வருந்தலை நீங்குவன் யான் என்ற**
**தீய வெஞ்சொல் செவி கடத்தேம்புவாள். (508)**

**பரிவு இகந்த மனத்த ஒரு பற்ற இலாது**
**ஒருவுகின்றனை ஊழி அருக்கனும்**
**எரியும் என்பது யாண்டையது ஈண்டு நின்**
**பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள். (512)**

வேறு வழியின்றி போனதால் தன்னோடு, இலக்குவனும், சீதையும் காட்டிற்கு வர இசைந்தான் இராமன். எனவே மூவருமாக, கடைசியாகச் சுமத்திரையிடம் விடைபெற்றுக் கானகம் செல்வதைக் கூறினர். அயோத்தி நகரம் இவ்வளவு துன்பத்தில் தவித்தபோதும், சற்றும் மனக்கலக்கம் அடையாமல், வருவதை எதிர்கொண்டு, மன உறுதியுடன் இருந்தவள் சுமத்திரை ஒருத்திதான் என்றால் அது மிகை அன்று!

வனவாசம் செல்லும் இராமனோடு, தன்மகனாகிய இலக்குவனும் உடன் செல்வதைச் சுமித்திரைத் தடுக்கவில்லை. ஆனால் இலக்குவனுக்குப்பற்பல அறிவுரைகள் கூறி, இந்தப்பதினான்கு ஆண்டுகளிலும், சீதா, ராமர் இருவரையும் கண்போல் காக்கவேண்டியது இலட்சுமணன் கடமை என்பதை வலியுறுத்தினாள்! மேலும் அவள் தன்மகனாகிய இளையாழ்வார் என்ற இலட்சுமணனைப்பார்த்து “இனி ஸ்ரீராமன் தான் உனது தந்தை. சீதாதேவியே உன்தாய் என்று நினைந்து

அவர்களுக்குவேண்டிய குற்றேவல் ஆகிய பணிவிடைகளைச் செய்தல்வேண்டும்." என்று அறிவுரை கூறி, அனுப்பி வைத்தாள்.

இதற்கிடையில், வனவாசம் வேண்டாம் என்று சுமந்திரனும், வசிஷ்டரும் கூறியபோது, அவர்கள் கூறுவதைப்பின்பற்றுவது எவ்விதத்திலும் தர்மம் ஆகாது என்று மறுத்துரைத்து, கைகேயிடமும் தன் தந்தையிடமும் ஆசிபெற்று வரலாம் என்று மூவரும் கைகேயியின் இருப்பிடத்திற்குச் சென்றனர். ஏற்கனவே கைகேயி கொடுத்த மரவுரியையும், மான்தோலையும் அணிந்து கொண்டனர்.

தன்னுயிராகிய இராமனோடு, இளவலாகிய இலக்குவனும், சீதாவும் வனவாசம் செல்கின்றனர் என்று ஓரளவு சுயநினைவிற்கு வந்த தசரதன் அறிந்து, இராமனுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து படைகளோடு அனுப்பலாம் என்று நினைத்தான் தசரதன். ஆனால் பரதனே அரசனாவான் என்ற வரத்தைக் கொடுத்தவுடனே, நாடும் நகரமும் நன்செயும், புன்செயும். நானாவிதப்படைகளும் ஆகிய அனைத்தும் பரதனுக்கே சொந்தம் என்று கூறி தடுத்தாள் கைகேயி.! அவளுடைய இரக்கமற்றத் தன்மையைக்கண்டு அங்கிருந்த வசிஷ்டரிடமும், சுமந்திரனிடமும் "கைகேயி என் மனைவி இல்லை. பரதனும் என் மகன் இல்லை. அவர்கள் இருவரையும் நான் தியாகித்து விடுகின்றேன்" என்று சாபமிட்டு வெறுத்துரைத்தான் தசரதன். வசிட்டனும் கைகேயியை இகழ்ந்துரைத்தும் அதை அவள் லட்சியம் செய்யவில்லை. எனவே தான் மேலும் அவளிடம் தங்க விரும்பவில்லை என்றும், அங்கிருந்து கோசலை இருப்பிடத்தில் தன்னைச் சேர்த்துவிடுமாறும் சுமந்திரனிடம் தசரதன் வேண்டியதால், அமைச்சரும் அவ்வாறே செய்தார்.

முடிதுறந்த வள்ளலாகிய இராமன், பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டுமாம் என்றும், பரதன் அரசனாக முடிசூட்டிக்கொள்வான் என்றும் அறிந்த அயோத்தி மாந்தர் ஒருபக்கம் கொதித்து எழுந்தனர். வயதான காலத்திலும் காமத்தின் வயப்பட்டான் தசரதன். எனவேதான் இத்தகைய



அதர்மத்தைச் செய்கின்றான் என்றும் தூற்றினர். தாங்கள் மேற்கொண்டிருந்த பணிகளைப் புறக்கணித்து விட்டு, இராமனோடு தாங்களும் வனம் செல்லவேண்டும் என்று பலரும் முடிவுகட்டினர்.

சிலர் அழுது புலம்பினர். நாம்செய்த பாவச்செயலின் பயனே தற்போது இராமன் வனம் செல்வதை அறியச்செய்து நம்மை வாட்டுகின்றது. நமது கண்ணும் பெரும்பாவம் செய்துள்ளது. எனவேதான் இத்தகைய காட்சியைக் காண நேர்ந்தது என்று அரற்றி புரண்டழுதனர்.

இவ்வாறு மனித வர்க்கத்தினரான அந்நகரமக்கள் வருந்தியதைப் பல நெஞ்சைத் தொடும் பாடல்களில் எடுத்துரைத்துள்ளார் கம்பநாட்டாழ்வார். சுமார் பத்துப்பாடல்களில் (393 முதல் 402 வரை) அவர்களின் துன்பநிலையைக் கம்பர் எடுத்துரைத்தாலும், அவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தார்போல் அமைந்திருக்கும் பாடலை நோக்குவோம்!

**"மண்செய்த பாவம் உளதென்பார் மாமலர்மேல்**
**பெண்செய்த பாவம் அதனின் பெரிது என்பார்**
**புண் செய்த நெஞ்சை விதி என்பார் பூதலத்தோர்**
**கண்செய்த பாவம் கடலின்பெரிது என்பார். (393)**

எடுத்துரைக்கும்போது தங்கள் கண்கள் செய்தபாவம் கடலினும் பெரிது என்றும், அப்பாவச்செயலே தங்களை இத்தகு காட்சியைக் காணச் செய்கின்றது என்றும் புலம்பினர்.

இத்தகைய சூழ்நிலையில் அந்த மூவரும் வனம் சென்ற முறைமையாக கம்பர் கூறுவது.

**சீரை சுற்றித் திருமகள் பின்செல**
**மூரிவிற்கை இளையவன் முன்செல**
**காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்**
**ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ? (520)**

என்ற பாடலால், திருமகளின் அவதாரமான சீதை அனைவருக்கும் பின்னே செல்லவும், வில்லைக் கையில்

கொண்டவனாகிய இலட்சுமணன் முன்னே செல்லவும், கார்மேனிச்செங்கண்ணன் ஆகிய இராமன் நடுவிலே சென்றான் என்பதை உணர்த்துகின்றார்.

ஆறறிவு படைத்த மனித வர்க்கத்தினர் மட்டுமன்றி, அசித்துக்களாகிய அஃறினைப்பொருள்களும், அதாவது உயிருள்ள பிராணிவகைகளும், தாவரங்களும் கூட இராமன் வனவாசம் செல்வதை உணர்ந்து வருந்தி அழுதன என்கிறார் கம்பர். இது சற்று உயர்வு நவிற்சியாகத் தோன்றினாலும் அவ்வளவு தூரம் அவ்வப்பொருட்களையும், விலங்குகளையும் நேசித்த பேரன்பு பூண்டவனாக இராமன் இருந்ததின் விளைவே இச்செயல்கள் என்று அறியவேண்டும்.

**கிள்ளையொடு பூவை அழுத கிளர்மாடத்து உள்**
**உறையும்பூசை அழுத உரு அறியாப்**
**பிள்ளை அழுத பெரியோரை என்சொல்ல**
**வள்ளல்வனம் புகுவான் என்றுரைத்த மாற்றத்தால். (388)**

**ஆவும் அழுத அதன்கன்று அழுத அன்றலர்ந்த**
**பூவும் அழுத பனல் புள் அழுத கள் ஒழுகும்**
**காவும் அழுத களிறு அழுத கால்வயப்போர்**
**மாவும் அழுத அம் மன்னவனை மானவே (390).**

என்பன போன்ற பலபாடல்களில் கம்பர் கூறியிருந்தாலும், கிளிகளும், மைனா போன்ற பறவைகளும், பூனைகளும் வருந்தி அழுதன என்று கூறி, அவையே இவ்வாறு அழுதுபுலம்பின என்றால், மக்கள் எவ்வளவு அழுதிருப்பார்கள் என்பதை நம் கற்பனைக்கே விட்டுவிடுகின்றார் கம்பர்.

மேலும் பசுக்களும், அவற்றின் கன்றுகளும், நீர்நிலைகளில் அப்போது மலர்ந்த பூக்கள், நீர்நிலைகளிலும், சுற்றிலும் கூடு அமைத்து வாழ்ந்திருந்த பறவையினங்கள், களிறுகள், குதிரைகள் எல்லாம் அழுதன என்று சொல்லி, இந்த நிலைக்குக்காரணமான தசரதனும் அழுதானே! என்று வியப்படைகின்றார் கம்பர். நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றார்! காரணம் இது தசரதன் ஆணையால் ஏற்பட்டது அன்று. மந்தரை, மற்றும் கைகேயியின் சூழ்ச்சியினால் உறுவான சூழ்நிலை என்பதை அறிவுறுத்துகின்றார்.!



அவ்வாறு அவர்கள் மூன்றுபேரும் சென்றபோது, இத்தனை நாட்களாக இன்பக் கடலிலே திளைத்திருந்த அயோத்தி மக்கள் அனைவரும் துயரக்கடலில் தத்தளித்து, மீளமுடியாமல் தவித்தனர். பலவகைக்கேளிக்கைகளிலும், ஆடல்களிலும், பாடல்களிலும் காலத்தைக்கழித்த அவர்கள், அவற்றை எல்லாம் மறந்து சோகப்பெருமூச்சு எறிந்தனர்.

சுமந்திரன் வற்புறுத்தலாலும், நடந்து சென்றால் நிச்சயம் அம்மனிதக்கடலானது தாங்கள் வனம் போவதை ஏற்காது, வழியும் விடாது என்றுணர்ந்த மூவரும், குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறி அமர, தேர் வீதியின் வழியே சென்றது.

பசுவைத்தொடர்ந்து செல்லும் கன்றுகள் போல் இராமனைப் பின்தொடர்ந்த மக்கள் வெள்ளத்தைக்கடந்து தாய்மார்களையும் முனிவரையும் வணங்கி இராமன் உள்ளிட்ட மூவரும் தேர் ஏறிச் சென்றனர். தேர் நகரத்தின் எல்லையைக் கடந்தபோதும் மக்கள் வெள்ளம் ஊர் திரும்பவில்லை. என்னசெய்வதென அறியாமல் அவர்கள் இருக்க, பகல் மறைந்து இரவு கவ்வத்தொடங்கியதால், அனைவரும் ஒரு சோலையில் தங்கினர். அவ்விரவுப் பொழுதை அங்கே கழிக்கத்தலைப்பட்டனர்.

இந்நிலையில் கோசலையின் அந்தப்புரத்தில் விடப்பட்ட தசரதன் மிகவும் மோசமான உடல்நிலையை அடைந்தான். இராமன்வனம் சென்றதால், தான் இறக்கப்போவது உறுதி என்று கோசலையிடம் தான் பெற்ற சாப வரலாற்றைத் தசரதன் கூறினான். (பாடல் 364 முதல் 378 வரை).

**அந்தச் சாபவரலாற்றின் சுருக்கம் :**

கண்ணற்ற முனிவர் தம்பதியினரின் மகனான சுரோசனன் என்பவனை ஆற்றில் நீர்பருக வந்த யானை எனநினைத்து, ஓசை வந்த வழியே தன் அம்பைச்செலுத்த, அது ரிஷி குமாரனாகிய சுரோசனன் மார்பில் தாக்கியது. தவறுதலாக அம்பை எய்து

கொன்றுவிட்டான் வேட்டைக்குச் சென்றிருந்த தசரதன். பின்னர் தன் தவறை உணர்ந்து அத்தம்பதியினரைச் சரணடைந்து உண்மையைக் கூறி வருந்தினான். அப்பொழுது அவர்கள் கண்ணற்ற எங்களின் துன்பங்களைப்போக்கி கண்ணுக்குக் கண்ணாக விளங்கிய எங்கள் புதல்வனைப்பிரிந்து எங்களால் இனியும் வாழமுடியாது. உடனே தீமூட்டி உயிர்த்துறக்கின்றோம். இதேபோல் நீயும் உன்மகனைப்பிரிந்த ஏக்கத்தால் உயிர் துறக்கவேண்டும் என்ற அவர்கள் சாபம் இட்டனர்.

அந்தச்சாபம் இப்போது நிறைவேறும் என்று கூறி கலங்கினான் தசரதன். கோசலைத் தேறுதல் கூறியும் அவன் துன்பம் நீங்கவில்லை. வாழ்வின் இறுதிகட்டநிலைக்கு அவன்சென்றுவிட்டான் என்பதை அனைவரும் உணர்ந்தனர்.!

இங்கே குறிப்பிடப்பட்ட சுரோசணன் என்ற முனிபுத்திரனின் பெயரை சிரவணன் என்றும் அழைப்பர். இக்கதையானது ஆங்கிலேயர்கள் நமது நாட்டை ஆட்சிசெய்த அக்காலக்கட்டத்தில் சிரவணன் பிதுர்பக்தி நாடகம் என்றபெயரில் ஆங்காங்கே நடத்தப்பட்டது. இதைக்கண்ட நமது தேசத்தந்தை மகாத்மாகாந்தியடிகள், தானும் பெற்றோர்களிடம் பக்தி கொண்டவனாக இருக்கவேண்டும் என்றும், இதேபோல் ஆங்காங்கே அரங்கேற்றுப்பட்டுவந்த அரிச்சந்திரன் நாடகத்தைக் கண்டு தான்பொய்யே எக்காலத்திலும் பேசுதல் கூடாது என்ற உறுதிமொழியையும் ஏற்றுக் கொண்டதாகக் கூறுவார்கள்.

அயோத்தியிலிருந்து இரண்டு காத தூரத்தில் இருந்த சோலையில் அவர்கள் அன்றிரவு தங்கிய மூவரும் ஊருக்குத் திரும்பிவிட்டதைப்போலத் தேர்ச்சுவடு நிலத்தில் பதியுமாறு சமந்திரரைத் தேரோட்டச்செய்தான் இராமன். அவரும் அவ்வாறு செய்ய, பொழுது விடிந்தவுடன் அரைகுறையாய் விழித்தெழுந்த மக்கள் கூட்டத்தினர் சிலர்தேரானது ஊர்ப்பக்கம் திரும்பியுள்ளது என்று கூறிக்கொண்டு நகரை நோக்கி ஓடினர்.



ஆனால் அவ்வாறு போக்குக்காட்டிவிட்டு, மூவரும் வெகுதூரம் கடந்து சென்று, கங்கையாற்றின் கரையிலுள்ள சிருங்கிபேரம் என்னும் ஊரை அடைந்தனர்.

**சிருங்கி பேரத்தின் தலைவன் :**

அனைவரும் வனத்திற்குள் புகுதற்கு முன்பாக கங்கையாறும், அக்கரையில் இருந்த சிருங்கிபேரம் என்னும் ஊர் குறுக்கிட்டது. அவ்வூரைத் தலைநகராகக் கொண்ட வேடர்குலத் தலைவன் குகன் என்பவன் இருந்தான். இவர்களின் குலம் புளிஞர் குலம் என்றும் அழைக்கப்பட்டது.. இந்தக் குகன் என்பவன் ஆயிரம் ஓடங்களுக்குச் சொந்தக்காரன். இவனுடைய உதவியின்றி யாரும் கங்கையைக்கடந்து போகமுடியாது. தன்தொழிலில் மிகவும் நேர்மையும், சுற்றத்தவர்கள்மீது அன்பும், ஆதரவும் காட்டி தன் ஊர் மக்களை கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தான். இவன் மிகப்பெரும் இராமபக்தன். இச்சிருங்கிபேரம் என்பது அயோத்தி மாநகரத்திற்கு மிக அருகில் இருந்ததாலும், அயோத்தியின் அரசகுமாரர்களையும், அரசனின் செயல்பாடுகளும் அவ்வப்போது இவனுக்குத்தெரியவரும். ஒருநாள் அரசகுமாரரான இராமன் அக்கானகப்பகுதியில் இராமபெருமான் தங்கியுள்ளார் என்பதை அறிந்து கையுறைப் பொருள்களோடு காணச்சென்றான். தேனையும், திருத்திய மீனையும் இராமனுக்கு உணவாகக்கொடுக்க எடுத்துச்சென்றான். அந்த குகன்.!

குகன் கொண்டு வந்த கையுறைப் பொருள்களாக கம்பர் கூறும் கவிநயமிக்க பாடல்.

**இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன் எல்லை நீத்த**
**அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத்**
**திருத்தினென்கொணர்ந்தேன்என்கொள் திருவுள்ளம் என்ன வீரன்**
**விருத்தமாதரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான் (649)**

குகன் கொண்டு வந்த உணவுப்பொருள்களில் மீனாகிய உணவை உட்கொள்ளும் பழக்கம் ஸ்ரீராமனுக்கு இல்லை. அதை அறியாதவன் குகன். எனினும் அவன் அன்போடு

அவற்றைக்கொண்டு வந்து கொடுத்ததால், அதை ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தம் என்று, அக்குகனின் மனம் வருத்தமுறாமல் எடுத்துரைத்தான் இராமன் என்பதைப் பின்வரும் பாடலால் புலப்படுத்துகின்றார் கம்பநாட்டாழ்வார்.

**அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்**
**தெரிதரக் கொணர்ந்தது என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே**
**பரிவினின் தமீஇய என்னின் பவித்திரம் என்மனோர்க்கும்**
**உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான். (650)**

இராமனின் இத்தகைய இனிய சுபாவத்தால், மேலும் கவரப்பட்ட அக்குகன் தன் ஊரிலேயே தங்கிவிடுமாறும், தேனும் தினைமாவும் உண்பதற்கு உள்ளதாலும், அன்புடைய எங்கள் குலம் உன்னைச்சுற்றி இருப்பதாலும், சோலைகளால் சூழப்பட்ட ஊராகத் தன்னூர் இருப்பதாலும், அனைத்திற்கும் மேலாக குளித்து நீராடி மகிழ கங்கை இருப்பதாலும், அங்கேயே தங்கிவிடுமாறு இராமனை அக்குகன் வேண்டினான்.!

**தேன் உள தினைஉண்டால் தேவரும் நுகர்தற்காம்**
**ஊன்உள துணை நாயேம் உயிர்உள விளையாடக்**
**கான்உள புனல்ஆடக் கங்கையும் உளதன்றோ**
**நான் உளதனையும் நீ இனிது இரு நட எம்பால். (663).**

பற்பல காரணங்களைக் கூறி மறுப்புரைத்த இராமன் அக்குகனின் அன்பினால், கவரப்பட்டு, அவன் தன்மீது வைத்துள்ள பக்தியைக்கண்டு பெருமிதமுற்றான். வேடுவர் குலத்தைச் சேர்ந்த அவனைத் தன் தம்பியாய் ஏற்றுக் கொண்டான் இராமன் என்னும் கம்பரின் கூற்றால், சாதி, மத, பேதம் காணாமல் வெளிப்படுவதைக் காணலாம்.

**அன்னவன் உரைகேளா அமலனும் உரை நேர்வான்**
**என்உயிர் அனையாய் நீ இளவல் உன்னிளையான் இந்**
**நன்னுதலவள் நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்**
**உன்னுடையது நான்உன் தொழில் உரிமையின் உள்ளேன்.(676)**

என்றும்,



**துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது அது அன்றிப்**
**பின்பு உளது இடைமன்னும் பிரிவு உளது என உன்னேல்**
**முன்பு உளெம் ஒருநால்வேம் முடிவு உளது என உன்னா**
**அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம் (677)**

அதாவது, “நீ என் உயிர்போன்றவன். இன்மேல் நீயும் என்னுடைய தம்பியாவாய். என்னுடைய தம்பியாகிய இலக்குவன் இனி உனக்கும் தம்பிதான். இந்தச் சீதை இனிமேல் உனக்கும் அண்ணியாவாள்.” என்றும் கூறி குகனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டான்.

இதனால் மனித இனத்தைச் சமமாகக் கருதியவன் அந்தச் சக்ரவர்த்தித் திருமகன். உன்னுடன் சேர்த்து தசரதனுக்கு இனி ஐந்து புதல்வர்களாக ஆனோம் என்று கூறி, அவ்வேடுவனைத்தன் தம்பி என்று பிரகடனம் செய்கின்றான் ஸ்ரீராமன்.!

இதனால் ஓரளவிற்குச் சமாதானம் அடைந்தான் அக்குகன். அக்குகனிடம், தங்கள் மூவருக்கும் கங்கையைக் கடக்க உதவுமாறு இராமன்வேண்டினான். குகனும் அவர்கள் கங்கையின் அக்கரையை அடைய உதவிபுரிந்தான்.

இறுதியாகவும் தன்னுடனே இருக்குமாறு குகன் வேண்டுகின்றான். ஆனால் கானகம் செல்லவேண்டும் என்பதே தந்தையின் கட்டளை என்பதைச் சுட்டிக்காட்டி கங்கையைக் குகனின் உதவியோடு கடந்தனர். தந்தை ஆணையைத் தாய் எடுத்துரைக்கத் தலைமேல் ஏற்று நடந்தவனாகிய தருமத்தின் தலைவன் ஸ்ரீராமன் சீதாவும், தம்பியும் பின்தொடர, அடர்காட்டை நோக்கி மேலும் நடந்தார்கள்.

அவர்கள் நடந்து சென்றதையும், ஸ்ரீராமனின் அழகிய தோற்றத்தையும் கம்பர் கூறுகின்றபோது, இராமனின் பேரழகு வெளிப்படுகின்றது. இராமனுடைய வண்ணம் (நிறம்) எவ்வாறு இருந்தது என்று ஒப்புமை கூறவந்த கம்பர், இராமன் நிறம் மை போன்ற கருமைநிறமா? மரகதப்பச்சை போன்ற நிறமா? ஆர்த்தெழுகின்ற கடலின் நீலநிறமா? மழைமேகம் போன்ற

கார்வண்ணமா? என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாதவாறு உள்ளதே! ஐயகோ, இவனுடைய அழகை யான் என்னவென்று கூறுவேன்? ஒன்றும் புலப்படவில்லையே என்று கம்பனே தத்தளித்துப்போனானாம்! இவ்வரிய நயமிக்க பாடல் வருமாறு.

**“வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியன் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்**
**மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ**
**ஐயோ இவன்வடிவென்பது அழியா அழகுடையான்.**
**(கங்கைப்பட610)**

இங்கே ஒரு மாற்றம், அதாவது மூவரும் நடந்து சென்றதில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளதை நாம் அறியலாம்! இம்மூவரும் அயோத்தி நகரைவிட்டு வனவாசத்திற்குக் கிளம்பியபோது, சீரைச் சுற்றி திருமகளாகிய சீதா பின்னால் செல்ல, இளையவன் முன்னே செல்ல, இராமன் அவனைத் தொடர்ந்து சென்றதாகப்பாடியுள்ளார். ஆனால் சித்ரகூடத்தில் வெய்யோன் ஒளிதன்மேனியில் என்ற பாடலில், பொய்யோ எனும் இடையை (இடுப்பினை) உடையவளான சீதையோடு, இளையவனாகிய இலட்சுமணனோடும் இராமன்சென்றான் என்னும்போது சீதை நடுவிலே சென்றுள்ளாள்.

எனவே வனத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் ஏதேனும் ஏற்பட்டால், அதைத்தடுத்து நிறுத்தும் ஆற்றல்பெற்ற இராமன் முன்னே செல்ல, அதையடுத்துச் சீதாவும், கடைசியாக இலக்குவனும் சென்றுள்ளார்கள்.

குலசேகர ஆழ்வார், தசரதன் புலம்பலாகப் பாடியுள்ள மனதை உருக்கும் பாடலிலும், “நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும் பின்புபோக எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ?” என்று புலம்பியதாகவுமே பாடப்பட்டுள்ளதை அறியலாம்!

அவ்வாறு நடந்தவர்கள் அவ்வனப்பகுதியில் இருந்த பரத்வாஜர் ஆசிரமம் அடைந்தனர். கங்கை, யமுனை, சரஸ்வதி, என்ற மூன்று ஆறுகளும் கலக்கும் திரிவேணி சங்கமத்தின்



அருகில் அமைந்திருந்தது. வேணி என்றால் கூந்தல் பிரிவு என்று பொருள். மகாலட்சுமித்தாயாரின் மூன்று கூந்தல் பிரிவுகளாக இவை உள்ளன என்பதால் அந்தப்பெயர் ஏற்பட்டது.

அப்பரத்துவாஜ முனிவரின் ஆசிரமம் தற்போது அலகாபாத் நகரம் என்றும், பிரயாகை என்றும் பக்தப்பிரயாகை என்றும் அழைக்கப்படுகின்றது. இங்குதான் 12.ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளா நடைபெறுகின்றது.

மரவுரியையும், மான்தோலையும், திரித்துவிடப்பட்ட சடாமுடியினையும், கையில் கமண்டலத்தையும் கொண்டிருந்த இந்த பரத்வாஜர் வால்மீகியின் சீடர் ஆவார். ஆண் அன்றிலைக்கொன்ற வேடனுக்கு வால்மீகி சாபம் இட்டபோது பரத்வாஜரும் உடன் இருந்தார். தமஸி நதிக்கரைக்குச் சென்றார் வால்மீகி என்பதை அறிந்தோம். அங்கேதான் மாநிஷாத ப்ரதிஷ்டாம்.. என்ற சுலோகம். அனுஷ்டுப் என்னும் பா வகையால் வால்மீகி வாயினின்றும் வெளிப்பட்டது என்பதையும், அதையே முதல் சுலோகமாகவைத்து, இராமாயணம் எழுதிப் படைக்குமாறு பிரம்மன் வேண்ட வால்மீகி இராமாயணம் உருவாயிற்று என்பதையும் முன்னுரைப் பகுதியிலும், காவியம் பிறந்த கதையிலும் கண்டோம்.!

பரத்வாஜ முனிவர் ஆசிரமத்தில் அன்றிரவு மூவரும் தங்கினர். அடுத்தநாள் காலையில் சித்திர கூடம் செல்ல முனிவரிடம் ஆசிபெற்றுப் புறப்பட்டனர்.

எனவே முதலில் அதாவது ஸ்ரீராமனின் வனவாச காலத்தில் வால்மீகி ஆசிரமம் கங்கைநதியின் மற்றொரு கிளைநதியான தமசா எனும் ஆற்றங்கரைப் பகுதியில் இருந்தது. பரத்வாஜர் ஆசிரமத்தை அடுத்ததாக சித்ரகூட (சித்திரகூடம்.) வனப்பகுதி இருந்தது. அங்கு செல்லப் புறப்பட்டனர்.

அப்பகுதியில் இருந்த முனிவர்கள் அனைவரும் மூவரையும் நன்முறையில் வரவேற்றனர். தங்களின் குடில்களில் தங்கவைத்து அவர்களுக்கு விருந்தோம்பல் செய்தனர் என்பதைக் கூறும்போது,

**மனையின் நீங்கிய மக்களை வைகலும்**
**நினையும் நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்**
**அனையர் வந்துற ஆண்டு எதிர்ந்தார்கள்போல்**
**இனிய மாதவப் பள்ளி கொண்டு எய்தினார். (622)**

என்றபாடலாலும் : அமரர்களுக்கு அமிழ்தத்தை அளித்துக்காத்தவனான அந்த இராமனுக்கு, முனிவர்கள் மெல்லடகு (மென்மையான காய், கனி, கிழங்குகள்) போன்றவற்றை உணவாகப்படைக்க அதை உண்டு மகிழ்ந்தான் என்றும் கூறியுள்ளார்.

**வருந்தித் தான்தர வந்த அமுதையும்**
**அறுந்தும் நீர் என்று அமரரை ஊட்டினான்**
**விருந்து மெல்லடகு உண்டு விளங்கினான்**
**திருந்தினார் வயின் செய்தன தேயுமோ? (636).**

சித்ரகூடம் என்றால் அழகிய மலை உச்சி என்று பொருளாகும். சித்திர கூடத்தை அடைய சிறியதும் பெரியதுமான பல நீரோடைகளைக் கடக்கவேண்டி இருந்தது. குருகுலத்தில் தான்பெற்ற பயிற்சி.. இலக்குவன் ஓடங்களையும் தெப்பங்களையும் கட்டி சீதா ராமனைக் கடக்க உதவி புரிந்தார் என்று அறிகிறோம். அந்தப்பகுதியில் தம் துன்பத்தை மறந்து நிம்மதியாகக் காலம் கழித்தனர் மூவரும்.

இவர்கள் சித்ரகூடத்தில் இவ்வாறிருக்க, ஊர் திரும்பிய அமைச்சர் சுமந்திரன் தசரதன் இருந்த கோசலையின் மாளிகைக்குச் சென்றார்.

**சொர்க்கம் புகுந்தான் தசரதன் !**

அவர்மூலம் இராமன் வனம் சென்றுவிட்டான் என்று அறிந்த தசரதன் உயிர் பிரிந்தது. இராமனைப் பிரிந்தால் தன் உயிர் பிரிந்து விடும் என்ற தான் பெற்ற சாபத்தை அன்றைய இரவே கௌசல்யையிடம் கூறியிருந்தான் தசரதன்..

**கைகேயிக்கு தசரதன் இரண்டு வரங்கள் கொடுத்தது ஏன் ?**

இதைச் சற்று விரிவாகத்தெரிந்து கொள்ளலாம் !



கைகேயி தசரதனின் இளைய அதாவது மூன்றாவது பட்டமகிஷியாவாள். தசரதன் அரசாட்சி செய்து வந்தபோது சம்பரன் என்ற அரக்கர் குலத்தலைவன் தண்டகாரண்யத்தில் வைஜயந்திபுரம் என்ற நகரத்தை ஆண்டுவந்தான். தேவர்களோடு போரிட்டுத் தொடர்ந்து வெற்றிபெற்றுவந்தான். அழித்தும் வந்தான். தேவர்கள் மிகவும் இன்னல் அடைந்தனர். மற்றவர்களுக்கும் பெரும் இன்னல்கள் கொடுத்துவந்தான். எனவே தங்களைக்காத்திடுமாறு தேவர்கள் எல்லோரும் தசரத மகாராசனிடம் சென்று வேண்டுகோள் விடுத்தனர். அவர்களுக்காக சம்பரன் என்ற அந்த அசுரனிடம் போர்புரியச் சென்றான் தசரதன். அப்போது போர்க்கலையைப் பற்றியும் தேர் ஓட்டுதலையும் தெரிந்திருந்தவளான கைகேயி தானும் வருவதாகக் கூறி தசரதனுடன் சென்றாள்.

தரசதனுக்கும் சம்பராசுரனுக்கும் கடும்போர் நடைபெற்றது. மாயப்போர் புரிபவனான சம்பரன் பகலில் எதிரிகளுக்கு போர்க்காயங்களை உருவாக்குவான். போர் நிறுத்தப்பட்டிருக்கும் இரவுநேரத்தில் காயம் பட்டவர்களைக் கொன்று விடுவான். கடுமையாக நடந்த அந்தப்போரில் தசரத மன்னனுக்கும் அவன் காயத்தை ஏற்படுத்திவிட்டான். அதனால் தசரதன்தேரில் மயங்கி விழுந்துவிட்டான். இதை அறிந்த சம்பரனும் அவன்வீரர்களும் தசரதனை மேலும் தாக்கி அழிக்க வந்தனர். அப்போது கைகேயி விரைந்து தேரைச் செலுத்தி யுத்த பூமியை விட்டு வெளியேறிச் சென்று தசரதன் உயிரை முதல் முறையாகக் காத்தாள். காப்பாற்றிய கைகேயி தசரதனை அழைத்துவந்து அவனுடைய காயங்களுக்கு மருந்து போட்டு அக்காயங்களில் இருந்து விடுபட உதவி செய்தாள்.

அன்றிரவு சம்பராசுரன் போரில் ஏற்படுத்திய காயத்தை மோப்பம் பிடித்துச்சென்று, தன் திட்டப்படி தசரதனைக்கொல்ல வந்தான். அப்போது அதை ஏற்கனவே அறிந்த கைகேயி அசுரன் காணாதவாறு தசரதனை வேறு ஒரு இடத்திற்கு தேரில் ஏற்றி அழைத்துச்சென்று மறைத்து வைத்து அவன் உயிரை இரண்டாம் தடவையாகக் காத்தாள். பொழுது விடிந்துவிட்டதால் சம்பராசுரனுடைய திட்டம் பலிக்காமல்போனது. எனவே இரண்டு

முறை கைகேயி தசரதன் உயிரைக்காப்பாற்றியதால் இரண்டு வரங்களைக் கேட்குமாறும் அவை எத்தகைய வரமாக இருந்தாலும் அவற்றைத் தான் மறுக்காமல் தருவதாகவும் அன்றைக்கே உறுதி அளித்தார். ஆனால் அவை அப்போதைக்கு கைகேயிக்குத் தேவைப்பட வில்லை. மந்தரையின் தீய (துர்) ஆலோசனைப்படி அந்த இரண்டு வரங்களைத்தான் இப்போது கேட்டுப்பெற்றாள் கைகேயி.

**குறிப்பு :**

இந்த வரங்களைக் கைகேயி பெற்றபோது கூனியின் ஆலோசனைப்படி அவள் கோப அறையில் இருந்தாள் என்று வால்மீகி குறிப்பிடுகின்றார். இதனால் அக்காலத்தில் அரசியர்கள் தங்கள் மனநிலைக்கும் உடல் நிலைக்கும் ஏற்றவாறு சயன அறை பூசை அறை இன்பம் துய்க்க உதவும் பள்ளியறை கோப அறை போன்றவற்றில் தங்கியிருந்து தங்கள் இன்ப துன்பநிலைகளை வெளிப்படுத்தினர் என்பது புலப்படுகின்றது.

கோசலையின் மாளிகைக்குத் திரும்பிவந்த சுமந்திரன் தானும் வசிஷ்டரும் மக்களும் எவ்வளவு வேண்டியும் அதை ஏற்றுக்கொள்ளாத ஸ்ரீராமன் இலக்குவனோடும் சீதாதேவியோடும் வனம் சென்று விட்டார் என்றுகூறினார். அவர்களைத் தான் கங்கையின் கரையில் விட்டுவந்ததையும் கூறினார். அதைக் கேள்விப்பட்டவுடனே தசரதனும் உயிர் நீத்தான். சொர்க்கம் புகுந்தது அவன் உயிர்.

**பரத சத்துருக்கனன் வரவழைக்கப்பட்டனர் :**

தசரதன் உடலை மூலிகை நிறைந்த கொப்பரையில் இட்டுப்பாதுகாக்கும் படி ஏற்பாடுகள் செய்தார் வசிஷ்டர். மூலிகைகளால் செய்யப்பட்ட ஒரு தைலத்தை ஒருபெரிய கொப்பரையில் இட்டு, தசரதனின் உடல் அழுகாமல் இருக்குமாறு பாதுகாத்தனர். இதற்குத் தைலமாட்டுப்படலம் என்ற பெயரே கம்பரால் இடப்பட்டுள்ளது. இதனால் அக்காலத்தவரின் அறிவியல் மேம்பாட்டையும் நாம்



அறியமுடிகின்றது! மேலும் அரசன் இன்றி ஒருநாடு இருக்கக்கூடாது என்பதனால் கைகேயி நாட்டிற்குச் சென்றிருந்த பரதனையும் சத்துருக்கனனையும் அழைத்துவர சிறந்த தூதுவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார் வசிஷ்டர். ஆனால் அயோத்தியில் நடைபெற்ற எந்த நிகழ்வையும் அவர்களுக்குத் தெரிவிக்காமல் அழைத்து வருமாறும் ஆணையிடப்பட்டது.

கைகேயி நாட்டிற்குச் சென்ற தூதுவர்கள் அதன் தலைநகரான கிரிவிரஜத்தை அடைந்தனர். அவசரமாய் அயோத்திக்கு வரவேண்டுமென்ற அவர்கள் செய்தியை உடனே செயல்படுத்த நினைத்து இருவரும் அன்றே புறப்பட்டனர். பாட்டனார் அரண்மனையில் தங்கியிருந்தபோதே பலதுர்க்கனவுகளைப் பரதன் கண்டதாகவும், அதனால் தந்தைக்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமோ என்று எண்ணி கலக்கமுற்றிருந்தான் பரதன் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் அவசர அழைப்பின் காரணம் புரியாமல் குழப்பமான மனநிலையோடு அயோத்தியில் நுழைந்த அவர்களுக்கு அயோத்தியின் மயான அமைதி அதிர்ச்சியைத் தந்தது. பரதனும் சத்துருக்கனனும் அப்போதைய அயோத்தியின் நிலையைக் கூறி, நகரம் இயல்பு நிலையிலே இல்லை என்று கூறிக்கொண்டு வந்தபோது, அந்நகரில் இயல்பாக நடந்துகொண்டிருந்த நிகழ்வுகள் என்னென்ன என்பதை அறியும்போதும் இதன் சிறப்பு மேலும் வெளிப்படுவதைக் காணலாம். அரண்மனை புகுந்த பரதன், தம்பியொடும் திரும்பி வந்து தன் தாய்மூலம் தான் அயோத்திக்கு அரசனாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளதையும் தசரதன் இறந்து விட்டசெய்தியையும் கேட்டான். தன்மகன் மகிழ்வான் என்ற மனப்பால் குடித்திருந்த அவள்முன் அடியற்றமரம்போல் வீழ்ந்து புலம்பினான். தன்னைப் பெரும் பழிக்கு ஆலாக்கிவிட்ட தன் தாய் கைகேயியைப் பலவாறு பழித்துரைத்தான். தர்மத்தை அழித்த அரக்கி என்றும் இட்சவாகு குலப்பெருமைக்கு இழிவைத்தேடிக் கொடுத்துவிட்ட பெரும்பழிகாரி என்றும் இழித்துப்பேசினான். இவற்றைச் சற்றும் எதிர்பாராத கைகேயி செய்வது அறியாது திகைத்தாள்.

முடிதுறந்த வள்ளல் மாண்பும், கைகேயி புதல்வனின் பண்பும் என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு பின்வரும் சில நயங்களையும் ஆய்ந்தறியலாம்!

அயோத்தியை அடைந்து நடந்ததை அறிந்தும், தன் தாயின் கொடுமையான குணத்தைப்பற்றி அறிந்தும் கொதித்தெழுந்தான் பரதன்.

தன்னுடைய ஒப்புதல் இன்றியே தனக்காக தன்தாய் இவ்வளவு கொடியவளாக நடந்து கொண்டாள் என்பதை யாரும் ஏற்க மறுத்தனர். ஆனால் கோசலையும் அதே மனநிலையில்தான் இருந்தாள். பரதனின் ஒப்புதலோடுதான் கைகேயி இரண்டு வரங்களையும் தசரதனிடமிருந்து பெற்றாள் என்று ஊரும் உலகமும் நம்பியிருந்ததைப்போலவே கோசலையும் நம்பியிருந்தாள்! எனவே அதைத் தீர்க்கவேண்டியது பரதன் தன் கடமையாகக் கருதி கோசலையிடம் கூறுவதாக அமைந்த பாடல்களில் அவனுடைய பழிக்கு அஞ்சும் பண்பு வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

இதனால் மிகவும் மனவேதனை அடைந்த பரதன் தான் குற்றம் புரிந்திருந்தால் பல தீவினைகளைச்செய்த கொடும்பாவியாக மாறி நரகம் புகவேண்டும் என்று தன்னைத்தானே சபித்துக்கொண்டான்! இங்கு அவனால் எடுத்துக் கூறப்படுகின்ற பாவச்செயல்களின் பட்டியல் ஆழ்ந்து நோக்கத்தக்கது. இதனால் பாரதநாட்டு மாந்தர் அதாவது சநாதனதர்மத்தைப் பின்பற்றிய பாரத தேசத்தவரின் பண்புநலன்களும், பழிபாவங்களுக்குப் பயந்து நடத்தல் என்ற கலாச்சாரமும், புண்ணியம் செய்து பெருமானின் திருவடியைப் பற்றுதலே வாழ்வின் உயர்நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறிகிறோம்.

பாவச்செயல்களின் பட்டியலைத் தெரிந்துகொண்டு, இவற்றைச்செய்யாமல் நம்மைநாமே காத்துக்கொள்ளவேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்றும், அதை அடைய முயன்று செயல்படவேண்டும் என்ற மனநிலையும் புலனாகின்றது.



**அறம்கெட முயன்றவன் அருள்இல் நெஞ்சினன்**
**பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினோன்**
**மறம்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்**
**துறந்த மாதவர்க்கு அருந் துயரம் சூழ்ந்துளோன் (880)**

தனது விருப்பத்தை கேட்ட கைகேயி பரதனுக்கு அரசபதவியைப் பறித்துத் தந்தாள் என்று அனைவருமே நினைத்திருக்க, அதே எண்ணத்திலேதான் கோசலையும் இருந்தாள் என்பதை அறிந்துகொண்ட பரதனால் அதைத்தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவேதான் இப்பாடல்கள் பரதனது வாயிலிருந்து வெளிப்பட்டனவாக கம்பர் பாடியுள்ளார். அது உண்மையானால், மேலே உள்ள இப்பாடல், அறமாகிய தர்மத்தைக்கெடுப்பவன், தன் நெஞ்சில் கருணையில்லாதவன், மாற்றான் மனைவிமீது ஆசைகொண்டு அவளை அடைய அடுத்தவன் வீட்டின்போய் நின்றவன், மற்ற உயிரினங்களைக்கொன்று உணவாக உண்டல் ஆகிய கொடுவினையாளன் ஆகியோர் செல்லும் அருநரகிற்கு யானும் செல்லக்கடவேன்'' என்று தன்னைத்தானே நொந்து கொள்கிறான்.

**பொய்க்கரி கூறினோன் போருக்கு அஞ்சினோன்**
**கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன்**
**எய்த்த இடத்து இடர்செய்தோன் என்று இன்னோர்புகும்**
**மெய்கெடு நரகிடை விரைவின் வீழ்க யான். (885)**

தன் மனசாட்சியைப்புறந்தள்ளிவிட்டுப் பொய்சாட்சி கூறியவன், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்வன்.

**கன்று உயிர் ஓய்ந்து உகக் கறந்து பால் உண்டோன்**
**மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்வினோன்**
**நன்றியை மறந்திடும் நயம்இல் நாவினோன்**
**என்று இவர் உறுநரகு என்னது ஆகவே. (888).**

மேலும் கன்றின் உணவாகிய பாலை பசுவின் மடியிலிருந்து அதற்குச் சிறிதும் வைக்காமல் முழுக்க பாலைக்கறந்து கொள்ளும் கொடுமையாளன் ஆகியவர்கள்

எல்லாம் சென்று சேரக்கூடிய கொடிய நரகத்தைத் தான் அடைய வேண்டும் என்றும், மேலும் பதினாறு பாடல்களில் யார்யாருக்கு நரகம் கிடைக்கும் என்பதைப்பட்டியலிட்டான் பரதன். அவற்றை எடுத்துரைக்கின் மிகுதியாகப்போகும். இராமன் வனவாசத்திற்கு தான் காரணம் என்றால், இவ்வகைப்பாவங்களைச் செய்தவனாக நான் துன்பத்தை அடைவேனாக! என்று கூறுவதால் அவற்றிற்கு அஞ்சிநடுங்கிய அவனுடைய பண்புகள் இதனால் வெளிப்படுவதையும் அறியலாம்.

இத்தருணத்தில் இறந்துபட்ட அரசனுக்கு ஈமக்கடமைகள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று நினைத்த மந்திரிப் பிரதானிகளும் முனிவர்களும் மற்றவர்களும் முடிவு செய்தனர். தசரதனுக்கு பரதன் ஈமக்கிரியைகள் செய்யக்கூடாது என்று பலரும் தடுத்தனர். பரதன் வினவியபோது, கைகேயியையும், பரதனையும் அரசன் தியாகித்துவிட்டதை, அதாவது கைகேயியைத் தன் மனைவி இல்லையென்றும், பரதனைத் தன் மகனில்லை என்றும் துறந்து விட்டதை எடுத்துரைத்தனர். எனவே சத்துருக்கனனைக் கொண்டே ஈமக்காரியங்களைச் செய்வித்தனர் என்று கம்பர் பாடியுள்ளார்.

ஆனால் வால்மீகி இராமாயணத்தில் பரதனே ஈமக்கடன்களைச் செய்ததாகக் கூறியுள்ளார். அச்சடங்கு முடிந்து மேலும் பதின்மூன்று நாட்களுக்கும் பலவிதமான சடங்குகள் தொடர, அடுத்தநாள் அந்தணர்களுக்கும், முனிவர்களுக்கும் செய்யவேண்டிய தானதர்மம் போன்றவற்றைச் செய்து முடித்தனர் சத்துருக்கனனும், பரதனும். அப்போது அயோத்தி மக்களின் எல்லையற்ற கவலையைக் கருத்தில் கொண்ட பரதன், தன் அண்ணனான இராமனுக்குரிய அரசாட்சியை அவரிடமே ஒப்படைத்துவிட வேண்டும் என்று முடிவுகட்டினான். அமைச்சர், வசிஷ்டர் போன்ற அனைவரிடமும் கூறினான். அவன் முடிவைக் கேட்ட அனைவரும் ஆனந்தம் கொண்டு ஆரவாரம் செய்தனர். அதனால் எல்லோரின் இதயத்தையும் கவர்ந்த ஒரு சிறந்த பண்பாளனாக ஸ்ரீராமர் திகழ்ந்ததை அறியமுடிகின்றது. அதையும் வெல்லக்கூடிய பண்பாளனாக பரதன்



செயல்பட்டதையும் அறியும் பொழுது தசரதபுத்திரர்களின் நல்லொழுக்க, நற்சிந்தனைகள் அறியப்படுகின்றன.

குகனின் நட்பைப் பெற்று தம்பியாக ஏற்ற பின்னர் சித்திரகூடம் மூவரும் அடைந்தனர். சித்ரகூடத்தில் அத்திரி மகரிஷியை தரிசித்து அவர்மனைவியான அனுசூயாவிடம் இருந்து ஆடை ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டாள் சீதை. துன்பத்தில் தவித்த சீதாதேவிக்கு ஆசிகள் கூறிய அனுசூயா, அவளுக்கு ஆறுதல்கள் கூறி, நீ கண்டிப்பாக இந்தத் துன்பங்களில் இருந்து விடுபடுவாய். இன்பங்கள் பலவும் பெற்ற ஓர் அரசியாக சிம்மாசனத்தில் அமர்ந்து வாழும் பாக்கியம் பெறுவாய். உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் ஒரு மாதரசியாக பெரும் வாழ்வைப்பெறுவாய் என்று ஆசீர்வதித்து அனுப்பிவைத்தாள் அனுசூயா.

**சேவகனாய் தொண்டுபுரிந்த இலக்குவன் :**

அடுத்து அவர்கள் மூவரும் மேற்கொண்ட வனவாசத்தில், யமுனை ஆறு குறுக்கிட்டது. இலக்குவன் தெப்பம் கட்டி யமுனை ஆற்றைக் கடக்கச் செய்ய தான் ஆற்றுநீரில் இறங்கி நீந்திக்கொண்டு, தெப்பத்தைத் தள்ளிச்சென்று கரையேற வைத்தான் என்று அறியும் போது இலக்குவனுடைய சகோதரபாசமும், அவன் குருகுலக் கல்வியில் தான் கற்ற வித்தைகளைத் தகுந்தநேரத்தில் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலையும் அறியமுடிகின்றது.

**“வாங்கு வேய்ங்கழைத்துணித்தனன் மாணையின் கொடியால்**
**ஓங்கு தெப்பம் ஒன்று அமைத்து அதின் உம்பரின் உலம்போல்**
**வீங்குதொள் அண்ணல் தேவியொடு இனிது வீற்றிருப்ப**
**நீங்கினான் அந்த நெடுநதி இருகையால் நீந்தி. (716)**

மேலும் சீதா, இராமனுக்குப் பல இடங்களிலும் பர்ணசாலைகள் அமைத்துக் கொடுக்கும் குற்றேவலை தானே செய்து வந்தான். இங்கும் இலக்குவன் தான் அமைத்த அந்தப் பர்ணசாலையில் ஸ்ரீராமனையும் சீதாவையும் தங்கவைத்த இந்த இலக்குவன், இரவுநேரங்களில் அவர்களை எந்தத் தீங்கும்

அண்டாதவாறு அச் சீதாராமரைக் காவல்காத்தான் எனஅறிந்து பரதன் இலக்குவனின் பணிவிடை மனப்பான்மையைப் புகழ்ந்தும், தன்னால் எந்த உதவியும் செய்யப்படாமல் போக, உபத்திரங்களுக்குத்தானே காரணம் ஆனேன் என்றும் புலம்பினான்.

**என்பதைக் கேட்ட மைந்தன் இராமனுக்கு இளையார் என்று**
**முன்பு ஒத்த தோற்றத் தேமில் யான் என்றும் முடிவு இலாத**
**துன்பத்துக்கு ஏது ஆனேன் அவன்அது துடைக்கநின்றான்**
**அன்பத்துக்குஎல்லைஉண்டோ அழகிதுஎன் அடிமைஎன்றான்**
**(1027)**

**சிலமுக்கியக் குறிப்புகள் :**

இராமாயணத்தை வால்மீகி எழுதியபோது அவர் தற்போதைய பீகார் மாநிலத்தில் கான்பூருக்கு அருகில் அமைந்துள்ள பிட்டூர் என்ற இடத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார் என்று தற்காலத்தே அறிஞர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர். இராமனின் ஆட்சிக்காலத்தில், தன் குடிமக்களுடைய சந்தேகத்தைப்போக்க, இராமன் கருவுற்றிருந்த சீதாதேவியைக் காட்டிற்கு அனுப்பிய போது, வால்மீகி ஆசிரமம் சென்ற சீதா வனமோகினி (வனதேவதா) என்னும் பெயரோடு வால்மீகி ஆசிரமத்தில்தான் தங்கியிருந்தாள். லவனும் குசனும் அங்குதான் பிறந்தார்கள் என்பர்.

முதலில் சித்ரகூடப்பகுதியில் வால்மீகி முனிவர் ஆசிரமம் இருந்ததாக சில குறிப்புகள் உள்ளன என்றாலும் இராமனின் வனவாச காலமான பதினான்கு ஆண்டுகளில் இடம்பெயர்ந்து பிட்டூரில் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார் வால்மீகி என்கின்றனர் சிலர். பரத்வாஜர் ஆசிரமத்தில் தங்கியிருந்த நாள் முதற்கொண்டு வனவாச காலப்பகுதியான பதினான்கு ஆண்டுகள் கணக்கிடப்பட்டது.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்று எண்ணாமல் புளிஞர் வேந்தனாகிய குகனைச் சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமன் தனது சகோதரனாக ஏற்றுக் கொண்ட செயல் இராமனின்



பண்பை வெளிப்படுத்துகின்றது. யூனிவர்சல் ப்ரதர்ஹுட் என்றும், அனைத்துமக்களையும், உயிரினங்களையும் சமமாகப் பாவிக்கவேண்டும், ஏற்றத்தாழ்வுகள் கூடாது என்றும் தற்போது மனிதர்களுக்கு வேண்டியதாக அறிவுறுத்தப்படும் அகில உலக சகோதரத்துவம் இங்கு உணரப்படுகின்றது. உணர்த்தப்படுகின்றது.

மேலும் அடுத்தடுத்து வரப்போகும் இராமசரிதத்தில், ஜடாயு கழுகு குலம், சபரி வேடுவர் குலம், ஜாம்பவான் கரடிகுலம், சுக்கிரீவன் மற்றும் அனுமன் வானர இனம், விபீஷணன் அரக்கர் குலம் ஆகியோர்களையும் தனக்கு மிகவும் வேண்டியவர்களாகக் கொண்டாடினான் இராமன் என்கிற போதும் இத் தத்துவத்தை உணர்த்தும் பெருங்காப்பியமாகிய இந்த இதிகாசம் கூறும் முக்கியத் தத்துவங்களுள் ஒன்றாகவும் இதைக்கொள்ளலாம்! கொண்டாடலாம்!!

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் முக்குறும்பு என்றும் முக்குறும்பு அறுத்தோன் என்றும் சிலர் புகழப்படுகின்றனர். ஒருவனுக்கு அவனுடைய இனம் தனம் ஞானம்(வித்யா) என்ற மூன்றால் கர்வம் உண்டாகும். (அதாவது குலம்,, செல்வம் கல்வி என்பவை).

இனம் என்பது உயர்ந்த குலத்தில் தோன்றினோம் என்ற கர்வம்., தனம் என்பது மிகப்பெரும் செல்வந்தர் அல்லது செல்வந்தனின் புதல்வர் என்பதால் உண்டாகும் கர்வம், ஞானம் என்பது மிகச்சிறந்த கல்வி கற்றுவிட்டோம் என்பதால் உண்டாகும் கர்வம்.

இந்த மூன்றிலும் சிறந்திருந்தவர் காஞ்சிபுரத்தின் பெரும் வள்ளல் என்றும், சிற்றரசன் என்றும், வைணவச்சம்பிரதாயம் வளர்ச்சியடைய தன் பொருளையெல்லாம் ஈந்திட்ட பெருங்கருணையாளர் என்றெல்லாம் போற்றப்படும் கூரேசன் என்னும் இயற்பெயரைப் பெற்ற கூரத்தாழ்வான் என்பவர். ஆனால் இந்த முக்குறும்பு என்னும் வீண் கௌரவத்தை அறுத்தெரிந்தவர். ஆகையினால் மொழியைக்கடக்கும் முக்குறும்பாம் பழியைக்கடந்த கூரத்தாழ்வான் என்று புகழப்பட்டார்.

ஸ்ரீராமனிடத்தில் இருந்த இந் நற்பண்புகள், கூரத்தாழ்வானிடம் இருந்ததை அறியலாம். அதாவது ஸ்ரீராமனின் இந்த குணநலன்கள் வைணவச் சம்பிரதாயத்தில் மிகவும் உயர்வு பெற்றவை.

இராமாயணத்தைப் படித்தும் பார்த்தும் தான் வணங்கும் தெய்வமாக ஸ்ரீராமனைக்கொண்டாடினார் காந்தியடிகள்.

குகனின் நட்பைப் பெற்று தம்பியாக ஏற்ற பின்னர் சித்திரகூடம் சென்றனர். சித்ரகூடத்தில் அத்திரி மகரிஷியை தரிசித்து அவர்மனைவியான அனுசூயாவிடம் இருந்து ஆடை ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டாள் சீதை. துன்பத்தில் தவித்த சீதாதேவிக்கு ஆசிகள் கூறிய அனுசூயா, அவளுக்கு ஆறுதல்கள் கூறி, நீ கண்டிப்பாக இந்தத்துன்பங்களில் இருந்து விடுபடுவாய். இன்பங்கள் பலவும் பெற்ற ஓர் அரசியாக சிம்மாசனத்தில் அமர்ந்து வாழும் பாக்கியம் பெறுவாய். உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் ஒரு மாதரசியாக பெரும் வாழ்வைப் பெறுவாய் என்று ஆசீர்வதித்து அனுப்பிவைத்தாள் அனுசூயா.

**இராமனை அழைத்துவரப் புறப்பட்டான் பரதன் :**

இத்தருணத்தில் சித்திரகூடத்தில் தங்கியிருந்த ஸ்ரீராமரை அழைத்துவரவேண்டும் என்று பரதன் முடிவெடுத்தான். அனைவரிடமும் கூற மகிழ்ச்சிக்கடலில் மிதந்தது அயோத்திமாநகரம். படையுடன் பரதன் கிளம்பியபோது சத்துருக்கனனும் மற்ற தேவிமார்களும் கிளம்பினர். அவர்களோடு கூட்டத்தில் கூட்டமாக கூனி என்ற மந்தரையும் வருவதைக்கண்ட சத்துருக்கன் தேரிலிருந்து குதித்து அக்கூனியைத் தரதரவென இழுத்துக் கீழே தள்ளி நையப்புடைத்தான். பரதன் தடுக்கவே உயிர்பிழைத்தாள் அந்த மந்தரை. தன்வினை தன்னைச்சுடும் என்னும் தர்மம் அங்கே வெளிப்படுகின்றது.

சுமந்திரன் வழிகாட்டிக்கொண்டு செல்ல நகரத்தைக் கடந்து கங்கைக்கரையை அடைந்தன படைகள். தூரத்தில்



இருந்து இவற்றைக் கண்ட குகன் இராமன் மேல் பரதன் படைஎடுத்து வந்துள்ளதாகவும், கானகம் செல்லப்பணித்ததோடு நில்லாமல் இராம இலட்சுமணர்களை முழுதுமாக அழித்துவிட எண்ணம்கொண்டு படைதிரட்டி வந்துள்ளதாகவும் குகன் நினைத்தான்.! அந்நியனாகிய அவன் நினைத்ததில் தவறில்லை! ஆனால் பரதனோடும் இராமனோடும் இத்தனை ஆண்டுகளாகப் பிறந்து வளர்ந்து பழகி வந்தவனான இலக்குவனும் இப்படித்தான் நினைத்தானாம்! கோபத்திற்கு சட்டென இடம் கொடுத்துவிடும் இலக்குவன் மனநிலையும், இராமன்மீது கொண்ட எல்லையற்ற பக்தியும் இதற்குக்காரணம் எனலாம்! இராமனின் பக்தனாய் சில இடங்களிலும், குற்றேவல் செய்யும் பணியாளனாய் பல இடங்களிலும், பாசமுள்ள தம்பியாக இளம்பருவத்திலும் பலவிதமான பரிமாணங்களைப் பெறுகின்றான் இலக்குவன் என்ற இளையாழ்வார். இங்கு அதே இலக்குவன் இராமனைக் காத்தருளவேண்டிய படைத்தளபதியாய் விசுவரூபம் எடுக்கின்றான்.

பரதனின் வருகையைத் தவறுதலாகப்புரிந்து கொண்ட புளிஞர் வேந்தன் குகன், பரதனின் எண்ணம் ஈடேறாமல் தான் தடுப்பேன் என்றும் உறுதிமொழிகூறினான். கோபத்தின் உச்சநிலைக்குத்தள்ளப்பட்ட அவன், தன் படைவீரர்களுக்கும் யாரும் பரதனுக்கு உதவி செய்யக்கூடாது என்றும் கட்டளையிட்டான்.

பின்வரும் குகனின் வீர உரைகளில் எவையேனும் சிலபாடல்களை ஒலிநயத்துடனும், இசைநயத்துடனும் மனப்பாடம் செய்தல் இலக்கியச்சுவையைத் தூண்டும்! படிக்கத்தூண்டும். பயன்படும்!

**குகனின் வீரவுரைகள் :**

**அஞ்சனவண்ணன் என் ஆருயிர் நாயகன் ஆளாமே**
**வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே**
**செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ**
**உய்ஞ்சு இவர்போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ?**
**(998)**

என்னும் பாடலில், அஞ்சனவண்ணனாகிய ஸ்ரீராமன் நாட்டை ஆளாமல் தடுத்ததோடு, சூழ்ச்சியினால் அரசபதவியைப் பெற்றுக்கொண்டவனாகிய பரதன், என் தலைவனாகிய ஸ்ரீராமனை அடியோடு அழித்துவிட எண்ணம் கொண்டு படைதிரட்டி வந்துள்ளான்! அவனுடைய முயற்சியை முறியடித்து, பரதனைத் தோல்வியுறச் செய்வேன்.! இல்லையெனில் என்னை அனைவரும் நாய்போல் இழிந்தவன் இந்த குகன் என்று இழிவுபடுத்தமாட்டார்களா? என்றும்,

**ஆழநெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ**
**வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ**
**தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ**
**ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ? (999)**

இக்கங்கை ஆறானது மிகவும் ஆழமுடையது! நெடிய நீண்ட அலைகளை உடையது! என்னுடைய உதவியின்றி இப்பரதனும் அவன்படைகளும் எவ்வாறு இக்கங்கையைக் கடக்கமுடியும்? இதைக்கண்டு பயப்படக்கூடியவன் நானில்லை! என்னைப்பார்த்து நீ என் தோழன் என்று சொன்னாரே அந்த ஸ்ரீராமனைக் காப்பாற்றாது போனால், இந்த வேடனாகிய குகன், இராமனைக்காப்பாற்றாமல் இன்னும் உயிருடன் இருக்கின்றானே என்று என்னை எல்லோரும் ஏசமாட்டார்களா? என்றும் கர்ஜித்து பரதன் படையை அழிப்பேன் என்றும் உறுதி கூறியதையும் பின்வரும்பாடலால் அறியலாம்.

**பரதன் படையை அழிப்போம் எனல் :**

**ஆடு கொடிப்படை சாடி அறத்தவரே ஆள**
**வேடுகொடுத்தது பாரஎனும் இப்புகழ் மேவீரோ**
**நாடுகொடுத்த என்நாயகனுக்கு இவர்நாம் ஆளும்**
**காடு கொடுக்கிலர் ஆகி எடுத்தது காணீரோ ! (1006)**

எனவே, அடியேன் தர்மத்தின் தலைவனான ஸ்ரீராமனே மீண்டும் அயோத்தியை ஆளவேண்டும் என்பதற்காக, என்னுயிரையும் தந்து பரதனைத்தோற்கடித்து அனுப்பி, ஸ்ரீராமனை மீண்டும் அரசனாக்கினால், எல்லோரும்



என்னைப்புகழ்வார்கள். அதனால் நான் இப்பரதனோடு போர்புரிந்து வெற்றிகாணப்போகின்றேன் என்று கூறியபோது, தன்னுடைய வீரர்களையும், தனக்காக்கப் போர்புரியவேண்டும் என்றும், பரதனும் அவனுடைய படையும் கங்கையைக் கடக்க யாரும் உதவுதல் கூடாது என்றும் ஆணையிட்டான்!

ஆனால் கங்கையின் வடகரையில் வந்து சுமந்திரனோடு இருந்த பரதனைப் பார்த்தபின்பு தன்யூகம் தவறானது என்று முடிவு செய்து பரதனைக் காணச் சென்றான். அரச தோற்றத்தோடு இல்லாமல், அறச்சீலனைப்போல, தானும் துறவுக்கோலத்தைப்பூண்டு, மனமும் மெய்யும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகித் தவிக்கும் பரதனைப்பார்த்து பழகியபின்பும் அவன் தவக்கோலத்தைக் கண்டபின்பும், அவன் வருகைக்குரிய காரணத்தை அறிந்தபிறகும் பெரும் வியப்படைந்தான் குகன். தன் யூகம் தவறாகிப்போனதையும் அறிந்தான்!

எனவே எம்பெருமானாகிய ஸ்ரீராமனுக்குப்பின்னால் பிறந்தவர்களும் எவ்விதமான தவறும் செய்யமாட்டார்கள் என்ற முடிவுற்கு வந்தான் என்று கூறி, பரதனைக் குகன் புகழ்ந்து கூறினான்.

**தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னை**
**தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில்தேக்கி**
**போயினை என்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்**
**ஆயிரம் இராமர் நின்கீழ் ஆவரோ தெரியின் அம்மா (1019)**

பரதனின் தியாகத்தைப் பார்க்கின்றபோது, பரதனின் பண்பு ஆயிரம் மடங்கு இராமனின்பண்புகளை விட மேலானது என்று நினைத்து மகிழ்ந்தான்! என்ற கருத்தை ஆயிரம் இராமர் நின்கீழ் ஆவரோ? என்ற வியப்படைந்த குகன், தேவியர் மூன்றுபேரையும் பரதாழ்வானையும், சத்துருக்கனையும் கங்கையன் தென் கரைக்குத் தன் ஓடத்தில் அழைத்துச் சென்றான். பின்னர் அனைவரும் ஸ்ரீராமர் தங்கியிருந்த அந்த சித்திரகூடம் என்ற வனப்பகுதியை அடைந்தனர்.

**இலக்குவன்கொண்ட சீற்றம் :**

இராமன் மீது கொண்ட பயத்தின் காரணமாகவும் பொறாமையின் காரணமாகவும் அவரை அடியோடு அழித்துவிடவேண்டும் என்பதற்காகத்தான் பரதன் படைஎடுத்து வந்துள்ளான் என்று மீண்டும் தவறுதலாக எண்ணிக் கொண்டான் இலட்சுமணன். சித்தரகூடம் என்னும் அவ்வனப்பகுதியில் இருந்த ஒருபெரிய மரத்தின்மேல் ஏறி பார்த்தபோது பெரும்படைகள் கண்ணிற்குத் தெரிந்ததால் அத்தகைய முடிவிற்கு வந்தான் இலக்குவன். எனவே அப்பரதனை முந்திக்கொண்டு தான் சென்று அவனையும் படைகளையும் அழித்து வருகின்றேன் என்றும் அதற்கு விடை கொடுக்குமாறும் இராமரிடம் உத்தரவு கேட்டான் இலக்குவன். ஆனால் இராமனோ புன்னகை பூத்து பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கூறினார். சற்று நேரத்தில் அங்குவந்த பரதனின் தோற்றம் அவன் எக்குற்றமும் செய்யாதவன் என்பதையும், எவ்வகையான வஞ்சகத்தையும் அறியாதவன் என்பதையும் உணர்த்தியது. இலக்குவன் தன்செயலுக்காக வருந்தினான்.

இலக்குவன் பரதன் மீது தவறான எண்ணமே கொண்டிருந்தான் என்பதை இச்சூழல் மேலும் உறுதிசெய்கின்றது. எனினும் அனைவரும் சூழ்நிலைக்கும் விதியின் விளையாட்டிற்கும் ஆட்பட்டவர்களே என்று அறிதலே இக்காப்பியத்தைக் கற்பதன் குறிக்கோளாகும். இலட்சுமணன் கோபம்கொண்ட போதெல்லாம் பொறுமை காக்குமாறு இராமன் அறிவுரை கூறுகின்றான். இப்போதும் அவன் சொற்படி நடந்து பொறுமையோடு இருந்த பின்னர் பரதனின் உண்மை நிலையை அறிந்தான் இலக்குவன். சத்ருஞ்ஜயன் தசரதனின் பட்டத்து யானையின் பெயராகும். அதன் அம்பாரியில் அரசனாகிய தசரதன் இல்லை. காரணம்கேட்டு தசரதன் இறந்த செய்தியை அறிந்தான் இராமன்.



**நீர்க்கடன் செய்தனர் ராம லட்சுமணர்கள் :**

தம் தந்தையார் இறந்துவிட்டதை அமைச்சர் வாயிலாக அறிந்த இராமனும் லட்சுமணனும் அழுது புலம்பினர். மிகுதியான துன்பத்தை அடைந்த இருவருக்கும் பிறவி எடுத்தவர் இறந்துபடுதல் என்பது இயற்கை நியதியே என்று கூறி ஆறுதல் அளித்தார் வசிஷ்ட முனிவர். ஸ்ரீராமனும், இலக்குவனும் தம் தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்களையும், நீர்க்கடன் போன்றவற்றையும் செய்தனர். அங்கிருந்த முனிவர்குலப்பெண்களின் மூலமாக சீதாவும் தனது மாமனாருக்காகச் செய்யவேண்டிய இறுதிச்சடங்குகளைச் செய்து கொள்ள நீர்த்துறைக்குச் சென்று நீராடி முடித்தாள். கோசலையும் மற்றவர்களும் சீதையின் நிலைக்கு மிகவும் வருந்தினர்.

தசரதனுக்குச் செய்யப்பட வேண்டிய நீர்க்கடன்களையும், ஈமக்கடன்களையும் அனைவரும் செய்து முடித்தபின்னர், தான்வந்த காரணத்தை அதாவது இராமன் மீண்டும் அயோத்தி திரும்பி, அரசனாக முடிசூட்டிக்கொண்டு, நாட்டைப் பரிபாலனம் செய்தல் வேண்டும் என்பதை எடுத்துரைத்தான்.

**உந்தை தீமையும் உலகு உறாத நோய்**
**தந்த தீவினைத் தாய்செய் தீமையும்**
**எந்தை நீங்க மீண்டு அரசு செய்க எனா**
**சிந்தையாவதும் தெரியக் கூறினான். (1159)**

என்னும் பாடல் பரதன் வாக்குமூலமாக அமைந்த கம்பரின் வாக்கு!

ஸ்ரீராமனை அயோத்திக்கு வந்து அரசபதவியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பரதன் எவ்வளவோ வேண்டுகோள்கள் வைத்தும் அதை ஸ்ரீராமர் நிராகரித்தார்.

வசிஷ்டரும் அமைச்சர் சுமந்திரனும் வலியுறுத்திக் கூறியும் தன் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்ற வேண்டியது தனது கடமை என்று எடுத்துரைத்தார் ஸ்ரீராமர். எடுத்த செயலில் இருந்து பின்வாங்குவது இட்சுவாகு

குலத்தினர்க்கு இழுக்காகி விடும் என்று தன் நிலையில் விடாப்பிடியாகவும், பித்ரு வாக்யப் பரிபாலனம் ஆகிய அத்தர்மத்தைக் காத்தல் தனது தலையாய கடமை என்றும் கூறி நின்றான் ஸ்ரீராமன்.

மேலும் இராமன் பரதனின் வேண்டுகோளுக்கு மறுப்புரை கூறி, நீயே நாடாளவேண்டும் என்பது இறந்துபோன தந்தையின் ஆணை. அதனால் அக்கோசல நாடு உனக்கே உரியது என்று கூற, அதற்கு "எனக்கு உரிமையான நாட்டை நான் இப்போது தங்களுக்குத் தருகின்றேன். நான் கொடுப்பதால் அதனை ஏற்றுக்கொள்வதால் எந்தப் பிழையும் ஏற்படாது என்றெல்லாம் கூறி, எவ்வளவு இறைஞ்சியும் இராமன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியாக பரதனை நோக்கி "இந்தப்பதினான்கு ஆண்டுகளும் நீயே நாட்டினை ஆளுதல் வேண்டும் என்பது என் ஆணை" என்று இராமன் பரதனிடம் கூறியதைப் பின்வரும்செய்யுளால் அறியமுடிகின்றது.

**எந்தை ஏவ ஆண்டு ஏழொடு ஏழ் எனா**
**வந்த காலம் நான் வனத்துள் வைக நீ**
**தந்த பாரகம் தன்னை மெய்ம்மையால்**
**அந்த நாள் எலாம் ஆள் என் ஆணையால் (1172)**

இதற்கு ஒருவாறாக மனம்தேறிய பரதன் பதினான்கு ஆண்டுகள் கழிந்து வரவில்லை எனில் அக்கினிப்பிரவேசம் செய்து உயிர் விடுவேன் என்று பரதன் கூறினான்.

**ஆம் எனில் ஏழ் இரண்டு ஆண்டில் ஐய நீ**
**நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்**
**கோ முறை பிரிகிலை என்னின் கூர்எரி**
**சாம் இது சரதம் நின் ஆணை சாற்றினேன் (1189)**

அதற்கு இசைவு தெரிவித்தான் இராமன். எனினும் நாடுதிரும்பிய தான் ஸ்ரீராமனின் பாதுகைகளையே அரியாசனத்தில் அமர்த்தி ஆட்சிபுரியப்போவதாகவும், எனவே அவற்றைத் தருமாறும் வேண்டியபோது இராமனும் தனது பாதுகைகளைக் கொடுத்தருளினான்.



**பாதுகா பட்டாபிஷேகம் :**

வேறு வழியின்றி இராமனது திருவடிரட்சைகளாகிய பாதுகைகளைப் பெற்றுக்கொண்ட பரதன், அவற்றைத் தன் தலைமீது சுமந்தவாறு அயோத்திக்குத் திரும்பினான். அவனுடன் வந்த படைகளும், பொதுமக்களும் தங்களது நோக்கம் நிறைவேறவில்லையே என வருந்தினர். ஆயினும் வேறு வழியின்றி அவர்களும் திரும்பி தமது நாட்டை அடைந்தனர். அந்தப் பாதுகைகளைப் பெற்றுக் கொண்ட பரதன் இராமன் வனவாசம் செய்யவேண்டிய பதினான்கு ஆண்டுகள் கழித்த அடுத்தநாள் அயோத்திக்கு வந்துவிடவேண்டும் என்னும் பரதனின் அன்பு ஆணையையும் ஏற்றுக்கொண்டதால், பதினான்கு ஆண்டுகளையும் கழித்துதான் ஆகவேண்டும் என்ற நினைப்புடன் அயோத்தி அடைந்தனர் குடிமக்களும்.!

இராமனின் பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு அயோத்திக்குத் திரும்பிய பரதன் அந்த நகரத்தினுள்ளும் புகவில்லை. நகரத்தின் எல்லையிலே இருந்த நந்திகிராமம் என்னும் அந்தச் சிற்றூர் அயோத்தியிலிருந்து இருபது கல்தொலைவில் இருந்தது. அங்கு ஸ்ரீராமனாகிய தன் அண்ணனின் பாதுகைகளுக்குப்பட்டாபிஷேகம் செய்வித்து அதை அரசனாகப் பாவித்துக் கொண்டு அதுகூறும் வாக்குகளுக்கு ஏற்ப(பரதனுடைய மனச்சாட்சியின் படி) நல்லாட்சி செய்து வந்தான். இப்படியாகவே பதினான்கு ஆண்டுகளும் அரசாட்சி செய்து நல்ல நீதிநிலை உடையதாகவும் வளர்ச்சி அடைந்த நாடாகவும் உருவாக்கி வைத்திருந்தான் பரதன் என்பதை இறுதியில் அறிய முடிகின்றது. இதனால், தசரத புத்திரர்களின் ஒத்த பண்பு நலன்கள் வெளிப்படுவதையும், அனைவரும் ஸ்ரீமந்நாராயணனின் அம்சகர்களே என்பதையும் அறிவுறுத்துவதை தெரிந்து கொள்ளலாம்.

நந்தயம்பதியிலே தங்கி பரதன் பாதுகையின் துணையோடு கண்ணீர்மல்க அரசாட்சி செய்து கொண்டிருந்த அதே நேரத்தில் அயோத்தியா காண்டமாகிய இரண்டாவது காண்டத்தின் இறுதிப்படலமாகிய திருவடிசூட்டுப்படலத்தின்

கடைசிபாடலாகப் பின்வரும் பாடலைத்தந்து காண்டத்தின் கதைப் போக்குகளையும், கருத்துரைகளையும் முடித்துக்கொள்கின்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்!

படலத்தின் கடைசிபாடல்...

**குன்றினில் இருந்தனன் என்னும் கொள்கையால்**
**நின்றவர் நலிவரால் நேயத்தால் எனா**
**தன்துணைத் தம்பியும் தானும் தையலும்**
**தென்திசை நெறியினைச் சேறல் மேயினான் (1197)**

என்னும் பாடலால், இராமன் சித்திரகூடமாகிய இடத்திலே இருக்கின்றான் என்பதை அறிந்து கொண்ட மக்களும் மற்றவர்களும், தன்மீதுள்ள பேரன்பினால் பெரிதும் வருந்துவர் என்பது மட்டுமன்றி, அடிக்கடி அங்கே வரக்கூடும். ஆகையால் அவ்விடத்தை விட்டுவிட்டுச் சென்றிடவேண்டும் என்று முடிவுச்செய்த ஸ்ரீராமன் தன்தம்பியோடும், துணைவியான சீதாதேவியோடும் தென்திசை நோக்கிச்செல்லும் வழியில் சென்றனர் என்று மூவரும் தண்டகாரண்யம் நோக்கிச் செல்வதைக் கூறி முடித்துள்ளார் வால்மீகி.



# 3. ஆரண்யகாண்டம்.. (ஆரணியகாண்டம்.)

**கடவுள் வாழ்த்து :**

**பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா**
**ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும்**
**வேதம் வேதியர் விரிஞ்சன் முதலியோர் தெரிகிலா**
**ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கு அறிவு அரோ!**

என்பது ஆரண்ய காண்டத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலாகும்.

இதில் நான்கு வேதங்களும், அவ்வேதங்களை ஓதியுணரும் அந்தணர்களும், பிரம்மன் முதலான தேவர்களும் ஆராய்ந்து முழுமையாக அறிந்து கொள்ள முடியாமல் நிற்கும் முதற்கடவுளின் அவதாரம் ஸ்ரீராமாவதாரம் என்றும், அவரே தனக்கு நல்லறிவாய் விளங்கிவருகின்றவர் என்றும் இதில் ஸ்ரீராமனின் மகிமையை எடுத்துரைக்கின்றார் கம்பநாட்டாழ்வார்.

**ஆரண்ய காண்டம்,... பெயர்க்காரணம் :**

ஆரண்யம் என்ற சொல்லிற்கு அடர்த்தியான காடு அல்லது மலைப்பகுதி என்பது பொருளாகும். பெரும் வனப்பகுதியாகிய தண்டகாரண்யத்திலும், பஞ்சவடியிலுமான அக்காட்டுப் பகுதியில் ஸ்ரீராம லட்சுமணர்கள் சீதாதேவியோடு வாழ்ந்திருந்த தவவாழ்க்கை முறையைப்பற்றியும், பலமுனிவர் கணங்களோடு வாழ்ந்து பலவிதமான அனுபவங்களைப் பெற்றதையும், அரக்கி சூர்ப்பணகையின் வருகையையும், அவள் இராமனின் பஞ்சவடிபர்ணசாலையில் இலக்குவனால் மூக்கறுபட்டதையும், பின்னர் அவளது தூண்டுதலாலும் அரக்கன் அகம்பனன் என்பவன் கூறிய ஆசை வார்த்தைகளுக்கு ஏற்றவாறும், கொடியவனாகிய இராவணன் அன்னை சீதையைக் கவர்ந்து சென்றதுமாகிய ஆரண்யத்தில் (வனம் அல்லது காடு) நடந்த கதைப்பகுதி இதில் கூறப்படுவதால் இது ஆரண்ய காண்டம் என்று அழைக்கப்படுகின்றது.

ஸ்ரீமத் ராமாயணத்தின் மூன்றாம் காண்டமான ஆரண்ய காண்டம் என்ற இதனுடைய முற்படலமாக அமைந்திருப்பது

விராதன் வதைப்படலம் என்பது ஆகும், அதனுடைய முதற்பாடலாக பின்வரும் பாடல் அமைந்துள்ளது.,

**முத்து இருத்தி, அவை இருந்தனைய மெய்ந்நகையோடும்**
**சித்திரக் குனி சிக்குமரர்சென்று அணுகினார்**
**அத்திரிப்பெயர் அருந்தவன் இருந்த அமைதி**
**பத்திரப் பழுமரப்பொழில் துவன்று பழுவம்**

இதில், முத்துப்போன்ற பற்களை உடையவளான சீதையோடு, அழகிய விற்களைப் பெற்றவர்களான இராமன் இலக்குமணன் என்ற இருவரும், அத்திரி என்னும் பெயரை உடையவரான சிறந்த முனிவர் வாழுகின்ற பழமுதிர்ச்சோலையாக காட்சியளிக்கும் வனப்பகுதியை அடைந்தனர் என்று கூறியுள்ளார்.

அடுத்துள்ள பாடலில், அவர்கள் அம்முனிவர் தன்மனைவியான அனுசூயா என்பவளோடும் வாழ்ந்திருக்கும் பர்ணசாலையை அடைந்து, அவர்களால் மகிழ்ச்சியாக உபசரிக்கப்பட்டனர் என்று கூறி, அதையடுத்து அவர்கள் தண்டகவனம் என்ற தண்டகாரண்யத்தை தனக்கு விதிக்கப்பட்ட வனவாசத்தைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் மேலும் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் செல்லவேண்டும் என்று நினைத்தும், சித்திரகூடம் அயோத்திக்கு அருகில் இருப்பதனால், நகரத்தின் செயல்பாடுகள் தமக்குத்தெரியவரும், தொடர்புகள் உண்டாகும் என்பதாலும் அதை நீக்கிக்கொள்ள மேலும் அடர்வனத்திற்குள் போகவேண்டும் என்று நினைத்தார்.

நேரிழையும் இளங்கோவும் பின்பு போக என்பது கம்பர் வாக்கியம். ஆகையால் முன்னால் ஸ்ரீராமனும், அவர்பின்னால் சீதாதேவியும், அவளுக்கும் பின்னால் இளையாழ்வார் இலட்சுமணனும் சென்றார்கள் என்பது நடந்துசென்ற முறையாகும்.

அத்திரி மகரிஷியிடமும், அவர்பத்தினியான அனுசூயா ஆகியோரிடம் ஆசி பெற்றாள் சீதா. அனுசூயா மூன்று தேவர்களையும் (மும்மூர்த்திகளையும்) குழந்தைகளாக பாவித்தவள் என்றும் கூறுவார்கள்.



அனுசூயா தந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் ஏற்றுக்கொண்டாள் சீதாதேவி. அடுத்ததாக அவர்கள் சித்ரகூடம் என்ற அம்மலைப்பகுதியை விட்டு தண்டகாரண்யம் செல்ல முடிவு செய்து புறப்பட்டனர்.

அவ்வாறு அவர்கள் சென்ற இப்பகுதியில், ருஷ்யசிருங்கருக்கும், அவர் மனைவியான சாந்தைக்கும் ஒரு கோயில் தற்போது கட்டப்பட்டுள்ளது. (ருஷ்ய சிருங்கர் என்ற கலைக்கோட்டு முனிவரே தசரதனின் புத்திரப்பேற்றிற்காக புத்திர காமேஷ்டியாகம் செய்தவர் என்பதை நினைவில் கொள்க!)

பரத்வாஜர் ஆசிரமம் அடையும் முன்பாக ஒருநாள் இரவு வனப்பகுதியில் ஸ்ரீராம லட்சுமணர்கள் தங்கினார்கள். இலட்சுமணன் காவல்காத்தான். இராமன் தங்கிய இடம் ராமன்தையா என்று தற்போதும் அழைக்கப்படுகின்றது.

அடுத்ததாக பரத்துவாஜர் ஆசிரமத்தில் தங்கினர். அங்கிருந்து வழிகேட்டுக்கொண்டே தாண்டகவனம் என்னும் தண்டகாரண்யத்தை அடைந்தனர். அவர்கள் வழிநடந்தபோது யமுனை ஆறு குறுக்கிட்டது. யமுனை ஆற்றங்கரையில் துளசிதாசர் ஆசிரமம் இருந்தது. அப்பகுதி இன்றைக்கு யமுனா காட் என்று அழைக்கப்படுகின்றது. துளசிதாசர் இங்கிருந்து இராமாயணத்தை எழுதினார். துளசிதாசர் சிற்பங்களும் இங்கு உள்ளன.

இதை அடுத்து அவர்கள் வால்மீகி நதியை அடைந்தனர். இந்நதிக்கரையில் அவருடைய ஆசிரமம் உள்ளது. இங்கே இராமனும் சீதையும் பலமுறை நீராடினராம். இவர்கள் தங்கிய இடம் ராம்காட் என்று அழைக்கப்படுகின்றது.

சித்திர கூடத்தில் மந்தாகினி நதியும் ஓடிக்கொண்டுள்ளது. இங்கு தங்கியிருந்தபோதுதான் இந்திரன்மகன் சயந்தன், அன்னை சீதையைத் துன்புறுத்த, ஸ்ரீராமன் அக்காக்காசுரனை வதைப்பதற்காகத் தனது அஸ்திரத்தை ஏவினார். பயந்துபோன

சயந்தன் மூவுலகெங்கும் ஓடிஓடி காப்பாற்றுமாறு கேட்க, எவ்வித அடைக்கலமும் கிடைக்கப் பெறாத சயந்தன் தப்பிக்க வேறு வழியின்றி போனதால், சீதையைச் சரணாகதி அடைந்ததால், ஒற்றைக்கண்ணனாகி, உயிர்ப்பிழைத்தான் அக்காக்காசுரன்.

அனுமன்தாரா என்ற சிறு குன்று. இதில் ஜலதாரை. மிகுதியாக நீர்ப்பெருக்கு ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அதேபோல் இந்தக்குன்றிற்குக் கீழே கோதாவரியில் நீர் அதிகமாகச் சுரந்து ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுகின்றது. மறைந்து ஓடுவதால் இது குப்த கோதாவரி என்று அழைக்கப்படுகின்றது.

இராவணனுக்குப் பயந்து இது இவ்வாறு ஓடிக்கொண்டிருக்கின்றது என்பார்கள்.

இராவணனின் ஒன்றுவிட்ட தம்பி முறையினராகிய கரன் தூஷணன் ஆகியோர் சித்திரகூடத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டு முனிவர்களுக்கும் மற்றையோர்க்கும் பெருந் துன்பம் கொடுத்து வந்தனர்.

எனவே சித்திரகூடத்தைக் காலி செய்து விட்டு பலரும் தாண்டகவனம் என்ற தண்டகாரண்யத்தில் யாகசாலைகள் அமைத்துத் தங்கியிருந்தனர். தண்டகாரண்யத்தை முழுமையாக அரக்கர்கள் கவராதவாறு தடுத்து வந்தவர் அகத்தியமுனிவர்தான்.

**சீதாவைக் கவர்ந்து சென்ற விராதன் :**

முதன்முதலில் தண்டகாரண்யத்தில் நுழைந்தவுடனே விராதன் என்ற அரக்கன் மூவரையும் தடுத்து நிறுத்தி இராமலட்சுமணர்களின் தவக்கோலத்திற்கும் கையில் இருக்கும் வில்லிற்கும் சம்பந்தம் இல்லையே என்று கேள்விகேட்டு நகைத்தான். எந்தப்பதிலையும் யாரும் கூறாதமுன்பே அந்த அரக்கன் சீதாதேவியைக்கவர்ந்துகொண்டு வான்வழியே பறந்துசென்றான்.



இருவரும் துரத்திச்சென்று வான்வழியே பறந்த அவனுடைய கைகளை வெட்டி வீழ்த்தி சீதாவை மீட்டனர். அவ்வாறு விராதன் வதைக்கப்பட்ட இடம் விராதன் குண்டம் என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்ச்சியானது, ஆரண்யத்தில் பின்னாலே சீதா இராவணனால் கவரப்படப்போவதற்கும் இறுதியாக இராவண வதம் செய்து சீதாவை மீட்கப்போகின்றனர் என்பதற்கும் முன்னோடி நிகழ்ச்சியாய் அமைந்துள்ளது எனலாம்.

விராதன் வதைக்கப்பட்டு, பின்னர் ஸ்ரீராமனின் திருவடி அவன் உடல்மீது பட்டதால் தன் கோர வடிவம் நீங்கினான். ஓர் அரக்கன் மகனாக இருந்து, புண்ணியத்தால் கந்தர்வனாக மாறி பின்னர் இழைத்த தீமையால் இக்கோர வடிவினைப் பெற்றவன் அவன். இராமனுக்கு நன்றி கூறி வானுலகம் அடைந்தான். இவையெல்லாம் நடந்ததற்கான அத்தாட்சிகளாக இன்றைக்கும் இப்பகுதியில் விராதன் குண்டம் என்னும் இடம் உள்ளது.

சீதை மீட்கப்பட்டாலும், அவள் அதிர்ச்சி அடைந்தாள். உடல் நடுக்கம் அடைந்தது. ஸ்ரீராமன் சீதாவை ஆசுவாசப் படுத்தினான். அவள் மனம் மகிழுமாறு. இயற்கைக்காட்சிகளைக் காட்டி மனதைக் களிப்படையச் செய்தான். அவர்கள் மேலும் நடந்தனர்.

**சரபங்க முனிவரும் அடைந்திருந்த சித்திகளும், யோகபலங்களும் :**

அடுத்ததாக மூவரும் சரபங்கர் என்னும் மாமுனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார்கள். சரபங்கர் ஞான அனுஷ்டானங்களில் மிகவும் சிறந்தவர். அவருடைய கர்ம, ஞான அனுஷ்டானங்களின் பயனாக அவருக்கு இந்திரலோகத்திற்குச் செல்லக்கூடிய தவ வலிமை கூடியிருந்தது. எனவே அவரைத் தன்னுலகமான இந்திரலோகத்திற்கு அழைத்துப்போவதற்காக இந்திரனே தன்னுடைய விமானத்தில் வந்து, அவரை அழைத்துச் செல்ல அவருடைய குடிலுக்கு மேலே வானில் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் அதைச் சரபங்கர் விரும்பவில்லை.

அதே நேரத்தில் அம்முனிவர் பக்திமார்க்கத்திலும் சிறந்து இருந்து, பலவிதமான உபாசனைகளைச் செய்து வந்ததால், அதன்பயனாக நேராக பிரம்மதேவனின் உலகமான சத்தியலோகத்திற்கும் செல்லக்கூடிய பாக்கியமும் கிடைத்திருந்தது. அதையும் இந்திரனே சரபங்கரிடம் எடுத்துரைத்து, முனிவர் விரும்பும் சத்திய லோகத்திற்கும் அழைத்துச் செல்லவும் தயாராக இருந்தான்.

ஆனால் இவற்றில் எதையுமே சரபங்கர் விரும்பவில்லை. ஏனென்றால், தான் இருக்கும் ஆரண்யப் பகுதிக்கு ஸ்ரீராமர் வனவாசத்திற்காக இளவலோடும் சீதாவுடனும் வந்திருப்பதை அறிந்து, அப்பெருமானை வரவேற்று, உபசரித்து அவருடைய ஆசியைப் பெறவேண்டும் என்றே விரும்பி காத்துக்கொண்டிருந்தார். அதே நேரத்தில் ஸ்ரீராமரும் வருகை தந்ததால், மேலும் அங்கிருக்க விரும்பாமல் இந்திரன் சென்றுவிட, முனிவர் தன் உளமாற மூவரையும் வரவேற்று உபசரித்தார்.

இறுதியாக தான்பெற்றிருந்த தவவலிமையையும், அதனால் பெற்றிருந்த அனைத்து புண்ணியங்களையும் ஸ்ரீராமருக்கே தாரை வார்த்துக்கொடுத்தார் என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீராம ராவணயுத்தத்தில் ஸ்ரீராமரின் வெற்றிக்கு இவையெல்லாம் பயன்பட்டன என்று அறிகின்றோம்!

இதைச் செய்து முடித்தபிறகு தீயில் புகுந்து தான் தன்னை மாய்த்துக்கொள்ள விரும்பிய சரபங்கரிடம் அதற்குக்காரணம் கேட்டார் ஸ்ரீராமர்.

**அதற்குச் சரபங்கர் கூறிய பதில்கள் அறியத்தக்கன :**

உன்னைக் கண்டு வணங்கியதால் என்னுடைய இருவினைப்பயன்களும் முற்றுப்பெற்றன. எனவே நான் இனி நேராக அந்தப் பரமபதம் ஆகிய வைகுந்தம் செல்லவும் முடியும் என்று கூறி, வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே என்பதை உறுதி செய்கின்றார்.



எனவேதான் "நான் உம் வரவிற்காகத் காத்திருந்தேன்.. இந்திரன் வந்து இந்திரலோகப் பதவி கொடுப்பதாக வேண்டினான்.. பிரம்மா சத்திய லோகம் வர அழைப்புவிடுத்தார். ஆனால் அவை எல்லாம் நிலையற்றவை. நிலையான பரமபத வைபவத்தையே நான் அடையவிரும்பினேன்'' என்று அம்முனிவர் கூறியதாக அறிகின்றோம். இதனால் இந்திரலோகம், பிரம்ம லோகம், பரமபதம் என்பவை வெவ்வேறானவை என்றும் அறியலாம்.

மேலும் அவர்கள் அடைந்த அச்சரபங்கமுனிவரின் ஆசிரமம் சரபங்கா நதிக்கரையில் அமைந்திருந்தது. மிகப்பெரும் தவ வலிமை கொண்டவர். அவருடைய தவப்பயனால் பிரம்மலோகத்திற்கு அவரை அழைத்துப்போக பிரம்மதேவரின் ஆணைப்படி இந்திரனே வந்திருந்தான்.

அவன் விமானம் மேலே பறந்து கொண்டே இருந்த அந்தநேரத்தில் ஸ்ரீராமன் தன் ஆசிரமத்தை அடைந்துவிட்டதை அறிந்த அவர், தான் ஸ்ரீராமனின் தரிசனம் பெற்ற பிறகே வரப்போவதாக மறுத்துவிட்டார்..

இராமரின் வரவை இந்திரனும் அறிந்து திரும்பிவிட (அப்போது ஸ்ரீராமனைச் சந்திக்காமல் சென்றான்) சரபங்கர் மூவரையும் அன்புடன் உபசரித்து ஆசீர்வாதம் கொடுத்தும் பெற்றும் திருப்தி அடைந்தார். ஸ்ரீராம தரிசனம் கிடைத்துவிட்டதால் அவர் தீ மூட்டி அதில் இறங்கினார். அதிலிருந்து ஓர் ஒளிப்பிழம்பு மேல்நோக்கிச்சென்றது. சாட்சாத் நாராயணமூர்த்தியின் திருக்கோலத்தோடு அவர் விண்ணுலகம் அடைந்தார் என்பார்கள்.

இராமன் வருகைக்காக சரபங்கர் காத்திருந்ததும், ஸ்ரீராம தரிசனம் கிடைத்ததால் பரமபதம் அடைவது உறுதி என்றும் சரபங்கர் கூறியது.

**"ஆயிரம் முகம்உள தவம் அயர்குவன்யான்**
**நீஇவண் வருகுதி எனும் நினைவுடையென்**
**போயின இருவினை புகலுறு விதியால்**
**மேயினை இனி ஒருவினையிலை விறலோய்."** **(111)**

என்னும் கம்பரின் கவிநயத்தால் சரபங்கர் தன் இருவினைச்செயல்களின் விளைவுகளும் ஸ்ரீராம தரிசனத்தால் அகன்றது என்று கூறுவதை அறிய முடிகின்றது.

மேலும்

**"இந்திரன் அருளினன் இறுதிசெய்பகலான்**
**வந்தனன் மருவுதி மலர்அயன் உலகம்**
**தந்தனென் என அது சாரலென் உரவோய்**
**அந்தமில் உயர்பதம் அடைதலை முயல்வோன்" (112)**

என்னும் பாடலில் இந்திரன் அவன் உலகத்திற்கு அழைத்துச் செல்ல வந்து காத்திருந்ததையும், சத்தியலோகத்தை அடைய பிரம்மா அழைப்பு விட்டபோதும் அதை ஏற்காமல் பரமபதம் அடைதலையே தனது நோக்கமாகக் கொண்டிருந்ததையும் அறியலாம்!

மேலும், அச்சரபங்க முனிவரின் ஆசிரமப்பகுதியில் பலபகுதிகளில் ஆயிரக்கணக்கில் பற்பல முனிவர்கள் அவருடைய சீடர்களாக பலவகையான தவங்களை மேற்கொண்டிருந்தனர். சிலர் ஞானயோகம் பெற முயன்றனர். உணவின்றி உபாசனத்தில் பலர் ஈடுபட்டிருந்தனர். சிலர் காற்றை மட்டும் உண்டு வேறு உணவை ஏற்காமல் தவத்தில் மூழ்கிக்காணப்பட்டனர். சிலர் நீரில் மிதந்துகொண்டும், பலர் ஒற்றைக்காலில் நின்று தவம்புரிபவர்களாகவும் இப்படி பலதறப்பட்டோர் இருந்தனர். இந்த ஆசிரமப்பகுதியைக்கடந்த மூவரும் அடுத்ததாக ஸ்ரீராமன் சுதீஷ்ணர் என்பவரின் ஆசிரமம் அடைந்தார். சுதீஷ்ணர் ஆசிரமம் மந்தாகினி நதிக்கரையில் உள்ளது. அங்கு தாம் தங்க அனுமதி கேட்டபோது கொடிய விலங்குகளின் நடமாட்டம் மிகுதியாக உள்ள பகுதி அது என்பதால், சீதைக்குத் துன்பம் விளையும் என்பதால் வேண்டாம் என்று மறுத்தார் சுதீஷ்ணர்.

எனவே அங்கிருந்தும் புறப்பட்டு, இன்னும் பல தவசியர்களைச் சந்தித்து ஆசிபெறுமாறும், பலபேரின் பர்ண சாலைகளில் தங்குமாறும் அறிவுரை கூறினார் சுதீஷ்ணர்.



அவர்சொற்படி ஒவ்வொரு தவசியரிடத்தும் நாட்கள் கணக்கிலும், மாதக்கணக்கிலும், ஆண்டுகள் கணக்கிலுமாக மொத்தம் பத்து ஆண்டுகளைத் தண்டகாரண்யத்தில் கழித்தார் ஸ்ரீராமன். ஸ்ரீராமனின் வனவாசத்தில் பெரும்பகுதி தண்டகாரண்யத்திலேயே கழிந்தது.

இக்காலப்பகுதியில் தவசியர்களுக்கும் அவர்கள் செய்த வேள்விகளுக்கும் கவசமாய் நின்று காத்தார் ஸ்ரீராமர். இப்படி 10 ஆண்டுகளைக் கழித்து மீண்டும் சுதீஷ்ணர் ஆசிரமம் அடைந்தபோது அகத்தியரைத் தரிசிக்க அவரைக் காணச் செல்லுமாறு சுதீஷ்ணர் அறிவுறுத்தினார்.

இவர் அகத்திய முனிவரின் சீடர் ஆகையால் அகத்தியரிடம் தான் பெற்ற பயிற்சிக்கு குருகாணிக்கையாக ஏதேனும் தரவேண்டும் என்று சுதீஷ்ணர் வற்புறுத்தியபோது ஸ்ரீராமனின் தரிசனத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்து தரவேண்டும். அதுவே தான் விரும்பும் குரு காணிக்கை என்றார் அகத்தியர்.

அதை நிறைவேற்றும் விதமாக மூவரையும் அகத்தியர் ஆசிரமம் அழைத்துச் சென்றார் சுதீஷ்ணர் என்றும் கூறப்படுகின்றது. நர்மதா நதிக்கரையில் அகத்தியர் ஆசிரமம் இருந்தது. அகத்தியர் ஆசிரமத்தில் பிரம்மா சிவன் விஷ்ணு இந்திரன் உள்ளிட்ட பல தெய்வங்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே அனைவரையும் வணங்கும் பழக்கம் அகத்தியரிடத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

தமிழ் முனிவன் என்றும், குறுமுனி என்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தவரான அகத்தியர் மிகுந்த தவவலிமையும் திறமையும் உள்ளவராக விளங்கினார். இவரிடத்தில் அரக்கர்களின் தொல்லை எடுபடவில்லை. அரக்கர்களின் துன்பத்திலிருந்து தவசியர்களைக் காக்க விஷ்ணு ஒருமுறை தனது தனுசையும் பிரம்மா தனது பிரம்மாஸ்திரத்தையும், இந்திரன் இரண்டு அம்பறாத் தூணிகளையும் சிவபெருமான் ஒரு வாளினையும் இவரிடம் கொடுத்து வைத்திருந்தனர்.

இதைப் பயன்படுத்தி அடிக்கடி தொல்லைதந்த அரக்கர்களோடு போரிட்டு அவர்களைத் துரத்தினார் அகத்தியர். அரக்கர்களின் ஆதிக்கத்தைத் தடுத்தார்.

இந்த அகத்தியரின் தன்மையைப் பின்வரும்பாடல் உணர்த்துகின்றது.

**“உழக்கும் மறை நாலினும் உயர்ந்து உலகம் ஓதும்**
**வழக்கினும் மதிக்கவியினும் மரபின் நாடி**
**நிழல் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண்**
**தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான் (156).**

என்றபாடலால் அறியமுடிகின்றது. அனைத்து தெய்வங்களையும் வணங்கும் வழக்கத்தை இந்த அகத்தியமுனி கொண்டிருந்தாலும், நெற்றிக்கண்ணை உடையவரான சிவபெருமானின் அருளுக்குப் பாத்திரமாக விளங்கினார் அகத்தியர் என்பதும், அச்சிவபெருமான் உலகத்திற்குத் தந்த தமிழை இவர் வளர்த்தார் என்பதும், அதனாலேயே தமிழ்முனிவன் என்னும் சிறப்பினைப் பெற்றார் என்பதும் அறியமுடிகின்றது.

அத்தகைய முனிவனான அகத்தியன் திருமாலின் அம்சமான ஸ்ரீராமன் வருகையைக் குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். அவரின் திருவடி தரிசனம் பெறப்போகின்றோம் என்றும் உவகைகொண்டிருந்தார்.

**விண்ணினில் நிலத்தினில் விகற்ப உலகில் பேர்**
**எண்ணினில் இருக்கினில் இருக்கும் என யாரும்**
**உள் நினை கருத்தினை உறப்பெறுவனால் என்**
**கண்ணினில் எனக்கொடு களிப்புறு மனத்தான் (157)**

இந்த அகத்திய முனிவர் மேலும் இல்வலன் வாதாபி என்ற அரக்க சகோதரர்கள் சூழ்ச்சியினால், வழிப்போக்கர்களையும், முனிவர்களையும் ஏய்த்து, அவர்களைக்கொன்று தின்னும் பழக்கம் கொண்டிருந்தனர். இவர்களுள் வாதாபி ஆட்டுருவம் கொண்டு வருவான். இல்வலன் தவசியர்களைக் கட்டாயப்படுத்தி, அழைத்துவந்து, ஆட்டின் மாமிசத்தை உட்கொள்ளச் செய்து, வேறு வழியின்றி அவர்கள் உண்டவுடன், “வாதாபி வெளியே வா” என்று அழைப்பான். உடனே வாதாபியும் உண்டவர்களின் வயிற்றைக்கிழித்துக்கொண்டு வெளிப்பட அவர்கள் இறந்து போவார்கள். அவர்களின் மாமிசத்தை உண்டு மகிழ்ச்சி அடைந்து வந்தனர் இருவரும்.



ஒருமுறை இதே உத்தியைப்பயன் படுத்தி, அகத்தியரை அழிக்க நினைத்தனர். மாமிசத்தை உண்ட உடனே அகத்தியர் தன் வயிற்றுப்பகுதியைத் தடவிக்கொடுத்து,.” வாதாபி ஜீரணாஸ்தி” என்றார். உடனே வாதாபி ஜீரணமாகிப்போனான். நடுங்கிப்போன இல்வலனையும் அழித்தார் அகத்திய முனிவர். இதனால் அந்த அகத்தியமுனிவரிடம் பயம்கொண்டவாறே இருந்தனர் அரக்கர்கள். தம் அரக்க அரசு அக்கானகப்பகுதியில் அமைவதற்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்த அகத்தியர் அரக்கர்களுக்குச் சிம்மசொப்பனமாகவே விளங்கினார்.

இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகையும் பலமுறை இவருடைய யாகத்தை அழிக்கவந்து தோல்வி கண்டு ஓடிவிட்டாள். கரன், தூஷணன் ஆகியவர்களும் கதி கலங்கினர். அத்தகைய முனிபுங்கவர் ஆகிய அகத்தியர் ஸ்ரீராமனைச்சேவித்தார்.

இராமனின் பத்தாண்டு கால தண்டகாரண்ய வனவாசத்தின்போது அரக்க ஆதிக்கத்தைத் தடுத்தார். முனிவர்களாகிய தர்மிகளைக்காத்தார். ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்தார் ஆகையால் அவர்தன் அவதார நோக்கத்தை இங்கிருந்தே தொடங்கி நடத்திக்கொண்டிருந்தார் எனலாம்.

அகத்திய முனிவர் ஸ்ரீராமனின் அவதார நோக்கத்தை அறிந்து, அவரைத்தரிசித்ததோடு, பிறகு நடைபெறப்போகும் இராவண யுத்தத்திற்குப் பயன்படும் என்றறிந்து தான் வைத்திருந்த அந்த வலிமை பொருந்திய அஸ்திரங்களை இராமனுக்குக் கொடுத்தார் அகத்தியர். இராமனும் அந்த திவ்விய அஸ்திரங்களை ஏற்றுக்கொண்டார்.

மேலும், தன்னிடம் இருந்த மிகவும் சக்தி வாய்ந்த கத்தி ஒன்றை இலட்சுமணனுக்கும் அளித்தார் அகத்தியர்.

எப்போதும் இராமனிடம் ஒரு வில் அல்லவா உள்ளது? அகத்தியர் கொடுத்தால் இரண்டு இருக்கவேண்டுமே என்று கூட சிலர் சந்தேகம் கொள்ளலாம். கேட்கவும் செய்யலாம். ஆனால் மந்திர உச்சாடனம் செய்து அதை இதயத்தில் ஏற்றல் வேண்டும். அதைப் பயன்படுத்த நினைத்தால் அவை கைகளுக்கு வரும். பயன்படுத்தலாம். மீண்டும் அவை அம்பறாத்தூணில் சென்றடையும். மறையும். இத்தகைய குணங்களைப் பெற்றவைதான் திவ்விய அஸ்திரங்கள் எனப்பட்டன.

மேலும் அகத்தியரைப்பற்றிய பின்வரும் செய்திகளையும் அறிந்து கொண்டால் அகத்தியரின் சிறப்பியல்புகள் நமக்குத்தெரியவரும்.

ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்து தந்தையின் கட்டளையை ஏற்று வனவாசம் வந்திருப்பதாகவும் அவரை விரைவில் தான் தரிசிக்க விரும்புவதாகவும் அதையேதான் குருகாணிக்கையாக ஏற்க விரும்புவதாகவும் சுதீஷ்ணராகிய தன் சீடனிடம் தெரிவித்திருந்தார் அகத்தியர். சுதீஷ்ணரும் அதற்காக பெரிதும் முயற்சி எடுத்து தனது ஆசிரமத்திற்கு வந்த ராம லட்சுமண சீதை ஆகியோருக்கு நல்ல உபசாரம் செய்து அகத்தியரின் பெருமையை எடுத்துச்சொல்லி அம்மாமுனிவர் ஸ்ரீராமனின் தரிசனத்திற்காக விழைவதாகவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீராமரும் அதைத் தான் பெறும் பேறு என்று நினைத்து உடனே அவரைக்கான விரும்புவதாகவும் எடுத்துக்கூறி சுதீஷ்ணரோடு அகத்தியர் ஆசிரமம் சென்றார். அப்போது ஸ்ரீராமரின் வருகையால் மனம் மகிழ்ந்த அகத்தியர் தனக்கு பெருமானின் திருக்காட்சிக்கு (தரிசனத்திற்கு) ஏற்பாடு செய்த தன்னுடைய சீடனாகிய சுதீஷ்ணருக்கு நன்றி தெரிவித்தார் என்றும் அறியமுடிகின்றது.

ஆனால் அகத்தியரின் தவ வலிமைக்கு முன்னாலும், தவிர்க்க முடியாத காலங்களில் அவர் பிரம்மாதி கடவுளர்களிடம் பெற்று வைத்திருந்த அஸ்திர, சஸ்திரங்களைப் பயன்படுத்தி, அரக்கர்களுக்கு எதிராகப் போரிட்டதாலும், அவர்களால் அகத்தியரை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆக அரக்கர்களின் அரசும் ஆதிக்கமும் தண்டகாரண்யத்தில் பரவாமல் தடுத்த தவசீலர் அகத்தியர் ஆவார்.



ஒருமுறை சூர்ப்பணகை கர தூஷணர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து அகத்தியரைப் பற்றியும் அவருடைய தவ வலிமையைப் பற்றியும் அறிந்து கோபம் கொண்டு அந்த அகத்தியரைத் தான் அடக்கி வருவதாகக் கூறிச்சென்றாள். ஆனாலும் அவளாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை.

மேலும் அவளுடைய மகனான சம்பரீசன் என்பவன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அவரிடம் இருந்த காலகோடாரியைப் பெற முயன்று வந்தான். எனவே அவனுடைய ஆற்றலால் அகத்தியரையும் மற்ற முனிவர்களையும் அடக்க முடியும் என்று பகற்கனவு கண்டு வந்தான். ஆனால் அவன் கனவும், அவன் தாயாகிய சூர்ப்பணகையின் கனவும் பகற்கனவாகவே முடிந்தது.

விருத்தாசுரன் என்ற கொடிய அரக்கன் இந்திரனுக்கு எதிராக யாகம் செய்தான். தேவர்கள் அந்த யாகத்தைத் தடுக்கநினைத்தனர். ஆனால் அதற்குள் விருத்தாசுரன் யாகத்தை முடித்துக்கொண்டான்.

கடலுக்குள் தங்களது கோட்டையை அமைத்துக்கொண்டு திடீரென்று மேலெழுந்து வந்து தேவர்களுக்குக் தொல்லைக் கொடுத்துவந்தனர்.

இதிலிருந்து தங்களைக்காப்பாற்ற வேண்டி முனிவரை தேவேந்திரன் வேண்ட அவர்தன் உயிரைத்தியாகம் செய்து அவருடைய முதுகு எலும்பைக்கொண்டு வச்சிராயுதம் என்ற அபூர்வ அஸ்திரத்தைக் கொடுத்தார். அந்த அஸ்திரத்தை இந்திரன் எய்தபோது விருத்தாசுரன் தனது கோட்டையைக் கடலுக்கு அடியில் மறைத்துக் கொண்டான்.

வச்சிராயுதத்தைக் கேட்டபோது அவன் தண்ணீருக்குள் தன்னுடைய சக்தி பயன் அற்றுப்போகும் என்றும் கடல்நீரைச் சற்று நேரம் வற்றச் செய்தால்தான் தன்னால் விருத்தாசுரனை எளிமையாக அழிக்கமுடியும் என்றும் கூறினார்.

தேவேந்திரன் அகத்தியரிடம் வேண்ட தேவர்களுக்காக அவர்கடல் நீரைக் குடித்தார். விருத்தாசுரன் அழிக்கப்பட்ட பிறகு மீண்டும் அக்கடல்நீரை உமிழ்ந்தார். இதனால் அகத்தியரின் வலிமையும் சக்தியும் புலனாகின்றது.

மேலும் அகத்தியரிடமிருந்து ஸ்ரீராமன் பெற்ற. இந்த அஸ்திரங்களைப் பயன்படுத்தி ஸ்ரீராமர் இராவணனை வதைத்தார் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

வனவாசம் கழிக்கவந்த ஸ்ரீராமன் பரத்வாஜர் ஆசிரமம் தொடங்கி சித்ரகூடம், தண்டகாரண்யம் ஆகியபகுதிகளில் "தாங்கருந்தவம் மேற்கொண்டு பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியப்புனல்கள் ஆடி ஏழிரண்டு ஆண்டுகளில் ஆறிரண்டு ஆண்டுகளான பன்னிரண்டு ஆண்டுகள்" வனவாசத்தைக் கழித்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளைப் பயனுள்ளதாகவும் மனமகிழ்ச்சி ஏற்படும் வகையிலும் கழிக்க எண்ணினார் இராமர்.

எனவே அகத்தியரிடம் அதற்கு ஏற்ற இடம் யாது என்று வேண்ட அவர் கோதாவரி ஆற்றங்கரையில் உள்ள பஞ்சவடி மிகச்சிறந்த இடம் என்றார். அகத்தியர் ஆசிரமத்திலிருந்து 16 கல்(மைல்) ஏறத்தாழ 20 கி.மீட்டர் தொலைவில் உள்ளது இந்தப் பஞ்சவடி.

ஐந்து ஆலமரங்களின் தொகுதி என்பதால் அது பஞ்சவடி என்று அழைக்கப்பட்டது. வடம் என்றால் சமஸ்கிருதத்தில் ஆலமரம் என்றுபொருள். அப்பகுதியில் ஐந்து ஆலமரங்கள் இருந்ததால் அப்பகுதி பஞ்சவடி என்னும் பெயர்பெற்றிருந்தது.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வார் ஆலமாமரத்தின் இலைமேல் துயில்கொண்ட கண்ணனாகிய பாலகனை வடபத்ரசாயி பெருமான் என்று பெயரிட்டு



அழைப்பதை அறியலாம். ஸ்ரீ வில்லிபுத்தூர் பெருமான் வடபத்ரசாயி. ஊழிக்காலத்தில் உலகனைத்தும் உண்டு இருந்த அத்திருக்கோலம் கண்ட ஆழ்வார் வேறு எவ்வித தெய்வத்தின் அர்ச்சாவதார நிலையினையும் தான் காணவும், கண்டு களித்திடவும் விரும்பவில்லை என்றும், நீலமேனியனான அவனுடைய திருவுருவம் ஆழ்வாரின் மனதை விட்டு அகலவில்லை என்பதும் ஒரு காரணம் என்பதைத் தன்னுடைய அமலனாதிபிரான் பாசுரத்தில் பாடி மகிழ்வதைக் கூறலாம்.

இந்தப் பஞ்சவடிக்குப் பக்கத்தில் இருந்தது ஜனஸ்தானம்! கர, தூஷணன் ஆட்சிப்பகுதி. கரன் தூஷணன், திரிசிரா என்பவர்கள் எல்லாரும், இராவணனின் உறவினர்களாகவும், ஒன்று விட்ட அண்ணன் தம்பிமுறையினராகவும் இருந்தவர்கள்.

அயோத்தியில் இருந்து வனவாசத்திற்குப் புறப்பட்டு கங்கையின் தென் கரையைக் கடந்து தெற்குநோக்கிப் பயனத்தைத் தொடங்கினார் ஸ்ரீராமர். தென் திசையிலேயே அடர்காட்டுப் பகுதியில் பிரவேசித்தார்கள். சித்திரகூடம், தண்டகாரண்யம் வரையில் தெற்குதிசையிலேயே வனவாசப் பயணம் மேற்கொண்டனர்.

அடுத்ததாக, அகத்தியரின் வாக்குப்படி பஞ்சவடிக்குப் போகும் போது சற்று மேற்குத் திசையில் பயணம் செய்தார்கள். இடையே கோதாவரி நதி குறுக்கிட்டது. நீர்வரத்து அதிகம் உடையது. எனவே இலட்சுமணன் உலர்ந்த மூங்கில்களை வெட்டியெடுத்து ஓடம் செய்து ஓணான் கொடியில் பிணைத்து தான் நீரில் நீந்தியவாறு சீதா ராமரைக் கரைசேர்த்தான்.

அவனும் சக்ரவர்த்தியின் திருமகன். இராமனைப் போன்றே அனைத்திலும் சம உரிமை உள்ளவன். எனினும் சகோதர பாசம், கடமை உணர்வு இதனால் உந்தப்பட்டதால் இவ்வாறு பணிவிடை செய்கின்றான்.

கோதாவரியின் தென்திசை ஆற்றங்கரையைக் கண்டு, அங்கே குடில் அமைத்து தங்கியிருந்தனர். அப்பகுதியில், இங்கு தற்போது பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய மூன்றுபேருக்கும்

மூன்று குண்டங்கள் உள்ளன. தற்போது இங்கே செல்பவர்கள் அவரவர்களின் குலமுறை வழக்கப்படி தற்போது பித்ரு பிண்டம் கொடுத்து பித்ருதோஷ நிவர்த்தி செய்துகொள்கின்றனர்.

பஞ்சவடிப்பகுதியில் வலம் வந்து திரிந்தவள் சூர்ப்பணகை. இராவணனாகிய தன்னுடைய அண்ணனால் கணவனை இழந்தவள். அவள்கணவன் வேறொரு அரக்க அரசனுக்காகப் போரிட்டபோது, இராவணனையே எதிர்த்துப்போரிட்டு, தன்னுடைய அரசவிசுவாசத்தைக் காட்டினான் சூர்ப்பணகையின் கணவன். அப்போது, தன் தங்கையின் கணவன் என்றும் பாராமல், அவனைக்கொன்றான் அசுரன் இராவணன்.

சூர்ப்பணகைக்கு ஒரேஒருமகன். அவனும் பயங்கர அரக்க குணம் கொண்டிருந்தான்.. சபரீசன் என்பது அவன் பெயர். சிவபெருமானை நோக்கித் தவம் செய்து, அவரிடம் இருந்து காலக்கோடரியைப் பெறநினைத்தான். அவ்வாறு பெற்றுவிட்டால், அதனால் அனைவருக்கும் துன்பம் உண்டாக்கத்துடித்தான்.

இராம லட்சுமணர்கள் பஞ்சவடியில் தங்கியிருந்தபோது சிவபெருமானின் ஒப்புதலோடு இலட்சுமணன் இடத்தில் சேர்ந்துவிட ஆசை க்கொண்டான் காலக்கோடரி.

எனவே இலக்குவன் செல்லும் வழியில் ஓர் அற்புதமான வாளாகக் காட்சியளித்தான். அதை இலக்குவன் தன் கைகளில் எடுத்தவுடன், சரண் அடைந்து தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். இலட்சுமணனும் ஏற்றுக்கொண்ட பின்னர் அந்த வாளின் சக்தியைப் பரிசோதிக்க நினைத்து அருகாமையில் இருந்த ஓர் குடிலின் மூங்கில் சுவற்றின்மேல் வீசினான். அப்போது அருவப்பொருளாக அக்குடிசையில் தவம் செய்து கொண்டிருந்த சபரீசனைக் கழுத்தறுத்துக் கொன்றது அக்கோடரி.

தன் மகனைப் பல இடங்களிலும் தேடி வந்த சூர்ப்பணகை, அவன் இறந்து கிடப்பதைக் கண்டு அழுது



புலம்பினாள். இருப்பினும் அங்கே புதிதாக அமைந்திருந்த இராமனின் பர்ணசாலையைக் கண்டு வியப்படைந்தாள். அருகில் அங்கு சென்றுபார்த்தபோது, அங்கிருந்த இராமலட்சுமணர்களின் அழகைக்கண்டு மயங்கிப்போனாள். அவர்களுள் முதலில் இராமனையும், பின்னர் இலக்குவனையும் அடைய மாறி மாறி ஆசைப்பட்டாள் என்று அறிகிறோம் !

இது அவளுடைய காமக்கொடூரத்தைக் காட்டுகின்றது. தன் ஒரேயொரு மகனை இழந்துவிட்ட நிலையிலும், அதை அப்போதே மறந்து, காமவயப்பட்டு ஆண்களை அடையும் மோகத்தில் மூழ்கிப்போனாள்! அண்ணனைப்போலவே இவளும் காம வேட்கை உடையவளாக இருந்தாள் என்பதையும், அரக்க சுபாவம் மிகுதியாகக் கொண்டவள் என்பதையும் இது காட்டுகின்றது.

**சூர்ப்பணகைப் படலம் :**

இத்தகையவளான அரக்கி சூர்ப்பணகை இலங்கையை ஆண்டுவந்த அரக்க அரசனான இராவணனின் தங்கையாவாள். இவளுடைய மற்றொரு அண்ணன் கும்பகர்ணன். இவளுடைய தம்பிதான் அறத்தில் பற்றுக்கொண்ட விபீஷணன். மாயாஜாலங்கள் செய்வதிலும் நினைத்த உருவத்தை எடுப்பதிலும் வான்வழி பறந்துசெல்லும் திறமையிலும் வல்லவள் இந்தச் சூர்ப்பணகை. இராமன் மீது காதல்கொண்டு அதனால் இலக்குவனின் சீற்றத்திற்கு ஆளாகி தன் காதையும் மூக்கையும் இழந்து மூளியான இவள் அடைந்த துன்பப் பகுதியைக் கூறும் கதைப்பகுதி ஆதலால் இது சூர்ப்பணகை வதைப்படலம் என்று அழைக்கப்படுகின்றது.

**சூர்ப்பணகை மூக்கறுபடுதல் :**

தண்டகாரண்யத்தில்(தாண்டகவனம்) பத்தாண்டுகள் தங்கியிருந்து பல அரக்கர்களை அழித்தநிலையில், பஞ்சவடி வந்து, இலக்குவன் அமைத்துக்கொடுத்த பர்ணசாலையில் இன்பமாக வாழ்ந்துகொண்டிருந்தபோது ஒருநாள் ஸ்ரீராமரின் ஆசிரமம் பக்கமாக வந்த அவள் இராமனைக்கண்டு அவன்

பேரழகில் மயங்கினாள். அருவருக்கத் தக்க உருவம் கொண்ட அரக்கியான அவள் தன்னை ஓர் அழகிய மானிடப்பெண்ணாக உருமாற்றிக்கொண்டாள்.

அவள் அழகிய வடிவம் புனைந்து வந்ததைக் கம்பர் மிக அற்புதமான கவிதையில் பாடியுள்ளார்.

பஞ்சவடிவில் இராமன்முன் சூர்ப்பணகை அழகிய பெண்ணாய்த் தோன்றல்.

**பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க**
**செஞ்செவிய கஞ்சம் நிகர் சீறடியள் ஆகி**
**அஞ்சொல் இள மஞ்ஞை என அன்னம் என மின்னும்**
**வஞ்சி என நஞ்சம் என வஞ்சமகள் வந்தாள். (248)**

என்று அரக்கர்களின் கொடூர குணத்தை உடையவளான அவள், பூவினும் மென்மை படைத்த இனிய குணங்கள் நிறைந்தவளாகவும், அவள் கழுத்திலும் தனது உடலிலும் அணிந்திருந்த மலர்களின் வாசமும் அழகும் காற்றில்மிதந்து வர, அழகிய ஒரு இளமையான மயிலைப்போன்ற சாயலையும், அன்னப்பறவையைப் போன்ற இனிய குரலையும் உடையதொரு பெண்ணாக தன்னை மாற்றிக்கொண்டு, ஆனால் வஞ்சகமும் சூதும் நிறைந்த மனத்தினை உடையவளாக இராமனின் பர்ணசாலை முன்வந்து தோன்றினாள் என்று தமிழின் இடையின எழுத்துக்கள் நிறைந்த, மென்மையாக ஒலிக்கக்கூடிய சொற்களைப் பெய்து கம்பர் பாடியுள்ள கவித்திறத்தை அறியாதார் யார்? (எவரும் இலர்)!

அவ்வாறு வந்தவளே எனினும் அவளால்தான் இராவணாதியர்களின் அரக்க குலம் முழுவதும் அழிந்துபடப்போகின்றது என்பதை உணர்த்துவதற்காக அவள் நோக்கத்தையும், செயலையும் பின்வரும் பாடலால் எடுத்துரைக்கின்றார் கவியரசர் கம்பர்.!

அரக்கர் குலத்தை அழிக்க வந்த அரக்கி சூர்ப்பணகை எனல்.



**தோன்றி தோன்றல் தன்னைச் சுட்டினள் காட்டிச் சொன்னாள்**
**வான்தொடர் மூங்கில் தந்த வயங்க வெந் தீ இது என்ன**
**தான்தொடர் குலத்தை எல்லாம் தொலைக்குமா சமைந்து நின்றாள்**
**என்று வந்து எதிர்ந்த வீரன் இவன் இகல் இராமன் என்றே (425)**

ஆம்! அவள் ஒரு மூங்கில் காட்டிற்குள் எரியத்தொடங்கிய காட்டுத்தீ என்கிறார் கம்பர். மூங்கில் காட்டினைப்போன்ற முட்களாகிய கொடுமைகள் பெற்றிருக்கும் முற்றிய மூங்கிற்காடானது எவ்வாறு தீயால் கொழுந்துவிட்டு எரிந்து பட் படீர் பட் படீர் என்ற சத்தத்துடன் எரிந்து அழிந்து போகுமோ, அப்படி அந்த அரக்கர் குலமாகிய மூங்கிற்காடு விரைவில் அழிந்துவிடப்போவதை முன்னமே எடுத்துரைக்கின்றார் கம்பநாட்டாழ்வார்!

(தன் கணவனைக்கொன்றவன் அண்ணன் இராவணன் என்பதால் அவன்குலத்தை அழிக்கவே இத்தகைய சூழ்ச்சியில் இறங்கினாள் சூர்ப்பணகை. கரன் மற்றும் தூஷணர்களுக்கு இராமனைக்காட்டிப்போரிட வைத்தாள். பகைமைக்கு வித்திட்டு வளர்த்துவிட்டு கொழுந்துவிட்டெரிக்கச் செய்யும் பொய்மைப் பேச்சுக்களையும் இராவணன் மனத்தில் தூவி அழிவிற்கு ஆரம்பம்தந்தாள்)

தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு பலவாறு வேண்டியும் ஏகபத்தினி விரதம் பூண்டவரான ஸ்ரீராமன் அவளை ஏறெடுத்தும் பாராமல் விரட்டினார். அருகிலே இருந்த தன் தம்பியைச் சுட்டிக்காட்டி, அவன் திருமணம் ஆகாதவன். எனவே நீ அவனிடம் உன் காதலை வெளிப்படுத்திப்பார் என்று நகைச்சுவைக்காக இராமன் கூற, அதை உண்மை என்று நம்பியவள் அப்படியே செய்ய இருவரும் நகைத்தனராம். ஆனால் இராமனைச்சுட்டிக்காட்டிய இலக்குவன், அவரே எனக்குத் தலைவர்! என்னைத் திருமணம் செய்து கொண்டால், அவருக்கு நீ அடிமைத்தொழில்கள் செய்யவேண்டியதிருக்கும் என்று இலக்குவன் கூறியபோது, அதற்கும் இசைவு தெரிவித்தாள் அக்காமுகி சூர்ப்பணகை!

சூர்ப்பணகையை அலைக்கழித்து ஸ்ரீராமரும் இலக்குவனும் மாறிமாறி அடுத்தவரை மணந்து கொள்ளுமாறு அவளிடம் கூறி, சிறிதுநேரம்விளையாடினர். நகைத்தனர். அவர்கள் கூறியதை உண்மை என்று நம்பியவள் அவர்கள் தன்னை ஏய்த்தும், இழிவுபடுத்தியும் அவ்வாறு செய்தார்கள் என்று அறிந்து மிகுந்தகோபம் கொண்டாள்.! தன்னை அவர்கள் உதாசீனம் செய்ததற்குக் காரணத்தை அறிய முற்பட்டபோது, பர்ணசாலையில் இருந்தும் வெளியே வந்த சீதாதேவியைக் கண்டாள்.! அவளுடைய தெய்வீகத்தன்மை நிரம்பிய அழகினைக் கண்டும், அச்சீதாதேவியின் பொறுமையைக் கண்டும் பொறாமை கொண்டாள் இந்த அரக்க மாயத்தோற்ற அழகி! அவளின் பேரழகையும் பார்த்து வியந்து போன அவள் தன்னை இராமன் வெறுத்து ஒதுக்குவதற்கு இவளே காரணம் என்று நினைத்து அச்சீதையை அழித்துவிட்டால் இராமனைத் தன்வசப்படுத்தலாம் என நினைத்தாள்.

எனவே சீதையைக்கவர்ந்து தூக்கிச் செல்ல நினைத்தபோது அதைக் கண்ட இலக்குவன் கோபம் கொண்டு, இராமனது ஆணைப்படி அவளுடைய மூக்கையும் மார்பகங்களையும், காதுகளையும் அரித்து துரத்தினான். அம்மானிடர்களின் அடாத இச்செயலைக் கண்டு வியந்துபோனாள். பயம் கொண்டு அரற்றினாள்! எனவே இவர்களைப் பழிதீர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் சூர்ப்பணகை. அக்கானத்தில் ஜனஸ்தானம் என்னுமிடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இராவணனின் அடிமை அரக்கர்களாகிய கரன், தூஷணன் மற்றும் திரிசிரா என்பவர்களையும் ஏவி இராமன் மீது போர்த்தொடுக்கவைத்தாள்.

**கர தூஷணன் வதைப்படலம் :**

அந்த ஜனஸ்தானத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அரக்கர்களில் முக்கியமானவன் கரன் என்னும் அரக்கன். தூஷணன் என்பவனும் திரிசிரா என்ற மூன்றுதலைகளை உடையவனுமான அரக்கர்களும் அந்தக் கரனுடைய முக்கியமான படைத்தளபதிகளாகவும் விளங்கியவர்கள். வலிமைமிக்க படைத்தலைவர்கள் பதினான்குபேரும் இருந்தனர். இரண்டு மானிடர்களை வதைத்து வருவதற்கு இப்பதினான்கு பேரே போதும் என்று எண்ணிய கரன், அவர்களைப் போருக்கு அனுப்பிவைத்தான்! அவர்கள் தனித்தனிப்படைகளோடும் சேர்ந்து வந்தும் எதிர்த்தார்கள். இலக்குவனைக் கூட துணைக்கு அழைத்துக் கொள்ளாமல் ஸ்ரீராமர் மட்டுமே தனியாக நின்று போரிட்டார்.



ஆழ்வார்களுள் ஒருவரானவரும், ஸ்ரீராமாவதாரத்தின் மீது பெரும்பற்றுக் கொண்டவருமாக அரசாட்சி செய்தவர் குலசேகராழ்வார். இவர் ஒவ்வொருநாளும் இராமாயண காலட்சேபத்தைக் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம் அவ்வாறு ஒருநாள் உபந்யாசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தபோது,. உபந்யாசகர் இராமன் ஒருவராக நின்றுகொண்டு பதினாயிரம் அரக்கர்களுடைய கரன், தூஷணன் படைகளோடு போரிட்டார் என்ற இச்செய்தியைச் சொன்னவுடன் குலசேகரர் ஆகிய அரசன் தன் படைத்தளபதியை அழைத்து, உடனே இராமனுக்குத்துணையாகச்செல்ல, தனது நால்வகைப் படைகளையும் தயாராகுமாறு கட்டளை இட்டார். தானும் போர்க்களத்திற்குச் செல்ல எண்ணினார். அவருடைய மனப்பான்மையைப் புரிந்து கொண்ட அமைச்சர் அவரை சாந்தமடையச்செய்து இது ஏற்கனவே முடிவு பெற்ற கதை என்றும், ஸ்ரீராமர் அவ்வளவு படைகளையும் அழித்துவிட்டார் என்று கூறியதால் குலசேகரர் நிம்மதி அடைந்தார் என்றும் குலசேகரப்பெருமானின் வரலாறு எடுத்துரைக்கின்றது. இவரின் ஸ்ரீராமாயணத்தோடு தொடர்புடைய சில பாடல்கள் பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது. அதையும் அறிந்து மகிழலாம்! இதனால் குலசேகரர் ஸ்ரீராமாவதாரத்தின் மீது கொண்டிருந்த அளவற்ற பக்தியையும் இங்கு அறிந்து கொள்ளலாம்.!

**ஜனஸ்தானப்போரில் இராமன் வில்லில் வெளிப்பட்ட அம்புகள் :**

**ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடி என்று உணரா**
**துன்று பத்திய இராகவன் சுடு சரம் துரப்ப**
**சென்று பத்திரத் தலையின மலை திரண்டென்ன**
**கொன்று பத்தியில் குவித்தன பிணப் பெருங்குன்றம் (439)**

அதாவது இராமனின் கோதண்டத்திலிருந்து வெளிப்பட்ட அம்புகள் ஒன்று எனும்படியாகவும், பத்து, நூறு, ஆயிரம், கோடியாக எண்ணும்படியாகவும் வளர்ந்து, அரக்கர்களின் தலைகளை அறுத்தெரிந்தன என்கிறார் கம்பர். இராமாயணத்தில் இராமனின் இந்த அம்புகளின் பிரயோக யுத்தம், அவருடைய வில்லாற்றலை எடுத்துரைக்கின்றது.

ஆழிமழைக்கண்ணா.. என்னும் பாடலில் ஆண்டாள் நாச்சியார் அனுபவித்த'' தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல் இராமனின் அம்புகளின் அஸ்திரப்பிரயோகம் இருந்தது என்றும் எதிரிகளை அழித்ததும் என்றும் புகழலாம்!

இராம பாணத்தின் முன்னால் அனைவரும் அழிந்து போயினர். இறுதியாக கரன் பெரும்படையோடு இராமனோடு போர்த்தொடுக்க முற்பட்டபோது அகம்பன் என்பவன் தடுத்து நிறுத்தி தீய சகுனங்கள் தோன்றுகின்றன. போரிடப் போகவேண்டாம் என்று தடுத்தபோதும் அதைக்கேளாமல் சென்று போரிட்டான்.. இறுதியில் அவனும் அழிந்துவிடவே அந்த ஜனஸ்தானத்தில் அரக்கர் குலம் ஸ்ரீராமரால் வேருடன் அழிக்கப்பட்டது. அகம்பணன் என்ற ஓர் அரக்கன் மட்டும் உயிர் பிழைத்து இலங்கைக்குச் சென்று அங்கே அரியணையில் வீற்றிருந்த இராவணனுக்கு செய்தியைச் சொல்லி அலறினான். அந்த அகம்பனன் போருக்கு இடையில் மிகவும் பயம் கொண்டவனாக, தப்பிக்க நினைத்து, அங்கே கிடந்த ஒரு சேலையின் ஒருபகுதியால் தன்னை மறைத்துக்கொண்டானாம். அதைக்கண்ட ஸ்ரீராமன் அவள் எவளோ ஒரு பெண் என்று நினைத்து, அம்பை எய்தாமல் விட்டுவிட்டதால் இந்த அகம்பனன் உயிர் பிழைத்துப்போனான் என்பார்கள்.



ஜனஸ்தானத்திலே நடந்த இப்போரில் ஸ்ரீராம அவதாரத்தின் மூன்று உயர் தத்துவங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன எனலாம்! "ஸ்ரீராமன் ஓர் இல், ஒரு வில், ஒருசொல் என்ற மூன்று உயர் தத்துவங்களையும் கடைப்பிடித்து வாழ்ந்தவன்'' என்பார்கள். அதை நிரூபிக்கும் வகையில் சூர்ப்பணகை அழகிய மானிடப்பெண்ணாக வந்து இராமனை மயக்கி, தன்னை திருமணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டிய போதும் அதைக்கண்டு மயங்காதவனாக, ஒருத்தியையே விரும்பி வாழ்க்கை நடத்திய ஓர் உத்தம சீலனாக இருந்ததையே அரியமுடிகின்றது. ஓர் இல், அதாவது ஒரே மனைவியுடன் வாழ்வதின் என்ற உயர் தத்துவம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

தன்னை எதிர்த்துவந்த அத்தனை அரக்கர்களையும் ஐந்து நாழிகைப்பொழுதில் அழித்து அவர்களின் அரக்ககுலத்தை துவம்சம் செய்து, அழித்தது அவதார நோக்கத்தைப்பூர்த்தி செய்ததோடு, ஒரு வில், அதாவது தன்னுடைய வில்லாகிய கோதண்டத்தைப் பயன்படுத்தி, இலக்குவனையும் துணைக்கு அழைத்துக்கொள்ளாமல் போரிட்டு வென்றதால் அந்த இராமனுடைய வில்லையும் அம்பையும் பிரயோகம் செய்து போரிட்டு வென்ற அக்கோதண்டபாணியின் ஒரு வில்லாற்றல் தத்துவம் வெளிப்பட்டுள்ளது.

மேலும் அப்போரின்போது, தனக்குத்துணைவருவதாக வேண்டிய இலக்குவனின் உதவியையும் ஏற்றுக்கொள்ளாமல் சீதாவை மட்டும் காத்துக்கொள்ளுமாறு பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்துவிட்ட ஸ்ரீராமன், விரைவில் அவ்வளவு அரக்கர்களையும் அழிப்பேன் என்று கூறி, அவர்களோடு போர் புரிந்து அழித்தது அவர்கூறிய வார்த்தையை நிரூபித்துக் காட்டிய ஒருசொல் என்னும் தத்துவத்தை, அதாவது சொல்லும் சொல்லை நிறைவேற்றிக்காட்டுதல் என்பது உறுதிசெய்யப் பட்டுள்ளதையும் அறிந்து மகிழலாம்.

**இராவணனுக்கு அகம்பனன் கூறிய கெடுமதி உரை :**

இவ்வாறு ஜனஸ்தானப் போர்க்களத்தில் இருந்து தப்பித்த அகம்பனன் தொடர்ந்து இலங்கைக்கு ஓடோடிச்சென்று, (பறந்துபோய்) அரச சபையில் வீற்றிருந்த இராவணனிடம் ஜனஸ்தானத்தில் இராமன், இலக்குவன் என்ற இரண்டு மானிடர்களால் மொத்த அரக்கர் சேனையும் அழிந்ததை எடுத்துரைத்தான். உடனே தான் அந்த இரண்டு மானிடர்கள்மேலும் போர்தொடுத்து அவர்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டான் இலங்கை வேந்தன். அவன் தன் கருத்தை தெரிவித்தபோது அகம்பணன் தடுத்தான்.

அந்த மானிடர்களை வதைக்கவேண்டும் என்றால், அப்போதைக்குப் போர்தேவையில்லை என்றும், இராமனின் பத்தினியாக விளங்கும் பேரழகி சீதாவைக் கவர்ந்து வந்து விட்டால், அவளைப்பிரிந்த ஏக்கத்தால் இராமனும், அவனைத்தொடர்ந்து அவன் தம்பியும் இறந்து போவார்கள். அதன்பிறகு வேறு வழியில்லாமல் போவதால் சீதை மனம்மாறி உன்னை ஏற்றுக்கொள்வாள்! இப்படிப்பட்ட எளிமையான வழியே இப்போது இராவணன் கடைப்பிடிக்க ஏற்றதாகும் என்று தனது இழிவான கருத்தினை எடுத்துரைத்தான் அகம்பணன். ஒரு சாதாரண ஒற்று கூறும் அரக்கனின் பேச்சைக்கேட்டதால்தான் இராவணனை அனைவரும் இழித்துக்கூற நேர்ந்தது. தன் அரக்ககுலத்தின் இயல்பிற்கு ஏற்றவாறு அன்றே இராவணன் செயல்பட்டிருந்தால், அது இராவணனின் வீரத்திற்கு எந்த வகையிலும் இழிவைத்தந்திருக்காது! ஆனால் மதியை விதி வென்றது. ஆகையாலே அகம்பணன் கூறியவாறு தந்திரமாக சீதாதேவியைக் கவர்ந்து வர திட்டம் தீட்டினான் இராவணன். எனவே தன் மாமனாகிய மாரீசனின் உதவியைத்தேடியும் நாடியும் அவன் வாழ்ந்திருந்த காட்டுப்பகுதிச்சென்றான் இராவணன்.

மாரீசனிடம் சென்று, தனது கருத்தை வெளியிட்டபோது, அதாவது தான் சீதையைக் கவர்ந்து வருவதற்கு மாரீசன் மாயமானாக மாறி உதவிபுரியவேண்டும் என்ற கருத்தைக் கூறியபோது அது தகாத செயல் என்று தடுத்தான் மாரீசன்.! பலவகையான தர்மங்களையும், இராம இலக்குவர்களின் ஆற்றலையும் எடுத்துரைத்து அறிவுரை கூறினான். மனம்மாறிய இராவணன் தனது அரண்மனைக்கு வந்து தன் அரியணையில் வீற்றிருந்தான்!



**சூர்ப்பணகையின் சூழ்ச்சிநிறை அறிவுரை :**

மாரீசன் அறிவுரையால் ஓரளவு மனம் திருந்தி அமர்ந்திருந்த இராவணனின் அரச சபைக்கு தலைவிரி கோலமாக சூர்ப்பணகை அலறி அடித்துக்கொண்டும் குய்யோமுறையோ என்று கூக்குரல் எழுப்பிக் கொண்டும் இராவணன் அரண்மனையை அடைந்து நின்று புலம்பினாள். தான் அற்ப மானிடர்கள் இருவரால் மானபங்கப்படுத்தப் பட்டதை சுட்டிக்காட்டினாள்! உறுப்புகள் அறுபட்டு நின்ற அவளின் தோற்றம் அவனை நிலைகுலையச் செய்தது. பாசத்திற்கு அடிமையாகிப்போன அவனால், சூர்ப்பணகைக்கு ஏற்பட்ட இழிநிலைக்கான காரணத்தை அறிய முற்படவில்லை.! தங்கை மானபங்கப்படுத்தப் பட்டதைக் கண்ட இராவணன் கொதித்து எழுந்தான். காரணத்தைக் கேட்டான். அப்போழுது தான் காமத்தாள் தவித்ததையும், இராமனை அடைய சீதாதேவியைக் கவர நினைத்ததையுமான அசிங்கமான செயலை மறைத்துவிட்ட சூர்ப்பணகை சீதாதேவியின் பேரழகை எடுத்துரைத்தாள். அத்தகையவளோடு வாழ்வதுதான் ஓர் அசுர, அரக்க வீரனுக்கு (இராவணனுக்கு) அழகு என்று கூறினாள். வாழ்ந்தாள் அவளோடு வாழ்வதுதான் அமரர்களை ஆட்டிப்படைத்துக் கொண்டு அளவற்ற செல்வபோகத்திலே வாழ்ந்துவரும் இராவணனுக்கு அழகாகும் என்றும் இல்லையெனில் இராவணன் வாழ்ந்து வரும் வாழ்க்கை அர்த்தமற்ற வாழ்வே என்றும் தூபமிட்டு அவனைக் காமக் கடலில் தள்ளிவிட்டாள் சூர்ப்பணகை.

**இராவணன் காமுறுமாறு சூர்ப்பணகை மொழிதல் :**

**இந்திரன் சசியைப் பெற்றான் இருமூன்று வதனத்தோன்தன்**
**தந்தையும் உமையைப் பெற்றான் தாமரைச் செங்கணானும்**
**செந்திரு மகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய் நீயும்**
**அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கிலை உனக்கே ஐயா (656)**

"இந்தப்பாடலால், சாதாரண இந்திரலோகத்துத் தலைவனான தேவேந்திரன் சசி என்பவளைத் தன் மனைவியாக பெற்றுள்ளான். ஆறுமுகனின் தந்தையான சிவன் உமையைத் தன் உடல்பாகத்தில் வைத்துள்ளான். செந்தாமரைக் கண்ணனாகிய திருமால் அழகிய மலர்மகளாகிய இலட்சுமியைத் தன் மார்பகத்தே வைத்துள்ளான். அவர்களைப்போன்றே நீயும் சீதையைக் கவர்ந்து வந்து உனக்கு உரிமையாக்கிக் கொண்டால் தான் நீ வீரமுடைய ஆண்மகனாவாய்" என்று இராவணனின் ஆண்மைக்குச் சவால்விட்டாள் சூர்ப்பணகை ! ஏற்கனவே மிகவும் காமுகனாக பல அரக்கியர்களையும் அமரலோக மாதர்களையும் சீரழித்து வந்த காமுகன் இராவணன் எப்படியேனும் சீதையைத்தானும் அடைதல்வேண்டும் என்று முடிவு கட்டினான். காமக்கடலைக் கடக்கமுடியாதவனாகி தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள தனது மாமன் உறவுமுறை உள்ளவனான மாரீசனை மீண்டும் அணுகினான்.

**இராவணன் சூழ்ச்சியும்... மாரீசன் வதைப்படலமும் :**

விசுவாமித்திரரோடு அவருடைய யாகம் காக்கச்சென்றபோது தாடகையை அழித்தார் ஸ்ரீராமர். அத்தாடகையின் மகனான மாரீசன் இராமபாணத்தால் தாக்கப்பட்டு கடலிலே சென்று வீழ்ந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிப்போனவன். இராமபாணத்தால் தாக்கப்பட்ட பின் மனம் திருந்தி சற்று நல்லவனாக ஆசிரமம் ஒன்றை அமைத்துக்கொண்டு தொலைதூரக்காட்டில் வாழ்ந்து வந்தான். இப்போது அந்த மாரீசனே தனக்கு உதவக்கூடியவன் என்று முடிவு செய்து அவனிருக்கும் இடம் தேடிப்போனான் இராவணன். இராவணனின் நோக்கத்தை அறிந்தவுடன் அவனுக்குப்பலவகையில் அறிவுரைகள் கூறி வேண்டாம் என்று



தடுத்தான் மாரீசன். மேலும் இராம இலட்சுமணர்களின் வீரத்தையும் பராக்ரமத்தையும் எடுத்துச் சொல்லி அந்த மானுடர்கள் அமாநுஸ்யர்கள். தேவர்களின் வலிமையை விடவும் பெருவலிமை படைத்தவர்கள் என்றும் அவர்களைப் புகழ்ந்தான் மாரீசன். பன்னிரண்டு வயது நிரம்பிய பாலகனாய் அன்று அவன்செலுத்திய அம்பின் தாக்கமே அவ்வாறு தன்னைத் துன்புறுத்தியது என்றால், தற்போது முப்பத்தாறு வயது இளைஞனாக இராமன் இருப்பானே! அவனுடைய வில்லாற்றலை எண்ணிப்பார் என்றும், இராமன் மனைவியைக்கவரும் எண்ணத்தையும் கைவிட்டுவிடுமாறு மிகவும் கெஞ்சினான் அந்த மாரீசன்!

தாடகை வதையின்போது இராமபாணத்தால் தாக்கப்பட்டு, கடலில் சென்று விழுந்து உயிர் பிழைத்திருந்த மாரீசன் மனம் மாறிய நிலையில் இராவணனுக்கு அறிவுரை வழங்கியதையும், தருமம் மீறினால் மரணம் உண்டாகும் என்பதையும் கூறியதை எடுத்துரைக்கும் பாடல்.

**நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் நடை அல்லா**
**வாரம் கொண்டார் மற்று ஒருவன்தன் மனைவாழும்**
**தாரம் கொண்டார் என்ற இவர்தம்மைத் தருமம் தான்**
**ஈரும்கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவர்ஐயா ! (732)**

மேலும் அறிவுரை ஏற்காதார் அழிவது உறுதி என்றும் மாரீசன் அறிவுறுத்துதல்.

**அந்தரம் உற்றான் அகலிகை பொற்பால் அழிவுற்றான்**
**இந்திரன் ஒப்பார் எத்தனை யோர்தாம் இழிவுற்றார்**
**செந்திரு ஒப்பார் எத்தனையோர் நின் திரு உண்பார்**
**மந்திரம் அற்றார் உற்றது உரைத்தாய் மதி அற்றாய். (733)**

மேலும் கர்வம் கொண்டவர் கட்டாயம் அழிவர். கர்வியைத் திருத்துவேன் என்பவனும் கர்வியே ஆவான் என்பதை நினைவில் கொண்டு,

**அரக்கன் அஃது உரைத்தலோடும் அறிந்தனன் அடங்கி நெஞ்சம்**
**தருக்கினர் கெடுவர்என்ற தத்துவ நிலையாயிற்று அன்றோ?**

**செருக்கு நீர் தீர்த்தும் என்பார் தம்மின் ஆர் செருக்கர் என்னா**
**உருக்கிய செம்பின் உற்ற நீர் என உரைக்கலுற்றான் (752)**

எனவே, அனைத்தும் விதிவழியே நடக்கட்டும் என்றும், இந்த முட்டாளாகிய முரடன் கையாள் மாள்வதினும், அறத்தின் திருவுருவினனான இராமன் கையில் மடிவதே நன்று என்ற முடிவுக்கும் வந்தான் மாரீசன்.

மாரீசன் இராமனின் வீரத்தைப் புகழ்வதைக் கேட்டு கோபம் கொண்டான் இராவணன். மாரீசன் மிகவும் பயந்துபோயிருப்பதாகவும் அவனுடைய பயந்துபோகும் நிலை அரக்கர் இனத்துக்குப் பொருந்தாதது என்றும் அவனை இகழ்ந்துரைத்தான் இராவணன். மேலும் தான் சீதையைக் கவர்ந்து வரப்போகும் செயல் உறுதியானது என்றும் அதற்கு மாரீசன் உதவிபுரிந்தேயாக வேண்டும் என்றும் வற்புறுத்தினான். இல்லை என்றால் அவனைக் கொன்று ஒழித்து விடுவதாகவும் மிரட்டினான். வேறு வழியின்றி அவன் சதிச்செயலுக்கு உடந்தையானான் மாரீசன். இந்த அரக்கன் கையால் இறப்பதைவிட ஸ்ரீராமன் பாணத்தால் இறப்பதே நல்லது என்று நினைத்த அவன் இராவணனின் சதிச்செயலுக்கு உடன்பட்டான்.

**மாயமானாய் துள்ளித்திரிந்தான் மாரீசன் :**

இராவணன் செய்த சூழ்ச்சியின் திட்டப்படி மாரீசனை ஒரு மாயமானாக உருவம் கொள்ளவைத்தான் இராவணன். மாரீசன் ஒரு பொன்மானாக உருவம் எடுத்துக்கொண்டான். கண்ணைக்கவரும் தோற்றத்தோடு தன் உடம்பின் மேற்பரப்புகளில் புள்ளிகளை உடையதாகவும் இளமைத்தன்மை கொண்டதாகவும் கண்டோரைக் கவரும் வடிவம் கொண்டதாகவும் அந்த மாரீசமான் சீதாதேவியின் கண்ணில் படும்படியாக அந்த ஆசிரமத்தின் முன்னே துள்ளித்துள்ளி ஓடினான்.

பொன்மானின் அழகில் மயங்கிய சீதாதேவி ஸ்ரீராமனை அழைத்து அந்தப்பொன்மானைத் தனக்குப்பிடித்துத் தருமாறு கேட்டாள். தான் விளையாட அது உதவும் என்று



ஆசைகொண்டாள் அச்சீதை நல்லாள்! தனக்காக அனைத்து சுகபோகங்களையும் துறந்து வனம் வந்துள்ள சீதாவிற்கு அதைப்பிடித்தே தரவேண்டும் என்ற எண்ணத்தோடே இராமன் புறப்பட இலட்சுமணன் அதன் போலித்தன்மையைப் பார்த்து வேண்டாம் என்று தடுத்தான் ! இறைவனின் படைப்பில் இத்தகைய சிருஷ்டி எதுவும் இல்லை! இதில் வஞ்சகம் உள்ளது என்றான் இளவல். ஆனால் ஸ்ரீராமன் இலக்குவனுக்குப் பதிலாகக்கூறிய பாடல்.

**“நில்லா உலகின் நிலை நேர்மையினால்**
**வல்லாரும் உணர்ந்திலர் மன் உயிர்தாம்**
**பல் ஆயிரகோடி பரந்து எவால்**
**இல்லாதன இல்லை இளங்குமரா!” (773)**

இதில் இலக்குவனை இளங்குமரா(ஒன்றும் அறியாத இளம்பருவத்தினன் என்றும் பொருள்கொள்ளலாம்) என்று அழைத்து, பரந்துபட்டுள்ள இவ்வகிலண்டபிரம்மாண்டத்தில் பல்லாயிரம் கோடிக்கணக்கான உயிரினங்கள் பகவானால் படைக்கப்பட்டுள்ளன. அத்தகைய படைப்பில் எதுவும் இருக்கலாம்! அதில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் என்று அறிவுரை கூறி, மாயமானைப் பின்தொடர்ந்தார் என்பது விளங்குகின்றது.

**மாரீசன் வதம் :**

துள்ளித்துள்ளி ஓடி மாயாஜாலம் காட்டிய அந்தமான் இராமனைப் பர்ணசாலைக்கு வெகு தூரத்திற்கு அழைத்துச்சென்று விட்டது என்பதை உணர்கின்றான்! அங்கும் இங்குமாகத்துள்ளித்திரிந்தும், ஒவ்வொரு நேரத்திலே ஒறு திசையிலே தோன்றியும் காட்சியளித்தது அந்த மாயமான். இதைக்கண்டு திகைப்புற்றான் இராமன்.! அதை உயிருடன் பிடிக்கமுடியாது என்று முடிவுசெய்த இராமன் அதன்மேல்தன் அம்பினைத்தொடுத்தபோது அது ஹோ லட்சுமணா! ஹோ சீதா! என்று ஸ்ரீராமர் குரலில் அபயக்குரல் கொடுத்து கீழே வீழ்ந்து இறந்தது. அப்போது அது மானல்ல என்றும் மாரீசனே அவ்வாறு வந்த அரக்கன் என்பதையும் அறிந்தார். இலக்குவன் கூறியது

உண்மையானதே என்றும் உணர்ந்துகொண்டார் என்பதையும் பின்வரும் பாடலால் அறியமுடிகின்றது.

மாயமானாக வந்த மாரீசன் மடிந்ததை அறிந்த இராமன் இலக்குவன் கூறியது உண்மை என்று இலக்குவனின் அனுபவ அறிவையும், மதிநுட்பத்தையும் புகழ்ந்தான்.

**வெய்யவன் தன் உருவொடு வீழ்தலும்**
**செய்யது அன்று எனச் செப்பிய தம்பியை**
**ஐயன் வல்லன் என் ஆர்உயிர் வல்லன் நான்**
**உய்ய வந்தவன் வல்லன்என்று உன்னினான். (798).**

தன் தம்பியாகிய இலக்குவனுடைய நுண்ணறிவை வியந்துகொண்டே ஸ்ரீராமர் மனம் பதைக்க ஏதோ தீங்கு நேரப்போகின்றது என்பதை உணர்ந்து வேகமாக பர்ணசாலைக்குத் திரும்பினார்.

**சீதையின் வேண்டுகோளும், இலக்குவன் மறுப்பும் :**

இராமன் குரலில் அந்த மாரீசன் எழுப்பிய அபய ஒலியைக்கேட்டு தன் கணவருக்கு ஏதோ துன்பம் நேர்ந்து விட்டதாகவும் உடனே சென்று அறிந்து வருமாறும் இராமனை மீட்டுவருமாறும் சீதா இலக்குவனிடம் எடுத்துரைத்தாள். ஆனால் ஸ்ரீராமர் எவ்விதமான அபாயத்துக்கும் அப்பாற்பட்டவர் என்று இலட்சுமணன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல் இலக்குவன் மீதே சந்தேகம் கொண்டு இழித்துக்கூறினாள் அச்சீதை!. மேலும்

**சீதை இலக்குவனைக் கடிந்தும் கூறுதல் :**

**ஒருபகல் பழகினோர் உயிரை ஈவரால்**
**பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும் நீ**
**வெருவலை நின்றனை வேறு என் யான் இனி**
**எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பன் ஈண்டு எனா (815)**

அதாவது ஒருவரோடு ஒருநாளில் ஒரேயொரு முறை பழகியவர்கள் கூட காப்பாற்றுவார்கள்! ஆனால் ஸ்ரீராமனுடைய அபயக்குரலைக்கேட்டும் நீ அசைவற்று நிற்கிறாயே! இதன் அர்த்தம் என்ன? என்று அழுது துடித்தாள் சீதா! என்பது இதன் கருத்தாகும்!



ஆனால் ஸ்ரீராமன் அபாயங்களுக்கு அப்பாற்பட்டவர் என்றும் அவர்நலமுடன் திரும்புவார் என்றும் இலக்குவன் கூறியபோது, அதற்கு மதிப்புத்தராத சீதா தான் தற்கொலை செய்துகொள்ளப்போவதாகவும் கூறியவுடன் விதியின் வெம்மை கொடியது என்று மனம் நொந்து கொண்டார் இளையாழ்வார். எனினும் தர்மமே இறுதியில் தீமையை வெற்றிகொள்ளும். அதன்வழி நடப்போம் என்று மனம் சோர்ந்தான் இளையாழ்வான்.

தீ புகுவேன் என்றும் தற்கொலை செய்துகொள்வேன் என்றும் கூறிய சீதைக்கு இலக்குவன் கூறிய மறுமொழி..(விதியை வெல்லமுடியாது)

**துஞ்சுவது என்னை நீர் சொன்ன சொல்லையான்**
**அஞ்சுவன் மறுக்கிலேன் அவலம் தீர்ந்து இனி**
**இஞ்சு இரும் அடியனேன் ஏகுகின்றனென்**
**வெஞ்சின விதியினை வெல்லல் ஆகுமோ? (817).**

என்று பதில்கூறி, மிகவும் சோர்ந்த மனத்தினனாகவும், தள்ளாடும் நடையினனாகவும் அங்கிருந்தும் அபயக்குரல் வந்த திசையை நோக்கி நடந்தான் இலக்குவன்!

**குறிப்பு : இலட்சுமணன் கோடு :**

இராமனைத் தேடி இலட்சுமணன் சென்றபோது கோடுபோட்டு அதைத் தாண்டவேண்டாம் என்று கூறிச்சென்றதாகவும் சீதை சந்நியாசிக்கோலத்தில் வந்த இராவணனுக்குப் பிச்சையிடச் சென்றபோது அதைத் தாண்டிவிட்டதாகவும் எனவேதான் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான் என்பதும் பரவலாக பாரத தேசம் எங்கும் பேசப்படும் ஒரு கருத்தாகும். ஆனால் இச்செய்தி வால்மீகி இராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் கூறப்படவில்லை என்பது அறியத்தக்கது. வேறு எந்த இராமாயணத்திலும் கூட எதிலும் கூறப்படவில்லை என்கின்றனர் பலரும். எனவே இது

கர்ணபரம்பரையாக நிலவிவரும் கருத்தாகும். லட்சுமணன் கோடு என்பது இல்லை என்றும் கூறலாம்.

**விதியின் விளையாட்டை வெற்றிகொள்வார் யாரே !**

காவலுக்கு இலட்சுமணன் வைக்கப்பட்டிருந்ததைக் கண்காணித்து வந்த இராவணன், பர்ணசாலையில் இருந்தும் இலக்குவன் அகன்றான் என்பதை அறிந்துகொண்டான். இதைத்தான் சரியான நேரம் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஒரு சந்நியாசி போல் வேடம் தரித்து வந்து அம்மணீ பிட்ச்சாந்தேகி என்று குரல் கொடுத்தான். தவசியாக வந்த அவனை உள்ளே வரவழைத்து அந்த இக்கட்டான் நேரத்திலும் அதிதிபூசை செய்த சீதாமாதாவின் அழகை ஓரக்கண்ணால் கண்டு வியந்தான் கபடவேடதாரி இராவணன். அவனுடைய மறைபொருள் வார்த்தைகளை உணராமல் இருந்த சீதாவிற்குத் தன்னுடைய உண்மை சொரூபத்தைக் காட்டி ஆசை வார்த்தைகளைக் கூறியும், தன்னுடைய வீரத்தைப்பற்றி தானே புகழ்ந்துகொண்டும், பிரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளைவிட தானே சிறந்தவன் என்றும் கூறினான். மேலும் அப்போலி சந்நியாசி வேட இராவணன் தன் வலிமையைப் பர்ணசாலையில் இருந்த சீதையிடம் கூறிக்கொண்டு தற்பெருமைகொண்டதாக அமைந்துள்ள பின்வரும் பாடலில்,

**மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை இடிக்கவேண்டின்**
**நீரினைக் கலக்கவேண்டின் நெருப்பினை அவிக்கவேண்டின்**
**பாரினை எடுக்கவேண்டின் பால்நிகர் செஞ்சொல் ஏழாய்**
**யார்எனக்கருதிச் சொன்னாய் இராவணற்கு அரிது என்என்றான் (862)**

மேருமலையைப் பெயர்த்தெடுக்கும் ஆற்றலும், வானுலகத்தையே இடித்துத்தள்ளும் பராக்கிரமும், ஆழ்கடலையே கலக்கக்கூடிய ஆற்றலும், நெருப்பினையே அவித்துவிடக்கூடிய (அழித்துவிடக்கூடிய) அஞ்சாமையும், இந்த உலகத்தினையே தன் கைகளால் பெயர்த்து எடுக்கக்கூடிய வலிமையும் உடையவன் தான் என்று கூறி, பஞ்சபூதங்களின் ஆற்றல்களையே மிஞ்சும் ஆற்றலை உடையவன்தான் என்றும் தற்புகழ்ச்சியைக் கூறிக்கொண்டானாம் அந்தப்பேதை!



அதிர்ந்துபோனாள் மாதா சீதா! ஆயினும் அந்த அற்பனைப்பார்த்து "அப்படிப்பட்ட வீரத்தை நீ உடையவன் என்றால் எனது கணவர் இருக்கும் நேரத்தில் வந்து போரிட்டு அல்லவா முடிந்தால் என்னைக்கவரந்திருக்கவேண்டும். அப்படிச்செய்யாத நீ ஒரு கோழை. பேடி. வீரமே இல்லாதவன்" என்று வன்மையாக அவனைச்சாடினாள்! அவன் கொண்டு வந்த வேடத்தை இகழ்ந்துரைத்தாள். தான் விரும்பியபடி சீதையைக்கவருவது எளிதல்ல என்று நினைத்தான். மேலும் காலம் கடத்த விரும்பாமல் தன் இலங்கை நகருக்கே அவளைக் கவர்ந்து செல்ல எண்ணம் கொண்டிருந்த அவன் பர்ணசாலையோடு ஒருகாத தூரம் பெயர்த்தெடுத்து தேரின்மீது வைத்துக்கொண்டு வான் வழியே பறந்து சென்றான் என்ற கம்பரின் கவிநயத்தை இதில்காணலாம்!

பர்ணசாலையோடு இராவணன் பெயர்த் தெடுத்துச் சென்றான் என்பதைக்கூறும் பாடல்.

**"ஆண்டு ஆயிடை தீயவன் ஆயிழையைத்**
**தீண்டான் அயன் உரை சிந்தைசெயா**
**தூண்தாள் எனல் ஆம் உயர்தோள் வலியால்**
**கீண்டான் நிலம் யோசனை கீழ்ப்புடையே" (874)**

கற்புடைப்பெண் ஒருத்தியை மாற்றான் ஒருவன் தொடுவதும் அவளுடைய கற்பிற்கு இழுக்காக கருதப்படும் என்ற தமிழ்ப்பண்பாட்டிற்கு ஏற்றவாறு பாடியுள்ள கம்பரின் கவிநயம் இங்கே வெளிப்படுவதை அறியலாம். ஆனால் வால்மீகியின் ஸ்ரீமத் ராமாயணத்தில் சீதையைத்தோளின்மீது வைத்துக்கொண்டு சுமந்து தூக்கிச்சென்றான் இராவணன் என்று கூறப்பட்டுள்ளது. அதன் பின்னர் தேரினில் ஏற்றிக்கொண்டு தென்திசை நோக்கிப் பறந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

**அன்னை சீதையின் அழுகையும் புலம்பலும் :**

அரக்கன் ஒருவனால் கவரப்பட்ட தன்னுடைய நிலையைக் கண்டு அதிர்ந்து போன சீதா பெருங்குரலெடுத்துக் கூவினாள். இலக்குவன் கூறிய மொழிகள் அவளுடைய காதுகளில் எதிரொலித்தன. என் தலைவனே! தம்பியே! வாருங்கள் என்று கூவி அழைத்தாள். எதிர்ப்பட்ட சோலை குயில் மலர்கள் போன்ற இயற்கைப்பொருள்களைப் பார்த்து தான் கொடியவனால் கவரப்பட்டு செல்வதை என்கணவனிடம் கூறுங்கள் என்றும் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் கோதாவரி நதியைப் பார்த்து தன் நிலையைக்கூறுமாறும் வேண்டினாள். இதைக்கண்ட இராவணன் ஏளனமாகச் சிரித்து உன் மானிடனாகிய கணவனால் என்னை அணுகவும் முடியாது என்றான்.

**ஜடாயு செய்த போரும் இராவணன் வெற்றியும்!**

அக்கானகப்பகுதியில் வாழ்ந்துவந்தவர் ஜடாயு என்ற கழுகின் குல வேந்தர். சீதையின் புலம்பலைக்கேட்டு அப்பகுதிக்குப் பறந்து வந்து சேர்ந்தார் ! அங்கு வந்து சேர்ந்த ஜடாயு(சடாயு) இராவணனின் அடாத செயலைக்கண்டு தடுத்து நிறுத்தினான். சீதையை அக்கொடியவன் தொடாமல்தான் அபகரித்துச் செல்கின்றான் என்பதை அறிந்து கொண்டு தன்கோபத்தை அடக்கிக்கொண்டு சீதாதேவியை விட்டுவிடுமாறு அறிவுரை கூறினான் ஜடாயு. அதை அவன் ஏற்றுக்கொள்ளாததால் அவனிடம் போரிட்டுதான் சீதாதேவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற நினைத்து விரும்பும்போது பெரிதும் வளரக் கூடியதான தன்னுடைய சிறகுகளைப் பெரியனவாய் வளர்த்துக்கொண்டு, திசைகளை மறைத்துக் கொண்டு நின்றான் ஜடாயு என்ற அந்த கழுகின் குலவேந்தன்.

சீதாதேவியை விட்டுவிடுமாறும், அவள் கற்புக்கனல் என்றும், பலவாறு எடுத்துரைத்துக் கூறியும் இராவணன் அவளை விடவில்லை. அதற்குமாறாக கோபம்கொண்டு தன்னுடைய சூலாயுதத்தால் ஜடாயுவைத்தாக்கினான். அதைத் தன்னுடைய அலகால் தடுத்து நிறுத்தி சிதைத்து விட்டான் கழுகுக் குல அரசன். தன்னுடைய பெரும் அலகால் இராவணனின் காதுக் குண்டலங்களைத்தாக்கி தரையில் விழச்செய்தான். அவனுடைய தேரில் வரையப்பட்டிருந்த வீணை ஓவியத்தின் திரைச் சீலையைக் கிழித்து தரையிலே வீசி எறிந்தான். இவ்வாறாக ஒரு மிகப்பெரும் போரை நடத்தியும் இராவணனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனினும் இராவணன் தனது வச்சிராயுதத்தால் ஜடாயுவின் சிறகுகளைக் கொய்து விட்டான். எனவே தரையிலே வீழ்ந்து உயிருக்குப்போராடிக் கொண்டிருந்தார் ஜடாயு.



**பறவைக்கு மோட்சம் தந்த பரந்தாமன்!**

ஸ்ரீராமனைத் தேடிக்கொண்டு சென்ற இலக்குவனும் பர்ணசாலைக்குத் திரும்பிக்கொண்டிருந்த இராமரும் சந்தித்தனர். சீதாவைத் தனியாக விட்டுவந்தது ஏன் என்ற ஸ்ரீராமரின் வினாவிற்கு நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னார் இளையாழ்வார். ஏதோ மிகப்பெரும் விபரீதம் நடந்தது என்பதை உறுதி செய்து கொண்ட இருவரும் பர்ணசாலையை நோக்கி விரைவாக நடந்தனர். ஆனால் அங்கு சென்று பார்த்தபோது பர்ணசாலையையே காணோம். பர்ணசாலையோடு சீதாதேவி கடத்தப்பட்டதை அறிந்த இருவரும் சோகக்கடலிடை வீழ்ந்தனர். எனினும் இலக்குவன் அதிலிருந்து உடனே மீண்டு இராமனுக்கு ஆறுதல் மொழிகள் கூறித்தேற்றினான். அடுத்ததாக சீதையைக்கண்டு பிடிக்கும் பொறுப்பு அவர்களுக்கு ஏற்பட்டதால் அங்கே சற்று தூரம் பூமியில் பதிந்து இருந்த தேர்ச்சுவட்டைப் பின்பற்றி அதன் வழிநடந்தனர்.

சற்றுதூரம் நடந்ததும் வீணைக்கொடிச் சீலை வீழ்ந்து கிடப்பதைக்கண்டனர். அதன் சுற்றுப்புறத்தை மேலும் ஆராய்ந்தபோது அங்கே ஒரு பெரும்போரே நடந்திருப்பதற்குரிய தடயங்களை உணர்ந்தனர். அப்போது ஜடாயு என்ற தனது ஆருயிர் நண்பர் இன்னும் சற்றுத்தொலைவில் ராம்ராம்ராம் என்ற தீனமான குரலில்

ஸ்ரீராமனின் பெயரை உச்சரித்துக்கொண்டிருப்பதைக் கண்டனர். அங்கே உயிர்ப்போகும் நிலையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு வருந்தினர். இருவரையும் கண்ட ஜடாயு அவர்கள் இருவரையும் அழைத்து உச்சிமோந்து ஆசீர்வதித்தார். ஜடாயுவைத் தனது தொடையில் சாற்றிக்கொண்டு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார் ஸ்ரீராமர். அப்போது அந்தச் சீதாராமனுடைய பண்பையும், தன் தந்தையைப் பொய்யன் ஆக்கக்கூடாது என்பதற்காக சிற்றன்னையின் ஆணையைத் தலைமேல் ஏற்றுச் செயல்பட்ட அவனுடைய பெருந்தன்மையையும் பின்வரும் பாடலால் ஜடாயுவின் வாய்மொழியால் விளக்குகின்றார் கம்பர்.

**ஜடாயு இராமனது பெருமையைப் பாராட்டுதல் :**

**உந்தை உண்மையன் ஆக்கி உன் சிற்றவை**
**தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி**
**வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே**
**எந்தைவல்லது யாவர் வல்லை எனா. (209)**

மேலும் அச்சடாயுவால், நடந்த நிகழ்வுகளையும் தென்திசையில் சீதாதேவியைக் கொடியவன் கவர்ந்து சென்றதையும் அறிந்தனர். மேலும் விளக்கங்களைக் கூறும் முன்பாக ஜடாயுவின் உயிர் நீங்கியது. தண்டகாரண்யத்தில் சந்தித்தபோதே தசரதன் தனக்குத் தம்பிமுறையினன் என்று பெருமை பேசிய சான்றோன் சடாயு. அவருக்கு நல்ல நண்பனாகவும் இருந்ததை ஏற்கனவே நினைவு கூர்ந்ததால் அவருக்கு ஈமக்கடன்களைச் செய்த பிறகு ஜடாயு கூறிய திசையில் சீதையைத் தேடிச் சென்றனர்.

வைணவத் திருத்தலங்களுள் காஞ்சிபுரம் அருகே உள்ள திருப்புட்குழி என்னும் திவ்வியதேசம் ஒன்றாகும்.. இங்கேதான் ஜடாயுவிற்கு ஈமச்சடங்கு செய்யப்பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர். அமாவாசை அன்று மூதாதையர்களுக்குத் (பித்ருக்களுக்கு) திதி கொடுப்பது இன்றைக்கும் அங்கே நடைபெறுகின்றது.

ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லை என்பதுதான் உண்மை. இதிகாசமாகிய இராமாயணத்தின் மீதும், அதன் கதை



மாந்தர்கள் மீதும் பற்றும் பாசமும் கொண்ட நமது பாரத தேசத்தவர் பெருமானுக்க அர்ச்சாவதாரத்திருக்கோலம் கொடுத்து, திவ்வியத்தலங்களை ஆங்காங்கே நிறுவினார்கள் என்பதும், அப்போது அவர்களின் மனம்கவர்ந்த மூர்த்திகளின் பெயரையும், நிகழ்வுகளையும் தொடர்பு கொள்ளும் வகையிலும் நினைவிற்கொள்ளுமாறும் பெயரிட்டு அழைத்தனர் என்பதும் தான் உண்மை நிலவரமாகும்!.

ஸ்ரீராமனும் லட்சுமணனும் அவ்வாறு சீதையைத் தேடிச்சென்றபோது அங்கிருந்த இயற்கைப் பொருள்களின் வடிவத்தில் எல்லாம் சீதையின் சாயலைக்கண்டு வருந்தினார் ஸ்ரீராமர். அவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டே பின்தொடர்ந்தார் இளையாழ்வார்.

**நகை முடிச்சைக் கீழே போட்டாள் நங்கை சீதா !**

தன்னைக்காக்க வந்து தனக்காக, தன் உயிரையும் கொடுத்த அந்தப்புண்ணிய ஆத்மாவிற்காகப் பெரிதும் வருந்திய சீதை ஒரு காட்டுப்பகுதியில் சில வானரங்கள் கூட்டமாய் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். அப்போது இராவணன் அறியாத வண்ணம் தன்னுடைய ஆபரணங்களை ஒரு துணியில் முடிந்து அதைக்கீழே போட்டாள். ஒருவேளை தன்னைத்தேடிக்கொண்டு இராமன் வந்தால் இது எந்தவகையிலாவது பயன்படும் என்பது அவளது எண்ணமாகும்.

ஜடாயுவுடன் செய்த போரில் தன்னுடைய தேர்ப்பாகன் கொல்லப்பட்டதாலும் தேரும் சிதைந்து போனதாலும் எஞ்சியிருந்த மண்பகுதியோடு சீதாவைத் தன்னுடைய தோளின்மேல் வைத்துக்கொண்டு சென்ற இராவணன் தன்னுடைய இலங்கை நகரத்திற்கு எடுத்துக்கொண்டு சென்று அங்கு ஒதுக்குப்புறமாய் இருந்த ஒரு அசோகவனத்தின் சிம்பாசு மரத்தினடியில் சீதையைச் சிறைவைத்தான். அவளைச்சுற்றி பல அரக்கியர்களைக் காவலாக வைத்து கண்காணித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்த பிறகு அங்கிருந்தும் தன் அரண்மனைக்கு அகன்றான் அந்த அரக்க அரசன்.!

சீதாதேவியைத் தேடிக்கொண்டு வந்த இருவரும் பகலெல்லாம் நடந்தனர். ஸ்ரீராமரைத் தேற்றுவதே இலக்குவனுக்குப் பெரும் வேலையாகிவிட்டது. இரவு நேரம் வந்து விட்டதால் இருவரும் அன்றைய இரவை ஒரு மலைப்பகுதியில் கழித்தனர். சீதைக்கு என்னென்ன துன்பங்கள் ஏற்பட்டதோ என்னும் ஏக்கத்தோடே இராமர் இரவைக் கழித்ததால் அது மிகப்பெரும் இரவாக நீண்டதாம்.! பொழுது விடிந்தவுடன் தேடலைத் தொடங்கிய அவர்கள் அப்பகுதியில் ஒருபளிங்கு அறையைக்கண்டு ஓய்வெடுத்தனர். எனினும் நீரவேட்கை மேலிட்டதால் பருக நீர் கொண்டு வருமாறு இலக்குவனை வேண்டினார் ஸ்ரீராமர்.

**அஜமுகி வதம் :**

நீர்தேடிச் சென்ற இலக்குவன் பல இடங்களிலும் அலைந்து திரிந்தும் நீர்கிடைக்கவில்லை. ஆனால் அஜமுகி (அயோமுகி, இரும்பு போன்ற முகமுடைய அரக்கி) ஒருத்தியின் காமப்பார்வையில் சிக்கிக் கொண்டான் இலக்குவன்! மன்மத சொரூபனாக உள்ள இவனை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட அவளின் எண்ணத்தை ஏற்காததால், அந்த அஜமுகி என்பவளால் சிறைபிடிக்கப்பட்டு அவளுடைய குகையில் அடைப்பட்டுக் கிடந்தான் இலக்குவன் இறுதியில் அவளை வதைத்து அதன்பிறகு குகையினின்றும் வெளியே வந்தார் இலட்சுமணன். தனது தமையனிடம் நடந்ததைக் கூறினான்.. பின்னர் வருணமந்திரத்தை ஜபித்து நீர்கிடைக்கப்பெற்று இருவரும் நீர்வேட்கைத்தணிந்தனர்.

**சாபவிமோசனம் அடைந்தான் கவந்தன் : (கபந்தன்).**

அதன்பிறகும் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் நின்றபாடில்லை. கவந்தன் (கபந்தன்) என்னும் கொடிய அரக்கனிடம் இருவரும் சிக்கிக் கொண்டனர். இருந்த இடத்திலிருந்தே தன் இரண்டு கைகளையும் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நீட்டி அவற்றில் சிக்கிக்கொண்டு கிடைக்கும் அவ்வளவு உயிரினங்களையும் உண்பவன் இந்த கபந்தன். அவனுடைய வயிற்றுப்பகுதியிலேதான் வாய் இருந்ததால்



மிகவும் கோரமான வடிவத்தைப்பெற்றிருந்தான் இந்தக்கவந்தன்! அவனுடைய கைகளில் இராம லட்சுமணர்கள் சிக்கிக் கொண்டனர். கபந்தனுக்கு இரையாகப்போகின்றோம் என்பதை அறிந்த அவர்களில் இராமன் சீதை இல்லாமல் தனியாய்த் திரிவதைவிட இவனுக்கு இரையாவதே நல்லது என நினைத்தார். எனவே தப்பிக்க முயற்சிக்கவில்லை, ஆனால், ஸ்ரீராமன் சீதையைப் பிரிந்ததற்கு தானே காரணம் என்றும், அதனால் அக்கபந்தன் கையால் தான் இரையாகிப்போவதே நலம் என்று இலட்சுமணனும் நினைத்து, தப்பிக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை! இருவரும் மாறி மாறி தியாகம் தானே செய்து உயிர் விடுவதாகவும் கூறினர். ஆனால் இறுதியில் இலக்குவன் இது கோழைத்தனம் என்று சுதாகரித்துக்கொண்டு, அண்ணனுக்கும் சுய உணர்வைக் கொண்டுவந்து, தன் வாளால் கவந்தன் கையை வெட்டிவீசினான். அப்போது ஸ்ரீராமரது ஸ்பரிசமும் அவன்மேல் பட்டதால் அவன் சாபம் நீங்க தனது தெய்வீகத்தோற்றத்தை இருவருக்கும் காட்டினான்.

**சபரி(சவரி) பிறப்பு நீங்கு படலம் :**

சபரி என்பவள் வேடுவர் குலத்தைச்சேர்ந்த பெண் ஆவாள். ஸ்ரீராமன் மீது மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டவள். அவளை ஒரு வேடுவனுக்குத் திருமணம் புரிந்தனர். ஆனால், திருமண வாழ்வில் நாட்டம் கொள்ளாமல் அவள் ஒரு துறவியைப்போல வாழ்ந்து கொண்டிருந்தாள். இதைக்கண்டு வெறுப்படைந்த அவள்கணவன் அவளைத்தன்னோடு வாழ கட்டாயப்படுத்தியதால், அவள் அவனைப்பிரிந்து, மதங்க முனிவரின் ஆசிரமத்தில் தஞ்சம் அடைந்து ஒரு தபஸ்வினியாக வாழ்ந்தாள்! அதனால் அவன் கணவன் வேடுவர்களோடு திரண்டு, மதங்கமுனிவரின் ஆசிரமத்தைத் தாக்கியதோடு, அவளை இழுத்துச் சென்றபோது, அவள் அலரலைக்கேட்ட ஸ்ரீமகாவிஷ்ணு, அனுமன் மூலமாக அவளைக்காத்து, மதங்க முனிவரின் ஆசிரமத்தில் ஒப்படைத்திருந்தார். அவள் மதங்கரின்

ஆசிரமத்தில் பணிவிடை செய்யும் பெண்ணாக, தவசியாகிய மதங்கரின் பூஜைக்கு வேண்டியனவற்றை எல்லாம் செய்து வந்தாள்!

மிகுந்த தவசீலரான மதங்கர் மிகப்பெரும் யாகங்களையும் வேள்விகளையும் செய்தவர். ஸ்ரீமந்நாராயணரின் உபாசனையிலும் சிறப்புற்று இருந்தவர். அதனால் அவருக்கு வைகுந்தம் செல்லும் பேறு கிட்டியது! எனவே அவர் தன் தவ வாழ்க்கையை முடித்துக்கொண்டு, சில முனிவர்களோடு நேராக வைகுந்தம் சென்றார். அவ்வாறு சென்றபோது, சபரியின் ஆவல், அதாவது அவள் ஸ்ரீராமரின் தரிசனத்தைப் பெறவேண்டும் என்ற ஆவல் விரைவில் நிறைவேறும் என்றும் அவள் எண்ணப்படி, ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் தரிசனம் அவளுக்குக் கிடைக்கும் என்றும் அருளாசி கூறி விண்ணுலகை அடைந்தார்.!

அன்றுமுதல் சபரி ஒவ்வொரு நாளும் ஸ்ரீராமரின் வருகைக்காகக் காத்திருந்தாள்! அவள் தங்கியுள்ள மதங்கரின் ஆசிரமத்திற்கும் பம்பை நதிக்கும் நான்கு மைல் (கல்) தொலைவு உண்டு. அந்தப்பம்பைக்கரையில் இருந்த ஒரு சோலைக்கு தினமும் சென்று, ஸ்ரீராமனுக்குக் கொடுப்பதற்காக சுவையுள்ள காய்கனிகளைத் தேர்ந்தெடுத்து, சுவைத்துப் பார்த்து பறித்து வந்து சேமித்து வைத்திருந்தாள் அந்தச்சபரி.

இதனால் அவளுடைய ஸ்ரீராம பக்தி, தொண்டு உள்ளம், நினைத்ததை முடித்துக்கொள்ளக் கூடிய மனப்பக்குவம், ஸ்ரீராமரைக்கண்டவுடன் வரவேற்று உபசரித்த தன்மை, ஆகியன நன்கு வெளிப்படுகின்றது.

அனைத்திற்கும் மேலாக பெருமானிடம் பக்தி செலுத்தவும் வழிபடவும், சாதி மத, பேதங்கள் இல்லை என்பதும், மதங்க முனிவரும் அவளைத் தன் சீடராகப்பெற்றிருந்ததால், துறவு மனப்பான்மையுடன் சேவை புரிய விரும்பிய அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது என்பதும், இறுதியாக அவள் தன் ஆசை பூர்த்தியானவுடன் இராமனின் ஆசியோடு மோட்சம் அடைந்தது ஆகியவை



கடவுளைப்பற்றி வாழ்வதில் சாதி மத பேதம் இன்மையைப் புலப்படுத்துகின்றது!

ஸ்ரீராம லட்சுமணர்கள் கபந்தன் கூறிய வழியிலே தங்களது பயணத்தைத் தொடர்ந்தபோது, மதங்க மாமுனியின் ஆசிரமும் அதைச்சூழ்ந்த சோலைப் பகுதியும் தென்பட்டது. அதனிடையே ஓர் ஆசிரமத்தில் சபரி வாழ்ந்து வந்தாள். ஸ்ரீராமனைத்தான் கண்ணாரக்காணவேண்டும். அவனால் ஆசீர்வதிக்கப்பட்டு அவன்கண்முன்னே தான் மோட்சலோகம் போகவேண்டும். என்பது அவளது ஆசையாகும்.

பிரம்மாவும் சிவபெருமானும் இந்திரனும் அவளுடைய குடிலுக்கு வந்து ஸ்ரீராமர் உன்னைக்காணவரும் காலம் நெருங்கிவிட்டது. எனவே நீ விரைவில் உன் ஆசைப்படி மோட்சலோகம் செல்வாய் என்று ஆசீர்வதித்துச் சென்றதால் அந்த நன்னாளை எதிர்பார்த்திருந்தவளின் குடிலுக்கு ஸ்ரீராம லட்சுமணர்கள் சென்றார்கள். தான் எதிர்பார்த்திருந்த இரண்டு மூர்த்திகளும் தன் ஆசிரமத்திற்கு வந்ததைக்கண்டு பேரானந்தம் கொண்டாள் சபரி. ஸ்ரீராமர் சபரியின் நலம் விசாரிக்க அவள் பேரானந்தம் அடைந்தாள். தான் நலமுடன் இருப்பதாகவும் இருவரையும் தன் கண்களால் கண்டுவிட்ட அவளுக்கு அதை விடச்சிறந்த பேறு எதுவும் இல்லை என்றும் கூறி பெருமிதப் பட்டுக் கொண்டாள்.

இருவரையும் நன்றாக உபசரிக்கவேண்டும் என்பதற்காக நல்ல காய்கனிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுள் எது மிகவும் ருசியாய் இருக்கின்றது என்பதைக் கடித்துப்பார்த்து தேர்ந்தெடுத்தாள். அவற்றையே இருவருக்கும் விருந்தாகப் படைத்தாள். ஸ்ரீராமர் அவற்றை மிகவும் விரும்பி முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். ஸ்ரீராம லட்சுமணர்களின் துன்பத்தைப்போக்க கிஷ்கிந்தையின் ருஷ்யமுக மலையில் தன் அண்ணனுக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சுக்கிரீவனே துணைபுரிவான் என்று கூறிய சபரி அதற்குச் செல்லும் மார்க்கங்களையும் எடுத்துரைத்தாள். இவற்றை எல்லாம் ஏதோ ஓர் ஆசாரியன் மூலம் உறுதிப்பொருள்களைக் கேட்கும் சீடர்கள்

போல இருவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். அதன்பிறகு மிகவும் திருப்தி அடைந்த சபரி தான்மோட்சலோகம் போகவிரும்புவதாகவும் அந்தப்பேற்றினைத் தனக்கு அருளுமாறும் ஸ்ரீராமரைக்கேட்டுக்கொண்டு அவரருளால் தனது உடம்பை விட்டு உயிரானது மோட்ச உலகத்தை அடையும் நற்பேற்றினைப் பெற்றாள். அதன்பிறகு இருவரும் சபரி கூறிய வழியில் தொடர்ந்து சென்று பம்பை என்னும் ஆற்றினைக் கண்டனர். அதன் மேற்குக் கரையோரம் நடந்து சென்று உருசியமுக மலைச்சாரலை அடைந்தனர்.

தண்டகாரண்யம் வரையில் தெற்குநோக்கி வந்தவர்கள் அதன் பின்னர் பஞ்சவடியை அடைய மேற்கு திசை நோக்கிச் செல்கின்றார்கள். மேற்கு மலைத்தொடர்ச்சிவழியாக வந்தவர்கள் பர்ணசாலை அமைத்திருந்து தங்கியிருந்த இடம் தற்போது மஹாராஸ்டிராவில் உள்ள நாசிக் என்னும் இடமாகும்.

நாசிகா என்றால் மூக்கு என்று பொருள். சூர்ப்பணகை மூக்கறுபட்ட இடம் ஆகையால் தற்போது நாசிக் என்றே அழைக்கப்படுகின்றது.

தண்டகாரண்யத்தின் ஜனஸ்தானத்தில் இராவணனின் மூலபலப்படையாக சேனாபதிகள் முதலில் இராமனால் கொல்லப்பட்டனர்.. பிறகு தூஷணன். 14,000 அரக்க வீரர்களோடு வந்து போரிட்டான். பிறகு திரிசிரா என்பவன் கொல்லப்பட்டான். இறுதியாக கரன் போருக்கு வருவதைக்கண்ட இராமன், இலக்குவனைப்பார்த்து, தான் போர் புரியப்போவதாகவும், அதுவரையில். சீதையைக் காத்துக்கொள்ளுமாறும் கூறி ஐந்து நாழிகைப்பொழுதில் அனைவரையும் அழித்தார் என்று கூறுவார்கள்.

இராவணனோடு போரிட்டுத் தரையில் சாய்ந்தார் ஜடாயு. ஜடாயுவிற்கு மோட்சம் கொடுத்த இடம். பஞ்சவடியில் இருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

தனக்காக தண்ணீர் எடுத்து வரச்சென்ற இலட்சுமணனைக் காணாத ஸ்ரீராமர் மிகவும் மனம் வருந்தி சுமத்திரைக்கு என்ன பதில் கூறுவேன் என்று துடிதுடித்தார்.



இலக்குவனைக் கண்டு நிம்மதி அடைந்தார். தன் பாணத்தால் நிலத்தில் அம்பு எய்து நீர் உண்டாக்கி இருவரும் பருகினர். இலட்சுமண தீர்த்தம் இதுதான் என்பர். ஆனால் ஒருசமயம் வானரங்களின் தண்ணீர்த் தாகத்தைப்போக்க இலட்சுமணன் அம்பெய்து நீர் வந்து வானரங்கள் பருகியதால் இலட்சுமண தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது என்றும் சிலர் கூறுகின்றனர்.

தென்திசை நோக்கி மேலும் அவர்களுடைய பயணம் தொடர்ந்தது. அப்போது மிகவும் கோரமான உடல் அமைப்பைப்பெற்ற அரக்கன் கபந்தனுக்கு வயிற்றிலேதான் முகமும் வாயும் இருந்தது. தன் கைகளை வேண்டிய அளவு நீட்டி இருகைகளிலும் கிடைக்கும் விலங்குகள் மனிதர்கள் முனிவர்கள் அனைவரையும் பற்றிக்கொண்டு வந்து வயிற்றுக்குள் திணித்துக்கொள்வான்.

இங்கு கபந்தனால் குறிப்பிடப்படும் பம்பைநதி என்பது தற்போது கேரளாவில் உள்ள பம்பை நதி அன்று. இது கிஷ்கிந்தாவில் உள்ள ஓர் ஆறு ஆகும். துங்கபத்ரா நதியின் கிளைநதியாக இருக்கலாம். அதற்கேற்பவே இருவரும் சபரியின் ஆசிரமத்தை அடைந்தனர். சபரி மதங்க முனிவருடைய சிஷ்யை ஆவாள். மதங்க முனிவர் துந்துபியின் வதைக்குப்பிறகு (எருமை முக அசுரன். மண்டோதரியின் அண்ணன்) தன்னுடைய ஆசிரமத்தை இங்கு மாற்றிக்கொண்டு உயர்வான தவத்தையும் யாகங்களையும் செய்து சில சிஷ்யர்களோடு வானுலகம் சென்றார்.

அப்போது தான் ஸ்ரீராமனுடைய வனவாசம் தொடங்கியிருந்தது. சித்ர கூடத்தை அடைந்திருந்தனர். ஸ்ரீராம பக்தையான சபரியை உடன் அழைத்துச் செல்லாமல். நிச்சயமாக ஒருநாள் ஸ்ரீராமன் உன்குடில்தேடி வருவார். அப்போது அவர்களின் தரிசனம் உனக்குக் கிடைக்கும். அவர்களுக்கு உபசாரம் செய்து, அவர் முன்னிலையில் நீ உன் பூத உடல் நீத்து வானுலகம் வருவாயாக என்று ஆசீர்வதித்துச் சென்றார் மதங்க முனிவர்.

அந்தநாள் முதல் இந்த நாள் வரை ஸ்ரீராமரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து ருசியான கனி கிழங்குகளைச் சுவைத்துப்பார்த்து தேர்ந்தெடுத்து வைத்திருந்தாள். ஒவ்வொரு நாளும் குடிலின் வாயிலை மலர்களால் அலங்கரித்து வைத்திருந்தாள். எதிர்பார்த்தநாளும் வந்தது. சபரியும் அவர்களைத் தரிசித்து பூத உடல் நீத்து வானுலகம் சென்றாள்.

ஸ்ரீராமரின் வனவாசம் பற்றி மதங்கர் அறிந்தது அவர் சித்திரகூடத்தில் வந்து தங்கியிருந்தபோதுதான். அந்த முனிவர் மிகப்பெரும் யாகங்களையும், யக்ஞங்களை செய்து முடித்து தன் உடலோடு வானுலகம் சென்றார். அதன் பிறகு சித்திரகூடத்தில் கிட்டதட்ட இரண்டு ஆண்டுகள், பிறகு தண்டகாரண்யத்தில் பத்தாண்டுகளைக் கழித்த நிலையில், பஞ்சவடிக்குச் சென்று பர்ணசாலை அமைத்துத் தங்கினர். அப்போது தான் சீதாதேவியைப் பிரிந்தனர். பிரிந்த பின் அவள் இருப்பிடம் தேடி வந்தனர். எனவே ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகள் ஒவ்வொரு நாளும் ஸ்ரீராம லட்சுமணர்களுடைய தரிசனத்திற்காக எதிர்பார்த்துக் காத்திருந்து, தன் தவ வாழ்க்கையை முடித்துக்கொண்டவள் சபரி என்ற வேடுவக்குல தபஸ்வினி!

பின்னர், சபரி கூறிய வழியில் ரிஷ்யமுக பர்வதத்தைத் தேடிச்சென்றனர். வழியில் இருந்த இயற்கைப் பொருள்களைக்கண்ட இராமன் அவற்றில் சீதையின் சாயலைப் பார்த்து மனம் கலங்கி வருத்தமுடன் சென்றார். இலக்குவன் ஆறுதல் கூறிக்கொண்டும், நம்பிக்கை ஏற்படுமாறு பேசிக்கொண்டும் சென்றான்.


கம்பராமாயணத்தின் மூன்றாம் காண்டமாகிய ஆரண்யகாண்டத்தின் கடைசிப்படலமாக அமைந்திருப்பது சபரி பிறப்பு நீங்கு படலம் ஆகும். அப்படலத்தின் இறுதியாக இடம்பெற்றிருப்பது,

**"தண் நறுங் கானும் குன்றும் நதிகளும் தவிரப்போனார்**
**மண்ணிடை வைகல்தோறும் வரம்பு இலாது ஆடும் மாக்கள்**



**கண்ணிய வினைகள் என்னும் கட்டு அழல் கதுவலாலே**
**புண்ணியம் உருகிற்று அன்ன பம்பை ஆம் பொய்கை புக்கார்."**

என்னும் பாடலாகும். இதில் இராமலட்சுமணர்கள் காடுகள், ஆறுகள், மலைகள் ஆகியனவற்றை எல்லாம் கடந்து, எண்ணற்ற மக்கள் தினமும் நீராடுவதால் அவர்களின் பாபங்களைப் போக்குவதும், புண்ணியத்தை அளிப்பதுமான பம்பை என்னும் பொய்கையை அடைந்தனர் என்று கூறப்பட்டுள்ளதால், சபரியின் வார்த்தைகளைக் கேட்டு, கிஷ்கிந்தை நகரை அடைய வந்தவர்கள், மென்மேலும் பல காட்டுப்பகுதிகளை எல்லாம் கடந்து, பலநாட்களுக்குப்பின் பம்பா நதியை (பொய்கையை) அடைந்தனர் என்று கூறி இப்படலத்தையும், ஆரண்ய காண்டத்தையும் முடிக்கின்றார் கம்பர்!



# 4. கிஷ்கிந்தா காண்டம்.

**(கதைச்சுருக்கமும் கருத்துகளும்)**

**இக்காண்டத்தின் கடவுள் வாழ்த்து**

**மூன்றுரு எனக்குணம் மும்மையாம் ஆதல்**
**தோன்றுரு எவையும் அம்முதலைச் சொல்லுதற்கு**
**ஏன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவும்**
**சான்றுரு உணர்வினுக்கு உணர்வும் ஆயினான்.**

அதாவது, தன்னைக் காண்பவருக்கும், கேட்பவர்களுக்கும் நல்லறிவாய் விளங்கக் கூடியவர் ஸ்ரீராமன். சத்துவம், இராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களோடும் இவ்வுலகில் பரம்பொருளால் படைக்கப் பட்டவைகளான எல்லாத் தத்துவங்களும், அவற்றால் உண்டாக்கப்பட்டதான எல்லா உலகங்களும், அவ்வுலகங்களிடையே நின்ற உயிர்களும் அந்த ஸ்ரீராமனுக்கு உடல்களாகும் என்கிறார் கம்பர். இது ஸ்ரீராமர் பரம்பொருளின் அவதாரம் என்ற செய்தியினை மீண்டும் அறிவுறுத்துகின்றார் கம்பர்.

**கிஷ்கிந்தா காண்டம் பெயர்க்காரணம் :**

கிஷ்கிந்தை என்பது வானரங்களாகிய குரங்கினங்களால் அரசாட்சி செய்யப்பட்டு வந்த ஒரு நகரமாகும். அது துங்கபத்ரா நதிக்கரையில் அமைந்திருந்தது. இப்பகுதியை வாலி என்ற பெயருடைய வானர வீரன் அரசாண்டு வந்தான். அவனுடைய தம்பியான சுக்கிரீவன் என்பவன் வாலிக்கு அமைச்சனாக இருந்து அரும்பணி ஆற்றி வந்தான். இவ்வாறு இருந்த அண்ணன் தம்பியர்களுக்குள் பொறாமையும் பூசலும் வெடித்தது. அதன் விளைவாக சுக்கிரீவனின் மனைவியையும் வாலி அபகரித்துக்கொண்டு, தம்பியை நாட்டைவிட்டே துரத்திவிட்டான்.

இந்நிலையில் இராமனின் உதவியோடு சுக்கிரீவன் அண்ணனை வதைத்து அரசைக்கைப்பற்றியது, அதற்குரிய காரணங்கள், பின்னர் சுக்கிரீவன் கிஷ்கிந்தையின் அரசனாக மாறியது போன்ற கிஷ்கிந்தையில் ஏற்பட்ட பரபரப்பான நிகழ்வுகளை எடுத்துரைக்கும் பகுதியாகையால் இது கிஷ்கிந்தா காண்டம் என்று அழைக்கப்படுகின்றது.



இந்தக் கிஷ்கிந்தா காண்டத்தில் வேதவியாகரணன் என்றும், அனைத்து ஆற்றல்களின் இருப்பிடமானவன் என்றும், ஸ்ரீராமரின் சேவையிலே ஊறித்திளைத்தவன் என்றும், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் சிறிய திருவடி என்றும் அன்புடன் அழைத்து வணங்கப்படுபவருமான அனுமனின் பிரவேசம் வருகின்றது. எனவே அந்த அனுமனுடைய பிறப்பையும், சேவையையும் அழகுடன் எடுத்துரைக்கும் ஸ்ரீஅனுமனின் வணக்கப்பாடலாக அமைந்துள்ள இப்பாடலையும் அறிதல்வேண்டும்.!

**சிறிய திருவடி எனப்படும் அனுமன் துதிப்பாடல் :**

**அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி**
**அஞ்சிலே ஒன்று ஆறாக ஆருயிர் காக்க ஏகி**
**அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டு அயலான் ஊரில்**
**அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன்நம்மை அணைத்துக்காப்பான்.**

பஞ்ச பூதங்களில் ஒன்றான வாயுவின் மகனாகத்தோன்றியவன் அனுமன். அவன் பஞ்சபூதங்களில் ஒன்றான நீர்நிரம்பிய பெருங்கடலைத்தாண்டிச் சென்று, சீதையைக்கண்டறிந்து வருவதால் ஸ்ரீராமனுடைய உயிரையும் அதனால் அனைத்து உயிர்களையும் தானே காக்கவேண்டும் என்னும் தன் கடமையை மனத்தில் உறுதியாக ஏற்றதனால், பஞ்சபூதங்களில் ஒன்றான பூமாதேவி பெற்றெடுத்த மகளான சீதாதேவியைக் காணச்சென்று, கண்டுமீண்டபோது அப்பஞ்சபூதங்களில் ஒன்றான அக்கினிக்கு இலங்கைநகரை இரையாக்கிவிட்டுத் திரும்பினான்! அத்தகைய ஆற்றல்பெற்றவனாகிய அந்த அனுமனை நாம் நினைத்துப்போற்றினால், அவன் அனைத்துவிதமான நன்மைகளையும் நமக்கு அளித்து நம்மையும் எக்காலத்திலும் காத்தருள்செய்வான் என்பது இதன் பொருளாகும்.

இங்கு ஐந்து என்னும் சொல்லிற்குப்பதிலாக, அஞ்சு என்னும் உலகவழக்குச் சொல்லைப் பயன்படுத்தி, ஐந்து பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி(காற்று), வானம் ஆகிய

வற்றையும் ஒன்றிணைத்துப் பாடப்பட்டுள்ள இக்கவிதை கற்போர் மனத்தைக் களிப்பில் ஆழ்த்துவதை அறியலாம்.!

**அனுமன் துதி சமஸ்கிருத ஸ்லோகம் :**

**புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகத:**
**அஜாட்யம் வாக்பலத்வம் சர் ஹனுமத் ப வேத ச:**

மேலும் அனுமனின் துதிப்பாடலாக அமைந்துள்ள மேலே கூறப்பட்டுள்ள வடமொழி ஸ்லோகத்தில், வேத வியாகரணன் என்று போற்றப்படுபவனாகிய அனுமன், நல்ல புத்திகூர்மை ஆகிய ஞானம், எதிரிகளைத்தாக்கி அழிக்கும் சிறந்த பலம், அநீதியைக் களைந்தெறிப்பாடுபடும் மனதிடகாத்திரம், அதர்மிகளை அழிப்பதில் பயமற்ற தன்மை, நல்லவர்களுக்காக உதவிசெய்யவரும்போது காலம் தாழ்த்தாமல் ஆரோகணித்து விரைவாகச்செயல்படும் தன்மை, வாக்குச்சாதுர்யம் ஆகிய அனைத்தும் ஒருங்கே பொருந்திய வீராதி வீரன் என்று புகழப்படுகின்றார். எனவே அத்தகைய அனுமனை தினமும் துதித்தால் நாமும் இந்த குணங்களைப்பெறலாம் என்பதையும் இந்தச்சுலோகம் அறிவுறுத்துகின்றது.

**முன்னதாக அமைந்த காண்டப் பகுதியின் தொடர்பு :**

தாண்டக வனத்தில் மாயமானாய்த் திரிந்த மாரீசப் பொன்மானைப் பின்தொடர்ந்து தேடிச்சென்றபோது, அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட இலங்கை மன்னன் இராவணன் தான் ஒரு சந்நியாசியாய் வேடம் தரித்துச்சென்று, சீதாதேவியைக் கவர்ந்து சென்றான். மாரீசனின் அபயக்குரலால் ஏமாற்றப்பட்ட சீதாவும், இலக்குவனும் ஸ்ரீராமனும் நடந்ததை அறிந்து, மிகவும் துயருற்றனர். அவளைத்தேடிக்கொண்டு சென்றபோது, ஜடாயு, மற்றும் சபரி ஆகியவர்களின் மூலமாகச் சீதையை வான் வழியாகக்கவர்ந்து சென்றவன் இராவணன் என்பதைத் தெரிந்து கொண்டனர். எனவே அவர்கள் சபரி என்ற தபஸ்வினி கூறியதிற்கேற்ப, கிஷ்கிந்தை நகரத்தைத் தேடி வந்தனர்.



**பம்பாநதியின் இயல்பும், பழம்பெருமை :**

ஸ்ரீமத்ராமாயணத்தின் நான்காவது காண்டமான கிஷ்கிந்தா காண்டத்தில் (கிட்கிந்தா காண்டம்) முதற்படலமாக அமைந்துள்ளது பம்பைப் படலம் ஆகும். இதனுடைய முதற்பாடலாக அமைந்துள்ள,

**தேன்படி மலரது செங்கண் வெங்கைம்மா**
**தான் படிகின்றது தெளிவு சான்றது**
**மீன்படிமேகமும் படிந்து வீங்குநீர்**
**வான்படிந்து உலகிடைக் கிடந்த மாண்பது**

என்னும் பாடலில் பம்பை என்னும் சிறப்புற்ற நீர்நிலையின் தன்மையைக்கூறுகின்றார். அச்சத்தை விளைவிக்கக்கூடிய யானைகள் வந்து நீராடுவது என்றும், தெளிவானது என்றும், மேகங்களால் நிறைந்ததும், அழகிய விண்மீன்களை உடையதான வானமே இவ்வாறு இப் பூவுலகில் வந்து காணக்கிடக்கின்றது என்றும்., பம்பையின் இயல்பையும், தன்மையையும் எடுத்துக்கூறுகின்றார். மேலும் இதன்தொடர்ச்சியாக, பம்பையின் பழம்பெருமையைக் கூறும்போது இப்பம்பா என்ற அந்த நீர் நிலையானது,

காதி என்னும் பெயரை உடையவரான ஒரு முனிவரின் மகனான விசுவாமித்திரன் ஒரு காலத்தில் குளிர்ந்தநீரால் சூழப்பட்ட ஓர் உலகத்தையும், அவ்வுலகில் வாழவேண்டியவைகளான உயிரினங்களையும், அவர்களுள் நான்கு வேதத்திலும் தேர்ச்சிபெற்ற அந்தணர்களையும் உருவாக்கும் பொருட்டு தன்னுடைய சிருஷ்டியைத்தொடங்கிய காலத்தில், உப்புநீரை உடைய கடலின் பெருமையை அழித்துவிடுவதைப்போல ஒரு ஒப்பற்ற தூய நீர்நிலையாக விளங்கியது என்று கம்பர் கூறுவதால், இதனுடைய பழமையும், தூய்மையான நீர்பெருக்கும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அந்தப் பம்பா நதியின் தூயநீரில் நீராடி அந்த மாலைக்காலத்தே ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது வணங்கி தம் இன்னல்கள் நீங்கவேண்டும் என்று ஸ்ரீராமர் பிரார்த்தனை செய்தார். (இந்த நீர்நிலையானது தற்போது கேரளாவில் உள்ள பம்பை ஆறு அன்று என்பதை நாம்

அறிந்துகொள்ள வேண்டும்) அன்றைய இரவுப்பொழுது கழிந்தபின் கிஷ்கிந்தா நகரத்தின் உருசியமுக மலையின் சாரலைச் சென்றடைந்தனர் இருவரும்.

**கிஷ்கிந்தை நகரம் :**

வானரங்கள் வசித்து வந்த கிஷ்கிந்தை (கிஷ்கிந்தா) என்ற நகரம் தற்போது உள்ள கர்நாடகா மாநிலம் துங்கபத்திரை ஆற்றின் கரையில் இருந்தது. ஒருபக்கம் நகரமும் மற்றொரு பக்கம் கோட்டைகளும் ரிஷ்யமுக மலை, மால்யவான் மலை போன்றவைகளும் இருந்தன. திரேதாயுகத்தில் வாலி என்னும் வானர (குரங்கின்) அரசனால் ஆளப்பட்ட நகரம் இது.

வாலி என்பவன் தேவேந்திரனின் அம்சத்தில் தோன்றியவன். தேவேந்திரனின் மகன். அவன் தம்பி சுக்கிரீவன் சூரியனின் மகன். தாய் ஒருத்தியே ஆகையால் அண்ணன் தம்பியர் என்றே கருதப்பட்டனர். கதை விளக்கம் வால்மீகி இராமாயணம் உத்தரகாண்டத்தில் கூறப்பட்டு உள்ளது.

**வாலியும் சுக்கிரீவனும் அண்ணன்தம்பி முறையினரான சுருக்கம் வருமாறு :**

ரிட்சரஜஸ் என்பவன் பிரம்மாவினால் படைக்கப்பட்டவன். ஒருநாள் அவன் சுற்றித்திரிந்தபோது, அங்கே தான் கண்டதொரு குளத்தில் குதித்ததால் பெண்ணாக மாறிவிட்டான். மிகுந்த அழகியாக இருந்த அவள்மேல் காதல்கொண்ட இந்திரனால் வாலியும், சூரியனால் சுக்கிரீவனும் உண்டானார்கள். தந்தையர் வேறானாலும், தாய் ஒருத்தியாகையால் வாலியும் சுக்கிரீவனும் அண்ணன் தம்பியராக ஒற்றுமையுடன் நாட்டை ஆண்டனர்.

ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீராமனாக அவதாரம் எடுக்க முடிவுசெய்து அறிவித்தவுடன் தேவர்கள் பூமியிலே வானரங்களாக மாறி யக்ட்ச, கந்தர்வ, விஞ்சைய மாதர்களோடு சேர்ந்து இனவிருத்தி செய்து வாழ்ந்திருந்தனர். அத்தகைய வானரர்கள் துங்கபத்ராநதிக்கரையில் உள்ள கிஷ்கிந்தை என்னும் நகரத்தில் அரசு அமைத்து, அரசாட்சியும் செய்துவந்தார்கள். அந்த வானர இனத்தைச் சேர்ந்தவர்களுள்



மேலே குறிப்பிடப்பட்ட வாலியும், சுக்கிரீவனும் அரசனாகவும், இளவரசனாகவும் பொறுப்பேற்று ஆட்சி புரிந்துவந்தார்கள். அண்ணன் தம்பியராகப் பாசப்பிணைப்புடன் வாழ்ந்திருந்த அவர்களுக்குள் மேலே கூறப்பட்ட துந்துபி மற்றும் மாயாவி என்னும் அரக்கர்களின் வதத்தின்போது ஏற்பட்ட தப்பெண்ணத்தின் அடிப்படையில் பகைமை ஏற்பட்டது.

சுக்கிரீவனை ஸ்ரீராமன் தேடிவந்தபோது, அண்ணன் வாலியால் அடித்துத் துரத்தப்பட்ட சுக்கிரீவன் அவனுக்குப்பயந்து அனுமன் எனப்படும் அமைச்சனோடும், அக்கினியின் அம்சமாகத்தோன்றிய படைத்தளபதி நீலன் என்பவனோடும். விஸ்வகர்மாவின் மகனான நலன் என்பவனோடும், மேலும் சில அமைச்சர்களோடும், மலைய மலையில் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தான்.

ரிஷ்யமுக மலை என்றும் ரிஷ்யபர்வதம், ருஷ்யமலை, கிஷ்கிந்தாமலை என்று பலவாறாக அழைக்கப்பட்டிருந்தது. உயரமான மலை. அதன் அடிப்பகுதிக்குச் சென்ற இராமலட்சுமணர்களைப் பார்த்தவுடன் பயத்துடன் அம்மலையின் மற்றொரு பகுதியான மால்யமலைக்குகையில் சென்று ஓடி ஒளிந்து கொண்டான் சுக்கிரீவன்.

**ஸ்ரீராமன் கண்டான்... தன் சிறிய திருவடியை !**

ரிஷ்யமுக மலையடிவாரத்தின் பக்கமாக வந்த அவர்களை யார் என்பதைத் கண்டறிந்து வருவதற்கு அனுமனை அனுப்பிவைத்தான் சுக்கிரீவன். அனுமன் தன்வானர உருவத்தை மறைத்துக்கொண்டு, ஓர் அந்தண பிரம்மச்சாரியாய் எதிர்சென்று அவர்களை மிகவும் பயபக்தியுடன் வணங்கினான். காரணம் அவர்களைப்பார்த்தவுடனே அவர்களின் தெய்வீகத் திருவுருவங்களைக் கண்ட அனுமன், இவர்கள் மனித வடிவத்தில் இருந்தாலும், இவர்கள் சாதாரண மானிடர்கள் இல்லை என்பதைப்புரிந்துகொண்டான். அவர்களிடையே இருந்த தோற்றத்தைக் கண்ட அனுமன்,

**தேவருக்கு ஒரு தலைவர் ஆம் முதல்தேவர்எனின்**
**மூவர் மற்று இவர் இருவர் மூரி வில் கரர் இவரை**
**யாவர் ஒப்பவர் உலகில் யாது இவர்க்கு அரியபொருள்**
**கேவலத்து இவர் நிலைமை தேர்வது எனக் கிழமைகொடு**
**(அனுமப் படலம் 27)**

**சிந்தையில் சிறிது துயர்சோர்வுற தெருமரலின்**
**நொந்து அயர்த்தவர் அனையர் நேவுறச் சிறியர் அலர்**
**அந்தரத்து அமரர் அலர் மானிடப் படிவர் மயர்**
**சிந்தனைக்கு உரியபொருள் தேடுதற்கு உறு நிலையர் (28)**

என்ற இரண்டு பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப தன் மனதில் எண்ணிய எண்ணங்களாக வடித்துள்ள இந்தப்பாடல்களில், ஸ்ரீராம லட்சுமணர்களின் கடவுள் தன்மைகளை அறிந்து கொண்டதோடு, அவர்கள் உலகத்தின் முதற்பெருங்கடவுளர்களான பிரம்மன், ஸ்ரீஹரி, மற்றும் சிவபெருமானோ என்றால், இவர்கள் இருவராக உள்ளார்களே என்றும், வில்லினைக்கையில் ஏந்தியுள்ளார்களே என்றும் யாரென முடிவுகட்டாமல், ஏதோ ஒரு முக்கியமான பொருளைத்தேடி வந்தவர்கள்தான் என்பதை அவர்களின் முகக்குறிப்பால் அறிந்துகொண்டான் என்பதை விளக்குகின்றது.

தன்னுடைய மனத்தில் எழுந்த சந்தேகங்களைப் போக்கிக்கொள்ள அவர்களை யார் என்று வினவினான் அனுமன். இலக்குவன் அந்த அனுமனின் கேள்விக்குப் பதிலுரைத்தபோது, தங்களைப்பற்றியும், தங்களின் தற்போதைய நிலைமையான சீதாதேவியைப் பிரிந்திருப்பதுமான நிலையையும், அவளைத்தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டே தாங்கள் வந்துள்ளதையும் நன்குணர்ந்தான் அனுமன். தன் அரசனாகிய சுக்கிரீவனும் ஸ்ரீராமனும் மனைவியைப் பிரிந்த ஏக்கத்தோடு ஒரே உணர்வில் உள்ளவர்கள் என்று அறிந்து அந்தச்செய்தியையே அவர்களுக்கு முதலில் எடுத்துரைத்தான். சுக்ரீவனைப்பற்றிய



செய்திகள் பல இருக்கின்றன எனினும், அவற்றையெல்லாம் அப்போது எடுத்துரைக்காமல், சுக்கிரீவனுக்கு வாலி செய்த கொடுமையையே எடுத்துரைத்து, அவன்மனைவியாகிய உருமியையும் அவ்வாலி கவர்ந்துகொண்டதை எடுத்துரைத்து, தன் அரசன்மேல் இராமனுக்கு இரக்கம் உண்டாகுமாறு பேசினான்.! எனவே அத்தகையவனுக்கு உதவிசெய்யுமாறு அனுமன் கேட்டதற்கு ஸ்ரீராமன் உடன்படவே, ஏறுதற்கு மிகவும் சிரமத்தை உடையதான அம்மலைக்கு தன் சுய உருவம் எடுத்து அவர்களைத் தோள்மேல் தூக்கிச்சென்றான் மாருதி என்ற அச்சொல்லின் செல்வன்.

**யார்கொல் இச்சொல்லின் செல்வன்! வேதவியாகரணன்!!**

அனுமனின் பேச்சாற்றலால் கவரப்பட்ட ஸ்ரீராமர் வியப்படைந்தார். அவனுடைய இனிமையான சொல்பிரயோகத்தையும், அவனிடம் காணப்பட்ட பணிவையும், பக்தியையும், வேதங்களின் ஆழ்ந்த தத்துவார்த்தங்களையும், பெரும் ஞானத்தையும் கண்டான் ஸ்ரீராமன். அவனுடைய இந்த நல்லாற்றல்களை இலக்குவனிடம் வியந்தும், பாராட்டியும் பேசினார்.

**பிரம்மனா அல்லது சிவபெருமானா என்று பிரமித்தான் ஸ்ரீராமன் :**

**மாற்றம் அஃது உரைத்தலோடும் வரிசிலைக்குரிசில் மைந்தன்**
**தேற்றம் உற்று இவனின் ஊங்குச் செவ்வியோர் இன்மை தேறி**
**ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்னும்**
**வேற்றுமை இவனோடு இல்லையாம் என விளம்பலுற்றான். (59)**

**இல்லாத உலகத்து எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக்**
**கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி**
**சொல்லாலே தோன்றிற்று அன்றே யார்கொல் இச்சொல்லின்**
**செல்வன் வில்ஆர்தோள் இளையவீர விரிஞ்சனோ**
**விடைவலானோ (60).**

என்பவை கம்பரின் கருத்தாழமிக்க கவிதைகள் !

அதாவது அனுமனின் பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்ட ஸ்ரீராமன் அவனை விஞ்சையனோ (பிரம்மதேவனோ)அன்றி காளை ஊர்தியைக்கொண்டவனான சிவபெருமானோ?யார் என வியந்தாராம். அவனைச்சிறந்த ஞானம் உடைய வேதவியாகரண பண்டிதனாகவும் கண்டு பாராட்டினார்.!

மேலும், கிட்கிந்தா நகரத்தைத் தேடிவந்தபோது, அன்றைய காலைப்பொழுதில் இராம லட்சுமணர்கள் இருவரும் தாம் மேற்கொள்ள வேண்டிய சந்தியாவந்தனம் உள்ளிட்ட நித்ய கர்மாக்களைத் தவறாமல் செய்தனர், இக்கட்டான நிலையிலும் இவர்களின் முறைதவறாத இக்கர்ம நியமத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லி, குறிப்பாக இதை இளையதலைமுறையினருக்கு எடுத்துச்சொல்லி வழிநடத்த வேண்டும். அத்தகைய பழக்கம் பாரதம் உயர்வு பெற வழிவகுக்கும்.!

ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீராமனாக திருஅவதாரம் எடுக்கும் போது தேவர்கள் எல்லாம் உலகெங்கினும் வானரங்களாகத் தோன்றி வாழ்ந்து கொண்டிருத்தல் வேண்டும் என்றும் ஸ்ரீராம கைங்கரியம் செய்ய வேண்டிய நிலை ஏறபடுமென்றும் கூறினார் பிரம்மதேவர். அதற்கு ஏற்றவாறு தேவர்கள் வானரங்களாகி (குரங்கு கூட்டங்கள்) கிஷ்கிந்தையிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கில் வாழ்ந்திருந்தனர். தங்கள் இனத்தை விருத்தி செய்து வைத்திருந்தனர். மேலும் இந்திரனின் மகனாகத்தோன்றிய வாலியும் சூரியனின் புதல்வனாக சுக்கிரீவனும் தோன்றி அண்ணன் தம்பியராக கிஷ்கிந்தை நகரத்தை ஆண்டு வந்தனர். அதனாலேதான் பின்னர் நடைபெறப்போகும் யுத்தத்தில் மானிட அவதாரம் எடுத்த ஸ்ரீராமனும் இலக்குவனும், வானரப்படைகளின் உதவியோடு இராவணனை அழித்தனர். இது பிரம்மனால் கொடுக்கப்பட்ட வரத்திற்கு ஊறு ஏற்படாமலும், அதே நேரத்தில் அதர்மவான்களை அழிக்க அவதாரம் எடுப்பேன் என்ற ஸ்ரீராமாவதாரத்தின் நோக்கம் பூர்த்தி செய்யப்படுவதற்கும் உதவிகரமாய் இருந்தது என்பதையும் அறிந்துகொள்ளலாம்!



தசரதன் புதல்வர்கள் சீதாதேவியைத்தேடிவந்த அந்த நேரத்தில், அண்ணன்தம்பியராய் கிஷ்கிந்தையை அரசாண்டு வந்தவர்களின் நிலைமை மாறி, இரண்டு சகோதரர்களால் எதிரிகளாகிப்போனார்கள்.

**சகோதரர்களால் எதிரியான சகோதரர்கள் :**

**துந்துபியின் வதையால், தீராத சாபம் பெற்றான் வாலி !**

துந்துபி என்பவனும், மாயாவி என்பவனும் மயனுடைய புத்திரர்கள்! மண்டோதரியின் சகோதரர்கள். இராவணனுடைய மைத்துனன்மார்கள். இவர்களுள் துந்துபி என்பவன் மிகப்பெரும் எருமை மாட்டின் உருவத்தையுடையவன். அவன் போர்செய்வதில் எப்போதும் ஆர்வம்கொண்டிருந்தான். அதனால் விண்ணிலும், மண்ணிலும் தன்னோடு போர்செய்யக்கூடியவர்கள் யார் யார் என்று தேடிச்சென்றும் அறைகூவல் விட்டு அவர்களோடு போர்செய்வதையும் வழக்கமாகக்கொண்டிருந்தான்.

ஒருநாள் தோள்கள் தினவெடுத்த துந்துபி, தேவலோகம்சென்று தேவேந்திரனைத் தன்னோடு போர்செய்ய வருமாறு அறைகூவல் விட்டான். ஆனால் இந்திரனோ, அவனை எதிர்க்கும் ஆற்றல் தனக்கு இல்லையென்றும், இமவான் என்பவனே அவனோடு போர்செய்யத்தக்கவன் என்றும் கூறி, தப்பித்துக்கொண்டான். உடனே துந்துபியும் அவனிடம் சென்று போர்செய்ய அழைத்தான். ஆனால் அவனும் தனக்கு அந்தத்துந்துபியை அழிக்கும் போர்த்திறமை இல்லை என்றும், பூலோகத்தில் உள்ள கிஷ்கிந்தையின் அரசனான குரங்கினத்தலைவன் வாலி என்பவனே அவனோடு போர்செய்யக்கூடியவன் என்றும் கூறி தப்பித்துக்கொண்டான்.

உடனே துந்துபி, கிஷ்கிந்தை சென்று, நிலவு காய்ந்துகொண்டிருக்கும் ஓர் அர்த்தராத்திரி நேரத்தில் வாலியின் அரண்மனைமுன்சென்று, அறைகூவல் விட்டு, தன்னோடு போர்செய்யவருமாறு கணைத்தான்! தூக்கம் கலைந்த வாலி கோபம்கொண்டு, வெளியே வந்து, அவனைத்துரத்தவே,

பயந்துபோனான் துந்துபி! போருக்குச்சென்றபோது, வாலி தன்னுடைய தந்தையான இந்திரன் கொடுத்த முத்துமாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டு போருக்குப் புறப்பட்டு, துந்துபியைத் துரத்திச்சென்றான். அவனைப் பிடித்தும்கொண்டான்.

இருவருக்கும் இடையே கடும்போர்நடந்தது. எனினும் வாலியை அத்துந்துபி ஒன்றும் செய்யமுடியவில்லை. நேரம் ஏறஏற வாலியின் போர்த்திறமை அவன்பெற்றிருந்த வரத்தால், அதாவது வாலியை நேருக்கு நேர்நின்று எதிர்க்கும் பகைவனின் பாதிபலம் வாலிக்குச்சென்றுவிடும் என்பதால் அதிகமாயிற்று. சோர்ந்துபோனான் துந்துபி. போருக்கு முன் எச்சரிக்கை விட்டும் ஏற்றுக்கொள்ளாமல், அர்த்தராத்திரியில் வந்து போருக்கு அழைத்த அந்தக்கர்வியை விட்டு விடக்கூடாது என்று நினைத்தான் வாலி! எனவே அவனை அப்படியே தன் தலைக்குமேல் தூக்கி கரகரவென சுழற்றி, வானுலகத்தில் வீசி எறிந்தான்!

**மதங்க முனிவர்தந்த சாபம் :**

அவனுடைய உடலானது ஒருகாத தூரம்வரையில் சென்று, உருஷ்யமுக பர்வதத்தில் இருந்த மதங்கமுனிவரின் ஆசிரமத்தில்போய்விழுந்தது. அந்தநேரத்தில் தவசீலரான மதங்கமுனிவர் யாகம் வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். வானுலகத்திலிருந்து அப்பகுதிக்கு வந்து வீழ்ந்த துந்துபியின் உடலிலிருந்து தெறித்த இரத்தம் கொண்டு, இச்செயலைச்செய்தவன் யாராக இருந்தாலும் அவன் என்னுடைய ஆசிரமப்பகுதிக்கு வந்தால், எரிந்து சாம்பலாகக்கடவன் என்ற சாபம் தந்துவிட்டார். அதன்பிறகு வாலி தன்னை மன்னிக்குமாறு வேண்டியும் மதங்கமுனிவர் தன்சாபத்தை விலக்கிக்கொள்ளவில்லை! எனவே அச்சாபத்திற்குப்பயந்த வாலி அன்றுமுதல் அப்பகுதிக்குச் செல்வதுமில்லை!

எனினும் தன் ஆசிரமப்பகுதி, மாசுபட்டதால் அதற்குமேலும் அங்கிருக்க விரும்பாத மதங்கமுனிவர், தான்



அங்கிருந்தும் வெளியேறி, பம்பைக்கு அருகில் தன்னுடைய ஆசிரமத்தை அமைத்துக்கொண்டு, யாக, யக்ஞ, வேள்விகளைச்செய்து கொண்டுருந்தார். அங்குதான் சபரியும் இருந்து அவருக்குத்தொண்டாற்றி வந்தாள்!

**மாயாவியைக் கொன்றான் மாவீரன் வாலி!**

பராக்கிரமசாலியான வாலி சிறந்தமுறையில் தனது அரசாட்சியைத் தொடர்ந்துகொண்டிருந்தபோது, மீண்டும் ஒரு போர்செய்யும் கட்டாயத்திற்குத்தள்ளப்பட்டான். துந்துபியான தனது சகோதரனைக் கொன்ற வாலியைப்பழிவாங்கவேண்டும் என்று நினைத்திருந்த மாயாவி என்ற அவனுடைய சகோதரன் ஒரு சமயம் வாலியை எதிர்க்கவந்தான். அவனும் கூக்குரல் இட்டும், கர்ஜனை செய்தும் வாலியைப்போருக்கு அழைத்தான். அப்போதும் இரவுப்பொழுதாக இருந்தது. உடனே வாலி வருவான் என்று எதிர்பாராத மாயாவி போருக்குத்தயாராகி வந்து நின்ற அவனது தோற்றத்தைக்கண்டவுடன் பயந்து நடுங்கினான். ஓட்டம் பிடித்தான். அப்போது தன் தமையனுக்குத்துணையாக சுக்கிரீவனும் சென்றான்.

மாயாவி என்ற அந்த அரக்கன் வாலியின் வலிமையைக்கண்டு பயந்து ஓடிப்போய் ஒரு குகையினுள் ஒளிந்துகொண்டான். அப்போது வாலி தன் தம்பியைக் காவலாக வைத்துச் சென்றான். மயனுடைய மகனாகவும், மண்டோதரியின் சகோதரனாகவும் இருந்தவன் இந்த மாயாவி! குகையினுள் புகுந்தவர்கள் இறுபத்தெட்டு மாதங்களாகியும். வாலி வெளியே வராததனால் செய்வதறியாமல் திகைத்து நின்று சுக்கிரீவன் காவலைத்தொடர்ந்திருந்தான். ஒருநாள் குகைவாசலின் வழியே இரத்தம் பெருக்கிட்டுக்கொண்டு வந்தது. யாரேனும் ஒருவர் மற்றொருவரால் கொல்லப்பட்டிருக்கவேண்டும்! வாலி, மாயாவியை வதம்செய்து விட்டிருந்தால், வெளியே வந்திருக்கவேண்டுமே! ஒருவேளை வாலிதான் மாண்டுபோனானோ என்னமோ ? என்ற சந்தேகம் வந்ததால், இனிமேலும் குகையைத் திறந்து வைத்திருந்தால் அந்த மாயாவி எளிமையாக உயிர்தப்பிப்போய்விடுவான் என்று நினைத்த

சுக்கிரீவன் குகையின் வாயிலை ஒரு பெரும் பாறாங்கல்லால் மூடிவிட்டு, கிட்கிந்தைக்குச்சென்று நடந்ததை மற்றவர்களுக்குக் கூறினான்.

**சகோதரர் பிரிந்தனர், எதிரிகள் ஆயினர் :**

மேலும் சிலநாட்களாகியும் வாலி திரும்பாததாலும், மற்றவர்களின் கட்டாயத்திற்கும் அடிபணிந்த சுக்கிரீவன் அரசனாக முடிசூட்டிக்கொண்டான். மாயாவியை வதைத்து விட்டு வந்த வாலி பற்பல நாட்களுக்குப்பிறகு கிஷ்கிந்தை திரும்பி, சுக்கிரீவன் தனது அரியனையில் அரசனாக வீற்றிருப்பதைப்பார்த்து சினம் கொண்டான். தனக்குத் துரோகம் செய்து விட்டான் என்று தவறுதலாக நினைத்து சுக்கிரீவன் மன்னிப்புக்கேட்டும் ஏற்றுக்கொள்ளாமல் அடித்து துரத்திவிட்டான். சுக்கிரீவனின் மனைவியான உருமியையும் அபகரித்துக் கொண்டான்.

எனவே உயிர் பிழைப்பதற்காக ஓடிச்சென்ற சுக்கிரீவன் வாலி வரமுடியாத மலைப்பகுதியான உருசியமலைப் பகுதியின் மால்ய பர்வத்தில் மறைந்து கொண்டு காலத்தைக் கடத்தி வந்தான். கல்வி கேள்விகளில் வல்லவனும் சிறந்த ஆற்றல் பெற்றவனுமான அனுமன் என்பவனைத் தன் அமைச்சனாகவும் பெற்றிந்தான் சுக்கிரீவன். துந்துபி என்னும் அரக்கனை வாலி அழித்த போது அவனை மார்பிலே தாக்கி வானுலகத்தில் கரகரவென சுழற்றி கீழே தள்ளியபோது துந்துபியின் இரத்தம் அப்போது அங்கு தவம் செய்து கொண்டிருந்த மதங்கமுனிவர் மேலும், ஆசிரமப்பகுதியிலும், உருசியமுக பர்வத்தின்மேலும் மிகுதியாகக் கொட்டியது. இத்தகைய அநியாயச் செயலைச் செய்தவன் எவனாக இருந்தாலும், அவன் இங்கு வந்தால் எரிந்து சாம்பலாகக் கடவான் என்ற அந்த மதங்கமுனிவர் இட்டசாபம் வாலிக்கு ஏற்பட்டது. அப்பகுதியே ரிஷ்யபருவத்தின் ஒறு பகுதியான மால்யபர்வதப்பகுதி! அத்தகைய சாபம் வாலிக்கு ஏற்பட்டு இருந்ததால் அவன் அந்த உருசியமுக மலைப்பக்கம் செல்வதே இல்லை.



**சுக்கிரீவன் பயந்தான், அணுகினான் அனுமன்!**

அவ்வாறு ஒளிந்திருந்தவர்கள் ஸ்ரீராம லட்சுமணர்களைக் கண்டு பயம் கொண்டு வாலிக்காகத் தம்மை வதைக்க வந்தவர்களோ என்று பயந்து மலைக்குகையினுள் சென்று மறைந்து கொண்டான் சுக்கரீவன். அனுமனை அனுப்பி செய்திகளை அறிந்து வருமாறும் கூறினான். அந்த இருவரின் தெய்வீகத்தோற்றத்தைக்கண்ட அனுமன் ஓர் அந்தண பிரம்மச்சாரியாகத் தன்னை மாற்றிக்கொண்டு அவர்கள்முன் சென்று வணங்கி நின்றான். அவர்களுடைய சரித்திரத்தை அறிந்து கொண்டு அவர்கள் தன் தலைவனாகிய சுக்கிரீவனைத்தேடியே வந்துள்ளார்கள் என்றும் தெரிந்து கொண்டு ஸ்ரீராமரின் மனைவியை வேறு ஒருவன் அபகரித்துச் சென்றதைப்போலவே சுக்கிரீவன் மனைவியை வாலி அபகரித்துக் கொண்டான் என்ற செய்தியைக்கூறி சுக்ரீவன்மேல் கருணை ஏற்பட வழிவகுத்தான் அனுமன்.

பிறகு சுக்கிரீவனையும் ஸ்ரீராமர்முன் அழைத்துச் சென்று நிறுத்தினான். அப்போது வாலியை வதைத்து சுக்கிரீவனை கிஷ்கிந்தையின் அரசனாக முடிசூட்டுவதாகவும் சுக்கிரீவன் தன் மனைவியான சீதாதேவியைக் கண்டு பிடிக்க உதவவேண்டும் என்றும் ஸ்ரீராமர் எடுத்துரைத்தார். இருவரும் அதை ஏற்றுக்கொண்டனர். ஆனாலும் வாலியை வதைத்து தனக்கு முடிசூட்டி அரசனாக்கத்தக்க வலிமையை இராமன் பெற்றுள்ளானா? இது இந்த இராமனால் சாத்தியமாகுமா? என்றெல்லாம் தனது மனதிற்குள் எண்ணி கலக்கமடைந்திருந்தான் சுக்கிரீவன். அனுமனுடைய எண்ணமும் இவ்வாறாகவே இருந்தது. இவர்களின் மன ஓட்டத்தை உணர்ந்த ஸ்ரீராமன் அவர்களோடு அப்போது அந்த மால்யமலைப்பகுதியில் இருந்தார். அவருக்கு அருகில் வாலியாலே வதைக்கப்பட்ட துந்துபியின் உடல் எலும்புக் கூடு கிடந்தது. அதைத்தன் வலது கால் பெருவிரலால் மேல்நோக்கி எட்டி உதைத்தார் ஸ்ரீராமர். அந்த எலும்புக்கூடானது வானம் வரை மேல்நோக்கிச் சென்று, பின்னர் அதே வேகத்தில் கீழே விழுந்ததால், தூள்

தூளாகப்போயிற்று. இதனைக்கண்டு ஓரளவு இருவரும் மனத்திருப்தி அடைந்தனர்.

**மராமரம் துளைத்திட்ட மாவீரன்!**

ஆயினும் தங்களது சந்தேகத்தைப்போக்கிக்கொள்ள இதுவே போதுமானது என்று அனுமன் கருதவில்லை. எனவே அப்போது அவ்விடத்தில் காணப்பட்ட ஏழு மராமரங்களைத் (மாமரம்) தன்னுடைய ஒரே பாணத்தால் துளைத்துக்காட்ட எண்ணம்கொண்டார் ஸ்ரீராமர். அதை இருவரும் ஏற்றுக்கொள்ள, தன்னிடத்தே இருந்த அஸ்திரப்பிரயோகத்தால், வெவ்வேறு திசைகளில் தாறுமாறாக வளர்ந்திருந்து கிடந்த அந்த ஏழு மராமரங்களையும் தனது ஒரேபாணத்தால் (அம்பினால்) துளைத்துக்காட்டினான் ஸ்ரீராமன். இச்செயலுக்குப்பிறகே இருவருக்கும் முழு மனதிருப்தி ஏற்பட்டது.

**சுக்கிரீவனின் சரணாகதியை ஏற்றார் ஸ்ரீராமன்!**

மேலோட்டமாகப் பார்க்கும்போது, இது ஸ்ரீராமனின் வில்லாற்றலைச் சோதிப்பது போலத்தோன்றினாலும், தன்னை எதிர்த்துப்போரிடும் பகைவர்களின் பலத்தில் பாதி பலம் தானாகவே வாலிக்குப்போய்ச் சேர்ந்து விடும் என்று அவன் பெற்றிருந்த வரத்தை நினைத்தும், தனக்கு உதவி செய்வதற்காக வந்த ஸ்ரீராமனிடத்தில் வாலியை எதிர்த்துப்போரிட்டு வெல்லும் ஆற்றல் இல்லாது போனால், அதனால் அவருக்கோ, அதன்பிறகு தங்களுக்கோ எந்தவிதமான துன்பங்களும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையின் பொருட்டே இந்தச் சோதனைகள் ஸ்ரீராமனுக்கு ஏற்படுத்தப்பட்டது என்பதே அறிஞர்களின் கருத்தாகும்.

எனவே இந்தச்சோதனைகளில் வெற்றிபெற்ற பிறகே வாலியின் வரபலத்தை அதாவது வாலி மிகவும் வலிமை பொருந்தியவன் என்றும், நேருக்குநேர் நின்று அவனோடு போர்செய்கின்றவர்களின் பாதிபலம் வாலிக்குச் சென்று விடும் என்றும் அவன் பெற்றுள்ள வரத்தைச் சுட்டிக்காட்டினான் சுக்கிரீவன்.



ஸ்ரீராமரால் மராமரங்கள் ஒரே பாணத்தால் துளைக்கப்பட்டு அவை நிலத்தில் வீழ்ந்ததைக் கண்ட சுக்கிரீவன் இராமனை வெகுவாகப்புகழ்ந்து, அந்த இராமனைப்போல வலிமை மிக்கவர்களைத் தான் இதுவரையில் கண்டதில்லை என்றும், தான் செய்த நல்வினைப்பயனால்தான் தெய்வம்போன்ற அவரைத்தான் கண்டதாகவும் கூறினான். இச்செய்கையால் சுக்ரீவனும் அனுமனும் திருப்தி அடைந்தனர். மேலும் இன்று முதல் உனக்கு யார் பகைவர்களோ அவர்கள் எனக்கும் பகைவர்கள். உன் உறவினர்கள் எனக்கும் உறவினர்களாவர் என்றும் உறுதிமொழி கொடுத்தார் இராமன். சுக்கிரீவனும் மனம் மகிழ்ந்து அதே உறுதிமொழியையும், சீதாதேவியைத் தேடும் பணியில் தான் இராமனுக்குப்பேருதவி செய்வதாகவும் வாக்களித்தான்.

**அக்கினி சாட்சியாய் ஆனார்கள் சகோதரராய்!**

அப்போது அனுமன் அங்கிருந்த உலர்ந்த மரத்துண்டுகளைக் கொண்டு வந்து எரிமூட்டினான். அதை சாட்சியாக வைத்துக்கொண்டு (அக்னிசாட்சி) மேற்கண்ட உறுதிமொழியை ஸ்ரீராமர்கொடுத்தார்.

**“மற்றுஇனி உரைப்பது என்னே வானிடை மண்ணில் நின்னைச்**
**செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு**
**உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனது என்காதல்**
**சுற்றம் உன்சுற்றம் நீ என் இன்னுயிர்த் துணைவன் என்றான் (104)**

என்னும் பாடலால் அன்றுமுதற்கொண்டு வானுலகத்திலும், மண்ணுலகத்திலும் சுக்கிரீவனே உனக்கு யார் யார் பகைவர்களோ அவர்கள் எனக்கும் பகைவர்களேயாவர். அதேபோல் உனக்குரிய உறவினர்கள் எல்லோரும் எனக்கு உறவினர்கள். அதுமட்டுமன்றி எனது அன்புக்குரியவர்கள் எல்லாம் இனி உன் அன்பால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். நீ எனது இன்னுயிர்த் துணைவன் என்றும், சகோதரன் என்றும் கூறி அவனை ஆரத்தழுவிக்கொண்டார் ஸ்ரீராமன். அதனால் பெரிதும் மனமகிழ்ச்சிகொண்ட சுக்கிரீவன்,

**“வையம் நீ வானும் நீ மற்றும் நீ மலரின்மேல்**
**ஐயன்நீ ஆழிமேல் ஆழிவாழ்கையன்நீ**
**செய்யதீ அனைய அத்தேவும் நீ நாயினேன்**
**உய்ய வந்து உதவினாய் உலகம் முந்து உதவினாய். (175)**

நாய்போலும் அடிமைத்தன்மை உடையவனாகிய எனக்கு என்னைத்தேடி வந்து உதவிசெய்து என்னைச்சரணாகதி ஏற்ற பெருமானே நீங்கள் படைப்புக்கடவுளான பிரம்மதேவனா? அல்லது செந்நிறக்கடவுளான சிவபெருமானா? அன்றியும் திருப்பாற்கடலில் ஆதிசேஷன்மேல் ஆனந்த சயனம் கொண்டுள்ள சக்கராயுதத்தை ஏந்திய காக்கும் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணுவா? அடியேனுக்கு ஒன்றும் புரியவில்லையே என்று கூறியதால் சுக்கிரீவனின் மருட்சி கலந்த மகிழ்ச்சி இதனால் வெளிப்படுவதை அறியலாம்.

**இடது கண்கள் துடித்தன!**

அனுமன் ஏற்பாட்டின்படி அக்கினிசாட்சியாக அவர்கள் இந்த உடன்படிக்கையைச் செய்து கொண்ட அப்போது சீதாவின் இடதுகண்ணும், வாலி, மற்றும் இராவணனின் இடது கண்களும் துடித்தன என்று பாடியுள்ளார் கம்பர். இதன் மூலம் சீதைக்கு மங்கலநிகழ்வுகளும், மற்ற இருவருக்கும் அமங்கல நிகழ்வுகளும் உண்டாகும் என்பதை உய்த்துணர வைக்கின்றார் கம்பர். எவ்வாறு எனில், பெண்களுக்கு இடது கண்துடிப்பதால் நன்மை ஏற்படும் என்பதன் அறிகுறியாகும். ஆண்களுக்கு இடது கண்துடித்தால் அது தீமை ஏற்படப்போவதன் அடையாளமாகும். அப்போது அந்த இருவரிடையே ஏற்பட்ட உறவுமுறையால் வாலியும், இராவணனும் அழியப்போகின்றார்கள் என்பதனையும் அவர்களது இடதுகண் துடிப்பால் உய்த்துணரச்செய்துள்ளார் கம்பர்.

உறுதிமொழி ஏற்ற அந்த நேரத்திற்குப் பிறகு சில வானர வீரர்கள் தாங்கள் காட்டிலே கண்டெடுத்த துணியால் சுற்றப்பட்டிருந்த ஒரு நகை மூட்டையைச் சுக்கிரீவனிடத்தில் கொடுத்தனர். அவை சீதையின் நகைகளாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அதை இலக்குவனிடம் அடையாளம் காட்டும் பொருட்டுக் காண்பித்தார்கள்.



**சிலம்பினை மட்டும்கண்ட சீர்மிகு பண்பினன் :**

அப்போது சீதையினுடைய நெற்றி, கூந்தல், முகம், மார்பு தோள் இடை ஆகியனவற்றில் அணியப்படும் அணிகலன்களை ஒவ்வொன்றாக இலக்குவனிடம் காண்பித்து, அவை சீதையினுடையவைதானா என்று அவர்கள் அறியவிரும்பினார்கள். எனவே அதைக்காண்பித்து அவை சீதையினுடையது தானா என்று கேட்டனர். ஆனால் அவற்றையெல்லாம் கண்ட இலக்குவன் அவை சீதையினுடையது அல்ல என்றான். அதனால் ஒருவேளை இராவணனால் கவரப்பட்டவள் சீதை அல்லவோ? என்ற ஐயமும் அவர்களுக்கு உண்டாயிற்று. இறுதியாக சீதை காலில் அணியும் அபரணமான சிலம்பு தண்டை ஆகியன வற்றைக்காண்பித்தபோது, இவை கண்டிப்பாக சீதையின் ஆபரணங்கள் தான் என்று கூறினான் இளையாழ்வான். இதனால் சீதாதேவியை மாதாநிலையிலேயே கண்டு, அவள்பாதத்திற்கும் மேல் பார்த்தறியாத ஒரு பண்பாளனாக இலக்குவன் நமக்குக் காட்சியளிக்கின்றான். ஆனால் அத்தகைய பண்பாளனைத் தவறுதலாகப்புரிந்து கொண்டு, இராமனுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு இறந்துபோனால், “என்னை அடைய எண்ணுகின்றாயோ” என்று சீதாதேவி கேட்டாள். அதனாலேதான் இலக்குவன் பர்ணசாலையை விட்டுப் பிரிந்து சென்றான் என்று அறியும்போது, விதியின் வலிமையும், இராவணவதம் ஏற்பட இவையெல்லாம் நடந்தாகவேண்டும் என்ற நிர்பந்தமுமே காரணம் என்றும் அறியப்படுகின்றது.!

எனவே சுக்கிரீவன் கூட்டத்தவர்களாகிய அக்குரங்கினங்கள் கூறியதைப்போல தென் திசைப் பக்கமே சீதாதேவி கடத்தப்பட்டாள் என்பதும் உறுதியாயிற்று. எனவே சீதாவைத்தேடிக்காணும் பணியில் வானரங்களின் உதவியும், வானர அரசனாகிய சுக்கிரீவனின் உதவியும் தேவை என்றருந்து, அதை நிறைவேற்றிக்கொள்ள, வாலியின் வதம் தேவை என்பது

உறுதிசெய்யப்படுகின்றது. எனவே வாலியைப் போருக்கு அழைத்து சுக்கிரீவன் போரிடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஸ்ரீராமன் ஆணைப்படி வாலியைப் போருக்கு அழைத்தான் சுக்கிரீவன்.

வாலியால் முன்பு துரத்தப்பட்ட சுக்கிரீவன் பாண்டியநாடு, வடுகர் நாடு, தெலுங்குதேசம், தொண்டைமண்டலம், சோழநாடு, தென்கடற்கரைப் பகுதிவரையில் ஓடி அதன்பிறகு தென்கடல் இருந்ததால், மீண்டும் வடக்குதிசைப் பக்கமாகத் திரும்பி வந்து வாலியின் சாபம் ஞாபகத்திற்கு வரவே ருஷ்யமுக பர்வதத்தின் மால்யமலைப் பகுதிக்குள் ஓடி ஒளிந்துகொண்டான்.

ஆகவே தான் அங்கு ஒளிந்து வாழ்க்கை நடத்துவதாகக் கூறி அழுது தன்னைக்காக்குமாறு ஸ்ரீராமரிடம் வேண்டினான் சுக்கிரீவன். இங்கே வாலியினுடைய மற்ற பராக்ரமங்களையும் எடுத்துரைக்கலாம். காலையில் எழுந்து நான்கு எல்லைகளின் கடற்பரப்பில் நீர்மூழ்கி, காயத்திரி மந்திரம் உச்சரித்து, சிவபூஜை செய்த பக்தன் வாலி என்றும்,

தன் மைத்துனன்மார்களை மயனின் புத்திரர்களை (துந்துபி மற்றும் மாயாவி) அழித்தவாலியைக்கொல்லநினைத்த இராவணன் ஒருமுறை வாலியை மறைந்து கவர்ந்து செல்ல நினைத்தான். அதையறிந்து வாலி தன்னுடைய வாலினால் அந்த இராவணனை இறுகக்கட்டிக்கொண்டு, தான் செய்துமுடிக்கவேண்டிய சந்தியாவந்தனத்தை நான்கு திசைகளுக்கும் சென்று முடித்துக்கொண்டபின்னர் அவனைத் தன்வாலிலிருந்தும் உதறித்தள்ளி விடுவித்தானாம். அவ்வாலியின் வலிமையால், தரையில் தலைகுப்புற விழுந்து, அரண்டு மிரண்டுபோன இராவணன் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். அவனோடு நட்புரிமை கொண்டான். எனவே இருவரும் நண்பர்கள் ஆயினர்.

அத்தகைய ஆற்றல் பெற்ற அவ்வாலியை நண்பனாக்கிக்கொண்டு அவன் மூலமாக எளிதில் சீதாதேவியை



மீட்டுக்கொள்ளலாம் என்று எண்ணி அவனிடம் சென்று சேர்ந்து கொண்டால் என்னசெய்வது என்று பயந்து, சந்தேகம் கொண்டதாலேதான் இராமனின் வாக்குறுதி சபதத்தை ஏற்றுக்கொண்டபிறகே சுக்கிரீவன் வாலியின் பலத்தையும் வரத்தையும் ஸ்ரீராமனுக்குத் தெரிவித்தான் என்கின்றனர் சிலர்.

மேலும் வாலியை எதிர்த்துப்போரிட்டால் பாதிபலம் வாலிக்குச்சென்றுவிடும் போன்றவற்றையும் இராம சுக்கிரீவர்களின் உடன்படிக்கைக்குப்பிறகே தெரிவித்தனர் என்பதால் அனுமனின்சிந்தனை ஆற்றலை அறியமுடிகின்றது. மேலும் இராமனின் பலத்தை அறிய நினைத்தபோது துந்துபியின் எலும்புக்கூட்டை கால்விரலால் தூக்கி எறிந்தபோது, நிணம், இரத்தம், கொழுப்பு ஏதும் இல்லாமல் உலரந்துபோன புல்லைப்போல பளு அதிகமில்லாத துந்துபியின் எலும்புக்கூட்டை ஸ்ரீராமன் தன் வலதுகால் கட்டை விரலால் தூக்கி எறிந்தது கண்டு அவர்களுக்கு இராமனின் ஆற்றல்மீது நம்பிக்கை உண்டாகவில்லை. எனவேதான் மரா மரத்தைத் துளைத்துக்காட்டினார் ஸ்ரீராமர்.! மராமரம் என்றால் மாமரத்தைக்குறிப்பது ஆகும். ஆனால் இராமன் துளைத்துக்காட்டிய மரங்களை ஆச்சாமரம் என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார் வால்மீகி முனிவர்.

### வதைக்கப்பட்டான் வாலி அரசனானான் சுக்கிரீவன்!

எனவே இராமனின் வில்லாற்றலைக்கண்டு வியந்து பாராட்டிநின்றனர் அனைவரும். மேலும் சுக்கிரீவன் ஸ்ரீராமனைப்பார்த்து “பிரபு உங்கள் வில்லாற்றலால் யாரும் உம்மைப்போரில் வெற்றி காணமுடியாது என்பதை அறிந்துகொண்டேன். எனவே தாங்கள் வாலியை வதம்செய்து அடியேனை கிஷ்கிந்தையின் அரசனாக்குமாறு வேண்டுகின்றேன்” என்று கூறி அடிபணிந்து நின்றான். ஸ்ரீராமனும் உடன்பட, அவருடைய ஆலோசனைக்கு ஏற்ப சுக்கிரீவன் மலைக்குகையினின்றும் வெளிப்பட்டு மலைச்சாரல்நகரத்தை நெருங்கிச்சென்று, அதன் பக்கமாக நின்று வாலியைப்போருக்கு வருமாறு அறைகூவல் விடுத்தான்!

**வாலி, சுக்கிரீவன் முதல்நாள்போர் :**

திடீரென்று சுக்ரீவன் தன்னைப்போருக்கு அழைப்பதைக் கேட்டு வியப்படைந்த வாலி தானும் போருக்குத் தயாரானான். ஸ்ரீராமன் திட்டமிட்டபடி போர்நடைபெற்றது. இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். கோபத்தின் உச்சிநிலைக்குச் சென்றிருந்த வாலி, மிகவும் மூர்க்கத்தனமாகப்போரிட்டான். இராமனின் உதவிவரும் என்று காத்திருந்து தன்முழுவலிமையும் பயன்படுத்திப்போரிட்ட சுக்கிரீவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஏனெனில் சுக்கிரீவனைக் காப்பாற்ற ஸ்ரீராமர் அந்த முதல்நாள் போரில் எந்தச்செயலையும் செய்யவில்லையாகையால் வாலியிடம் பலத்த அடிகளைப்பெற்ற சுக்கிரீவன் தப்பித்தால்போதும் என்று ஓடிப்போனான்.! வாலியின் தாக்குதலால் பலத்த காயமுற்ற அவன் மிகவும் சோர்வடைந்து, வீணாக இராமன் தன்னை இந்த இழிநிலைக்கு ஆளாக்கிவிட்டாரே என்று அழுது புலம்பினான்.

**இரண்டாம் நாள்போரில் வதைக்கப்பட்டான் வாலி !**

தனக்கு ஏற்பட்ட நிலையைச் சொல்லி அழுதபோது சுக்கிரீவனைத்தேற்றிய ஸ்ரீராமர், அண்ணன் தம்பியர் இருவரும் ஒரேமாதிரியான தோற்றம் பெற்று இருந்ததால், சுக்கிரீவனாகிய உனக்கு எந்த உதவியும் செய்யமுடியாமல் போயிற்று. அதனால் உன்னைக் காக்கமுடியவில்லை! வாலியை வதைக்கவும் இல்லை என்று சமாதானப்படுத்தினான் ஸ்ரீராமன். எனவேதான் அடுத்தநாள் காலையில் மீண்டும் போருக்குச் சுக்கிரீவனை அனுப்பி வைத்தான் இராமன். இரண்டாம்நாள் போருக்குச் சென்றபோது, சுக்கிரீவனுக்கு கஜபுஷ்பி என்னும் மாலையை மார்பில் அணிவித்து அனுப்பிவைத்தனர். இராமனின் திட்டப்படி, போருக்கு வருமாறு மீண்டும் சுக்கிரீவன் ஆர்ப்பரித்தபோது வாலியும் போருக்குத் தயாரானான்.

அப்போது தாரை என்ற வாலியின் மனைவி அவனைத் தடுத்து நிறுத்தி “யாரோ இராமன் என்னும் பெயருடைய ஒருவன் சுக்கிரீவனிடம் நட்பு கொண்டு உதவி செய்வதாக வாக்களித்துள்ளானாம். எனவேதான் சுக்கிரீவன் போருக்கு அழைக்கின்றான். இச்செய்தியைத் தமது மகனான அங்கதன் ஒற்றர் மூலம் அறிந்து கூறினான் என்றும் எடுத்துரைத்து, போரைத்தவிர்த்துக்கொள்ளுமாறு மன்றாடினாள். மேலும் சுக்கிரீவனிடம் சாந்தமாக உரையாடி, அவன் உமது தம்பியாதலால் வேண்டியவற்றைக்கொடுத்து விடுங்கள்” என்றும் வேண்டினாள். முதல்நாள் மாலைநேரத்தில் ஓடிப்போனவன், அடுத்தநாள் காலையிலேயே மீண்டும் போருக்கு அழைப்பதால் இதில் ஏதேனும் சூழ்ச்சியும் இருக்கும் என்றும் தடுத்தாள்.



**இராமனின் நல்லியல்பை நான் அறிவேன் என்றான் வாலி :**

ஆனால் வாலி ஏற்கனவே ஸ்ரீராமனின் நல்லியல்புகளையும் பண்பினையும் அறிந்து வைத்திருந்தான். எனவே ஸ்ரீராமனைப்பற்றித் தனக்கும் நன்றாகத்தெரியும் என்றும் தந்தை சொல்லைக்காப்பாற்ற வனம் புகுந்தவன் அந்த இராமன் என்றும், பரதன் என்னும் தனது தம்பிக்காக தனக்கு உரிமையுள்ள அரசாட்சியையே வேண்டாம் என்று ஒதுக்கி வந்தவன் என்றும் கூறி, தந்தைசொல்லையே மந்திரமாகக்கொண்ட மாண்புடையவன் அந்த இராமன் என்று போற்றிப்புகழ்ந்தான்! அத்தகைய நற்பண்பாளன் ஆகிய அவன், அண்ணன் தம்பியராகிய எங்களுக்குள் நடைபெறும் சண்டையில் தலையிட மாட்டான் என்றும் கூறிவிட்டு நம்பிக்கையுடன் போருக்குப்போனான் வாலி என்னும் அவ்வானரப்போர்ஏறு!

வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. வாலி மிகுந்த ஆற்றல் பெற்றவன். ஆகையினால் சுக்கிரீவனை நையப்புடைத்தான். வலிதாங்காத சுக்ரீவன் ஸ்ரீராமர் எவ்விதமாகவும் தனக்கு உதவ வில்லையே என்று மனம் கலங்கி யுத்தத்தை இடையே நிறுத்திவிடலாமா என்றும் மனம் கலங்கினான்.

ஆனால் நிச்சயம் இம்முறை ஸ்ரீராமர் உதவுவார் என்று நம்பி மீண்டும் தன்பலத்தால் வாலியை எதிர்த்துப்போர்புரிந்தான் சுக்கிரீவன். அவர்கள் இருவரும் போரிட்டதைப் பலபாடல்களில் கம்பர் வருணிக்கின்றார். எனினும் இங்கு ஒரேயொரு பாடலையும் அதன்பொருளையும் காண்போம்.

வாலியும் சுக்கிரீவனும் போரிட்டபோது, இரண்டு கடல்கள் ஒன்றோடு ஒன்று மோதி கலப்பதுபோன்றும், இரண்டு மேருமலைகள் தமக்குள் மோதிக் கொள்வதுபோலவும், கோபம் என்ற ஓர்க்குணமானது இரண்டு வானரங்களாக உருவம் எடுத்துக்கொண்டு ஒன்றை ஒன்று எதிர்த்துப் போரிடுவதைப்போன்றும் இருந்தது என்பதைப் பின்வரும் பாடலால் உணர்த்துகின்றார் கம்பர்.

**"கடல் ஒன்றினோடு ஒன்று மலைக்கவும் காவல் மேருத்**
**திடல் ஒன்றினோடு ஒன்று அமர்பெய்யவும் சீற்றம் என்பது**
**உடல்கொண்டு இரண்டு ஆகி உடற்றவும் கண்டிலாதேம்**
**மிடல் இங்கு இவர் வெந்தொழிற்கு ஒப்புரை வேறு காணோம்."**
**(275)**

இவ்வாறு போர் நடந்துகொண்டிருந்தபோது வாலியின் மார்பைக்குறிவைத்து இராமன் தொடுத்த அம்பின் ஆற்றலைக் கீழ்க்கண்டபாடலும்,

**கார் உண் வார் சுவைக்கதிலியின் கனியினைக்கழியச்**
**சேரும் ஊசியின் சென்றது நின்றது எனச் செப்ப**
**நீரும் நீர்தரு நெருப்பும் வன் காற்றும் கீழ்நிவந்த**
**பாரும் சார் வலி படைத்தவன் உரத்தை அப்பகழி (292)**

தன் மார்பில் தைத்த அம்பானது இராமனுக்குரியது என்று கண்டான் என்கின்றபோது, ஸ்ரீராம் என்று பொறிக்கப்பட்டிருந்த அந்த மந்திரப்பெயரானது எத்தகையது என்பதனை இப்பாடலாலும் அறிவிக்கின்றார் கம்பர்.

**"மும்மைசால் உலகுக்கு எல்லாம் மூலமந்திரத்தை முற்றும்**
**தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத்தானே**



**இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்**
**செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக்கண்டான்."**
**(305).**

அதாவது ராம என்னும் அந்த இரண்டெழுத்தானது, மூன்று லோகங்களிலும் வாழ்கின்ற மக்களின் துன்பத்தைப் போக்குகின்ற அருமருந்தாகும்.! என்றும், அம்மந்திரத்தைப் பக்தியுடன் துதிப்பவர்களுக்குத் தானாக முன்வந்து அனைத்துவலங்களையும் அது தரவல்லது என்றும், அம்மந்திரத்தைப் பக்திச் சிரத்தையுடன் பூஜிக்கும் மனிதர்களுக்கு அவர்களுடைய ஏழு பிறவிகளுக்கும் உறுதுணையாய் அமைந்து அனைத்துப் பாவங்களிலிருந்தும், தீமைகளில் இருந்தும் அவர்களைக் காக்கக்கூடியது என்றும், அந்த ஸ்ரீராம மந்திரத்தின் மகிமையைக் கம்பர் பாடுகின்றார்.

எனினும் மறைந்திருந்து தன்னைக்கொன்ற இராமனைப்பழித்து வாலி கூறிய செய்திகள் பற்பல. அவற்றுல் ஒருசில மட்டும் பின்வரும் பாடல்களால் விளக்கிக்கூறலாம்.

**"கோ இயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர் கட்கு எல்லாம்**
**ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய் உடைமை அன்றோ?**
**ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த**
**தேவியைப் பிரிந்த பின்னர் திகைத்தனை போலும் செய்கை"**
**(312).**

**"கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை**
**பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து**
**நாட்டு ஓர் கருமம் செய்தாய் எம்பிக்கு இவ்வரசை நல்கி**
**காட்டு ஒரு கருமம் செய்தாய்கருமம்தான் இதன்மேல் உண்டோ?" (315)**

**"இருவர் போர்எதிருங்காலை இருவரும் நல் உற்றாரே**
**ஒருவர்மேல் கருணை தூண்டி ஒருவர்மேல் ஒளித்து நின்று**
**வரிசிலை குழைய வாங்கி வாய் அம்பு மருமத்துஎய்தல்**
**தருமமோ பிறிதொன்று ஆமோ தக்கிலது என்னும் பக்கம்." (317)**

இப்பாடல்களின் மூலம், ஹே ராமா! அரசநீதி என்பதும் அதிலிருந்து உங்கள் சூரியகுலம் வழுவாதது என்பதையும் நான்

அறிவேன். நீயும் அத்தகையவன்தான். ஆனால் உன்னுடைய இன்னுயிர்போன்றவளும், ஜனகனின் மகளுமான ஜானகியைப்பிரிந்த பிறகு உன்னுடைய அந்தத் தர்மம் உன்னைவிட்டு அகன்று விட்டதால், இன்னது செய்கின்றோம் என்று அறியாமலே நீ திகைப்படைந்து என்மேல் அம்பு விட்டு என்னை வதைத்தாய் என்றும்,

இரண்டுபேர் போர் புரிந்தால் இருவரையும் சமநோக்கோடு பார்க்கவேண்டு என்பது போர் நியதி ஆகும். ஆனால் உன்நாட்டுமக்களிடம் நல்லவனாக நடந்து கொண்ட நீ இவ்வானரர் பிரதேசத்திற்கு வந்து உன் கொள்கையை மறந்து செயல்படுவது நியாயம் ஆகாது என்றும், நீ செய்தது அதர்மமான காரியம் என்றும் இகழ்ந்துரைத்தான் வாலி !

ஆனால் ஸ்ரீராமர் காரண காரியங்களோடு தான் செய்தது சரியான செயலே என்றும், தான் தம்பியாக ஏற்றுக்கொண்ட சுக்கிரீவனின் வாக்குமூலத்தைத் கூட கேட்கவிரும்பாமல், அவனை அடித்து விரட்டியது வாலியின் தவறான செயல் என்றும், ஆணவத்தின் வெளிப்பாடு என்றும் சுட்டிக்காட்டினார் ஸ்ரீராமன். மேலும் இவை அனைத்திற்கும் மேலாக, அவன் மனைவியைக்கவர்ந்து கொண்டது பெரும் பாவகரமான செயல் என்றும் எடுத்துரைத்தார்.! ஆனால் இதை ஏற்றுக்கொள்ளாத வாலி, மாற்றான் மனைவியோடு இன்பம் துய்த்தல் போன்ற செயல்கள் வானரங்களுக்கு இயற்கையான ஒன்றுதான் என்றும், அதனாலேயேதான் உருமியைக்கவர்ந்து கொண்டதாகவும் விளக்கம் கூறினான் வாலி!

இந்தச் சூழலை மேலும் இனிதாக்க, இங்கு கம்பரின் ஒருசில பாடல்களை, அக்கம்பனின் கவிநயத்தை விளக்கலாம். ஒரு சில பாடல்கள் வருமாறு.

நேற்றுவரையில் அனாதையாகக்கிடந்த உன்தம்பியை, நேற்றைக்கே யான் எனது தம்பியாக ஏற்றுக்கொண்டேன். எனவே என் தம்பியாகி, என் உயிரெனக் கருதக்கூடியவனை நீ அழிக்க நினைத்தாய்! எனவே யான் அவனுக்கு அபயம் அளித்துவிட்டதால், அவனைக்காக்கவேண்டியது எனது கடமை



ஆயிற்று. எனவேதான் உன்னை வதைத்தேன் என்றான் என்பதைப் பின்வரும்பாடலால் அறியலாம்.

**ஆதலானும் அவன் எனக்கு ஆர்உயிர்க்**
**காதலான் எனலானும் நிற் கட்டனென்**
**ஏதிலாரும் எளியவன் என்றால் அவர்**
**தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்து அரோ! (336)**

மேலும் விலங்கினங்களாகிய தங்களுக்கு ஆணும் பெண்ணும் ஒன்றுசேர்வதில் எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லை என்ற வாலிக்கு இராமன் கூறிய மறுப்புகள் பல. அவற்றுள் ஒன்று!

**பொறியின் யாக்கையதோ புலன்நோக்கிய**
**அறிவின் மேலது அன்றோ அறத்தாறுதான்**
**நெறியும் நீர்மையும் நேரிது உணர்ந்த நீ**
**பெறுதியோ பிழை உற்றுறு பெற்றிதான். (342).**

அதுமட்டுமல்லாமல் ஜடாயு பறவைதானே? பெண்ணைக் காக்கவேண்டும் என்று (சீதாதேவியை) உயிர்த்தியாகம் செய்தாரே என்பதைப் பின்வரும் பாடலும்.

**சிந்தை நல் அறத்தின் வழிச்சேரலால்**
**பைந்தொடித் திருவின் பரிவு ஆற்றுவான்**
**வெந்தொழில் துறை வீடுபெற்று எய்திய**
**எந்தையும் எருவுக்கு அரசன் அல்லனோ (344)**

(இப்பாடலில் ஜடாயுவை பெரிய தந்தை என்று இராமன் குறிப்பிடுவதைக் காண்க)

ஒருவன் செய்யும் செயலால் தான் உயர்வும் தாழ்வும் அவனுக்கு உண்டாகும் என்னும் கருத்தைக்கூறி, நீயோ மேன்மையற்ற செயல்களைச் செய்ததாலேதான் உன்னை வதைத்தேன் என்று ஸ்ரீராமர் மறுமொழிகூறினார்!

**இனையது ஆதலின் எக்குலத்து யாவர்க்கும்**
**வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்**

**அனைய தன்மை அறிந்தும் அழித்தனை**
**மனையின் மாட்சி என்றான் மனுநீதியான். (349)**

ஸ்ரீராமரின் இந்தக் கூற்றுக்களால் தன் தவற்றை உணர்ந்தான் வாலி. மேலும் தன்னை வதைத்த இந்த ஸ்ரீராமனைக் கண்டு, பெருமானே நீவிர் புகழ்பெற்ற மூன்று கடவுளர்களுமாவீர். அம்மூவருள்ளும் முதல்வனாகிய காக்கும் கடவுளான ஸ்ரீமந்நாராயணனும் நீயே! அத்தகைய உன்னால் யான் இறக்கநேரிட்டது எனது பெரும் பேறேயாகும் என்று கூறி, தான் இந்திரன்கொடுத்த ஆரத்தை மார்பிலே அணிந்துகொண்டிருக்கும் வரையில் தனது இன்னுயிர் பிரியாது என்று கூறி, சுக்கிரீவனை அழைத்து, அவனுக்கு அம்மாலையைக்கொடுத்து, பல அறிவுரைகளையும் கூறி தனது இன்னுயிர் நீக்கினான் வாலி! இறுதியில் ஸ்ரீராமனின் அம்பால் தான் இறக்கநேரிட்டது தன்னுடைய நல்வினைப்பயனே என்று கூறினான் வாலி என்பதால், அவன் ஸ்ரீராமாவதாரத்தை முழுதுமாக அறிந்துகொண்ட ஒருவனாகவே உயிர்துறந்தான் என்பதும் புலனாகின்றது.

**தாரையின் புலம்பல் மொழிகள் !**

மேலும் வாலியின் மகன் அங்கதன் அங்கு வந்தபோது ஸ்ரீராமனையே தன் தலைவனாக ஏற்றுக்கொண்டு செயல்படுமாறும், சிற்றப்பனுக்கு உறுதுணையாக விளங்குமாறும் அறிவுரை கூறி உயிர் விட்டான். மோட்சலோகம் அடைந்தான்.

ஆனால், இராமனோடு போரிட வந்தபோதே சூழநிலையை அறிந்து தன்கணவனான வாலியைப் போருக்குச் செல்லவேண்டாம் என்று தடுத்தவள் அவனது மனைவியாகிய தாரை. போரின் நிலைமை அறிந்துகொள்ள காத்திருந்த அவளுக்கு, வாலி போரில் மாண்டுபோனான் என்ற செய்தி பெரும் அதிர்ச்சியை அளித்தது. வாலியின் வலிமையை நன்கறிந்தவளான அவள்," மேருமலையையே உன்னுடைய மார்பில் மோதி பொடிப்பொடியாகும் வலிமை உடையதான உனது மார்பு, சாதாரணமான ஓர் அம்பினால் பிளவு பட, நீ இறந்துபோனாய் என்பதை என் மனம் ஏற்க மறுக்கின்றது.



உண்மையிலேயே நீதான் இறந்து விட்டாயா? அன்றி நீ இறந்துவிட்டாய் என்று கூறி தேவர்கள் ஏதேனும் சூழ்ச்சி செய்தார்களா? நீயும் நானும் ஒருவர் உள்ளத்தில் மற்றொருவர் மாறி மாறி வாழ்கின்றோம் என்று சொல்லியிருந்தாயே அது பொய்யா! இல்லை அதுதான் உண்மை என்றால் உன்னுடைய உள்ளத்திலே இருந்த நான்தானே உயிர்விட்டிருக்க வேண்டும். நீ இறந்தாய் என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? என்றெல்லாம் அழுத புலம்பியதோடு,

அனைவருக்குமே நன்மைகளைச் செய்பவராகிய ஸ்ரீராமன் நம் குடும்பத்திற்கு மட்டும் இப்படிப்பட்ட அநியாயத்தைச் செய்தாரே.! ஒருவருடைய பண்பினை அவருடைய செயலை வைத்து வரையறுக்கலாம் என்று சொல்வார்கள். "ஆனால் கருமம் கட்டளையாதல் கட்டதோ? மைந்தனே அங்கதா இதை எப்படி நீ தாங்கிக்கொள்வாய்" என்று பலவாறாக அழுது புலம்பியதைக்கண்ட சுக்கிரீவனும், அனுமனும் வருத்தம் அடைந்து நின்றார்கள் என்ற செய்திகளைப் பின்வரும் பாடல்களை ஒலிநயத்துடன் பாடியும் பார்க்கலாம்.!

**"செருவார் தோள நின் சிந்தையான் எனில்**
**மருவார் வெஞ்சரம் எனையும் வௌவுமால்**
**ஒருவேனுள் உளை ஆகின் உய்தியால்**
**இருவேம்உள் இருவேம் இருந்திலேம்." (396)**

வானவர் எதிர்கொண்டனரோ எனல்

**"எந்தாய் நீ அமிழ்து ஈய யாம் எலாம்**
**உய்ந்தேம் என்று உபகாரம் உன்னுவார்**
**நந்தா நாள்மலர் சிந்தி நண்பொடும்**
**வந்தாரோ எதிர் வானுலோர் எலாம்." (397).**

**"நீறு ஆம் மேருவும் நீ நெருக்கினால்**
**மாறு ஓர்வாளி நின் மார்பை ஈர்வதோ**

**தேறேன் யானிது தேவர் மாயமோ**
**வேறு ஓர் வாலிகொலாம் விளிந்துளான்." (400)**

**"அருமைந்து அற்றம் அகற்றும் வில்லியார்**
**ஒருமைந்தர்க்கும் அடாதது உன்னினார்**
**தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம்**
**கருமம் கட்டளை என்றல்கட்டதோ." (402)**

என்னும் இப்பாடல்களில் மேற்கண்ட கருத்துகள் விளக்கம் பெற்றுள்ளதோடு, கம்பனின் கவிதைச்சிறப்பை அறிந்து மகிழத்தக்கது.

அடுத்ததாக, வாலிக்கு செய்யப்படவேண்டிய ஈமக்கடன்களை அங்கதனைக் கொண்டு செய்வித்தார். பிறகு சுக்கிரீவனுக்கு கிஷ்கிந்தையின் அரசனாக முடிசூட்டுமாறும் அங்கதனை இளவரசனாக அறிவிக்குமாறும் இலட்சுமணனைக் கொண்டு ஏற்பாடுகள் செய்தார் ஸ்ரீராமர். ஏனென்றால், முடிசூட்டுதல், நகரப்பகுதிகளுக்குச் செல்லுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டால், தன் பெற்றோருக்குக் கொடுத்த வாக்குறுதியை, அதாவது "தாழிரும் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம்மேற்கொண்டு, பூமிவெங்கானம் நண்ணிப் புண்ணியப் புனல்கள் ஆடுதல்'' என்னும் வாக்குறுதிக்கு மாறுபட்டதாக அமைந்துவிடும். ஆகையால்தான் இளவலைக்கொண்டு சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார் ஸ்ரீராமர் என்பது அவருடைய சொன்னசொல் தவறாத பேரறத்தைக் காட்டுவதை அறியலாம்.

அரசனாக முடிபுனைந்து கொண்ட சுக்கிரீவன் ஸ்ரீராமனின் இருப்பிடம் அடைந்து பணிந்துநின்றான். அப்போது சுக்கிரீவனுக்கு ஸ்ரீராமர் கூறும் அரசியல் தர்மங்கள் அரசியற்படலம் என்பதில் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. யுகங்கள் மாறிய போதும் இக்கால அரசியலுக்கு ஏற்ப சிறந்த அரசாட்சி செய்ய விரும்புவோர்க்குரிய குணாதிசயங்களாக கவிஞர்கள் பாடியிருப்பது அவர்களுடைய ஆழ்ந்த அரசியல் சிந்தனைகளையும் தொலைதூரப் பார்வையையும்



எடுத்துரைப்பதை அறியலாம். அவற்றுள் ஒரு சிலவற்றைக் காணலாம்.

நல்ல அமைச்சர்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர்களோடு பழகும்போது, அகலாது அணுகாது தீக்காய்வார்போல் என்ற உலகப்பொது மறையின் கருத்தை வலியுறுத்துவதையும் அறியமுடிகின்றது.

**வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும்**
**தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்**
**தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலை ஆகி**
**சேய்மையோடு அணிமை இன்றி தேவரின் தெரிய நிற்றி (415)**

மேலும் யாரையும் சிறியவர்கள் என்றும் அற்பர்கள் என்றும் நினைந்து துன்பம் தராதே என்று கூறி, கூனியாகிய மந்தரைக்குத்தான் விளையாட்டுத்தனமாக செய்த குறும்புச் செயல்களே அவள் தன்மீது பொறாமை கொண்டு தன் முடிசூடலுக்கு எதிர்ப்பாகச் செயல்பட்டதையும் அதனால் அயோத்தி மாநகரம் அடைந்துள்ள அலங்கோலங்களையும் சுட்டிக்காட்டினார். உதாரணமாகக் கூறுகின்றார்.

**"சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யேல் மற்று இந்**
**நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை இழைத்தலால் உணர்ச்சி நீண்டு**
**குறியதாம் மேனி ஆய கூனியால் குவவுத் தோளாய்**
**வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன். (418).**

மேலும் பெண்களால் மரணம் உண்டாகும் என்பதையும் தன்னுடைய வரலாற்றைக்கொண்டே பின்வரும்பாடலால் எடுத்துரைக்கின்றார்..

**மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்**
**சங்கை இன்றுணர்தி வாலி செய்கையால் சாலும் இன்னும்**
**அங்கவர் திறத்தினாலே அல்லலும் அழிவும் ஆதல்**
**எங்களின் காண்டி அன்றே இதற்கு வேறு உவமையுண்டோ?**
**(419)**

அதோடு மட்டுமல்லாமல் ஒரு நாட்டு அரசன் தன் நாட்டு மக்களைத் தாயாக காத்திட வேண்டும் என்றும், தீயவர்களைத்

தண்டிக்கத் தயங்கக் கூடாது என்றும் அறிவுரை கூறிய ஸ்ரீராமரின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டான் சுக்கிரீவன். தனக்கு இத்தகைய நற்பேற்றை அளித்த அவரிடம் தனது நாட்டிற்கு வந்து தங்கியிருக்குமாறு ஸ்ரீராமலட்சுமணனர்களை வேண்டினான். அதற்கு ஸ்ரீராமன் தனக்கு விதிக்கப் பட்ட வனவாச நிபந்தனையை நினைவு படுத்தி, யாழ்போலும் இனிமையான மொழி பேசுபவளாகிய தன்னுடைய மனைவியான சீதை இல்லாத இடத்தில் வந்து தங்குவதால் தனக்கு எந்தவிதமான இன்பமும் உண்டாகப்போவது இல்லை என்று ஸ்ரீராமன் மறுப்பு உரைத்தான். இது அவனுடைய ஏகதார விரதத்தையும், மாசற்ற மாண்புகளையும் எடுத்துரைப்பதை எளிதாக அறியலாம்.

**“ஏழ் இரண்டு ஆண்டு யான்போந்து எரி வனத்து இருக்க ஏன்றேன்**
**வாழியாய் அரசர்வைகும் வளநகர் வைகல்ஒல்லேன்**
**பாழியம் தடந்தோள் வீர பார்த்திலைபோலும் அன்றே**
**யாழ் இசை மொழியோடு அன்றியான் உறும் இன்பம் என்னோ” (427)**

என்னும் பாடல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் கம்பநாட்டாழ்வார்.

கிஷ்கிந்தைக்கு இராமன்செல்வதால் எத்தகைய பயனோ இன்பமோ தனக்குக்கிடைக்காது என்பதோடு, சீதையைப்பிரிந்திருந்தகாலத்தும் இராமன் தனது நண்பனோடு நகரவாழ்க்கையை மேற்கொண்டான் என்ற பழிச்சொல்லே தனக்கு ஏற்படும் என்பதைப் பின்வரும் பாடலாலும்,

**“தேவி வேறு அரக்கன் வைத்த சேமத்துள் இருப்ப தான்தன்**
**ஆழிபோல் துணைவரோடும் அளவிடற்கரியஇன்பம்**
**மேவினான் இராமன் என்றால் ஐயஇவ் வெய்யமாற்றம்**
**மூவகை உலகம் முற்றும் காலத்தும் முற்றவற்றோ?**

அறியப்படுகின்றது.

**மாரிக்காலம் முடிந்தவுடன் சீதையைத்தேட வருக :**

எனவே ஆதரவற்ற நிலையில், அனாதையாய் மால்யமலைப்பகுதியில் மறைந்து வாழ்ந்திருந்த வானரவீரனான



சுக்கிரீவன், ஸ்ரீராமனாகிய பெருமானை அடைக்கலம் அடைந்ததால், அவரைச்சரணாகதி அடைந்ததால் கிஷ்கிந்தையின் அரசனாக முடிசூட்டிக்கொண்டான்! அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் முடிவடைந்த நிலையில், மாரிக்காலமாகிய மழைக்காலமும் தொடங்கிவிட்டது. அம்மழைக்காலத்தில் வானரங்கள் வெளியில் இயங்குவது கடினமான காரியம் ஆகும். ஆகையால் மழைக்காலம் வந்துவிட்டதாலும், அது நான்கு மாதங்களுக்குத்தொடரும் ஆகையாலும், அந்த நான்குமாத இடைவெளி கழிந்தவுடன் சுக்கிரீவனும், அவனுடைய படைகளும் சீதாதேவியைத்தேடிக் கண்டு பிடித்துத் தருவதற்காகத் தன்னிடம் வந்துசேரவேண்டும் என்றும், சீதையைத்தேடும் பணிக்கு உதவவேண்டும் என்றும் கட்டளையிட்டு அனுப்பிவைத்தார் ஸ்ரீராமர். சுக்கிரீவனும் அக்கட்டளையை ஏற்றுக்கொண்டு, தன் அமைச்சனான அனுமனோடும், மற்றவர்களோடும் தன்னுடைய அரண்மனைக்குச் சென்றான்.

**மாரிக்காலம் முடிந்தும் மயக்கம் தீராத சுக்கிரீவன் :**

ஸ்ரீராமன் அளித்த அந்த சொகுசான அரச வாழ்வில் ஊறித் திளைத்துப்போனான் அந்த வானர சுக்கிரீவன். அவன் அவ்வாறு இன்பக்கடலில் மிதந்திருந்த அந்தக் காலங்களில், அந்நான்கு மாத காலமும் அம்மலைக்குகையின் கரடு முரடான கற்பாறையின் மீது உண்டும் உறங்கியும், இருவரும் நாட்களைக் கடந்தினர். கார்காலமாகிய அம்மழைக்காலத்தில் காணப்பட்ட இயற்கைப் பொருள்கள் அதாவது கார்மேகம், குவளைமலர்போன்றவை முறையே சீதாவின் கருங்கூந்தலையும், மயிலாடுவது சீதையின் நடையழகையும், குயில்கூவுவது அவளுடைய குயில்போன்ற மொழியினையும் நினைவு கூரச்செய்தன. மேலும் பற்பலவாக நடைபெற்ற நிகழ்வுகளும் ஸ்ரீராமருக்கு சீதையின் நினைவுகளையே தந்தது. எனவே விரகதாபத்தில் தவித்த ஸ்ரீராமனுக்கு ஆறுதல் கூற, இலக்குவனின் ஆறுதல் மொழிகளால் ஸ்ரீராமரை ஓரளவு தேற்ற முடிந்தது.

**களிப்பின் மிகுதியால் கடமை மறந்தான் சுக்கிரீவன் :**

கார்காலமும் முடிவு பெற்றது. கிழக்குத்திசையிலும் மேகக்கூட்டங்கள் ஏதும் தென்படவில்லை. எனினும் தன்னைத்தேடிவரவேண்டிய சுக்கிரீவன் வரவில்லை. ஸ்ரீராமர் இலக்குவனை கிஷ்கிந்தைக்கு அனுப்பி சூழ்நிலைகளைக்கண்டு சுக்கிரீவனுக்கு எச்சரிக்கை செய்து வருமாறு அனுப்பிவைத்தார்.

கார்காலம் முடிந்தும் சீதாவைத்தேடும் பணிக்குச் சுக்கிரீவன் வராததால் கோபம் கொண்ட இராமன் கூறுதல்.

**ஊரும் ஆளும் அரசும் உம் சுற்றமும்**
**நீரும் ஆளுதிரே எனின் நேர்ந்தநாள்**
**வாரும்வாரலீர்ஆம் எனின் வானரப்**
**பேரும் மாளும் எனும் பொருள் பேசுவாய். (566)**

என்பதால் வானரர்கள் (குரங்கினங்கள்) பெயரே மறைந்து போகும் அளவிற்கு அனைத்து வானரங்களையும் சுக்கிரீவனோடு அழித்துவிடுவேன் என்று சுக்கிரீவனிடமும் அங்கதனிடமும் கூறிவருவாயாக என்று தம்பியை அனுப்பிவைத்தார் ஸ்ரீராமர்.

அரசனாகிய சுக்கிரீவன் கள் மயக்கத்திலும் பெண்மயக்கத்திலும் இருந்து கரையேறாமல் வீழ்ந்து கிடப்பதைப்பார்த்து அமைச்சனாகிய அனுமன் பெரும் வருத்தம் அடைந்தான். அவன் எதிர்பார்த்ததைப்போலவே இலக்குவன் சீற்றத்தோடு வந்து, தன்னுடைய வில்லில் எழுப்பிய பேரொலியின் எச்சரிக்கையால் அனைவரும் ஓரளவிற்கு இயல்பு நிலையை அடைந்தனர் எனினும். தன் தவற்றை உணர்ந்த சுக்ரீவன், இலக்குவன்முன்பு செல்ல பயந்து, பெண்களுக்கு மரியாதை தரும் இலக்குவனின் நல்லியல்பு ஞாபகத்திற்கு வரவே, முதலில் தாரையை அனுப்பி இலக்குவன் சீற்றத்தைத் தணிக்கச்செய்தான். பிறகு அனுமனும், அங்கதனும் இலக்குவனுக்குச் சமாதானம் உறைத்தனர். சுக்கிரீவனும் உடனே பெரும்படைகளைத் திரட்டிக்கொண்டு அவற்றை ஸ்ரீராமர் கண் முன்னே நிறுத்துவதாக வாக்களித்தான். பலவகை



முயற்சிகளை எடுத்தான். பெரும் வானரப்படையைத் திரட்டிக்கொண்டு சென்று ஸ்ரீராமர் முன் நிறுத்தினான். தன்னை மன்னிக்குமாறும் வேண்டினான்.

வானரப் படைகளின் எண்ணிக்கையாகக் கம்பர் கூறுவது.

**ஆறு பத்து எழுகோடியாம் வானரர்க் கதிபர்**
**கூறு திக்கினுக்கு அப்புறம் குப்புறற்கு உரியார்**
**மாறு இல் கொற்றவன் நினைத்தன முடிக்குறும் வலியர்**
**ஊறும் இப்பெருஞ்சேனை கொண்டு எளிதின் வந்துற்றார். (723).**

கோபம் கொண்ட இராமன். இலக்குவன் மனம் மகிழுமாறு தான் விரைவில் வருவதை எடுத்துரைத்த சுக்ரீவன் ஸ்ரீராமன் மனமும் மகிழுமாறு அறுபத்தேழுகோடி அக்குரோனிப் படைகளோடு வானரப்படைகளைத் திரட்டிச்சென்று அணி வகுத்து நிறுத்தினான்! என்பதை இப்பாடல் புலப்படுத்துகின்றது.

**நான்கு திசைகளையும் நாடிச்சென்ற வானரங்கள், தேவியாம் சீதாவைத் தேடியே சென்றனர்.!**

காலம் கடத்திவிட்டான் என்றாலும் சுக்கிரீவன் பதினைந்து காத தூரத்திற்குக் கடல்போல் பரவியிருந்த வானரப்படைகளை ஸ்ரீராமன்முன் நிறுத்தினான். அதைப்பார்த்து இதன் எண்ணிக்கையைக் கூற முடியுமா என்று வினவினார் இராமபிரான். அதற்கு இப்படையில் உள்ள வானரப்படைகளின் தலைவர்கள் மட்டும் அறுபத்தேழு கோடிபேர் ஆவார்கள் என்றான் சுக்கிரீவன். மேலும் அப்படையில் உள்ள வீரர்கள் தம் படைத்தலைவனுக்குக் கட்டுப்பட்டு உடனே செயலாற்றும் இயல்பினர் என்றும் கூறினான். இனியும் இவர்களை இங்கே இறுத்திவைப்பதால் என்ன பயன் ? உடனே சீதாதேவியின் இருப்பிடத்தை அறிந்து வர இவர்களைப் பலதிசைகளுக்கும் அனுப்பவேண்டும் என்றார் இலக்குவன். அவ்வாறே பற்பல வீரர்களின் தலைமையின் கீழ், கிழக்கு வடக்கு மேற்கு என்ற மூன்று திசைகளுக்கும் பலபடைகள் அனுப்பப்பட்டனர்.

அனுமன் மீதும் அவன் திறமையின் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர் ஸ்ரீராமர். எனவே

அனுமனோடு அங்கதன் சாம்பவான் நீலன் போன்றோரைத் தெற்கு திசைக்கு அனுப்பிவைத்தார். தென் திசை செல்லும் அனுமனைத்தனியாக அழைத்த இராமபிரான், இந்த அனுமன்தான் சீதையைத்தேடிக்காண்பான். அத்தகைய ஆற்றல் இவனிடமே உள்ளது என்று முடிவுசெய்து, சீதையைச் சந்திக்கும்போது அவன் நீ இராமதூதன் தான் என்பதை நிரூபிப்பதற்கு உதவக்கூடியதான தனக்கும் சீதைக்கும் மட்டும் தெரிந்த சில இரகசியமான அடையாளச்செய்திகளைக் கூறி அனுப்பினார். மேலும் சீதையை எளிதில் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவளுடைய அங்க அடையாளங்களையும் கூறியனுப்பினார். அனைத்திற்கும் மேலாக தான் அணிந்திருந்த கணையாழியைக் (மோதிரம்) கழற்றிக் கொடுத்து தேவைப்படும் பொழுது அதைப்பயன்படுத்துமாறும் கூறி அனுப்பிவைத்தார். சுக்கிரீவனும் தென் திசையில் உள்ள முக்கியமான இடங்களையும், எங்கெங்கெல்லாம் சீதையைத்தேடவேண்டும் என்பதையும், பற்பல நாடுகளுக்குச் செல்ல வேண்டிய வழித்தடங்களையும், குறிப்பாக மகேந்திர மலைக்குச் செல்லவேண்டிய வழிகளைப்பற்றியும் சற்று விரிவாக இவர்களுக்கு எடுத்துச் சொன்னான்.

வானரப்படைகளை நான்கு திசைகளுக்கும் பிரித்தனுப்பிய சுக்ரீவன் தென்திசைக்கு அனுப்பிய அனுமன் உள்ளிட்ட வீரர்களிடம் தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள அகத்தியனின் இருப்பிடத்திற்கும் சென்று, அங்கிருந்தும் மகேந்திரமலையையும் அடையலாம் என்றும் கூறியுள்ளதைப் பின்வரும் பாடலால் அறியலாம்..

**தென்தமிழ் நாட்டு அகன் பொதியின் திருமுனிவன்**
**தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்**
**என்றும் அவன் உறைவிடம் ஆம் ஆதலினால்**
**அம்மலையை இறைஞ்சி ஏகி**
**பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை எனும்**
**திருநதி பின்பு ஒழிய நாகக்**
**கன்று வளர் தடஞ்சாரல் மயேந்திர மா**
**நெடுவரையும் கடலும் காண்பீர்! (768)**



என்று சுக்ரீவன் கூறியுள்ளதாக அமைந்துள்ள இப்பாடலால், அகத்திய முனிவருக்குத் தண்டகாரண்யத்தில் ஓர் ஆசிரமம் இருந்ததைப்போன்றே, பொதிகை மலையிலும் ஓர் ஆசிரமம் இருந்தது என்றும், பொருனை ஆற்றங்கரையில் அமைந்திருந்த இந்த ஆசிரமத்தில் அகத்தியர் தங்கியிருந்து, தண்தமிழை வளர்த்து வந்தார் என்தையும் அறியலாம்.

வாலியால் துரத்தப்பட்ட சுக்கிரீவன் உயிருக்குப் பயந்து ஓடியபோது, இவ்வளவு துல்லியமாக எல்லா இடங்களையும் அறிந்து வைத்திருந்தான். அவர்களும் சீதையைக் கண்டுபிடித்தல் பொருட்டாகப் பலபிரிவுகளாகப் பிரிந்து சென்றனர். அவ்வாறு எல்லாத்திசைகளுக்கும் சென்ற வானரங்கள் அனைவரும் ஒருமாத காலத்திற்குள் தேடிக்கண்டுபிடித்துத் திரும்பிவிடவேண்டும் என்று கட்டளையும் இட்டான் சுக்கிரீவன்.

சற்று காலப் பகுதி கடந்தவுடன், தென்திசைத் தவிர மற்ற திசைகளில் தேடிச்சென்றவர்கள் சீதை எங்கும் காணவில்லை என்று திரும்பி வந்துவிட்டனர். தென் திசைக்குச்சென்ற அனுமன் முதலிய வீரர்களும் விந்திய மலைப்பகுதி, நர்மதா நதிக்கரை, ஏமகூடமலைமுதலிய பகுதிகளில் தேடிப்பார்த்தனர். சீதையைக்கண்டாரில்லை. தென் திசைக்கடலோரம் வரையில் தேடிச்சென்று சீதாதேவி எங்கும் இல்லாததால் மிகவும் துன்பம் அடைந்தனர். மேலும் தேடிச்சென்றபோது அவர்கள் அங்கிருந்த ஒரு பிலத்தினுள்(மலைக்குகையில்) மாட்டிக்கொண்டனர்.

அங்கு சுயம்பிரபை என்ற அழகியைப் பார்த்து அவள்தானோ சீதை என்று ஐயுற்றனர். ஆனால் அவள் சீதை இல்லை எனத்தெளிந்து அரும்பாடு பட்டு அப்பிலத்தினுள் இருந்து விடுபட்டனர். பிறகு அவர்கள் பாண்டுமலைப் பகுதியிலும் பின்னர் கோதாவரி ஆற்றுப்படகையிலும் தேடி குலிந்த தேசத்தையும் அடைந்தனர். வேங்கட மலையைக் கடந்து தொண்டைநாட்டிற்கும் சென்றனர். அதன் பின்னர் சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் கடந்தபிறகு மகேந்திரமலையை அடைந்தனர். (மஹேந்திர பர்வதம்)

**அங்கதன் விரக்தியும் எண்ணமும் :**

தென்திசையில் சானகியைத் தேடிக்கொண்டு வந்த இரண்டுவெள்ளம் சேனைகளும் அங்கதன் கட்டளைக்கு ஏற்றவாறு அந்த மகேந்திரபர்வதத்தில் கூடியிருந்தனர். அதேநேரத்தில் அனுமன் அங்கதன் ஜாம்பவான் உள்ளிட்ட வானரவீரர்களும் வந்து சேர்ந்தனர். அப்போது அங்கதன் அனைவரையும் பார்த்து ஒருமாத காலத்திற்குள் சீதாவைக்கண்டு பிடித்து வரவேண்டும் என்ற சுக்கிரீவன் தந்த காலக் கெடு முடிந்து விட்டது. காலம் கடந்தாலும் சீதாவைத் தேடிக்கண்டுபிடித்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால் தோல்வியோடு சென்று சுக்ரீவன் முன்னே நின்றால் அவன் சினம்கொள்வான். நம்மைக் கொன்று போடவும் தயங்கமாட்டான்! ஸ்ரீராமரும் வருந்துவார். எனவே நான் உயிரைவிட்டுவிடலாம் என்று நினைக்கின்றேன் என்றான். அப்போது ஜாம்பவான் நீ மட்டும் என்ன அனைவருமே உயிர் விடுவோம் என்று கூற அனுமன் அவர்கள் கூறுவதை மறுத்துப் பேசினான்.

**அனுமன் கூறியது :**

“சீதையைத் தேடிக்கண்டுபிடிக்காமல் போனதனால் அங்கதன் கூறியதைப்போல உயிரை விடுவதை விட, இன்னும் எவ்வளவு நாட்கள் ஆனாலும், அந்த இராவணனைத் தேடிச்சென்று அவனோடு போரிட்டு மடிதல் வேண்டுமே ஒழிய நீங்கள் கூறுவது போல் தற்கொலை செய்து கொள்வது தவறானது. நம்மைநாமே மாய்த்துக்கொள்வது என்பது கோழைத்தனம் ஆகும். இதற்கு நான் ஒருபோதும் ஒருப்படேன்! நம்மால் முடிந்த அளவு முயற்சி செய்தே தீரவேண்டும். அதுதான் ஒருவனுக்குப் புகழைக்கொடுக்கும்! என்று கூறி, உதாரணத்திற்கு ஜடாயுவை நாம் எடுத்துக்கொள்ளலாம்.. இராவணனை எதிர்த்து அவனோடு போரிட்டு இராவணனையும் தாக்கி இறுதியில் மடிந்ததுபோல் இராவணனைத் தாக்கிப்போரிடவேண்டும் என்பது என் ஆசை. இதற்கு எத்தனைக்காலம் ஆனாலும் தவறில்லை” என்றான்.



**சம்பாதி கூறிய மந்திர வார்த்தைகள் :**

அப்போது சம்பாதி என்ற வயதான கழுகு அங்கு வந்து ஜடாயு தன் தம்பி என்பதைக் கூறி அவன் இறந்ததற்கான காரணத்தைக் கூறுமாறு கேட்டான். அனுமன் ஸ்ரீராம இலட்சுமணர்களோடு ஜடாயு கொண்டிருந்த நட்பு, இராவணன் செய்த கபடச்செயலால் அவர்கள் சீதாவைப்பிரிந்து, ஆகியனவற்றை எடுத்துரைத்தான். அதை அறிந்து வருந்தினான் சம்பாதி.

தன் தம்பியைக் கொன்றவனாகிய அந்த இராவணன் இருப்பது இலங்கையில் தான் என்றும், தெற்குகடற்கரைப் பகுதியில் இருந்து நூறு யோசனைத்தூரம் பரந்து விரிந்துள்ள இக்கடலின் நடுவே இலங்கை உள்ளது. இராவணன் பறக்கும் சக்தியை உடையவன் ஆகையால் வான்வழியாக அழுதுபுலம்பிக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் கவர்ந்து சென்றதை நானும் கண்டேன். அது சீதாவாகத்தான் இருக்கவேண்டும். இயல்பாகவே கூர்மையான பார்வையை உடையவர்கள் நாங்கள். எனவே நான் கூறுவது தவறுஆகாது என்று சொன்னதோடு, இந்த மகேந்திரமலையின் உச்சியில் ஏறி நின்று கடலைத் தாவிக் கடக்கும் ஆற்றல் பெற்றவர் இருந்தால் நிச்சயம் சீதாவைக் கண்டு பிடிக்கலாம். என்று உபாயமும் கூறினான் சம்பாதி.

**சம்பாதி வரலாறு :**

அப்போது ஜடாயுவைப் பற்றி அனுமன்கேட்க தாம் இருவரும் அண்ணன் தம்பியர்கள் என்பதையும் சூரியனின் தேரோட்டியான அருணனின் மகன்கள் என்றும் கூறினார். ஒரு நாள் இளமைப்பருவத்தில் வானுலகத்தில் இருக்கும் தேவலோகத்தைக்காணவேண்டும் என்று ஆசையில் மேலே மேலே பறந்து சென்றோம். என்னைவிட முன்னே பறந்து சென்ற என்தம்பியின் மீது சூரியனின் கதிர்கள் தாக்கவே அவன்துன்பமுற்று அண்ணா என்னைக்காப்பாற்று என்று வேண்டினான். எனவே நான் வேகமாகப் பறந்து அவனுக்கு மேலே நின்று அவனைத்தாக்கிய வெம்மையை நான்

ஏற்றுக்கொண்டேன். எனவே என் சிறகுகள் தீய்ந்து போயின. ஜடாயு காப்பாற்றப்பட்டான். சிறகுகள் கரிந்து தீய்ந்து போனதால் பறக்கும் ஆற்றலற்ற நான் இங்கே வீழ்ந்தேன். அன்று முதல் உணவும் சரியாகக்கிடைக்காத நிலையில் இங்கே இருக்கின்றேன். என்தம்பி தண்டகாரண்யத்தில் வாழ்ந்து வந்தான் என்ற செய்தியைச் சொல்லி முடித்தான் சம்பாதி. அவன் இறந்ததை உங்கள் மூலமாகத்தான் இப்போது அறிந்தேன் என்றுரைத்து துன்பம் அடைந்து நின்றான் அக்கழுகின் குலவீரன்.

எனவே வானரங்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதனால் அவர்கள் அனைவரும் ஸ்ரீராம மந்திரத்தை ஜபித்தால் தன்னுடைய சிறகுகள் வளரும் என்றும் சம்பாதி வேண்டியதால் அதனைச்சோதனை செய்து பார்க்கலாம் என்ற வானரர்கள் ஸ்ரீராம மந்திரத்தை ஜபித்தனர். அப்போது சம்பாதியின் சிறகுகள் வளர்ந்தன. பொலிவும் இளமையும் திரும்பப்பெற்ற சம்பாதி வானரவீரர்களுக்கு வணக்கத்தையும், வாழ்த்துதல்களையும் தெரிவித்ததோடு, தன் தம்பிக்கு நீர்க்கடன் செய்து முடித்தார். மேலும் இராவணன் நிச்சயமாக தன்னுடைய இலங்கையிலேதான் சீதாவை சிறை வைத்திருப்பான். மிகுதியான கட்டுக்காவலை உடையது அந்த நகரம். எனவே நீங்கள் நான் கூறுவதை உண்மையாகக் கருதி, ஸ்ரீராமரிடம் சென்று கூறுங்கள். அல்லது உங்களில் எவராவது ஒருவர் இந்தக் கடலைத்தாண்டி சீதையைக் கண்டு வாருங்கள். அனைவரும் செல்லமுடியாது என்று தன் கருத்தையும் கூறி ஸ்ரீராம மந்திரத்தை ஜபித்துக்கொண்டு அங்கிருந்தும் பறந்து சென்றார் சம்பாதி.

**மகேந்திரப்படலம். (மயேந்திரப்படலம்) :**

சம்பாதி கூறியவை அனைத்தும் சத்தியம் நிறைந்த வார்த்தைகள். எனவே அவர்கூறிய இரண்டு உபாயங்களுள் ஒன்றைக் கண்டிப்பாகச் செய்யவேண்டும். மேலும் காலம் தாழ்த்தல் ஆகாது என்று பிரம்மாவின் புத்திரராகப் போற்றப்படும் சாம்பவான் (ஜாம்பவான்) எடுத்துரைத்தார். பிறகு



யாரேனும் ஒருவர் கடலைக்கடந்து சென்று சீதாதேவியைக் கண்டு வருதலே நலம் பயக்கும் செயலாகும் என்று முடிவு செய்யப்பட்டது. நீலன் அங்கதன் போன்றவர்கள் தங்கள் இயலாமையை எடுத்துரைத்தனர். சாம்பவான் தன்னாலும் அது சாத்தியப் படாது என்று எடுத்துக் கூறி இதைச்செய்யக்கூடிய திறமை அனுமன் ஒருவனுக்கே உண்டு என்று தன் கருத்தைச் சொன்னார்.

**அனுமனைப்பற்றி சாம்பவான் உரைத்தவை :**

மேலும் அனுமன் தன்னுடைய இளம்வயதில் பிரம்மதேவராலும், இந்திரன், சூரியதேவன் போன்ற பற்பலதேவர்களிடமும் பல்வேறு வரங்களைப் பெற்றிருந்தவன் என்றும் நினைவுபடுத்தினார். பல வரங்கள் பெற்று அஞ்சனை மற்றும் கேசரியின் செல்வமகனாக மாருதி வளர்ந்தபோது தான்பெற்ற வரங்களால் அனைவருக்கும் குறும்புச் செயல்களால் தொல்லை கொடுத்தான் மாருதி! அதனால் முனிவர்களுடைய சாபத்தால் அவருடைய ஆற்றல்கள் மறைக்கப்பட்டதையும், அதனால் தன் உண்மை பலத்தை மறந்து இத்தனை நாட்கள் அனுமன் இருந்ததையும் எடுத்துரைத்தார் சாம்பவான். (ஜாம்பவான்)

ஆனால் அனுமன் மாருதி என்னும் பெயரோடு திரணபந்து என்னும் ஆசாரியாரின் ஆசிரமத்தில் குருகுலவாசம் செய்து கொண்டிருந்தபோது, திரணபந்துவின் சாபத்தால் அத்தகைய நிலைக்கு ஆளானான் என்று சில இராமாயணங்களில் கூறப்பட்டுள்ளன. எனினும் ஜாம்பவான் மூலமாக தன் இளமைப்பருவ வரங்களை அனுமன் கேட்டபோது ஒரு மிகப்பெரிய உத்வேகமும் ஆற்றலும் தன்னுள் பொங்கி எழுவதை உணர்ந்தார் ஸ்ரீஅனுமார். எனவே தானே கடலைக்கடந்து இலங்கை செல்வதாகவும் எதிர்க்கும் அரக்கர்களை அழித்து, அன்னை சீதாவின் இருப்பிடத்தை அறிந்து வருவதாவும் சபதம் எடுத்தார். மகேந்திர மலையின் உச்சியை அடைந்து மிகப்பெரும் உருவம் (விஸ்வரூபம்)

எடுத்துநின்றார் ஸ்ரீஅனுமார். அதைக்கண்ட வானரவீரர்கள் அனைவரும் பெருத்த மகிழ்ச்சி ஆராவாரம் செய்தனர்.

**முக்கியமான குறிப்பு :**

சுயம்பிரபாவின் பிலத்தினுள் இருந்து வெளியே வந்து சேர்ந்த இடம் மகேந்திர மலைப் பகுதியாகும். இந்த மகேந்திரமலைதான் தற்போது திருக்குறுங்குடி என்னும் திவ்வியதேசமாகும் என்கின்றனர். இங்குள்ள பெருமான் நம்பி என்ற திருநாமத்தோடே அழைக்கப்படுகின்றார். ஒவ்வொரு ஏகாதசியின்போதும் தாழ்ந்த குலத்தில் பிறந்த நம்பாடுவான் என்பவன் மலைமேல் நின்ற நம்பியிடம் சென்று கானம் இசைத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அதேபோல் ஒரு கார்த்திகை ஏகாதசியின்போது அவன்வந்தபோது, ஒரு பிரம்மரட்சஸ் (கொடூர குணம்கொண்ட ஒரு பேய்) அவனை உண்பதற்காக வழிமறித்தான். ஆனால் மலைமேல் நின்ற நம்பிக்கு இசைபாடி கானம் இசைத்துவிட்டபின்னர் தானாகவே வந்து அவனுக்கு உணவாக அர்ப்பணிப்பேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டுச் சென்று, தான் கூறியவாறே உண்ண வந்த அப்பிரம்ரட்சஸ்க்குத் தன்னையே உண்பதற்குரிய தானமாகக் கொடுத்தான் என்றும், அந்த நாளானது தற்போதும் கார்த்திகை மாதத்தில் கைசிக ஏகாதசி என்றும் அழைக்கப்பட்டு, அந்த நம்பாடுவானின் பரம்பரையில் வந்தவர்கள் அதை நாடகமாக்கி நடித்துவருகின்றார்கள் என்றும் அறியப்படுகின்றது.

**அனுமனின் பெயர்க் காரணம் :**

அனுமன் இளமைப் பருவத்தில் பலவீரச் செயல்கள் புரிந்தவன். ஒருமுறை சூரியனை நல்ல பழுத்த கனி என்று நினைத்து, சூரியனைப்பிடிக்கச் சென்ற போது, இந்திரனால் வச்சிராயுதத்தால் தாக்கப்பட்டார் அனுமான். கீழே விழுந்தபோது, அந்த மாருதியினுடைய இடது கன்னம் உடைந்துபோயிற்று. அதனால் வாயுபகவான் சீற்றம் கொண்டு, தன் இயக்கத்தை நிறுத்திவிட, தேவலோகம், மற்றும் பூமண்டலம் முழுதுமாக அனைவரும் துன்பம் அடைந்தனர். அனைவருக்கும் மூச்சுவிட முடியாதவாறு மிகவும் துன்பம் ஏற்பட்டது.! இதன் காரணத்தையும், நடந்த உண்மைகளையும் உணர்ந்த பிரம்மதேவன் வாயுபகவானிடம் வேண்டுகோள் விடுத்தார். தாங்கள் அனுமனைக் காப்பாற்றுவதோடு, அவனுக்குப் பற்பல வரங்கள் தந்து அவனை என்றும் சிரஞ்சீவியாக வாழ வரங்களும் அளிக்கின்றோம் என்று உறுதியளித்தார். வாயுபகவானும் தன் இயக்கத்தைத் தொடர்ந்ததால் அனைவரும் மகிழ்ந்தனர். தமது இயல்பு நிலைக்குத்திரும்பினர். அனுமனின் உடைந்த தாடை எலும்பு குணம் அடைந்தது. அதனாலேயே அன்றுமுதல் மாருதி அனுமன் என்று அழைக்கப்பட்டார். அதாவது கன்னத்தின்(தாடையின்) எலும்பு முறிந்து குணம் பெற்றவர் என்ற காரணப்பெயரால் அழைக்கப்பட்டார். இதன் உண்மைத் தன்மையை அறிய தற்போதும் அனுமனின் இடது பக்கத்தாடையை உற்று நோக்கினால் உண்மைதெரியும்!



மேலும் தான் கூறியதற்கு ஏற்றவாறு பிர்ம்மதேவன் பிரம்மாஸ்திரம் அளித்து, அனுமன் சிரஞ்சீவி என்றும், பிரம்மாஸ்திரத்தாலும் அனுமனுக்கு சாவு இல்லை என்றும் வரமளித்தார்.. இந்திரன் வஜ்ராயுதத்தால் இறப்பில்லை என்று வரம் கொடுத்தான்.. அனுமன் சிரஞ்சீவி என்று எடுத்துரைத்தார். மேலும் பல தேவர்களும் அனுமனுக்குப் பலவிதமான அஸ்திரங்களையும், வரங்களையும் கொடுக்க ஆற்றல்களின் இருப்பிடமாக விளங்கினான் அனுமன். அந்தப் பலமும், வரங்களும் தற்போது ஜாம்பவானால் நினைவுபடுத்தப்பட்டதால் அனுமனுக்கு சாப விமோசனமும் ஏற்பட்டது.

எனவே உத்வேகம் அடைந்த அனுமன் வானளாவ வளர்ந்து கடலைத்தாண்டச் சம்மதித்து மகேந்திரகிரியின் மீது ஏறி நின்று ஆயத்தமானார்.. ஸ்ரீராம நாமத்தை உச்சாடனம் செய்தார்..

இக்காண்டத்தின் கதைப்போக்கில், சுக்கிரீவன் கொடுத்த நகைகளைக்கண்ட இராமன் அவை சீதையுடையதா என்று

லட்சுமணனைக்கேட்க, அவன் இல்லை இல்லை என்று மறுத்துக்கொண்டே வந்தான். ஆனால் கால்சதங்கையைப் பார்த்து (சிலம்பை) ஆம் சீதாவின் சிலம்புதான் இது என்றான். சீதையின் பாதத்தைத் தவிர அதற்கும் மேலே அவளைப்பார்க்காதவன் அண்ணியாரை அன்னையாக நமஸ்கரித்தவன் என்பது புலப்படுகின்றது. அத்தகையவனை சீதா சந்தேகம் கொண்ட விதியின் விளையாட்டையும் இதனால் அறியலாம்.!

சுக்கிரீவனும் இராமனும் உறுதி ஏற்றுக்கொண்டபோது சீதைக்கும் வாலிக்கும் இராவணனுக்கும் இடது கண்கள் துடித்தன என்றும் அவற்றின் பலன்களையும் ஏற்கனவே கண்டோம்! இதை உறுதி செய்வதாக கிஷ்கிந்தையில் உள்ள அஞ்சனா பர்வதம், அனுமன் கோயில் ஆகியன இன்றும் இருக்கின்றன. இவற்றுள் சுயம் பிரபா குகை என்பது தற்போது உள்ள கடையநல்லூர் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து 2.கி.மீ. தொலைவில் உள்ளது என்றும், சுயம்பிரபாவடிவ சிற்பமும் அனுமன் சிற்பமும் இன்னும் இங்கே உள்ளன. மகேந்திர மலை என்று குறிப்பிடப்படுவது தற்போது உள்ள திருக்குறுங்குடி திவ்வியத் தலமாகும். இங்கு மலைமேல் நின்ற நம்பி மூலவர். அனுமன் திருக்கோயில் கொண்டுள்ளார். அனைவரும் தரிசிக்க வேண்டியவை இந்த இடங்கள்.

உலகளந்த பெருமான் எடுத்த திரிவிக்கிரம அவதாரச்சிறப்பைத் திசை எங்கும் பறையறைந்து தெரிவித்தவன் சாம்பவான்.. பிரம்மாவின் வியர்வைத்துளியால் (கொட்டாவியால்) உண்டானவன்.கரடி வடிவம் கொண்ட புதல்வன் என்பார்கள்.

**வேதம் அனைத்தும் தேர் தர எட்டா ஒருமெய்யன்**
**பூதலம் முற்றும் ஓர் அடிவைத்துப் பொலிபோழ்துயான்**
**மாதிரம் எட்டும் சூழ்பறை வைத்தே வர மேரு**
**மோத இளைத்தே தாள் உலைவுற்றேன் விறல் மொய்ம்பீர். (1006).**

இந்த ஜாம்பவான், அனுமனின் இளம்பருவ நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தி, அனுமனுக்கு தீயாலும், காற்றாலும், நீராலும், எதிரிகள் செலுத்தும் எவ்விதமான அஸ்திர சஸ்திரங்களாலும் இறப்பே கிடையாது என்று கூறி, கடல் தாண்டும் வலிமை அனுமனுக்கே உரியது என்றும், உனக்கு உவமையாக யாரையும் கூறமுடியாது என்றும், ஒருமுறை பாய்ந்து குதிக்கும்போது, இந்த அண்டத்திற்கு அப்புறத்திலும் பாயும் திறமையை உடையவன் என்று கூறி அனுமனின் ஆற்றலை ஜாம்பவான் எடுத்துரைத்தார் என்பதைப் பின்வரும் கவிதை புலப்படுத்துகின்றது.



**வெப்புறு செந்தீ நீர் வளியாலும் விளியாதீர்**
**செப்புறு தெய்வப் பல்படையாலும் சிதையாதீர்**
**ஒப்புறின் ஒப்பார் நும் அலது இல்லீர்**
**ஒருகாலே குப்புறின் அண்டத்துப் புறமேயும் குதிகோள்வீர். (1011).**

மேலும் ஜாம்பவானின் இந்த அறிவுரைகளால் கடலைத்தாண்ட அனுமன் முடிவு எடுத்ததையும், அப்போது அவர்கொண்ட பெரியவடிவமானது, திருமாலாகிய பெருமான் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து, மூன்று உலகங்களையும் அளந்த அந்த மிகப்பெரும் வடிவத்தை எடுத்ததோடு “திருவடி” என்ற தனது பெயருடன் அத்திருநாமத்தின் இயல்பு அனைவரும் அறியும்படியாகவும் விளக்கம் பெற்று நின்றான் என்பதையும் பின்வரும் கவிநயத்தால் உணர்த்துகின்றார் கம்பநாட்டாழ்வார்.!

**பொரு வரு வேலை தாவும் புந்தியான் புவனம் தாய**
**பெருவடிவு உயர்ந்த மாயோன் மேக்கு உறப் பெயர்ந்த தாள்போல்**
**உரு வறி வடிவின் உம்பர் ஓங்கினன் உவமையாலும்**
**திருவடி என்னும் தன்மையாவர்க்கும் தெரியநின்றான். (1027).**

என்பது கம்பர் வாக்கு !

கிட்கிந்தா காண்டத்தின் (கிஷ்கிந்தா) கடைசிபடலமாக அமைந்துள்ளது “மயேந்திரப்படலம்” என்ற மகேந்திரப்படலம். இதன் கடைசி பாடலாக (1030) பின்வரும் பாடலின் நயத்தைக்கூறி, காண்டம் மற்றும் படலங்களின் கதைப்போக்கை முடிக்கின்றார் கவியரசர் கம்பர்.

**அப்பாடல் வருமாறு :**

**மின் நெடும் கொண்டல் தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்ப**
**தன்நெடுந் தோற்றம் வானோர் கட்புலத்து எல்லைதாவ**
**வன்னெடுஞ் சிகரகோடி மயேந்திரம் அண்டம் தாங்கும்**
**பொன்னெடும் தூணின் பாத சிலை எனப்பொலிந்து நின்றான்.**

ஆம்! மின்னல்களை உடையதான மிகப்பெரிய முகில்களின்(மேகங்களின்) கீழ்ப்பட்ட வீரக்கழல்போல ஒலிசெய்யும்படியாக, தனது மிகப்பெரும் தோற்றத்தைத் தேவர்களும் காணுமாறு பெரிய சிகரங்களை உடையது மகேந்திர மலை. அம்மகேந்திரமலையானது, உலக உருண்டையைத் தாங்குகின்ற பொன்மயமான நீண்ட தூணின் அடியில் இடப்பட்ட கல்லினைப்போல விளங்குகின்றது என்றும், அத்தகைய அம்மகேந்திர மலையில் பொலிவுடன் தோற்றம் அளித்தான் அனுமன் என்றும் அற்புதமானதோர் உவமை நயத்தால், இக்காண்டப்பகுதியின் செய்திகளைக் கூறி முடிக்கின்றார் கம்பநாட்டாழ்வார்!



# 5. சுந்தர காண்டம். கதைச்சுருக்கமும் கருத்துக்கோவையும்

இச்சுந்தர காண்டத்தில் சிறியதிருவடியாகிய அனுமனின் சிறப்பும், சிறையிருந்த செல்வியாகிய சீதாதேவியின் ஏற்றமும் பெரிதும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**கடவுள் வாழ்த்துப் பாடல் :**

**அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு எனப் பூதம் ஐந்தும்**
**விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்**
**கலங்குவது எவரைக்கண்டால்? அவர்என்பர்கைவில் ஏந்தி**
**இலங்கையில் பொருதார்அன்றே மறைகளுக்கு இறுதி ஆவார்.**

இதன் பொருளைக்காண்போம்,

ஒரு பூமாலையை மாலை(மாலைக்காலம்) ஆகிய இரவு கவிந்த நேரத்திலும், அதை அடுத்து வருகின்ற இரவுநேரத்திலும் திடீரெனக்காணும் ஒருவன் அது பாம்போ என்று பயம்கொள்ளும் ஒரு திரிபு எண்ணத்தைத் தோற்றுவிக்கும். அந்த விகாரப்பாடாகிய திரிபானது, ஐந்து பூதங்களும் சேர்ந்ததனால் உண்டாவதும், மாற்றம் பெறுவதும், தேவர், மனிதர், விலங்கு, தாவரம் என்னும் நான்குவகைப் பாகுபாடுகளோடு தோன்றும் பிறப்பு என்பதிலும் ஏற்படுகின்றது. இத்தகு பாகுபாடுகளை உடையதான பிறப்பு அல்லது பிறவி என்பதனை ஒழிக்கக் கூடியவர் திருமால் ஆவார்! அந்தத் திருமாலாகிய பெருமானே தனது கையிலே வில்லை ஏந்திய ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்துவந்து, அதர்மச்செயலில் ஈடுபட்டு வந்த இலங்கையின் அரக்க அரசனான இராவணனை வென்றார் என்பது ஞானிகள் கண்டறிந்த உண்மையாகும் என்று ஸ்ரீராமாவதாரத்தின் சிறப்பையும், அந்த ஸ்ரீராமாவதாரத்தின் அவதார நோக்கத்தையும் இப்பாடலில் அழகுற எடுத்துரைக்கின்றார் கவியரசர்!

**சுந்தர காண்டத்தின் சிறப்பு :**

ஸ்ரீராமாயணத்தின் உயிரோட்டமாகக் கருதப்படும் பகுதி இந்தச் சுந்தர காண்டம் ஆகும். இராமாயணத்தை முழுவதும்

படிக்கமுடியாத வாய்ப்பு அற்றவர்கள் இந்த ஒருபகுதியை மட்டும் கற்றாலே முழுமையான இராமாயணத்தையும் படித்தாற்போலாகும் என்பார்கள். ஏனென்றால் பாலகாண்டம் தொடங்கி பாடப்பட்டு வந்துள்ள அனைத்துக்கதைப் பகுதிகளும் இதில் மீண்டும் சில இடங்களில் நினைவுறுத்தும் பகுதியாக கூறப்பட்டுள்ளன. இதைப் படிப்பவர்களுக்கும் இப்பகுதியை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவோர்களுக்கும் அனைத்துவிதமான வளங்களையும் தரும் என்பது ஓர் ஐதிகம் ஆகும். புத்திரப்பேறு, செல்வம், கல்வி உள்ளிட்ட பதினாறு பேறுகளையும் தரக்கூடியதான ஒரு திவ்விய சரிதத்தைக்கூறுவது இச்சுந்தர காண்டம் எனலாம்.

**சுந்தரகாண்டம் பெயர்க்காரணங்கள் :**

அனுமன் ஆகிய மாருதி மிகவும் அழகியதோற்றத்தை உடையவனாக இருந்ததால், சௌந்தர்யன் அனுமன் இப்பகுதியில் செய்த அற்புதச் செயல்கள் பலப்பல. அவை கூறப்படுவதால் இது சுந்தரகாண்டம் என்றும் அழைக்கப்படுகின்றது.

மேலும் இராமாயணத்தின் பகுதிகளைப் பார்க்கின்றபோது இந்தப்பகுதி மிகவும் அழகான கருத்துகளையும் செய்திகளையும் எடுத்துரைப்பதால் இதற்கு அப்பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவார்கள்.

மேலும் இதில் சிறையிருந்த செல்வியின்(சீதாவின்) சௌந்தர்ய குணங்கள் (அழகிய பண்புகள்) கூறப்படுவதால் இது அப்பெயர் பெற்றது என்றும் கூறுவார்கள்.

இதைப்படிப்போர்க்கு வாழ்க்கைக்குத்தேவையான அனைத்து வளங்களும் ஏற்படும். திருமண பிராப்தம், குழந்தைப்பேறு, செல்வம் ஆகியவற்றை உண்டாக்கும். மஹாலட்சுமி கடாட்சம், போன்றவை கிடைப்பதால் படிப்போர் பெரிதும் மகிழ்ச்சி அடைவர். இக்காண்டத்தில் இதன் பெயருக்குரிய காரணங்களை இன்னும் மிகுதியாக விளக்கிக் கூறலாம்.



அன்னை சீதையின் இருப்பிடத்தை அறிந்து வருவதற்காக அனுமன் ஆகிய மாவீரன் கடல்தாவுகின்ற நிகழ்ச்சி இக்காண்டத்தின் முதல்படலமான கடல்தாவு படலத்தின் முதற்பாடலைக் காண்போம்.

**“ஆண்தகை ஆண்டு அவ்வானோர் துறக்கநாடு அருகில் கண்டான்**
**ஈண்டு இதுதான் கொல்வேலை இலங்கை என்று ஐயம் எய்தா**
**வேண்டு அரும் விண்ணாடு என்னும் மெய்மை கண்டு உள்ளம் மீட்டான்**
**காண் தரும்கொள்கை உம்பர் இல்ளன கருத்துள்கொண்டான்”**

என்னும் இப்பாடலில், அனுமன் மிகவும் உயர்ந்துள்ளதான மகேந்திரமலையின் மேலே ஏறிநின்றார் என்று கூறி, அவருடைய நினைப்பையும் எடுத்துரைக்கின்றது.

அதாவது மகேந்திரமலைமேல் ஏறி நின்றவனாகிய அனுமனுக்கு தேவலோகமானது வெகு அருகில் காட்சி அளித்ததாம்! அதைக்கண்ட அனுமன் “இதுதான் இலங்கையோ என்று ஒருகணம் திகைத்து நின்று, உடனே இது தேவலோகம். இலங்கை அன்று என்ற நினைப்பு தோன்றியதால், அங்கிருந்து பார்த்தபோது எட்டுதிக்குகளும் தோன்றியதால் அவை நடுக்கமுறுமாறு தனது தோள்களைத்தட்டிக்கொண்டு ஆரவாரம் செய்தான். என்னும் செய்தியைக் கூறுகின்றது.

**மகேந்திர மலை அடைந்த மாற்றங்கள் :**

மலையின் மீது கால்பதித்து தாவுதற்கு எழும்ப தயாரானபோது அம்மலையில் பற்பல குழப்பங்கள் ஏற்பட, திருப்பாற்கடலைக்கடைந்த போது அக்கடலைக்கலக்கிய மலை இதுதானோ என்று அனைவரும் அலறும்படியாக அம்மலைச்சுழன்றதாம்! இப்படி அதி அற்புதமான கவிநயம் மிக்கக் கவிதைகள் பற்பல. அதை விடுத்து அனுமன் கடல்தாண்டிய விதத்தைக் காண்போம்.

மகேந்திரமலையின் மீது ஏறிநின்ற அனுமன் மிகப்பெரும் வடிவம்(விஸ்வரூபம்) கொண்டு கடலைத்தாவிச் சென்றதைக் கூறுவதால் இது கடல் தாவு (கடறாவு) படலம் என்று

அழைக்கப்படுகின்றது. மகேந்திரமலையின் உச்சியில் ஏறி நின்றபோது அம்மலை குலுங்கியது. அதன் குகைகளில் வாழ்ந்திருந்த உயிரினங்கள் வெளியே பீறிட்டுக்கொண்டு வந்தன. கடலைக்கடந்த மந்தரமலைபோல மகேந்திர மலையும் குலுங்கிட காலை அதன்மீது ஊன்றினான் அனுமன். தங்கள் துயரம் நீங்கிட பயணம் செய்யும் அனுமனைப்பார்த்து வித்தகனே சென்றுவருக! வென்று வருக!! என்று ஆசீர்வாதம் செய்தனர் அமரராம் தேவர்கள் !.

**கடல்தாண்டிய அனுமனின் தோற்றம் :**

அனுமன் தன்வாலை உயரத்தூக்கியும், வலிமையான கால்களை மடக்கியும் மார்பைக் குறுக்கியும் தோள்கள் பூரித்துப் பொங்க கழுத்தினைச் சுருக்கியும் கைகளை முன்னே நீட்டியும் தன் தலையானது பிரம்மலோகத்தை அளாவும் படியாக மற்றவர்களால் காணத்தகாதவாறும் மிகவும் வேகமாகவும் தாவிப் பறந்தான்.

அனுமனின் வேகத்தால் உலகத்தின் இடையில் உள்ள பொருள்கள் என்ன ஆகுமோ என்று எண்டிசை யானைகளும் நடுநடுங்கின! அவ்வாறு வேகமாகச்செல்லும் இராமதூதனான அனுமன், ஆதிசேடனோடு போட்டியிட்டுச் சபதம் செய்த காலத்தில் கடுமையாக வீசிய காற்றினால், மேறு மலையின் மூன்று சிகரங்களும் ஒடிந்துபோய், காற்றின்வேகத்தில் தென்கடலில் சென்று விழுந்த திரிகூட மலையைப் போன்று அனுமனும் விளங்கினான் என்று அனுமன் கடல்தாவிய வேகம் எடுத்துரைக்கப்படுகின்றது.

இவ்வாறு அனுமன் கடல் தாண்டும் போது ஏற்பட்ட மூன்றுவிதமான தடங்களைக் கூறி, அவற்றிலிருந்து அனுமன்வெற்றிகரமாக மீண்டதையும் அடுத்துவரும்பகுதிகள் எடுத்துரைக்கின்ன.! மேலும் தற்போதும் இத்தகைய தடங்கல்கள், முத்திறத்தவரால் ஏற்படும் என்று விளக்கி, செயல் செய்து முடிக்க விடாமுயற்சியும் பகவான் நாமத்தை உச்சரித்து வணங்கிச் செய்யவேண்டியதன் கட்டாயத்தையும் இச்செயல்



குறிப்பால் உணர்த்துகின்றது. பக்திச் சிரத்தையோடு செய்தால் எல்லாம் சுபமாக முற்றுப்பெறும் என்று பக்தியைத்தூண்டும் திறவுகோலாகவும் இது விளங்குகின்றது.

**மைந்நாக மலையின் வேண்டுகோள் :**

ஒருமுறை இந்திரன் மலைகளின் சிறகை அறுத்தபோது இராமனின் குலமான இட்சுவாகு குலத்து மன்னன் மைந்நாக மலைக்கு அபயம் கொடுத்துக் காப்பாற்றினான். அன்றுமுதல் அம்மலையானது கடலுக்கடியிலேயே இருந்தது. தம் இட்சுவாகு குலத்தைச்சேர்ந்த ஸ்ரீராமனின் கைங்கரியத்திற்காக அனுமன் செல்வதால் உதவி செய்யவேண்டும் என்று நினைத்த அம்மலை கடலில் இருந்தும் மேலே தோன்றி குறுக்கிட்டு, தன்மேல் ஓய்வு எடுத்துச்செல்லுமாறு வேண்டியது. ஆனால் ஸ்ரீராம கைங்கரியம் காலம் தாழ்த்தப்படக்கூடாது என்று மறுத்த அனுமன் நன்றி கூறி பயணத்தைத் தொடர்ந்தான்.

**சுரசையும் அனுமனும் :**

அனுமனின் ஆற்றலைக் கண்டறிய தேவர்கள் சுரசை என்பவளை அனுப்பி வைத்தார்கள். கோர வடிவத்தோடு அனுமனை விழுங்கிவிடுவேன் என்று எதிர்ப்பட்டாள். அப்போது தன்னை விழுங்க முடியாது என்று கூறிக்கொண்டு, தன்னுடைய உருவத்தைப் பெருக்கிக்கொண்டே சென்றான் அனுமன். ஆனால் விழுங்கப்போவதாகவும் கூறிக்கொண்டே வந்த அவளும் அதற்கு ஏற்றவாறு தன் வடிவத்தைப் பெருக்கிக்கொண்டே சென்றாள்! தன்னை விழுங்குவதற்காகவே சுரசை தன்னைப் பெருக்கிக்கொண்டு வருகின்றாள் என்பதை அறிந்தான் அனுமன். உடனே தன் உருவத்தை திடீரென்று மிகச் சிறியதாக குறைத்துக்கொண்டு அவள் வாய் வழியே புகுந்து வெளியே வந்து விட்டார் அனுமன். சபாஷ் போட்டனர் தேவர்கள். அனுமன் செல்லும் ஸ்ரீராம கைங்கர்யத்தைச் சிறப்பாக முடித்துத்திரும்புவான் என்று மகிழந்து மலர்மாரி பொழிந்து ஆசீர்வதித்தனர்.

**ஆற்றல் மிக்க அங்காரதாரை அழிந்தாள்!**

அடுத்ததாக அங்காரதாரை என்ற ஓர் அரக்கி வழிமறித்தாள். தன் இசைவினைப்பெறாத ஒருவன், கடல்மேல் பறந்துசெல்வதைத் தடுக்க நினைத்து வழிமறித்தாள் இவள்.! இவளைச் சிம்ஹிகை என்கின்றார் வால்மீகி. அவள் அனுமன் கடலைத்தாண்டிச் செல்ல முடியாமல் பெரிதும் தடுத்தாள். நிழலைப்பார்த்தே ஓர் உருவத்தை இழுக்கக் கூடியவள். தன் நிழலை அவள் உணரமுடியாதபடி பெருக்கிக்கொண்டே சென்றான் அனுமன். அவளும் அதற்கேற்ப வளர்ந்தாள். அப்பொழுது தன் உருவத்தைத் திடீரெனக் குறைத்துக்கொண்டு அவள்வாயில் புகுந்துவிட்டான் அனுமன். அவளுடைய வயிற்றுப்பகுதியில் சென்றபோது திடீரென்று தன் உருவத்தைப் பெருக்கிக் கொண்டான். அவள்வயிறு அதைத்தாங்காமல் போனதால், அவள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து அவளை அழித்து மேலும் பறந்து சென்றான் அனுமன்.

**பவளமலையில் அனுமன்!**

நூறு யோசனைத் தூரத்தையும் ஒரேமூச்சில் தாவிய அனுமன் இலங்கைக் கரையிலே இருந்த பவளமலையில் காலூன்றி நின்றார். அங்கிருந்தும் இலங்கை நகரம் முழுமையாகவும் தெரிந்தது.! அனுமன் கடலைத் தாண்டுதலாகிய பணியைத்தொடங்கியபோது மூன்று தடைகள் உலகியலில் இத்தகைய மூன்று தடைகள் ஏற்படும்.!

இதுபோன்ற மூன்று தடைகள் எல்லோர் வாழ்விலும் வரும். நண்பர்கள் மெதுவாகச் செய் என்பர் மைந்நாகமலையைப்போல! உன்னால் செய்யமுடியுமா? சோசித்துச் செய் என்பர் சிலர். செய்யக் கூடாது என்று எதிர்ப்பும் பக்திச் சிரத்தையோடு பணிமேற்கொண்டால் நிச்சயம் நம்செயலில் வெற்றியைக்காணலாம்! அனுமன் தன்னுடைய ஸ்ரீராம கைங்கர்யத்தில் வெற்றி பெற்றதைப்போல, நாமும் பக்திச்சிரத்தையோடு எந்த ஒருசெயலையும் மேற்கொள்ளத் தோடங்கினால், எல்லாத் தடைகளும் நீங்கிப்போகும். நிச்சயம் நாம் வெற்றிபெறலாம்.!



**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு"**

என்னும் வள்ளுவனின் வான்மறையை மிக அற்புதமாகச் செயல்படுத்தியவன் அனுமன். அதைத் தன்னுடைய காவியத்தில் அருமையாகப் பயன்படுத்தியுள்ள கம்பரின் கவிநயம் போற்றத்தக்கது.!

மேலும் பவளமலையில் இருந்து இலங்கையைக் கண்ட அனுமன் அதுதான் இந்திரலோகமோ என்று சந்தேகம் கொண்டாராம்! மிகப்பெரும் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் உடையதாகவும் அந்த மாலைக் காலத்தின் மங்கியபொழுதில் அரியதோர் காட்சியைத் தந்தது இலங்கை மாநகர். அதில் ஆங்காங்கே காட்சியளித்த ஒளிவிளக்குகளையும் அலங்கார தீபங்களையும் பார்த்து அதிசயித்து நின்றான் அனுமன்.

**இலங்கிணியின் சாபவிமோசனம் :**

பிறகு அங்கிருந்தும் அகன்று மாலைக்காலம் மங்கி, இருள்கவ்வத்தொடங்கிய போது அந்த நகரத்தினுள் நுழைய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தார் அப்போது இலங்கையின் காவல்தெய்வமான லங்கிணியால் (லங்காதேவி) என்றும் அழைப்பர்கள்.) தடுத்து நிறுத்தப்பட்டான். அப்போது அவளுடன் நடந்தமோதலில் அவளைத் தாக்கவே பிரம்மதேவனுடைய சாபத்தால் இலங்கைமாநகரைக் காவல்காத்துவந்தவளான அவள் தன்னுடைய காவல்தெய்வ கோலத்தை விடுத்து அழகிய இந்திரலோகப் பெண்ணாக உருவம் மாறினாள்.

பிரம்மன் ஆணையால் காவல் காத்த அவளுக்குச் சாபவிமோசனம் கிடைத்ததால் அவள் இலங்கையை விட்டுப் போய்விட்டாள். அவ்வாறு போகும்போது அனுமனை வாழ்த்தினாள் இலங்காதேவி. அவன் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றியே பெருவான் என்றும் அவள் ஆசி கூறிச் சென்றாள்.

**இலங்கையில் அனுமன் கண்ட காட்சிகள் :**

எனவே அனுமன் அவ்வூரில் சீதாவைத்தேடிக்காண்பதே தன்னுடைய தலையாய கடமை ஆதலால் அதற்கு இடையூறு நேராதவண்ணம் தன்வடிவத்தை மிகவும் சுருக்கிக்கொண்டான். சிறு பூனையளவிற்குத் தன்னுருவை மாற்றிக்கொண்டு தெருக்களில் பல்வேறு காட்சிகளைப் பார்த்துக்கொண்டு சென்றான். விபீஷணன் மாளிகையைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் மதுவும் மாதரும் மாமிசக் குவியல்களுமே காணப்பட்டன. அரக்க இனத்தவர்களான அவர்களுக்கு வித்யாதரர்களும் விஞ்சையர்களும் கந்தர்வர்களும் தேவர்களும் பணிவிடை செய்து கொண்டிருந்த காட்சி அனுமனை அதிர்ச்சியும் ஆவேசமும் கொள்ளச் செய்தது. அரக்கியர்களுக்கு அரம்பைமாதர்கள் பணிப்பெண்களாக மாறி அவர்கள் இடும் பணிகளைச் செய்த காட்சியும் கண்டதால் மனம் கொதித்தார் மாருதி.

அரக்கவீரர்கள் சொக்கட்டான் விளையாட்டும் குடிபோதையும் உடையவர்களாக இருந்தனர்.. விபீஷணன் மாளிகை மட்டும் விதிவிலக்காய் காணப்பட்டது. அங்கு தெய்வீக மணம் கமழ்ந்தது. விபீஷணன் மகள் திரிசடை என்பவள். மனைவி சரமா என்பவள். இருவரும் நல்லவர்கள். விபீஷ்ணனைப் போலவே நற்குணம் உடையவர்கள்.

கும்பகர்ணன் உறங்கிக்கொண்டிருந்த தன்மையைக் கண்டு அதிசயித்து நின்றான். மிகுதியாக மூச்சை இழுத்ததால் அனுமனே மூக்கு துவாரத்தின் அருகே சென்று, பிறகு மூச்சுவிட்டதால் தூரத்தில் விழுந்தான் என்றால்(பூனையின் உருவத்தில் இருந்ததால்) அவன் கொட்டாவி மற்றும், மூச்சிழுத்து உறங்கிய தன்மை இவற்றை அறியலாம். மேலும் கும்பகர்ணன் பிரம்மாவை நோக்கித் தவம் இருந்து, தனக்கு நித்தியத்துவம் வேண்டும் (என்றும் யாராலும் மரணம் ஏற்படாத தன்மை) என்று வேண்ட தேவர்கள் பிரம்மா, சரஸ்வதியின் கூட்டுச் சதியால் நித்திரைத்துவம் வேண்டும் என்று நா பிறழ்ந்து



வரம் கேட்டதையும், "ததாஸ்து." என்று பிரம்மன் வரமளித்து தப்பிப்போன நிகழ்ச்சியையும் இங்கு நினைவுகொள்ளலாம்.

திடுக்கிட்ட கும்பகர்ணன் மீண்டும் தவம் புரிய நினைக்க, அதற்குள் வரத்தின் தாக்கத்தால் தூக்கம் கண்ணைத் தழுவ தூங்கிப்போனான். எனவே ஆறுமாதகால தூக்கம் என்ற வரத்தால் தூங்கியே காலம் கழித்த மிகப்பெரும் உருவத்தை உடைய அரக்கன் ஆவான்.

அனுமன் இராவணனது மாளிகையை அடையும் முன்பே இந்திரஜித்து, அதிகாயன் ஆகியோருடைய மாளிகைகளின் தோற்றத்தையும். அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும் கண்டு, மனம் கொதித்தே சென்றார் எனலாம். ஏனென்றால் அவர்களின் அரண்மனைமாளிகைகளிலும், மது, மாமிசம், மாதர்கள் இவர்களுக்கும், களியாட்டங்களுக்கும் ஒன்றும் குறையில்லாதவைகளாகவே இருந்தன.!

அடுத்ததாக அனுமன் இராவணன் அரண்மனையைக் கண்டான். அதனுள் அவன் நுழைய முற்பட்டபோபது பலவகையான துர்நிமித்தங்கள் தோன்றின என்றும், அவை இலங்கைமாநகரின் அழிவைப் புலப்படுத்துவதாக இருந்தது என்பதையும் கம்பர் கூறுகின்றார் அப்பாடல் நயத்தைக் காண்போம்.

சீதையைத்தேடி இலங்கை நகருக்குள் புகுந்த அனுமன், இராவணன் மனைக்குள் புகுந்தபோது உண்டான தீய சகுனங்கள் அவனுக்கு ஏற்படப்போகும் துன்பகரமான முடிவை உய்த்துணரவைப்பதை அறியலாம்.

**நிலம்துடித்தன நெடுவரை துடித்தனநிருதர்தம் குலமாதர்**
**பொலந்துடிக்கு அமைமருங்குல்போலகண்களும் புருவமும்**
**பொன்தோளு**
**வலம்துடித்தன மாதிரம் துடித்தன தடித்து இன்றி நெடுவானம்**
**கலந்து இடித்தன வெடித்தன பூரண மங்கல கலசங்கள். (298)**

அதாவது இந்த நிலவுலகமே அதிர்ந்தது. அதனால் அரக்கமகளிருடைய வலது கண்களும், புருவங்களும், தோளும்

துடித்தனவாம். வானத்திலிருந்து பெருத்த இடியோசை கேட்டது, இலங்கையிலிருந்த மங்கல கலசங்கள் எல்லாம் வெடித்துச் சிதறின என்று கூறுமுகத்தான் இலங்கையின் அழிவை முன்கூட்டியே அறிய வைக்கின்றார் கம்பர் எனலாம்!

எனினும் அனுமன் உள்ளே நுழைந்து பார்த்தபோது, அங்கே உறங்கிக்கொண்டிருந்த மண்டோதரியின் திவ்வியமான தோற்றம் அவனைத் திகைக்க வைத்தது. ஒருகணம் அப்பெண்ணே சீதையாக இருப்பாளோ என்று சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது.. ஆனால் அவள் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்ததால் அந்தச் சந்தேகம் நீங்கியது. துயில் கொண்டிருந்த இராவணனைக்கண்டு கொன்று விடலாமா? என்று எண்ணினான் அனுமான். ஆனால் தான் வந்தவேலையும் கொடுக்கப்பட்ட பணியும் இதுவன்று என்று ஒதுக்கி கோபத்தை அடக்கிக் கொண்டு சென்றான்.

இப்படியாகப் பலபகுதிகளிலும் தேடிய அனுமன் சீதையைக் காணமுடியாமல் தவித்தார். தன்பணி நிறைவேறுமோ என்ற ஐயமும் எழுந்தது. இறுதியாக ஊரின் ஒதுக்குப்புறமாக மிகப்பெரும் அசோகவனம் இருப்பதை அறிந்து அங்கு சீதையைத் தேடச் சென்ற அனுமன் அங்கு ஒரு சிம்பாசு மரத்தினடியில் மாசுபடிந்த நிலையிலே உள்ள ஓவியத்தைப்போன்ற நிலையில் இருந்த பெண்ணைக் கண்டான். இச்சிம்பாசு மரத்தைத்தான் தமிழில் அசோகமரம் என்று குறிப்பிடுகின்றோம். இம்மரங்கள் மிகுதியாக இருந்த ஒரு பூஞ்சோலையாக அது இருந்ததால் அசோகவனம் என்றும் குறிப்பிடப்பட்டது. தான் கண்ட அவளே சீதையாக இருத்தல்வேண்டும் என்றும் முடிவு செய்தான்.

**காட்சிப் படலம் :**

ஸ்ரீராமன் தன்னிடம் கூறியவாறு திவ்வியமான தெய்வீகத் தோற்றத்தை உடைய சீதையைச் சுற்றி கொடிய அரக்கியர்கள் காவலுக்கு வைக்கப்பட்டிருந்தனர். புலிக்கூட்டத்திற்கு மத்தியில் அகப்பட்டு மாட்டிக்கொண்ட இளமானைப் போன்றும் பெருந்துன்பத்திற்கு ஆளாகியிருந்தாள்.



மேலும்,

**வன்மருங்குல் வாள் அரக்கர் நெருக்க அங்கு இருந்தாள்**
**கல் மருங்கு எழுந்து என்றும் ஓர்துளி வரக்காணா**
**நல் மருந்துபோல் நலன் அறஉணங்கிய நங்கை**
**மென் மருங்குல் போல் வேறு உல அங்கமும் மெலிந்தாள் (331).**

என்ற பாடல்மூலம், கற்பாறைகளுக்கிடையே முளைத்தெழுந்தோர் மருந்துச் செடியானது, ஒரு சொட்டு நீரும் கிடைக்கப் பெறாமல் இருந்தால் எப்படி வாடி வதங்கி உலர்ந்துபோய் இருக்குமோ அதைப்போன்று சீதையும் தன்னுடைய உடல் உறுப்புகள் அனைத்தும் மெலிந்துபோயிருந்தாள் என்று அவளின் துன்பநிலையை எடுத்துரைக்கின்றார் கம்பர்.

மேலும், வெளிச்சத்திலே ஏற்றி வைக்கப்பட்ட தீபம் எப்படி ஒளிக்குறைந்து பயனின்றி இருக்குமோ அதைப்போன்று சீதை இருந்தாள் எனவும் கம்பர் கூறுவதற்கு ஏற்ப காட்சியளித்த சீதையின் நிலைக்குப் பெரிதும் வருந்தினான் அனுமன்.

சோகமே உருவெடுத்து தன் கணவனாகிய ஸ்ரீராமரைப் பற்றி நினைப்பதால் வடியும் கண்ணீரால் அவள் ஆடைகள் நனைந்தன என்றும், பின்னர் இராமன் மீது கொண்ட அன்பின் காரணமாக உண்டாகும் விரகதாபத்தால் ஏற்பட்ட உடல் வெம்மையினால் அவை உலர்ந்து போயின. எனவே அவளுடைய ஆடைகள் ஒருநிலையிலே இல்லாமல், மாறி மாறி காட்சியளித்தன என்றும் கூறுகின்றார் கம்பர். சோகத்திற்கு ஆளாகியிருந்த சீதை அடைந்த மெய்ப் பாடுகளைக் கீழ்வரும்பாட்டால் எடுத்துரைக்கின்றார் கம்பர்.

**விழுதல் விம்முதல் மெய் உற வெதும்புதல் வெருவல்**
**எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்**
**தொழுதல் சோருதல் துளங்குதல் துயர் உழுந்து உயிர்த்தல்**
**அழுதல் அன்றி மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள்.**
**(333).**

இங்கு காட்சிப்படலத்தின் கருத்தாழம் மிக்கப் பின்வரும் பாடல்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து மகிழலாம்!

இளவலாகிய இலக்குவனை இழித்துரைத்ததால் சீதை தனக்கு ஏற்றவள் இல்லை என்று முடிவுகட்டிய ஸ்ரீராமன் தன்னைக்கைவிட்டு விட்டாரோ என்றும் எண்ணி வருந்தினாளாம் சீதை.!

**என்னை நாயகன் இளவலை எண்ணிலா வினையேன்**
**சொன்ன வார்த்தை கேட்டு அறிவு இலள் எனத் துறந்தானோ**
**முன்னை ஊழ்வினை முடிந்ததோ என்று என்று முறையால்**
**பன்னி வாய்புலர்ந்து உணர்வுதேய்ந்த ஆர் உயிர் பதைப்பாள்**
**(342).**

மேலே நினைத்தவாறு நடந்திருக்க வாய்ப்பில்லை என்று தன் மனதிற்கு ஆறுதல் கூறிக்கொண்டவள், தன்னைப் பிரிந்ததால், அதிதிகளுக்கும், விருந்தினர்களுக்கும் இராமன் எப்படி உபசாரம் செய்கின்றாரோ என்று சீதை ஏங்கினாள் என்ற செய்தி,

**அருந்தும் மெல் அடகு ஆர் இட அருந்தும் என்று அழுங்கும்**
**விருந்துகண்டபோது என்உறுமோ என்றுவிம்மும்**
**மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு என்று மயங்கும்**
**இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டு எழாதாள். (343)**

என்னும் பாடல் நயத்தால் வெளிப்படுவதைக் காணலாம். அனைத்திற்கும் மேலாக இராமனின் பண்பை நினைந்து பெருமிதம் கொண்டாள் சீதை என்கிறார் கவிஞர். ஏன்? நீ அரசனாக முடிசூட்டிக்கொண்டு நாட்டை ஆளவேண்டும் என்று கூறப்பட்டபோதும், உனக்கு அரசனாகும் வாய்ப்பு இல்லை. பரதனே அதற்குரியவன்! நீ பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டும். இது அரச கட்டளை என்று கைகேயி கூறியபோதும் மகிழ்ச்சியும், துன்பமும் அடையாமல் இருந்த இராமனின் அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றது போன்ற திருமுகத்தை எண்ணி எண்ணி பூரிப்படைந்து நின்றாள் சீதை! இதை விளக்கும் கம்பனின் கவிநயம்.



சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையோ இராமன் திருமுகம்!

**மெய்த் திருப்பதம் மேவு என்ற போதினும்**
**இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும்**
**சித்திரத்தின் அலந்த செந் தாமரை**
**ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள். (348).**

இப்படிப்பட்ட பல்வேறு நிலையிலே கலங்கிக் கொண்டு காட்சியளித்த அந்தப்பெண்தெய்வமே சீதையாக இருத்தல் வேண்டும் என்று முடிவுகட்டிய அனுமன், சீதையிடம் சென்று தன்னை இராமதூதனாக வெளிப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தார். ஆனால் அப்போது திடீரென்று அங்கே சலசலப்பு ஏற்பட்டது. ஆம்! பலபெண்டிர் படைசூழ அந்தக்கொடியவனான இராவணன் வந்து கொண்டிருந்தான். அவன் வருவதை அறிந்து அங்கேயே (அம்மரத்தின் உச்சிக்கொம்பிலேயே) இருந்தார் அனுமன்.!

**நிந்தனைப்படலம் :**

சீதா சிறை இருந்த அசோகமரத்தடிக்கு வந்த இராவணன், தன் வீராதி வீர, சூராதி சூரச் செயல்களையெல்லாம் தற்பெருமையாகக் கூறிக்கொண்டு இருந்தான். அவனை ஏறெடுத்தும் பாராமல் ஒரு துரும்பினும் எளியனாக அவனைச் சுட்டிக்காட்டி, அவனுடைய அடாத செயல்களை இழிவுபடுத்திக் கூறி, சீதாதேவி அவனை நிந்தித்துக் கூறும் கதைப்பகுதியைக் கூறுவதும், அதற்கு அவன் தன்னைப் பற்றிப் பெருமிதத்தோடு மென்மேலும் கூறும் விடைகளையும் கூறுவது ஆகையால் இது நிந்தனைப்படலம் என்று பொருள்படும்.

அதாவது இராவணன் தனது அரண்மனையிலிருந்து அசோகவனத்தில் தன்னால் சிறைவைக்கப்படிருந்த சீதாவைக்காண வந்தான். அப்போது அவனுடன் ஆரவாரம் செய்து கொண்டு வந்த அரம்பையர் கூட்டத்தையும் பணிப்பெண்களையும் தூரத்திலேயே நிறுத்திவிட்டு தான் மட்டும் தனியனாக சீதை இருந்த இடத்தை அடைந்தான் இராவணன். அவன் வருவதைக் கண்டு நடுங்கிப்போய் சீதா

அமர்ந்துகொண்ட காட்சியானது தன்னைக் கொல்லவரும் புலியைக்கண்ட மான்போலத் துன்பமுற்று, அவன் முன்பு ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு, இராவணனின் தற்பெருமைகளுக்கு அந்தத் துரும்பைப்பார்த்தே சவாலான விடைகளைக் கூறிக்கொண்டு வந்தாள்! இதைப் பார்த்த அனுமன் சீதையின் மனநிலையையும் கற்பின் திண்மையையும் புரிந்து கொண்டு சீதையை வாழ்த்தினான். மனநிம்மதி அடைந்தான்.

சீதையின் அருகிலே சென்ற இராவணன் தன்னுடைய பெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியும் தான்பெற்ற வரங்களினால் தன்னிடத்தே குவிந்து கிடக்கும் செல்வ வளத்தையும் எடுத்துரைத்து தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். மேலும் தான் மூன்று லோகங்களையும் அடிமைகொண்டவன் என்பதையும் தான் சீதையின் அடிமையாகிவிட்டு அவளுடைய அன்பிற்காக அடிமையாகி விட்டதையும் எடுத்துரைத்தான்.

அவற்றைக் கேட்ட சீதை அவனைத்துரும்பே என்றும் அறிவற்றவனே என்றும் கோழை என்றும் பலவாறாக ஏசினாள்.

தன் பெருமையைக் கூறிநின்ற இராவணனுக்கு சீதை அளித்த நிந்தனைச் சுடுமொழிகள் கற்போர்க்குக் காவியச்சுவையை அதிகரிக்கச் செய்யும் சிறந்த பாடல்களாக அமைந்துள்ளதைக் காணலாம்! சிறைபட்டிருந்த சீதை. இராமனது வில் அம்பின் மேன்மையைக் கூறும்போது, அது மேருமலையையே ஊடுருவிச் செல்லக் கூடியது என்றும், விண்ணையும் பிளக்கக் கூடியது என்றும், இந்த அண்டத்திலுள்ள பதினான்கு லோகங்களையும் அழிக்கக் கூடியது என்றும் கூறி, அத்தகைய என் இராமனது வில்லின் பாணத்தால் உன்னுடைய பத்துத் தலைகளும் பூமியில் விழும் என்றும், நீ அழியப்போவது உறுதி என்றும் எச்சரித்ததைப் பின்வரும் பாடல் பகர்கின்றது.

**மேருவை உருவல்வேண்டின் விண்பிளந்து ஏகல் வேண்டின்**
**ஈர் ஏழு புவனம் யாவும் முற்றுவித்திடுதல் வேண்டின்**



**ஆரிவன் பகழி வல்லது அறிந்து இருந்து அறிவு இலாதாய்**
**சீரிய அல்ல சொல்லித் தலைபத்தும் சிந்துவாயோ!. (445)**

மேலும் இராமனுக்குப் பயந்தே நீ என்னைக் கபடத்தால் கவர்ந்தாய் ஆகையால் இராவணனைக் கோழை என்று குற்றம் சாட்டினாள் ஜானகி!

**அஞ்சினை ஆதலால் அன்று ஆரியன் அற்றம் நோக்கி**
**வஞ்சனை மான் ஒன்று ஏவி மாயையால் மறைந்து வந்தாய்**
**உய்ஞ்சனை போதி ஆயின் விடுதி உன் குலத்துக்கு எல்லாம்**
**நஞ்சினை எதிர்ந்தபோது நோக்குமே நினது நாட்டம் (446).**

பிரம்மனிடம் நீ பெற்ற வரத்தால் கர்வம்கொண்டு எதிர்ப்பவர் எவரும் இல்லை என்றும், அழிப்பவர் யாரும் இவ்வகிலத்தில் இல்லை என்றும் அதர்மச் செயல்களைப் புரிகின்றாய். ஆனால், அடே துரும்பே! இராவணா பிரம்மன் கொடுத்த வரமும் இராமனிடம் பொய்த்துப் போகும் என்று சீதா உரைத்ததைப் பின்வரும்பாடல் புலப்படுத்துகின்றது..

**பெற்றுடை வாளும் நாளும் பிறந்துடை உரனும் பின்னும்**
**மற்றுடை எவையும் தந்த மலர் அயன் முதலோர் வார்த்தை**
**வில்தொடை இராமன் கோத்து விடுதலும் விலக்குண்டு எல்லாம்**
**இற்று இடைந்து இறுதல்மெய்யே விளக்கின்முன் இருள்**
**உண்டாமோ? (449)**

**சீதை இராவணனைத் திருத்த அறிவுரை கூறுதல் :**

**அங்கண்மா ஞாலமும் விசும்பும் அஞ்சவாழ்**
**வெங்கணாய் புன்தொழில் விலக்க உட்கொளாய்**
**செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கொலாம்**
**எங்கள் நாயகனையும் நினைந்து ஏழை நீ (454).**

எனனும் பாட்டில், என் நாயகனான ஸ்ரீராமன் முப்பெரும் தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று கூறி, அவருடைய ஆற்றல் தெரியாமல் இருக்கும் ஓர் ஏழை நீ! என்று ஏளனம் செய்தாள் சீதா!

மேலும் புலனடக்கம் இல்லாத நீ அழியப்போவதும் உறுதி என்று சீதாதேவி கூறியதோடு, தர்மத்தைப் பின்பற்றி நடக்குமாறும் அறிவுறுத்தினாள்.

**பூவிலோன் ஆதியாகப் புலன்கள் போய் நெறியில் போகாத்**
**தேவரோ அவுணர் தாமோ நிலை நின்று வினையின் தீர்ந்தார்**
**ஏவல் எவ்வுலகும் செய்யச் செல்வம் நிற்கு இசைந்தது என்றால்**
**பாவமோ முன்நீ செய்த தருமமோ தெரியப் பாராய் (458).**

பிரம்மன் மட்டுமன்றி இராவணனுக்குச் சிவன் கொடுத்த வரங்களின் வாழ்வும், பெருங்செல்வம் வாழத்தானே ஒழிய அழிந்து போக அல்ல என்றும் ஜானகி அறிவுறுத்தினாள்!

**இப்பெருஞ் செல்வம் நின்கண் ஈந்த பேர் ஈசன் யாண்டும்**
**அப்பெருஞ் செல்வம் துய்ப்பான் நின்று மாதவத்தின் அன்றே**
**ஒப்பரும் திருவும் நீங்கி உரவொடும் உலக்கஉன்னி**
**தப்புதி அறத்தை எழாய் தருமத்தைக் காமியாயோ? (459).**

என்றெல்லாம் பலவாறு அவனை நிந்தித்தாள். மேலும் இராமனே சிவதனுசை அநாயாசமாக எடுத்து முறித்ததையும் சுட்டிக்காட்டி கார்த்த வீரியார்ச்சுனனால் இராவணன் பட்ட அசிங்கத்தையும் தோல்வியையும் எடுத்துரைத்து அந்தக் கார்த்தவீரியாச்சுனனை அழித்த பரசுராமரைத் தன் கணவரான ஸ்ரீராமர் தோற்கடித்து துரத்தியதையும் எடுத்துரைத்து மிகவும் கோழையாக இருப்பவன் இராவணன் என்றும் எடுத்துரைத்து நையாண்டி செய்தாள் சீதாதேவி.

இராவணன் வந்து சீதையின்முன் நின்று தன்னுடைய பெருமையைக் கூறி ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டியபோதெல்லாம் ஒரு துரும்பைக் கிள்ளி முன்னால் எறிந்து விட்டு அத்துரும்பைப்பார்த்து தான் குனிந்த தலையோடு தான் பதில்சொல்வாள் ஜானகி. அவனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அத்தகைய கற்புநிலையைக் கொண்டவளாக இருந்தாள் அன்னை சீதா!

ஆனால் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளாத இராவணன் தன்னைத்தானே மென்மேலும் புகழ்ந்து



கொண்டான். தன் பெருமைகளைத் தம்பட்டம் அடித்துக்கொண்டான். இறுதியில் "இன்னும் இரண்டு மாதங்கள்தான் நான் பொறுத்துக் கொண்டிருப்பேன். அதற்குள் நீ இணங்கவில்லை என்றாள் உன்னைக்கொன்று தின்றுவிடுவேன். இது உறுதி" என்று கூறிவிட்டு அரக்கியர்களைப் பார்த்து அந்தச் சீதையைப் பணியவைக்கும் மார்க்கத்தையும், உபாயங்களையும் செய்யுங்கள் என்றும் கூறிவிட்டுப் போனான். பணிய வைப்பவர்களுக்கு பொன்னும், பொருளும் வாரிவாரிக்கொடுப்பதாகவும், பரிசு அறிவித்துச் சென்றான். அதனால் அவர்கள் மாதாசீதையை அதட்டினார்கள். சீதா நடுநடுங்கினாள். ஆனால் திரிசடை அவர்களைத் தடுத்து ஜானகிக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினாள்.

**திரிசடை கண்ட கனவுகள் :**

இராவணன் அங்கு வருவதற்கு முன் விடியற்காலை நேரத்தில் தான் ஒரு கனவு கண்டதாகவும், அது நிச்சயம் பலிக்கும் என்று திரிசடை கூற, அக்கனவைக் கூறுமாறு சீதா வேண்ட, தன்கனவை எடுத்துரைத்தாள் திரிசடை.

நுழைந்து தாம் கூட்டிவந்த புலிக் கூட்டங்களின் உதவியோடு, அங்கிருந்த எண்ணற்ற மதம் நிறைந்த யானைகளைக் கொன்று குவித்துவிட்டு, ஒரு மயிலைத் தம்மோடு அழைத்துச் சென்றதாகக் கனவு கண்டதாக எடுத்துரைத்தாள்! மேலும் மங்களகரமான கை, விளக்கு ஒன்றை ஏந்திக்கொண்டு, இராவணனுடைய அரண்மனையிலிருந்தும் வெளியேறினாள். அவ்வாறு வெளியேறிச் சென்றவள் தன் தந்தையான விபீஷணனுடைய மாளிகைக்குள் நுழைந்தாள் என்றும், அப்பொழுது திடீரென்று தன்கனவு தடைப்பட்டதால் விழித்துக் கொண்டதாகவும், இரண்டுகனவுகளைத் தான் அந்த விடியற்காலை நேரத்தில் கண்டதாக சீதைக்குத் திரிசடை கூறினாள்!

**கனவுகளின் அர்த்தங்கள் :**

இதன் பொருளை அறியமாட்டாமல் தவித்தாள் சீதை. அக்கனவின் பொருள் என்னவாக இருக்கும் என்று அறிந்து

கொள்ளத்துடித்தாள். நல்லியல்புகள் கொண்டவளான அவள்சீதைக்கும் புலப்படுமாறு தான்யூகித்த விளக்கங்களைச் சொன்னாள்!

முதலில் சீதை கண்ட ஒருகனவைக் கம்பர் வழிநின்று காண்போம்.

**"என்றனள் இயம்பி வேறு இன்னும் கேட்டியால்**
**இன்று இவண் இப்பொழுது இயைந்தது ஓர்கனா**
**வன் துணைக்கோள்அரி இரண்டு மாறு இலாக்**
**குன்றிடை உழுவை அம் குழுக்கொண்டு ஈண்டியே" (378).**

**"வரம்பு இலாத மதகரி உறையும் அவ்வனம்**
**நிரம்புற வளர்ந்தன நெருக்கி நேர்ந்தன**
**வரம்பு அறு பிணம்படக் கொன்று மாறுஇலாப்**
**புரம்புக இருந்தது ஓர் மயிலும் போயதால்" (379)**

இதன் பொருளை அறியமாட்டாமல் இருந்த சீதைக்கும் புலப்படுமாறு ஆண்சிங்கங்கள் ஸ்ரீராமனும் லட்சுமணன் என்றும், அவர்கள் வானரங்களாகிய புலிக்கூட்டங்களைத் தம்மோடு படையாகத்திரட்டி வந்தனர் என்றும், மதம்கொண்ட யானைகளாகிய இராவணன் உள்ளிட்ட எண்ணற்ற அரக்கர்களை அழித்து, சீதையாகிய பெண்மயிலைத் தம்மோடு அழைத்துச் சென்றனர் என்பதையும் விளக்குவதாகும் என்றும், மற்றொரு கனவில் குறிப்பிடப்பட்ட மங்களகரமான பெண் ஸ்ரீமகாலட்சுமி என்றும், அவள் ஏந்திச் சென்றது இலங்கையின் அதிகாரமாகிய அரசபதவி என்றும், அவள் இராவணன் அரண்மனையை விட்டு வெளியேறி, வீடணன் மாளிகைக்குள் சென்றதால், விரைவில் இராவணன் இலங்கையின் அரசாட்சியைப் பறிகொடுத்துவிட, வீடணனுக்கு அந்த அரசப்பதவி கிடைக்கும் என்றும்பலனை எடுத்துரைத்தாள். மேலும் இது அதிகாலை நேரத்தில் கண்டகனவாகையால் நிச்சயம் நிறைவேறும் என்றும் துன்பப்படாமல் இருக்குமாறும் சீதைக்கு ஆறுதல் கூறினாள்!



திரிசடை தான் கண்ட கனவையும், கனவின் பலனையும் சீதைக்குக் கூறியதால் பெரிதும் மனம் மகிழ்ந்தாள் சீதா. இனி நன்மையே உண்டாகும் என்றும் ஆறுதல் கூறியதும் அறியற்பாலது.

**உருக்காட்டுப் படலம் :**

அனுமன் தான் ஸ்ரீராமச் சந்திரமூர்த்தியின் தூதுவன் என்று கூறிக்கொண்டும், அவளை மீட்பதற்காக வந்த ஸ்ரீராமரின் அன்பிற்குரிய வானரன் என்றும் கூறி, தன்னுடைய உருவத்தைச் சீதைக்குக்காட்டியதும், நிரூபித்தலுமாகிய கதையைக் கூறுவது ஆகையால் உருக்காட்டுப் படலம் என்றழைக்கப்படுகின்றது.

இராவணன் சென்ற பின்னர் சீதையைக் காணும் தகுந்த சமயம் இதுவே என்று தீர்மானித்த அனுமன் ஒரு மந்திரத்தை ஜபித்து அந்த அரக்கியர்களை எல்லாம் தன் மந்திரச் சக்தியினால் அயர்ந்து தூங்கச் செய்தார்.

அந்த நேரத்தில் துயரம் பொங்கியதால் தன்னுடைய விதியை நொந்து கொண்ட சீதாப்பிராட்டி தன் கணவரான ஸ்ரீராமர் தன்னைத்தேடி வருவாரோ? இல்லையோ? அயலான் ஆகிய இராவண அரக்கனின் இடம் சேர்ந்தவளை மீண்டும் மீட்கவேண்டாம் என்று நினைத்துவிட்டார்களோ! இலக்குவனைத்தான் கடிந்து சொன்ன வார்த்தைகளைக் கேள்விப்பட்டு அறிவற்ற சீதை நமக்கு வேண்டாம் என்று புறக்கணித்து விட்டாரோ?

இல்லையென்றால், நம்மைப் பிரிந்த பிறகு மீண்டும் பரதன் வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டாரோ? அதனால் தான் தன்னை மீட்கவரவில்லையோ என்றெல்லாம் நினைத்து வருந்தினாள் அன்னை. அத்தகு நிலையில் தான் ஏன் இன்னும் உயிர்வாழ்தல்வேண்டும்? தேவையற்றதே என்று நினைத்தாள். அரக்கியர்களும் காவலர்களும் அயர்ந்த உறக்கத்தில் இருந்ததால் தான் அமர்ந்திருந்த மரத்தில் மரத்தைச் சுற்றியிருந்த குருக்கத்திக் கொடியினால் தன் கழுத்தை இறுக்கிக் கொண்டு

தன் இன்னுயிர் விடத்துணிந்தாள் அந்த கற்பினுக்கு அணியானவள்!

அப்போது "அண்டர் நாயகன் இராமனின் அருள்தூதன் நான்" என்று கூறிக்கொண்டு சீதாதேவியின்முன் சென்று நின்றார் அனுமன். மேலும் "ஸ்ரீராமபிரான் என்னை அனுப்பிவைத்தார். நீங்கள் இருக்குமிடம் தெரியாத காரணத்தால்தான் இத்தனை நாட்கள் ஆயின என்று சொல்லி சீதாவின் செயலைத் தடுத்து நிறுத்தினான் அனுமன்." ஆனால் இதுவும் ஓர் அரக்கனின் மாயச் செயலாக இருக்குமோ என்று எண்ணி சந்தேகம் கொண்டாள் ஜானகி. எனவே தனது சந்தேகத்தைப்போக்கிக்கொள்ள வீரனே நீயார் என்று அனுமனைப் பார்த்துக்கேட்டாள்.

அதற்கு அனுமன் சுக்கிரீவனிடம் ஸ்ரீராமலட்சுமணர்களுக்கு ஏற்பட்ட தொடர்பையும், நட்பையும் கூறி, தான் சுக்ரீவனின் அமைச்சன் என்பதையும் எடுத்துச் சொல்லி ஸ்ரீராமர் அனுப்பிய தூதுவன் என்று கூறி ஸ்ரீராமர் கொடுத்தனுப்பிய கணையாழியையும் (மோதிரத்தையும்) காண்பித்தார் அனுமார். அதைக்கண்டவுடன் அதை வாங்கி தன் கண்களில் ஒற்றிக்கொண்டு மார்போடு அனைத்துக் கொண்டு வஞ்சகர் ஊர் வந்தனையோ என்று அழுது புலம்பினாள். ஜானகியின் வடிவழகையும் சீதையைப் பிரிந்ததனால் அவர் அடைந்துள்ள துயரத்தையும் எல்லாம் எடுத்துரைத்தார்.

மேலும் நீ பெருங்கடலைக் கடந்தது எவ்வாறு என்று அனுமனிடம் கேள்வி எழுப்பிய சீதைக்குத் தன் விஸ்வரூபத்தைக் காட்டினார் அனுமார். அதைக் கண்டு வியந்த பிராட்டி அவ்வுருவை உடனே சுருக்கிக் கொள்ளுமாறும் வேண்டினாள். அனுமனைக்கண்ட சீதைக்குத் தான் இராமனோடு சேர்ந்து விட்டதைப் போன்றே உணர்வு ஏற்பட்டது.

**சூடாமணிப்படலம். (சூளாமணிப்படலம்) :**

சீதாதேவியின் துயரநிலையைக்கண்ட அனுமன் "தாயே நீங்கள் என்தோள்மீது ஏறிக்கொள்ளுங்கள். நான் மிகச்சிறிய நேரத்திலேலே உங்களைக் கொண்டுபோய் ஸ்ரீராமனிடம் சேர்ப்பேன். எத்துணை அரக்கர் திரண்டு வந்தாலும் அவர்களை அழித்து உம்மை எவ்விதச் சிரமமும் இன்றி ஸ்ரீராமரிடம் கொண்டு சேர்ப்பேன்" என்று வேண்டினார். அதற்குப்பல காரணங்களைச் சொல்லி நிராகரித்தார் சீதாதேவி.



**அவற்றுள் ஒன்றினைக் காண்போம் !**

**"அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ**
**எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்**
**சொல்லினால் சுடுவேன் அது தூயவன்**
**வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்"**

என்ற சீதையின் பதிலால் தன் ஒருத்தியாலேயே இலங்கையையும், அங்குள்ள மக்களையும் சுட்டெரித்து விடக்கூடிய கற்பினையும் தவவலிமையினையும் தான் உடையவள் என்றாலும், அது ஸ்ரீராமனின் வில்லாற்றலுக்கு மாசு கற்பிக்கும் செயலாகி விடும் ஆதலால் அவ்வாறு செய்யாமல் தடுத்துக்கொண்டுள்ளேன்" என்று கூறுவதால் அறியலாம். அதைக்கேட்ட அனுமன், ஸ்ரீராமருக்கு நீங்கள் சொல்லியனுப்பும் செய்தியாது என்று கேட்டான். அதற்கு தான் இந்தச் சிறையில் ஒரு மாதகாலம் மட்டுமே இருக்கப்போவதாகவும் அதற்குள் வந்து ஸ்ரீராமர் தன்னை மீட்டுச் செல்லவேண்டும் என்றும் இல்லையேல் உயிரைப் போக்கிக் கொள்ளப்போவதாகவும் இராமன்மேல் ஆணையிட்டுக் கூறினார்.

மேலும், குறிப்பிட்ட காலப்பகுதி கடந்து வரவேண்டாம்! நான் உயிர் தரித்திரேன். ஆகையால் கங்கைக்குச் சென்று எனக்குச் செய்யப்படவேண்டிய ஈமக்கடன்களைச் செய்து விடுமாறு கூறுவாயாக என்றாள். மேலும் தன்னைத் திருமணம் செய்து கொண்ட போது என்னைத்தவிர வேறு ஒரு பெண்ணைத் தன் மனத்தாலும் தொடமாட்டேன் என்று அவர் எனக்குக் கூறிய வாக்குறுதியை நினைவுபடுத்துமாறும் பற்பல செய்திகளைக் கூறினார் சீதாப்பிராட்டியார்.

ஸ்ரீராமாயணம் ஒரு வில், ஓர் இல், ஒருசொல் என்ற மூன்றையும் கதைக்கருவாக உடையது என்பர். அதாவது மிகச்

சிறந்த ஒழுக்கமான ஒரேயொரு மனைவியை மணந்து கொண்டு வாழ்ந்தவன். அவன் வாழ்நாளில் மனைவியைத்தவிர வேறு எந்தப்பெண்ணையும் அடைய மனத்தாலும் நினைத்திடாத பெரும்பண்பாளன் என்று ஸ்ரீராமனைப்போற்றுவார்கள். அதனை எடுத்துக்காட்டுவது பின்வரும் பாடலாகும்.

**"வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்**
**இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச்**
**சிந்தை யாலும் தொடேன் என்ற செவ்வரம்**
**தந்த வார்த்தைத் திருச்செவி சாற்றுவாய்"**

என்பதன் பொருள்விளக்கத்தை எடுத்துரைப்பதால் கம்பன் கவிநயத்தைக் காணலாம்.

ஸ்ரீராமன் ஏகபத்தினி விரதன். ஆகையால்தான் திருமணம் நடந்தபோது உன்னைத் தவிர வேறு யாரையும் என்மனதாலும் தொடேன் என்று அங்கு கூறவில்லை. அப்படி கூறியதாக அவர்களின் மண வினையின் போது அத்தகைய பாடலும் கூறப்படவில்லை. ஆனால் அசோக வனத்தில் சிறையிருந்தபோது மணநாளின்போது இராமன் கொடுத்த அவ்வரத்தை அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதாதேவி எண்ணிப்பார்ப்பதாக வருவதுதான் வந்தெனைக் கரம்பற்றிய வைகல்வாய் என்ற இந்தப்பாடல் ஆகும். இது ஸ்ரீராமனுக்கும், சீதாதேவிக்கும் மட்டுமே தெரிந்த அந்தரங்கச் செய்திகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்க! தனக்கும் ஸ்ரீராமனுக்கும் மட்டுமே தெரிந்த சில செய்திகளாக சீதை அனுமனிடம் கூறி, நினைவு படுத்தவும் வேண்டினாள்!

வனவாசம் சென்றபோது ஆசை மிகுதியால் அந்தணன் கேட்ட பசுக்களின் எண்ணிக்கை, நேரம் காலம் பார்க்காமல் யாசகம் கேட்பவர்கள் உள்ளனர் என்பதற்கு அத்தாட்சி யாகும். கோபத்திற்கு பதில் இன்முக இராமன் அதையும் கொடுத்து அவன் ஆசையைப் பூர்த்தி செய்து வந்தார் என்று இராமனின் பண்பை தன் மனதிற்குள் நினைத்துப் பாராட்டிக்கொண்டாள் சீதை.



இந்திரன்மகன் சயந்தன் தனக்குச் செய்த தீமையைப் பொறுத்துக்கொண்டு, சீதா அவனை மன்னித்ததும், மன்னித்துவிட்டுவிடுமாறு ஸ்ரீராமனை வற்புறுத்தியதும் சீதாவின் சரணாகதி ஏற்கும் நிலையைக் குறிப்பிடுவதாகும்.

அனுமன் தோள்மீது ஏறிக்கொள் என்று வேண்டியபோது சீதை உரைத்த மொழியால் வெளிப்படும் கற்பு, மற்றும் தன்னாலேயே இலங்கையைத் தன் கற்பாற்றலால் அழிக்க முடியும் என்று கூறிய திடமான எண்ணத்தைக் காட்டுகின்றது.

அனுமனுக்கு வாலில் வைக்கப்பட்டதீயால் எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது என்று வேண்டிய போது அவள் கோரிக்கை அக்கினிதேவனால் காப்பாற்றப்பட்டது. சீதாவின் கற்புத்திண்மைக்கும் அவளால் இலங்கையை அழித்தலாகிய செயலையும் செய்யமுடியும் என்பதற்கும் உதாரணமாகத் திகழ்வதைக் காணலாம்.

சூளாமணி என்றாலும் சூடாமணி என்றாலும் பெண்கள் தலையின் கூந்தலின் பிற்பகுதியில் (பின்புறத்தில்) அணியும் ஆபரணம். தன்னுடைய மற்ற அணிகலன்களைக் கழற்றி எறிந்தவளின் தலையில் அதுமட்டும் இருந்தது. அதை இப்போது பயன் படுத்தினாள்.

மேலும் இராவணன் தன்பராக்கிரமத்தைப் பாராட்டிக்கொண்டபோது, ஏ இராவணா! "உன்னை வெற்றிகொண்டு, உன்கொட்டத்தை அடக்கிச் சிறையில் வைத்திருந்த கார்த்தவீரியார்ச்சுணனை பரசுராமர் கொன்றார் அந்தப் பரசுராமனையே வெற்றிகொண்டு அவருடைய தவப்பயன்கள் அனைத்தையும் தாரைவார்த்துதர, அதைப்பெற்ற வீரரும், இனிய சுவாபத்தையும் உடையவர் என் கணவனாகிய ஸ்ரீராமர் என்றெல்லாம் பற்பலவிதமாக இராமர் பராக்கிரமத்தை எடுத்துரைத்த சீதையின் மனோதிடம் அறியத்தக்கது.

**ஆயிரம் தடக்கையால் நின் ஐந் நான்கு கரமும் பற்றி**
**வாய்விழிகுருதிசோரக் குத்தி வான் சிறையில் வைத்த**

**தூயவன் வயிரத்தோள்கள் துணித்தவன் தொலைந்த மாற்றம்**
**நீயறிந்திலையோ நீதி நிலை அறிந்திடாத நீசா (463).**

என்ற பாடல்மேலே கூறப்பட்ட பொருள்விளக்கத்தைத் தரும் பாடலாகும்.

இறுதியாக, தன்னுயிர் காத்த அனுமனுக்கு சீதை நன்றி தெரிவித்தாள்!

**மும்மையாம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன் தூது ஆய்**
**செம்மையால் உயிர் தந்தாய்க்குச் செயல் என்னால் எளியது உண்டே**
**அம்மையாய் அப்பனான அத்தனே அருளின் வாழ்வே**
**இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோடு என்றாள். (558)**

துன்பத்தால் துவண்ட சீதை மனம் கசந்து சொன்ன செய்தியைக் கூறும் பின்வரும்பாடலால், அரக்கனுடைய அசோகவனத்துச் சிறையில் இன்னும் ஒருமாத காலம் மட்டுமே உயிர்தரித்து வாழ்வேன். அதற்குள்ளாக தன்னை வந்து மீட்டுக்கொள்ளவேண்டியது ஸ்ரீராமனின் கடமை என்றும் கூறியவள் அதற்குப்பிறகு இங்கு வருவதைவிட கங்கைக்குச் சென்று அங்கே தனது இறந்துபடப்போகும் ஆன்மாவிற்கு ஈமக்காரியங்களைச் செய்து விடுவதே நல்லது என்று கூறியபோது சீதாவின் துன்பம் கட்டுக்கடங்காமல் இருந்த நிலையை எடுத்துரைப்பதாகும்.

**இன்னும் ஈண்டு ஒருதிங்கள் இருப்பல்யான்**
**நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்**
**பின்னை ஆவி பிடிக்ககிலேன் அந்த**
**மன்னன் ஆணை இதனை மனக்கொள் நீ (633).**

ஆனால் சீதாவைப் பிரிந்துவாடும் ஸ்ரீராமனின் மனநிலையைப் பின்வரும் பாடலால் எடுத்துரைத்து, தான் இராமனிடம் சென்று செய்தியைச் சொன்னவுடனே சீதையைப் பிரிந்து வாடும் இராமன் உடனே பயணப்பட்டு பெருஞ்சேனையோடு வந்த உம்மை மீட்டுக்கொள்வார் என்று



ஆறுதலும் தேறுதலும் கூறிச் சென்ற ஸ்ரீராமதூதனான அனுமன் மீண்டான்!

**மத்து உறு தயிர் என வந்து சென்று இடை**
**தத்துறும் உயிரோடு புலன்கள் தள்ளுறும்**
**பித்து நின் பிரிவினில் பிறந்த வேதனை**
**எத்தனை உள அவை எண்ணவும் ஈட்டவோ? (673).**

அவ்வாறு விடைபெற்றபோது சீதா தன்னுடைய சூளாமணியை அனுமனிடம் கொடுத்தாள்.

சூளாமணி என்றாலும் சூடாமணி என்றாலும் பெண்கள் தலையின் கூந்தலின் பிற்பகுதியில் (பின்புறத்தில்) அணியும் ஆபரணம் ஆகும்.. தன்னுடைய மற்ற அணிகலன்களைக் கழற்றி எறிந்தவளின் தலையில் அதுமட்டும் இருந்தது. மேலும் இத்தனை நாட்களாக தான் தன் முந்தானையில் முடிந்து வைத்திருந்த சூளாமணி என்னும் தலையில் அணியும் அணிகலனைக்கொடுத்து இராமனிடம் சேர்க்குமாறும் கேட்டுக்கொண்டாள். அதைப்பணிவுடன் வாங்கி பத்திரப்படுத்திக்கொண்ட அனுமன் தேவியிடம் விடைபெற்றுப் புறப்படத்தயார் ஆனார்.

**“தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்**
**பழுதுறாவகை பந்தனை செய்தனன் வந்தித்து**
**அழுது மும்மை வலம் கொண்டு இறைஞ்சினன் அன்போடு**
**எழுது பாவையும் ஏத்தனள் ஏகினன் இப்பால்” (693).**

**பொழில் இறுத்தபடலம் :**

சீதாதேவியைத் தேடிக் கண்டு பிடித்த தன்பணியைச் சிறப்புறச் செய்த அனுமனுக்கு, தான் அப்படியே திரும்பி விட்டால் தன் தூது முழுமை அடையாது என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே தான் வந்த செய்தியை இலங்கை நகரத்தார்க்குத் தெரியபடுத்துவதோடு இராவணனையும் கண்டு எச்சரித்துச் செல்லவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. எனவே அதைச் செயல்படுத்த நினைத்தார். சீதையிருந்த அசோகவனத்து மரங்களை அடியோடு பிடுங்கி எறிந்தும்

கிளைகளை ஒடித்தும் காய்கனிகளைத் சிதைத்தும் கபளீகரம் செய்தார். இதைப்பார்த்து பயந்துபோன அரக்கியர்கள் ஓடிச்சென்று இராவணனிடம் முறையிட்டனர். உடனே இராவணன் அந்தக் குரங்கைப்பிடித்து வருமாறு காவலாளிகளை அனுப்பினான்.

**கிங்கரர் வதைப்படலம் :**

அப்பொழிலாகிய சோலையைக் கிங்கரர்கள் காத்து வந்தனர் ஆகையால் இராவணன் ஆணைப்படி அவர்கள் அனுமனைப் பிடிக்கச் சென்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் அதிர்ச்சியும் பயமும் அடையுமாறு அனைவரையும் அழித்துவிட்டார் ஸ்ரீஹனுமான். அப்போது அங்கிருந்த சில அரக்கர்கள் ஓடிவந்து அனுமனைச் சூழ்ந்துகொண்டு தாக்கத்தொடங்கினர். ஒரு மிகப்பெரும் மரத்தைப்பிடுங்கி எடுத்துக்கொண்ட அனுமன் அதனால் அவர்களைத் தாக்கி அழித்தார். அதர்மவானாகிய இராவணனின் எடுபிடி ஆட்களாக இருந்த அரக்கர்களை அழித்த அனுமனுக்கு தேவர்கள் பூமாரி பொழிந்து ஆசீர்வதித்தனர்.

**சம்புமாலி வதைப்படலம் :**

சாதாரண குரங்கு என்று நினைத்துப் பல அரக்கர்களைப் பலிகொடுத்துவிட்டதால், இதைச்சாதாரணமாக ஏற்றுக்கொள்ளாமல் தன்னிடம் இருந்த சம்புமாலி என்ற மிகக்கொடிய அரக்கனை அனுப்பிவைத்தான் இராவணன். மிகப்பெரும் படையோடு சென்று போரிட்ட அச்சம்புமாலியைக் கண்டு தோரணவாயில்மேல் ஏறிநின்று கொண்டு ஆரவாரம் செய்து வரவேற்றார் அனுமான். சினம்கொண்ட சம்புமாலி தன் அரக்கர்சேனைகளை ஏவி அனுமனைத் தாக்கச் செய்தான்.

அனுமன் எழுவை என்னும் இரும்புத்தடியால் அத்தனை அரக்க வீரர்களையும் அச்சம்புமாலி திரட்டிவந்த நால்வகைப் படைகளையும் அழித்தார். அதனால் மிகுந்தகோபம் கொண்டு தன்னைத் தாக்கவந்த அச்சம்புமாலியினுடைய தேரை உடைத்த அனுமன் தேர்ப்பாகனையும் சம்புமாலியையும் தாக்கி தன்



கால்களில் போட்டு நசுக்கிக்கொன்றார். சம்புமாலி இறந்து விட்டதைத் தெரிவிக்க இராவணனிடம் ஓடிய சிலரால் பேசமுடியவில்லை. என்ன கூறுவது என்று தெரியாமல்வாயடைத்து நின்றனர். தம் கணவன்மார்கள் ஆயிரக்கணக்கில் ஒரு சாதாரணக் குரங்கால் கொல்லப்பட்டனர் என்று அறிந்த அரக்க மகளிர் எழுப்பிய அழுகை ஒலி அந்நகரெங்கும் எதிரொலித்தது.

**பஞ்ச சேனாபதிகள் வதைப்படலம் :**

இராவணனின் சேனையில் விரூபாட்சன் யூபாசன் துர்த்தரன் பிரகசன் பாசகர்ணன் என்னும் வலிமைமிக்க பஞ்ச சேனாபதிகள்(ஐவர்) இருந்தனர். குரங்கின் அட்டகாசத்தை அடக்கி அதைத்தாங்கள் சிறைபிடித்து வருவதாகவும் எனவே தங்களுக்கு உத்தரவு வழங்குமாறும் அவர்கள் இராவணனிடம் வேண்டினர். குரங்கின் வீர தீரத்தைக் கேட்டு அதிர்ந்து போயிருந்த இராவணன் உடனே சென்று அதனைக் கட்டிப்பிடித்து இழுத்துவாருங்கள் என்று அனுப்பிவைத்தான். அவர்கள் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு போருக்குத் தயார் ஆனார்கள்.

ஆனால் அந்த வீரர்களை எல்லாம் போருக்குச் செல்லவேண்டாம் என்றும் ஏனென்றால் அக்குரங்கை எதிர்த்துப் போரிடச் சென்றவர்களில் ஒருவர்கூட இதுவரை உயிருடன் திரும்பவில்லை என்றும் அரக்கியர் தடுத்து நிறுத்திப் புலம்பினர். அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப அனுமனோடு போரிடச் சென்ற பஞ்ச சோனாபதிகளும் அரக்க வீரர்களும் அடியோடு மாண்டழிந்தனர்.

**அக்க குமாரன் என்ற அட்சகுமாரன் (அட்சயகுமாரன்) வதைப்படலம் :**

அசோகவனத்தை முழுவதுமாக அழித்ததன்றி பல்லாயிரக்கணக்கான அரக்க வீரர்களைக் கொன்றுகுவித்து அரக்கியர்களை அமங்கலிகளாகவிட்டு அழுது புலம்பச்செய்த குரங்கானது தன்னுடன் போரிட யாரும் இல்லையா என்று

கேட்டுக்கொண்டு சோம்பல் முறித்துக்கொண்டு உள்ளது என்று காவலாளிகள் சிலர்வந்து இராவணனிடம் கூறினார்கள். இதைக்கேட்டு மிகுந்த சினம் கொண்ட இராவணன் தானே போருக்குச் செல்வதாகக் கூறி வெகுண்டு எழுந்தான்.

அப்போது அங்கு வந்த இராவணனுடைய மகன் அட்சகுமாரன் என்பவன் தன்னை அனுப்புமாறு இராவணனை வேண்டினான். மேகநாதனை இந்திரனோடு போர்புரிய அனுப்பி இந்திரஜித்தன் ஆக்கிய பெருமையைச் சுட்டிக்காட்டிய அட்சகுமாரன் தனக்கு இந்த வாய்ப்பைத் தருமாறு கேட்டான். அதை ஏற்றுக்கொண்ட இராவணன் அட்சகுமாரனை அனுப்பி அந்தக்குரங்கைப் பிடித்து வருமாறு ஆணையிட்டான். பெரும் படையோடு தன்னை எதிர்க்கவந்துள்ள அட்சகுமாரனை அவன் இராவணனோ அன்றி இந்திரஜித்தோ என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தான் அனுமன்.

ஆனால் அனுமனைக்கண்ட அட்சகுமாரன் இந்தக்குரங்கா இவ்வளவும் செய்தது என்று தன் தேர்ச்சாரதியைப் பார்த்து ஏளனமாகக் கேட்டான். அதற்கு உருவத்தைப்பார்த்து எடைபோடவேண்டாம். நமது அரசனாகிய இராவணனை ஜெயித்தவனும் வாலி என்ற குரங்குதான் என்று அறிவுரைகூறி ஜாக்கிரதையாகப் போரிடுமாறு கூறினான் தேர்ச்சாரதி.

இந்தக்குரங்கை அழித்து, உலகிலே வேறு எந்தக்குரங்கும் இல்லாமல் போகுமாறு குரங்கினத்தையே வேர் அறுப்பேன் என்று தாக்கத்தொடங்கினான் அட்சகுமாரன். அவனோடு அரக்கப்படை வீரர்களும்சேர்ந்து கடுமையாக அனுமனைத்தாக்கினர். அனுமன் அட்சகுமாரனுடைய தேரையும் மற்றவற்றையும் அழித்தார். அதனால் அனுமனைத் தன்தோள்களால் பிடித்து வளைத்துக்கொள்ள ஓடிய அட்சகுமாரனைத் தன் வாலினால் முழுவதுமாக சுற்றிக் கொண்டார் அனுமன். அட்சகுமாரனால் நிமிரமுடியவில்லை. அந்நிலையில் அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அனுமன். அட்சகுமாரனது குடல் சரிந்து விழுமாறும் வயிற்றில் குத்தி அவனை அழித்தார் அனுமன்..



அட்சகுமாரன் அனுமனால் அழிக்கப்பட்டதை அறிந்த இராவணன் கதிகலங்கிப்போனான். இராவணன் மனைவியும் அட்சகுமாரனின் தாயுமான மண்டோதரியின் புலம்பல் அந்த அரண்மனையில் எதிரொலித்தது.

**பாசப்படலம் :**

**அனுமன் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்ட படலம் :**

அனுமனோடு போர்புரிந்த இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தால் அனுமனைக் கட்டி இராவணன் அரண்மனைக்கு இழுத்துச் சென்றதை எடுத்துரைக்கும் கதைப்பகுதி.

தன் தம்பியான அட்சகுமாரன் அந்தக்குரங்கால் கொல்லப்பட்டதையும், அதனால் தனது தாயான மண்டோதரியின் அவலத்தையும் கண்ட இந்திரஜித் மிகவும் கோபம் கொண்டான். தனது தந்தையைப் பார்த்து அக்குரங்கின் வலிமையைத் தெரிந்து கொண்டபிறகும் பலபேரையும் குறிப்பாக என் தம்பியையும் போருக்கு அனுப்பி அனைவரின் மரணத்திற்கும் காரணமாகி விட்டீர்களே என்று தன் தந்தையை நொந்துகொண்டான். எனினும் தன் தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்கி இம்முறை நானே சென்று அக்குரங்கை அழித்து வருகின்றேன் என்று கூறி கணக்கற்ற படைகளைத் திரட்டிக்கொண்டு சென்றான்.

போர்க்களத்தில் இந்திரஜித்தைக் கண்ட அனுமன் இவனை வெற்றிகொண்டால் இந்திரனுக்கும் விடுதலைக் கிடைத்தாற்போல் ஆகும் என்று நினைத்து அந்த இந்திர ஜித்துடன் கடும் போர் புரிந்தான். ஒரு மிகப்பெரிய ஆச்சாமரத்தைப் பிடுங்கிக் கொண்டு அதனையே ஆயுதமாகக் கொண்டு போரிட்டு பல்லாயிரக்கணக்கில் அரக்கர்களை அழித்தான் ஸ்ரீஅனுமன். மிகப்பெரும் சேதத்தைத் தன்படைகளுக்கு ஏற்படுத்தும் இக்குரங்கை இப்போதே

அழிக்கவேண்டும் என்று நினைத்து தான் அரிதாகப் பயன்படுத்தும் பிரம்மாஸ்திரத்தை அதன்மேல் ஏவினான் இந்திரஜித். தன்னைத்தாக்கிய பிரம்மாஸ்திரத்தால் அனுமன் சிறிது நேரம் அதன் பிடியில் சிக்கித்தவித்தார். பிரம்மாவிடம் அனுமன் பெற்ற வரத்தால் அது உடனே தன் தளையை அவிழ்த்துக்கொள்ள அனுமன் அதிலிருந்து விடுபட்டான். ஆனால் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் நடப்பதைக்காணலாம் என்னும் ஆவலால் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டவனைப்போலவே கிடந்தார்.

பிரம்மாஸ்திரத்தால் கட்டப்பட்டவனை வேறு எதையும் கொண்டு கட்டக்கூடாது! இதை அறியாத அரக்கர் அனுமனைக்கயிறு கொண்டு கட்டியதால் பிரம்மாஸ்திரம் முழுமையாகப் பயனற்றுப்போயிற்று! குரங்கு இந்திரஜித்தால் கட்டப்பட்டது என்பதை ஓடோடி சென்று இராவணனிடம் கூறியோர்க்கு அவன் பரிசுப்பொருள்கள் கொடுத்தான். குரங்கைக் கொல்லாமல் கட்டி இழுத்துவருமாறு கட்டளையிடவே அனுமனைக்கட்டி இராவணனின் அரண்மனைக்கு வீதிகள் வழியாக இழுத்துச்சென்றனர். அரக்கர் பயம் நீங்கப்பெற்று அந்தக்குரங்கைக் கொல்லவேண்டும் அடிக்கவேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டும், அனுமனைச் சூழந்து கொண்டும் ஆரவாரம் செய்து கொண்டும், சிலர் அனுமனுடைய தேகத்தில் குத்தியும், தாக்கியும் ஆனந்தப்பட்டுக்கொண்டும் சூழ்ந்துகொண்டும் உடன் செல்ல அனுமன் இராவணனின் அரண்மனைக்குள் சென்றான்.

**பிணிவீட்டுப்படலம் (அனுமன் தூது) :**

பிரம்மாஸ்திரத்தின் பிடியிலிருந்து (பிரம்மனின் படைக்கலமான நாகக்கணை) விடுபட்ட அனுமன் இராவணன் அவையில் இராவணனைக்கண்டு சற்றும் பயம் கொள்ளாமல் சரிக்குச்சமானமாகப் பதில்கொடுத்து தான் இராமதூதன் என்பதையும் இராமனின் நண்பர்களையும் அதனால் பெற்றுள்ள படைபலத்தையும் எடுத்துரைத்து சீதாதேவியை இராமனிடம் ஒப்படைத்து சரணாகதி அடையுமாறு அறிவுரை கூறிய கதைப்பகுதியைக் கூறுவது.



அரண்மனையில் மிக உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த இராவணன் அனுமனைப்பார்த்து எனது நகரத்தில் இத்தனைப் பேரழிவை உண்டாக்கிய குரங்கே நீ யாரடா என்று பதைபதைக்கக் கேட்டான். தூதுவனாகிய தனக்கு ஓர் ஆசனமும் அளிக்காத இராவணனுடைய அகந்தையைப்பார்த்த அனுமன் தனது வாலினையே சுற்றிச் சுற்றி ஓர் உயர்ந்த ஆசனம்போல் அமைத்து அதன்மேல் ஏறி அமர்ந்து கொண்டான். தன்னை அடே என்ற இராவணனைத் தானும் அடே ராவணா! அடே ராவணா! என்றழைத்தே பதில்கூறினான் அனுமன். தான் சுக்கிரீவனின் அமைச்சன் என்றும், தற்போது ஸ்ரீராமரின் தூதுவன் என்ற முறையில் ஸ்ரீராமருடைய தர்ம பத்தினியான சீதாதேவியைத் தேடிக்கண்டுபிடிக்கும் தூதுவனாய் வந்துள்ளதாகவும் கூறினான். மேலும் இராவணா! நீ அற்பமான முறையிலே கோழைத்தனமாகக் கவர்ந்து வந்துவிட்டதால் அவரைத்தேடிக் கொண்டு பலதிசைகளிலும் சென்ற வானரங்களில் நான் தென் திசைக்கு வந்தவன் என்றும் தன்பெயர் அனுமன் என்றும் கூறினார்.

இராவணன் அரச சபையில் சரியாசனம் இட்டுக்கொண்டு, இராவணனுடைய கேள்விகளுக்குப் பதில் உரைத்து வந்த அனுமன், ஸ்ரீமந் நாராயணன் ஆகிய திருமாலே இராமனாக அயோத்தியில் அவதரித்து உள்ளார் என்றும், அவரால் இராவணனாகிய நீ அழியப்போவது உறுதி என்றும் எச்சரித்துக் கூறினார்.

**மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய**
**காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்தி**
**சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை**
**ஆலமும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான். (1124).**

அதோடு ஸ்ரீஇராமனின் பொற்பாதம் பிறப்பறுக்கும் என்றும் கூறி, இராமனைச்சரணடையுமாறு எச்சரித்தான் அனுமன்.

**அறம் தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்**
**திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்**
**இறந்து உக நூறித் தக்கோர் இடர் துடைத்து ஏக ஈண்டுப்**
**பிறந்தனன் தன் பொன்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான். (1125).**

என்றெல்லாம் எடுத்துரைத்த அனுமன் மேலும் ஸ்ரீராமர் வாலியை வதம் செய்து சுக்கிரீவனைக் கிஷ்கிந்தையின் அரசனாக்கியதையும் எடுத்துரைத்தான்! அதன் பின்னர் "வானரச்சேனைகளின் பலத்தால் உன்னையும் ஸ்ரீராமரால் அழிக்கமுடியும். எனவே நீ உன் தவற்றை உணர்ந்து சீதாதேவியை ஒப்படைக்காவிட்டால் நீயும் உன் குலமும் அடியோடு அழிந்து போகும்" என்றும் எச்சரித்தார்.

**இலங்கை எரியூட்டு படலம் :**

அதைக்கேட்ட இராவணன் அனுமனைக்கொல்லுமாறு உத்தரவிட்டான். ஆனால் இராவணனின் தம்பியும் தர்மம் அறிந்தவருமான விபீஷணர் தூதுவரைக் கொல்லக் கூடாது என்று தடுத்து நிறுத்தினார். வேறு வழியின்றி அனுமன் வாலில் தீப்பற்ற வைத்துத் துரத்திவிடுங்கள் என்று கட்டளையிட்டான் அந்த துர்மதி படைத்த இராவணன். தன்வாலில் அவர்கள் பற்றவைத்த அத்தீயைக் கொண்டே இலங்கையின் அனைத்து கட்டங்களின் மேலும் அரண்மனைகளின் மேலும் அமர்ந்து அவற்றைத் தீக்கிரையாகச் செய்தான் ஸ்ரீராமபக்த அனுமன்!

இதனிடையில் அனுமனுக்கு ஏற்பட்ட துன்பத்தை அறிந்த கற்புக்கரசியாம் சீதாதேவி அக்கினி பகவானிடம் அனுமனைத் தீண்டி அழிக்கவேண்டாம் என்று வேண்டிக்கொண்டாள்! அவருடைய வேண்டுகோளை அக்னிதேவன் நிறைவேற்றியதால் அனுமனுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படவில்லை. காற்றும் தீயும் கனன்று வீசியதால் இலங்கையே தீக்கிரையானதை அறிந்த அனுமன் கடலில் குதித்து தன் வாலின் தீயையும் அனைத்துக் கொண்டார்.

இந்நிலையில் எரியூட்டப்பட்ட இலங்கையில் இருந்த அன்னை சீதைக்கு ஏதேனும் இன்னல் நேரிட்டதோ என்ற



சந்தேகம் அனுமனுக்கு எழுந்தது. எனவே திரும்பிச் சென்று சீதாதேவியைக் கண்டு எவ்வித இன்னலும் இன்றி தேவி இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து மீண்டும் பவளமலையின் உச்சியில் ஏறி மகேந்திர மலைக்குத் தாவிச் சென்றடைந்தார்.

**திருவடி தொழுதபடலம் :**

தன்னுடைய வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த வானர வீரர்கள் இடையில் சென்று நின்றார் அனுமன். மேலும் அனுமன் மூலமாக நடந்தனவற்றை அறிந்து மகிழ்ந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ள கிஷ்கிந்தைக்குச் செல்லும் முன் சுக்கிரீவனுக்குச் சொந்தமான மது வனத்தில் மது வருந்தி அதன் ஒரு பகுதியையும் அழித்து விட்டனர் அந்த வானர வீரர்கள். ஆனால் அனுமன் மட்டும் காலத்தை வீணாக்கவிரும்பாமல் தன் வரவிற்காகக் காத்திருந்த ஸ்ரீராம லட்சுமண சுக்கிரீவர்களின் அருகிலே சென்று நின்றார். பின் அவர் தென்திசை திரும்பி அதற்கு வணக்கம் செலுத்தியதைக் கண்ட ஸ்ரீராமர் தனது குறிப்பால் உணரும் தன்மையால் சீதாவை அனுமன் தெற்குத்திசையில் கண்டதும் உண்டு, அனுமனால் போற்றத்தக்கதாய் அமைந்துள்ள சீதையின் கற்பும் நன்று என்று அறிந்துகொண்டார். ஆனந்தம் அடைந்தார்.

அப்போது அனுமன் ஸ்ரீராமரிடம்,

**"கண்டணன் கற்பினுக்கு அணியைக் கண்களால்**
**தென்திசை அலைகடல் இலங்கைத் தென்னகர்**
**அண்டர் நாயக! இனித்துறத்தி ஐயமும்**
**பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்."**

என்ற கவிநயம் மிக்கப்பாடலைக் கூறியதாக அமைத்துப் பாடியுள்ளார் கம்பர்.

அனைவரின் எதிர்ப்பார்பையும் உணர்ந்த அனுமன் முதலில் அனைவருடைய ஐயத்தையும் நீக்குமாறு கண்டனன் அதாவது அடியேன் கண்டு விட்டேன் என்று கூறி, நல்ல கற்புநிலையிலே இருந்தவளாகிய அச்சீதையை தெற்குத்

திசையிலே உள்ள இலங்கை மாநகரில் கண்டேன் என்று கூறி, கண்ட இடத்தைப் பின்னர் எடுத்துரைத்ததாலும் அனுமனின் சொல்லாற்றல் விளங்குகின்றது. இவற்றையெல்லாம் மனத்திலே இருத்திக் கொண்டிருந்ததாலேதான் இவனை சொல்லின் செல்வன் என்றது மிகப்பொருத்தமே என்று மனம் மகிழ்ந்தாராம் அந்த ஸ்ரீராமர்.

மேலும் "நல்லகுடிப் பிறப்பும் மிகுதியான பொறுமையும் சிறந்த கற்பும் உடையவளாக சீதாதேவி விளங்குகின்றாள் என்று அனுமன் எடுத்துரைக்க அனைவரும் அகம் மகிழ்ந்தனர். ஸ்ரீராமர் அந்த அனுமனைத் தன் மார்புடன் கட்டித்தழுவிக் கொண்டு தன் நன்றியறிதலைத் தெரிவித்ததோடு அத்தகைய செயலைச் செய்த அவ்வனுமனுடைய வீரத்தையும் வாயாரப்புகழ்ந்தார்.

இத்தருணத்தில் சீதாதேவியிடமிருந்து தான்பெற்றுவந்த சூடாமணியை அனுமன் கொடுத்த போது அதை வாங்கிய இராமனின் நிலையாகக் கம்பர் கூறும் பாடல்நயம் காண்போம்!

**பொடித்தன உரோமம் போந்து பொழிந்தன கண்ணீர் பொங்கித்**
**துடித்தன மார்பும் தோளும் தோன்றின வியர்வின் துள்ளி**
**மடித்தது மணிவாய் ஆவி வருவது போவது ஆகி**
**தடித்தது மேனி என்னே யார் உளர் தன்மை தேர்வார்? (1294)**

ஆம்! சூளாமணியைத் தன்கைகளில் பெற்ற ஸ்ரீராமனுடைய திருமேனியின் உரோமங்கள் குத்திட்டு நின்றன. கண்ணீர்வழிந்து பெருகியது. மார்பும்தோளும் பூரித்துத் துடித்தன! வியர்வைத்துளிகள் உண்டாக, அழகிய வாய் மடிப்புற, உயிரானது வருவதும்போவதுமாக நிலைபெற்று நின்றது என்றெல்லாம் இராமன் அடைந்த மெய்ப்பாடுகள் ஒரு சாதாரணமான, ஆனந்தச் சூழ்நிலைக்கு ஆட்பட்டவனான ஒரு மனிதனின் உணர்ச்சிகரமான சூழ்நிலையைப்போலவே விளங்கியது என்கின்றார் கம்பர்! மனிதப்பிறவி எடுத்துவந்த பெருமான் மனிதனாகவே வாழ்ந்துகாட்டிய வழிமுறைகள் நிரம்பியது இராமாயணம் என்பது சான்றோர்களின் கூற்றாகும்!



அப்போது சுக்கிரீவன் மகிழ்ந்து, ஐயனே இப்போது சீதை இருக்குமிடம் தெரிந்து விட்டது என்று கூறியவுடன்," ஆமாம் இனிமேலும் தாங்கள் சும்மா இருப்பதன் காரணம் யாது" என்று இராமன் வினவினார்.

ஸ்ரீராமனின் உள்ளக்கருத்தை அறிந்தவுடனே சுக்கிரீவன் தன்னுடைய எழுபது வெள்ளம் சேனைகளுக்கும் உடனே ஒன்றுதிரளுமாறு ஆணையிட்டான்.! அவனுடைய ஆணையை ஏற்ற அடுத்த நொடியிலேயே வானரச் சேனைகள் அனைத்தும் தென்திசைக் கடற்பரப்பை நோக்கிச் சென்றன.

அப்போது அந்த வீரர்கள் அனைவரும் "ஜயராம் ஸ்ரீராம் ஜயஜய ராம்" என்ற மந்திரத்தைக் கூறிக்கொண்டும் ஆரவாரம் செய்து கொண்டும், ஸ்ரீராம இலட்சுமண சுக்கிரீவன், ஆகியவர்களுக்கெல்லாம் ஜயகோஷம் எழுப்பிக்கொண்டும், இலங்கையிலே அனுமன் சாதித்த செயல்களை எல்லாம் கேட்டுக்கொண்டும் விரைவாக நடந்தனர் என்று கூறும் கம்பர், சுந்தரகாண்டத்தின் இறுதிப்படலமாகிய திருவடிதொழுத படலத்தின் கடைசி பாடலாகப் பின்வரும் கவிதையைத் தந்து முடித்துள்ளார்.

**அந்நெறி அரிது செல்ல அரிக்குலத்து அரசனோடும்**
**நல்நெறிக் குமரர்போக நயந்து உடன் புணர்ந்த சேனை**
**இந்நெடும் பழுவக்குன்றில் பகல்எலாம் இறுத்தபின்னர்**
**பன்னிரு பகலில் சென்று தென்திசைப் பரவை கண்டார்.! (1298)**

இலங்கைவேந்தனை அழிக்கவும், சீதாதேவியை மீட்கவும் புறப்பட்ட அந்த வானரவீரர்களோடு, அறநெறியில் செல்லும் குணம்கொண்ட இராமலட்சுமணனர்களும், அரசனாகிய சுக்கிரீவனோடும் இனிய பெரிய சோலைகளையும், காட்டுப்பகுதிகள் மிகுதியாகநிறைந்தவையாகவும் உடையதான பெரும்வழியைக்கடந்து, பதினொரு நாள்கள் கழித்து, பன்னிரண்டாம் நாள் பயணத்தில், தென்திசைக்கடலின் அந்தப் பரப்பினைக்கண்டார்கள் என்று கூறியுள்ளார்.

# 6. யுத்த காண்டம். கதைச் சுருக்கமும் கருத்துச் சுருக்கங்களும்

**கடவுள்வாழ்த்து :**

**ஒன்றே என்னின் ஒன்றேயாம் பலஎன்றுரைக்கின் பலவேயாம்**
**இன்றே என்னின் இன்றேயாம் உளதென்றுரைக்கின் உளதேயாம்**
**அன்றே என்னின் அன்றேயாம் ஆமென்றுரைக்கின் ஆமேயாம்**
**நன்றே நமது குடிவாழ்க்கை நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா!**

இப்பாடலில் கம்பநாட்டாழ்வாரின் கடவுள் கொள்கையும் ஒரு சிறப்பு நிலையைப் பெற்று விளங்குகின்றது. இதில் பெருமானுடைய இருப்பினைக் குறித்து, அதாவது பெருமானுடைய பல்வேறு நிலைகளைக் குறித்துத் தான் உணர்ந்தனவற்றை இப்பாடலில் எடுத்துரைக்கின்றார்.

இறைவனை ஒருவன் என்று குறிப்பிடுவோர்க்கு அவன் ஒருவன்தான்! இல்லையில்லை பகவானின் தோற்றங்களும் இருப்பு நிலையும் பற்பலவாகும் என்று உரைத்தால் அவன் பலவகைப் பட்டவன்தான்! இத்தன்மையை உடையவன் இல்லை என்றால், அவன் அத்தன்மையை உடையவனில்லை தான். ஆனால் அவனுக்கு அத்தன்மை இருக்கிறது என்றால், அவற்றை உடையவன்தான்! இறைவன் இல்லை என்போர்க்கு (அறிவிலிகளுக்கு) இல்லாதவனாகவும், இருக்கின்றார் என்போர்க்கு (ஞானிகளுக்கு) இருப்பவனாகவும் உள்ளவன் அவனே! இப்படியாகப்பலபேர் தத்தம் கருத்துகளுக்கு ஏற்ப பொருத்தம் உடையதாகவும், பொருத்தம் அற்றவைகளாகவும் பல்வேறு கருத்துக்களைக் கூறி, நமக்கு மயக்கத்தை ஏற்படுத்தினாலும், அம்மயக்கமாகிய அஞ்ஞானத்தை வென்று, அனைத்திற்கும் மேம்பட்டவனாக விளங்கும் அவ்விறைவன் உலகெங்கிலும் நிறைந்துள்ளான்! என்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும். அத்தோடு அமையாது அவனைப் போற்றிப்புகழ்ந்து உய்வு பெறுவதே நமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையாகும் என்பதனையும் உணர்ந்து நாம்



நடந்து கொள்வதே நமக்குரிய நல்வாழ்வு முறையாகும் என்கிறார் கம்பர்.

இதில் இறைவன் ஒருவனே உண்மை, மற்றவை எல்லாம் அவனுடைய மாயத்தோற்றங்கள் என்றுரைக்கும் அத்வைத மதத்தத்துவமும், இறைவன் என்பவன் இல்லை என்றுரைக்கும் அஞ்ஞானிகளின் கடவுள் மறுப்புக்கொள்கையும், சித்து, அசித்து என்ற இரண்டையும் தன் உறுப்புகளாகக் கொண்டு இயங்கும் பல்வேறு வடிவங்களைப் பெருமான் பெற்றுள்ளான் என்ற விசிஷ்டாத்துவைத தத்துவமும் கூறப்பட்டு, ஆழ்வார்களின் அடியொற்றி, விசிஷ்டாத்துவைதமே சாலச்சிறந்த வழிமுறை என்றுரைக்கும் கம்பரின் கவிநயமும், கடவுட்கொள்கையும் போற்றத்தக்கதாகும். கம்பராமாயணத்தின் இறுதிக் காண்டமாகிய யுத்தகாண்டத்தின் முதற்பாடலாக,

**“ஊழி திரியும் காலத்தும் உலையா நிலைய உயர்கிரியும்**
**வாழி வற்றா மறிகடலும் மண்ணும்வடபால் வான்தோய**
**பாழித்தெற்கு உள்ளன கிரியும் நிலனும் தாழப் பரந்தெழுந்த**
**எழு பத்தின் பெருவள்ளம் மகர வெள்ளத்து இறுத்த தால்”**

என்று ஓர் அரிய கற்பனை நயமிகுந்த பாடலை அருளியுள்ளார் கம்பநாட்டாழ்வார்.

அதாவது, எழுபது வெள்ளம் என்ற பெருந்தொகையை உடையதான குரங்குப்படையானது, புறப்பட்ட பன்னிரண்டாம் நாள் தெற்குத் திசைக் கடற்கரையில் வந்து தங்கியதால், ஊழிக்காலத்திலும் குன்றாத தன்மையுடைய மேரு மலையும், வற்றாத மறிகடலும், நிலவுலகமும் உயர்ந்துபோனதால் வடக்குத் திசை வானில்தோயும் படியாக உயர்ந்துபோனது! ஆனால் தென் திசையில் உள்ள மலைகளும், நிலவுலகமும் தாழ்ந்து போயின! என்று கூறி, அந்த எழுபது வெள்ள குரங்குப்படையின் பாரத்தால் இந்த நிலை ஏற்பட்டதாகப் பாடியுள்ளார் கவிச்சக்ரவர்த்தி!

**ஸ்ரீராமரின் சீரிய ஆலோசனை :**

இலங்கையின் அசோகவனத்தில் இராவணனால் சீதை சிறை வைக்கப்பட்டிருக்கின்றாள் என்று அறிந்ததும் அவளை மீட்பதற்காக அனைவரும் புறப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கைப்பல அக்ரோணிகளாத் திரண்டது. எழுபது வெள்ளப் படையாக பெருகியது.. அவ்வாறு திரண்ட வானரப்படைகளில் இருந்த நலன் என்பவன் பாதை அமைத்துத்தர பின்தொடர்ந்த அந்தப்படைகள் தென்திசைக் கடற்கரையைச் சென்றடைந்ததால் மேற்கண்ட மாற்றம் ஏற்பட்டது. பின்னர் அப்படைகள் மூன்று பிரிவாகப் பிரித்து தங்கவைக்கப்பட்டனர். அப்பொழுது ஸ்ரீராமர் சுக்கிரீவனைப்பார்த்து நம்மில் சிலர்வேண்டுமானால் இக்கடலைத் தாண்டும் வலிமை பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வளவு பேரும் இலங்கையை அடைய ஒரு மார்க்கத்தைக் காணவேண்டும் என்று கூறினார். அவர்களின் ஆலோசனை தொடர்ந்தது.

**இராவணன் ஆலோசனை :**

**ஆலோசனை மண்டபத்தில் அறம் உரைத்த தர்மாத்மா !**

இஃது இவ்வாறு இருக்க அதே காலப்பகுதியில், இலங்கையில் இராவணன் தன்னுடைய மந்திரிகளைக் கூட்டி அனுமனால் ஏற்பட்ட அவமானத்தையும் இழப்பையும் குறித்து விவாதித்தான். அந்த அனுமனை அழித்திருக்கவேண்டும், அதனால் போருக்குத் தயாராகி அவ்வனுமன் உள்ளிட்ட அவ்வளவு பேரையும் அழித்துவிட்டு., அரசனாகிய இராவணன் சீதையை அடைதல் வேண்டும் என்றும் கூறினர். பெரும்பாலானவர்கள் இராவணன் சீதையை அபகரித்து வந்ததே இதற்கு அடிப்படைக் காரணம் என்று அறிந்திருந்தும் பயத்தின் காரணமாக உண்மையை மறைத்து இராவணன் செயலை நியாயப் படுத்தினர். கவலை கொள்ள வேண்டாம் என்றும் ஆறுதல் கூறினர்.



**வீடணன் கூறிய உயர்கருத்து :**

ஆனால் இராவணனின் இரண்டாவது தம்பியான விபீஷணன் தர்மம் அறிந்தவன். அவன் இராவணன் செய்த அதர்மச் செயலான மாற்றான் மனைவியை அபகரித்தல் மிகவும் இழிவானது என்று கூறி பல்வேறு காரணங்களைக் கூறி சீதாதேவியை ஸ்ரீராமனிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் இல்லாவிட்டால் முழு அரக்கர் குலமும் அழிந்து போகும் என்றும் அறிவுரை கூறினான்.

**கும்பகர்ணன் கூறியது :**

ஆனால் கும்பகர்ணன் என்ற முதல்தம்பி "இராமனோடு போரிட்டு, வெற்றி பெற்ற பின்னரே சீதையைக் கவர்ந்து வந்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது இராவணனின் தவறு ஆகும். அவ்வாறு செய்யப்படவில்லை. ஆனாலும் இவ்வளவு நாட்களாக அவளைச் சிறையில், அதாவது அசோகவனத்தில் வைத்திருந்து, எதிரிகள் போரிட வந்துள்ள இத்தருணத்தில், இனிமேல் சீதையை விட்டுவிடுவது என்பது தேவையற்றது. அது வீரமும் ஆகாது. அது நம் அரக்க குலத்திற்கு இழுக்கு ஆகும் என்று கூறினான்." இவனைத்தொடர்ந்து எல்லோரும் இராவணனுக்கு அதர்மத்தையே போதித்து, சீதையை இராவணன் அடைவதே சரியானது என்று தவறான முடிவினையே எடுத்துரைக்க, அன்றைய பொழுதின் கூட்டம் எத்தகைய பயனுமின்றி முடிவடைந்தது.

**வீடணன் கூறிய நரசிம்ம அவதாரமும் இரண்யகசிபு வதையும்!**

அடுத்த நாள் காலையில் விரைவாகத் துயில் எழுந்த விபீஷணன் ஒருவேளை அண்ணன் வீட்டிற்குச் சென்று தர்மத்தை எடுத்துரைத்தால் மனம் திருந்துவானோ? மந்திர ஆலோசனை சபையில் தான் கூறியதை ஏற்றுக்கொள்ளக்

கூடாது என்றும், அது தன் தன்மானத்திற்கு இழுக்காகிவிடும் என்று நினைத்து, தான் சொல்லுவதை ஏற்கவில்லையோ என்னமோ? முயன்று பார்க்கலாம் என்ற எண்ணம் கொண்டு அவனுடைய அரண்மனைக்கே சென்று சீதையை இராமனிடம் சேர்த்து விடுமாறு அறிவுறுத்தினான். ஆனால் இராவணன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மனம் நொந்து திரும்பினார் விபீஷணர். அடுத்தநாள் தொடர்ந்த மந்திராலோசனை சபையிலும் தனது கருத்தை எடுத்துரைத்தார் விபீஷணன். அப்போது தன் தமையனுக்கு இரண்யகசிபு என்பவனின் கடவுளுக்கு எதிரான அதர்மச் செயல்களை எடுத்துரைத்து, அவன் மகனாகிய பிரகலாதனாலேயே அவன் நரசமிம்ம மூர்த்தியினால் அழிக்கப்பட்ட வரலாற்றையும் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

இரண்யகசிபுவின் இறுமாப்பினாலும், இறைவன் ஹரி என்பவனே இல்லை, தானே இவ்வுலகிற்கு இறைவன் என்று கூறிய ஆணவத்தாலும் அந்த அரக்கன் கிருத யுகத்தில் அழிக்கப்பட்டதை அறிந்த தர்மாத்மா வீடணன் அதை, திரேதாயுகத்து அரசனாகிய தன் அண்ணன் இராவணனுக்கு எடுத்துரைத்து அறிவுரை கூறும் இப்பகுதி வால்மீகி முனிவர் அருளிச்செய்த ஸ்ரீமத்ராமாயணத்தில் இடம்பெறவில்லை. அனைவருக்கும் படிப்பினையைத் தரும் இவ்வரிய வரலாற்றுச் சுருக்கம் கம்பநாட்டாழ்வாரால் மிக அற்புதமாகக் கையாளப்பட்டுள்ளது. அவ்வரலாற்றுச் சுருக்கத்தையும் அறிவோமாக!

இரண்யகசிபு என்ற அரக்க அரசனின் மகனுக்கு, சுக்கிராச்சாரியாரின் புதல்வர்கள் தமது குருகுலத்தில் கல்வி கற்பித்து வந்தார்கள். ஒருநாள் பள்ளியிலிருந்து திரும்பிவந்திருந்த தன்மகனிடம் கல்விச்சாலையில் அவன் பயின்றதை அறிய விரும்பி, வினவினான் தந்தை. மகன் "எட்டெழுத்து மந்திரத்திற்கு இணையான மந்திரமும், அதன்



கடவுளாகிய ஸ்ரீமந்நாராயணனின் சிறப்பையும் அறிந்ததாகக் கூற, அதிர்ந்து போனான் இரணியன். ஏனென்றால் அவன் இறைவன் என்பவன் இல்லை என்றும், தானே உலத்தின் தலைவன் என்றும் மக்களை வற்புறுத்தியதோடு கல்விச்சாலைகளிலும் "ஓம் இரண்யாய நமஹ." என்ற தனது பெயரையேதாரகமந்திரமாக உச்சரித்து, தன்னையே வணங்கவேண்டும் என்றும் கட்டனை இட்டிருந்தான். அக்கட்டளையை எல்லோரும் பின்பற்றி வந்தநிலையில் தனது மகன் மட்டும் அதை உச்சரிக்கவும் மறுத்து "ஹரி ஓம் நாராயணாய நமஹ:". என்று உச்சரித்து, அந்த நாராயணன் நாமத்தைப் புகழ்ந்ததைக்கேட்டும் கண்டும் பதைபதைத்தான் அரசன். மகனைத் திருத்த எவ்வளவோ முயன்றும் பலன் அளிக்காமல்போகவே இறுதியாக தனது மகனையே கொல்வதற்குத்தயாராகிப்போனான். யானையின் கால்களால் இடறவைத்துக் கொல்லுதல், கொடிய பாம்பின் நஞ்சை உட்கொள்ளச் செய்து அழித்தல், வெம்மை மிக்கச் சுண்ணாம்புக்காளவாயில் வைத்துச் சுட்டெரித்தல், மலை முகட்டினின்றும் உருட்டித்தள்ளி மாய்த்தல், கல்லைக்கட்டி கடலில் இட்டு அமிழ்த்தி அழித்தல் போன்றவைகளான எத்தனையோ மார்க்கங்களைப் பின்பற்றி தன்மகனை அழிக்கநினைத்த இரண்யகசிபுவிற்குத் தோல்வியே ஏற்பட்டது. அவற்றால் அதிர்ச்சியும், ஆவேசமும் கொண்ட கசிபு தன்மகனோடு தானே உலகின் தலைவன் என்பதைப் பலவாறு உணர்த்த நினைத்தான்! அப்படிப்பட்டநேரத்தில் தந்தைக்கும் மகனுக்கும் நடந்த தர்க்கங்களையும், இறுதியில் ஸ்ரீமந்நாராயணனின் நரசிம்ம அவதாரத்தால் இரண்யன் வதைக்கப்பட்டதையும் இச்சரித்திரம் கூறுகின்றது.

இங்கு இடம்பெற்றுள்ள இரண்யகசிபுவின் சரிதத்தில், எட்டெழுத்து மந்திரமான ஓம் நமோ நாராயணாய என்பதன் மகிமையைத் தந்தையான இரணியனுக்கு மகன் பிரகலாதன் கூறிய அறிவுரைகள் அனைத்தும் ஸ்ரீமந்நாராயணனை

அடைவதற்கு உரிய ஞானோபதேசமாக அமைந்துள்ளதை அறியலாம்.

**காமம் யாவையும் தருவதும் அப்பதம் கடந்தால்**
**சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த**
**ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்**
**நாமம் அல்லது கேள் நமோ நாராயணாய: (6.171)**

அதாவது பக்தன் ஒருவனுக்கு அவன் விரும்பியவற்றை எல்லாம் அளிப்பதும், சிறப்பான வீடுபேற்றைத் தருவதும், அந்தணர்களின் வேள்விகளில் கூறப்படுவதுமான ஓம்நமோ நாராயணாய என்னும் மந்திரத்தைவிடச் சிறந்தது எதுவுமில்லை என்று அறிவுறுத்தி,

**மண்ணின் நின்று மேல்மலர் அயன்உலகு உறவாழும்**
**எண்ணில் பூதங்களில் நிற்பன திரிவன இவற்றின்**
**உள்நிறைந்துள கரணத்தின் ஊங்கு உள உணர்வும்**
**எண்ணுகின்றது இவ்வெட்டெழுத்தே அன்றி பிறிதில்லை. (6.172)**

என்பதனால், விண்ணிலும் மண்ணிலும் வாழும் அனைத்திடங்களிலும் வாழுகின்ற அனைத்து உயிர்களிலும், ஊனும், உடலும் உயிர்வும்போல் நீக்கமற நிறைந்திருப்பவனும் இந்த எட்டெழுத்தின் மூலகர்த்தாவான ஸ்ரீமந்நாராயணனே என்னும் தனது கருத்தையும் பிரகலாதன் வாயிலாக வெளிப்படுத்துகின்றார் கம்பர்!

அதேபோல் 205 இல் கூறும் பாடலின்பொருளாக,

ஓம் என்னும் பிரணவமந்திரத்தின் உள்ளே பொருந்திய அ உ ம என்ற மூன்றனுள் அகார உயிராகத் திகழ்பவன் இறைவன். அவன் உலகப்பொருள்களின் உள்ளேயும் உள்ளான். வெளியேயும் உள்ளான். எனினும் அப்பொருள்களின் தன்மை (குணம்) தட்டாமல் புகையும் நெருப்புப் போல் உள்ளான். (205) என்பதும்



**சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதக்கூறிட்ட**
**கோணிலும் உளன் மாமேருக் குன்றினும் உளன் இந்நின்ற**
**தூணினும் உளன் நீசொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை**
**காணுதி விரைவின் என்றான் நன்றெனக் கனகன் சொன்னான்**
**(6.253)**

என்னும் பாடலால், ஸ்ரீமந் நாராயணன் ஆகிய ஹரி இருக்கும் இடங்களாக இரணியனுக்குப் பிரகலாதன் கூறியதும் கம்பரின் கடவுட் கொள்கைகளில் ஒன்று ஆகும். அதாவது, "ஒருசாண் என்ற அளவையிலும், ஓர் அணுவை நூறு பிரிவுகளாகப் பிரித்தால் அது எவ்வளவு மிகவும் நுண்மையாதோ அந்த நுண்மையிலும், மேரு மலையிலும், அனைத்துப் பொருள்களிலும் என்னுடைய ஸ்ரீஹரி இருக்கின்றான் என்று கூறி, நீ தட்டிக்காட்டிய இந்தத் தூணிலும் உள்ளார்"

என்று கூறியுள்ள நயத்தையும் இதனால் அறியலாம். மேலும் அணுவானது சிதைத்து பிளவுபடுத்தக் கூடியதே என்ற அறிவியல் உண்மையையும் இங்கே கம்பர் கையாண்டுள்ளதை அறியலாம். மேற்கூறப்பட்ட இடங்களில் ஸ்ரீஹரி இல்லை என்றால் பிரகலாதனைக்கொன்று விடுவதாக மிரட்டிய இரணியனுக்குப் பின்வருமாறு பதிலுரை அளித்தான் பிரகலாதன்.

**என்னுயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்று அன்று யான்முன்**
**சொன்னவன் தொட்டதொட்ட இடம் தோறும் தோன்றா னாயின்**
**என்னுயிர் யானே மாய்ப்பென் பின்னும் வாழ்வு உகப்பன் என்னின்**
**அன்னவர்க்கு அடியேன் அல்லன் என்றனன் அறிவின் மிக்கான்!**
**(6.255)**

இப்பாடலில் தன்னுடைய உயிரை இரண்யகசிபுவால் அழிக்க முடியாது என்று உறுதியோடு கூறிய அப்பாகவதன், தான்சொன்ன இடத்திலும், இரண்யகசிபு தேடும் இடத்திலும் அந்த ஸ்ரீஹரி இல்லாது போனால் தானே தன்னுயிரை மாய்த்துக்

கொள்வதாகக் கூறியுள்ளதால் பகவான் பக்தர்களின் வாக்கைப் பொய்யாக்கமாட்டான் என்று அப்பெருமானுடைய எளிமைத் தன்மையை (சௌலப்யம்) எடுத்துரைத்துள்ளார் கம்பர். அரக்கனாகிய அந்த இரண்யகசிபுவின் குடலைத் தன்னுடைய கூர்மையான நகங்களால் கவர்ந்து எடுத்து அவனை வதைத்தார் ஸ்ரீநரசிம்மபெருமான் என்று விபீஷணன் இராவணனுக்கு எடுத்துரைத்தான்.

பெருமான் நரசிம்ம அவதாரம் எடுத்து வந்து இரணியனைக் கொன்ற நாளை நரசிம்ம ஜயந்தி என்று கொண்டாடுகின்றோம். அதர்மனை பெருமான் வதைத்தநாள்! இரணியனை அழித்த விதமாக கம்பர் கூறுவது.

“திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது செங்கட் சீயம்!.” 6.256.

**ஆயவன் தன்னை மாயன் அந்தியில் அவன்பொன் கோயில்**
**வாயிலில் மணிக்கவான் மேல் வயிரவாள் உகிரின் வாயின்**
**மீஎழு குருதி பொங்க வெயில்விரி வயிர மார்பு**
**தீயெனப் பிளந்து நீக்கி தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்! (6.282)**

பிரகலாதனின் கண்முன்னாலேயே அவனுடைய தந்தை தன்னால் அழிக்கப்பட்டதற்காக சிறிதும் வருத்தப்படாமல் இருந்த தன்னுடைய பக்தனாகிய பிரகலாதனைப் பார்த்தபெருமான், அவனுடைய பக்தியைக்கண்டு வியந்தார். அவன் வேண்டும் வரங்களைத் தன்னிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறினார் நரசிம்ம மூர்த்தி. அவரிடம் பிரகலாதன் கேட்டவரம் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது.

**முன்பு பெறப்பெற்ற பேறோ முடியவில்லை**
**பின்பு பெறும் பேறும் உண்டோ பெருகுவனேல்**
**என்பு பெறாத இழிபிறவி எய்தினும் நின்**
**அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள் என்றான். (6.**

ஆம்! நரசிம்ம மூர்த்தியிடம் “பெருமானே உங்களால் நான்பெற்றுள்ள இந்த நற்பேறே போதுமானதாயிருக்க எனக்கு



மேலும் என்னவரம் தேவைப்படப்போகின்றது. ஆனாலும், தாங்கள் எனக்கு ஏதாவது வரம் கட்டாயம் தரவேண்டும் என்று விரும்பினால், அடியேனாகிய நான் எலும்பு இல்லாத ஓர் இழிந்த பிறவியை எடுத்தாலும், அந்தப்பிறவியிலும் எனக்கு உந்தன் அருளாகிய நற்பேற்றை மறவாதவனாக இருந்தாலே போதுமானது” என்று வேண்டினாராம் பிரகலாதன். 1 ஒருவேளை நம் கண்முன்னே பெருமான் தோன்றி நமக்கு என்னவரம் வேண்டும் கேளுங்கள் தருகின்றேன் என்றால் நாம் என்னென்னவரம் கேட்போம்!

மேற்கண்ட இரணியன் வதையை விபீஷ்ணன் இராவணனுக்குக் கூறியும் சீதையை விட்டு விடுமாறு அறிவுறுத்தியும் இராவணன் ஏற்காமல் போனான். இவ்வரிய கருத்துகளை எடுத்துரைத்து மனம் மாறுமாறு வேண்டினான் விபீஷ்ணன். ஆனால் அவனை நன்றி கெட்டவனே சீச்சி ஓடிப்போ என்றும் குலகௌரவத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே என்றும் கூறி விரட்டியடித்தான் இராவணன். அவன் மகனான இந்திரஜித்தும் கர்ஜித்து விபீஷணனைக் கேவலமான சொற்களால் ஏசினான். வெளியேறி விடுமாறும் எச்சரிக்கை விடுத்தான்.

**சரணாகதி அடைந்தான் தர்மாத்மா விபீஷணன் !**

வேறு வழியின்றி விபீஷணன் தன்னுடைய நன்மந்திரிகளான அனலன் சரபன் சம்பாதி பிரகசன் என்பவர்களோடு ஸ்ரீராமனைச் சரண் அடைவதற்காக வான்வழியே பறந்து வந்து சேர்ந்தான். இராவணனின் தம்பியாகிய வீபீஷணன் இராமனைச் சரண் அடைந்து இராமரோடு இணைந்து தர்மத்தைக் காக்கும் உறுதியோடு ஸ்ரீராமரை நாடி வந்துள்ளார் என்று அறிந்த வானரர் எவரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நம்பவும் இல்லை. இதில் வஞ்சனை இருக்கும் என்று எண்ணினர்.

**மாருதியின் முடிவே மாண்புடையது என்றார் ஸ்ரீராமர் :**

இதை அறிந்த ஸ்ரீராமர் சுக்கிரீவன் முதலியோரை வரவழைத்து வீடணனின் அடைக்கலத்தை ஏற்பதைக் குறித்து ஆலோசனை செய்தார். சுக்கிரீவன் அங்கதன், ஜாம்பவான் ஆகிய எல்லோருமே அவ்வரக்க குலத்தவனை தற்போது அடைக்கலம் ஏற்கக்கூடாது என்றே தத்தம் கருத்தை எடுத்துரைத்தனர். ஏனென்றால் சரண் அடைய வந்திருப்பதாகக் கூறும் இந்த வீடணன் தன் அண்ணனுக்காக ஒற்றனாக வந்திருக்கவும் கூடும்.! எனவே சரண் ஏற்பது நல்லதல்ல என்றனர். ஆனால் ஸ்ரீராமர் காட்டினில் வசித்த ஒரு மனிதக் குரங்கானது, தன்னுடைய மரமாகிய வீட்டிற்கு வந்து அடைக்கலம் அடைந்த ஒரு மனிதன், துரத்தி வந்த புலிக்காக அடைக்கலம் கொடுத்த அக்குரங்கையும் பலிகொடுக்கத் துணிந்த நிலையில், அவனுடைய செயலுக்காக கோபம் கொள்ளாத மனிதக்குரங்கு இறுதியில் அவனைக் காத்ததை எடுத்துரைத்தார்.

இதே போன்று புறாக்களும் தன்னிடம் சரணம் அடைந்த பசிவேட்கையால் தவித்த வேடன் ஒருவனுக்காக, தங்களையே உணவாகக் கொடுத்த உத்தம குணமுடைய புறாக்களின் கதையையும் எடுத்துரைத்து, தன்னை நாடி வந்தவனுக்கு அடைக்கலம் கொடுத்தே தீருவேன் என்ற உறுதியுடன் செயல்பட்டார்.

இந்த இரு சிறு கதைகளைச் சொல்லி தன்னைச் சரணாகதி அடைந்தவர்க்கு அடைக்கலம் கொடுத்து ஏற்பதே பேராண்மை என்று எடுத்துரைத்தார். இறுதியில் மாருதி என்ற அனுமனிடம் கருத்துக் கேட்கப் பட்டபோது இலங்கையில் தான்கண்ட விபீஷணன் அரண்மனையில் கமழ்ந்த தெய்வீக நறுமணத்தையும் புலாலும் மதுவும் மாதர்களும் இல்லாத தூய்மையானதாக அவனுடைய அரண்மனை விளங்கியதையும், அதைப்போலவே விபீஷணனும் தூய்மையானவன் என்று கூறி அவனை அடைக்கலமாகக் கொள்வதில் ஒரு தவறும் நேராது என்றான். அதைக் கேட்ட ஸ்ரீராமரும்



**மற்றினி உரைப்பதென்னோ? மாருதி வடித்துச்சொன்ன**
**பெற்றியே பெற்றி அன்னது அன்றுஎனின் பிறிதொன்றானும்**
**வெற்றியே பெறுக தோற்க வீக வீயாது வாழ்க**
**பற்றுதல் அன்றி உண்டோ? அடைக்கலம் பகர்கின்றாரை? (6.410)**

என்று கூறும் இப்பாடலில் அடைக்கலம் அடைந்தவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதின் கட்டாயத்தையும், இதனால் வெற்றிகிட்டினாலும், தோல்வியே ஏற்பட்டாலும் அதைப் பற்றித் தனக்குக் கவலை இல்லை என்றும் எடுத்துரைக்கின்றார்.

அதர்மவானாகிய இராவணனைப் பிரிந்து, அறத்தின் வழி தான்நடக்கவேண்டும் என்ற கொள்கை உடையவன் விபீஷணன். அவன் தன்னைத்தேடி, அபயம் கேட்டு வந்தபோது, பலரும் மறுத்துரைக்க, அதற்கு ஸ்ரீமந்நாராயணன் மேற்கொண்ட பல சரணாகதிகளை மற்றவர்களுக்கு இராமன் எடுத்துரைத்தான்.

அவ்வாறு கூறப்பட்டுள்ளவை.

1. கஜேந்திரன் என்ற யானைக்கு அபயம் கொடுத்துக் காத்தான் ஸ்ரீஹரி. அதனை முதலையின் பிடியிலிருந்து விடுவித்து, முதலைக்கும் மோட்சம் தந்தார்.
2. தன் தங்கையும், பாண்டவர்களின் தர்மபத்னியுமான திரௌபதிக்கு துகில்தந்து மானம் காத்தான் ஸ்ரீகிருஷ்ணன்.
3. புறாவிற்காக தன்னையே அர்ப்பணித்தான் சிபிச்சக்ரவர்த்தி
4. சீதையின் அபயக்குரல்கேட்டு ஓடிவந்து உதவி உயிர்த்தியாகம் செய்தான் ஜடாயு.

5. மிருகண்டு மகரிஷி தன்மகனாகிய மார்க்கண்டேயன் ஆயுள் முடிந்து போனதால் காப்பாற்றித் தருமாறு சிவபெருமானை வேண்ட, எமனை எட்டி உதைத்து ஆயுள் நீட்டிப்புத் தந்தார் சிவபெருமான்.

6. திருப்பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்ட ஆலகால விஷத்தின் கொடுமையைத் தாங்கமுடியாமல் தேவர்கள் ஓடிப்போக, அவர்களுக்காக அதையே விழுங்கினான் நீலகண்டன்... என்ற இவற்றை எல்லாம் அறிக.

7. எனவே. இராமாவதாரத்தின் நோக்கமே தன்னைச் சரணம் அடைந்து இராவணாதியர்களிடம் இருந்து காப்பாற்றுமாறு சரணாகதி அடைந்த தேவர்களின் குறையைப் போக்க உண்டானது தானே? ஆகையால் தான் சரணம் ஏற்பது செய்யத்தக்கதே என்றார் இராமர்.

மேலும் அடைக்கலம் ஏற்பதுதான் உண்மையான வீரம் என்றும் கூறினார்.

**இடைந்தவர்க்கு அபயம் யாம் என்று இரந்தவர்க்கு எறிநீர்வேலை**
**கடைந்தவர்க்கு ஆகி ஆலம் உண்டவர் கண்டிலீரோ?**
**இடைந்தவர்க்கு உதவான் ஆயின் உள்ளது ஒன்று ஈயான் ஆயின்**
**அடைந்தவர்க்கு அருளான் ஆயின் அறம் என்னாம்? ஆண்மை என்னாம்?**

என்பதில் உண்மையான அறம். மற்றும் உண்மையான வீரம் ஆகியனவற்றிற்கு விளக்கம் கொடுக்கின்றார்!

ஸ்ரீராமரை விழுந்து வணங்கி உடலால் சரணடைந்த வீடணன் தன் மனத்தின் எண்ணங்களை எடுத்துரைத்து ஸ்ரீராமரின் புகழ்பாடி மனத்தாலும் சரணடைந்தான். ஸ்ரீராமர் தர்மவான் ஆகையால் அவரின் வெற்றிக்காகப் பாடுபடுவதற்காகவே தான் வந்ததாகவும் இலங்கை அரக்கர்கள்



மாயத்திலும் சூழ்ச்சியிலும் வல்லவர்கள் ஆகையால் தனது வழிகாட்டுதல்கள் தேவைப்படும் என்றெல்லாம் கூறி இலங்கையின் அமைப்புமுறை போன்றவற்றையும் எடுத்துரைத்தான் விபீஷ்ணன். அவனுடைய பேச்சின் தன்மை அறநெறிக்கருத்துகள் ஆகியனவற்றை உணர்ந்த ஸ்ரீராமர் அவன்மீது முழுமையான நம்பிக்கை வைத்தார். எனவே இராவணனின் தம்பியாக இருந்தும் அவ்வீடணனைத்தன் தம்பியாக ஸ்ரீராமர் ஏற்றுக்கொண்டதைப் பின்வரும்பாடலால் அறியலாம்.

நின்னொடும் எழுவரானோம் எனல்.

**குகனொடும்ஐவரானோம் முன்பு பின் குன்றுசூழ்வான்**
**மகனொடும் அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்**
**புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை.**

**(448)**

"சரணாகதி ஏற்கவந்த விபீஷணா, முன்பு யான் கங்கைக்கரை வேடனை என்னுடைய தம்பியாக ஏற்றதால், தசரதனின் புத்திரர்கள் ஐந்துபேரானோம்! சூரியனின் மகனாகிய சுக்கிரீவனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டபோது தசரதனின் புத்திரர்கள் ஆறுபேரானோம், இப்போது அரக்கனாக இருந்தும், அறவானாகிய உன்னைச் சரணாகதியாக ஏற்றுக்கொண்டதால் நீயும் எனது தம்பியாகிவிட்டாய். எனவே உன்னோடு சேர்த்து தசரதனுக்கு ஏழுபேர் புதல்வராகிவிட்டோம்! எனக்கு வனவாசத்தை அளித்ததால், உனது தந்தையாகிய தசரதன் ஏழுபேர்களைப் புதல்வராக்கிக்கொண்ட பெரும்பேற்றைப் பெற்றான்" என்று தசரதனை வீடணனின் தந்தையாகவே எடுத்துரைத்த மிகச்சிறந்த இராமனின் மனநிலையும் பண்புகளும் இதனால் புலப்படுவதை அறிந்து மகிழலாம்!

எனவே அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விபீஷணனைக் கடல் நீரைக்கொண்டே நீராட வைத்து, வேதமந்திரங்கள் ஓதப்பட, அன்றுமுதல் அவனே இலங்கையின் வேந்தன் என்று பிரகடனப்படுத்தி முடிசூட்டினார்கள். இதனையும் இலக்குவனைக்கொண்டும், சுக்ரீவனைக் கொண்டும் செய்வித்தார் ஸ்ரீராமர்.

**சேது பந்தனப்படலம் :**

இந்தியாவின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்து இலங்கை நகரத்தின் கடற்கரைப்பகுதிவரைக்கும் வானரப்படைகள் அணிவகுத்து நின்றன. அவர்கள் சென்று இலங்கையைத் தாக்குவதற்காக அமைக்கப்பட்ட அணை சேது அணை எனப்படும். இந்த அணையைக் கட்டியதற்காக ஸ்ரீராமருக்கு சேதுராமன் என்ற ஒரு பெயரும் ஏற்பட்டது. இந்த அணையின் பந்தனத்தை அதாவது கட்டப்பட்டதைக் கூறுவது சேது பந்தனம் என்னும் கதைப் பகுதி ஆகும்.

வீடணன் அடைக்கலத்திற்குப் பிறகு சுக்கிரீவனும் அனுமனும் வீடணனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அனைத்து வானரப்படைகளும் சிரமம் இன்றி இலங்கையை அடைய கடலைக்கடக்க ஒரு உபாயமும் தெரியவில்லையே என்று ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது வீடணன் தான் ஒரு உபாயம் கூறுவதாகச் சொல்லி ஸ்ரீராமரின் இட்சுவாகு குலத்திற்கு வருணபகவான் மிகவும் வேண்டியவர். வருணபகவானே கடல்களுக்கு அரசன். எனவே ஸ்ரீராமர் கேட்டுக்கொண்டால் வருணபகவான் உதவிசெய்வார். கடலரசன் அணைகட்டிக்கொள்ள சம்மதிப்பார். நாம் அணை கட்டிக்கொண்டு எவ்விதச் சிரமமும் இன்றி இலங்கைக்குச் சென்று போர்புரிய முடியும் என்று தன் கருத்தைச் சொன்னான். அது நல்ல ஆலோசனையாகத் தெரிந்ததால் அது உடனே ஸ்ரீராமருக்கும் தெரிவிக்கப்பட்டது.



அதன்படி ஸ்ரீராமர் தர்பைப் புல்லைப்பரப்பி(குசப்புல்) அதன்மீது அமர்ந்து கொண்டு வருணனை வேண்டி தனக்குக் காட்சி தரவேண்டும் என்றும் அணை கட்ட ஆலோசனையும் ஆணையும் தரவேண்டும் என்றும் விரதம் இருந்தார். இப்படியாக மூன்று நாள்கள் கடந்து விட்டன. தன்கோரிக்கைக்கு வருணனோ கடலரசனோ செவி சாய்க்காததை அறிந்த ஸ்ரீராமர் பொறுமை இழந்து கோபம்கொண்டார். தன்னுடைய வில்லையும் அம்பறாத்தூணியையும் கொண்டு வரச் செய்து தன் அம்புகள் ஒருசிலவற்றைக் கடலிடையே செலுத்தினார். அதன் தாக்கத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாமல் கடல்வாழ் பிராணிகளான பாம்பு மீன் போன்றவை எல்லாம் அழிபட்டன. பேரலைகள் பொங்கி எழுந்தன. அப்போதும் சமுத்திரராசன் வெளிப்படாததைக்கண்டு அவனுடைய ஆணவத்தை அடக்கநினைத்தார்.

எனவே பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்த எண்ணிட்டார் ஸ்ரீராமர். அதைக்கண்டு எண்திசையும் தேவர்களும் நடுநடுங்க கடலரசன் வெளிப்பட்டுத் தன்தவற்றை மன்னிக்குமாறு வேண்டிநின்றான். எனினும் நாணேற்றி விட்டதால் இலக்கைக் கூறுமாறு கேட்க, அதற்கு தர்மகுல்யம் என்னும் இடத்தில் உள்ள கயவர்களை இலக்காகக் கொண்டு செலுத்துக என்று கடலரசன் வேண்டினான். அவ்வாறே அவ்விலக்கை நோக்கி ஸ்ரீராமன் தனது அம்பைச் செலுத்தியதால், தர்மகுல்யப்பகுதியில் இருந்த அரக்கர்களான அதர்மிகள் அழிக்கப்பட்டனர்.. அடுத்ததாக சமுத்திரராஜன் கூறியவாறு செயல்பட்டார்கள். அந்த வானரப்படையில் உள்ள நலன் என்பவன் விசுவகர்மாவின் புதல்வன் அம்சம் என்றும் அவன்மூலம் தன்மேல் அணைகட்டச் செய்தால், தன்மீது போடப்படும் எல்லா வஸ்துக்களையும் தான் தாங்கிக் கொண்டு அணை அமைவதற்கு உறுதுணை புரிவேன் என்றும் கூறிச்சென்றான் கடலரசன்.

**சேது அணைகட்டினர்.! திகைத்திட்டான் இராவணன்.!**

எனவே வானரங்கள் பலதிசைகளுக்கும் சென்று அங்கெல்லாம் கிடைத்த பெரிய பெரிய மரங்கள் மரத்துண்டுகள் கற்கள் கற்பாறைகள் போன்றவற்றைக் கொண்டு வந்து நலன் மூலம் கடலில் எறிந்தனர். சிறு சிறு மலைகள் எல்லாம் கூட கடலில் வீசப்பட்டன. ஆனால் அவை எல்லாம் சமுத்தரராசனின் உறுதிமொழிப்படி கடலில் மிதந்து இறுக்கமாகி அணையாய் உருவெடுத்தன. அணையானது செறிவுடையதாய் அமையவேண்டி அணிற் கூட்டங்கள் கடற்கரை மணலில் புரண்டு, மணலைத் தம் உடலில் ஏற்றிக்கொண்டுவந்து, அணைகட்டப்பட்ட பகுதியில் தம் உடலை உதறியதால், அணையின் சிறுசிறு சந்துகள் எல்லாம் தூர்க்கப்பட்டன. சேது அணை கட்டப்பட்டது. அந்த அணை மிகவும் அழகாகவும் வலிமை உடையதாகவும் காட்சி அளித்தது. அப்போது சுக்கிரீவன் வேண்டிக்கொண்டதற்கு ஏற்ப ஸ்ரீராமர் அனுமன் தோள்மீதும் இலட்சுமணர் அங்கதன் தோள் மீதும் ஏறிக் கொள்ள வானர வீரர்கள் திரண்டு வர அனைவரும் இலங்கையைச் சென்றடைந்தனர். ஒற்றர்கள் மூலம் செய்தியறிந்த இராவணன் திகைப்படைந்து நின்றான். மனிதர்களால் இது சாத்தியமாகக்கூடிய செயலா என்றும் அதிர்ந்துபோனான்.

**ஒற்று காணவந்தவர்க்கும் உயிர்பிச்சை நல்கியவள்ளல் :**

**சுகன் கண்ட சேதுராமன் :**

சேது அணையைக் கட்டிக்கொண்டதன் மூலம் மிகப்பெரும் வானரப்படைகள் தமது இலங்கையின் எல்லையிலே போருக்காக ஆயத்தமாகி நிற்பதை சுகன் என்ற ஒற்றன் மூலம் அறிந்தான் இராவணன். வானரப்படைகள் கருட வியூகம் அமைந்து அணிவகுக்கப்பட்டிருந்தனர். போர்புரிவதற்காக வானரங்கள் தம் கைகளில் மிகப்பெரும் பாறாங்கற்கள் மரத்தடிகள் உலக்கைகள் போன்றனவற்றைத் தமக்கு ஆயுதமாகக் கொண்டிருந்தனர். இராவணனின்



ஆணைப்படி சுகன் என்பவன் அந்தச் சேனையை ஊடுருவி பலத்தைக் காணவும், சுக்கிரீவனுக்கும் இராமனுக்கும் இடையில் கருத்துபேதத்தை உண்டாக்குவதற்காகவும் வந்தான். வானரப்படைகளின் உண்மையான பலத்தை அறிந்து வியந்துபோன அவன் இவற்றை அறிந்து, இராவணனுக்குச் செய்தியைத் தெரிவித்தான்! மேலும் அந்த ஒற்றன் சீதாதேவியை விட்டு விடுவதே நலம் என்றும் அறிவுரை கூறினான். அதைக்கேட்டு கடுங்கோபம் கொண்டான் அரக்கன் இராவணன்.

**ஒற்றறிய வந்தவர்க்கும் உயிர்ப்பிச்சை அளித்தவள்ளல் :**

எனினும் சுகன் கூறியதன் உண்மைத் தன்மையை அறிய தனது இரண்டு அமைச்சர்களை அனுப்பி மேலும் செய்திகளைத் திரட்டிவர ஆணையிட்டான் இராவணன். அவர்களும் தங்களை வானரங்களாக உருமாற்றிக் கொண்டு ஸ்ரீராமரின் வானரப்படைகளினூடே புகுந்து வேவு பார்க்கத் தொடங்கினர்.

ஸ்ரீராமன் மந்திரத்தை ஜபிக்கும் இடத்தில் மாயமும் மந்திரஜாலங்களும் பில்லி சூன்யம் போன்றவையும் எடுபடாது என்பதற்கு இந்த நிகழ்ச்சியே உதாரணம் எனலாம். சுகன் கூறியதன் உண்மைத் தன்மையை அறிய அவர்களும் வானரங்களாக உருமாறி அப்படைகளோடு கலந்துவிட்டனர். அப்போது வானரர்கள் தமது கூடாரங்களில் "ஸ்ரீராம் ஜயராம் ஜயஜய ராம்" என்ற மந்திரத்தைத் தொடர்ந்து உச்சாடனம் செய்து கொண்டிருந்தனர். ஸ்ரீராம மந்திரம் பரவிய இந்த இடத்தில் மாறு வேடத்தில் வந்த அந்த இராட்சதர்களின் வேடம் கலைந்து போயிற்று. அவர்களின் உண்மை சொரூபம் வெளிப்பட்டது! எனவே அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். படைவீரர்கள் அவர்களை நையப்புடைத்தும், அடித்தும் துன்புறுத்தியும் ஸ்ரீராமர்முன் இழுத்துச் சென்றனர். அவர்களைக் கொன்றுவிடவேண்டும் என்றும் அவ்வானரர்கள் வேண்டினர். உயிருக்குப் பயந்துபோன ஒற்றர்கள் தங்களை இராவணன் வேவு பார்க்க அனுப்பிவைத்ததை ஒத்துக் கொண்டனர்.

தங்களைக்கொல்லவேண்டாம் என்றும், உயிர்ப்பிச்சைத் தருமாறும் வணங்கினர். அதைக்கேட்டு மிகவும் பொறுமையாக இன்னும் என்னென்ன தகவல்கள் வேண்டும் என்பதை எல்லாம் நன்றாக அறிந்துகொண்டு போய் உங்கள் மன்னனிடம் சொல்லுங்கள் என்று அனுப்பி வைத்து விட்டார். தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிச்சென்ற சுதன் சாரணன் என்ற அவர்கள் இராவணன் அப்படைகளைப் பற்றித் தெரிந்து கொண்ட அனைத்தும் உண்மை என்றும் கூறியதோடு, ஸ்ரீராமரின் பெருந்தன்மையையும், இராமன் தரப்பு வீரர்களைப் பற்றியும், அவர்களின் அரசவிசுவாசத்தைப் பற்றியும் புகழ்ந்துரைத்து சீதையை ஒப்படைத்து விடுமாறும் வேண்டினர்.

சுகன் என்ற ஒற்றன் ஸ்ரீராமனுடைய பெருந்தன்மை, அடக்கமான குணம், கண்டவர்களைக் கவருகின்ற அவருடைய அழகியதோற்றம் (வைலட்சண்யம்) ஆகியவைகளைப் புகழ்ந்து இராவணனுக்குக் கூறியபோது பெருங்கோபம் கொண்டான் இராவணன். அதற்கு அஞ்சாத அந்தச் சுகன் என்பான் “யான் கூறும் இந்த உண்மைத்தன்மையை அந்த இராமனோடு நேருக்கு நேர் ஒரு சில நொடிகள் நின்றாலே அதை உணர்ச்சி பூர்வமாய் நீயும் உணர்வாய்” என்றும் கூறினான்.

இராவணன் ஸ்ரீராமனோடு போர்புரிந்த முதற்போரிலும், இறுதிப்போரிலும் பலமுறை அனுபவபூர்வமாக இது உண்மை என்று உணர்ந்ததைக் கம்பரும் ஆங்காங்கே குறிப்பிட்டுப் பாடியுள்ளதாலும் அறியமுடிகின்றது!

**சுக்கிரீவன் செய்திட்ட திடுக்கிடும் செயல் :**

அந்த நேரத்தில் வானர வீரர்கள் செய்த போர்முழக்கம் கேட்டதால் அடுத்து என்னசெய்யலாம் என்று ஆலோசனை நடத்தினான் இராவணன். அப்போது மாலியவான் என்ற இராவணனின் தாய்வழிப்பாட்டன் சீதையை ஸ்ரீராமரிடம் ஒப்படைத்து விடு. ஸ்ரீராமன் மிகவும் பலசாலி மட்டுமன்று



தர்மவான் என்றும் எடுத்துரைக்க கோபம் கொண்ட இராவணன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்போது இராவணனிடம் இருந்து எந்தப்படையும் வராமல்போனதால் சுவேலமலையின் அடியில் இராமர் தரப்பு வீரர்கள் அமர்ந்து கொண்டு இருந்தனர். அப்போது மாளிகையின் உப்பரிகையில் சில அமைச்சர்கள் புடைசூழ அழகான தோற்றத்துடன் அமர்ந்திருந்த இராவணனைக் கண்டான் சுக்கிரீவன். அவன் ரத்தம் கொதித்தது. உடனே ஆகாய மார்க்கமாக அப்படியே பறந்து சென்று திடீரென்று இராவணனைத் தாக்கினான் சுக்கிரீவன். இராவணனும் தாக்க இருவருக்கும் அங்கு ஒரு குத்துச் சண்டைப் போரே நடந்தது எனலாம். சுக்கிரீவனிடம் இருந்து தப்பித்துக்கொள்ள பலநூறு இராவணர்களாக அவன் உருவு எடுத்ததால் அதன்பிறகும் அங்கு இருப்பது தேவை அற்றது என்று விர்ரென்று திரும்பிவிட்டான் சுக்ரீவன். தன் தலைவனின் செயலைப்பார்த்த வானரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் இராமர் சுக்கிரீவனை அமைதி காக்குமாறு வேண்டினார். மேலும் முன்பின்யோசியாமலும், யாரிடமும் கூறாமலும் அவன்செய்த விபரீதச் செயலால் ஏதேனும் அவனுக்கு உற்பாதம் ஏற்பட்டிருந்தால், அதனால் தான்கொடுத்த வாக்குறுதி, அதாவது அச்சுக்கரீவனைக் காப்பேன் என்றது பொய்யாகிப்போகுமே என்று மனம் கலங்கினார் ஸ்ரீராமர். அடுத்ததாக ஸ்ரீராமரின் ஆணைப்படியும் ஆலோசனைப்படியும் இலங்கை நகரின் அனைத்து வாயில்களையும் அடைத்து அதனை முற்றுகை இட்டனர் வானரப்படைகள்.

**மாயத்தில் வல்லவன் தயாரித்த போலிராமர் சிரம் :**

சுக்கிரீவனின் அடாதசெயலாலும், வானர வீரர்களின் ஆரவாரத்தாலும் மனம்கொதித்தான் இராவணன். போர் தொடங்கும் முன்பே சீதாவை ஏதேனும் சூழ்ச்சியின் மூலம் அடைந்துவிடலாம் என்று முடிவு செய்தான் அந்த வஞ்சகன்.

எனவே வித்யுசவகன் என்பவனால் போலியான ஸ்ரீராமர் கழுத்தைத் தயாரித்து இராமனைக்கொன்று விட்டதாகவும் சீதைக்குக் காட்டினான். அதை உண்மை என்று நம்பிய சீதாதேவி மூர்ச்சை அடைந்தாள்.. பலவாறு புலம்பித்தவித்தாள். ஆனால் சரமை என்னும் பெயர்கொண்ட விபீஷணனின் மனைவி அங்கு வந்து இராவணன் கூறியவையும், அவன்கொணர்ந்தது எல்லாம் மாயத்தோற்றத்தால் உருவாக்கப்பட்ட ஸ்ரீராமரின் பொய்த்தலை என்றும், எல்லாம் பொய்ச் செய்தி என்றும் மாயாஜாலம் என்றும் எடுத்துரைத்து சீதையைத் தேற்றினாள்.

**அங்கதன் தூது :**

முற்றுகைக்குப் பின்னரும் இராவணன் தரப்பில் இருந்து எந்தப் போர்ச் செய்தியும் வராததால் அடுத்ததாக அங்கதனைத் தூது அனுப்ப நினைத்தார் ஸ்ரீராமர். ஒருவேளை இராவணன் போரிட பயந்தால், சீதாதேவியை ஒப்படைத்து விட்டுச் சரணடையுமாறு அறிவுறுத்தலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அங்கதனும் தூது சென்றான். பறந்து சென்ற அங்கதன் ஒருநொடிப்பொழுதில் இராவணனின் இருப்பிடம் அடைந்து, தொபுகடீர் என்று அங்கு குதித்தான். அங்கதனைக் கண்டு அனைவரும் மருண்டு போனார்கள். சுக்ரீவன் தந்த அதிர்ச்சியில் இருந்தும் மீளாமல் அவர்கள் இருந்தனர். அப்போது அங்கதன் இராவணனைப்பார்த்து "அடேய் இராவணா நான் ஸ்ரீராமர் தூதுவனாக வந்துள்ளேன். நாங்கள் உன் நகரத்தை முற்றுகை இட்டுள்ளோம். ஆனால் நீ இன்னும் கோழையைப்போல் வெளிவராமல் போர்செய்யாமல் ஏன் காலத்தைக் கடத்துகின்றாய்?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட இராவணன் தான் யார் என்பதும், தன்னுடைய வீரமும் பராக்கிரமும் எப்படிப்பட்டது என்றும் தெரியாமல் பேசுகின்றாய்! நான் யார்என்று தெரியுமா உனக்கு என்று கூற, அதைக்கேட்டு நகைத்தான் அங்கதன்.



பதிலுக்கு நகைத்த அங்கதன் அப்போது தன் இளம்வயதில் இராவணன் கார்த்தவீரியாச்சுனனிடம் தோற்றுப்போய், அவனால் சிறைப்பிடிக்கப்பட்டு, கார்த்தவீரியனுடைய பட்டினத்து மக்களுக்கு காட்சிப் பொருளாக்கப்பட்டான் என்பதை நான் அறிவேன். அப்படிப்பட்ட ஒரு கோழை இராவணனைப் பற்றி நான்கேள்விப்பட்டேன்! நீ அந்த இராவணன் தானா? என்று எள்ளி நகையாடினான்.

மேலும் தன்னுடைய தந்தையாகிய வாலியால் அவனுடைய கக்கத்தில் சிக்கிக்கொண்டு, அவர் நான்கு திசைகளுக்கும் பறந்து போய் சந்தியா வந்தனம் செய்த பிறகு எங்கள் நகருக்கு வந்து ஒரு இராவணனை உதறி வீச, அவன் தூரத்திலே போய் தொப்பென விழுந்தான். விழுந்த அவனைப்பார்த்து, நீயார் எதற்கு வந்தாய் என்று கேட்க, அவன் என் தந்தையாகிய வாலியுடன் போரிட வந்ததை மறைத்து, நட்பு கொள்ள வந்ததாகக் கூறினான். மற்றொரு பேடி இராவணன்! அந்தப் பேடி இராவணன் நீ தானா? இல்லையா? என்பதைக் கூறு என்று எக்காளமிட்டான். பரந்த மனமும், பராக்ரமமும் உடைய தன்னுடைய தந்தை அவனையும் தன் நண்பனாக ஏற்றுக்கொண்டான்! அந்த ஒரு இராவணன் நீதானா என்று மேலும் கூறி நகைத்தானாம். அப்போது இராவணன் மிகவும் ஆத்திரம்கொண்டான்!

இதனால் சற்றும் எதிர்பாராத நிலையில், தன்னுடைய பழையகாலத்துத் தோல்வியை மற்றவர்கள் முன்னால் அங்கதன் வெளிப்படுத்தி, தன்னை அவமானம் செய்து விட்டானே என்று மிகவும் கோபம்கொண்டான் இராவணன். உடனே அங்கதனைப்பார்த்து, நீயார் எதற்கு வந்தாய் என்று கேட்க,

ஸ்ரீராமரின் தூதுவனாக தான் வந்ததாகக் கூறி, "உனக்கு கடைசி வாய்ப்புத்தர எண்ணியுள்ளார் இராமன். நீ உயிர் பிழைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசையிருந்தால்

சீதாதேவியை எங்களிடம் ஒப்படைத்து விட்டு ஸ்ரீராமரைச் சரணம் அடைந்து விடு. ஸ்ரீராமர் உனக்கு உயிர்ப்பிச்சை அளிப்பார். இல்லை என்றால் உன்னைக்கொன்று போட்டு விபீஷணருக்கு முடிசூட்டுவார் எங்கள் ஸ்ரீராமர்" என்று சற்றும் பயமின்றி கூறினான் அங்கதன். இதைக்கேட்டு, கோபம் தலைக்கேறிய இராவணன் தன் அரக்கவீரர்களைப்பார்த்து "இவனைப்பிடித்துக் கொல்லுங்கள்" என்று உத்தரவிடவே நான்கு அரக்கர்கள் அங்கதன்மேல் பாய்ந்தனர். உடனே அங்கதன் அந்த நான்கு வீரர்களையும் தன் கைகளின் இடுக்குகளில் அடக்கிக்கொண்டு வான் வழியே மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டான். வான் வழியில் அவர்களை உதறித்தள்ளினான்!

அங்கதன் தூது சென்று வந்த பிறகு வானரவீரர்களைப் போருக்கு ஆயத்தமாக்கினார் ஸ்ரீராமர். வானர வீரர்கள் போர்ப்பறை கொட்டி ஆரவாரம் செய்தனர். இனியும் பொறுக்கமுடியாது என்று நினைத்த இராவணன் தன் படைவீரர்களைப் போருக்கு ஆயத்தமாக்கினான்!

**தொடங்கியது முதற்போர் :**

எனவே அடுத்த நாள் போர் தொடங்கிற்று ! வானரப்படைகள் இலங்கையில் நுழைவதற்கு வசதியாக அதன் அகழிகளைத் தூர்த்துவிட்டனர். இருசேனைகளும் மோதிக்கொண்டனர்! அடுத்தவர்களைத் தாக்கும் போது தத்தம் பெயர்களைக்கூறிக் கொண்டு தாக்கிக் கொண்டனர். வில் வாள் கத்தி மழு போன்றவற்றை அரக்கர் பயன் படுத்தினர். மரங்கள் கற்கள். மரத்திம்மைகள் இவற்றைக் கொண்டு வானரங்கள் போரிட்டனர். அப்போது இலங்கையின் நான்கு வாயில்களில் இருந்தும் கடல்போன்ற அரக்கர்சேனைகள் வந்து குவிந்தனர்.. போர் உக்கிரம் அடைந்தது. பெருமளவில் இரு திறத்துப் படைகளும் அழிந்தனர்.

அன்றைய முதல்நாள்போரில் சுக்கிரீவன் பெரும்போர்புரிந்தான். மிகவும் துடிப்புடன்போரிட்டான்.



போருக்கு வந்திருந்த அரக்கனான வச்சிரமுட்டி என்பானைப் போர்க்களத்தில்கொன்றான். கிழக்குவாசலில் நிகழ்ந்தபோரில் கும்பன் என்ற அரக்கனும், ஸ்ரீராமர் படையைச் சேர்ந்த இடும்பன் என்ற கரடிகுலத்தலைவனும் போரிட்டனர். அப்போது பலவானர வீரர்களை அழித்த அந்தக்கும்பன் என்பவனின் இரண்டு கால்களையும் பிடித்து கிழித்தெறிந்து அவனைக்கொன்றான் இடும்பன் என்ற அந்தமாவீரன்.

பிரகத்தன் என்ற அரக்கர் படைத்தலைவனுடன் நீலன்போர்புரிந்தான்., மிகவும் பலசாலியான அவனை அக்கினித்தேவனின் அம்சமான அந்த நீலன்கொன்றான். பிரகத்தன் என்றதனது படைத்தலைவன் கொல்லப்பட்டதை அறிந்த இராவணன் பெரும் சீற்றம் கொண்டு தானே போருக்குச் சென்றான். போர்க்களத்தில் வானரர்களும், அரக்கர்களும் கைகலந்து போரிடுதலாகிய மற்போர் செய்து கொண்டிருந்தனர். போர்க்களத்திற்குச் சென்ற இராவணன் தனது வில்லிலிருந்து பெருத்த ஓசையை எழுப்பினான். அதைக்கேட்டு வானர வீரர்கள் மருண்டு ஓடினர். அவர்களின் மருட்சியைப்போக்க சுக்கிரீவன் இராவணனைத் தடுத்து நிறுத்திப்போர்புரிந்தான். சுக்கிரீவன் தளர்ச்சி அடைந்தபோது அனுமன் இந்த இராவணனை எதிர்த்துப் போரிட்டான். பிறகு, இலக்குவனுக்கும் இராவணனுக்கும் கடும்போர் நடைபெற்றது.

பிறகு இராவணனைத்தடுத்து நிறுத்திய அனுமன் அவனோடு சொற்போர்புரிந்து, அவனுடைய கோழைத்தன்மையையும், ஸ்ரீராமருடைய பண்பாட்டின் சிறப்பையும் எடுத்துரைத்தான். பிறகு இருவருக்கும் இடையே குத்துச் சண்டை மூண்டது. அனுமன் தனது கை முட்டியினால் இராவணனை ஓங்கி ஒரே குத்துவிட்டான். அதனால் நிலைகுலைந்துபோன இராவணன் தூரத்தில் சென்று விழுந்தான். அனுமனின் திறமையையும் அவன் பாராட்டினான்.

எனினும் சளைக்காது போரிட்டான் இராவணன். அவன்மீது வானரத்தலைவர்கள் அனைவரும் மலைகளை எடுத்து வீசினர். அவற்றைத் தன்பாணங்களால் பொடிப்பொடியாக்கினான் இராவணன். அதனால் போர்க்களமெங்கும் கல்மழை பொழிவது போலக்காட்சியளித்தது. மேலும் ஸ்ரீராமரின் வானரப்படைகள் மீது தனது சரங்களை மழைபோலப்பொழிந்து தள்ளினான் இராவணன். அதைக்கண்டு அனைவரும் அஞ்சி ஓடினர். ஆயின் இலக்குவன் பெருங்கோபம் கொண்டு இந்த இராவணனை மீண்டும் எதிர்த்தான். இருவருக்கும் இடையே நடைபெற்ற கடுமையானபோரில், நான்முகன் தந்த ஒரு சக்திமிகுந்தவேலினை இலக்குவன்மீது எறிந்தான். அதனுடைய தாக்கத்தால் மூர்ச்சை அடைந்து தரையில் சாய்ந்தான் இளையாழ்வான்.

**எடுக்கவும் முடியவில்லையே !. என்ன இது அதிசயம் ?**

உடனே தன்னால் மூர்ச்சையாக்கப்பட்ட அந்த இலக்குவனைத் தூக்கிக்கொண்டு இலங்கையை அடையவேண்டும். அவனைப்பணயப் பொருளாக வைத்து, போரையும் நிறுத்திவிடலாம் என்று எண்ணிய அவன், பிணக்குவியல்களையெல்லாம் விரைவாகத்தாண்டிவந்து, இலக்குவனுடைய உடலைக்கண்டு தன் கைகளால் அவனைத் தூக்கமுயன்றான்.! அவ்விலக்குவனை அவனால் அசைக்கவும் முடியவில்லை. அதிசயித்து நின்றான் அந்தக்கொடியவன்.

இராவணனது முயற்சியை முறியடிக்க நினைத்த அனுமன், உடனே அங்கு விரைந்து, அந்த இலக்குவனைத் தனது இரண்டு கைகளாலும் மிகவும் அநாயாசமாக தூக்கிச் சென்றதைக் கண்ட அந்த இராவணனுக்கு இது மேலும் ஓர் அதிசயமாக அற்புதக் காட்சியாக, அசைவற்று நின்றான் அவன்.

சிவபெருமானும் பார்வதி தேவியும் இருந்த கைலாய மலையையே தூக்கிய அத்துணை வலிமை படைத்தவன் இராவணன். ஆனால் அவனால் இலக்குவனை அசைக்கமுடியாமல்போனது! இலக்குவன் ஆதிசேஷனின் அம்சம் என்பதை அந்த மூர்க்கன் எவ்வாறு அறிவான்!?



அனுமன் நேரே இராமன் இருக்கும் இடம்தேடிச் சென்று இராவணன் போருக்கு வந்திருப்பதையும், அவன் அனைவரோடும் போரிட்டு, வானரப் படைகள் பலவற்றைக் கொன்றதாகவும், எடுத்துக் கூற அந்த இராவணனோடு போரிடத் தானே அவனிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றார் ஸ்ரீராமர்.

**ஸ்ரீராமர் ராவணன் முதல்யுத்தம் :**

போருக்கு இராவணன் வந்திருப்பதை அறிந்த ஸ்ரீராமர் அவன் இராவணன் தான் என்பதை வீபீஷணன் மூலம் உறுதிசெய்து கொண்டார். இராவணனைக் கண்ட அவர் மனம் எரிமலையாய்க் கனன்றது.

இராவணனும் இராமனைக் கண்டு, பெருத்தகோபமுடன் போரிடத்தொடங்கினான். அவ்வாறு போரிட்ட இராவணனைக் கண்டு வானரக் கூட்டம் அஞ்சி ஓடுவதைக்கண்ட அனுமன் தன்தோள்மீது அமர்ந்து கொண்டு போரிடுமாறு ஸ்ரீராமரை வேண்டினான். சம்மதித்தார் ஸ்ரீராமர். ஒருமிகப்பெரும் தேரின்மீது அமர்ந்து கொண்டு போர்செய்து கொண்டிருந்த இராவணனைப் பார்த்த ஸ்ரீராமர் அவனுடன் கடும்போர்புரிந்தார். இராவணனும் மிகுந்த சினத்துடன் போரிட்டான் எனினும் ஸ்ரீராமரின் வில்லாற்றல் முன் அவனால் நிற்கமுடியவில்லை. இராவணனுடைய தேர் கொடிமரம் பயனற்றுச் செய்து அழித்தார் அந்த தர்மாத்மா! அவனை நிராயுதபாணி ஆக்கினார். போர் தர்மம் மீறி செயல்பட்டிருந்தால் அன்றைக்கே இராவணனை ஸ்ரீராமர் அழித்திருக்கலாம். ஆனால் ஸ்ரீராமர் இராவணனைப் பார்து “இராவணா! நீ இன்றைக்குப் போர்செய்து மிகுதியாகக் களைத்துப்போனாய். உன்னுடைய ஆட்களும் ஆயுதங்களும் காற்றில் அளையப்பட்டு வீழ்ந்து போன பூளைப்பூக்களைப் போல வீழ்ந்து அழிந்தனர். பயனற்றுப் போயினர். ஆயுதமின்றி,

நிராயுதபாணியாக உள்ள உன்னை நான்கொன்றழிக்க விரும்பவில்லை. எனவே இன்றைக்கு இங்கிருந்து சென்று இரவெல்லாம் ஓய்வெடுத்து, நாளைக்குப் போருக்கு வா" என்று கூறி அனுப்பினார்.

இவ்வாறு, இராவணனைப் பரிகாசம் செய்தும், அவனுடைய வீரத்தை இழித்துரைத்தும் இராமன் கூறியதாக அமைந்துள்ள இப்பாடல்களையும் நோக்குவோம்.

நிராயுத பாணியாக நின்ற இராவணனுக்கு ஸ்ரீராமன் உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்துள்ளேன் என்று கூறுதல்.

**அறத்தினால் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்**
**மறத்தினால் அரிதென்பது மனத்திடை வலித்தி**
**பறத்தி நின் நெடும் பதிபுகக் கிளையொடும் பாவி**
**இறத்தி யான் அது நினைக்கிலேன் தனிமை கண்டு இரங்கி (1208)**
என்றார்..

மேலும் இன்று போய் போருக்கு நாளை வா என்று கூறிய வள்ளலின் வார்த்தைகள்!.

**"ஆள் ஐயா உனக்கு அமைந்தன மாருதம் அளைந்த**
**பூளை ஆயின கண்டனை இன்றுபோய் போர்க்கு**
**நாளை வா என நல்கினன் நாகு இளங்கமுகின்**
**வாளை தாவுறு கோசல நாடுடைய வள்ளல்." (1212).**

கொடுக்கும் தன்மை பெரிதும் உள்ளவனை வள்ளல் என்போம். இராவணனுக்கு உயிரையே தானமாகத்தந்து, அடுத்தநாள்போருக்கு வா என்று சொன்ன இராமன் பெரும் வள்ளல்தான் என்பதில் ஐயம் ஏதுமில்லை. இதனால்மிகுந்த கலக்கமும் அவமானமும் அடைந்தான் இலங்கையரசன். அம்முதல்நாள்போரில் தோற்றுப்போய் இலங்கை திரும்பிய இராவணன் நிலையைப் பின்வரும் பாடலால் அறியலாம்.



**வாரணம் பொருதமார்பும் வரையினை எடுத்ததோளும்**
**நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும்**
**தார்அணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்தவாளும்**
**வீரமும்களத்தேபோட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்.**
**(1213).**

தான் ஒரு மானிடனிடம் தோற்றுப்போனோமே, "இவ்வளவு நாட்களாக நம்மைப்பார்த்து பயந்தவர்கள் எல்லாரும் இன்று என்னைப்பார்த்து ஏளனம் செய்து சிரிப்பார்களே என்பதற்காக வெட்கம் அடையாத இந்த இராவணன், திசையானைகளை வென்றவன் நான். இமயமலையையே பெயர்த்தெடுத்த மாபெரும்தன் திண்மை படைத்தவன். நாரதமுனிவர் வியக்குமாறு நல்லுரை பகர்ந்தவன். சிவபெருமான் கொடுத்த சந்திரகாசம் என்ற சிறப்பான வாளினைப் பெற்றவன். அப்படிப்பட்டநான் இன்று இராமனாகிய மானிடனோடு போர்செய்து அனைத்தையும் இழந்தேனே! இது என்ன? என்னுடைய வீரமும் பராக்கிரமும் என்ன ஆயிற்று என்று புரியவில்லையே என்று ஏங்கித் தவித்துக்கொண்டு வெறுங்கையோடு இலங்கைக்குத் திரும்பினான். தான் படைக்கலன்களையும் இழந்து வெறுங்கையோடு தோற்றுப்போய் வந்ததையும் அறிந்து, சீதையாகிய ஜானகி சிரித்து அவமதிப்பாளே என்பதற்காக வெட்கம் அடைந்தான் என்பதைப் பின்வரும் பாடல் உரைப்பதை அறியலாம்!

**"வான் நகும் மண்ணும் எல்லாம் நகும் நெடுவயிரத்தோளான்**
**நான் நகு பகைவர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணான்**
**வேல்நகு நெடுங்கண் செவ்வாய் மெல்லியல் மிதிலைவந்த**
**சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்." (1223).**

இவ்வாறு மிகுந்த மனவருத்தம் அடைந்த இராவணன், மால்யவான் என்பவனிடம் ஸ்ரீராமனின் வீரத்தையும், அற்புத ஆற்றலையும் எடுத்துரைத்து வியந்தான். பின்னர் ஒருவேளை இவன்தான் நம்மைக்கொல்ல மானிட அவதாரம் எடுத்தவனோ என்று கூறி விரக்தியும் வேதனையும் அடைந்தான்.

**கும்பகர்ணன் வதைப்படலம் :**

முதல்நாள் போரில் ஸ்ரீராமனால் தனது ஆயுதங்களையும் அரக்கர்படைகளையும் இழந்து விட்டு அவமானப்பட்டுப்போன இராவணன் அடுத்தநாள் போருக்குச் செல்லவில்லை. அதற்காகத் தன்னுடைய தம்பியான கும்பகர்ணனைப்போருக்கு அனுப்ப முடிவெடுத்தான்.

தவம் செய்து பிரம்மதேவனிடம் அழியாத வரம் (நித்தியத்துவம்) பெறவேண்டும் என்று விரும்பினவன் கும்பகர்ணன். ஆனால் தேவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் சரஸ்வதிதேவியால் இன்பமாக எப்பொழுதும் உறங்க வேண்டு என்னும் (நித்திரைத்துவம்) வரம் பெற்றுவிட்டான். இதனுடைய கதைச்சுருக்கத்தையும் காண்போம்.

பிரம்மதேவனுடைய பேரனான வைச்சிரவஸ் (விச்சிரைவஸ்) என்பவருக்கும், கைகசி என்ற அரக்கிக்கும் தோன்றியவர்கள் இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, மற்றும் விபீஷணன் என்ற நால்வரும்.! பிரம்மதேவனிடமிருந்து ஏராளமான வரங்களைப் பெற்றவனாகிய இராவணன், தனது வரபலத்தால், தேவர்கள், முனிவர்கள் தவசியர்கள், பெண்கள், விலங்கினங்கள், போன்ற எல்லோருக்கும் கொடுமைகளைச் செய்து, அவர்கள் துன்பம் அடைவதைப்பார்த்து, தான் மகிழ்ச்சி அடைந்து வந்தான்.

இந்நிலையில் இராவணனது முதல் தம்பியான கும்பகர்ணனும் ஒருமுறை பிரம்மதேவனை நோக்கிக் கடும் தவம் புரியத் தொடங்கினான்.! அரக்கர் குலத்தின் இயல்பான குணத்தால் கும்பகர்ணனும் அனைவருக்கும் இன்னல்களையே இழைத்துவந்தான். இந்தநிலையில் கும்பகர்ணன் செய்யத் தொடங்கிய தவத்தைக்கண்ட தேவர்கள் பெரிதும் பயம்கொண்டனர். ஆயிரம் ஆண்டுகள் கும்பகர்ணன் கடுந்தவம்



புரிந்ததால், அவனுக்குக் காட்சி கொடுத்து, வரம் கொடுக்கத்தயார் ஆனார்பிரம்மா, இதை அறிந்த தேவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சென்று கும்பகர்ணன் கேட்கும் வரத்தைக் கொடுக்கவேண்டாம் என்று மன்றாடினர் ஆனால் யார் தன்னை நோக்கித்தவம் புரிந்தாலும், தான் அவர்களுக்கு வரம் கொடுத்து அருளுவது தனது இயல்பு, என்றும், அதனால் கும்பகர்ணனுக்கும் வரம்கொடுக்கப் போவதாகவும் கூறினார்.

எனினும், தேவர்களைப் பார்த்து சரஸ்வதியிடம் தங்களது கோரிக்கையை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார். தேவர்களும் அத்தாயிடம் சென்று முறையிட்டனர். அதனால் மனம் மாறிய சரஸ்வதியும், கும்பகர்ணன் வரம்கேட்கும்போது, தான் அவனுடைய வாயில் நுழைந்து, அவன்கேட்கும் வரத்தின் வார்த்தைகளை மாற்றிவிடுவதாக உறுதியளித்தாள். அந்நிலையில் கும்பகர்ணனுடைய கடும் தவத்தால் மகிழ்ந்த பிரம்மதேவன், அவனுக்குக்காட்சியளித்து, வேண்டும் வரம் யாது என்றார். அவன் தான் எப்போதும் யாராலும் அழியக் கூடாத, எப்போதும் உயிருடனே வாழக்கூடியதான நித்தியத்துவம் தனக்கு வேண்டும் என்று கேட்க நினைத்து வரத்தைக்கேட்டான். ஆனால் சரஸ்வதிதேவியின் குறுக்கீட்டால் அவனது வார்த்தைகள் மாறிப்போயின. அவன் தனக்கு நித்திரைத்துவம் வேண்டும் என்று கேட்டுவிட்டான். இத்தருணத்தை எதிர்பார்த்துக்கிடந்த பிரம்மனும் ததாஸ்து என்று கூறிவிட்டு மறைந்துபோனார்.

அதாவது யாராலும் அழியப்படக்கூடாது என்ற வரத்தைக்கேட்க நினைத்த அவன், தான் எப்போதும் ஆனந்தமாக மகிழ்ந்து தூங்குவதற்குரிய நித்திரையை, அதாவது ஆழ்ந்த தூக்கத்தைக்கேட்டுவிட்டான். அப்படியே ஆகட்டும் என்று பொருள்தரக்கூடிய ததாஸ்து என்று கூறி பிரம்மாவும் மறைந்து போனார். உடனே தான் செய்துவிட்ட தவற்றை உணர்ந்தவன் மீண்டும் தனது தவத்தைத் தொடங்கி,

தான் அடைய நினைத்த நித்தியத்துவத்தைப் பெற முயன்றான். ஆனால், அதற்குள்ளாக அவன்பெற்றவரத்தின் பயனாக அவன் தூக்கத்தால் தழுவப்பட்டான். தூங்கியும் போனான். ஆறுமாத காலம் கழித்து, அவனை அரும்பாடுபட்டு எழுப்பி, உணவைக்கொடுத்துவிடுவான் இராவணன். உண்ட பிறகு சிறிது நேரத்தில் மீண்டும் உறங்கிப்போவான் கும்பகர்ணன்!

இவ்வாறு ஆறுமாத காலம் உறக்கத்தில் இருக்கும் அவனை அரும்பாடுபட்டு எழுப்பினார்கள். கும்பம் எனப்படும் குடத்தைப்போல கர்ணங்களை (காதுகளை) உடைய அவனுக்குக் கும்பகர்ணன் என்னும் பெயரே நிலைத்தது. அத்தகையவனை இன்றைக்கு எழுப்பி போருக்கு அனுப்பநினைத்து, பலவகைப்பட்ட தந்திரங்களைச் செய்து பார்த்தும் அவன் எழுந்திருக்கவில்லை! கும்பகர்ணனைச் சுற்றி நின்றுகொண்ட கிங்கரர்கள் ஒருபக்கத்திற்கு ஆறுநூறு பேர்வீதம் கைகளிலே உலக்கைகளை ஏந்திக்கொண்டு, அவனுடைய கன்னத்துப்பகுதியில் ஓங்கி ஓங்கி அடித்தனர். உடல் உறுப்புகளில் கன்னம் மிகவும் மென்மையான பகுதியாகையால் அங்கு உலக்கையினால் தாக்கினால் எழுந்துகொள்வான் என்று நினைத்து மாறிமாறி அடித்தடித்து எழுப்ப முயன்றார்கள்!

அவர்கள் அவன் கன்னத்தில் அடித்ததற்கு ஏற்றவாறான ஒரு ஒலிநயத்தில் பின்வரும் பாடலை அவர்கள் பாடிக்கொண்டே அடித்து எழுப்பினார்களாம்!

**“உறங்குகின்ற கும்பகர்ண உங்கள்மாய வாழ்வெலாம்**
**இறங்குகின்ற தின்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்**
**கறங்குபோன்ற வில்பிடித்த காலதூதர் கையிலே**
**உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்துறங்குவாய்”**

என்ற கவிக் கூற்றாய் அமைந்துள்ள பாடல் நயத்தையும், கம்பரின் சந்தநயத்தையும் இதில் அறியலாம்.



அதாவது, உறங்குதலைத் தொழிலாகக் கொண்டிருக்கும் கும்பகர்ணா, அரக்கர்களாகிய நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மாயமான வாழ்வு எல்லாம் இன்னும் சற்று நாட்களில் அழியப்போவது உறுதி! நடைபெற்றுவரும் போரில் உன்னுடைய உறவினர்கள் பலரும் மாண்டுபோனதைப்போலவே, நீயும் மாளப்போகின்றாய். அப்போது நிரந்தரமான உறக்கத்தை நீமேற்கொள்ளலாம்.! ஆனால் நீ இப்போது எழுந்திரு! உன்னை எழுப்ப நாங்கள் எவ்வளவு இன்னல் அடைகின்றோம். சொல்லி முடியவில்லையே! என்று சபிப்பதைப்போல மாறி மாறி உலக்கையால் அடித்தனராம்!

அப்போதும் அவன் எழுந்திருக்கவில்லை! எனவே அவனுக்குச் சாப்பாட்டின்மேல் உள்ள மோகத்தை நினைவு கூர்ந்து, அவனுக்கு வேண்டிய உணவாகச் சமைக்கப்பட்டனவற்றை அவனுடைய மூக்கின் அருகிலே வரிசையாய் கிடத்த, அவனும் எழுந்தானாம்! அவனுக்காக சமைக்கப்பட்டனவற்றைக் கம்பர் பின்வருமாறு கூறுகின்றார்.

**ஆறு நூறு சகடத்து அடிசிலும்**
**நூறு நூறு குடங்கள்ளும் நுங்கினான்**
**ஏறுகின்ற பசியை எழுப்பினான்**
**சீறுகின்ற முகத்து இரு செங்கணான். (1272).**

ஆம்! அறுநூறு வண்டிகள் நிறைய உணவும், நூற்றுக் கணக்கான குடங்களில் கள் ஆகிய போதைத்திரவமும் தயாரித்துக்கொடுக்க சிவந்த கண்களை உடையவனாகிய அந்தக்கும்பகர்ணன் அவற்றை உண்டானாம்!

தான் எழுப்பப்பட்டதற்கான காரணத்தை இராவணன் மூலமாக உணர்ந்த அவன், “போரானது உச்சநிலைக்கு வந்துவிட்டதோ? கற்புக்கரசியாகிய சீதையை இன்னும் விடவில்லையா? திட்டிவிடம்போன்ற அழிக்கும் தன்மையை

உடைய சீதாதேவியை விடாமற்போனதால், அரக்ககுலம் முழுதுமாக அழியும். இது உறுதி என்று கூறி, இதுவே விதியின் விளையாட்டு" என்று வருந்தினான் அக்கும்பகர்ணன்.! என்பதைப் பின்வரும்பாடல் உணர்த்துகின்றது.

**கிட்டியதோ செறு கிளர்பொன் சீதையைச்**
**சுட்டியதோ முனம் சொன்ன சொற்களால்**
**திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை**
**விட்டிலையோ இது விதியின் வன்மையே (1292).**

மேலும் இராம லட்சுமணர்கள் தருமவான்கள் அத்தகையவர்களை வஞ்சகத்திலும், பாவத்தைச் செய்வதிலுமே மூழ்கியுள்ளவர்களான நாம் வெற்றிகாணமுடியுமா என்று கும்பகர்ணன் வருந்தி கூறினான்.

**தஞ்சமும் தருமமும் தகவுமே அவர்**
**நெஞ்சமும் கருமமும் உரையுமே நெடு**
**வஞ்சமும் பாவமும் பொய்யும் வல்லநாம்**
**உஞ்சுமோ அதற்கு ஒரு குறை உண்டாகுமோ? (1297).**

எனவே இராவணன் சீதையை விட்டுவிடுவதே நல்லது என்று அறிவுரையும் கூறினான்!

**தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து நின்**
**ஐயறு தம்பியரொடு அளவளாவுதல்**
**உய்திறம் அன்று எனின் உளது வேறும் ஓர்**
**செய்திறம் அன்னது தெரியக்கேட்டியால். (1300).**

இராவணன் அதை ஏற்றுக்கொள்ளாததால், போருக்குச் செல்லும்முன் தான் போரில் இறந்து விடுவேன். அதன்பிறகாவது சீதையை விட்டுவிடு என்று இராவணனுக்குப் புத்திமதி கூறினான் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கநினைத்த அந்த அரக்கன்.

**வென்று இவன் வருவனென்று உரைக்கிலேன் விதி**
**நின்றது பிடர் பிடித்து உந்த நின்றது**



**பொன்றுவன் பொன்றினால் பொலன்கொள் தோளியை**
**நன்று என நாயக விடுதி நன்று அரோ (1307).**

இவ்வாறெல்லாம் கூறிவிட்டுப் போருக்குப் புறப்பட்டான் கும்பகர்ணன். போர்க்களத்தில் அவனைக் கண்ட வானர வீரர்கள் பயந்து நடுங்கினர். ஒரு மலையே உயிர்ப்பெற்று எழுந்து நடந்துவருவதைப்போல நடந்து சென்றான் அவன். எனினும் தான் தர்மத்திற்கு மாறாகச் செயல்படுகின்றோம் என்று நினைத்திருந்த அவன் முகம் சோகத்தில் கவ்வியிருந்தது. எதிர்த்தரப்பில் இருந்த ஸ்ரீராமன் ஒருவேளை இத்தருணத்திலாவது அவன் தனது தவற்றை உணர்ந்து நம்மோடு வர நினைத்தால், உன் அண்ணனையும் அழைத்து வா! என்று வீடணனிடம் கூறியதால் அவனை நோக்கி நடந்துவந்தான் விபீஷணன் ஆகிய அந்த வீடணன்! ஆனால் தன்னை நோக்கி வந்த வீடணனைக் கண்டு அதிர்ந்துபோன கும்பகர்ணன் கூறுதல்.

**நீதியும் தருமமும் நின்ற நிலைமையும் புலமைதானும்**
**ஆதிஅம் கடவுளாலே அருந்தவம் ஆற்றிப் பெற்றாய்**
**வேதியர் தேவன் சொல்லால் விளிவு இலா ஆயுள் பெற்றாய்**
**சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும் தக்கோய்**
**(1347).**

ஆதிமூலவனான பகவானின் திருவருளால் நீதிநெறிகளை அறிந்தவனாகவும், தர்மத்தின் வழிநடப்பவனுமாகிய சிறந்தவனாக நீ விளங்குகின்றாய்! அதனால்தான் ஸ்ரீமந்நாராயணப் பெருமானின் அவதாரமாகிய ஸ்ரீராமரின் பக்கம்சென்று சரணாகதியடைந்து நீண்டநாள் வாழக் கூடியதான உயர்நிலையைப் பெற்றாய். அதனைக் கண்டு உண்மையிலேயே மனம் மகிழ்ந்துள்ள எனது மகிழ்ச்சியைக் கெடுப்பதைப்போல இப்போர்களத்தில் தர்மத்தின் பாதையைவிட்டு விட்டு அதர்மவானாகிய என்பக்கம் வருகின்றாயே! இதன் அர்த்தம் என்ன? நமது இழிவான குலத்துப்பாசத்தால் உந்தப்பட்டு என்னைச்சேர்தலாகிய

இச்செயலை விட்டுவிடு. விரைவில் ஸ்ரீராமரின் பக்கம் சென்று சேர்வாயாக என்று தன் தம்பிக்கு அறத்தை எடுத்துரைத்தான் அந்த அரக்கன்!

மேலும் பிரம்மன் தலையைச்சிவபெருமான் கொய்ததை நினைவுறுத்தி அதனால் துன்பத்தை அடைந்த சிவபெருமானின் நிலையை எடுத்துரைத்தான் கும்பகர்ணன். ஆனால் அவனை ஸ்ரீராமராகிய தர்மத்தின் பக்கம் வருமாறு அழைப்பதற்காகவே வந்ததாகக் கூறியபோது, செய்நன்றியை மறந்து, உயிர் வாழப் பிடிக்கவில்லை. ஏனெனில் மனித வாழ்வானது நீர்மேல்போடப்படும் கோலத்தைப்போன்றது. அதைக்காணவும் முடியாது. அழகைக்காணவும் முடியாது. எனவே போர்க்களத்தில் உயிரை விடுவேன் என்று கூறியதைப் பின்வரும்பாடலால் எடுத்துரைக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி!

**நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப்பின்னைப்**
**போர்க்கோலம் செய்துவிட்டார்க்கு உயிர் கொடாது அங்குப்போகேன்**
**தார்க்கோல மேனி மைந்த என்துயர் தவிர்த்தி ஆயின்**
**கார்க்கோல மேனியானைக் கூடுதி விரைவில் என்றான். (1367).**

இதில் ஒருவருடைய வாழ்க்கையானது நீரின்மேல் எழுதப்படும் (போடப்படும்) அழகிய கோலத்தைப் போன்றது என்றும், கண்ணிற்குப்புலப்படாத அதை விரும்பி, செய்நன்றி மறந்தவனாகத்தான் வாழ விரும்பவில்லை என்றும் கூறிய இவ்வரக்கனின் பண்பும் பாராட்டிற்குறியதே!

மேலும் "நான் அழிவேன் நீ உலகு உள்ளவரை வாழ்வாய்" என்றும் விபீஷணனுக்கு ஆசீர்வாதம் செய்தான் அக்கும்பகர்ணன்.!

**மலரின்மேல் இருந்த வள்ளல் வழு இலா வரத்தினால் நீ**
**உலைவு இலாத்தருமம் பூண்டாய் உலகு உளதனையும் உள்ளாய்**
**தலைவன் நீ உலகுக்கு எல்லாம் உனக்கு அது தக்கதேயால்**
**புலைஉறு மரணம் எய்தல் எனக்கு இது பகழதேயால். (1368).**



என்று தனது மனத்தின் நிலையை எடுத்துரைத்தான் கும்பகர்ணன். மேலும் தனது தம்பியை நோக்கி "இன்றைய போரில் நான்வெற்றியடைந்து திரும்பமாட்டேன். அடுத்து நடைபெறப்போகும் போர்களிலும் அதர்மிகளாகிய அரக்கர்கள் மாள்வது உறுதி.! எனவே அவ்வாறு அழிந்து போகக்கூடிய அரக்கர் குலத்தைச் சேர்ந்த எங்களுக்கு எல்லாம், ஈமக்கடன்களைச் செய்து, எள்ளும் நீரும்கொண்டு தர்ப்பணம் செய்து எங்களுக்குப் பிண்டமும் வைத்து, பிற்காலத்தில் கடனாற்றப்போகின்ற ஒருவன் வேண்டுமல்லவா? அவன் நீயாகத்தான் இருப்பாய். எனவே எனக்காக நீ இராமனிடம் இருந்து பிரிந்து வந்துவிடாதே" என்றும் வேண்டிக்கொண்டான் கும்பகர்ணன்.

அதன்பிறகு கும்பகர்ணன் போர்க்களத்தில் ஸ்ரீராமனின் திவ்விய சொரூபத்தைக் கண்டு, வணங்கி, தன் தம்பியை இறுதிவரைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் இராமனை வேண்டினான்..

**நீதியால் வந்தது ஒரு நெடுந் தருமநெறிஅல்லால்**
**சாதியால் வந்த சிறுநெறி அறியான் என்தம்பி**
**ஆதியாய் உனை அடைந்தான் அரசர் உறுக்கொண்டு அமைந்த**
**வேதியா இன்னம்உனக்கு அடைக்கலம்யான் வேண்டினேன்.**
**(1567)**

**காதைக் கடித்த சுக்கிரீவன் :**

விபீஷணன் சென்ற பின் ஸ்ரீராமரோடு போர்செய்ய நினைத்துப் போர்க்களத்தே புகுந்த மலைபோன்றவடிவமுடைய கும்பகர்ணன் வானரப்படைகளின்மீது உருண்டும் படுத்தும் சென்றதால் பலவானர வீரர்கள் அவனால் நசுக்கப்பட்டு உயிரிழந்தனர். பலரும் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டுக்கொண்டு ஓடினர். அவனுடைய போர்த்திறமையால் அனைத்து வானர வீரர்களும் அன்றைக்கே மாண்டுபோவார்களோ என்று ஐயம் எழுந்தது.

அதைத்தடுக்கவேண்டும் என்று நினைத்த இராமன் கும்பகர்ணனோடு போரிட வந்தார். அப்போது கும்பகர்ணனை இடை மறித்துத் தாக்கினான் சுக்கிரீவன். இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். மேலும் அனுமன் நீலன்போன்றவர்களும் கும்பகர்ணனோடு போரிட்டனர். நீலன் ஒரு மலையை எடுத்து கும்பகர்ணன் மேல் எறிந்தான். அதை மிகவும் அநாயாசமாக எதிர்கொண்டு எதிர்த்தாக்குதல் நடத்தினான் கும்பகர்ணன். மீண்டும் சுக்கிரீவன் தாக்கியபோது அந்தச் சுக்கிரீவனைத் தாக்கி, காயம் ஏற்படுத்தி, அவன் மூர்ச்சை அடைந்தபோது, தன் கைகளால் தூக்கிக்கொண்டு இலங்கை நகர் நோக்கிப்பறந்து சென்றான் கும்பகர்ணன். இலங்கையை அடைந்து, இராவணனிடம் அவனை ஒப்படைத்து, அச்சுக்கிரீவனையே பணயப்பொருளாக்கி போரை நிறுத்தி விடலாம் என்பது அக்கும்பகர்ணனுடைய எண்ணமாகும்.! ஆனால் அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள அரும்பாடுபட்டான் சுக்கிரீவன். கும்பகர்ணன்வான்வழியே வேகமாகப்பறந்து சென்றதால், குளிர்ந்த மெல்லென்ற காற்றைச் சுவாசித்ததால் சற்று புத்துணர்வு பெற்ற சுக்கிரீவன் சுதாகரித்துக்கொண்டான்! மிகவும் அரும்பாடு பட்டு கும்பகர்ணனுடைய காதுகளையும் மூக்கினையும் கடித்துக் கொண்டான். வலி பொறுக்காமல் கும்பகர்ணன் தடுத்தபோது அவனிடமிருந்து தப்பிக்கொண்டு வந்து விட்டான் சுக்கிரீவன்.

எனவே அறுபட்டகாதோடும் மூக்கோடும் இலங்கைக்குள் செல்ல விரும்பாத கும்பகர்ணன் மீண்டும் திரும்பி வந்து ஸ்ரீராமரோடு போரிட்டான். அப்போது ஸ்ரீராமருடைய பண்பு நலன்கள் போர்ப்பயிற்சி அஸ்திரம் கையாளும் முறைகள் ஆகியன கும்பகர்ணனைப் பெரிதும் கவர்ந்தன. தான் அவராலே அழிக்கப்படப்போவது உறுதி என்ற முடிவிற்கு வந்தான்! எனவே அவன் ஸ்ரீராமரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தான். காதையும், மூக்கையும் சுக்கிரீவனால் இழந்துவிட்டதால், தான் வதைக்கப்பட்டபோது



அவ்வாறான உறுப்புகளை இழந்த நிலையில் போர்க்களத்தே விழுந்துகிடப்பதை விரும்பாததால், தன்னுடைய தலையைக்கொய்து கடலிடைச் செலுத்திவிடுமாறு அவன் கேட்டுக்கொண்டான். ஸ்ரீராமரும் அவனுக்கு அவ்வரத்தைத் தந்தார்.

**சுக்கிரீவனால் காதும் மூக்கும் இழந்த கும்பகர்ணன் இராமனிடம் வரம்கேட்டல் :**

**மூக்கு இலா முகம் என்று முனிவர்களும் அமரர்களும்**
**நோக்குவார் நோக்காமை நின் கணையால் என்கழுத்தை**
**நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்**
**போக்குவாய் இது நின்னை வேண்டுகின்ற பொருள் என்றான்.**
**(1570).**

ஸ்ரீராமனிடமிருந்து மேற்கண்ட வரத்தைப் பெற்றுக்கொண்ட கும்பகர்ணன் தன்னால் முடிந்தவரையில் வானரப்படைகளை துவம்சம் செய்தான். பிறகு ஸ்ரீராமரை எதிர்த்து அவரைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு ஸ்ரீராமரை அணுகிச்சென்றான் கும்பகர்ணன்.

அப்போது பலவானரவீரர்கள் கும்பகர்ணனைச் சூழ்ந்து கொண்டு போரிட்டனர் அவர்கள் கும்பகர்ணனின் உடல்மீது ஏறிக்கொண்டு துன்பம் கொடுத்தனர். அவர்களை புளியம்பழம் உலுக்குவதைப்போல தன்னுடலிலே இருந்து உலுக்கி தரையிலே தள்ளி அழித்தான் கும்பகர்ணன். மேலும் வலது கையில் ஓர் உலக்கையை வைத்துக் கொண்டு கடும்போர் புரிந்தான் அவன். இராமபாணங்களை அதனால் தடுத்தான்.

அப்போது ஸ்ரீராமர் வாயவியாஸ்திரத்தை எடுத்து மந்திரம் கூறி அவன்மேல் எய்து அவனுடைய வலது கையையும் பிறகு இடது கையையும் துண்டித்தார். கைகள் இழந்தநிலையிலும் மலைபோல் தரையில் உருண்டு நூற்றுக்கணக்கான வீரர்கள் விழுந்து படுத்து நசுக்கிக் கொன்றான் கும்பகர்ணன். அதன்மூலம் அவனை விட்டுவைத்தல் ஆகாது என்று நினைத்த ஸ்ரீராமர்

தன்கோதண்டத்தை வளைத்து ஐந்தாஸ்திரத்தை மந்திரித்து அவன்மேல் ஏவினார். அது அவன் தலையைக் கடலில் கொண்டுபோய் அழுத்தி அழித்தது. மூக்கும் காதும் கைகளும் இல்லாத தன்னைக் கொன்றால் அதை மற்றவர்கள் காணாதவாறு கடலில் தள்ளி அழித்திடவேண்டும் என்ற கும்பகர்ணனின் வேண்டுதலையும் நிறைவேற்றினார் ஸ்ரீராமர். கும்பகர்ணன் அழிந்தான். அவன் அழிந்துபோனதால், தேவர்கள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்களாம். தேவமாதர்கள் இன்னிசையைப் பாடிமகிழ, அந்தணர்கள் பயம்நீங்கப்பெற்றனர் என்று பின்வரும் பாடல் உணர்த்துவதால், எவ்வளவுதூரம் அனைவரும் கும்பகர்ணன் வதைக்கப்படுவதை எதிர்பார்த்துக்காத்துக்கிடந்தனர் என்பதை அறிந்து நாமும் மகிழ்கின்றோம்!

**ஆடினார் வானவர்கள் அரமகளிர் அமுதஇசைப்**
**பாடினர் வேதியரும் பயம் தீர்ந்தார்**
**கூடினார் படைத்தலைவர் கொற்றவனைக் குடல்கலங்கி**
**ஓடினார் அடல் அரக்கர் இராவணனுக்கு உணர்த்துவான்! (1573)**

கும்பகர்ணனோடு போருக்கு வந்த அரக்கர்கள் குடல்கலங்கிப்போன நிலையிலே கும்பகர்ணன் வதைக்கப்பட்டதை இராவணனுக்குத் தெரிவிக்க ஓடிச் சென்றனர்.!

**மாய ஜனகனைத் தோற்றுவித்து மிரட்டிய மாயாவி இராவணன் :**

இராவணனால் போருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கும்பகர்ணன் மேற்கண்டவாறு நேர்மையான முறையிலே போரிட்டுத் தன் உயிர் துறந்த அந்தநேரத்தில் இராவணன் செய்த ஓர் இழிசெயலைக் கூறி, அவனுடைய காமவேட்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிச் சக்கரவர்த்தி!

மகோதரன் என்ற மந்திரியிடம் சீதையை அடைவதற்கான வழி ஒன்றைக் கூறுமாறு இத்தருணத்தில் அவனை வேண்டினான் இராவணன். அவன் "சீதை அவளது தந்தைக்கு மிகவும் கட்டுப்பட்டவள். எனவே ஜனகராஜனைப் போன்ற ஒரு போலி ஜனகனை (மாயாஜனகனை) உருவாக்கி அறிவுரை கூறினால், சீதை அதை ஏற்பாள். உன்னையும் மணந்துகொள்ளச் சம்மதிப்பாள்" என்று அறிவுரை கூறினான் அந்த மகோதரன்.



எனவே சீதையிருந்த அசோகவனம் சென்ற இராவணன், மீண்டும் தன்னுடைய இச்சைக்கு இணங்கி விடுமாறு சீதையை வேண்டினான். அப்போது "இந்த என்னுடைய உடம்பும் உயிரும் என் கணவனாகிய ஸ்ரீராமனுக்கே உரியவை. சிறந்த குணங்களைத் தனது அணிகலன்களாகக் கொண்டு அப்பெருமானை என்கண்ணாரக் காண்பேன் என்பதனால்தான் நான் இவ்வுடலைத்தாங்கி நிற்கின்றேன். இந்த உண்மையை நீ அறிந்து கொள்" என்று சீதை கூறி, அவனை மிகவும் இழிவுபடுத்திப்பேசியும் ஏற்றுக்கொள்ளாதவனாக இருந்தான் அந்த முதலைக்குணமுடை மூர்க்கன். ஏனென்றால், முதலையும் மூர்க்கனும் தான் கொண்டதை (பற்றிக்கொண்டதை) விடாது என்பார்கள்! அப்போது மகோதரன் என்ற அரக்கன், மருத்தன் என்னும் மற்றோர் அரக்கனை ஜனகனைப்போல உருமாற்றி, அவனைக்கதற கதற அழுமாறு அங்கு இழுத்துவந்தான். அதைக்கண்ட சீதை, தனது தாய்ப்பறவை தீயில் விழுவதைக் கண்ட அதனுடைய குஞ்சுபோல மனம்பொறுக்காமல் புலம்பித்தவித்தாள்.

மேலும் தனது தந்தையின் அறச்செயல்கள், வேதம் அறிந்த அவனது தர்மம் அறிந்த தன்மை, விருந்தினர்களுக்கு உபசாரம் செய்த அவனுடைய கடமை, முனிவர்களுக்கும், அறவோர்களுக்கும், அந்தணர்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்து அவர்கள் அவரவர் தம் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு உதவிய பேராண்மை, கண்ணினும் மேலாக தனது குடிமக்களைக்காத்திட்ட தர்மம் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துரைத்து, அப்படிப்பட்ட உமக்கா இந்த இழிநிலை,?

அதாவது இந்தப்பாதகனால் சிறை பிடிக்கப்பட்டு துன்புறும் இந்த நிலை ஏற்பட்டது என்று அரற்றினாள். அழுது புரண்டாள். அளவிலா துன்பக்கடலிடை வீழ்ந்து தத்தளித்தாள்.!

இந்தச் சூழ்நிலையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த இராவணன், சீதாவைப் பார்த்து," என் ஆசைக்கு இணங்கினால் உனது தந்தையை விட்டுவிடுகின்றேன் : என்று கூறியபோது கோபம் கொண்ட அக்கற்புக்கரசி, அவனை மிகவும் கடிந்துகொண்டு மறுப்புரைத்தாள். சினத்தை அடக்கமுடியாத அவ்விலங்கை வேந்தன் சீதையைக்கொன்று விடுவதே மேல் என்று நினைத்து, கூர்மையான வாளால் தாக்க முற்பட்டபோது, அதைத்தடுத்த மகோதரன் மாயாஜனகனை விட்டு, அவன்மூலம் சீதையை மனம் மாறுமாறு பேசச்செய்யலாம் என்ற உபாயத்தைக் கூறினான்!

எனவே இராவணனும் அமைதி கொண்டு அமர்ந்தான். அந்த மாயாஜனகனும்,

**"பூவின்மேல் இருந்த தெய்வத்தையலும் பொதுமை உற்றாள்**
**பாவியான் பயந்த நங்கை நின்பொருட்டாகப் பட்டேன்**
**ஆவிபோய் அழிதல் நன்றோ அமரருக்கும் அரசன் ஆவான்**
**தேவியாய் இருத்தல் தீதோ சிறையிடைத் தேம்புகின்றாய்"**
**(1635).**

என்ற அறிவற்ற அறிவுரையைக் கூற அதிர்ந்து போனாள் சீதாதேவி. ஆம்.

"தாமரைப்பூவில் வாசம் செய்யும் திருமகளும் அனைவருக்கும் பொதுவானவள் தானே! பாவியாகிய யான்பெற்றமகளே, உன்னால் நான் இன்றைக்கு இவனால் கைதுசெய்யப் பட்டுள்ளேன்! தேவர்களுக்கும் அரசனாகத் திகழும் இந்த இராவணனின் இச்சைக்கு நீ இணங்காது போனால் நானும் நம்முடைய குலம் அனைத்தையும் இவன் அழித்துவிடுவான் ஆகையினால் இவனது விருப்பத்திற்கு



இணங்கி நடந்துகொள்வாயாக" என்று தொடங்கி தனது இழிவுரையை அறிவுரையாகத் தொடர்ந்தான் அந்த மாயா சனகன்.

இதற்கு மறுமொழியாக "உயிர் விட்டாலும் இராவணணன் ஆசைக்கு இணங்கேன்" என்று மாயாசனகனுக்குச் சீதை கூறியதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

**"நீயும் நின் கிளையும் மற்று இந்நெடு நில வரைப்பும் நேரே**
**மாயினும் முறைமை குன்ற வாழ்வெனோ வயிரத்திண் தோள்**
**ஆயிர நாமத்து ஆழி அரியினுக்கு அடிமை செய்வேன்**
**நாயினை நோக்குவேனோ நாண் துறந்து ஆவிநச்சி (1640)**

அப்போது தனது கோபத்தை அடக்கமுடியாதவனாகிய அந்த இராவணன் மாயாசனகனைக் கொல்ல வாள் உருவிச்சென்றான். அதைக்கண்டும் அஞ்சாத சீதை, "அற்பனே நீ இராமனது அம்பால் இறக்கப்போகின்றாய்" என்று கூறி தனது மனத்திண்மையை வெளிப்படுத்தினாள். அப்போது அந்த மாயாசனகனைக் கொல்ல மீண்டும் கோபமுற்ற இராவணனை மகோதரன் தடுத்துக் கட்டுப்படுத்த, அப்போது போர்க்களத்திலே இருந்து அங்கு விரைந்தோடி வந்தவர்கள் கும்பகர்ணன் இராமனால் கொல்லப்பட்டதை எடுத்துரைத்தனர்.

தன் தம்பியான கும்பகர்ணன் போரில் இறந்து விட்டதை அறிந்த இராவணன் மிகுந்த அதிர்ச்சி அடைந்தான். தான் அமர்ந்திருந்த ஆசனத்தில் இருந்து கீழே மயங்கி வீழ்ந்தான். தன் கணவன் போர்க்களத்தில் இராமனால் கொல்லப்பட்டான் என்பதை கும்பகர்ணனின் மனைவி நம்பவே இல்லை. நம்பவே முடியவில்லை. எனினும் உண்மையை அறிந்து பலவாறு புலம்பித்தவித்தாள்! கற்புக்கரசியான மண்டோதரியும் பெரிதும் வருந்தி கண்ணீர்ப் பெருக்கினாள்! போரிலே தங்கள் கணவன்மார்களை இழந்ததால் வெள்ளைப்புடவை உடுத்திக்கொண்டு விதவையானவர்களின் எண்ணிக்கை

இராவணன் அரண்மனையில் பெருகிக்கொண்டே சென்றது! கும்பகர்ணனாகிய தனது தம்பி இறந்தது கேட்டு துடிதுடித்துப்போன இராவணன் ஓ வென்று பெரும்ஓப்பாரி வைத்துப்புலம்பினான். தன்பெயருக்கு ஏற்ப இராவணன் கதறிக் கதறி அழுதான். இராவணன் என்னும் பெயருக்குக் கதறி அழுபவன் என்றும் பொருளாகும். இத்தனை ஆண்டுகளாக கற்புடைய பெண்களைச் சீரழித்தபோதும், முனிவர்களுக்கும். தேவர்களுக்கும், தர்மத்தின் வழிநடந்த சாதுக்களுக்கும் பெரும் துன்பம் கொடுத்தபோது, அவர்கள் கதறி அழுததை அனுபவித்து இன்பம் கொண்ட இராவணன் இன்று கதறிக்கதறி அழுதான் என்கின்றபோது, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், வினை விதைத்தவன் வினையையே அறுவடை செய்தாக வேண்டும், என்ற இந்து தர்மத்தின் இணையற்ற கர்மாக் கொள்கை இங்க நிரூபிக்கப்படுவதை காண முடிகின்றது. எனவே மகாலட்சுமியின் அம்சமான அந்தச் சீதாதேவியும் இராவணன் அழுததைக்கேட்டு கிளுகிளுத்தாள் என்று கம்பரே கூறுவதால் அறியலாம்.

**அண்டத்து அளவும் இனியபகர்ந்து அழைத்து**
**பண்டைத் தன் நாமத்தின் காரணத்தைப் பாரித்தான்**
**தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர்பொடிப்பக்**
**கொண்டைத் தடங்கண்ணாள் உள்ளே கிளுகிளுத்தாள். (1660).**

என்பது அக்கருத்தைக் கூறும் பாடலாகும்.

அந்த நிலையில் அரக்கசேனாபதிகள் இராவணனைத் தேற்றி எழுப்பினர். அவர்களுள் திரிசிரஸ் என்னும் மூன்று தலைகளையுடைய அரக்கன் இராவணனைப் பலவாறு தேற்றினான். இராவணனுக்கு மகன் முறையான அவனும், அவனோடு நராந்தகன் உள்ளிட்ட அரக்கசேனாதிபதிகளும் ஆறுபேர் போருக்குப் புறப்பட்டனர். அன்றைய சண்டையின்போது, போர்க்களத்தில் அவர்களுள் நராந்தகனை சுக்கிரீவனின் சொற்படி அங்கதன் கொன்றான். அதை அறிந்த



திரிசிரஸ் உள்ளிட்ட மூவர் அங்கதனைச் சூழ்ந்துகொண்டு போரிட்டனர். அதைக்கண்ட அனுமன் தானும் நீலனும் சேர்ந்துகொண்டு சென்று அங்கதனுக்குத் துணை புரிந்தனர். அந்த திரிசரஸ் என்பவனை அனுமன் கொன்றொழித்தார். இப்படியாக அறுவரும் மாண்டுபோனார்கள்.

**அழிந்தான் அதிகாயன் :**

அதிகாயன் இராவணனின் மற்றொரு மகன் உறவு முறையினன். அவன் பிரம்மாவிடடம் இருந்து பற்பல வரங்களைப் பெற்றவன். குறிப்பாக அவன் தங்கக் கவசம் பெற்று அதை அணிந்திருந்ததால் அவனை வெற்றிகாண்பதும் அழிப்பதும் கடினமானதாகும். இராவணனின் சேனாபதிகள் அழிபட்டவுடன் அவன்போருக்குச் சென்றான். இலக்குவனோடு கடும்போர் புரிந்து அவனைக்கொல்வதே அவனுடைய நோக்கமாக இருந்தது. எனவே இலக்குவனைக்குறி வைத்தே அன்று அவன்போர்க்களம் சென்றான்.! அவனிடத்திலும் பயங்கரமான ஆயுதங்கள் இருந்தன. அவற்றால் தாக்கி இலக்குவனை நிலைகுலையச் செய்தான். இலக்குவன் எய்த எத்தகைய அஸ்திரமும் அவனை ஏதும் செய்யவில்லை. அதைக் கண்டு செய்வது அறியாது திகைத்த இலக்குவன் முன் வாயுபகவான் தோன்றி பிரம்மாஸ்திரம் ஒன்றினால் மட்டுமே அதிகாயனை அழிக்கமுடியும் என்றும் எனவே அதைப்பிரயோகிக்குமாறும் கூறினார். அதை ஏற்றுக்கொண்ட இலக்குவன் பிரம்மாஸ்த்திர மந்திரத்தால் அஸ்திரம் ஒன்றை ஏவி அதிகாயனை அழித்தார்.

அதிகாயன் இறந்ததை அறிந்த இராவணன் பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாகித் தவித்தான். பூமியைப்பெயர்த்து எறிந்துவிடலாமா? வானத்தை இடிக்கலாமா? தன் கண்முன்னே தோன்றும் அத்தனை உயிர்களையும் அழித்துவிடலாமா? பெண் என்ற பெயர்கொண்ட எல்லாரையும் பிளந்து அழித்துவிடலாமா?

என்றெல்லாம் எண்ணி, புண்ணிலே நெருப்பைப் புகுத்தியது போன்ற நிலையிலே துடித்ததாகப் பாடியுள்ளார் கவியரசர்.

அப்போது அங்குவந்த தானியமாலி என்ற அதிகாயனின் தாய் பெரிதும் அழுது புலம்பினாள். பாம்பைப் போலத்தரையிலே உருண்டு புரண்டாள், அவள் இராவணனை நோக்கி, அவனுடைய தர்மம் அற்ற முறைகளைச் சுட்டிக்காட்டி இடித்துரைத்தாள். “உன்தம்பி கும்பகர்ணனுடைய வேண்டுகோளையும் நீ ஏற்க வில்லை. விபீஷணன் நல்ல அறிவுரை கூறியதால் அவனையும் வெறுத்தொதுக்கிவிட்டாய். இன்னும் என்னென்ன துன்பங்களை எங்களுக்குக் கொடுக்க இருக்கின்றாய்” என்றெல்லாம் இடித்துரைத்த அவளை அரண்மனைக்குக் கொண்டுசெல்லுமாறு ஆணையிட்டான் அந்த அரக்கன் இராவணன்.

**நாகபாசப்படலம் :**

அதிகாயனோடு போருக்குச் சென்ற அரக்க சேனாதிபதிகளும், அதிகாயன் போன்றவர்களும் அழிந்து விட்டனர் என்பதை அறிந்த இராவணனால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இராம இலக்குமணர்களை எதிர்த்து வெல்லக் கூடிய ஆற்றல் உலகில் யாருக்குமே இல்லையோ என்று அழுது புலம்பினான். அப்போது தான் ஒருவன் இருக்கும் போது எதற்காகவும் வருந்தவேண்டாம் என்று தன் தந்தைக்கு ஆறுதல் கூறினான் மேகநாதன் என்ற இந்திரஜித்.! ஆம், மேகநாதன் என்ற இயற்பெயரைக்கொண்டவனாகிய அவன், ஒருசமயம் தேவர்களோடு போர்புரியச்சென்று தேவேந்திரனை வெற்றிகண்டதால் அவனை இந்திரஜித் என்றே எல்லோரும் போற்றி, அழைத்தனர். தன் தந்தையிடம் தான் போருக்குச் சென்று வெற்றி பெற்று வருவதாகவும், அதற்கு அனுமதி கொடுக்குமாறும் வேண்டினான் அவன்.! அதைக்கேட்ட இராவணன் அவன் போருக்குச் செல்ல அனுமதித்தான்.



போர்க்களத்திற்குச் சென்ற இந்திரஜித் தனது மாயாஜாலப்போரால் வானரர்களைக் கொன்று குவித்தான். எனினும் அவனது நோக்கமெல்லாம் இலக்குவனைப்போரில் மாய்க்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே இருந்தது! ஏனென்றால், தனது தம்பியாகிய அதிகாயனைப்போரில் இழந்ததால் தான் தவித்துப்புலம்பியதைப்போல, இலக்குவனை இழந்து அந்த இராமன் புலம்பவேண்டும் என்பது அவனுடைய தீராத ஆசையாக இருந்தது. போரில் முன்றேறிச் சென்று, வானரப்படைகளை அழித்து, அவற்றைச் சிதைத்து ஓட்டினான். அதைக்கண்ட அரக்கர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். உருவத்தை வெளிப்படுத்தாமல் மறைந்திருந்தே பல அஸ்திரங்களை உபயோகிப்பதில் வல்லவன் அவன். அவ்வாறு போர்புரிந்த அவனுடன் இலக்குவன் கடும் போர் செய்து கொண்டிருந்தான்.

இருவருக்கும் இடையே நடந்த உக்கிரமான போரில், இந்திரஜித்து எவ்வளவோ அஸ்திர சஸ்திரங்களை எய்தும் பயனில்லை. அவற்றையெல்லாம் தடுத்து, இந்த மாயாஜாலத்தில் வல்லவனான இந்திரஜித்தையே கலக்கிப்போட்டது இலக்குவனின் போர்முறை. பதிலுக்குப் பற்பல கணைகளை இலக்குவன் அந்த மாயாவியின் ஓசை வந்த திசைநோக்கியும், அவனிருப்பிடத்தை யூகம் செய்தும் செலுத்தி, இந்திரஜித்தையே தளர்ச்சி அடையச் செய்தான். அந்தநேரத்தில் அனுமன் இடையிலே புகுந்து, இந்திரஜித்தின் தேரை அழித்தார்.

உடனே இந்திரஜித்து தனது மாயத்தால் வேறொரு தேரை வருவித்து, அதன்மேல் ஏறிவந்து போர்புரிந்தான். அப்போது அரக்கவீரர்கள் முன்னேவந்து நின்று இலக்குவனோடு போர்புரிந்தனர். அவர்களையெல்லாம் அழித்தொழித்தார் இலட்சுமணன். தொடர்ந்து நடந்தபோரில் இந்திரஜித்தனுடைய அந்தத்தேரையும் அங்கதன் அழித்தான். அவன் இலட்சுமணனது போர் முறையை வியந்து பாராட்டினான்.

**நாகாஸ்திரப்பிரயோகம் செய்தான் மாயாவி இந்திரஜித் !**

போர் தொடர்ந்து கொண்டிருக்க மாலை மங்கி இரவு நேரம் வந்தது. இந்திரஜித்திடம் இருந்து எந்தத்தாக்குதலும் வரவில்லை! எனவே இராமன் தரப்பினர் போர்க்களத்திற்குப் பயந்து கொண்டு இந்திரஜித் போய்விட்டானோ என்று அனைவரும் பேசிக் கொண்டு ஏமாந்து இருந்த நேரம் பார்த்து, போர்க்களத்திலிருந்த அனைவரின்மேலும் நாகாஸ்திரத்தை ஏவிவிட்டான் அந்தக்கொடியவன்! அது அனைவரையும் தாக்கி மூர்ச்சை ஆக்கியது. அனைவரும் அதன் தாக்கத்தால், பூமியில் வீழ்ந்தனர். இலக்குவன் உள்ளிட்ட அனைத்து வானர வீரர்களின் உடலிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. இதை வானவெளியில் இருந்து கண்ட இந்திரஜித் அனைவரும் இறந்து போயினர் என்று ஆனந்தக்களிப்பில் சென்று இராவணனிடம் கூறினான்.

அன்றைய போரில் நாகாஸ்திரத்தால் முதலில் அனுமன் தாக்கப்பட்டாலும், அவர்பெற்றிருந்த வரத்தினால் பெரிய பாதிப்பு ஒன்றும் ஏற்படவில்லை. அப்போது போர்க்களத்தில் இல்லாத வீடணனும், பிறகு போர்க்களத்திற்கு வந்து, நிகழ்ந்ததை அறிந்து, மிகவும் துன்பப்பட்டான். “இராமனின் அன்பிற்குரியவர்களான அனைவரும் அழிந்து விட்டனர். அடைக்கலம் கேட்டு வந்த நான்மட்டும் உயிருடன் இருக்கின்றேனே! இதை அறிந்த எல்லோரும் என்னை ஏளனமாகவும், ஐயத்துடனும் நோக்குவார்களே என்னசெய்வேன்” என்று அரற்றி நின்றான். தேவர்களுக்குரிய பூசையைச் செய்வதில் அப்போது பாசறையில் இருந்துவிட்டதால், ஸ்ரீராமனும் அன்றைய நாகாஸ்திரத் தாக்குதலில் இருந்து தப்பினார் எனலாம். பிறகு போர்க்களம் வந்த இருவரும் இலக்குவனின் நிலைமையைக் கண்டு பெரிதும் வருத்தமுற்றுச் செய்வது அறியாமல் திகைத்தனர்.



இந்திரஜித் நாகாஸ்திரத்தை இலக்குவன் படைமீது ஏவி அவனை இறந்துபோகும் நிலைக்குத் தள்ளியதை எடுத்துரைக்கும்பாடல் இது.

**வாங்கினான் மலரின் மேலான் வானக மணிநீர்க்கங்கை**
**தாங்கினான் உலகம் தாங்கும் சக்கரத்தவன் என்றாலும்**
**வீங்குவான் தோளை வீக்கி வீழ்த்து அலால் மீள்கிலாத**
**ஓங்குவான் அரவின் நாமத்து ஒருதனிப்படையை உன்னி. (2129).**

நாகபாசத்தால் தாக்கப்படாத விபீஷணன் அனைவரின் நிலைமையைக் கண்டும் புலம்பல்.

**பாசத்தால் ஐயன் தம்பி பிணிப்புண்ட படையைக் கண்டு**
**நேசத்தால் எல்லாம் வீழ்ந்தார் யான் ஒரு தமியன் நின்றேன்**
**தேசத்தார் என்னே என்னே சிந்திப்பார் என்று நையும்**
**வாசத்தார்மாலை மார்பன் வாய் திறந்து அரற்றல் உற்றான். (2152)**

நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கும் இலக்குவனைப் பார்த்து இராமன் புலம்பி அரற்றியதைக் கூறும் பாடல்.

**உழைக்கும்வெய்துஉயிர்க்கும் ஆவிஉருகும்போய்உணர்வு சோரும்**
**இழைக்குவது அறிதல் தேற்றான் இலக்குவா இலக்குவா என்று**
**அழைக்கும் தன் கையைவாயின் மூக்கின் வைத்து அயர்க்கும்**
**பிழைத்தியோ என்னும் மெய்யே பிறந்தேயும் பிறந்திலாதான். (2165).**

என்னும் இப்பாடலில் இலக்குவணன் நாகக்கணையால் தாக்கப்பட்டிருந்தபோது ஸ்ரீராமர் உயிர் உருகப்புலம்பினான். என்னசெய்வது என்று அறியாமல் இலட்சுமணா, இலட்சுமணா என்று வாய்விட்டு அரற்றினான். தனது கையை இலக்குவனின் வாய்மீதும், மூக்கின்மீதும் வைத்து இலக்குவனுக்கு உயிர் உள்ளதா? இல்லையா என்று சோதித்துப்பார்த்துக் கொண்டிருந்தான் என்னும் போது, ஸ்ரீராமனுடைய சகோதர பாசம் இங்கு புலப்படுவதை அறியலாம்.

மேலும் “என்தம்பி உயிர்பிழைக்கவில்லை என்றால் மூன்று உலகத்தையும் அழித்து விடுவேன் “என்று இராமன்

வீடணனிடம் கூறியதாலும் இது உறுதிபெறுவதையும் அறியமுடிகின்றது.

**வரம் கொடுத்து இனைய பாசம் வழங்கினான் தானே நேர்வந்து**
**இரங்கிடத் தக்கது உண்டேல் இகழ்கிலேன் இல்லை என்னின்**
**உரம் கெடுத்து உலகம் மூன்றும் ஒருவன் ஓர் அம்பின் சுட்ட**
**புரங்களின்தீய்த்துக் காண்பென் பொடி ஒரு கடிகைப்போழ்தின் (2182).**

அந்நிலையில் அரண்மனைக்குச் சென்ற இந்திரஜித்து, நான்சொல்லிச் சென்றவாறு, இவக்குவனை முடித்த விட்டேன். எஞ்சியுள்ளவர்களை நாளை அழிப்பேன்'' என்று கூறிக்கொண்டு, ஏற்கனவே இலக்குவனால் தாக்கப்பட்டபோது பெருகிய இரத்தம் அவனது வாய்வழியே பெருகிவர அதைத் துடைத்துக் கொண்டிருந்தான். பிறகு தன் தந்தையிடம் சென்று ஏராளமான வானரப்படைகளையும், இலக்குவனையும் தனது நாகாஸ்திரத்தால் அழித்து விட்டதைக்கூறிய போது இராமனும் அழிந்தானா என்று ஆவலோடு கேட்டான் இராவணன்.

ஆனால், இலக்குவனோடு தான்போரிட்டபோது அதைக்கண்டு பயந்துபோய் இராமன் ஓடிவிட்டிருக்கவேண்டும்.! எனவே தான் அந்த இராமன் நான் போரிட்டபோது அங்கு வரவில்லை! எனினும் அவனையும் நாளை அழிப்பேன் என்று உறுதி கூறிச்சென்றான்.

இந்நிலையில் இலக்குவனது வீழ்ந்து கிடக்கும் உடலருகே வந்த இராமன் அவனுடைய தலையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு "இலக்குவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால், நான் சுமத்திரைத்தாய்க்கு என்னபதில் கூறுவேன்? இந்த நாகாஸ்திரத்தை மாயாவியான இந்திரஜித்திற்கு அளித்தவன் யார்? அவன் தற்போது என்முன் வந்தால் நான் அவனையும் அழித்துவிடுவேன்" என்று வருத்தமும் அதனால் கோபமும் மேலிட பற்பல வார்த்தைகளைக் கூறி மயக்கமுற்ற நிலையிலே காணப்பட்டார்.



அப்போது அரவக்கணையின் தாக்கத்திலிருந்து மீண்ட அனுமனும் அங்கு வந்து நின்று நிலைமையைக் கண்டு வருத்தமடைந்தார். தனக்கு இந்திரஜித்து போருக்கு வரப்போவது தெரியாமல்போனது என்றும், தெரிந்திருந்தால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அனைவருக்கும் கூறியிருப்பேன் என்றும் மனவருத்தம் அடைய, செய்வதறியாமல் திகைத்து நின்றனர் அனைவரும். இராமனும் இதே கேள்வியை வீடணனிடம் கேட்க, அப்போது இராமன்மீது கொண்ட அன்பினால் மனம் நடுங்கிய கருடன், இத்துன்பத்தைத் தானே நீக்கவேண்டும் என்று முடிவுசெய்தார்.

எனவே போர்க்களத்திற்கு வந்து ஸ்ரீராமனின் அடிபணிந்து நின்றார். அப்போது அவரை யாரென்று இராமன் கேட்க, "திருமாலின் திருவுருவமான நீர் உமது பழைய நினைவுகளை விட்டொழித்ததால் உமது பரத்துவதன்மை தெரியாமல் மனம் கலங்கி நிற்கின்றீர்" என்று தன் மனதிற்குள் நினைத்து, பல ஆறுதல்மொழிகளையும் கூறினார். தான் யார் என்பதைப் பிறகு எடுத்துரைப்பதாகக் கூறி, பெருமானே உனது அதிரேகமாயையை யார் அறிவார் "என்று வினவி அருளாசியும் பொழிந்து நின்றார். அவ்வளவில் அக்கருடபகவானின் நிழலானது இலக்குவன் உள்ளிட்ட அனைவர்மீதும் படுமாறு கருடாழ்வார் பறந்தார். அதனால் அப்பாம்பு கணையின் தாக்கம், அனைவரது உடல்களிலிருந்தும் வெளியேறியது. அனைவரும் மீண்டும் நல்ல நிலையை அடைந்து புத்துயிர் பெற்றவர்களைப்போன்று எழுந்து அமர்ந்தனர்.

தாங்கள் நாகக்கணையின் தாக்கத்திலிருந்து மீண்டதைக்கண்ட எல்லா வானர வீரர்களும் பெருத்த ஆரவாரம் செய்தனர். கடல் அலைபோல் எழுந்த அந்தப் பெருஞ்சத்தம் இராவணனின் இதயத்தைப் பிளப்பதுபோல் எதிரொலித்தது. காரணம் அறியாமல் திகைத்த அவனுக்கும், இந்திரஜித் தனுக்கும் கருடாழ்வாரால் அப்படைவீரர்களும்,

இலட்சுமணனும் காப்பாற்றப்பட்டதை ஒற்றர்கள் எடுத்துரைத்தனர்.

அதைக்கேட்ட இராவணன் கருடனைப் பழித்துக் கூறியதோடு, "அவர்களின் ஆனந்தத்தைக்கெடுத்து மீண்டும் அழித்துவருவதற்காக நீ இன்றே போருக்கு மீண்டும் செல்வாயாக" என்று இந்திரஜித்திடம் இராவணன் கூறினான். ஆனால் தான் அன்றைக்கு ஓய்வெடுத்துக்கொண்டு, அடுத்தநாள் போருக்குப்போவதாக இந்திரஜித்துக் கூறிவிட்டதால், அன்றைக்கு யாரைப்போருக்கு அனுப்பலாம் என்று யோசித்தான் இராவணன்.!

**அடுத்தநாள்போரில் அழிந்தனர் அரக்கர்பலர்.,**

இந்திரஜித்து போருக்குச்சென்று, நாகாஸ்திரம் என்ற அரவக்கணையை அனைவர்மேலும் செலுத்த, இறக்கும் நிலைக்குச் சென்றுவிட்ட இலக்குவன் உள்ளிட்ட அனைவரும் கருடாழ்வானின் கருணையினால் உயிர்பெற்று எழுந்தனர். தந்தையும் தனயனும் ஆன இராவணனுக்கும், இந்திரஜித்தனுக்கும் அதிர்ச்சியைத் தந்தது அந்த நிகழ்வு!

**மாபெரும்பக்கன் என்னும் மகாபாரிசுவனும், புகைக்கண்ணன் என்ற தூமிரட்சனும் அழிதல் :**

எனவே அடுத்தநாளில் மகன் ஓய்வெடுத்துக் கொள்ளப்போவதாகக் கூறிவிட்டதால், அன்றைய போருக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது, மகாபாரிசுவன், தூமிராட்சன் என்ற இருவரும் தாங்கள் போர்க்களம் புகுவதாகவும், தங்களோடு பெரும் படைகளை அனுப்புமாறும் இராவணனிடம் கேட்டனர். இராவணனும் இசைவு தரவே அங்கிருந்த சில தூதுவர்கள்" அரசே நேற்றைய போரில் இலக்குவனுடைய சரமாரி அம்புகளுக்குப் பயந்துபோய், இந்திரஜித்தைத் தனிமைப்படுத்தி ஓடிப்போனவர்கள் இவர்கள்" என்று உரைத்தனர். கோபம் கொண்ட அவன் கிங்கரர்கள் மூலமாக அவர்களைப்பிடித்து, அவர்களுடைய மூக்கை அறிந்து போடுமாறு ஆணையிட்டான். ஆனால் மாலி என்பவன் தடுத்து, அவர்கள் மனம் திருந்தி உள்ளதால் போருக்கு அனுப்பலாம் என்று அறிவுரை கூறவே அனுப்பிவைத்தான் அந்த இருவரையும் அந்த அரக்க அரசன்!



அவர்களோடு பெரும்படைகளும் சென்றனர். அன்றைக்கு இருவர் இருவராகமோதும் தொந்தயுத்தம் (மல்யுத்தம்) நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. புகைக்கண்ணன் என்ற தூமிராட்சனோடு போரிட்ட அனுமன் அவனைக்கொன்றார். மாபக்கன் எனப்பட்ட மகாபார்சுவன் என்பவனோடு மோதிய அங்கதன் அவனை வதம் செய்தான்! அவர்களோடு அரக்கர்களின் பெரும் படையும் அழிந்து தேய்ந்தது.

அன்றைய போரிலேயே மாலியும் அழிந்தான். வேள்விப்பகைவன் என்ற அரக்கனை இலக்குவன் தொலைத்தான். சூரியன் பகைஞன் என்ற மற்றொரு அரக்கனைச் சுக்கிரீவன் அழித்து ஆரவாரம் செய்தான். இடபன் என்னும் வானரவீரனும், வச்சிரத்து எயிற்றன் என்பவனும் போரிட்டனர். அப்போது இடபன் அயர்ச்சிபெற்றதால், அனுமன் அவனுடன் போர்புரிந்து அவனை அழித்து ஆரவாரம் செய்தான். எனவே படைத்தலைவர்களாகச் சென்ற அனைவரும் அழிந்து போனதால், ஓடோடி வந்த தூதுவர்கள் அச்செய்திகளை இராவணனுக்கு உரைத்தார்கள். இதைக்கேட்ட இராவணன் பாம்புபோலப் பெருமூச்சு விட்டு, விம்மி விம்மி அயர்ந்து துடித்தான்.

**மகரக் கண்ணனுக்கும் மரணத்தை அளித்தனர் :**

அப்போது மகரக்கணணன் தான் அடுத்ததாகப் போருக்குச் செல்ல விரும்பி, அரசனது ஆணைக்குக் காத்துநின்றான். அம்மகரக்கண்ணன் என்பவன் ஏற்கனவே

ஸ்ரீராமனால் வதம் செய்யப்பட்ட கரன் என்பவனின் புதல்வன் ஆவான், தன் கணவனை இழந்த என்தாயின் துன்பநிலையைப்போக்கி, இராமனுக்கு நான் மரணத்தைத் தந்தால்தான் என்தாய் பெரிதும் மகிழ்ச்சி அடைவாள். எனவே என் வீரத்தை மதித்து, படைகளோடு என்னைப்போருக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

இராவணனும் அதற்கு ஒப்புதல் தந்ததால் களம்புகுந்தான் மாயக்கண்ணன். அப்போது அவனுடன் சென்ற அரக்கவீரர்களுக்கும், வானர வீரர்களுக்கும் பெரும் போர்நடைபெற்றது. மாயக்கண்ணன் இராமனோடு போர்புரிய விரும்பி, அவரைச் சந்தித்து, பலவஞ்சினமொழிகளைக் (சபதம்) கூறினான். இராமனும் அவனை எதிர்த்ததால், இருவருக்கும் பலத்த யுத்தம் நடைபெற்றது. அப்போது மகரக்கண்ணன் தான் பெற்றிருந்த தவ வலிமையால், போரின்போது இடியையும், பெருங்காற்றையும் உண்டாக்கினான்! மேலும் அவன் தன்னுடைய மாயத்தால் வானில் மறைந்து போரிட்டான். மாயாவியாகப்போர்புரிந்த அவனுடைய தோற்றத்தை அறியமுடியாமலும், இருப்பிடத்தை அறியமுடியாமலும் ஸ்ரீராமரே ஒரு கணம் திகைத்து நின்றார். அப்போது போர்க்களத்தில் ஓரிடத்தில் இரத்தம் படிந்திருப்பதைப்பார்த்த ஸ்ரீராமர் அந்த இரத்தத்தின் வழித்தடத்தில் தன் அம்பினைச் செலுத்தினார்.! அதனால் மாயக்கண்ணன் என்ற அரக்கன் தலை துண்டிக்கப்பெற்று நிலத்திலே விழுந்தது. மாண்டுபோனான் மகரக்கண்ணன்!

மேலும் அவனோடு போருக்குவந்த குருதிக்கண்ணன் என்ற இரத்தக் கண்ணனோடு நலன் என்ற வானரப்படையைச் சேர்ந்த வீரன் போரிட்டு, அவனுடைய தலையைக்கொய்து தள்ளினான். மேலும் அன்றைய போரிலேயே சிங்கன் என்ற அரக்கனை பனசன் என்ற வானர வீரன் கொன்றான். மொத்தத்தில் அன்றைய போரில் இராவணனது படைகளில் பெரும்பாலானவை அழிந்து போயின. இராவணன் படையில் ஐந்து கோடியே இருபது வெள்ளம் வீரர்கள் அழிந்து போயினர் என்று தூதுவர்கள் இராவணனுக்குக் கூற, அதிர்ச்சி அடைந்தான். எனினும் கலங்காமல் நின்று எனது மகனான இந்திரஜித்தை உடனே அழைத்துவாருங்கள் என்று ஆணையிட்டான்.



### இந்திரஜித்தின் இரண்டாம் நாள்போரும் பிரம்மாஸ்திரப் பிரயோகமும் :

தன்னை வந்து வணங்கிநின்று, தந்தை அழைத்ததாகக் கூறிய தூதுவர்களிடம் அரக்கப்படைவீரர்கள் தோல்வி அடைந்தார்களா? என்று இந்திரஜித் கேட்டான்! அப்போது அவர்கள் இந்திரஜித்தைப் பார்த்து இதுவரை போர்க்களத்திற்குச் சென்றவர்களில், திரும்பி வந்தவன் நீ ஒருத்தன்தான். அவ்வளவு பேரும், ஐந்துகோடியே இருபது வெள்ளம் அரக்கசேனைகளும் அழிந்தனர் என்று கூறினார்கள்!

தன் தந்தையைக் கண்ட அவன் “ஐயனே கலங்கவேண்டாம். வானரப்படைகளையும், அதன் படைத்தலைவர்களையும், அதிலும் மிகமுக்கியமாக அந்த மானிடர்கள் இருவரையும் கொன்று, சீதையை நீ சுலபமாக அடைவதற்குரிய வெற்றியை நான் இன்று உங்களுக்கு ஏற்படுத்தித் தருவேன். இது உறுதி என்று சூலுரைத்து, போர்க்களத்திற்குச் சென்றான். தன்தந்தையை வலம்வந்து வணங்கிவிட்டுச் சென்றான். அப்போது கும்பிகை, திமிலை, செண்டை உடுக்கை, கணுவை, கண்டை போன்ற இசைக்கருவிகள் ஒலிக்கப்பட்டன. போருக்குச் சென்ற அவன் பெருத்த ஆரவாரம் செய்து, அணில் வியூகம் அமைத்துப் போரிடத்தயார் ஆனான்.

அப்போது இந்திரஜித்து எழுப்பிய சங்கின் பேரொலியையும், வில்லினது நாண் ஒலியையும் கேட்ட வானர வீரர்கள் பெரிதும் அதிர்ந்துபோய் ஓடத்தொடங்கினர். போர்புரிய

அவர்கள் வைத்திருந்த மலைகளும், பெரிய மரங்களும், கற்பாறைகளும் அவர்களின் கைகளில் இருந்து கீழே நழுவி விழுந்தன.

சுக்கிரீவன், அனுமன், அங்கதன், இராமன், இலக்குவன், வீடணன் தவிர மற்ற எல்லோரும் நிலைகுலைந்து ஓடினர். எனவே அரக்கர்சேனை போர்க்களத்தை ஆக்ரமித்து நின்றது. போரின் உக்கிரகத்தை அறிந்த இராமன் அனுமனின் தோளிலும், இலக்குவன் அங்கதனுடைய தோளிலும் அமர்ந்துகொண்டு வந்து போர்க்களத்தில் நுழைந்தனர். நீலன்போன்றவர்களை பின்வரிசையில் நிற்குமாறு கட்டளையிட்டார் ஸ்ரீராமர். அவர்களும் அவ்வாறே நின்றனர்.

ஆண்மை மிக்க இராம இலக்குமணர்கள் செலுத்திய வில்கள் பொழிந்த அம்பு மழையைக் கண்டு திகைத்தான் அந்த இந்திரஜித்! உண்மையில் இவர்கள் போர்த்திறம் மிக்கவர்களே என்று புகழ்ந்தான். ஆயினும் அவன் ஒருவனாகவே நின்று இராம இலக்குமணர்களாகிய இருவரையும் எதிர்த்துப்போரிட்டான்.

அப்போது இலக்குவன் ஸ்ரீராமனைப் பார்த்து "முந்தைய போரில் இந்திரஜித்து தாக்கிய நாகபாசத்தால் என்னை நானே தடுத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் எனக்குப்பழியும் உண்டாகலாம். தன்னைத்தானே காத்துக்கொள்ள முடியாதவன் எப்படி மற்றவர்களைக்காப்பான் என்று மற்றவர் ஒருவேளே என் வீரத்தை இகழலாம். எனவே தற்போது நான் ஒருவனாகவே நின்று இவனுடன் போரிட்டு இந்த இந்திரஜித்தினுடைய தலையை வீழ்த்துவேன். அதற்குத்தாங்கள் அனுமதி அளிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். இராமனும் இசைந்து பாராட்டினான். உடனே இலட்சுமணன் அரக்கரின் படைகளுக்குள்ளே அதிர்ச்சியை உண்டாக்குமாறு சங்க ஒலி எழுப்பி நுழைந்தான். அரக்கர்கள் சக்கரம், ஈட்டி, தோமரம், கதை, வேல், முகண்டி, முதலியனவற்றை பெருமழையைப் போலே இலக்குவன் மீது எறின்தனர். அவையெல்லாம்



மன்மதனை ஒத்தவனான அந்த இலக்குவன் எய்த சரமழையால் துண்டு துண்டுகளாகி நிலத்தில் விழுந்தன. அப்போதும் இராமன் போர்க்களத்தில் இருந்ததால், நான் ஒருவனே உங்களை எதிர்த்துப் போரிடுகின்றேன். நீங்கள் இவ்வாறே தொடர்ந்து போர்புரிய விருப்பமா? அல்லது தனியாக மோத உள்ளீரா என்று வினவினான்.

அதற்கு இலக்குவன் யான் ஒருவனே போரிட்டு உன்னைக் கொல்வதாக சபதம் ஏற்றுள்ளேன் என்றான். அதைக்கண்டு சிறிதும் கலக்கம் அடையாத இந்திரஜித்து, "என் தம்பியர்க்கும், எனது சிற்றப்பாவாகிய கும்பகர்ணருக்கும் உங்களைக்கொன்று, அதனால் வெளிப்படும் குருதியை (இரத்தத்தை) நீராகக்கொண்டு அவர்களுக்கு நீர்க்கடனாகச் செய்யப்போகின்றேன் என்றான். கோபம் கொண்ட இருவரும் கடும்போர் புரிந்தனர். அப்போது இந்திரஜித்து அங்கதன் தோள்மீதும், இலக்குமணன் தோள்மீதும் பதியுமாறு தன் அம்புகளைச் செலுத்தி பெரும் சங்கநாதம் செய்தான்.

இலக்குவன் இந்திரஜித்து அணிந்திருந்த பொற்கவசமும், அதைப்பூட்டியிருந்த மூட்டும் கழலுமாறு இடிபோலத்தாக்கும் பத்து அம்புகளை இந்திரஜித்தின்மேல் ஒரே நேரத்தில் செலுத்தி அவனது சங்கொலிக்கு எதிராக நாண் ஒலி எழுப்பினார். அதைக்கண்ட வானரர்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். இலக்குவனின் போர்த்திறமையைப்பார்த்த இந்திரஜித்து அயன்படையாகிய பிரம்மாஸ்திரத்தை எய்தால் தான் இவனை அழிக்கமுடியும் என்று முடிவு செய்தான். அதே நேரத்தில் இலக்குவனும் அதே எண்ணத்தைக் கொண்டவனாக, பிரம்மாஸ்திரத்தை இந்திரஜித்தின் மேல் எய்வதற்கு தமையனிடம் (இராமனிடம்) அனுமதிகேட்டான். ஆனால் ஸ்ரீராமன் அதற்கு மறுப்புக் கூறி, பிரம்மாஸ்திரத்தின் தாக்கக் கொடுமையை எடுத்துக் கூறி. அதனால் பலபேருக்கும் அழிவுகள் உண்டாகும். எனவே வேண்டாம் என்று தடுத்தான் அந்த தர்மாத்மா!

ஆனால் தான் பிரம்மாஸ்திரத்தைச் செலுத்தினால், இராமனோ, இலக்குவனோ தன்மீதும் பிரம்மாஸ்திரத்தையே செலுத்தி பயனற்றுப்போகும் படிச் செய்துவிடுவார்கள். எனவே தான் மறைந்து நின்று அந்த அயன்கணையச் செலுத்தி அனைவரையும் அழித்துவிடவேண்டும் என்றும், அதற்குரிய வழியாது என்றும் யோசித்தான். தன் தந்தையாகிய இராவணனைக்கான இலங்கைக்கு வான்வழியே பறந்து சென்றான்.

எனவே இந்திரஜித்திடம் இருந்து எவ்விதத்தாக்குதலும் வரவில்லை என்பதை அறிந்தான் இலக்குவன். இந்நேரத்தில் சூரியனும் மறைந்தான். எனவே சேனைகளைக் காக்குமாறு இராமன் இலக்குவனுக்குக் கட்டளை இட்டார்.

பிரம்மாஸ்திரத்தை இலக்குவன்மேல் எய்து அழிக்கவேண்டும் என்ற தனது கருத்தை இந்திரஜித்து தன் தந்தையிடம் கேட்டபோது "ஒருவரை அழிக்கநினைத்தால் எப்படிப்பட்ட ஆயுதத்தையும் செலுத்தி அழித்துவிடவேண்டு இதில் தயக்கம் என்பதைக்காட்டக்கூடாது" என்று அனுமதிகொடுத்தான் அந்த அதர்மியாகிய அரக்கன் இராவணன். மகிழ்ச்சி அடைந்த இந்திரஜித்து, அதற்கு தான் சில ஆயத்தங்களைச் (முன்னேற்பாடுகளைச்) செய்யவேண்டும் என்றும், அதுவரையில் இடைப்பட்டநேரத்தில் இராமனின் படைகளை ஏமாற்றிப்போர்புரிய மாயா ஜாலங்கள் நிறைந்த சிலபேரை வானரப்படைகளோடு போர்செய்ய அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டான் இந்திரஜித்.

உடனே இராவணனும் மகோதரன், அகம்பணன் போன்ற பல அரக்கர்களைப்போருக்கு அனுப்பிவைத்தான். அந்த அகாலநேரத்தில் நூறுவெள்ளம் வானரச் சேனைகளோடு போர்க்களம் புகுந்தனர் மாயாவி அரக்கப்படையினர். அதைக்கண்ட இலக்குவன், அங்கதன், அனுமன், ஜாம்பவான், நீலன்போன்றோர் ஒன்று திரண்டு அரக்கவீரர்களோடு போர்புரிய



வந்தனர். போரும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வானரப்படையின் படைத்தளபதிகளாக இருந்து போர்புரிந்து வந்த அனைவரும் அரக்கர்களின் மாயச்செயலால் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து சென்றனர். ஒருவரை விட்டு ஒருவர் பலகாத தூரம்வரையில் சென்று அம்மாயாவிகளோடு சினத்துடன் போரிட்டுக்கொண்டிருந்தனர்.

அகம்பன் என்பவனோடு போரிட்டுக்கொண்டிருந்தான் அனுமன். அகம்பணன் மறைந்துகொண்டான். திடீரென்று அனுமன் சுற்றுமுற்றும் பார்த்து, தனக்கு வேண்டிய வானரப்படைகள் எல்லாம் எங்கே? இலக்குவன் எங்கே? சுக்கிரீவன் எங்கே? யாரையும் காணோமே என்று ஐயம் அடைந்து, தேடத்தொடங்கினான். சிறிது தூரத்தில் இலக்குவன் அரக்கப்படைகளோடு தனியனாகப் போரிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அப்போது சற்று ஆறுதல் அடைந்த அனுமன், இலக்குவனைப்பார்த்து, அரக்கப்படைகளின் மீது சிவன் படையைப் (அஸ்திரத்தை) பயன்படுத்துமாறு வேண்ட, இலக்குவனும் மூன்று கணைகளை உடையதான சிவன் அஸ்திரத்தை அரக்கப்படைகளின் மீது செலுத்தியதால் பெரும்பாலானோர் அழிந்து ஒழிந்தனர். இதனால் அதிர்ந்து போன இலங்கையின் தூதுவர்கள் ஓடோடி வந்து அச்செய்தியைச் சொன்னார்கள். வானரப்படைகள் மிகவும் மகிழ்ச்சியாக போரிட்டுக்கொண்டு இருப்பதாகவும் கூறினார்கள்.

எனவே பிரம்மாஸ்திரப் பிரயோகத்திற்கு வேண்டியவனவற்றைச் செய்வதற்குத் தனக்கு கால அவகாசம் கிடைத்துள்ளது என்று மகிழ்ந்த இந்திரஜித்து, பெரிய ஆலமரம் ஒன்றைச் சென்றடைந்தான். தனது அம்புகளினால் யாகத்திற்கு வேண்டிய சமித்துகளைத் தயார்செய்து கொண்டான்! வேள்வியைத் தொடங்கிச் செய்தான். வேள்வித்தீயானது நறுமணத்துடன் வலப்புறமாகச் சுழன்று நின்றது. நற்சகுணத்தை உணர்த்தியது. எனவே தனக்கு வெற்றி உறுதி என்று

மகிழ்ந்திருந்த அவன் பிரம்மாஸ்திரத்தைச் செலுத்துவதற்குத் தேவையான காலத்தை எதிர்பார்த்திருந்தான்.

அந்தநேரத்தில் மகோதரன் என்ற அரக்கன் தேவேந்திரனின் வடிவத்தில் வந்து வானரப்படைகளோடு போரிட்டுக்கொண்டிருந்தான். சிலமாயாவிகள் முனிவர்களைப் போலவும், தேவர்களைப்போலவும் உருவம் மாறி வந்து வானரப்படைகளோடு யுத்தம் செய்து கொண்டிருந்தனர். இதனால் வியப்படைந்து, இலக்குவன் அனுமனிடம் காரணத்தைக் கேட்டுக்கொண்டு ஏமாந்திருந்த அந்த நேரத்தில் இந்திரஜித்தன் பிரம்மாஸ்திரத்தை மந்திரப்பிரயோகம் செய்து இலக்குவன்மேல் எறிந்தான்.! பொன்மயமான மலையின்மேல் வந்து மொய்த்துக் கொண்ட ஆயிரமாயிரம் குருவிகளைப்போல இலக்குவன் உடலைக் கோடிக்கணக்கான அம்புகள் தாக்கியதால் நிலைகுலைந்து வீழ்ந்தான் இலக்குவன்.

இலக்குவன் மட்டுமன்றி அனுமன், சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான், நீலன், நலன் போன்ற அனைவருமே அதன் தாக்கத்திற்கு ஆளாகியதால் அவர்கள் மீது ஆயிரக்கணக்கில் அம்புகள் பாய்ந்ததால் அவர்களும் நிலைகுலைந்து நிலத்தில் வீழ்ந்தனர். பலர் இறந்தும் போனார்கள். அவர்களோடு இருந்த மொத்த வானரப்படைவீரர்களும் இறந்து போனார்கள். அப்போது போர்க்களத்தில் இல்லாமல் பூசையில் ஈடுபட்டிருந்தார் ஸ்ரீராமர். விபீஷணனும் வானரப் படைகளுக்கு உணவு கொடுக்கும் தயாரிப்பில் ஈடுபட்டு, போர்க்களத்தில் இல்லாததால், இக்கொடுமையில் இருந்தும் தப்பினார்கள். ஆனால் சற்று நேரத்திற்குப்பிறகு அங்கே வந்து இருவரும் இலக்குவன், மற்றும் அனைத்துப் படைவீரர்களும் வேரற்ற மரம்போல் வீழ்ந்து கிடப்பதைப்பார்த்து அரற்றினார்கள்.! இந்திரஜித் பிரம்மாஸ்திரப் பிரயோகம் செய்துவிட்டதை அறிந்து கொதித்தெழுந்தார் ஸ்ரீராமர். அந்தப்பிணக்குவியல்களுக்கு



இடையே தனது தம்பியைத்தேடிக் கண்டுபிடித்து அவனுடைய நிலையைக் கண்டு பலவாறு புலம்பித்தவித்தார். மென்மேலும் புலம்பியும், அரற்றியும் அயர்ந்துபோனதால் அவரும் தம்பியின்மீது வீழ்ந்து மூர்ச்சையானார். வீடணனும் சொல்லொணாத்துன்பம் அடைந்து, அனுமன், ஜாம்பவான் ஆகியவர்கள் பிரம்மாஸ்திரத்தால் தாக்கப்படாதவர்கள் ஆகையால் அந்த அயன்கணையாகிய பிரம்மாஸ்திரத்தால் நிச்சயம் அவர்கள் அழிந்திருக்கமாட்டார்கள் என்று உறுதி செய்துகொண்டு அவர்களைத்தேடினான்.!

முதலில் அனுமனைத்தேடிய வீடணன் அவரைக்கண்டு பிடித்து, மயக்கத்திலிருந்த அவருக்குத்தண்ணீர்த் தெளித்தும், அருந்தக் கொடுத்தும் அவரை எழுமாறு செய்தார். பிறகு இருவருமாகச் சேர்ந்து ஜாம்பவானைத்தேடிக்கண்டுபிடித்து, ஆறுதல் கூறி, மயக்கம் தெளிவிக்க அவரும் எழுந்தார். பிரம்மாஸ்திரத்தால் ஏற்பட்ட பெரும் உயிரிழப்புகளை நன்கு அறிந்தவரான அவர், அனைவரையும் உயிர்ப்பிக்கச் செய்யக்கூடிய அருமருந்துகள் சிலவற்றைக்கொண்டு வருமாறு அனுமனை வேண்டினார். அதன்விவரத்தைப் பின்வருமாறு கூறினார்." வீரனாகிய அனுமனே, இந்தக் கடலைத்தாண்டி வெகுதூரம் சென்றால், நீ இமயமலை என்பதை அடையலாம். அதற்கடுத்து ரிஷபம் என்ற பெயருடைய தங்கமலை உள்ளது. அதை அடுத்துக் கைலாசம் என்ற சிகரம் உள்ளது. இவை இரண்டிற்கும் இடையில் பலவிதமான மூலிகைகளைக் கொண்ட மருந்துமலை, (சஞ்சீவினி பர்வதம்) உள்ளது.

அம்மருந்து மலையில் நான்குவிதமான மூலிகைள் உள்ளன. இறந்தவர்களைப் பிழைக்கவைக்கும் மிருத சஞ்சீவினி, உடல்புண்ணை ஆற்றும் விசல்யகரணி, காயத்தால் உண்டான வடுவை நீக்கும் சாவர்ணியகரணி, அறுபட்ட உடலையும் ஒட்டவைக்கும் சந்தானகரணி ஆகியவற்றை விரைந்து சென்று கொண்டுவந்தால், இலக்குவனையும், மற்ற

உயிரிழந்த வானரப்படை வீரர்களையும், உடலுறுப்புகள் அறுபட்டுக்கிடக்கும் அனைவரையும் உயிர்ப்பியக்கச் செய்யமுடியும். இதைச் செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவன் உன்னைத்தவிர வேறு எவருமில்லை" என்று கூறி வேண்டினார்.

உடனே சற்றும் தயங்காத அனுமன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, திரிகூடமலையின் மீது ஏறி நின்று, பறந்து செல்வதற்கேற்றவாறு தன்னுடைய உடலுறுப்புகளை அமைத்துக்கொண்டு பறக்கத் தொடங்கினார். இலங்கை மாநகரம் அதிர்ந்ததால் அச்சம் கொண்டு அரற்றினர் அரக்கர்கள். அவ்வாறு பறந்து ஜாம்பவான் கூறிய அம்மலையை அடைந்து தேடியபோது, தங்களை ஒரு வானரன் வந்து தேடுவதை அறிந்த அம்மருந்துகள் தங்களின் ஒளியை மறைத்துக் கொண்டன. அதனால் அவற்றை அடையாளம் காணமுடியாமல் சற்று நேரம் திகைத்த அனுமன், தனது வாலால் அம்மலையைச் சுற்றி அப்படியே பெயர்த்தெடுத்தான். பிறகு அதைத்தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தனது தந்தையாகிய வாயுபகவானின் வேகத்தைக் காட்டிலும் விரைந்து வரத் தொடங்கினான்.

### களியாட்டம் கண்டுமகிழ்ந்தான் காமுகன் இராவணன் :

இந்திரஜித்தனுடைய பிரம்மாஸ்திரப்பிரயோகத்தால் அனைத்துப்படைகளும் அழிந்தனர் என்று மகிழ்ந்தான் இராவணன். எனவே கின்னரர்கள் இசைபாட, தேவமாதர்கள் நடனமாட, அனைவரும் கள்ளுண்டு மகிழ்ந்தனர். கள்ளுண்ட அனைவரும் ஆடிப்பாடியும், தள்ளாடியும் இருந்தனர். சீதாவை அடையப்போவது உறுதி என்ற மகிழச்சிக்கடலில் மிதந்து கொண்டிருந்தான் இராவணன். மற்ற அரக்கத்தலைவரும் எல்லையற்ற இன்பத்தில் மிதந்தனர். இதற்கிடையில் அரக்க சேனைகளின் அழிவை மற்றவர்கள் அறிந்துகொள்ளக்கூடாது என்று எண்ணிய துர்ப்புத்தி படைத்த இராவணன் அரக்க வீரர்களின் உடலைக் கடலில் எறிந்து விடுமாறு மகோதரனுக்குக்



கட்டளை இட்டான். அவனும் அவ்வாறே செய்துவிட்டதால் போர்க்களம் முழுமையிலும் வானரர்களின் உடல்களே இருந்தன.

இந்நிலையில் மருந்துமலையோடு வந்த அனுமன் அதைப்போர்க்களத்தின் பகுதியில் இறக்கினான். மேலே கூறப்பட்ட அனைத்து மூலிகைகளின் தாக்கத்தால், போரில் இறந்தவர்கள், மயக்கநிலையிலே இருந்த இலக்குவன், சுக்ரீவன் உள்ளிட்ட அனைவரும் புத்துயிர்பெற்று எழுந்தனர். இராமனும், வீடணனும், ஜாம்பவானும் மகிழ, அனைத்து வீரர்களும் சேர்ந்து ஆர்ப்பரித்தனர். இதைக்கேட்டு அதிர்ந்து போனார்கள் இராவணன் அரண்மனையில் களியாட்டத்தில் மூழ்கியிருந்த அனைவரும். அப்போது வண்டின் உருவத்திலே வந்த அரக்கத்தூதுவர்கள் இராவணனுடைய காதில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் எடுத்துரைத்தனர். பிறகு இதை அறிந்த மகோதரன், அரக்கர் உடல்களைக் கடலில் எறியாமல் இருந்திருந்தால், அவர்களும் பிழைத்திருப்பார்களே என்று கூறி வருந்தினான்.

### மாயவான் அறிவுரையும், இராவணன் கோபமொழிகளும் :

இந்நிலையில் இராவணன் தனது மந்திராலோசனை சபையைக் கூட்டினான். அப்போது மாயவான் எதிர்பாராமல் அதிசயிக்கத்தக்க இந்த நிகழ்வுகள் எல்லாம் கண்டால், நாம் இறுதிப்போரிலும் தோற்றுப்போவோம் என்றே தோன்றுகிறது, மேலும் அரக்கர்படையும் தற்போது சொற்பமான எண்ணிக்கையிலேயே உள்ளது. அதனால் சீதையை இராவணனிடம் ஒப்படைப்பதே சரி என்று தனது கருத்தைக் கூறினான். அதைக்கேட்டு மிகுந்த கோபம் கொண்ட இராவணன் அவனைக்கொல்லுவேன் என்று ஓடிச்சென்றான். ஆனால் அதை மற்றவர்கள் தடுத்தனர். அப்போது" யார்யாருக்கு பயம் உள்ளதோ அவர்கள் எல்லாம் ஓடிப்போங்கள்" என்று கர்ஜித்தான் அவன்.

**மாயாசீதையைக் கொன்றால் மீளாவெற்றிபெறலாம் :**

சபையில் நடந்த சலசலப்பை அடக்கிய இந்திரஜித்து, யாரும் மனம் தளரவேண்டாம் என்றும், தன்னுடைய இஷ்ட தெய்வமான நிகும்பலா தேவிக்குப் பூசை செய்துவிட்டு, அவிர்பாகத்தை அவளுக்குக் கொடுத்து, திருப்திபடுத்திவிட்டால், தன்னால் இராமன் உள்ளிட்ட அனைவரையும் வெற்றிகாணமுடியும் என்று கூறினான். ஆனால் அவ்வாறு செய்யும்போது, வீடணனால் நிச்சயமாக இடையூறு ஏற்படும். எனவே இதைத்தடுக்க ஒரு வழி உள்ளது அதைத்தனக்கு நிறைவேற்றித்தரவேண்டும் என்று இராவணனிடம் கேட்டான் இந்திரஜித்து. மேலும் "மாயாசீதாவை உருவாக்கி, அவளை அனுமன்காணுமாறு கொன்றுவிட்டு "நான் இப்போது அயோத்திக்குச் சென்று அங்குள்ளவர்களை அடியோடு அழிக்கப்போகின்றேன் என்று கூறிவிட்டு போக்குக்காட்டிவிட்டு நிகும்பலா என்ற இடத்திற்குச் சென்று நிகும்பலை தேவிக்குப் பூசை செய்த முடித்து விட்டால் அதன்பிறகு என்வெற்றியை யாராலும் தடுக்கமுடியாது. ஆனால் வீடணன் ஒருவேளை யூகம் செய்து விட்டால், அவன் வானரர்களோடு வந்து என்யாகம் நிறைவேறாமல் செய்து விடுவான். எனவே நீ உன் பெரும்படையை அனுப்பி, என்னைச் சுற்றிக்காவல் வைத்து பூசைநிறைவேறச் செய்யவேண்டும் இதுவே என் வேண்டுகோள்" என்றான் அவன். உடனே தான் மகோதரன் உள்ளிட்டோரை அனுப்புவதாக ஒத்துக்கொண்டான் இராவணன்.

**மாயா சீதை வதையால் மருண்டு அழுதனர் :**

எனவே தன் மாயாசக்தியால் மாயா சீதையை உருவாக்கி வானர வீரர்களும் குறிப்பாக அனுமனும் காணுமாறு அந்தச் சீதையை போர்களத்திலே தன் வாளால் வெட்டி வீழ்த்தினான். அனுமனும் வானர வீரர்களும் இதைக்கண்டு பதறிப்போனார்கள். இந்திரஜித் சீதாவைக் கொன்று விட்டான் என்று நம்பிய அவர்கள் ஓடிப்போய் ஸ்ரீராமரிடமும் கூறினார்கள்.



அதைக்கேட்டு அடியற்ற மரம்போல் நிலத்திடை வீழ்ந்தார் இராமபெருமான். இனி போர்செய்து ஒருபயனும் இல்லை. யாரை மீட்கவந்தோமோ அவளே இல்லை என்றாகிவிட்ட பிறகு போர்செய்வதால் ஒருபயனும் இல்லை என்று புலம்பினார். மேலும் அந்த இந்திரஜித்துக் கூறியதைப்போல அயோத்திக்குச் சென்று அநர்த்தம் செய்து அழிவை விளைவித்தால் என்ன செய்வது என்றும் புலம்பினார்.

**மாயா சீதையே இறந்தாள் ! மயங்காதீர் புலம்பாதீர் :**

ஆனால் அங்கு வந்த விபீஷணன் சீதாவை இந்திரஜித் அழித்திருக்கமுடியாது என்றும், அது அவனுடைய மாயாஜாலங்களுள் ஒன்று என்றும் உறுதியுடன் தெரிவித்தான். விபீஷணன் உறுதிமொழியால் சற்று நம்பிக்கைப் பிறந்தது. இதற்கிடையில் இந்திரஜித்து அயோத்திக்குச் செல்வதாகக் கூறிச் சென்றதில் சூழ்ச்சி இருக்கும் என்று எண்ணினார் விபீஷணர். எனவே ஒருவேளை இந்திரஜித்து நிகும்பலா என்ற இடத்தில் உள்ள காளிகோயிலுக்குப் பூசை செய்ய சென்றிருக்கலாம் என்று இராமனிடம் கூறி, இலக்குவனைத் தன்னோடு அனுப்புமாறும் வேண்டினான் வீடணன். ஒருசிறுபடையோடு இலக்குவனை அனுப்பிவிட்டு, மீதம் இருந்த வானரப்படைகள் அரக்கர்களோடு போரிட்டனர்.

தான் யூகித்ததைப்போலவே ஒரு பெரிய அரக்கர்படை காவல்காத்துக்கொண்டு நின்றிருக்க, அக்காளிக்குப் பூசை செய்து, மந்திர உச்சாடனங்களைச் செய்து கொண்டிருந்தான் அந்த மாயாவி இந்திரஜித்து. உடனே இலக்குவன் அந்த அரக்கர்படைகளின் மீது தனது முழுபலத்தையும் பயன்படுத்தி அவர்களை அழிக்கத் தொடங்கினான். அரக்கர்களும் கடும்போர் புரிந்தனர். சற்று நேரத்தில் அனுமனும் அங்கு வந்து சேர்ந்ததால் பெரும் கர்ஜனைகள் செய்தும், பெருத்த ஓசையை எழுப்பியும் இந்திரஜித்தை மந்திரம் செய்ய விடாமல் தடுத்தனர்.

விபீஷணனால் தனது நிகும்பலா யாகம் முடியாமல் போனதைக்கண்டு மிகுந்தகோபம் கொண்டான் இந்திரஜித்தன்! போர்முனைக்குத் திரும்பிய அவன் தனது சிற்றப்பனை குலத்துரோகி என்று ஏளனம் செய்து நிந்தித்தான். விபீஷணரும் அவன் தந்தையின் அதர்மங்களையும் இந்திரஜித்தின் இழிவான போர் முறையையும் சாடினார். தர்ம நெறிகளைக் கடைப்பிடிக்காத தந்தையின் செயலையும், அதற்குத் துணைபோன மகனையும் இழித்துரைத்ததால், ஒரு பெருங்கணையை அந்த வீடணன்மேல் பிரயோகித்தான் இந்திரஜித்து. அதைத் தன்பாணங்களால் சின்னாபின்னமாக்கினான் இலக்குவன். மீண்டும் இலக்குவனுக்கும் அவனுக்கும் நடைபெற்ற போரில் இந்திர ஜித்தினுடைய தேர்ச்சாரதி, குதிரைகள் போன்றனவற்றை எல்லாம் அழித்தார் இலக்குவன். ஆதலால் யாருக்கும் தெரியாமல் இலங்கைக்குச் சென்று ஒரு பொன் தேரைக் கொண்டு வந்து அதன் மேல் நின்று போரிட்டான். இறுதியில் இலக்குவன் தன்னிடம் இருந்த இந்திராஸ்தத்தை எடுத்து இந்திர மந்திரத்தை ஜபித்து "ஸ்ரீராமர் தர்மவான் என்றால், அவர் சிறந்தபண்பாளர் என்றால் நீ தவறாமல் சென்று இந்திரஜித்தை நாசம் செய்வாயாக" என்று அதைப் பிரயோகித்தான். இந்திராஸ்திரம் இந்திரஜித்தினுடைய தலையைக் கொய்து தரையில் வீழ்த்தியது. இந்திரஜித் இறந்து போனான். இலக்குவன் வெற்றி ஆரவாரம் புரிந்தான். வானரப்படைகள் பெருத்த ஆரவாரம் புரிந்தனர். தேவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மலர்மாரி பொழிந்தனர்.

இந்திரஜித்தின் வதைக்குப்பிறகு, அனுமன் விபீஷணன் புடைசூழச் சென்ற இலக்குவன் மிகவும் பணிவுடன் தான் இந்திரஜித்தை வதம் செய்து அழித்ததை ஸ்ரீராமருக்கு எடுத்துரைத்தான். மகிழ்ச்சி அடைந்த இராமன் அவனுக்கு ஆசிகள் கூறி வாழ்த்தியதோடு, தன் தம்பியின் உடற்காயங்களுக்கு மருந்திடுமாறும் கூறி, இராவணன்



போருக்கு வரும் நாளையும் நேரத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

இந்திரஜித்தன் வதைக்கப்பட்டதை அறிந்த இராவணன் ஓ! வென்று கதறி அழுதான். இராவணன் என்றால் கதறி அழுபவன் என்று பொருளாகும். அதற்கு ஏற்ப கதறி அழுதான். அவன்மட்டுமன்றி மண்டோதரியும் இந்திரஜித்தின் மனைவியும் பெரும் ஒலி எழுப்பி அழுதனர். தனக்கு ஈமக்கடன் செய்யவேண்டியவனுக்குத் தான் ஈமக்கடன் செய்யும் படி ஆயிற்றே என்று பலவாறு புலம்பினான் அந்த இராவணன். அரண்மனையின் அழுகை ஒலியானது சீதை சிறை வைக்கப்பட்டிருந்த அசோகவனம் முழுவதும் கேட்டு எதிரொலித்தது. அதைக்கேட்ட சீதாதேவியும் மகிழ்ந்தாளாம்!

"இராவணன் என்ற பெயருக்கு கதறிக்கதறி அழுபவன் என்றும் பொருளாயிற்றே! ஏ இராவணா ! எத்தனைக் கற்புடையப் பெண்களை நீ சீரழித்தாய், அவர்கள் கதறி அழுதபோது அதைக்கேட்டு இன்பம் கொண்டாயே படுபாவி! அதற்கெல்லாம் சேர்த்து நீ தற்பொழுது அழுது புலம்புகின்றாய் பார். இதுதான் நீ செய்த கர்மவினைகளின் பலாபலன்!" என்று நினைத்தாளாம் அந்தச் சீதை நல்லாளும்.!

புலம்பலை உடனே நிறுத்திக்கொண்ட இராவணன், திடீரென்று கோபாவேசம் கொண்டு இத்தனைக்கும் காரணமான சீதாவைக் கொன்று போடுகின்றேன் என்று கூறிக்கொண்டு, கையிலே பெரும்வாளொன்றை ஏந்திக்கொண்டு, சீதையிருந்த அசோகவனத்திற்கு வேகமாய்ச் சென்றான். ஆனால் அவன் மந்திரிகளுள் எஞ்சியிருந்த சுபார்சுவன் என்பவன் அதைத் தடுத்து நிறுத்தினான். அந்தநிலையிலும் வானரப் படைகளைத்தாக்கி அழித்து, போரில் வெற்றிகாணவேண்டும் என்ற தனது குறிக்கோளில் சற்றும் தளர்ச்சி அடையாதவனாகவே இருந்தான் அந்த இராவணன்.!

**மூலபலப்படையும் அழிந்தது !**

எனவே அடுத்ததாக போருக்குச் செல்ல தன்னுடைய மூலபலப்படையை வருவித்தான் இராவணன். அவர்களைப் போருக்கு அனுப்பினான். ஆனால் அவர்கள் அனைவரையும் தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் இராமன் ஒருவனாகவே கொன்று குவிப்பதைப்பார்த்த அனைவரும் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடிப்போனார்கள். ஸ்ரீராமரின் திறமையைக் கண்டு தேவர்கள் ஆனந்தம் கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

**இராவணன் களம் காண் படலம். மூன்று சேனாபதிகள் அழிந்தனர் :**

அடுத்ததாக தானே போருக்குச் செல்லவேண்டிய கட்டாயம் வநத்து. அப்போது இராவணனிடத்தில் விருபாட்சன் மகோதரன் மகாபார்சுவன் என்ற வலிமைபடைத்த மூன்று சேனாபதிகள் மட்டுமே இருந்தனர். அவர்களோடும் எஞ்சியிருந்த படைவீரர்களோடும் போருக்குப் புறப்பட்டுச் சென்றான் இராவணன். அரக்க வீரர்கள் புத்துணர்ச்சி பெற்று ஆரவாரித்தனர். ஆனால் பல தீய சகுனங்கள் அவனுக்குத் தோன்றின. அரக்கர்களின் அட்டூழியம் அழியப்போகும் காலம்நெருங்கிவிட்டதை அவை முன்கூட்டியே எடுத்துரைத்தன. எனினும் வேறு வழியின்றி போர்க்களம் புகுந்து, மிகவும் ஆணவத்தோடும்,, அகங்காரத்தோடும், வீரத்தோடும் போர்புரிந்தான் அவன். அவனோடு சென்ற மூன்று சேனாபதிகளும் தம் முழுபலத்தைக் காட்டிப்போரிட்டனர். பலத்தபோரில் சுக்கிரீவன் விருபாட்சனைக் கொன்றான். மகோதரனும் அவ்வாறே கொல்லப்பட்டான். அப்போது மகாபார்சுவான் அங்கதன் மேல்பாய்ந்து பயங்கரமான போர்செய்தான். எனினும் அங்கதனால் அவனும் மாண்டுபோனான்.



இதையெல்லாம் கண்ட இராவணன் சற்றும் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. எப்படியாவது ஸ்ரீராம லட்சுமணர்களை அழித்து விட்டு சீதையை அடைதல் எனும் தன் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளத்துடித்தான். எனவே தன் தேர்ச்சாரதியைப் பார்த்து இராம லக்குமணகர்கள் இருக்கும் இடத்திற்குத் தேரைச் செலுத்துமாறு கூறினான். தேர்ச்சாரதியும் அவ்வாறே செய்ய, அப்போது ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் மிகப்பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. போரில் தன்னுடைய அஸ்திரங்கள் அனைத்தும் பயனற்றுப்போவதைக் கண்டு திகைத்தான் இராவணன். அப்போது இலட்சுமணன் இடையே புகுந்து ஏழுபாணங்களை இராவணன்மேல் எறிந்து அவனுடைய தேரை அழித்து, குதிரைகளையும் கொன்றான். இராவணனுடைய வில்லை ஒடித்தான்.

**மீண்டும் சஞ்சீவினி, மீண்டான் இலக்குவன் !**

அப்போது அங்கு வந்த விபீஷணனைக் கண்டவுடன் கொதித்தெழுந்தான் இராவணன். குலத்துரோகி என்றும், குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பென்றும், பாசத்தையும் நேசத்தையும் கொன்றவன் என்றும், பலவாறு இழித்துரைத்தான் இராவணன். அப்போது. வீடணனும் இராவணனுடைய ஆணவப்பேச்சையும் தர்மம் தவறிய செயல்களையும், வேண்டாமென்று தடுத்த தன்னை இழிவுபடுத்திய பாசமற்ற பாதகன் அவனே என்றும் பதிலுக்குச் சினந்துரைத்தான். அதனால் கோபம் தலைக்கேறப்பெற்ற அவன் சக்தி ஆயுதம் ஒன்றை எடுத்து விபீஷணன்மேல் பிரயோகித்தான். அது வீடணனைத்தாக்கவந்தது. வீடணனைச் சரணாகதி ஏற்ற தன்னுடைய தமையனின் வார்த்தை பொய்யாகக் கூடாது என்று எண்ணிய இலக்குவன், அதிலிருந்து விபீஷணனைக் காக்க நினைத்து இடையில் புகுந்து அதைத்தன் மார்பில் ஏற்றுக்கொண்டான். அதனால் மூர்ச்சையாகி மண்ணில்

சரிந்தான். இலக்குவன் மீண்டும் உயிர்பெற வேண்டுமானால், சஞ்சீவி மலையின் மூலிகைகள் மீண்டும் தேவை என்பதை விபீஷணன் உணர்த்தினார். அனுமனும் விரைந்து சென்று கொண்டு வந்ததால் இலக்குவன் மீண்டும் புத்துயிர்பெற்று எழுந்தான்.

**ஸ்ரீராமர் தேர் ஏறுபடலம் :**

ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடைபெறும் யுத்தமானது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும், நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும்போர் ஆகும். இதை இப்படியே நீட்டித்துக்கொண்டு போகக் கூடாது என்றும், தனது அவதார நோக்கமாகிய அரக்கர்வதையை முடித்துக்கொள்ள வேண்டும் என்றும் கருதிய ஸ்ரீராமர், இலங்கையின் அரக்க அரசனான அவனை அன்றைக்கே அழித்து விட வேண்டும் என்று முடிவு செய்தார். இராவணன் தேரின்மீது அமர்ந்தும், ஸ்ரீராமர் தரையிலும் நின்று போர்புரிவதை அப்போது அவர்களின் போர் முறையைக்காணவந்த சிவபெருமான் கண்டார்! சிவபெருமான் இந்திரன்மேல் மிகுந்தகோபம் கொண்டு, இந்தயுத்தமே உங்களையும், தர்மிகளையும் காப்பதற்காக நடைபெறுவது என்பதை மறந்துவிட்டீரோ? ஸ்ரீராமர் இராவணனோடு போர்புரிய பொன்தேரை அனுப்புங்கள் என்று கட்டளை இட்டார். உடனே இந்திரன் ஓர் அதி அற்புதமான தேரையும் அதனோடு மாதலி என்ற புகழ்பெற்ற தேர்ச் சாரதியையும் அனுப்பிவைத்தான். ஸ்ரீராமர் அதை ஏற்றுக்கொண்டு போருக்குப் புறப்பட்டார். தேவர்கள் வாழ்த்தொலி எழுப்பினர்.

**இராவணன் வதையும் அரக்கரின் அழிவும் :**

அதைக்கண்ட இராவணனின் கோபம் தலைக்கு ஏறியது. இரண்டு பேரும் போரிட்டது இரண்டு திசையானைகள் ஒன்றோடு ஒன்று போரிட்டதைப் போன்று இருந்தது. இராவணன் ஸ்ரீராமருடைய தேர்க்கொடியை அறுத்துவிட்டான். ஸ்ரீராமரும் அவனுடைய தேர்க்கொடியை அறுத்ததோடு, குதிரைகளையும் அழித்தார். இராவணன் மாயக்கணை செலுத்தினால் ஸ்ரீராமர் ஞானக்கணை செலுத்தி அதனை அழித்தார். இராவணன் அக்கினிக் கணையைச் செலுத்தினால், இராமர் நீர்க்கணை கொண்டு அதை அழித்தார். இப்படியாகத் தன்னுடைய அனைத்துக்கணைகளையும் செயல் இழக்கச் செய்த ஸ்ரீராமரை இன்னும் நன்றாக உற்றுப் பார்த்தான் இராவணன். நிச்சயமாக இவன் சாதாரண மனிதன் இல்லை. வேத முதல்வனே இவன்தானோ என்று எண்ணி கதிகலங்கினான் இராவணன். இருபக்கத்துப் படை வீரர்களும் தாங்கள் போரிடுவதை நிறுத்திவிட்டு ஸ்ரீராம ராவணர்கள் செய்த போரையே வியப்புடன் பார்த்து நின்றார்கள்.



இருவருக்கும் நடைபெற்ற அந்தப்போரின் முடிவு என்னாகுமோ என்று தேவர்களும் வியந்து நின்றனர். இந்தப்போருக்கு ஈடு இணையாக எப்போரும் இல்லை என்று விண்ணுலகத்தேவர்களும் வியந்து பார்த்தனர். அப்போது மாதலி என்ற அந்தத் தேர்ச்சாரதி ஸ்ரீராமருக்கு அகத்தியர் தந்த பிரம்மாஸ்திரத்தைப் பற்றி நினைவூட்டினான். தண்டகாரண்யத்தில் அகத்திய முனிவர் ஸ்ரீராமருக்குக்க கொடுத்த அந்த அற்புத அஸ்திரத்தின் நினைவு ஸ்ரீராமருக்கு ஏற்பட்டது. இராவணனின் அழிவு நெருங்கிவிட்டதை அறிந்த ஸ்ரீராமர் அந்தப் பிரம்மாஸ்திரத்தை எடுத்து தனது கோதண்டத்தில் வைத்து நாணேற்றினார். அகிலாண்ட கோடியும் நடுநடுங்கியது.

மிகுந்தகோபம் கொண்ட ஸ்ரீராமர் இராவணனுடைய தலைகளை ஒன்றன்பின் ஒன்றாக அறுத்தெறிந்தார். ஆனால் அவை மீண்டும் மீண்டும் முளைத்து எழுந்தன! தோளைத்துண்டித்துத் தள்ளினாலும் அவையும் மீண்டும் முளைத்தெழுந்தன. அதைக்கண்டு திகைத்த இராமனை நோக்கி, ஏளனமாக நகைத்து கர்ஜனை செய்தான்

அக்கொடியவன்! தன்னை அழிக்கமுடியாது என்று இறுமாப்படைந்த அவனுக்கு இறுதியை எப்படி உண்டாக்குவது என்று திகைத்து நின்றார் ஸ்ரீராமர்.

**சந்திரதேவன் கூறிய சூசகத்தகவல் :**

இராவணனின் தலைகள் அறுக்கப்பட்டாலும், உந்தியாகிய தொப்புளில் இருந்து சுரந்த அமிழ்தத்தின் தன்மையால் தலைகளும், தோள்களும் வெட்டவெட்ட மீண்டும் முளைத்தன! இறுதிப்போரின்போது, இராவணனை அழிக்க முடியவில்லையே என்று இராமச்சந்திரமூர்த்தி மனம் குழம்ப சோர்வடைந்திருந்த நேரத்தில் சந்திரன் தோன்றி, இராவணன்மேல் ஒரே நேரத்தில் தலைகளுக்குப் பத்தும், தோள்களுக்கு இருபதுமாக முப்பதும், தொப்புள் கொடிமீது ஒன்றுமாக மொத்தம் முப்பத்தொரு அம்புகளைச் செலுத்தவேண்டும்.! அதில் ஒன்று அவனுடைய உந்தியிலும் செலுத்தப்படவேண்டும். தொப்புள்கொடி ஆகிய அவ்வுந்தி அறுபட்டால் அமிழ்தம் சுரப்பது நின்றுபோகும். அதனால் இராவணனின் பத்து தலைகளும் இருபது தோள்களும் மீண்டும் உயிர்ப்பெற்று முளைக்காது என்பதை எடுத்துரைத்தார். அவ்வாறே ஸ்ரீராமர் செய்ய அரக்கன் இராவணன் வதைக்கப்பட்டான்!

**இராவணன் பெற்ற சாபம் :**

பிரம்மதேவனின் கொள்ளுப் பேரனாகிய இராவணனுக்கு அவன் செய்த தவப்பயன்களின் காரணமாக பல்வேறு வரங்களை வாரி வழங்கியிருந்தார் பிரம்மா! சிவபெருமானிடமும் பல வரங்களைப் பெற்றவன் இராவணன். எனினும் தனக்கு சாகாவரம் வேண்டும் என்ற வரத்தைப் பெற்றபோது, மனிதர்கள் அற்பர்கள் என்று கருதியதால், மனிதப்பிறவியர்களால் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்று கேட்காமல் விட்டுவிட்டான் அவன். எனவேதான் ஸ்ரீமந்நாராயணன் மனிதனாக, ஸ்ரீராமனாக அவதாரம் எடுத்து



அழிக்கவந்தார் ! முக்கோடி வாழ்நாள்களைத் தனது வாழ்நாள்களாக வரம்பெற்ற அவன் அவ்வயது முடியும் முன்னேயே அழிந்தான் என்றால் அதற்குக்காரணம் அவனது காமவேட்கையும், அதனால் பல கன்னிப் பெண்கள் தந்த சாபமுமே காரணம் ஆகும். அவற்றையும் நாம் அறிந்துகொண்டால்தான் ஒருமுழுமை ஏற்படும். எனவே அவன் அழிவிற்குரிய பின்வரும் முக்கிய காரணங்களைத் தெரிந்துகொள்வோம்!

**சீதாதேவியின் முன்பிறவி அல்லது வேதவதியும், விதித்தசாபமும் :**

இலங்காபுரியின் அரசனாக விளங்கிய இராவணனுக்கு பிரம்மாவும் சிவபெருமானும் இராவணன் செய்த தவத்தின் பயனாக அடிக்கடி பற்பல வரங்களை அளித்தனர். அவ்வரங்களினால் மிகவும் அகம்பாவத்தோடு திரிந்து வந்தான் இராவணன். சிலரைத்தேடிச் சென்று போருக்கு அழைத்து அவர்களைத் தோற்கடித்துக் கொன்றான். அழகிய பெண்களையும் தேடிச்சென்று அவர்களைச் சீரழித்தான். குபேரனிடமிருந்து வஞ்சனையாகப்பெற்ற புஷ்பக விமானத்தில் பறந்து பறந்து சென்று பெண்களுக்குத் துன்பம் கொடுத்து கற்பழித்து நாசம் செய்தான். பலபேர் அதனால் தங்களை மாய்த்துக் கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களுள் ஒருத்திதான் வேதவதி என்பவள்.

ஒருமுறை சிவபெருமானிடம் இருந்து சந்திரகாசம் என்ற வாளைப் பரிசாகப்பெற்ற இராவணன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். அதனால் தன்னுடைய புஷ்பக விமானத்தில் ஏறி இமயமலைச் சாரலுக்குச் சென்றான். மகிழ்ச்சியோடு திரிந்து கொண்டிருந்த அவன் கண்ணிற்கு தவசிக்கோலத்தில் ஒரு பெண் தென்பட்டாள். அவள் மான்தோலும், மரவுரியும் தரித்து ஜடாமுடியோடு காணப்பட்டாள். எனினும் அவள் ஓர் அழகியதேவதையைப் போன்ற தோற்றப் பொலிவினைப்

பெற்றிருந்தாள்! அப்பொழுதும் அவள் அழகில் மயங்கிய இராவணன் அவளை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவளிடம் சென்றான். அவன் வரவை அறிந்த அந்தப்பெண் அதிதி பூசை செய்து உபசரித்தாள்.

பிரகஸ்பதியின் புத்திரரர் குசத்வஜர் என்பவராவர். அவர் ஒரு பிரம்மரிஷி. அவருடைய மகள் தான் இந்த வேதவதி. குசத்வஜர் ஓதிய வேதஒலியில் இருந்து அப்பெண் தோன்றியதால் வேதவதி என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தார். மணப்பருவம் அடைந்த அவளை மணந்துகொள்ள பலபேர் முன்வந்தனர். ஆனால் அவளோ ஸ்ரீமகாவிஷ்ணுவைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை என்ற பிடிவாதத்தோடு விரதமும் இருந்தாள். தன்னைப்பற்றி இராவணன் கேட்டபோது இவற்றை எல்லாம் வேதவதி கூறினாள். அதைக்கேட்டு கோபமும் வெறுப்பும் கொண்ட இராவணன் தானே மகாவிஷ்ணுவை விடப்பெரியவன் என்றும் பராக்கிரமசாலி என்றும் கூறிக்கொண்டு அவனை அடையுமாறு வக்கிரம் நிறைந்த வார்த்தைகளால் கேட்டுக்கொண்டான். இதைக்கேட்ட வேதவதி துடிதுடித்துப்போனாள். இராவணன் பேசுவது தர்மம் இல்லை என்று எடுத்துரைத்த புலஸ்தியர் மரபில் வந்த அவனுக்கு அவ்வார்த்தைகள் தகாது என்று கூறி சீறினாள்.

அதையெல்லாம் அலட்சியம் செய்த அந்தப்பாவி, அவள் அருகில் சென்று அவள் தலைமயிரைப்பற்றி இழுத்து அவளைத் தன்மார்போடு அணைத்துக் கொண்டான். துடிதுடித்த அப்பெண் அக்கொடியவனிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள தனது கையையே கத்திரியாக்கிக்கொண்டு அவன் பிடியில் இருந்து தப்பிக்க தனது தலைமயிரை வெட்டிக்கொண்டாள். பிடியிருந்து தப்பித்து எரிந்து கொண்டிருக்கும் அக்கினியில் வீழ்ந்து தன்னை மாய்த்துக்கொண்டாள். அப்போது அவள் “அடே துஷ்டா, இராவணனா, பாதகா நீ என்னைக் களங்கப்படுத்தி



விட்டாய். தூய்மையான இந்த இடத்தையும் கெடுத்தாய். எனவே அடுத்த பிறவியில் நான் உடல் சம்பந்தம் இல்லாமல்தோன்றுவேன். உன்னையும் உன் சுற்றத்தவர்களையும் நான் அடியோடு அழிப்பேன் என்று கூறி உயிர்விட்டாள்.” எனவேதான் யாருக்கும் மகளாகத் தோன்றாமல் ஜனகன் யாகசாலைக்கு உழுத நிலத்தில் பெண்மகவாக உருமாறி வந்தாள் அவள்! சீதையாக வளர்ந்தாள். தான்சொன்னவாறு இராவணனையும் மற்றவர்களையும் அழித்தாள். அப்பிறவியில் தான் அடையமுடியாத பரமாத்மாவான ஸ்ரீ மகாவிஷ்ணுவை இராமாவதாரத்தில் சீதையாகத் தோன்றி வளர்ந்து திருமணம் புரிந்துகொண்டாள்.

மேலும், புஞ்சிகஸ்தலா என்ற இராவணனால் சீரழிக்கப்பட்ட பெண் நேராக பிரம்மதேவனிடம் சென்று, பிரம்மனாகிய அவர்கொடுத்த வரத்தாலேயே இவ்வளவு கொடுமைகளையும் இராவணன் செய்கின்றான் என்று பிரம்மனையே இழித்துக்கூறினாள் அந்தப்புஞ்சிகஸ்தலா! தன் தவற்றை உணர்ந்த பிரம்மதேவன், இராவணனை அழைத்து, எச்சரித்து, விரும்பாத பெண்களைத் தீண்டினால், தலையானது சுக்குநூறாக வெடித்துச் சிதறும் என்ற சாபத்தைத் தந்தார் என்றும் சில இராமாயணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பலபெண்களுடைய சாபம் ஏற்கனவே இருந்தது அந்த இராவணனுக்கு!

மேலும் குபேரன் மகன் நளகூபரன். இவனை நல்குபேரன் என்றும் அழைப்பர். இவன் மனைவி ரம்பா.! என்பவள். இவள் தேவலோகத்து ரம்பா என்ற பேரழகி இல்லை. ஆனால் இந்த ரம்பா வேறு. குபேரனின் மருமகள். இவளும் பேரழகி. ஒருநாள் அவள் ஆகாய மார்க்கமாகச்சென்று கொண்டிருந்தபோது தடுத்துநிறுத்தி கற்பாறையின் மேலேயே அவளைக் கிடத்திச் சீரழித்தான் இராவணன். தன் மனைவியான ரம்பையோடு நீர்த்துறையின் படித்துறையில் அமர்ந்து தண்ணீர்ச்

சத்தியமாக இனிமேல் விரும்பாத பெண்களைத்தொட்டால் இராவணன் தலை வெடுத்துச் சிதறவேண்டும் என்றும் சாபம் அளித்தான் நளகுபேரன் என்ற நல்குபேரன். இவன் குபேரனின் மகன். இராவணனுக்கு குபேரன் அண்ணன். எனவே "நான் இராவணனாகிய உன்னுடைய மருமகள் உறவு முறையினாள்" என்றுரைத்தும் அதை ஏற்காமல் அவளைச் சீரழித்தான் அக்காமக்கொடூரன் இராவணன். இராவணன் அழிவிற்கு இச்சாபமும் ஒரு காரணம் ஆகும்!

இத்தகைய சம்பவங்கள் பல இராவணன் வாழ்க்கையிலே நடைபெற்றதால், இராவணன் சீதையைக் கவர்ந்து வந்த அந்தநேரத்தில், அவனுக்குப் புஞ்சிகஸ்தலாவின் வேண்டுகோள் காரணமாக பிரம்மதேவன் கொடுத்திருந்த சாபத்தால் பயந்துபோயிருந்தான் இராவணன். எனவே விரும்பாத சீதாதேவியை அவனது கரங்களும் தொட்டதில்லை என்பதை இராவணனே கூறுகின்றான்! ஆம்!

போர் தொடங்க இருந்த நேரத்தில், தன்னுடைய மந்திரி சபையைக் கூட்டி, இராவணன் தன்னுடைய மந்திரிகளிடம் ஆலோசனைக்கேட்டபோது மஹாபார்ஸ்வன் என்ற அமைச்சன் சீதையை பலவந்தமாக அடைந்துவிடு என்று இராவணனைத் தூண்டிவிட்டான். ஆனால் விருப்பமில்லாத பெண்களைத் தொட்டாலே தன் தலை சுக்குநூறாக உடைபடும் என்று பிரம்மதேவன் தனக்கு சாபம் கொடுத்து விட்டதாகவும், எனவே தன்னை விரும்பாமல், அற்பமாக நினைத்து, நிந்தனை செய்துவரும் சீதாவைத் தொட்டாலே தான் அழிந்துபோகும் அபாயம் உள்ளதாகவும், அதுவே தனது தயக்கத்திற்குக் காரணமாகும் என்பதையும் இராவணனே குறிப்பிடுகின்றான். எனவே சீதையின் கற்பு நிலையானது களங்கம் அடைந்திருக்குமோ என்று சந்தேகம் கொள்வதற்கு எள்ளளவும் இடமில்லை என்பது இதனால் அறுதியிட்டு உறுதிசெய்யப்படுகின்றது.



எனவே அந்த வேதவதியின் சாபமும், ஸ்ரீமந்நாராயணன் எடுத்த அவதாரநோக்கமான கொடியவர்களை அழிப்பதும், நல்லவர்களைக் காப்பதுமான அந்த நோக்கம் நிறைவேற்றப்படும் காலம் கனிந்துவந்தது. எனவே கடுமையான அப்போரின்போது, ஸ்ரீராமர் அந்தப்பிரம்மாஸ்திரத்தை இராவணனின் மார்பைக்குறியாக வைத்து அவன்மேல் எறிந்தார். அது அவனுடைய வஜ்ஜிரம் போன்ற மார்பில் பட்டு, ஊடுருவிச் சென்று அதைப்பிளந்துகொண்டு, அவனுடைய உயிரைக்குடித்து, அதனை அவன் உடலில் இருந்தும் பிரித்தெடுத்து வெளியே கொண்டு வந்து வதம் செய்தது. மேலும் அக்கொடியவனைக் கொன்றதால், அதற்கு ஏற்பட்ட தோஷத்தைப் போக்கிக்கொள்ள அது திருப்பாற்கடலில் சென்று மூழ்கி மீண்டும் ஸ்ரீராமரிடமே வந்து சேர்ந்தது. அம்பறாத்தூணியை அடைந்தது.

ஆம்! பிரம்மதேவனால் முக்கோடி வாழ்நாள்கள் வாழ்வதற்கு வரம்பெற்றிருந்தான் இராவணன். ஆனால் அவன் மனிதர்களைத் துச்சமாகக் கருதியதால், அற்பர்களான அவர்களால் தனக்கு இறப்புவேண்டாம் என்று வரம்கேட்க நினைக்கவில்லை. எனவேதான் ஸ்ரீமந்நாராயணன் ஆகிய பெருமான் தசரதனின் புதல்வனாக பூமியில் அவதாரம் எடுத்துவந்து அந்த அரக்கனைக்கொன்றார்.'' தர்ம ஸம்ஸ்தாபணார்த்தாய சம்பவாமி யுகே, யுகே'' என்ற பெருமானுடைய அவதார நோக்கம் பூர்த்தியானது.

**"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடையபெருந்தவமும் முதல்வன் முன்னாள்**
**எக்கோடியாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும் ஏனைத்**
**திக்கொடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் தின்று மார்பில்**
**புக்குஓடி உயிர்பருகிப் புறம்போயிற்று இராகவன்தன் புனிதவாளி!"**

**(3838)**

என்ற பாடலால் அறிகின்றோம்! ஆம். பிரம்மதேவனால் மூன்றுகோடி வாழ்நாள்கள் வாழவேண்டும் என்ற வரத்தையும், உலகின் எந்தத்திசையில் உள்ளவர்களாலும் உனக்குத் தோல்வியில்லை என்ற வரமும், அனைவரையும் வெற்றிக்கொள்ளக் கூடியவனாக தோள்வலிமையையும் பெற்று விளங்கிய அந்த இராவணனின் வஜ்ஜிரம் போன்ற மார்பைத் துளைத்துக் கொண்டு, அவனுடைய இதயத்தில் எங்காவது ஒருமூலையில் அவன் சீதையின் மீது கொண்டிருந்த காமவேட்கை உணர்வானது ஒளிந்திருக்கின்றதா? அவ்வாறு இருந்தால் அதனையும் அழித்துவிடவேண்டும் என்று துருவித் துருவி பார்த்த அந்த இராமபாணமானது, அவ்வாறு எங்கும் இல்லாமல்போனதால், அவ்விதயத்தில் (மனதில்) இருந்த உயிரைப்பற்றி இழுத்துவந்து வெளியில் தள்ளி, அவனைக்கொன்றது என்று கவிநயம்படக் கூறியுள்ளார் கம்பநாட்டாழ்வார். எனவே அரக்கன் இராவணன் அழிந்தான். மேலும்

**ஆர்க்கின்ற வானவரும் அந்தணரும் முனிவர்களும் ஆசிகூறித்**
**தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய் பாற்கடலில் தூய்நீராடி**
**தேர்க்குன்ற இராவணன்தன் செழுங்குருதிப் பெரும்பரவைத் திரைமேல் சென்று**
**கார்க்குன்றம் அனையான்தன் கடுங்கணைப்புட்டிலின் நடுவன் கரந்ததம்மா! (3839)**

என்ற பாடலால் மலைபோன்ற தேரினை உடையவனான இராவணனுடைய இரத்தமாகிய கடலின்மேல்சென்ற, கரியமலைபோன்ற தோற்றத்தை உடையவனான இந்த இராமனின் அம்பானது இராவணனை அழித்தது என்றும்

அந்த இராவணனது உடல் முழுமையையும் எள் இருப்பதற்குரிய சிறிய இடமும் விடப்படாதவாறு முழுமையாகத்தேடி, சீதையை அவனது இதயமாகிய சிறையில் ஏதாவது ஒறுதுளி இடத்திலாவது மறைத்துவைத்துள்ளானா என்று ஆராய்ந்து, தேடி, எங்கும் அவ்வாறு இல்லை என்று உறுதியானபின் அவனுடைய உயிரை ஊடுருவி எடுத்து வந்து பிரித்துத்தள்ளி வெளியே சென்று, திருப்பாற்கடலாடி வந்ததாம்! அதன்பிறகு இராகவனது அம்பறாத்துணியை அடைந்தது" என்று கூறி அகம்மகிழ்கின்றார் கம்பநாட்டாழ்வாரும்! (3879) எனவே அதர்மம் அழிந்தது அதர்மவானும் அழிந்தான். அதனால் தர்மிகளும், தர்மாத்மாக்களும் மகிழ்ந்தனர்.. வானர வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பூமியின்தேவர்களான அந்தணர்கள் மகிழ்ந்தனர். இராவணன் வதையைக் கொண்டாடினார்கள். வானவர்களாகிய தேவர்களும் தமக்கு அபயம் அளித்த ஸ்ரீமந்நாராயணன் தன்னுடைய அவதாரநோக்கமான அசுரவதத்தை முடித்ததைக் கண்டு மலர்மாரிபொழிந்து, மகிழ்ச்சிக்டலில் திளைத்தனர்.



இராவணனின் படையில் எஞ்சி நின்ற சில அரக்கர்கள் தங்களை அழிக்கவேண்டாம் என்று சுக்கிரீவன் முதலியவர்களைச் சரண் அடைந்தனர். சுக்கிரீவன் உள்ளிட்டோரும் அவர்களை மன்னித்து, தம்மைச் சரணாகதி அடைந்த ஒருசில அரக்கர்களுக்கு உயிர்ப்பிச்சை அளித்தனர். பின்னர் அனைவரும் ஸ்ரீராமரைச் சூழ்ந்து கொண்டு தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**திருமுடிசூட்டுப் படலம் :**

போர்க்களத்தில் வீழ்ந்து பட்டிருந்த தனது அண்ணனைப் பார்த்து முதலில் அழுது புலம்பிய விபீஷணன், பிறகு அது தவறு என்று உணர்ந்து நிறுத்திக்கொண்டான். இருப்பினும் இராவணனுக்கு ஈமக்கடன்களைச் செய்யுமாறு இராமர் கூறியபோது மறுத்தான் விபீஷணன். இந்த நேரத்தில் இராவணனின் மனைவியான மண்டோதரியும் அங்கு வந்து தன் கணவன் உடல்மீது புரண்டு அழுதாள்.

கற்புடைப் பெண்டிர்களில் ஒருத்தியாகக் கருதப்பட்ட அம்மண்டோதரி, இராவணனுக்கு எல்லாவகையிலும் தர்மத்தை எடுத்துக் கூறி, அவனுடைய அதர்மச் செயல்களைக் கண்டித்தவள். கற்புக்கரசியான சீதாதேவியைச் சிறைப்பிடித்து வந்த தனது கணவனுடைய அநியாயச் செயலை எப்போதும், கண்டித்து வந்ததோடு, அந்தச் சீதையை இராமனிடம் ஒப்படைத்து விடுவதே நன்மையானது என்றும், இல்லை என்றால் அரக்கர்குலம் அவனால் அடியோடு நாசம் ஆகும் என்றும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அறிவுறுத்தினாள் அவள்! ஆனால், காமுகனான இராவணன் அதையெல்லாம் ஏற்றுக்கொள்ளாத மூர்க்கனாக இருந்ததால் அனுதினமும் துன்பக்கடலில் தவித்து வந்த அவள், இன்றைக்கு, அதாவது இராவணன் போர்க்களத்தில் உயிரற்று வீழ்ந்துகிடந்த அன்று, துன்பத்தின் உச்சிக்கே சென்று தத்தளித்தாள்! விளைவு, அவ்வளவில் அவள் உயிரும் பிரிந்தது. எனவே மூன்றுவகைப்பட்ட கற்பில் மண்டோதரி முதன்மையான கற்புநிலையைச் சேர்ந்த கற்புக்கரசியாகப் போற்றப்பட்டாள். அதாவது கணவன் இறந்ததைக் கண்டவுடன், அல்லது கேட்டவுடன் "கணவனை இழந்தார்க்குக் காட்டுவது இல" என்றுணர்ந்து, தானும் உயிர்விடும் கற்பானது முதல்வகைக் கற்பு என்று போற்றப்பட்டது. அக்கற்பு நிலையை அவளும் பெற்றிருந்தாள். எனவே இராவணன் இறந்தவுடன் அவளுடைய உயிரும் பிரிந்தது.

அந்த இருவருக்கும் விபீஷணரைக் கொண்டு ஈமக்கடன்களைச் செய்வித்தார் ஸ்ரீராமர். பிறகு தன் தம்பியின் மூலம் மறுபடியும் விபீஷணனுக்கு முறைப்படி முடிசூட்டுவித்தார் ஸ்ரீராமர். விபீஷணன் இராவணனின் அரியணையிலேயே அமரவைக்கப்பட்டான். அரசனான அவனுக்கு பலபரிசுப் பொருள்களை அளித்தனர் இலங்கை நகரத்தினர். முடிசூட்டு வைபவம் முடிந்த உடனே மீண்டும் போர்க்களத்திற்குத்



திரும்பினார் விபீஷணர். தனக்குக் கிடைத்த பரிசுப்பொருட்களைத் தன் தலைவனான ஸ்ரீராமரை ஏற்றுக்கொள்ளுமாறு வீடணன் வேண்டவே அது இலங்கை அரசனுக்கு (அதாவது வீடணனுக்கே உரியது என்று மறுத்துரைத்து, ஒரு பகுதியை வீடணன் திருப்திக்காக எடுத்துக் கொண்டார் ஸ்ரீராமர்.

**வணங்கிநின்றான் மாருதி ! வாய்திறந்தார் ஸ்ரீராமர் :**

அப்போது ஸ்ரீராமர் தன்முன்பு மிகவும் பவ்யமாக கை குவித்து வணங்கி நிற்கும் அனுமனைப்பார்த்து, அரசனான வீடணனின் அனுமதி பெற்றுக்கொண்டு இலங்கைக்குச் செல்லுமாறும், தமது வெற்றியைச் சீதைக்குத் தெரிவித்து அவள் கருத்தை அறிந்து வருமாறும் கூறினார். அனுமனும் விடை பெற்றுக்கொண்டு அசோகவனம் சென்றான். அங்கு முன்பு போலவே சோகமாய்க் காட்சியளித்த சீதாதேவியின் முன் சென்று நின்றான்.

**சீதாதேவி ஏற்ற சரணாகதி :**

பின்னர் சிறையிருந்த சீதா மகிழ்வுறுமாறு இராவணன் அழிக்கப்பட்டதையும் ஸ்ரீராமர் பெற்ற வெற்றியையும் எடுத்துரைத்தார். அதைக்கேட்ட சீதாதேவி. "இத்தகைய மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறிய உனக்குப் பரிசுப்பொருளாகத் தருவதற்கு ஒன்றுமில்லையே" என்று கூறினாள். அதற்கு அனுமன் தங்கள் முகத்திலே ஏற்பட்ட சந்தோஷமே போதும் என்று நெகிழ்ச்சியுடன் கூறினான். அப்போது அனுமன் தனக்கு ஒரு விருப்பம் உள்ளது என்றும் கூறினார். அது என்னவென்று சீதாகேட்க, அனுமன் "உங்களுக்குக் கொடுமை செய்து வந்த இந்த அரக்கியர்களின் உடல்களை எனது கூர்மையான நகங்களால் கிழித்தழித்து வதம் செய்ய எனக்கு அனுமதி அளிக்கவேண்டும்" என்று கேட்டார் மாருதி. அதைக்கேட்ட அந்த அரக்கிகள் குய்யோ முறையோ என்று கதறிக்கொண்டு ஓடோடிவந்து சீதாதேவியின்

திருவடிகளில் விழுந்து தங்களைக் காப்பாற்றும்படியாக வேண்டினர். அப்போது அவர்களைப்பயப்படவேண்டாம் என்று உறுதி அளித்து, "உங்கள் உயிர்களை நான் காப்பாற்றுவேன்" என்று ஆறுதல் கூறினார் சீதா அன்னை. எனவே அவர் அனுமனைப்பார்த்து "மைந்தனே! இந்த நிலவுலகத்தில் தவறு செய்யாதவர்கள் என்றுயார் இருக்கின்றார்கள்? அவர்களை எல்லாம் கொன்று விடவேண்டும் என்று நினைத்திருந்தால் இவ்வுலகத்தின் மனிதஇனமே இல்லாமல் போயிருக்கும். பாவம் அவர்கள் என்னசெய்வார்கள். இராவணன் சொன்னதை அவர்கள் கடமையாகச் செய்தார்கள். எனவே அவர்களை எனக்காக மன்னித்து விட்டுவிடு" என்று கூறி தடுத்திட்டார். இது ஜானகியாகிய சீதாமாதாவின் கருணையை எடுத்துரைக்கும் செயலாக விளங்குகின்றது.

மேலும் அனுமனிடம் நான் என்கணவனை உடனே காணவேண்டும் என்றாள். அனுமன் விடைபெற்றுச் சென்று ஸ்ரீராமரிடம் அதை எடுத்துரைக்க, அவர் வீடணனிடம் சீதையைத் தகுந்தவகையில் அலங்கரித்து மரியாதையுடன் அழைத்துவர ஏற்பாடுகள் செய்யுமாறு வீடணனைக் கேட்டுக்கொண்டார்.

**விரைந்தான் வீடணன்.! கொணர்ந்தான் சீதையை!**

அத்தகைய தருணத்தை எதிர்பார்த்திருந்த வீடணன் அன்னையிடம் சென்று அவரை நீராடச் செய்து, அலங்காரத்துடன் ஸ்ரீராமரைப் பார்க்கவருமாறு வேண்டினான். முதலில் தன்னை அலங்காரப்படுத்திக்கொள்ள சீதா ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் இது ஸ்ரீராமரின் ஆணை என்று வீடணன் கூறியபோது, சீதாவும் இசைந்து புறப்பட, அவளை மூடுபல்லக்கிலே அழைத்துச் சென்றார் விபீஷ்ணர்.

போர்க்களத்தின் ஒருபகுதியில், மூடுபல்லக்கில் இருந்து சீதாதேவி கீழே இறங்கியவுடன், அவரை மிகவும் அதிசயிக்கத் தக்கவகையிலே வானர வீரர்கள் சுற்றி நின்றுகொண்டனர். அப்படிப்பட்ட சௌந்தர்யத்துடன் அவர்கள் ஒருபெண்ணை



இவ்வளவு நாட்கள் பார்க்காமல் இருந்ததே அதற்குக் காரணம் ஆகும். கலைந்து போகுமாறு கேட்டுக்கொண்டும் சிலர்போகாமல் அவரையே வியப்புடன் பார்த்தபடி இருந்தனர். அதனால் சற்றுக் கோபம் அடைந்த விபீஷணர் அவர்களைப் பிரம்பால் அடித்துக் கலையுமாறு செய்தார். அதைக்கண்ட ஸ்ரீராமர் அவ்வாறு செய்யவேண்டாம் என்று கடிந்து கொண்டார். அவர்கள் இல்லாமல் தங்களது வெற்றியில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்! அவருடைய செய்ந்நன்றி மறவாத பேராண்மை இதனாலும் வெளிப்படுவதை அறியலாம். அப்போது தன்னை வானர ஆடவர்கள் கண்டதைக் கண்டு வெட்கித்தலைகுனிந்து கொண்டார் சீதாதேவி! தனது புடவைத் தலைப்பால் (முந்தானை)தனது உடலைச் சுற்றிக்கொண்டார்!

**பிரிந்தவர் சேர்ந்தனர்!.... இன்சொல் பரிமாற்றம் இல்லையே? ஏன்?**

சீதாதேவியைக் கண்ட ஸ்ரீராமர் அவளை வரவேற்று இன்சொல் எதுவும் கூறவில்லை. ஒரு மூன்றாம் நபரிடம் பேசுவதைப்போல "இவ்வளவு நாட்கள் மாற்றான் இருப்பிடத்தில் வாழ்ந்துள்ளீர்கள். இனி என்னோடுதான் தங்கியிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நீங்கள் எங்குவேண்டுமானாலும் போகலாம்" என்று ஸ்ரீராமர் கூறினார். அவ்வாறு கூறியதைக்கேட்டு அன்னை சீதாமட்டுமன்றி அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். மிகவும் கூனிக்குறுகிப்போனால் சீதாமாதா!தன் கற்பின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட சந்தேகமே ஸ்ரீராமரை இவ்வாறு பேசச் செய்துள்ளது என்று அறிந்து கொண்டாள் சீதை. தன் கற்பின் திண்மையை உலகினர்க்கும் தன்கணவனுக்கும் உணர்த்தவேண்டும் என்ற மனநிலை சீதைக்கும் ஏற்பட்டது. அப்போது அருகிலே இருந்த இலட்சுமணரைப்பார்த்த தேவி "நான் அக்னிப்பிரவேசம் செய்ய விரும்புகின்றேன். என்னை நீங்கள் அன்னையாகக் கருதுவது உண்மையானால், வனவாசத்திற்கு வந்தபோது தங்களின்

தாயார் கூறிய வார்த்தைகளுக்குத் தாங்கள் மதிப்பு அளிப்பவரே என்றால் உடனே நான் தீயில் மூழ்குவதற்குரிய, அதாவது அகினிப்பிரவேசம் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

இராமருடைய சம்மதத்தின் பேரில் அக்னிகுண்டம் அமைக்கப்பட அதில் இறங்கி தான் கற்புக்கரசி என்பதை நிலைநாட்ட விரும்பினாள் சீதாவாகிய அந்த மாதரசி!

**அக்னிபகவானின் ஆணையும், ஸ்ரீராமனின் விடையும் :**

அதைக்கேட்டும் கண்டும் விண்ணவரும் மண்ணவரும் மிகவும் வருந்தினர். தேவர்கள் பதைபதைத்தனர். அப்போது தீயை வலம் வந்த சீதாதேவி" நான் கற்புக்கரசி என்பது உண்மையானால் அக்னி தேவனே நீ என்னைத் தீண்டாமல் இருக்கக் கடவாய். நான்கற்பில் கறைபடிந்தவள் என்றால் அத்தீக்குண்டத்திலேயே என்னைப் பொசுங்கச் செய்து அழித்து விடவேண்டும்'' என்று கூறிக்கொண்டு தீயுள் புகுந்தாள். அப்போது அக்னி பகவான் அச்சீதாவை அப்படியே தாங்கிக் கொண்டு வெளியே வந்து ஸ்ரீராமரும் மற்றவரும் அறியுமாறு சீதாவின் கற்புத்தன்மையை நிரூபித்தார். சீதை அப்பழுக்கற்றவள் என்பதையும், கற்புநிலையிலிருந்தும் சிறிதும் வழுவாதவள் என்பதையும் நான் நன்கு அறிவேன். எனினும் உலகத்தாரிடம் இருந்து ஒருவிதமான பழிச்சொல்லும் வரக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தேன்" என்றும் விடைகூறி, அனைவரின் துன்பத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார். அனைவரும் ஆனந்தம் கொண்டனர். தேவர்கள் மகிழ்ந்தனர்.

**தந்தையிடம் தனயன் பெற்றவரம் :**

தேவர்கள் வாழ்ந்திருக்கும் சொர்க்கத்திலேதான் தசரதமன்னனும் இருந்தார். அவர் ஸ்ரீராமனுடைய பரத்துவ நிலையை அறியாமல் தன்னுடைய மகனாக, ஒருசாதாரணமான



மானிடப்பிறவியாகவே அவர்நினைத்து வருந்திவந்தார். மேலும் ஸ்ரீமந்நாராயணப்பெருமானின் அம்சமான இராமனைக் காட்டுக்கு அனுப்பியதால் ஏற்பட்ட கர்மா வினைப்படி, அவருக்குப் பரமபதம் செல்லும் வாய்ப்புக் கிடைக்காமல், சொர்க்கத்திலேயே இருந்தார். எனவே அவரும் தேவர்களோடு வந்து இராம இலக்குமணர்களுக்கும், சீதாவிற்கும் வானுலகத்திலிருந்தே வாழ்த்துகள் கூறினார். மூவரும் அதை ஏற்றுக்கொண்டு அவரைப் பணிந்து நின்றனர். மனம் மகிழ்ந்த தசரதன்" இராமா நான் உன்னால் பெரும்வாழ்வுபெற்றேன். எனவே என்னிடமிருந்து ஏதேனும் வரத்தைக் கேட்டுக்கொண்டால் நானும் அதை உனக்களித்து மகிழ்வேன் என்று கூறியபோது, இராமன் தனக்கு இரண்டு வரங்கள் தேவை என்றும், அவற்றைத் தனக்குத் தருமாறும் வேண்டியதாக பின்வரும் பாடலைப் பெய்துவைத்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி.!

**"ஆயினும் உனக்கு அமைந்தது ஒன்று உரை என அழகன்**
**தீயள் என்று நீ துறந்த என்தெய்வமும் மகனும்**
**தாயும் தம்பியும் ஆம்வரம்தருக எனத்தாழ்ந்தான்**
**வாய்திறந்து எழுந்து ஆர்த்தன உயிர்எலாம் வழுத்தி (4020.)"**

என்ற இதில் "தனக்கு வனவாசத்தை அளித்த சிற்றன்னையான கைகேயியைத் தன் தெய்வம் என்று குறிப்பிட்டு, அத்தாயையும் அவளது மகனான பரதனையும் தாங்கள் மீண்டும் உங்களது மனைவியாகவும், மகனாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் வரத்தைக் கேட்க, அவனது பெருந்தன்மையையும், குற்றங்களைப் பொறுத்தருளும் தெய்வீகப்பண்பையும் கண்டு அமரர்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் இந்த இராமனை வாழ்த்திப்புகழ்ந்தன" என்கிறார் கம்பர். அதை உடனே தசரதனும் தந்து அங்கிருந்தும் அகன்றார்.

அப்போது சிவபெருமான் ஸ்ரீராமரின் அவதாரநோக்கத்தை அவர் அறியுமாறு விளக்கிக் கூறினார். நாட்டை நன்முறையில் அரசாட்சி செய்து அவதார

முடிவுக்காலத்தில் மீண்டும் பரமபதம் வந்து சேர்தல் வேண்டும் என்பதையும் கூறிச் சென்றார்.

இந்த நிலையில் தன் நாடான இலங்கைக்கு வருமாறு விபீஷணன் ஸ்ரீராமரை வேண்ட, பதினான்கு ஆண்டுகள் கடந்து போனதால் பரதன் காத்திருப்பான் என்பதை நினைவு கூர்ந்தார் ஸ்ரீராமர். வீடணன் தன்னுடைய புஷ்பக விமானத்தைக் கொண்டு வந்தான். அனைவரும் அதில் ஏறிக்கொண்டார்கள். சுக்ரீவன் அங்கதன் ஜாம்பவான் இவர்களோடு வீடணனும் அயோத்திக்கு வருவதற்கு ஆசை கொண்டு உள்ளார்கள் என்பதை அறிந்ததால் அவர்களையும் அழைத்துக்கொண்டார் ஸ்ரீராமர். வானரப்படை வீரர்களும் திரண்டுவந்தனர். அதில் ஸ்ரீராமரும் சீதையும் அழகாய் அமர்ந்துகொள்ள அனைவரையும் தாங்கிப் பறந்து சென்றது அந்தப் புஷ்பக விமானம்!

இதற்கிடையில் வழியில் தான்பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று திரும்பவேண்டு என்பதால், அதனால் சற்றுக் காலதாமதம் ஏற்படும் ஆகையாலும் தாங்கள் வருவதைப் பரதனிடம் தெரிவிக்குமாறு அனுமனை முன்கூட்டியே அனுப்பிவைத்தார் ஸ்ரீராமர். அனுமனும் பறந்து சென்று, பரத்வாஜ முனிவருக்கும், குகன் முதலியவர்களுக்கும் செய்தியைச் சொன்னான். பின், அயோத்திக்குச் சென்று, அங்கு இராமனின் வரவை எதிர்ப்பார்த்துக் காத்துக் கிடந்த பரதாழ்வாருக்கும் ஸ்ரீசீதாராம லட்சுமணர்கள் வருவதை அறிவித்தார். புளிஞர்வேந்தனாகிய குகனும் அயோத்தி நோக்கிப் புறப்பட்டான். நந்திகிராமத்திற்கு அனைவரும் வந்து குவிந்தனர். தசரதன் தேவிமார்களும் அங்கே வந்திருந்தனர். அப்போது புஷ்பக விமானம் பரத்வாஜரின் ஆசிரமத்திற்குச் சென்று நின்றது. ஸ்ரீராம லக்குமண, சீதாதேவியரை வரவேற்று உபசரித்து அனுப்பிவைத்தார் பரத்வாஜ முனிவர்.

ஸ்ரீராமனின் வனவாசகால தொடக்கத்தின்போது, அங்கே வந்து பரத்வாஜமுனிவரால் உபசரிக்கப்பட்டபோது,



நன்றியுரைத்து, தங்களது பயனத்தைத் தொடர்ந்தபோது, அவர்களுக்கு விடைகொடுத்த பரத்வாஜர், வனவாசகாலத்தைச் சிறப்பாக முடித்துத் திரும்பும்போது, தனது ஆசிரமத்திற்கு வந்து செல்லுமாறு அன்று கேட்டுக்கொண்டார். பரத்வாஜர். அன்றைக்கு அப்படியே செய்வதாக வாக்களித்தான் இராமன். அதை மறவாமல் இருந்து, இன்று அயோத்திக்குத் திரும்பும்போது தனது ஆசிரமத்திற்கு வந்து ஆசிபெற்றுச் சென்றதை நினைத்து, மகிழ்ச்சி அடைந்தபரத்வாஜர். ஸ்ரீராமனின் வாக்குத்தவறாத நேர்மைத்தன்மையை அறிந்து பாராட்டி நின்றார்.

நந்திகிராமத்தை அடைந்தவர்களை நன்கு வரவேற்றனர் பரதனும் சக்துருக்கனும். இங்கிருந்த தன் அன்னையர்களை வணங்கினான் ஸ்ரீராமன். சீதாவும் அவர்களை வணங்கினாள். இராமனும் பரதனும் கட்டித்தழுவிக்கொண்டனர். இலக்குவனும் பரதனின் திருவடிகளைப் பணிந்தான். தேவிமார் மூவரும் சீதைக்கு ஆசீர்வாதம் செய்து அலங்காரமும் செய்தனர். சீதாதேவியை மூன்று தேவிமார்களும் அங்கிருந்தும் அயோத்திக்கு அழைத்துச் சென்றனர். வானரப் படைத்தலைவர்களும், அனுமன், ஜாம்பவான் போன்றவர்களும், வீடணனும் புடைசூழ்ந்துவருமாறு இராமன் அரண்மனைக்குள் பிரவேசித்தான். அயோத்திமக்கள் அனைவரும் இன்பத்தின் எல்லைக்கே சென்று, ஸ்ரீராமன் அரக்க வதம் செய்து வந்ததைப்புகழ்ந்து பேசிக்கொண்டனர். பரதனும் தன் சகோதரர்களோடு நந்திகிராமத்திலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டான்.

அடுத்தநாள் ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் என்று முடிவு செய்யப்பட்டது. தனது ஒரு பட்டாபிஷேகம் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் நின்றுபோனாலும் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு பட்டாபிஷேகங்களைச் செய்து முடித்த ஸ்ரீராமர் தனக்குப்பட்டாபிஷேகம் (மணிமகுடம் சூட்டும்

விழா) நடைபெறுவதை எண்ணி நெகிழ்ச்சி அடைந்தார். ஸ்ரீராமனும், சீதாவும் மங்கலநீராட்டம் செய்து வைக்கப்பட்டனர். யாகத்திற்கு வேண்டிய சமித்துகளையும், திருமுடிசூட்டுதல் என்னும் பட்டாபிஷேகத்திற்குத் தேவையான புனிதநீர், புஷ்பங்கள் போன்றவைகளும் வானர வீரர்களின் உதவியால் தருவிக்கப்பட்டன!

**ஸ்ரீராமரின் முடிசூட்டு விழா :**

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தடைபட்டுப்போன ஸ்ரீராமனின் முடிசூட்டு விழாவானது மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. வேதம்வல்ல அந்தணர்கள் வேதங்களை முறைப்படி ஓத.

**"அரியனை அனுமன்தாங்க அங்கதன் உடைவாள்ஏந்த**
**பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரிபற்ற**
**விரைசெறி கமலத்தாள்சேர் வெண்ணெய்யூர் சடைநன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான்மௌலி"**
**(4268)**

என்னும் பாடலால் ஸ்ரீராமபக்த அனுமனாகிய சிறியதிருவடி ஸ்ரீராமரும் சீதாதேவியும் அமர்ந்திருந்த அரியாசனத்தைத் தாங்கிக்கொண்டிருக்கவும், அங்கதன் மெய்க்காப்பாளனாக உடைவாளை ஏந்திக்கொண்டு விளங்கவும், பரதன் வெண்கொற்றக்குடையைத்தாங்கிக் கொண்டிருக்கவும் இலக்குவனும், சத்துருக்கணனும் இருபுறமும் நின்று கவரி வீசிக்கொண்டிருக்கவும், திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்திருந்தவரும், கம்பராகிய கவிச்சக்கரவர்த்தியை ஆதரித்துப் போற்றியவருமான சடையப்பவள்ளல் என்பவரின் வம்சாவழியில் வந்தவர்கள், ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்காகத் தயாரிக்கப்பட்ட மௌலியை அதாவது மகுடத்தைத் தங்கள் கைகளால் எடுத்துக் கொடுக்க, அழகாகக் காணப்பட்ட அந்த வைபவத்தில், குலகுருவான வசிஷ்ட மாமுனிவர் அம்மகுடத்தை வாங்கி ஸ்ரீராமனுக்கு



அணிவித்து பட்டாபிஷேகமும் செய்து வைத்தார். அதன்பிறகு, பரதனுக்கும் முறைப்படி இளவரசனாகப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

**"விரதநூல் முனிவன்சொன்ன விதிநெறி வழாமை நோக்கி,**
**வரதனும் இளைஞர்க்கு ஆங்கண் மாமணி மகுடம் சூட்டி,**
**பரதனைத் தனது செங்கோல் நடாவுறப்பணித்து நாளும்,**
**கரை தெரிவிலாத போகக்களிப்பினுள் இருந்தான் மன்னோ!**
**(4272).**

என்னும் பாடலால் பரதாழ்வானுக்கு, இளவரசனாக பட்டாபிஷேகம் ஆகிய மணிமுடி புணையும் விழாவும் சிறப்பாக நடைபெற்றதைக் கம்பர் எடுத்துரைக்கின்றார்.

ஸ்ரீராமரின் அந்த முடிசூட்டுவிழாவில் முனிவர்களும் யோகிகளும் மிகுதியாக பங்கேற்கின்றனர். ஆதிகாலத்தில் ஆரண்யங்களில் கூட்டம் கூட்டமாக ஆசிரமங்களில் இவர்கள் தங்கியிருந்து தமது இஷ்ட தெய்வங்களை வணங்கியும், வேண்டியபொழுது தவம் மேற்கொண்டும் வாழ்ந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் செய்த தவத்தின் முடிவில் உலக நலனிற்காகவும் தர்மவான்களைக் காக்கவும் தர்மத்தைக் காத்துக்கொள்ளவும் வரங்கள் பெற்றுள்ளனர். ஒருசிலர் மட்டும் தாங்கள் செய்த தவப்பயனின் காரணமாக பலவரங்களைப் பெற்றுக்கொண்டு, அதன்பலனாக மற்றவர்களுக்கும் மானிட வர்க்கத்தினர்க்கும் தேவர்களுக்கும் தீங்குகள் இழைத்துள்ளனர். அதனால் தற்காலிக இன்பமும் பெற்று வாழ்ந்துள்ளனர். அவர்களே அசுரர்கள் அல்லது அரக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்த அரக்கர்களின் வாழ்க்கைக்கு இவர்கள் இன்னல் இழைத்து, அதனால் இன்பம் அடைந்திருந்த காலத்தில் அதைப்போக்குவதற்காகவே ஸ்ரீமந்நாராயணன் பற்பல அவதாரங்கள் எடுத்து வந்து தர்மத்தையும் தர்மிகளையும் காத்து அருள்புரிந்தார். அவ்வாறு பெருமான் எடுத்த

அவதாரங்களுள் மிகச்சிறந்த அவதாரம் ஸ்ரீராமாவதாரம் என்பார்கள்.

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவமாகிய இந்து தர்மத்தின் ஈடு இணையற்ற கோட்பாட்டிற்கு விளக்கம் கூறி, வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் உயர்ந்த காவியமாகவிளங்குவது ஸ்ரீமத் ராமாயணம். ஸ்ரீராமரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்நடத்திய வாழ்க்கைத் தத்துவங்களையும் வாழந்து காட்டிய முறையையும் நோக்குகின்றபோது, நமக்குப் பெரும் ஆச்சரியமாகவும் அமைகின்றது.

அவ்வகையில் இந்த இராமனின் சரித்திரத்தை நன்கு ஆராயவும் பொதிந்து கிடக்கும் தத்துவார்த்தங்களை வெளிக்கொண்டு வந்து கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொள்ளவும் மனித இனம் அறிந்து பயன் பெறவும் பலவிதமான தலைப்புகளிலும் இச் சரிதத்தை ஆராயும் ஆராய்ச்சிக் களஞ்சியமாக ஸ்ரீமத் ராமாயணம் இன்றும் விளங்குவதைக் காணலாம்.

மேலும், இக்காண்டத்தில் விளக்கப்பட்டுள்ள பின்கண்ட தொடர்புடைய செய்திகளால் இராமாயணத்தின் சுவையையும், பகவானின் பேரருளையும் உணர்த்தும் கருத்துகளையும் அறிந்துகொள்ளலாம்.

போர் முழுமையாக முடிந்து மீண்டபோது தான் கட்டிய சேது பந்தனத்தின் ஒரு பகுதியைத் தானே தனது வில்லின் நுனியால் ஒரு முனையை உடைத்துவிட்டாராம் ஸ்ரீராமர். ஸ்ரீராமரின் திருவடிகள் பட்ட இடம்., நடந்த இடம், ஆகிய அப்புனிதச் சின்னம் தூய்மையானதாகவே பராமரிக்கப்பட வேண்டும் என்பது திருவுள்ளம்போலும்.!

அதன்மேல் சாதாரணமனிதர்கள் நடக்கக் கூடாது என்றும், அதைப்பாழ்படுத்திவிடக் கூடாது என்றும்



பிற்காலத்தவர் செய்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. இச்சேது அணை,. வேறு எதற்கும் பயன்படக் கூடாது. இது புனித இடமாக அல்லவா போற்றப்பட வேண்டும். எனவேதான் பகவான் இப்படிச்செய்தார்!

**"பெரியநீர் படைத்து அங்கு உறைந்து**
**அது கடைந்து அடைத்து உடைத்து...."**

என்று பாடியுள்ள ஆழ்வார் பாடலும், சேது அணை உடைக்கப்பட்டதை உறுதி செய்கின்றது. அமிழ்தம் எடுக்க கடலைக்கடைந்தது, சேதுவாய் அணை கட்ட கடலை அடைத்து, பின் உடைத்தார் பெருமான் என்ற உண்மையை மேற்கண்ட ஆழ்வார்பாடலால் அறியலாம்!

தற்போது உள்ள இராமேஸ்வரத்தில் நேபாள மன்னர் கொண்டு வந்து கட்டிய பெருமாள் கோயில் உள்ளது. அது 2000 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டது.

இப்பகுதியில் கோதண்டராமர் திருக்கோயிலும் உள்ளது.

**"திங்கள் ஒன்று இருப்பல் இன்னே"** என்றாள் சீதை. அதாவது ஒருமாதம் மட்டுமே உயிர்த் தரித்திருப்பேன் ! இக்காலக்கெடு மீறிப்போனால் இங்கு வரவேண்டாம்: கங்கைக்குச் சென்று அங்கு தனக்குத் தர்ப்பணம் செய்து விடுங்கள் என்று சூடாமணியைக் கொடுத்து அனுப்பினாள் சீதை என்று அறிகின்றோம். இந்த முப்பது நாள் கெடுவிற்குள் ஸ்ரீராமர் சீதையை மீட்டாரா? ஆம் என்கின்றனர் பலர். அவர்கள் கூறும் கால ஒதுக்கீடு.

**முப்பது நாள் கெடுவின் நிகழ்வுகள் :**

சூடாமணியைப் பெற்றுக்கொண்டு திரும்பி வந்து மகேந்திரமலையில் தங்கி நாமே சீதாவை மீட்கலாமா என்ற ஆலோசனைக்கு ஒருநாள்,

இராமனுக்குச் சொல்வதே சரி என்று புறப்பட்டு மீண்டும் ஸ்ரீராமரையும் சுக்கிரீவனையும் அடைய மூன்று நாள்கள்.,

வானரப்படைகளைக் கூட்டுவதற்கு மூன்று நாள்,. படைகள் எல்லாம் திரண்டு தென்திசைக்கடலை நோக்கி வந்ததற்கு ஐந்து நாள்,

விபீஷணன் சரணாகதி ஒருநாள்,.

வருணனுக்காக காத்திருந்தது மூன்று நாள்.

சேதுப்பாலம் கட்டியது ஐந்து நாள்,. படைகளை கருடவியூகம் அமைத்தது அங்கதன் தூது விட்டது ஒருநாள்,

போர் செய்தது ஏழுநாட்கள், என்று ஆகமொத்தம் இருபத்தொன்பது நாட்கள் ஆயின. பின்னர் புஷ்பகவிமானம் மூலம் பறந்துசென்று பரதனையும் காத்தது என முப்பது நாட்களில் அனைத்தும் நிறைவேறின! என்று கணக்கிடுகின்றனர் சிலர்.

ஆனால் வானரப்படைகள் தென்திசைக்கடலை அடையவேண்டி புறப்பட்டு வந்து பன்னிரண்டாம் நாள்தான் தென்திசைக்கடலை அடைந்தனர் என்ரு கம்பரே பாடியுள்ளார். எனவே மேலே கூறிய கணக்கு மேலும் ஆராயத்தக்கதொன்றாய் அமைந்துவிட்டதைக் காணலாம்.

தான் எடுத்துவந்த இராமவதாரக் கடமையை இராமன் முடித்ததைக் கம்பர் பின்வரும்பாடலால் எடுத்துரைக்கின்றார்.

**“மலையினை எடுத்ததோளும் மதமலைதிளைத்தமார்பும்,**
**தலைஒருபத்தும்சிந்தி தம்பிதன் தோளும் தாளும்,**
**கொலைத்தொழில் அரக்கர் ஆயோர் குலத்தொடும் நிலத்துவீழ,**
**சிலையினை வளைவித்து ஐயன் தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.”**

என்பதால் தனது கோதண்டத்தால் இராவணனது பத்துத்தோள்களையும், அவனது தம்பியான கும்பகர்ணனது மலைபோன்ற உருவத்தையும் அழித்து, வெற்றிபெற்று,



தேவர்களின் துன்பத்தைப்போக்கினார் என்று தனது அவதார நோக்கத்தை ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணன் நிறைவேற்றினார்!

**விடை கொடுத்த படலம் :**

ஸ்ரீமந் நாராயணன் ஆகிய மகாவிஷ்ணுவிடம் தேவர்கள் ஒன்று சேர்ந்து வந்து தங்களது துன்பத்தைப் போக்கி, அரக்கரின்கொடுமைகளிலிருந் தங்களைக் காத்தருளவேண்டும் என்று வேண்டியபோது, ஸ்ரீராமாவதாரம் செய்து காத்தருளுகின்றேன் என்று உறுதி கூறி, அவதாரம் செய்ய தனது வைகுந்த வளநகரிலிருந்து விடைபெற்று வந்தார் அவர். பிரம்மதேவரின் ஆணைப்படி, இராவண வதைக்காக சிவனது ருத்திர அம்சமான அனுமன் உள்ளிட்ட அனைத்து தேவகணங்களும் பல்வேறு அம்சகர்களாக பூலோகத்திற்கு வந்து அவதாரநோக்கமான அரக்கர் சம்ஹாரத்தில் ஸ்ரீராமனுக்குத் துணைபுரிந்தனர் என்று கண்டோம்.

தனது கடமையை சிறப்பாக முடித்திட்ட பெருமான், மனிதனாகத் தான் தோன்றியதால், அம்மனித தர்மத்திற்கு ஏற்றவாறு தனது செய்ந்நன்றி மறவாத தன்மையை விடைகொடுத்த படலம் ஆகிய இதில் வெளிப்படுத்தியுள்ளார்.

அப்படலத்தின் முதற்பாடலில் முடிசூட்டிக்கொணஅட இராமன் அரண்மனையின் நடுமண்டபத்தில் அமைந்திருந்த அழகியதும் அலங்கரிக்கப்பட்டதுமான ஒரு பல்லக்கில் அமர்ந்திருந்த காட்சியானது “கோமணிச் சிவிகை மீதே கொண்டலும் மின்னும் போல தாமரைக் கிழத்தியோடும் தயரதராமன் சார்ந்தான்” என்றுகருநிறக் கொண்டலாகிய மேகமானது மின்னலோடு சேர்ந்து அமர்ந்திருந்ததைப்போல தசரதராமன் காட்சியளித்தான் என்று தோற்றத்தின் நேர்த்தியைப் புகழ்கின்றார். அப்போது மங்கலமங்கையர்களின் இன்னிசைப்பாடல்கள் முழங்க, ஆடலும் பாடலும் தொடர, நாட்டியமும், நர்த்தனமும் ஆங்காங்கே நிகழ, ஆனந்தக்

களிப்பும் அங்கே நடனமாடியது! பல்லாண்டு பாடுதல் நிகழ்வும் நடந்துகொண்டிருந்தது.

தன்னுடைய நண்பர்களாகிய சுக்கிரீவன், வீடணன், குகன், அனுமன், மற்றும் அனைவருக்கும் தனது நன்றியறிதலைத் தெரிவிக்கவும் அவர்களுக்குப் பரிசுப் பொருள்களைக் கொடுத்து வணங்கி கௌரவிக்கவும் நினைத்தார் ஸ்ரீராமர். அதன்படி சுக்கிரீவன் தனது எழுபது கோடி வெள்ளம் வானரப்படைகளோடும், வானரப்படைத் தளபதிகளோடும் வந்து நின்று வணங்கினான். அப்போது அவர்களுக்கு வேண்டிய பல்வேறு பரிசுப்பொருள்களைக் கொடுத்தனுப்ப, தான் அங்கேயே தங்கிவிடுவதற்கு அனுமதி கேட்டான் சுக்கிரீவன். ஆனால் அவனுக்குரிய அரசகடமையை எடுத்துரைத்து அனுப்பிவைத்தார் ஸ்ரீராமன். இதே போன்று வீடணனும், குகனும் கூட பரிசுப்பொருள்களைப் பெற்றுக்கொண்டும், அங்கேயே தங்கிவிடுவதற்கு அனுமதி கேட்க, அவர்களுக்கும் அரசநீதியினையும், அவர்களது குடிமக்கள் அவர்களுக்காக காத்துக்கொண்டிருப்பதையும் நினைவு படுத்தினார். அவர்களின் கடமைகளையும் எடுத்துரைத்து, அனுமதி கொடுத்து அனுப்பிவிட்டார். ஆனால் அனுமனை மட்டும் தன்னுடனே தங்கிக்கொள்ள அனுமதி கிடைக்க அனுமன் ஆனந்தம் கொண்டான். ஸ்ரீராமனுடைய இந்த முடிவால், சீதாதேவியும் பெருமகிழ்ச்சி அடைந்தாள். இப்படியாக ஒவ்வொருவருக்கும் பிரியாவிடை கொடுத்தனுப்பிவைத்தான் செய்ந்நன்றி மறவாத சீலனான அந்தச் சீதாராமன்.

மேலும் தனது நாட்டுக் குடிமக்கள், வேதம்வல்ல அந்தணர்கள் போன்றவர்களையெல்லாம் வருவித்து, அவர்களையும் தனது அரண்மனையில் இருக்கச் செய்து, பல்வேறு பரிசுப்பொருள்களையும், குறிப்பாக அந்தணர்களுக்குப் பசுக்கூட்டங்களையும் சீதாதேவி உடனிருக்க



வழங்கி மகிழ்ந்தான் அக்கோசல நாடுடைய வள்ளல்.! இந்த நிகழ்ச்சிகள் இரண்டுமாதங்களுக்கும் மேல் இராமன் அரண்மனையில் தொடர்ந்தன.

யுத்த காண்டத்தின் கடைசிபடலமும், ஸ்ரீமத் ராமாயணத்தின் கடைசிப்படலமுமான இந்த விடைகொடுத்த படலத்தின் கடைசி பாடலாக பிற்கண்ட கவிதையினை முடிவுரையாய் அமைத்துத் தந்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

**உம்பரோடு இம்பர்காறும் உலகமோர் ஏழும்ஏழும்**
**எம்பெருமான் என்று ஏத்தி இறைஞ்சிநின்று ஏவல்செய்ய**
**தம்பியரோடும் தானும் தருமமும் தரணி காத்தான்**
**அம்பரத்து அனந்தர் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல்(4309)**

என்னும் இப்பாடலில் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவரான பெருமான், தன்னுடைய பாம்பணையையும் விட்டுவிட்டு, பதினான்கு உலகத்துமக்களும் வாழ்வதற்காக அயோத்தியில் வந்து அவதாரம் செய்தார் என்றும், அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, தானும் தனது தம்பியருமாக அறத்தையும் நாட்டையும் காத்தருளினார் என்றும் மங்களம் கூறி காவியத்தை முடித்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி.

ஸ்ரீமந்நாராயணனாகிய பெருமான் வியூகநிலையிலே திருப்பாற்கடலில் இருக்கும்போதுதான் தன்னுடைய அவதாரங்களான விபவநிலைக்கு வருவார். அதாவது அங்கிருந்துதான் அவதாரம் செய்வார் ஆகையினால், அப்பாற்கடலில் பாம்பு படுக்கையான அனந்தாழ்வான் மேல் துயில்கொள்பவரான ஸ்ரீமந்நாராயணனாகிய பெருமான், படுக்கையாய் பயன்பட்ட அனந்தாழ்வானைத் துறந்துவந்தார் என்றாலும், இளையாழ்வாரான இலக்குவனாக வந்தவர் அந்த அனந்தாழ்வான் அம்சமே என்பதையும் அறிதல்வேண்டும். மேலும் தனது சக்கராயுதமே பரதனாகவும், சங்காயுதமே

சத்துருக்கன் என்பதையும் முதலிலேயே கண்டோம். எனவே சங்கு சக்ரதாரியாக வந்த பெருமானே ஸ்ரீஇராமன். அந்த அம்சகர்களாகிய தம்பியர்களோடு அவர் ஈரேழு பதினான்கு லோகங்களையும் காத்தருள்செய்தார் என்ற தத்துவங்களை எல்லாம் இதில் எடுத்துரைத்துள்ளதை அறிந்து மகிழ்வோமாக!

ஸ்ரீமத் ராமாயண சாராம்ருதத்தைப் பருகிய நாம், அனைவரையும் அதைப்பருகி அமிழ்தத்தைச் சுவைக்கச் செய்வோமாக!

**பிற்சேர்க்கை :**

ஆழ்வார்கள் அருளியச்செய்யுள்களான ஸ்ரீநாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் ஆழ்வார்கள் அனுபவித்துள்ள ஸ்ரீமத் ராமாயண சாராம்ருத வைபவம்.

1. ஆண்டாள் நாச்சியார் தன்னுடைய திருப்பாவையில்

**“சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற**
**மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்”**

என்பதில் இராமனை மனத்துக்கு இனியான் என்று குறிப்பிட்டு, அந்த இராமன், இராவணன் இருந்த இடமாகிய இலங்கையைத் தேடிச்சென்று அந்த அரக்கனை அழித்தான். அதனால் தர்மத்தை நிலைநாட்டிய மனதிற்கு இனியன் என்று புகழ்கின்றார்.

2. திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தத்தில்,

**“ஊனில் மேய ஆவிநீ உணர்ச்சியோடு உறக்கம் நீ**
**ஆனில்மேய ஐந்தும் நீ அவற்றில் நின்ற தூய்மைநீ**
**வானினோடு மண்ணும் நீ வளங்கடல் பயனும் நீ**
**யானும் நீ அஃதன்றி எம்பிரானும் நீ எம் இராமனே!”**

என்று போற்றுவதால் ஸ்ரீராமாவதாரத்தின் பெருமை அறியலாம்!



மேலும் திருமழிசை ஆழ்வாரின் இப்பாசுரத்தில் இராமனே ஆழ்வாரின் ஆத்மாவாக உள்ளார் என்றும், ஆழ்வாரின் தலைவனாகவும் விளங்குகின்றார் என்று கூறுவதாலும், பகவானாகிய பரப்பிரம்ஹம் எல்லா உயிர்களாகிய ஜீவாத்மாக்களிடத்தும், அணுசொரூபியான அந்தராத்மாவாக உள்ளதையும் உணர்த்துகின்றார் என்று அறியலாம்.

3. ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாராயணனின் பக்தியில் ஊறித்திளைத்தவர்கள் ஆழ்வார்ப் பெருமக்கள்.! அவர்கள் தமது பிரபந்தங்களில் ஸ்ரீஇராமாவதாரத்தின் பெருமையையும், இராமாயணத்தின் புகழையும் பெரும்பாலும் பாடிக்களித்திருக்கின்றனர். அவர்களுள் திராவிடவேதம் எனப்படும் திருவாய்மொழியை அருளிச் செய்தவரான நம்மாழ்வார்,

**1. கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ.**
**புற்பா முதலாம் புல்லெறும்பு ஆதி ஒன்றின்றியே**
**நற்பால் அயோத்தியில் வாழ் அண்ட சராசரம் முற்றவும்**
**நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் படைத்த நாட்டுளே”**

என்ற பாடலும்,

**2. நாட்டிற் பிறந்தவர் நாரணற்கு ஆளன்றி ஆவரோ?**
**நாட்டிற்பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய்**
**நாட்டை நலியும் அரக்கரை நாடித் தடிந்திட்டு**
**நாட்டை அளித்து உய்யச் செய்து நடந்தமை கேட்டுமே!”**

என்ற இரண்டு பாடல்களிலும், ஒருவர் இராமபிரானின் சரிதத்தைக் கூறும் இராமாயணத்தைப் படிக்கவில்லை என்றால், அவர் எவ்வளவு படித்திருந்தாலும், அவையெல்லாம் வீணாகும் என்றுரைக்கின்றார்.

மேலும் மனிதனாகப்பிறந்தவன், மனிதரை வாழவைக்கவே இவ்வுலகத்தில் பிறந்து, நாட்டை அழித்துவந்து

அரக்கர்களை மனிதர்களுக்காகவே அழித்து, அம்மனிதர்களின் மோட்சலோக வாழ்விற்கும் வழிவகுப்பவனாக வந்தவன் ஸ்ரீமந்நாராயணன். எனவே அப்பெருமானை விட்டுவிட்டு, மற்றைய தெய்வங்களைத் தொழுபவர்கள் மனிதர்களே அல்ல. நன்றி மறந்தவர்கள் என்கிறார் நம்மாழ்வார்.

மேலும் குலசேகரப்பெருமானின் பெருமாள் திருமொழிப்பாடல்கள் அனைத்தும் கற்போர் நெஞ்சைக் கரைந்துருக வைக்கும் தன்மைகொண்டவை. இதில் இராமன் வனம் சென்றதை நினைத்து தசரதன் புலம்பியதாக வரும் பாடல்கள் கல்நெஞ்சத்தையும் கரைக்கக் கூடியதாகும். அதில் ஒருபாடலாக அமைந்துள்ள,

**3. வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு இருநிலத்தை**
**வேண்டாதே விரைந்து வென்றி**
**மைவாய களிறொழிந்து தேரொழிந்து மாவொழிந்து**
**வனமே மேவி**
**நெய்வாய வேல்நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும்**
**பின்புபோக**
**எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ! எம்பெருமான்!**
**என்செய்கேனே?**

என்ற இப்பாசுரமும், தசரதன் புலம்பலாக அமைந்துள்ள மேலும் பல (பாசுரங்களும்) பாடல்களும் கற்பவர் நெஞ்சத்தைக் கரைந்துருகச் செய்து, ஸ்ரீராமவதாரத்தின் மீது குலசேகர ஆழ்வார்கொண்டிருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றது.

இதுமட்டுமன்றி, ஸ்ரீஇராமனைக் குழந்தையாகப் பாவித்து குலசேகரர் பாடியுள்ள மனத்தை உருக்கும் பாடல்கள் சில.

**1. மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே**
**தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்து வித்தாய்**
**செம்பொன்சேர்**



**கன்னிநன் மாமதிள் புடைசூழ் கணபுரத்தென்**
**கருமணியே**
**என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ!**

(கணபுரம் என்பது சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று)

**2. சுற்றமெலாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே**
**அற்றவர்கட் கருமருந்தே அயோத்தி நகர்க் கதிபதியே**
**கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்தென் கண்மணியே**
**சிற்றவைதன் சொற்கொண்ட சீராமா தாலேலே!**

என்று தசரதன் பாடும் தாலாட்டுகள் கற்போரைக் களிப்பில் ஆழ்த்தக் கூடியனவாகும்.

இவ்வாறாக ஆழ்வார்கள் அனுபவித்துப் பாடியுள்ள இராமவதாரப் பாசுரங்கள், தனியாகவே ஆய்ந்து, அனுபவித்து, தனியொரு நூலாக வடிவமைக்கக் கூடிய அளவு பல்கிப்பெருகியுள்ளன. அவற்றை யெல்லாம் இங்கு கூறுதல் ஒண்ணாது. பெருமானின் பக்தியிலே ஈடுபாடுகொண்ட அனைவருக்கும் ஸ்ரீமத் ராமாயணம் ஒரு அமிர்த சாகரமாகும் என்பது வெள்ளிடை மலையாம். அந்தச் சாகரத்தின் சாராம்ருதமே இந்நூலில் அனைவருக்கும் நல்விருந்தாய் பரிமாறப்பட்டுள்ளது. இவ்வமிழ்தம் பருகிய அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் என்றென்றும் நிறைவதாக!

**ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே**
**ஸ்ரீமதே நாராயணாய நம:**

என்றென்றும் ஆன்மீகத்திருப்பணியில்,
முனைவர். பெரு. ஹரிகேசவ ராமாநுஜதாசர்.
வேலூர். 2.

## SRIMATH RAAMAAYANA SAARAAMRUTHAM

## BIBLIOGRAPHY (REFERENCE BOOKS)


1. SRIMATH VALMIKI RAMAYANAM (SANSKRIT)
(Translated as Valmiki Ramayanam) by Mr. V.Jothy, M.A., Parts. 1;2;3; and 4. 2004. Published by Varthamanan Pathipagam, T. Nagar, Chennai - 17.

2. KAMBA RAMAYANAM. (MOOLAMUM THELIURAIYUM.)
Parts. 1 to 9, by Dr. Poovannan.
Published by Varthamanan Pathipagam,
T. Nagar, Chennai - 17.

3. GURUPARAMBARAI VAIBHAVAM
By Prabanna Vidwan Ethiraja Ramanujadasar
4th Edition 2005,
Published by Alwar Amutha Nilayam, Chennai - 600002.

4. NAALAYIRA DIVYA PRABANDAM; MOOLAMUM URAIYUM
By Dr R. V. Kamalakannan
2015.
Published by Varthamaanan Pathipagam, Chennai-17.

5. THIRUPPAAVAI VILAKKAM (TAMIL)
By Bharat Suraaj
6th Edition 2012.
Published by Geetha Press, Gorakpur;

6. SRIMATH BAAGAVATHAM (SANSKRIT)
By Vedaviyasar; Tamil Translation By Sri V.Jothy, M.A.,
Published by Varthamanan pathipagam, Chennai - 17

7. SRIMATH BAGAVAT GITA THATHVA VIVESANI
Tamil TranslatiOn & Explanations
By Jayadayal Goyanthaga
1999.
Published by Geetha Press; Gorakpur (U.P.)